உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணெய்நல்லூர்

மெய்கண்டதேவநாயனார்

அருளிச்செய்த

சிவஞானபோதமூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

சிவஞானயோகிகள்

இயற்றியருளிய

திராவிட மகாபாடியமென்னும்

சிவஞானபாஷியமும்.

இவை

மதுரைத் திருஞானசம்பந்தசுவாமிகள்

ஆதீன வித்துவான்

சுப்பிரமணியபிள்ளையவர்களால்

பார்த்து

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றன.

பராபவஞு ஆவணிமீ

1906

Copy Right Registered.

இதன் விலை ரூ. 2—8—0.

MADRAS
LIBRARY

உ

திருச்சிற்றம்பலம்.

சிவஞானபோதம்.

சிவஞானபாஷ்யப் பதிப்புரை.

அங்கணன் கயிலை காக்கு மகம்படித் தொழின்மை பூண்ட
எங்குரு மரபிற் கெல்லா முதற்குரு வாத லாகிப்
பங்கயத் துளவ னாதி வேத்திரப் படைபோ ரேந்து
செங்கையெம் பெருமா னந்தி சீரடிக் கமலம் போற்றி.

அநாதிமலமுத்தராகிய சிவபெருமான் அநாதிமலபெத்தராகிய ஆன்மாக்கள் தம்மையறிந்து வழிபட்டுய்யும்பொருட்டு அநாதியே திருவாய்மலர்ந்தருளியவை வேதம், சிவாகமம் என இரண்டாம். வேதங்களின் ஞானகாண்டமாகிய உபநிடதங்களின் பொருள்கள் அளவுபடாவென்று எண்ணிக் குற்றமில்லாத அறிவினையுடைய பெரியோர்கள் எளிதாக உணர்ந்துகொள்ளும்பொருட்டு வியாசமுனிவர் ஐந்நூற்றைம்பத்தைந்து சூத்திரங்களாகச் செய்தருளினர். அவைகளுக்கு வேதாந்த சூத்திரமென்று பெயர். அச்சூத்திரங்களுக்கு வேத சிவாகமங்களை நன்குணர்ந்த நீலகண்ட சிவாசாரியர் வேத சிவாகமங்களின் உண்மைப்பொருள்களுக்கு மாறுபடா வண்ணம் விசிட்டாத்துவித பரமாகப் பாஷ்யஞ் செய்தருளினர். அதன்பின்பு சங்கராசாரியர் இராமாநுசாசாரியர் மாத்துவாசாரியர் மூவரும் முறையே மாயாவாத வைஷ்ணவ மாத்துவ சமயபரமாகத் தத்தமக்குத்தோன்றியவாறே பாஷ்யஞ்செய்தருளினர்.

யம் போன்றும் விளங்குகின்றமையாலேயாம். இது மூலத்திலே வியாக்கியானங்களைக்குறித்து யாண்டும் பேசப்படாத உண்மையினாலும் புலப்படும். வேதங்கள் வன்சொற்களினாலே புணர்க்கப்பட்டமையும், ஆகமங்கள் மென்சொற்களினாலே புணர்க்கப்பட்டமையும் வேதங்கள் கன்மாநுசாரமாகப் பலர்க்கும் பலபொருள் கொள்ளக் கிடக்குஞ் சூத்திரமாதலினாலும், ஆகமம் சத்திநிபாதமுடையார்க்கு அதனைத் தெளித்துணர்த்தும் பாஷ்யமாக ஒருபொருள் கொள்ளக்கிடத்தலினாலு மென்க. இன்னும் இதனுண்மையை,

"வேதமோ டாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே"

என்னும் திருமந்திரத்தினாலும்,

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க
ளாதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலா
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்"

என்னுஞ் சிவஞான சித்தியாராலும் உணர்ந்துகொள்க.

இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த வேதசிவாகமங்களின் ஞானகாண்டப் பொருளை உள்ளபடியே தமிழ்நாட்டார் உய்யும் வண்ணம் சைவசமயாசாரிய சுவாமிகள் தேவாரம் திருவாசகம் என்னுந் தோத்திரவாயிலாக விளங்க உரைத்தருளினார்கள். அவ்வேத சிவாகமங்களின் ஞானகாண்டப்

பொருளைச் சந்தாநாசாரிய சுவாமிகள் சாத்திரவாயிலாக விளங்க வுரைத்தருளினார்கள். அச்சாத்திரங்கள் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் சிவப்பிரகாசம் முதலியனவாகும் பதினான்கு வகைப்படும். அவற்றுள் முதனூலாகிய இச்சிவஞானபோதம் இருபத்தெட்டாகமங்களு ளொன்றாகிய ரௌரவாகமத்துட் சிவஞானபோத படலத்து அநுஷ்டுப்சந்தஸாய்த் துவாதச சூத்திரமாகக் கூறப்பட்டுள்ளது.

இச்சிவஞானபோதத்தைச் சிகண்டபரமேசுவரர் எல்லாவாகமங்களினுடைய ஞானபாதப் பொருள் முழுவதும் மாறுகோளின்றி இனிதுணர்ந்துகொள்ளும் பொருட்டு நந்திபெருமானுக் கருளிச்செய்தார். நந்தி பெருமானும் அதுகேட்டதுணையானே எல்லாவையமு நீங்கி மெய்ப்பொருள் தெளிந்து பின்பு சனற்குமாரமுனிவருக்கு அருளிச்செய்தார். அவர் சத்தியஞானதரிசனிகளுக்கு அருளிச்செய்தார். அவர் பரஞ்சோதிமுனிவருக்கு அருளிச்செய்தார். அவர் தமிழ்நாடு செய்ததவத்தானே திருவெண்ணெய்நல்லூரி லவதரித்தருளி மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையரா யெழுந்தருளியிருந்த மெய்கண்ட தேவர்பால் வந்து இச்சிவஞானபோதத்தை நல்கி யிதனை யித்தமிழ் நாட்டார் உணர்ந்துய்தற்பொருட்டுத் தமிழில் மொழிபெயர்த்து ஓர் பொழிப்புரையுஞ் செய்யக்கடவாயென்று ஆஞ்ஞைசெய்து நீங்க, அவரும் அவ்வாறே மொழிபெயர்த்துப் பொழிப்புரையுஞ் செய்தருளினார். இச்சிவஞானபோதம் வந்தவரலாறு இதுவென்க.

பரந்தவிடத்தையுடைய இப்பூமியின்கண்ணே புறவிருளை நீக்கிக் கண்ணுக்கு விடயமான பொருள்களைக் காட்டுதற்குப் பன்னிரண்டு வகையா யெழுந்த ஆதித்தன்போல அநாதியாய் ஆன்மாவைச் செம்பிற்களிம்புபோல மறைத்துக்கொண்டிருக்கும் ஆணவமலவிருளினின்று நீக்கிச் சிவபிரானை அவ்வான்மாவிற்குக் காட்டி அநுபூதியினிலை பெறுவித்தற்குப்

பன்னிரண்டு ருத்திரஞான பாதுவாய் எழுந்தது இச்சிவஞானபோதமே. முழுமுதற் கடவுளாகிய தக்ஷிணாமூர்த்தி ஆன்மாக்களுக்கு ஞானோதயம் உண்டாகும்பொருட்டுத் தமது திருக்கரத்தில் தாங்கியிருப்பதும் இச்சிவஞானபோதமே. திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் சிவபிரான் குருமூர்த்தியாகத் திருவுருக்கொண்டெழுந்தருளிவந்து ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்கு உபதேசித்ததும் இச்சிவஞானபோதமே. இன்னும் முழுமுதற்பொருளாய்ப் பரமாப்தரான சிவபிரான் திருவாய்மொழியாய் ஆரியவேதோப நிடதசாரமனைத்தும் ஒருங்கு திரண்டதும் காமிகமுதலிய இருபத்தெட்டுச் சிவாகமங்களின் ஞானபாதப்பொருள் முழுவதுமொருங்கு திரண்டதும் தமிழ்வேத முதலிய பன்னிரண்டு திருமுறைகளின் சாரமனைத்தும் ஒருங்கு திரண்டதுமாகிப் பதி பசுபாசம் என்னும் முப்பொருள்களின் தடத்த சொரூபவியல்பெல்லாஞ் சந்தேக விபரீதக் குற்றங்களை நீக்கி உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்குவதும் தானே தனக்கு ஒப்பாய் நிற்பதும் இச்சிவஞானபோத முதனூலே.

"வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யினுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்."

என்னும் ஆன்றோர் திருவாக்கானுமறிக.

இஃது எல்லாச் சமயங்களையுந் தாரதம்மியமாகச் சோபான முறையாற் றன்னகத்தடக்கி அத்துவிதசித்தாந்தம் போதிப்பது. இதுகூறும் அத்துவிதம் சுத்தாத்துவிதம். "பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித, மெய்கண்ட நாதனருண் மேவுநா ளெந்நாளோ" என்றார் தாயுமான சுவாமிகளும். பொய்கண்டாரென்றது-உபநிடதங்களின் முடிவு கேவலாத்துவிதமெனவும் விசிட்டாத்துவித மெனவும் பேதாத்துவிதமெனவும் உணர்த்த ஏனை ஆசாரியர்களை.

வடமொழிச் சிவஞானபோத நூலுக்கு வடமொழியில் வல்ல ஆசிரியர் பலர் வியாக்கியானங்கள் பலபல செய்திருக்கின்றனர். அவற்றுள் ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார்கோவிலாதீனத்துப் பிரதமாசாரியராகிய ஸ்ரீமத் சிவாக்கிரயோகிகள் இயற்றியருளியபாஷ்யம்-மிகவிரிந்ததும் சைவசித்தாந்தத்தின் பொருள்களை விளக்குவதுமாயுள்ளது. ஏனையோர் செய்த வியாக்கியானங்கள் மிகச்சுருங்கின. இன்னும் வடமொழிச் சூத்திரப்பதார்த்தங்களைச் சிவசமவாதசைவரும், சிவாத்துவித சைவருமாகிய ஆண்டாண்டு வலித்து பொருள்கொண்டு தஞ்சமயமுடிபாக்கிச் செய்த வியாக்கியானங்களுஞ் சிலவுள.

இனி மெய்கண்டதேவநாயனார் மொழிபெயர்த்தருளிய இத்தென்மொழிச் சிவஞானபோதத்திற்குப் பாண்டிவள நாட்டிலே பொதியமலைச்சாரலிலே பாவநாசமென்னுந் திருப்பதியைச் சார்ந்த விக்கிரமசிங்கபுரத்திலே அகத்தியமுனிவர் வரத்தாற் றிருவவதாரஞ்செய்து திருக்கைலாய பரம்பரை மெய்கண்டதேவநாயனார் சந்ததிக்கு ஓர் ஞானபானுவாய் விளங்குந் திருவாவடுதுறை நமசிவாய தேசிகர் பரம்பரை தழைத்தினிதோங்க அக்குருபரம்பரையில் விளங்கிய வேலப்ப தேசிகராகிய ஞானாசாரியரிடத்தில் சிவஞானபோத ஞானோபதேச வநுக்கிரகம் பெற்று வடமொழி தென்மொழிகளாகிய பெருங்கடல்களை நிலைகண்டுணர்ந்து அத்துவித சிவஞானானுபூதி கைகண்டு மெய்கண்ட சிவஞானபோத மெய்ப்பொருட் பிரதிட்டாசாரிய சுவாமிகளாய்விளங்கிய சிவஞான யோகிகள் ஆசிரியர் அமைத்தருளிய உண்மைப்பொருள் அங்கை நெல்லிக்கனிபோல் யாவருக்கும் விளங்கும் வண்ணம் சிற்றுரை யெனப்படும் லகுவியாக்கியானமும் சிவஞானபாஷ்யமெனப் பெயர்பெற்ற மாபாஷ்யமும் அருளிச்செய்தார்.

சிவஞானயோகிகள் சிவஞானபோதத்தி னுள்ளுறை யுண்மைக்கருத்துக்களை யெல்லாம் மயக்கமற ஆராய்ந்து தெ

ளிந்து இத்திராவிட மகாபாஷ்யம் அருளிச்செய்தலின் இம் மா பாஷ்யத்தில் பொருளெனக் கொள்ளப்பட்டனவெல்லாம் மெய்ப்பொருளாய்ப் பொருளல்லனவெனத் தள்ளப்பட்டன வெல்லாம் பொய்ப்பொருளா யொழிதல் நிச்சயமென்க.

இன்னும் இச்சிவஞானபோதவுரோற்காத முதலிய பிர கரணங்களினுஞ் சூத்திரவதிகரணங்களிலும் ஆண்டாண்டு இயைபுபற்றி யெடுத்துத் தடைவிடைகளான் மிகவிரித்தரு ளிய பலவகைத் தத்துவங்களின் நுண்பொருள்களும் பலசாத் திரங்களின் பகுதிகளும் அளவில்லாதன வென்க.

இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த சிவஞானபோத மா பாஷ்யம் இதுவரையில் வெளிக்குவராமல் திருவாவடுதுறை யிலும் இச்சிவஞானயோகிகள் சிஷ்யபரம்பரையிலும் வழங் கப் பெற்றுள்ளது.

ஆனால் சிவஞானயோகிகள் பரிபக்குவமுடையோர் யா வருஞ் சைவசித்தாந்தத்தின் நுண்பொருள்களை யெல்லாம் எளிதாகத்தெரிந்து சிவானந்தத்தை அடையும்பொருட்டுப் பரோபகாரமாக மிகுந்த சிவகாருண்ணியத்தினாலே செய்து வைத்ததே தவிரத் தாங்கள்மாத்திரந் தெரிந்துகொண்டு இரு ப்புப்பெட்டியில் வைத்துப்பூட்டி ஒருவருக்கும் பயன்படா மல் இருக்கும்பொருட்டுச் செய்துவைத்ததன்று. நமது ஆதீ னத்து ஆசாரியசுவாமிகள் இப்படிப்பட்ட அருமையான சை வசித்தாந்த நூல்களை வெளிப்படுத்திப் பரிபக்குவர்களுக்குப் போதித்துப் பிரசங்கிப்பார்களாயின் மற்றை மாயாவாத முத லிய புறச்சமய நூல்களெல்லாம் இருக்குமிடந் தெரியாது ஒழிந்துவிடுமன்றோ? இப்படி அவர்கள் செய்யாதிருப்பதுங் கலிகாலத்தின் கொடுமைபோலும்.

இம்மகாபாஷ்யத்தின் பொருள்களைத்தெரியவேண்டுமென் று மிகுந்த ஆவல்கொண்டு முயற்சிசெய்து கிடைக்கப்பெறாது

ஏக்கங்கொண்டு இறந்துள்ள சைவசீலர்கள் அநேகர். இவ்வாறிருக்க யானும் இம்மகாபாஷ்யத்தை வெளிப்படுத்த எண்ணி அநேக இடங்களுக்குச்சென்று தேடி விசாரித்து வருங்காலத்தில் சோழநாட்டில் ஓர்கிருகத்தில் இருப்பதாய்த் தெரிந்து அங்குப் போய் பார்த்ததில் அவ்விட்டார் அதைக்கவனியாமல் இருந்தமையால் ஐந்து சூத்திரம்வரை வன்மீகத்தால் மூடப்பெற்றும் அதற்குமேலுள்ளபாகம் மூடப்பெறாதும் இருந்தன. உடனே வாங்கிப் பிரதிசெய்து ஒருவாறு பரிசோதித்து அச்சிடத்துணிந்து முன் ஐந்து சூத்திரம்வரை சிற்றுரையோடு, சைவசித்தாந்த நூல்களையெல்லாம் மிக நன்றுணர்ந்தவர்களும் திருவாவடு துறையில் ஞானசூரியனாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகளிடத்தில் ஞானோபதேசம்பெற்றவர்களும் அவ்வாதீனத்து வித்துவானும் எனது ஆசிரியருமான இ. இராமசுவாமிபிள்ளையென்று வழங்கும் ஸ்ரீமத் ஞானசம்பந்தப்பிள்ளை யவர்கள் அம்மகா சந்நிதானத்தில் பாடங்கேட்டு ஒவ்வொரு சூத்திரங்களுக்கும் எழுதிவைத்திருந்த சில அருமையான பாஷ்யங்களை ஒவ்வொரு அதிகரணங்கள் தோறுஞ்சேர்த்தும், ஆறு சூத்திரமுதல் பன்னிரண்டு சூத்திரம் வரை முழுவதும் பாஷ்யமாகவும் அச்சிட்டுமுடித்துள்ளேன்.

இனிமேல் சிவபிரான் திருவருளான் முழுவதுங் கிடைப்பின் இரண்டாமுறை அச்சிட்டு வெளிப்படுத்தவும் எண்ணியுள்ளேன். ஒரு பிரதிமாத்திரங் கிடைக்கப்பெற்றமையால் அதைக்கொண்டு ஒருவாறு பரிசோதித்து அதிலிருந்தபடியே அச்சிட்டுள்ளேன்.

கிடைத்தவளவில் யாவருக்கும் பயன்பட வேண்டுமென்று கருதி அச்சிட்டதேதவிர பொருள் கருதி அச்சிட்டேனல்லேன் ; பொருள் கருதி அச்சிடும் பட்சத்தில் பலநாளாகப் பல இடங்களில் தேடியலைந்த சிரமத்தையும், பணச்செ

லையும் நோக்கி இதற்கு விலை மிக அதிகமாக ஏற்படுத்தக் கூடும். அப்படியின்மையினாற்றான் இதற்குவிலை ரூபா 2.8 ஏற்படுத்தலாயிற்று.

உலகத்தில் ஒவ்வொரு மதத்தாருந் தங்கள் சமயம் இன்னது சமயக்கடவுள் இன்னார் என்று தெளிந்து அதில் விதித்தபடி ஒழுகிவருகின்றார்கள். சைவர்கள்மாத்திரம் "சைவமாஞ் சமயஞ்சாருஞ் சூழ்பெறலரிது" என்ற சுருதிப்படி அநேக பிறவியிற் செய்த தவவலியால் எல்லாச் சமயங்களையுந் தன்னகத் தடக்கி அவைகளுக்கு மேற்பட்டு விளங்குஞ் சைவ சமயத்தை அடையும்படியான ஏன்மைப்பெற்றும் அச் சமயம் இத்தன்மையது அச்சமயக்கடவுள் இன்னார் என்று தெரிந்துகொள்ளாது விபூதிதரிப்பது மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணமென்றும், விபூதி தரிப்பது மாமிசம் புசியாது விடுவது இந்த இரண்டு மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணமென்றும், விபூதி தரிப்பது மாமிசம் புசியாது விடுவது மாமிசம் புசிக்கின்றவர்கள் காணாமற் போசனஞ்செய்வது இந்த மூன்றுமாத்திரமே சைவசமயிக்கு இலக்கணமென்றும் எண்ணிச் சைவதீக்ஷையுமின்றி உயிர்ப்பலி ஏற்கின்ற துட்ட தேவதைகளையும் காடன் மாடன் மதுரைவீரன் பதினெட்டாம் படிக்கறுப்பன் முதலான பிசாசுகளையும் வணங்குகின்றார்கள் மகமதியருடைய பள்ளிவாயிலுக்குப் போகின்றார்கள்; அங் கேகாணிக்கை செலுத்துகின்றார்கள். இவைகளுக்கெல்லாங் காரணந் தங்கள் சமயசாத்திரங்களை வாங்கிப்படித்து உண்மையுணராததோஷமேயாம். பெறுதற்கு அரிய மனிதப்பிறவியைப் பெற்றும் மிகமேலாகிய சைவசமயமாயிலே பிறந்துஞ் சைவசமயம் இப்படிப்பட்டது, அந்தச் சமயக்கடவுள் இப்படிப்பட்டவர், அவரை வழிபடுமுறைமை இப்படிப்பட்டது, இவைகளைப் போதிக்குஞ் சைவசித்தாந்த சாத்திரம் இப்படிப்பட்டதென்று ஆராய்ந்தறிந்து சைவ சமயத்தை அறுட்டியாது சேர்ந்த சேர்ந்தபடி நடப்பது ஐயையோ நரக

த்துன்பத்துக்குக் காரணமாகின்றதே! ஆதலால் நம்மவர்களாகிய சைவசமயிகள் யாவரும் இப்படிப்பட்ட மிக மேலாகிய சைவசித்தாந்த சாத்திரத்தைத் தமக்குரிய சேமநிதியாக எண்ணி வாங்கிச் சைவதீக்ஷைபெற்றுக்கொண்டு நேசித்துப் பூசித்துக் கேட்டுச் சிந்தித்து மூல பண்டாரமாகிய சிவபிரானது சிவானந்தப்பேற்றை அடையக்கடவர்கள். படியாதவர்களும் இதைவாங்கிப்பூசித்து வருவார்களாயின் சிவபிரான் திருவருட்பேற்றிற்குப் பாத்திரமாவார்கள்.

இதனை அச்சிடுங்காலத்தில் சேற்றூர் சமஸ்தான வித்துவான் இராமசாமிக்கவிராயரவர்கள் புத்திரர்களான மதுரைத் தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்களும்; ஷை சங்கத்துச் சைவநூற் பரிசோதகர் மு. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களும், விவேகபாநுப்பத்திராதிபரும் நெடுநாளாக என்பால் உள்ளன்புடையாருமான எம். ஆர். கந்தசாமிக்கவிராயரவர்களும் இடையிடையே எனக்கு உதவியாக இருந்து செய்தநன்றி மறக்கற்பாற்றன்று.

திருச்சிற்றம்பலம்.

சிவஞான யோகிகள் திருவடிவாழ்க.

மதுரை.
திருஞானசம்பந்த ஸ்வாமிகள் மடம்.

இங்ஙனம்,
சுப்பிரமணியபிள்ளை.

உ

கணபதிதுணை.

திருவெண்ணெய்நல்லூரி லெழுந்தருளியிருக்கும்

பொல்லாவிநாயகர் திருவாய்மலர்ந்தருளிய

சிவஞானபோதச்*சூர்ணிக்கொத்து

முதற்சூத்திரம்.

க.—ஜகம் பிறப்பிருப்பிறப்பாகிய முத்தொழிலையுடையது.

உ.—அது அரனாலே உடையது.

ங.—மற்றிருவரும் முத்தொழிற்படுவர்கள்.

இரண்டாஞ்சூத்திரம்.

க.—அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.

உ.—உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்.

ங.—உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்.

ச.—அரன் சருவ வியாபகன்.

மூன்றாஞ்சூத்திரம்.

க.—இல்லையென்கிற அறிவுடனே சொல்லுகையினாலே அறிவுயிர் உண்டு.

உ.—எனது உடல் என்று பொருட்பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்கு வேறாய் உயிருண்டு.

ங.—ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கு வேறாய் உயிர் உண்டு.

ச.—கனவுடலைவிட்டு நனவுடலிலே வருகையினாலே, அக்கனவுடற்கு வேறாய் உயிர் உண்டு.

---

* உரைச்செய்யுளால் செய்யப்படுவது-சூர்ணிகை யெனப்படும்.

ரு.—நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவுஞ் சரீரத்துக்குப் புசிப்புந் தொழிலும் இல்லாதபடியினாலே, பிராணவாயுவுக்கு வேறாய் உயிர் உண்டு.

சு.—மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேறாய் உயிர் உண்டு.

எ.—எல்லாத்தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினாலே, அந்தந்தத் தத்துவங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

நான்காஞ்சூத்திரம்.

க.—அந்தக்கரணங்களுக்கு * உயிர் உட் கூடினாலன்றித் தொழில் இல்லாதபடியினாலே, அந்தக்கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

௨.—மலமறைப்பால் உயிருக்கு அறிவு இல்லை.

௩.—உயிர் மூன்றவத்தைப்படும்.

ஐந்தாஞ்சூத்திரம்.

க.—உயிராலே தத்துவங்களெல்லாந் தொழில் செய்யும்.

௨.—அரனாலே உயிர்களெல்லாம் அறியும்.

ஆறாஞ்சூத்திரம்.

க.—உயிரறிவினாலே அறியப்பட்டவெல்லாம் அழியும்.

௨.—அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

ஏழாஞ்சூத்திரம்.

க.—அரன் பாசத்தை அநுபவியான்.

௨.—பாசம் அரனை அநுபவியாது.

௩.—உயிர், † அவ்விரண்டனையும், அநுபவிக்கும்.

* உயிருடனே கூடினாலன்றி என்றும் பாடம்.

† உயிர் அவ்வரனையடையும் அநுபவிக்கும் என்றும் பாடம்.

எட்டாஞ்சூத்திரம்.

க.—உயிருக்கு நல்லறிவு தவத்தினாலேயே வரும்.

உ.—உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.

ந.—உயிர் பஞ்சேந்திரியங்களைப்பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது.

ச.—உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்றற்றால் தன்னையும் அறியும்.

ஒன்பதாஞ்சூத்திரம்.

க.—உயிர் அரன்ஞானத்தினாலேயே அரனைக் காணும்.

உ.—உயிர் பாசத்திலே பற்றற்றால், அரன் வெளிப்படுவன்.

ந.—பஞ்சாக்ஷர செபம் பண்ணினால், வாசனாமலம் போம்.

பத்தாஞ்சூத்திரம்.

க.—அரனுடன் ஒன்றாகி நில்.

உ.—உன்றொழிலெல்லாம் அரன் பணி என்றே கொள்.

பதினொராஞ்சூத்திரம்.

க.—ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அநுபவிப்பன்

உ.—அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கமாய்ப்போவன்.

பன்னிரண்டாஞ்சூத்திரம்.

க.—மும்மலங்களையும் களைக.

உ.—சிவஞானிகளுடனே கூடுக.

ந.—சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனெனவே தேறி வழிபடுக.

ச.—வழிபடாமையை ஒழிக.

ஆக சூத்திரம் கஉ-க்குச் சூர்ணிக்கொத்து நக.

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ சூசிபத்திரம். ஸ்ரீ

	பக்கம்.
சிறப்புப்பாயிரம்	1
மங்கலவாழ்த்து	21
அவையடக்கம்.	24
முதற்சூத்திரம் ...	52
முதலதிகரணம் ...	57
இரண்டாமதிகரணம் ...	64
மூன்றாமதிகரணம் ...	74
இரண்டாஞ்சூத்திரம் ...	86
முதலதிகரணம்	88
இரண்டாமதிகரணம் ...	98
மூன்றாமதிகரணம் ...	118
நான்காமதிகரணம் ...	124
மூன்றாஞ்சூத்திரம் ...	133
முதலதிகரணம் ...	135
இரண்டாமதிகரணம் ...	140
மூன்றாமதிகரணம் ...	145
நான்காமதிகரணம் ...	148
ஐந்தாமதிகரணம் ...	150
ஆறாமதிகரணம் ...	153
ஏழாமதிகரணம் ...	157
2. இலக்கணவியல்.	
நான்காஞ்சூத்திரம் ...	160
முதலதிகரணம் ...	162
இரண்டாமதிகரணம் ...	170
மூன்றாமதிகரணம் ...	180
ஐந்தாஞ்சூத்திரம் ...	186
முதலதிகரணம் ...	188
இரண்டாமதிகரணம் ...	191
ஆறாஞ்சூத்திரம்	197
முதலதிகரணம் ...	205
இரண்டாமதிகரணம் ...	212
ஏழாஞ்சூத்திரம் ...	255
முதலதிகரணம் ...	258
இரண்டாமதிகரணம் ...	262
மூன்றாமதிகரணம் ...	265
எட்டாஞ்சூத்திரம் ...	273
முதலதிகரணம் ...	276
இரண்டாமதிகரணம் ...	297
மூன்றாமதிகரணம் ...	307
நான்காமதிகரணம் ...	310
ஒன்பதாஞ்சூத்திரம் ...	318
முதலதிகரணம் ...	322
இரண்டாமதிகரணம் ...	326
மூன்றாமதிகரணம் ...	334
4. பயனியல்.	
பத்தாஞ்சூத்திரம் ...	341
முதலதிகரணம் ...	344
இரண்டாமதிகரணம் ...	349
பதினொராஞ்சூத்திரம்...	359
முதலதிகரணம் ...	365
இரண்டாமதிகரணம் ...	373
பன்னிரண்டாஞ்சூத்திரம்	380
முதலதிகரணம் ...	383
இரண்டாமதிகரணம் ...	386
மூன்றாமதிகரணம் ...	389
நான்காமதிகரணம் ...	393

ஆக சூத்திரம் 12-க்கு அதிகரணம் 39.

வெண்பாத்தொகை.

அவையடக்கம்	1
முதற்சூத்திரம்	5
இரண்டாஞ்சூத்திரம் ...	10
மூன்றாஞ்சூத்திரம் ...	7
நான்காஞ்சூத்திரம் ...	7
ஐந்தாஞ்சூத்திரம் ...	4
ஆறாஞ்சூத்திரம்	6
ஏழாஞ்சூத்திரம்	5
எட்டாஞ்சூத்திரம் ...	9
ஒன்பதாஞ்சூத்திரம் ...	8
பத்தாஞ்சூத்திரம் ...	6
பதினொராஞ்சூத்திரம் ...	6
பன்னிரண்டாஞ்சூத்திரம்...	8

ஆக திருவெண்பா 82.

முதலாவது பொதுவதிகாரம் பிரமாணவியல் 1-முதல் 3 சூத்திரங்களாலும், இலக்கணவியல் 4-முதல் 3 சூத்திரங்களாலும், உண்மையதிகாரம் சாதனவியல். 7-முதல் 3 சூத்திரங்களாலும் பயனியல் 10-முதல் 3-சூத்திரங்களாலும் கூறப்பட்டுள்ளன.

செய்யுள் முதற்குறிப்பகராதி.

	பக்கம்.		பக்கம்.		பக்கம்.
அகாரவுகார	168	ஏகமாய்	370	நாடியோ	324
அசத்தறி	207	——		நாமல்ல	352
அஞ்செழு	336	ஐந்தைத்யு	369	நானவனெ	345
அதுவிது	395	ஐம்புல	273	நிர்க்குண	328
அதுவென்	221	ஐம்பொறியை	189	——	
அந்தக்கர	160	ஐம்பொறியின	316	நெல்லிற்குமி	102
அரக்கொடு	93	——		——	
அரவுதன்	123	ஒன்றணையா	181	நோக்காது	72
அருக்கனேர்	375	ஒன்றலா	83	——	
அருவுருவந்தா	267	ஒன்றறி	146	பசித்துண்டு	283
அருளுண்டா	195	ஒன்றென்ற	91	பண்ணையு	92
அவனவளது	52	——		பன்னிறங்	309
அவனேதா	341	கட்டுமுறு	90	——	
அவையே	86	கண்டதை	332	பாவகமே	218
அவ்வினையை	101	கண்டதொரு	392	——	
அவ்வுடலி	149	கண்டன	119	புண்ணிய	384
அறிந்துமறி	155	கண்டறியு	152	பூதாதியீறு	61
அறியவிரண்ட	220	கலையாதி	158	——	
அறிவிக்க	302	கல்லானிழ	21	பேய்த்தேர்	264
அன்றன்றென	138	——		பொன்வாண்	379
அந்நியமிலா	261	காட்டிய	325	——	
——		காணுங்கண்	359	மண்முத	339
இங்குளி	355	——		மயக்கமது	269
இந்துவிற்	338	சதசத்தா	357	மலர்தலை	1
இலயித்த	67	சார்ந்தாரை	353	மறப்பித்து	387
இலாடத்தே	183	——		மனமாதி	165
இல்லாமுலை	305	சிந்தித்தாய்	166	மன்னுசிவ	192
——		சிவமென்னு	400	மன்னுயிரு	376
உணருரு	197	சிறைசெய்ய	312	மாயாதனு	177
உணர்பவ	217	——		——	
உளதில	133	சுட்டியுணர்	331	மெய்ஞ்ஞானந்த	271
உள்ளதே	99	——		மெய்ஞ்ஞானந்தானே	300
——		செம்மலர்	380	——	
ஊனக்கண்	318	——		யாவையுஞ்	255
——		தம்மையுணர்	24	——	
எங்குமுள	126	தவஞ்செய்	281	வித்துண்டா	69
எண்ணிய	215	தன்னுணர	391	விளம்பிய	186
எண்ணில	169	தன்னையறி	399	வினையா	397
எந்தைசன	402	——		——	
எவ்வுருவு	313	நசித்தொன்	377	வெய்யோ	194
எனதென்	143	நண்ணனல்	356	——	

மேற்கோள் விளக்கம்.

பக்கம்.	வரி.	பாட்டு.	நூல்.	பாட்டுத்தொகை
6	17	வேதாந்தத்தெளி	சிவப்பிரகாசம் பாயிரம்	7
,,	31	புறச்சமயநெறி	சித்தியார் சுபக்கம் 8-ம் சூத்திரம்	11
7	25	உயர்ஞானமிரண்	சிவப்பிரகாசம் பாயிரம்	10
8	9	கிரியையென	,, ,,	,,
17	19	வேதநூல் சைவநூ	சித்தியார் 8-ம் சூத்திரம்	15
,,	25	உலகியல்வேத	பெரியபுராணம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்	820
26	27	கேளாரும்வேட்ப	திருக்குறள் 65-ம் அதி. சொல்வன்மை	8
28	30	திகழ்சிவாத்துவிதா	சிவப்பிரகாசம் உண்மை	87
29	7	நிலவுலகாயதாதி	,, ,,	,,
,,	15	மெய்தருசைவமாதி	சித்தியார் 2-ம் சூத்திரம்	73
,,	26	புறச்சமயத்தவர்க்	சிவப்பிரகாசம் பாயிரம்	7
,,	27	ஏகனநேகனிருள்	திருவருட்பயன் 6-ம் அதி.	2
51	3	இன்மைமல	சிவப்பிரகாசம் பொது	22
53	9	நம்மவரவரேமூவ	திருவாசகம் திருச்சதகம் மெய்யுணர்தல்	4
,,	12	தேவரிலொருவ	சித்தியார் I-ம் சூத்திரம்	49
,,	14	தேவராயுமசுரரா	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் திருமுதுகுன்றப் பதிகம்	2
,,	17	மாலையுரித்ததன்	சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம் திருக்கானப்பேற்றுப் பதிகம்	7
,,	20	வரிவாய மலரானு	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் திருக்கள்ளிற் பதிகம்	9
,,	22	படைத்தளித்தழிப்ப	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்தேவாரம் திருப்பிரமபுரம்திருவெழுகூற்றிருக்கை வரி	4
,,	23	தேவர்கோவறி	திருவாசகம் திருச்சதகம் சுட்டறுத்தல்	30

பக்கம்.	வரி.	பாட்டு	நூல்.	பாட்டுத் தொகை
,,	25	முந்துநடுவுமுடி	திருவாசகம் குயிற்பத்து	5
,,	26	மூர்த்தியமுதனடி	,, திருப்பள்ளியெழுச்சி	8
,,	26	அரியாகிக்காப்பா	சேரமான்பெருமாணாயனார் ஞானவுலா வரி	9
,,	23	வீரன்யனரியர்க்கு	சேரமான்பெருமாணாயனார் பொன்வண்ணத்தந்தாதி	95
54	22	மொழிப்பொனப்படு	திவாகரம் 10-வது ஒலிபற்றிய பெயர்த்தொகுதி பெயர்	75
,,	24	பாடங்கண்ணழி	பலநூலுரைகளிலுள்ளது	
60	5	அசத்தாஞ்சுட்டி	சித்தியார் 6-ம் சூத்திரம்	2
,,	6	அறிவிலைறிந்த	சிவப்பிரகாசம் உண்மை	5
,,	8	அவனிவனாய்	சித்தியார் 1-ம் சூத்திரம்	1
,,	9	அவனிவனனது	திருவுந்தியார்	40
,,	,,	அதுநீயானாய்	சித்தியார் பரபக்கம் மாயாவாதம்	15
,,	10	பாவிக்கச்சொல்	சித்தியார் 9-ம் சூத்திரம்	7
,,	13	உரையுணர்விற	திருவாசகம் கோயிற்றிருப்பதிகம்	3
,,	14	அறிவிறந்	சித்தியார் 9-ம் சூத்திரம்	3
,,	15	பாவனையிறந்து	,, 6-ம் ,,	7
,,	16	ஆட்பாலவர்க்கு	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பொதுத்திருப்பாசுரம்	4
,,	17	ஏதுக்களானு	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பொதுத்திருப்பாசுரம்	5
,,	31	இம்மையின்மூய	சித்தியார் 2-ம் சூத்திரம்	7
62	5	பயில்வித்தெல்	,, 1-ம் ,,	9
67	27	தந்துமுதலகாரகம்	ஞானமிர்தம் அகவல் வரி 15	1
69	2	செய்யுட்கணோசை	இது மாபுராணச்செய்யுளென்று தொல்காப்பிய வெழுத்ததிகாரம் 6-ம் சூத்திரவுரையிற் காணப்பட்டது.	
73	10	கொடித்தான்மலை	சுந்தரமூர்த்திநாயனார் கயிலாசப்பதிகம்	1
,,	18	அருங்கேடன்	திருக்குறள் 21-ம் அதி. தீவினையச்சம்	10
96	19	சிவாத்துவிதாந்த	சிவப்பிரகாசம் உண்மை	87
97	28	வேதத்தலைதரு	,,	49

பக்கம்.	வரி.	பாட்டு.	நூல்.	பாட்டு எண்.
99	17	கோடிகாவனைக்	திருநாவுக்கரசுநாயனார் திருக்கோடிகாப்பதிகம் திருக்குறுந்தொகை	6
100	28	வேண்டுவார்வேண்டி	திருநாவுக்கரசுநாயனார் திருமறைக்காட்டுத் திருத்தாண்டகம்	1
	19	நரைபுத்திரைபு	பட்டினத்தடிகள் கோயில்நான்மணிமாலை	24
	8	இருவிலகுய்த்தி	திருநாவுக்கரசுநாயனார் தேவாரம் நின்றதிருத்தாண்டகம்	1
	5	அறிவானுந்தா	காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி	20
	16	காரியகாரணங்க	சித்தியார் 1-ம் சூத்திரம்	18
	8	வாக்கு மனங்க	திருவாசகம் 1-வது அகவல் வரி	45
	2	ஆணவமுதலன்றது	ஞானாமிர்தம் அகவல் வரி 5	22
	12	ஐந்தவித்தானாற்றல்	திருக்குறள் 3-ம் அதி. நீத்தார் பெருமை	5
	27	புகழ்புரிந்து	,, 6-ம் அதி. வாழ்க்கைத்துணை நலம்	6
	5	உறங்குவதுபோலு	,, 34-ம் அதி. நிலையாமை	9
	11	இத்தைமெய்யெ	திருவாசகம் அதிசயப்பத்து	7
	28	சிந்தையைச்சிவ	சித்தியார் 4-ம் சூத்திரம்	28
	11	சில்வகைஎழு	தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல்	100
	11	சிவனேவியாபி	உலகுடையநாயனார் கழிநெடில்	8
	1	நின்னைக்காணுமா	பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை	18
	8	தன்னுலேதனையறி	சிவப்பிரகாசம் உண்மை	60
	5	மாயைமாமாயை	,, ,,	20
	7	உன்னரியதிரு	,, பொது	24
	8	கடாவிரு	சதமணிக்கோவை	61
	18	ஆன்மாவினுள்	சித்தியார் 4-ம் சூத்திரம்	2
	19	தருமிதுபசனு	,, ,,	2
	20	சாதலினுன்பிரம	,, 9-ம் ,,	2

பக்கம்.	வரி.	பாட்டு.	நூல்.	பாட்டுத்தொகை.
,,	21	வருந்தியமெனை	,, 4-ம் ,,	2
,,	,,	இமைகீழ்நாட	,, 9-ம் ,,	2
202	22	பொய்யிருள்கடிந்த	திருவாசகம் கோயிற்றிருப் பதிகம்	1
,,	23	பொய்ம்மாயப்பெ	திருநாவுக்கரசுநாயனார் திருவாரூர்த் திருத்தாண்டகம்	3
203	7	அசத்தைச்சத்துட	சிவப்பிரகாசம் உண்மை	7
,,	21	அவனுக்கிவனுமசி	சித்தியார் 11-ம் சூத்திரம்	11
204	19	அறிபொருளசித்	,, 6-ம் சூத்திரம்	1
205	24	அறிவிலறிந்த	சிவப்பிரகாசம் உண்மை	43
,,	25	சொன்மையறிவு	,, ,,	43
207	5	அருவினுலாகம	சித்தியார் பாயிரம்	6
,,	19	எந்தைதாட்	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பொது திருப்பாசுரம்	4
,,	29	போதமிகுத்தோர்	சித்தியார் பரபக்கம் பாயிரம்	9
208	8	ஞானச்செய்தி	சித்தியார் சுபக்கம் பாயிரம்	6
,,	19	மறையினலயனுன்	சித்தியார் சுபக்கம்	5
209	2	பெரியாரைப்பிழையாமை	திருக்குறள் 90-ம் அதிகாரம்	
210	7	உண்டுபோலின்ரு	சித்தியார் 6-ம் சூத்திரம்செ.	3
,,	12	நெருநலுளனெரு	திருக்குறள் 11-ம் அதி. நிலையாமை	6
212	11	உணராதபொருள்சத்	சித்தியார் 6-ம் சூத்திரம்	4
216	5	அடியளந்தான்றா அய	,, 61-ம் அதி. மடியின்மை	10
,,	6	பெயர்நிலைக்கிளவி	தொல்காப்பியம் சொல்லதிகாரம் எச்சவியல்	53
219	22	உண்ணலு முண்ணேன்	கலித்தொகை பாலை	22
,,	23	கறைமிடறணிய	புறநானூறு வரி 5	1
223	9	மன்னவன்றன்மகன்	சித்தியார் 8-ம் சூத்திரம்	1
221	10	உன்னைப்போலென்னை	சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம் திருவொற்றியூர்	5
,,	11	எண்குணத்துளோமே	திருநாவுக்கரசுநாயனார் திருத்தாண்டகம் பொது	10
,,	22	பரந்திரியங்களை	ஞானமிர்தம் அகவல் வரி12	10
225	4	உம்பர்பிரானுற்பத்தி	சித்தியார் 11-ம் சூத்திரம்	10
226	19	எந்நன்றிகொன்ருர்	திருக்குறள் 11-ம் அதி. செய்ந்நன்றியறிதல்	10

பக்கம்.	வரி.	பாட்டு	நூல்.	பாட்டுத் தொகை
237	30	இருளொளியலா	சிவப்பிரகாசம்	15
238	20	சிவன் சீவனென்றி	சித்தியார் 11-ம் சூத்திரம்	11
242.	12	துன்பமெல்லா	திருக்களிற்றுப்படியார்	46
,,	21	பண்டைச்சிற்றறி	சித்தியார் 4-ம் சூத்திரம்	40
,,	25	நாயகன்றன்பாத்	,, ,,	
,,	29	ஆழவமுக்கிமுகக்கி	மூதுரை	19
243	9	இன்பங்கொடுத்த	உண்மைவிளக்கம்	51
,,	17	வளம்படவேண்டா	நாலடியார் 11-ம அதி. பழவினை	8
247	28	வானத்தில்வானு	துகளறுபோதம்	60
,,	26	நீருமிரதமும்	,,	40
,,	27	இரும்பைக்காந்த	சித்தியார் 11-ம் சூத்திரம்	12
248	6	காட்டக்கண்டி	,, ,,	1
,,	8	அறிவொளிபோற்	சிவப்பிரகாசம் பாயிரம்	7
249	11	கற்றனுஉமின்றிக்	நாலடியார் 32-ம்அதி. அவையறிதல்	4
,,	31	வசித்திடவரும் வியாபி	சித்தியார் 4-ம சூத்திரம்	20
250	15	சிவானுபவஞ்சு	,, 8-ம் சூத்திரம்	84
255	7	யோகிற்றருவ	,, 4-ம் ,,	36
256	14	உழப்பின்வாராவுறுதி	பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை	10
258	7	சத்தின்முன்னிலா	சித்தியார் 7-ம் சூத்திரம்	1
,,	19	மண்டியவுணர்வுயிர்	சிவப்பிரகாசம் உண்மை	15
259	13	தந்திடுஞ்சிவனவ	சித்தியார் 1-ம் சூத்திரம்	19
,,	14	கூடுமொளிவளர்	சிவப்பிரகாசம் பொது	2
,,	16	விமலனுக்கோர்	சித்தியார் 2-ம் சூத்திரம்	53
,,	17	உலகமேயுருவமாக	,, 5-ம்சூத்திரம்	7
,,	,,	அத்துவாமூர்த்தி	,, 1-ம் சூத்திரம்	56
260	3	மூனைத்திடா	,, 7-ம் சூத்திரம்	1
262	8	ஆதலாலிரண்டுஞ்	,, 2-ம் சூத்திரம்	84
,,	9	இகலிவருமிவை	சிவப்பிரகாசம்	25
269	8	பலகலையுலகி	சங்கற்பநிராகரணம் அகவல் வரி	18
,,	15	ஆள்வாரிலிமாடா	திருவாசகம் மூத்ததிருப்பதிகம்	7
275	18	கற்பாடழித்த	சீவகசிந்தாமணி பாயிரம்	14
277	10	மும்மைமாற்பதி	கோயிற்புராணம் இரணியவன்மச்சருக்கம்	67

பக்கம்.	வரி.	பாட்டு.	நூல்.	பாட்டின் தொகை.
,,	12	செறிந்தடிகழுண	,, ,,	68
,,	13	சிவார்ச்சனமிார்	,, வியாக்கிரபாதச்சருக்கம்	4
,,	14	ஆதாரயோக	திருக்களிற்றுப்படியார்	22
,,	20	பொருவினிருவா	சிவப்பிரகாசம் பாயிரம்	9
279	26	தெரிபொருட்பனு	சித்தியார் 8-ம் சூத்திரம்	22
280	16	சன்மார்க்	திருவிசைப்பா	5
,,	21	படிவழிச்சென்று	திருவிசைப்பா கருவூர்த்தேவர் திருவிடைமருதூர்	5
283	10	சன்மார்க்கமுத்தி	சித்தியார் 8-ம் சூத்திரம்	18
,,	15	பால்போ லொருதன்மை	நாலடியார் 12-ம் அதி. மெய்ம்மை	8
285	15	ஆனவத்திலையு	தொல்காப்பியம் வினையியல்	35
,,	27	யாதொருதெய்வ	சித்தியார் 2-ம் சூத்திரம்	25
287	2	வேம்பினெடுதீங்க	சுந்தரமூர்த்திநாயனார் திருநாகைக்காரோணம்	2
289	22	ஞானயோகக்கிரி	சித்தியார் 8-ம் சூத்திரம்	25
291	9	அரும்புமலர்காய்	தாயுமானவர் பராபரக்கண்ணி	157
295	22	இனையபலபிறவி	சிவப்பிரகாசம் பொது	36
,,	30	உம்மூர்தாரு	தொல்காப்பியம் இடையியல்	292
298	11	அகத்துறுநோய்	திருவருட்பயன் அருளுருநிலை	2
299	22	மாயையமாமாயை	சிவப்பிரகாசம் உண்மை	20
300	23	உண்ணின்றறுத்த	போற்றிப்பஃறொடை வரி	61
306	17	சுரர்தமிருமூலை	திருக்களிற்றுப்படியார்	54
,,	20	அன்பிற்குமுண்டோ	திருக்குறள் 8-ம் அதி. அன்புடைமை	1
312	29	மருவுபசுகரணங்	சித்தியார் 8-ம் சூத்திரம்	34
313	25	பாசத்தைப்பசு	,, பரபக்கம் பாஞ்சராத்திர மதமறுப்பு	25
315	23	எவ்குர்தானென்	,, 8-ம் சூத்திரம்	38
316	13	கெடுத்தைநீயே	திருவாசகம் நீத்தல்விண்ணப்பம்	12
317	29	மங்கலமென்பு	திருக்குறள் 6-ம் அதி. வாழ்க்கைத்துணைநலம்	10
321	2	நேசமுடன்திரு	சித்தியார் 8-ம் சூத்திரம்	39
324	10	தன்னறிவைவி	துகளறுபோதம்	49
326	6	வாணிகமொன்று	சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம்	278

பக்கம்.	வரி.	பாட்டு.	நூல்.	பாட்டு தொகை
,,	,,	தேற்றவெழுக்க	நாலடியார் அதி பொறையுடைமை	5
,,	7	தேற்றுதார்மா	திருக்குறள் 106-ம் அதி இரவு	4
,,	9	முறைகாக்கு	திருக்குறள் 55-ம் அதி. செங்கோன்மை	7
,,	14	கண்ணுகிக்கரண	சித்தியார் 9-ம் சூத்திரம்	5
328	16	அட்டகுணமெட்டு	,, ,,	6
329	27	சோதிக்குட்சோதி	,, 8-ம் சூத்திரம்	88
336	14	வானேக்கிவாழு	திருக்குறள் 55-ம் அதி. செங்கோன்மை	2
340	2	மூட்டுமோகினி	சித்தியார் 9-ம் சூத்திரம்	9
345	2	இரண்டாம்பய	சங்கற்பநிராகரணம் அகவல்	20
347	7	காண்பானுங்கா	வினாவெண்பா	11
,,	11	கண்ணொளிவிளக்	சிவப்பிரகாசம்	46
349	18	அக்கிலேகரண	,,	60
,,	21	என்னேபுக்கண்	திருவிடைமருதூர் மும்மணிக்கோவை	18
354	18	ஒய்தலாய்தனிமு	தொல்காப்பியம் உரியியல்	34
355	26	மரபுளிவழாஅ	திருமுருகாற்றுப்படை வரி	95
357	4	சீனுலகெல்லர்	திருநாவுக்கரசுநாயனர் கோயிற்குறுந்தொகை	4
358	16	ஒன்றுமிகினு மொளி	திருவருட்பயன் இருண்மலநிலை	9
,,	20	எல்லேயில்லவ	பெரியபுராணம் அமர்நீதிநாயனர்புராணம்	26
359	21	சிவன் முதலேயன்றி	திருக்களிற்றுப்படியார்	64
362	28	யியர்த்துவெகுளா	நாலடியார் 7-ம் அதி சினமின்மை	4
363	6	இத்தையாபுமறிவு	சித்தியார் 11-ம் சூத்திரம்	11
364	11	அறிவொளிபோற்	சிவப்பிரகாசம் பாயிரம்	7
367	18	எவ்விடத்துமிறை	சித்தியார் 11-ம் சூத்திரம்	7
368	6	விளக்கொளிகலர்த	சிவப்பிரகாசம் உண்மை	8
,,	12	சுத்தவனுபோக	உண்மைவிளக்கம்	51
,,	18	ஒன்றின்றுண	சிவப்பிரகாசம் உண்மை	37
371	7	ஐபுங்கண்ணு	தொல்காப்பியம் வேற்றுமைமயங்கியல்	22
	15	செயற்கைப்பொரு	,, கிளவியாக்கம்	20
	,,	ஆக்கந்தானே	,, ,,	21

பக்கம்.	வரி.	பாட்டு.	நூல்.	பாட்டு இலக்கம்
,,	25	பெற்றசிற்றின்ப	திருவுந்தியார்	33
,,	,,	உடம்புடைய	திருக்களிற்றுப்படியார்	76
,,	27	காணுங்கரணங்க	திருவாசகம் பண்டாயநான்மறை	6
373	5	அங்குராஞ்செய்	சித்தியார் 2-ம் சூத்திரம்	26
,,	6	அறிவாயறிகின்ற	காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி	20
377	4	அந்தவருளுனக்	துகளறுபோதம்	36
,,	11	கரப்பாக்கறிந்து	திருக்குறள் 133-அதி. காதற்சிறப்புரைத்தல்	7
378	18	சிற்றறிவுமுற்	வினாவெண்பா	6
381	30	எடுத்துச்சுமப்பா	திருவருட்பயன் உயிர்விளக்கம்	5
383		இனிச்செய்கன்மம்	சித்தியார் 8-ம் சூத்திரம்	10
384	4	அங்கியமான	சிவப்பிரகாசம் பொது	24
385	18	களைகுநர்கை	திருக்குறள் 8-ம் அதி. பகைத்திறந்தெரிதல்	9
,,	28	ஓங்குணர்விலுதி	திருவருட்பயன் அணைந்தோர்தன்மை	1
386	23	மகவெனப்பல்லுயி	திருவிடைமருதூர் மும்மணிக்கோவை	7
387	5	தெய்வமென்ப	திருவாசகம் 4-வது அகவல் வரி	42
,,	22	யான்பெற்றபேறு	திருமந்திரம்	85
390	2	தூயவெண்ணீறு	பெரியபுராணம் திருநாவுக்கரசு நாயனார் புராணம்	140
,,	6	சிந்தையிடையறு	,, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்	270
,,	9	கண்டகவுணியக்	,, ,,	271
,,	16	சேலுங்கயலுந்தி	திருப்பல்லாண்டு	8
398	20	ஊட்டாகழியு	திருக்குறள் 32-ம் அதி. ஊழ்	8
,,	22	பெற்றத்தாற்பெற்ற	,, 53-ம் அதி. சுற்றந்தழால்	4
400	4	உயிர்தானுஞ்சிவா	சித்தியார் 11-ம் சூத்திரம்	10
401	27	தெரிமாண்டமிழ்	பலநூலுரைகளி லுதாரணங்காட்டப்பட்டது	

அரும்பதப்பொருள்.

பக்கம்.	வரி.	பதம்.	பொருள்.
2	23	குடிலை	சுத்தமாயை.
„	28	சகளம்	உருவம்.
„	„	நிட்களம்	அருவம்.
3	3	பிரதிசங்கிதைமுறை	ஒருவிஷயத்தைப் பலவாகப்பிரித்துத் தனித்தனி யொவ்வொருவருக்குச் சொல்லுதல்.
„	6	மகௌகமுறை	மிகுதியாக வகுத்துச் சொல்லப்பட்ட பலவற்றையுந் தொகுத்தொருவருக்குச் சொல்லுதல்.
„	28	தூலாருந்ததிமுறை	பெரியபொருளொன்றைக்காட்டி அதன் பக்கத்திலுள்ள சிறியதொரு பொருளைக் காட்டுதல்.
„	17	பிராமாணியம்	பிரமாணத்தாலறியு முண்மைத் தன்மை.
5	10	காரகவேது ஞாபகவேது	ஒருபெயர்ச்சொல் வினைகொண்டு முடிந்தவிடத்து அப்பெயர்ச்சொல் ஞாபகவேது. அவ்வினைச்சொல் காரகவேது.
12	6	பரமகஞ்சசந்நியாசம்	மேலான அமிசத்தையுடைய சந்நியாசம்.
13	14	உத்தாரணம்	உச்சரித்தல்.
19 22	27	தாடலைபோலடங்கிநிற்றல்	தாள் தலையென்னுமிரண்டுசொற்கள் புணர்ச்சி விதியாற் றாடலையென்றுதம் முளொன்றுபட்டு நிற்றல்போல உயிருஞ்சிவமுங் கலந்து நிற்றல். தாள் தலை யென்னுமிச்சொற்களாலுவமை கூறியது உயிரினது தாழ்வும் சிவத்தினதுயர்வுங் காட்டுதற்கென்க. தாடலையென்பதில் டகரம் ஓரெழுத்தென்றாவது ஈரெழுத்தென்றாவதுசொல்லமுடியாதவாறுபோல ஆன்மாவுஞ் சிவமுமிரண்டறக் கலந்த போது ஒன்றென்றாவது இரண்டென்றாவது சொல்லப்படாதுநிற்றலு மிதுவே அத்துவிதமென்பது முணர்க.

பக்கம்.	வரி.	பதம்.	பொருள்.
24	23	கோதாட்டு	பாராட்டுதல்.
26	14	கொடிறு	பற்றுக்குறடு, பிடித்தலை விடா திழுக்கும் ஓர் கருவி.
27	4	நால்வகைப் பௌத்தம்	மாத்துமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம்.
30		சங்கேதம்	நியமனம், அதாவது விதித்தலைக் கூறுவது.
40	24	சோதகவாக்கிம்	தொழிற்படுத்தும் வாக்கியம்.
43	27	புரோடாசம்	யாகத்திற்கொடுக்கும்ஓர் அவிசு.
48	19	சற்காரியவாதம்	உண்மைக்காரியவாதம், அதாவது காரணமாகிய மாயை யெப்படிச்சத்தோ அப்படியே காரியமாகிய பிரவஞ்சமுஞ்சத்தென்றல்.
49	8	வியூகம்	பிரிவு.
57	2	அதிகரணம்	இருப்பிடம்.
,,	15	அவினாபாவம்	விட்டுநீங்காத தன்மை.
62	11	இரட்டுறமொழிதல்	ஒருவாக்கியத்தி லிரண்டு பொருள்படச் சொல்லுதல்.
75	13	அவாந்தரகாரணம்	இடையிலே வந்தகாரணம்.
,,	23	ஆதிபகவன்	பராசத்தியோடு நீக்கமின்றி நிற்பவன், பகவன்-ஆறுகுணமுடையவன். ஆறுகுணங்களாவன ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம்.
79	3	சாகபசுநியாயம்	ஓரிடத்திற் பொதுச்சொல்லாற் கூறிய வொரு பொருளை விளங்குமாறு மற்றோரிடத்திலதன் சிறப்புச் சொல்லாற் கூறுதல்.
84	13	நிரதிசயகுணம்	மிகவுமுயர்வுடைய குணம்.
,,	25	வியஞ்சகம்	ஆதாரமாய்நின்று விளக்குவது.
87	18	சமவேதம்	விட்டு நீங்காமை.
,,	3	அவாய்நிலை	ஒரு சொல் மற்றொரு சொல்லை விரும்பி நிற்றல்.
,,	24	சிங்கநோக்கு	முன்னும் பின்னும் பார்த்தல்.
88	6	உத்தேசம்	பெயர்மாத்திரையே கூறுதல்.
89	11	அனன்னியத்தி	வேறின்மை.
97	1	பிரமிதி	அறிதல்

பக்கம்.	வரி.	பதம்.	பொருள்.
101	29	பாரிசேடவளவை	இம்மூவரிலிருவர்கள்ளரல்லரென்றவிடத்தில் ஒருவன் கள்ளனென்றறிதல். பாரி-உபசர்க்கம். சேடம்-ஒழிவு.
103	1	பரிக்கிரகசத்தி	வைப்புச்சத்தி, அதாவது வேண்டும்போதுபயோகிக்குஞ் சத்தி.
,,	23	தாதான்மியசத்தி	எப்பொழுதும் விட்டுநீங்காமனிற்குஞ்சத்தி.
104	16	அத்தியாசம்	வித்தியாசம், ஒன்று பிறிதொன்றாகக் காணப்படுதல்.
,,	21	விவர்த்தனம்	பேய்த்தேராகிய நீர்த்தோற்றம் போல்வது.
106	20	சமவாயம்	நீக்கமின்றி நிற்றல்.
,,	,,	சையோகம்	கலப்பு.
,,	12	பிரமாணம்	கருவி.
,,	15	பிரமேயம்	அறியப்படும்பொருள்.
112	11	ஔபச்சிலேடிகவியாகம்	எள்ளினெய்போல எங்குநிறைந்திருத்தல்.
,,	21	சன்னிதிப்பிரேரகம்	சிற்சத்திபிரேரித்தல், காரியப்படுத்தல்.
113	17	ஊனதை	குறைவு.
,,	20	பிராகிருதம்	பிரகிருதியின்காரியம்.
114	2	அநிர்த்தேசியம்	இத்தன்மைத்தென்றுகூறொணாதது.
116	14	நிகமாகமம்	வேதாகமம்.
,,	21	தாரகம்	ஆதாரம். அவையாவன, அன்னபானியமுதலாயின.
,,	,,	அதிட்டித்தல்	நிலைப்படுத்தல்.
119	5	மூலப்பகுதி	பிரகிருதிமாயை.
120	7	சங்காரம்	மகாசங்காரம்.
,,	8	பூதசாரவுடம்பு	தேவர்களுக்குரியவுடம்பு.
,,	18	கதி	தேவகதி மக்கட்கதி விலங்கின்கதி நரககதி.
128	14	தொகையுவமம்	உவமானவுவமேயங்களின் உவமவுருபும் பொதுத்தன்மையுந்தொக்குநிற்கச்சொல்லப்படுமலங்காரம்.
134	5	பூட்டுவிற்பொருள்கோள்	ஒரு செய்யுள் முதலினுமிறுதியினுநிற்குஞ் சொற்கள் தம்முட்பொருள்கொள்வது.

பக்கம்.	வரி.	பதம்.	பொருள்.
,,	6	சாதியொருமை	ஒருசொல் ஒருமையீறுதோன்றி நின்றுந் தோன்றாது நின்றும் பின்னொருமைப் பன்மை வினையீறாக மேல்வந்து முடிக்குஞ் சொற்களு மின்றித்தானே பன்மைப் பொருளுணர்த்துவது.
143	17	வியத்தி	வெளிப்படை.
146	16	அருத்தாபத்தி	பொருட்பேறு, அதாவது பகலுண்ணான்பருத்திருப்பான் என்றால் இரவில் மறைந்துண்பானென்றறிதல்போல்வது.
148	25	சித்தசாதனம்	முன் சித்தித்தவொன்றினையே மீட்டுஞ் சாதித்தல்.
151	5	கண்படை	நித்திரை.
154	19	அவ்வளவினவன் மகிழ்தல்	பெற்றதுகொண்டு திருப்தியடைதல்.
157	24	சித்தப்பகுதி	மனம், புத்தி, அகங்காரம்.
163	15	அநுவாதம்	முன்சொல்லப்பட்டவொன்றை வேறொருகாரணம் பற்றிப் பின்னுஞ்சொல்லுதல்.
165	12	ஏனைக்கருவிக ளேனைப்பரிசனங்களை யொத்தல்	ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாயில் காப்பாளர், ஒற்றாட்கள், தூதர், புகழ்பாடுவோர், புரோகிதராகவும் கருமேந்திரியங்கள் ஐந்தும்-யானை வீரர், குதிரை வீரர், தேர்ப்பாகர், காலாள், சேனாதிபதியாகவும் சத்தாதி வசனாதி விடயங்கள் பத்தும்-ஏவலாட்களாகவும் பிராணவாயு முதலிய வாயுக்கள் பத்தும்-உறுதிகூறுஞ் சுற்றத்தாராகவும் ஆன்மா-அரசனாகவுங் கொள்க.
169	13	மாசகலம்	உற்பத்திகாலமுதல் மகாசங்காரம் வரையுள்ளகாலம்.
,,	18	புனருத்தி	கூறியதுகூறல்.
170	20	ஆகந்துகமலம்	இடையில் வந்து சேர்ந்தமலம், அவை மாயையுங் கன்மமுமாம்.
,,	,,	சகசமலம்	தன்னொடுகூடத் தோன்றியமலம், அதாவது ஆணவம்.
174	19	ஆலோகம்	ஒளி.
,,	23	வியாகம்	எஞ்சுநிறைதல்.

பக்கம்.	வரி.	பாட்டு	பொருள்.
178	12	பசுத்துவம்	பசுவின்றன்மை. பசு-பாசசம்பந்தப்பட்டு நிற்கும் உயிர்.
,,	,,	பசுநீகாரம்	பசுவைமறைத்தல்.
,,	,,	மிருத்திபு	மரணத்தைக்கொடுப்பது.
,,	13	மூர்ச்சை	அறிவை மயக்குவது.
,,	,,	மலம்	அழுக்கு.
,,	,,	அஞ்சனம்	இருள்.
,,	,,	அவித்தை	ஞானத்தைத் தடுப்பது.
,,	,,	ஆவிருதி	ஆன்மாவைச்சுற்றியிருப்பது.
,,	18	பஞ்சக்கிலேசம்	அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு.
179	9	மூன்றவத்தை	கேவலம், சகலம், சுத்தம்; இவற்றுள் கேவலம்-மலத்தொடு மட்டுஞ் சம்பந்தப்பட்டு அறிவின்றி நிற்றல். சகலம்-மாயாதத்துவங்களோடு கூடிச சிறிது அறிவு விளங்கி விடய போகங்களைப்புசித்து நிற்றல். சுத்தம்-முழுது மலநீங்கிச் சிவத்தொடுகலந்து நிற்றல்.
181	18	வழிமொழிதல்	முன்சொல்லப்பட்டதொன்றை வேறொருகாரணம்பற்றிப் பின்னுஞ்சொல்லுதல்.
193	6	சேட்டிப்பித்தல்	தொழிற்படுத்தல்.
,,	19	அபிமுகம்	நேர்முகம்.
,,	21	உன்முகம்	மேற்கோடல், எழுதல்.
194	4		
,,	30	நால்வகைச்சத்திநிபாதம்	மந்தரம், மந்தம், தீவிரம், தீவிரதரம்.
203	24	இறுக்கமாட்டாதார்	விடைசொல்லமாட்டாதார்.
204	8	சத்து	எப்பொழுதுமுள்ளது.
,,	,,	அசத்து	தோன்றிமறைவது.
,,	4	சித்து	அறிவுடையபொருள்.
,,	,,	அசித்து	அறிவில்லாதபொருள்.
205	5	பக்கம்	பக்ஷம்.
206	2	அனுபலத்தி	இல்லையென்றறியுமறிவு.
,,	5	உபலத்தி	உள்ளதெனறறியுமறிவு.
209	11	காரியவவத்தை	காரணமாகியமாயையினின்றும் வெளிப்பட்டுவிளங்கும் பிரவஞ்சத்தினிலை.

பக்கம்.	வரி.	பதம்	பொருள்.
,,	12	காரணாவத்தை	மாயையிலே சூக்குமமாய் மறைந்துநிற்கும் பிரவஞ்சத்தினிலை.
218	16	கோசரிப்பது	வெளிப்படுவது.
226	4	தாட்டாந்திகம்	உபமேயம்.
230	23	பராபரபேதம்	முன்பின்பேதம்,ஆன்மாவுக்குஞ் சிவத்துக்குமுள்ள பேதம். பேதம்-வேறுபாடு.
,,	28	அதவா	பின், அப்படியல்லாமல்.
231	17	தற்றருமதருமி	தனது தருமமே தனக்குத் தருமமாகவுடையவன். ஈண்டுத் தன்னென்றது-சிவத்தை.
232	5	போத்திருத்துவம்	போகங்களைப்புசிக்கச்சாமர்த்தியமடைந்துநிற்றல்.
240	10	அதச்சதனம்	கீழ்நோக்கியவிதழ்.
,,	,,	ஊர்த்துவச்சதனம்	மேனோக்கியவிதழ்.
241	22	ஆவாரகம்	மறைப்பு.
248	28	சிவானன்னியம்	சிவனோடுபிறிவின்மை.
244	17	கேவலம்	இன்மை.
245	13	விசிட்டம்	விசேடணத்தோடு கூடியது.
246	21	அவ்வியாப்பிய விருத்தியாகியசையோகம்	வியாப்பியவிருத்தியின்மையாகியகலப்பு.
248	18	விசிட்டசத்தை	விசேடணத்தோடுகூடியசத்தை.
,,	,,	சுத்தசத்தை	யாதொன்றானும் விசேடிக்கப்படாத சத்தை.
249	16	அத்துவா	வழி.
251	13	ஞேயம்	அறியப்படும்பொருள்.
,,	,,	போக்கியம்	அனுபவிக்கப்படும்பொருள்கள்.
255	14	உழப்பு	முயற்சி.
,,	15	கழப்பு	சோம்பல்.
269	7	உடம்பொடுபுணர்த்தல்	ஒரு பொருளைச் சொல்லும்போது மற்றொருபொருளுந் தோன்றச் சொல்வது.
294	20	சுந்தோபசுந்த நியாயம்	சுந்தன் உபசுந்தனென்னுமிருவரு மொருவரையொருவர்பொருது இருவரு மொருங்கே யழிதல்போல்வது.
314	25	ஒட்டென்னுமலங்காரம்	தன்னாற்கருதப்பட்டதோர்பொருளினை மறைத்து அதனை வெளிப்படுத்தற்குரிய பிறிதொன்றினைச் சொல்லுதல். இதற்குப்பிறிதுமொ

பக்கம்.	வரி.	பதம்.	பொருள்.
			றிதலென்றும் பெயர்.
318	21	விள்ளற்பாலதனை விண்டு	பிரிதற்பாலதனைப்பிரிந்து, அதாவது பாசத்தைவிட்டு நீங்கி.
"	29	தான்பணியைநீத்தல்	தனக்குச்சுதந்திரமாக ஒருதொழிலுண்டென்பதை யொழித்தல்.
௩20	25	சோபானமுறை	படிவரிசை.
325	26	தத்துவதாத்துவிகம்	உட்கருவிபுறக்கருவி.
326	19	எடுத்துக்காட்டுவமை	உவமானவுபமேயங்களின் சாதுருசிய (ஒப்புமை) தருமத்தையபேதநெறியானே குறிப்பானுணர்த்துவது. அதனை வடநூலார் நிதரிசனுலங்காரமென்பர்.
27	11	நிராலம்பம்	தனக்காதாரமின்மை.
28	28	மூவகைப்பிரவஞ்சம்	அசுத்தப்பிரவஞ்சம், அசுத்தாசுத்த (மிச்சிர) ப்பிரவஞ்சம், சுத்தப்பிரவஞ்சம்.
329	3	பிரவிருத்திரூபம்	முயற்சிவடிவம்.
"	7	மிச்சிரப்பிரவஞ்சம்	அசுத்தாசுத்தப்பிரவஞ்சம்
"	15	சாதிசயானந்தரூபம்	அதிசயத்தோடுகூடிய ஆனந்தவடிவம்.
338	12	பௌதிகம்	பூதசம்பந்தமுடையது. பூதம்-பிருதுவி முதலிய பஞ்சபூதம்.
335	10	சுபக்கம்	தன்மதக்கொள்கை.
337	5	விந்துத்தானம்	புருவமத்தி.
338	9	உபராகம்	கிரகணம்.
340	8	கிரந்தி	முடிச்சு.
355	27	இங்கு	பெருங்காயம்; இது தெலுங்குமொழி. அப்பாடையிற் குற்றுகரமின்மையான் முற்றுகரமென்னப் பட்டது.
9	26	ஆலயவிஞ்ஞானம்	விசேடமான ஞானம். ஆ-உபசர்க்கம். லயம்-அழிதல். வி-விசேடம்.
0		கைமுதிகநியாயம்	அதைப்பற்றி யென்னசந்தேகம்
9	3	சேடம்	உடைமை.
"	19	சங்கோசம்	குறைவு.
"	21	விகாசம்	விரிவு.
387	5	ஆறுகோடிமாயாசத்தி	ஆறுவகுப்புடையமாயாசத்தி. அவையாவன-காமக்குரோதமுதலியன

Introduction.

The dream of the past few generations of Scholars and Pundits, has just been partially realized. Through the cross obstinacy of the Pandara Sannadhis of Tiruvavaduthurai Mutt, the great Bhashyam of Sivagnana Yogi was not allowed to see the light of day. Great credit is therefore due to the present publisher for the zeal and promptitude with which he has brought out this edition. Portions of this Bashyam were scattered about here and there, but the present publisher came upon a find which was a joy and at the same time a disappointment. In the Cadjan Mss. he came across, the Bhashyam for the first five Sutras were eaten up by white ants; and the rest was found entire. And this edition contains the Bashyam of Sivagnana Yogi comprising the introduction and commentary up to the second Adhikarana of first Sutra, and other scattered portions and the commentary from the seventh to the twelfth Sutras. For the remaining Sutras, Sivagnana Yogi's smaller commentary is added. And the publisher hopes to print the entire commentary, if, in future, it should become available.

It rarely happens that a book possessing such great merits is kept out so long from becoming available to the public. But it is a peculiar feature of the Tamil people that they guard their sacred

literary treasures most zealously. They would rather see them perish before their own eyes than see them in the hands of strangers and non-believers. This, we know to be very foolish, and has resulted in incalculable loss to the old literature of this country. This book, as it is, has been awaited for long by pandits and laymen; and we are sure, the portion of the commentary now made available will satisfy their highest expectations. Even Sivagnana Yogi's small commentary far surpassed all other existing commentaries on Sivagnanabodham; and it is no wonder that this **Dravida Maha Bhashyam** as it has been called should be the repository of the highest erudition and scholarship.

The publisher of this Volume has been kind enough to ask us to write this introduction; and it is with great diffidence we proceed to do so. The greatness of Sivagnana Yogi himself, and our short acquaintance with his work would not enable us to record a proper appreciation of him or of his work. Those who have moved among Tamil scholars would have noticed with what awe and respect they speak of this great Scholar and Logician, Grammarian and Poet, Commentator and Controversialist. He belonged to a Saivite Mutt and was a militant Saivite, and yet his great literary powers have won him the admiration of the adherents of other faiths. There have been great poets, or great grammarians, or great writers on philosophy, but the merit of Sivagnana Yogi was

in that he was great in all these different departments of learning; and what is much rarer he brought a healthy independence and a very clear and keen intellect in all his discussions and judgments. We seem to hear the hissing of his scalpel when he proceeds to analyse and lay bare the fallacies of his opponents; and his criticism has been merciless of ancient writers of his own ilk, held in the highest veneration. We may also say that his greatness was in no small measure due to his Sanscrit Scholarship. We will attempt here however a short life of Sivagnana Yogi and his works. Before we do so we will refer our readers to the introduction to our edition of the English translation of Sivagnana Bhodam with the commentary of Meikanda Deva, for a full account of this work and Meikanda Deva and his followers. And a brief summary of it, however, will not be out of place here. The original text of Sivagnana Bhodam consists of 12 anushtup slokas in Sanscrit which is said to form part of Rourava agama. This was translated into Tamil by Meikanda Deva of Tiruvennai Nallur whose time we have fixed as about the beginning of the 13th centuary. He added his commentary in prose and verse called Varthikam; each sutra is divided into several adhikaranas or arguments and each argument is embellished by an illustration in verse. His greatest disciple was Arul Nanthi Sivachariar and his great work Sivagnana Siddhiar elaborates, in verse in detail Meikanda Deava's work. His dis-

ciple was Maraignana Sambanthar and his great disciple was the great Umapathi Sivachariar. His work Sivaprakasam is the third largest work on the Saiva Philosophy. These four acharyas are regarded as Santana acharyas, teachers who belonged to the original succession from the great Nandi, the first Teacher of Truth. These and others have composed among themselves fourteen works, and they are called the Siddhanta Sastras; and these works have dominated the language and thought of the Tamil people for the last six-hundred years or so. Sivagara Yogi of Suryanar Kovil Mutt had composed a great commentary in Sanscrit on Sivagnana Bodha and a commentary in Tamil on Sivagnana Siddhiar. There are several other commentaries on the latter work but none comes up to the level of Sivagnana Yogi's commentary for clearness of exposition. Sivagnana Yogi had composed a small commentary on Sivagnana Bhoda, and a big commentary called the Dravida Mahabhashya portions of which are now offered to the public.

In English, Rev. Mr.Hoisington of the Ceylon Mission translated both Meikanda Deva's Sivagnana Bhodam and Umapathi Sivachariar's Sivaprakasam more than fifty years ago and which were published in the transactions of the American Oriental Society. Father Graul had published in German a translation of Sivagnana Siddhiar. And in 1895, we publised our English Translation of Sivagnana Bhodam and

in the year following that of Tiruvarutpayan or Light of Grace of Umapathi Sivacharya. In 1897 commenced the translation of Sivagnana Siddhiar in the pages of the Siddhanta Deepika or Light of Truth, a Madras Journal in English devoted to Tamil Literature and philosophy and it has been completed. Six volumes of the Siddhanta Deepika have been published and the seventh is running its course. In these volumes, the great Bhashya of Nelakanta Sivachariar on the Vedanta Sutras have been completed, translations of various other works from Tamil and Sanscrit have also been published, together with large number of original articles on the Saiva Siddhanta Philosophy. These works together with translations of the sacred Kural, Naladiyar and St. Manicka Vachakar's Tiruvachakam from the only bibliography in English on the subject of south Indian Philosophy and ethics. In his introduction to the six systems of Indian Philosophy the late professor Max Muller, after pointing out the importance of texts and translations of this nature of any information that can throw light on the chronology of Indian Philosophy, and the most valuable service that the Light of Truth was doing, stated as follows:—

"Nor should their labours be restricted to Sanscrit Texts. In the south of India there exists a philosophical literature which though it may show clear traces of sanscrit influence contains also original indigenous elements of great beauty and of great importance for historical purposes.

Unfortunately few scholars only have taken up as yet to the study of the Dravidian language and literature. Young students who complain that there is nothing left to do in Sanskrit Literature, would, I believe, find their labours amply rewarded in that field."

It rarely happens that honours come in the way of Tamil Scholars and it is a happy sign that our Government should have chosen this time to honour with the title of *Maha Mahopadhayaya*, Pundit V. Swaminathayyar; and it is a matter for rejoicing that the great scholar and statesman the Right Honorable John Morley should have spoken in such high terms of the labours of the Reverend Doctor G. U. Pope in the cause of Tamil. These shoud be incentives to the study of Tamil Literature and philosophy and we hope to see a large number of our Indian students taking up this study with greater ardour and benefit.

Sivagnana Yogi was born of a Saiva-Vellala family in the village of Vikrama Singapuram near the famous Papanasam falls in the Tinnevelly District about 150 years ago. His original name was Mukkalalingar. His parents were Ananda Kûttar and Mayilammai. The boy was put to school and was making very good progress. It happened that some of the disciples of the Tiruvavaduthurai Mutt went on a piligrimage and halted in this village. The boy met them and invited them for meals to his house, and in the absence of the father, Mailammai received them with great pleasure and entertained them. The boy

composed a verse appreciative of his mother's kindness. When Ananda Kûttar returned home, the boy preferred a request that he should be allowed to go with these ascetics and enter the mutt for his education. The father consented to this with great reluctance not wishing to stand in the way of his son's education. Meikkalalingam reached Tiruvavaduthurai in due time, and was received with pleasure by the Head of the mutt and his education was entrusted to the care of Velappa Desikar who was famous for his learning and holiness, and held in consequence the *Chinna pattam*. In his Kanchipuranam, Sivagnana yogi praises his Acharya in the following verse;

எவ்வெவ்கோட் படுபொருளு மஞ்செழுத்தி
லடக்கியவற் றியல்புகாட்டி
மெய்வகையஞ் சவத்தையினு னிற்குமுறை
யோதுமுறை விளங்கத்தேற்றி
யவ்வெழுத்தி னுள்ளீடுமறி வித்துச்
சிவபோகத் தழுத்தினாயேன்
செய்வினையும் கைகொண்ட வேலப்ப
தேசிகன்றாள் சென்னிசேர்ப்பாம்.

That he mastered soon all that he could learn from his teacher in Tamil Literature and philosophy goes without saying. He was duly initiated and received the name of Sivagnana Swami and became an ascetic disciple of this mutt. His earliest efforts in literature would seem to be his commentary on the introduction to Tolkappiyam, the greatest and most ancient work on Grammar and Rhetoric, as also on the

first sutram. Tolkappiyam, had already been commented on by such masters as *Ilampuranar*, *Senavarayar* and the great *Nachinarkiniyar*, and the Yogi's essay was a running comment and critical discussion of some of the points of difference and what he considered as mistakes in these great commentaries. He also revised and corrected the *Virutti* on Nannul by Sankaranamachivaya Pulavar. Among the Tamil people, a scholar's merits are in proportion to his high proficiency in Grammar, and these works would have raised him at once in the estimation of the literate of that day. His short commentary on Sivagnanabhodam must have followed these grammatical composition. His reputation must have spread by this time and he left the mutt for preaching and lecturing in and about Conjeeveram and Madras. Near Madras is a village called Thottikalai and there was a Mudaliar who was a great patron of arts and literature at the time. Among the descendants of this Mudaliar was the late Professor Ranganadham. Our Yogi secured him as his patron and friend, and one Thottikalai Subramania Mudaliar became his pupil also. The Yogi having expressed his desire to master the Sanscrit language, the Mudaliar with great difficulty and expense procured him suitable teachers from Tiruvottiyur and Conjeeveram. He possessed an extraordinary memory. He would simply sit and listen to what the Brahmin teachers would read and expound before him and the whole was committed to his memory. He soon made himself proficient in Tarka

nd Agama Shastras, in the works of Sri Nilakanta Sivacharya, Haradatta, Appayya Dikshitar and others The results of his studies were his translations in Tamil of Tarka Sangraha and Annabhattiyam, of Siddhanta Prakasika of Sarvatma Sambhu Sivachariar, Sivatavavivekam of Appaya Dikshitar and of a famous sloka of Haradatta. All these studies and works had a clear object and this was to culminate in his great undertaking of the Dravida Mahabhashya. While with his patron in Thottikalai, and at his request he composed *Kalasai Sengalanir Vinaya-ga PillaiTamil* in praise of God Ganesa in Thotti-kalai Temple. The date of this composition is given as Saka year 1647, Kara, Kumbha 27 Revati, Friday Purvapaksha-2 ; in an appended verse corresponding 1724. It was on this occasion his patron presented him a large plate full of gold mohurs which he took and at once distributed to the poor present on the occasion—an incident which illustrates how he was great in heart as he was in intellect. His Kalasai *Pathi-trupattandi* was in praise of Thotti kalai Isvara. In it occurs the verse,

"சிவனெனு மொழியைக் கொடிய சண்டாளன்
செப்பிடி லவனுட னுறைக
அவனொடு கலந்து பேசுக வவனோ
டருகிருந் துண்ணுக வென்னும்
உவமையில் சுருதிப் பொருடனை நம்பா
ஊமரோ டென்பயில் கொடியோன்
இவனெனக் கழித்தா லயனே கதிவே
றெனக்கிலை கலசையாண் டகையே."

" *Parama Purusha* dwelling in Kalasai! if you give me up as the sinner associating himself with those fools who won't believe in the incomparable Text of the Upanishad which says, "If even the worst Pariah utters the sacred name "Siva" dwell at once with him, have loving speech with him, and sit near and eat with him," I have no other refuge."

This Text of the Upanishad is *quite* quoted by Sri Nilakanta Sivachariar in his Vedanta sutra Bhashya. But it is strange enough that the published editions do not contain this text. Perhaps it was left out as it would make the Upanishadtoo sectarian !

Kulattur Pathitrupatthanthathi, *Amudambigai Pillai-Tamil* were composed in praise of the God and Goddess of the Temple of Kulattur near Madras His *Mudumozhi Venba* was addressed to the same God but it is an ethical work. The last two lines are a verse of the Sacred Kural and the first two lines contain an illustrative story of the principle from the Puranas and other works. Under கடவுள் வாழ்த்து, we find,

சீர்கொ ணிறை யொன்றுண்டத் தெய்வ மீ யென்றெருப்பால்
சோர்விலடையாற் றெம்பெருங்கோதாஞ் சோமேசா—வோரில்
அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

Under வான்சிறப்பு occurs the following:—

நேய பகழ்த்துணையார் நாட்டுங் கைதளர்ந்துன்
றூய முடிமேல் வீழ்ந்தார் சோமேசா—வாயுங்காற்
றானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

Under கல்வி and கல்லாமை we find,

சம்பந்தர் நாவரசர் பாற்கண்டோம் சார்ந்துவப்ப
தும்பிரிவி னுள்ளுவதுஞ் சோமேசா—நம்பி
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

மெய்த்த திரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலந்
துய்த்தசங்கத் தார் தாழ்ந்தார் சோமேசா—வுய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு.

He composed a centum of verses in praise of the God in Tirumullaivayal near Madras.

Conjeeveram was the scene of his labours next and where he acquired two distinguished pupils in the person of Kachiappa Mudaliar and Saravana Bhaktar. While he composed the part of Kanchipuranam, the Second part was finished by his pupil Kachiapppa.

He composed also his *Kanchi Ananda Rudresar Pathikam*, *Anandakalippu* and *Andadi*. All these works are distinguished by what Pandits, call சொற்சுவை and பொருட்சுவை, (choice words and words full of meaning.) They are full of rhythm and the diction is clear and easy. What is most remarkable about these verses are however the highest philosophical truth which he has introduced into each. Even in his *Nattupadalam* and *Nagarapadalam*, he embellishes with his similies borrowed from philosophy.

போதமேலாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்குமா போன் மழை பெயன் மாறித்தீர்ந்துங்
காதல் செய்துறையும் புள்ளு மாக்களுங் கவன்று நெஞ்ச
நோதகமரங்க ளெல்லா நுண்டுளி துவற்றுமாதோ.

(Even after rains ceased the drippings from trees did not cease as the Vasanamala submits even after the destruction of Anavamala by the attaining of gnana).

விலகிவீ ழருவித் தாரை வேறுவே றாக வோடிக்
குலநதிப் பாலிவைப்பி னேகமாய்க் கூடுந் தோற்றம்
அலகில் பல் வழியு மூதா ரணிமையி னொன்றா மாறும்
பலபல மதமுமீற்றி லொருவழிப் படலும் போலும்.

(As different religions lead us ultimately to the same true path, as so many roads join near a great city, so did the various streams join the River Palar).

வறுமையுற் றுழியுந் தொண்டை வளமலி நாட்டோர் தங்கள்
இறுமுடல் வருந்தியேனு மீவதற் கொல்கா ரன்றே
தெறுகதிர் கனற்றும்வேனிற் பருவத்துஞ் சீர்மை குன்றா
துறுமண லகடுகீண்டு மொண்புன லுதவும்பாலி.

(The people of *Thondainadu* will not even in their extreme poverty lack the power to give to the needy, even though they have to sacrifice themselves. So will the River Palar feed the multitude out of its springs even in the height of hot weather).

Among his controversial essays may be mentioned his *Ilakkana Vilakka Churavali*; and his reputation of Siva Sama Vadam on the word "எடுத்து" occurring in a verse of Siddhiar. His criticism of

the first verse of Kamban's Ramayana and his own answers there exemplify his remarkable versatile genius.

His *magnum opus* was of course his great commentary on Sivagnana Bhodam and all his rare erudition and skill as a dialectism are fully brought to bear on this work and we will notice its contents separately.

After a life of great usefulness and holiness, he was freed of his mortal coils in chaitra of Visvavasu just 121 years ago. And the following verse records this event.

மன்னும் விசுவர் வசுவ்ருட மேடமதி
புன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னும்
திருவாள னெங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கு தினம்.

J. M. NALLASAMY PILLAY,

District Munsiff, Salem.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

சைவாகமங்களினுள்ளவாகிய நாற்பாதங்களுள் வைத்து ஞானபாதத்தோதிய பொருளினை யாராயு மாராய்ச்சி யிந்நூலின்க ணெடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வாராய்ச்சிக்குப் பயன் யாதோவெனவும், இது கேட்டற்குரியா ரியாவரெனவும், இதனா னுதலப்படும்பொரு ளியாதெனவும், இதனைப் பயப்பிக்குங் கருவியா யிதற்கு முன்னொருதலையா னுணர்தற்பால தியாதெனவும், இதனை வழங்குதற்கிட்ட பெயரியாதெனவும், இஃதியாண்டு வழங்குவதெனவும், இதன் முதனூலியாதெனவும், இந்நூல் செய்தா ரியாவரெனவும், பலவாற்றானாசங்கை நிகழுமன்றே; அவ்வாசங்கை நீங்கி மனவெழுச்சி சேறற்பொருட் டிந்நூன்முகத் துரைக்கப்படுவதாகிய

சிறப்புப்பாயிரம்.

"மலர்தலையுலகின் மாயிரு டுமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருடீர்ந்
தருந்துயர்க் குரம்பையி னுண்மாநாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே" எனவரும்.

உயர் சிவஞானபோதமென்றது ஏனை மூன்று பாதத்தை யாராயு நூல்கட்கு மேற்பட்ட சிவஞானபோதமென்றவாறு, எனவே, அந்நூல்களுணர்ந்தபின்னர் இந்நூல் கேட்கற்பாற்றென்பது பெற்றாம். பெறவே, முன்னர்த் தீக்கையுற்றுச் சிவாகமங்களை யோதி யதன்பின் ஏனை மூன்றுபாதங்களை யாராயுநூன் முறையேகேட்டவ்வாறொழுகி மனந்தூயராய் நித்தியாநித்திய வுணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றினவா மிக்குண்டாயவழி, அவர்க்கிந்நூ லுணர்த்துகவென்பது போந்ததெனக்கொள்க.

இப்பாயிரப்பொருளுரையிறுதியில் 'எந்தை சனற்குமரன்' என்னும் வெண்பாவாற் பெறப்படுதலின், ஈண்டுங் கூறுதல் கூறியது கூறலாம் பிறவெனின்,—ஆகாது; 'எந்தை சனற்குமரன்' என்பதனாற் பெறப்பட்டதனையே மாணாக்கர்க்கு நான்முகத் துணர்த்துதற்பொருட்டு ஈண்டுத் தந்துரைத்ததாகலா னென்பது. மிருகேந்திரத்திறுதியிற் கூறும் வரலாற்றினை நாராயணகண்டவாசிரியர் நான்முகத்துத் தந்துரைத்ததூஉ மிக்கருத்தேபற்றி யென்க.

இந்நூ னந்திபெருமான் பெறுதற்கு வரலாறென்னையெனின்? கூறுதும். மாசங்கார முடிவின்கண் உலகங்களை மீளப் படைத்தற்பொருட்டுப் பரமான்மாவாகிய பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கியவழி, வேதாகமங்கள் குடிலையினின்று நாதவடிவாயும், அதன்பின் விந்துவடிவாயும் அதன்பின் அக்கரவடிவாயு முறையே தோன்றின. பின்னவற்றைச் சொற்றொடர்ப்படுத்துச் செய்யுளாக்கிப் பிறர்க்கருளிச் செய்தற்பொருட்டுப், பரமசிவன் ஈசானமுதலிய பஞ்சப்பிரம மனுக்களாகிய சத்திகளை திருமுடிமுதலிய வவயவங்களாகச் சகளநிட்களத் திருமேனிகொண்டருளிச், சதாசிவமூர்த்தியாய் நின்று, தற்புருட முதலிய நான்கு திருமுகங்களான் வேதங்களைத் தோற்றுவித்து, வேதங்களை யனந்த

தேவர் வழியானே பிரமனுக்கருளிச்செய்து, ஈசானமூர்த்தி
யின்றுஞ் சிவாகமங்களைத் தோற்றுவித்து அச்சிவாகமங்க
ளைப் பிரதிசங்கிதை முறையானே பிரணவர் முதலிய பதின்
மரு மகாருத்திரர் முதலிய பதினெண்மருமாகிய விருபத்தெ
ண்மருக்குஞ் சிவபேத முருத்திரபேத மெனப்பகுத் தொ
ரோவொன்றெவ்வொருவருக்கருளிச்செய்து, பின்பு மகுத
முறையானே அவ்விருபத்தெட்டினையும் வித்தியேசரெண்ம
ரின் முதல்வராகிய வனந்ததேவர்க் கருளிச்செய்தான். அவ
ற்றை யனந்த தேவர் நூற்றுப்பதினெட்டுருத்திரரின் முத
ல்வராகிய சீகண்டருத்திரருக் கருளிச்செய்தார். அவற்றைச்
சீகண்டருத்திரர் கணங்கட்குந்தேவர்க்கு முனிவர்க்கு மளித்
தற்பொருட்டு முதற்க ணந்திபெருமானுக் கருளிச்செய்தார்.
அங்ஙன மாகமங்களெல்லாங் கேட்டருளிய நந்திபெருமான்
சீகண்ட முதல்வரை வணங்கிநின்று, சிவாகமந்தோறுஞ் சரி
யை முதலிய நாற்பாதங்களுஞ் சிறுபான்மை வேறு வேறாகக்
கூறப்பட்டன; அவற்றுள் உண்மையாவ திது வென்றருளிச்
செய்யவேண்டு மென்றிரந்து விண்ணப்பஞ்செய்து வினாய
வழிச், சீகண்டருத்திரமுதல்வர் கருணை கூர்ந்து "நன்றே
வினாயினாய்; அனந்ததேவுரெமக் கருளிச்செய்தவாறே கூறு
கின்றோம்; கேட்பாயாக" என்றருளிக், கற்பந்தோறும் படை
ப்பு வேறுபாடுங் கேட்போர் கருத்து வேறுபாடும் பற்றி
அவற்றிற் கியையச் சரியை முதலிய மூன்று பாதங்களு மாக
மங்களில் வெவ்வேறாகக் கூறப்பட்டன.

ஆகலான், அவற்றுள் எவ்வாகமத்தின்வழி யார் தீக்கை
பெற்றார், அவ்வாகமத்தின் வழியவரொழுகற்பாலர். இனி
ஞானபாதமாவது பொருட்டன்மை யுணர்த்துவதாகலின்,
அது பலதிறப்படுதல் பொருந்தாமையின், அவையெல்லாந்
தலாருந்தி முறைபற்றிக் கூறப்பட்டனவன்றி மாறுகோ
ளில்லவென்பது வுணர்த்துதற்பொருட்டு இரௌரவா
கமத்துட் பன்னிருசூத்திரத்தாற் கூறப்பட்டது சிவஞான

போத மென்பதோர் படலம். அது கேட்டார்க்கெல்லா வாக மப் பொருள்களு மாறுகோளின்றி யினிது விளங்குமெனக் கூறி அச்சிவஞானபோதத்தை நந்திபெருமானுக் கருளிச்செய்தார். நந்திபெருமானும் அது கேட்ட துணையானே எல்லா வையமு நீங்கி மெய்ப்பொருடெளிந்து பின்னர்த் தம் மாணாக்கர் பல்லோருள்ளுஞ்சிறந்த சனற்குமாரமுனிகட் கருளிச்செய்தார். அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ்சிறந்த சத்தியஞானதரிசனிகளுக் கருளிச்செய்தார். அவர் தம் மாணாக்கர் பல்லோருள்ளுஞ்சிறந்த பரஞ்சோதிமாமுனிகட் கருளிச்செய்தார். அவர் தமிழ்நாடுசெய்த தவத்தானே திருவெண்ணெய்நல்லூரி லவதரித்தருளி மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையரா யெழுந்தருளியிருந்த மெய்கண்டதேவர்பால் வந்து சிவஞானபோதத்தை நல்கி, "இதனை யீண்டுள்ளோருணர்ந்துய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து பொழிப்புரைக்க" வென்றருளிப், பொழிப்புரைக்குமாறுஞ் சத்தியஞானதரிசனிகள்பாற் றாங்கேட்டவாறே வகுத்தருளிச் செய்து நீங்க, அவருமவ்வாறே மொழிபெயர்த்துப் பொழிப்புரையுஞ் செய்தருளித், தம்முடைய மாணாக்கர் பல்லோருள்ளுஞ்சிறந்த அருணந்திசிவர்க் களித்தருளினார். இஃதிந் நூல்வந்த வரலாறெனக்கொள்க. பொழிப்புரையை வடநூலார் வார்த்திகமென்பர். பொழிப்பெனினுங் காண்டிகை யெனினு மொக்கும். பொழிப்புரை பிண்டப்பொழிப்புரை யெனவுங் கண்ணழித்துரைக்கும் பொழிப்புரையெனவுமிருவகைப்படும். அவற்றுளிது கண்ணழித்துக் கடாவிடைகளா னுரைக்கும் பொழிப்புரையென வுணர்ந்துகொள்க. இனி யாசிரியர் வார்த்திகப்பொழிப்பு உரைச்செய்யுளானும் பாச்செய்யுளானுஞ் செய்யப்படுமென்னும் வடமொழி மதம்பற்றி யீண்டுக் கருத்துரையு மேற்கோளு மேதுவு முரைச்செய்யுளானுரைத்தார்; உதாரணம் பாச்செய்யுளானுரைத்தார்.

'இச்சிவஞானபோதத்து முன்னூற் சூத்திரங்களானே பெத்தமுத்தியின்ற நிலைபற்றி யிலக்கணங் கூறுதலின், அவை

பொதுவியல்பெனவும், பின்னூறு சூத்திரங்களானே முத்தியி னின்ற நிலைபற்றி யிலக்கணங் கூறுதலின், அவை சிறப்பியல் பெனவுமாம். இனிப் பொதுவியல் புணர்த்துநூல்கள் பொதுவெனவுஞ் சிறப்பியல் புணர்த்துநூல்கள் சிறப்பெனவுங் கூறப்படும். சிறப்பியல்பு சகசமாயுள்ளதாகலின், உண்மை யெனவும் படும். பொதுவியல்பு அளவை முகத்தானு மிலக்கணமுகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்த லென்னு மிருதிறத்தா னுணரப்படும். சிறப்பியல்பு சாதகமுகத்தானும் பயன்முகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்த றெளித னிட்டை யென்னு நான்கு திறத்தா னுணரப்படும். கேட்டல் சிந்தித்த றெளித னிட்டைகளை வடநூலார் முறையே சிரவண மனன நிதித்தியாசன நிட்டை யென்ப. "பல பொருட்குப் பொதுவாகிய விலக்கணம் பொதுவியல்பு" என்றும் "ஒரு பொருட்கே யுரிய விலக்கணஞ் சிறப்பியல்பு" என்றும் அளவைநூலாற் கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறு; "தடத்தலக்கணஞ் சொரூபலக்கண" மென்னும் வடசொற்குப் பரியாயப் பெயரா யீண்டுக் கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறெனத் தெரிந்துணர்ந்துகொள்க. இவ்விரு வேறு வகைக்குஞ் சொல்லொருமை மாத்திரையே பற்றி மயங்கற்க.

சிவஞானபோதம் இங்ஙனம் பொதுவியல்புஞ் சிறப்பியல்பு மொருங்குணர்த்தலின், முழு முதனூலாம். இனிச் சிவஞானசித்தி சிவப்பிரகாச மென்பன முறையே யிவ்விலக்கணம் பெற்ற வழிநூலும் புடைநூலுமாம். மொழிபெயர்த்துக் கூறு நூல்களின் ஞானாமிர்த முதலிய பெரும்பாலும் பொதுவியல்புமாத்திரையே கூறுதலிற் பொதுநூலாம். திருவுந்தி திருக்களிற்றுப்படி முதலியன சிறப்பியல்பு மாத்திரையே கூறுதலின் உண்மை நூலாமென்பது. வடமொழியினும் பௌட்கர மிருகேந்திர முதலிய சிவாகமங்கள் பெத்தத்தினின்ற நிலைபற்றி யிலக்கணங் கூறுதலின், அவை பொது நூலா

ம். சருவஞானோத்தர முதலிய சிவாகமங்கண் முத்தியினின்ற நிலைபற்றி யிலக்கணங் கூறுதலின், அவையுண்மைநூலாம். உபநிடதங்களினுஞ் சுபாலமுதலிய வுபநிடதம் உலகந் தோன்றி யொடுங்கு முறைமையுந் தோற்றியொடுக்குதற் கொருகருத்தா வுண்டென்னு மாத்திரையும் போல்வன வுணர்த்துதலிற் பொதுவெனப்படும், சாந்தோக்கிய முதலிய வுபநிடதங்கள் இருவகையுங் கூறுதலிற் பொதுவுஞ் சிறப்புமாம். அதர்வசிகை அதர்வசிரஞ் சுவேதாச்சுவதரமுதலிய வுபநிடதங்கண் முத்திநிலையைபற்றிச் சாதகமும் பயனுங்கூறுதலின், உண்மையெனப்படும். அதர்வசிகை முதலிய வுபநிடதங்களிற்கூறும் பொருள்களுஞ் சிவாகமப்பொருளை நோக்கும்வழிச் சூத்திரமும் பாடியமும் போலத் தூலாருந்ததி முறையாம். இக்கருத்துப் பற்றியே வேதம் பொது நூலெனவும் ஆகமஞ் சிறப்பு நூலெனவுந் திருமந்திர முதலியவற்றிற் கூறப்பட்டனவென் றுணர்க.

"வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றாம்" என்றதூஉம் இம்முறை தெரிந்துகோடற்கென்க. இவ்வுண்மை யுணர்ந்து பொருள் கோடலே யுரைகோண் முறையாம். இனி யிவ்வுண்மை யுணர்ந்து பொருள்கொள்ளமாட்டாதார் உபநிடதங்க ளொன்றோடொன்று முரணு மெனவும் உபநிடதமுஞ் சிவாகமமுந் தம்முண் முரணுமெனவும், சிவாகமத்துள்ளு மொன்றோடொன்று முரணு மெனவு மயங்கி, ஒன்றன் பொருளைபற்றியேனையவற்றை யிகழ்வர். அற்றேலஃதங்ஙனமாக; வேதாந்த சித்தாந்த நூல்கள் அங்ஙன மிரு வேறுவகைப்படுத்துக் கூறவேண்டியதென்னை? சிறப்பியல் பொன்றே கூறவமையுமாலோவெனின்,—அமையாது; ஆன்மாக்கள் அங்ஙனந் தத்தமக்குரிய சோபான முறையினறிந்து வருந் தன்மைக்கேற்பத் தூலாருந்ததி நியாயமாக வுணர்த்தவேண்டுமாதலினென்க, "புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புக

ஸ்மிருதி வழியுமூன்றும் புகலுமாச்சிரம, வறத்துன்றகளவை யடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ், சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என்றதூஉ மிவ்வியல்பு நோக்கியே யென்க.

இங்ஙன மிவ்விருவகை யியல்பும் வேறுவேறுகூறு மாகமங்களின் பொருளொருமை யுணரமாட்டாது, ஒரோவொன் றேபற்றி யைக்கியவாத முதற்பல திறத்தான் வேறுபட்டுத் தம்முண் மயங்குவார்க்கு அங்ஙனமயங்காது அவற்றின் பொருளொருமை யுணர்த்துதற் கெழுந்தது இச்சிவஞானபோத மென்றறிக. இஃதறியாதார் எல்லாவாகமப்பொருளையும் பன்னிரு சூத்திரத்தாற் றொகுத்து விளக்குதற்கெழுந்தது இந்நூலென்றுரைப்ப. மிருகேந்திரத்தின் முதற்கண்ணதாகிய ஒரு சூத்திரத்தானே எல்லாவாகமப்பொருளுந் தொகுத்தெடுத்து விளக்கப்பட்டனவென்பது ஆண்டே யறியக்கிடத்தலானும், மற்று மங்ஙனந் தொகுத்துக்கூறு மாகமங்கள் பலவுள வாதலானும், அதுபற்றி யிதன்கட்போந்த விசேடமின்மையானும், 'நாடிக்கண்டு மயர் வற வளித்த, 'சிவஞானபோத' மென்பதற்குத் தாற்பரிய மதுவாகாமையானும், அவ ருரைப்பன வெல்லாம் போலியென்றொழிக. 'சிவஞானபோத' மென்பதும் இக்காரணத்தாற் பெற்ற பெயர். அஃதெவ்வாறெனின்? "உயர்ஞான மிரண்டா மாறு மலமகல வகலாத மன்னுபோதத் - திருவருளோன் றென்றதனைத் தெளிய வோதுஞ் சிவாகமமென் றுலகறியச் செப்புநூலே" என்பவாகலின், பரஞான மபரஞான மென்றிரண்டுஞ் சிவஞான மெனப்படும். அவற்றுட் பரஞானத்தைப் போதிப்ப தெல்லாவாகமங்கட்கும் பொதுவாகலின், ஈண்டுச் சிவஞானமென்றது அவ்வபரஞானமாகிய சிவஞானமேயாம். போதம்-

போதித்தல். அவற்றி னிச்சயப்பொரு ளிதுவென வுண ர்த்துதலாம். ஆகவே, சைவாகமங்களின் பொருணிச்சய முணர்த்துவது சிவஞானபோதமெனக் காரணக்குறியாயிற் றென் றுணர்க. இப்பொருள் வடமொழிச் சிவஞானபோ தத்துப் பன்னிரண்டாஞ்சூத்திரத்திற் பிற்பாதியிற் கூறி யவாறுபற்றி யுரைக்கப்பட்டது. சிவஞானமெனப் பொதுப் படக் கூறினுந்தலைமைபற்றி ஞானபாதமே கொள்ளப்படும். ஞானபாதத்திற்குத் தலைமை "கிரியை யென மருவுமவை யாவு ஞானங் கிடைத்தற்கு நிமித்தம்" என்பதனுலறிக. அற் றேல், ஏனை மூன்றுபாதப் பொருள்களையாராயு நூல்க ளியா வையெனின்? அவை சோமசம்புசிவாசாரியர் செய்த கிரி யா காண்டக் கிரமாவலி முதலியவாமென்க. அற்றேல், ஞா னபாதப்பொருளாராய்ச்சி நூலும் பிற்காலத் தாசிரியன்மா ரே கூறவமையும்; ஆகமத்துட்கூறவேண்டாம் பிறவெனின்? ஆசிரியன்மார் அவை யனுட்டிக்குமுறை யாராயப்புகுந்தா ரன்றி அவற்றிற்குப் பொருளொருமை கூறப் புகுந்தாரல்லர்; "அவை சிறுபான்மை தம்முள் வேறுபாடுடைய" என்றும்; "யார் யார் எவ்வாகமத்தின் முறையே தீக்கை பெற்றார் அவ ரவர் அவ்வாகமத்தின் முறையே யனுட்டிக்க" என்றும் "எக் கோயில் எவ்வாகமத்தின் முறை பிரதிட்டை செய்யப்பட் டது அக்கோயிலுக் கவ்வாகமத்தின் முறையே பூசை விழா முதலிய நடாத்துக" என்றும், "மாறிச் செய்யிற் குற்றம்" என்றும், ஆகமங்களே கூறுதலின், அவற்றிற்குப் பொரு ளொருமை காட்டலாகாமையின், கற்பபேதத்தாலும், ஆன் மாக்கள் கருத்து வேறுபாட்டாலும், அவ்வவற்றிற் கேற்பச் சிறுபான்மை தம்முள் வேறுபடக் கூறுதல் பொருத்தமு டைத்தென்பதுபற்றி யவற்றைக் கூறு மாகமங்கள் சிறுபா ன்மை யங்ஙனம் வேறுபட நிகழ்ந்தன.

இனி ஞானபாதமாவது பொருட்டன்மை யுணர்த்துவ தாகலின், ஆண்டு வேறுபடுதல் பொருந்தாதாயினும், ஆன்

மாக்களின் மலபரிபாக தாரதம்மியத்திற் கேற்பத் தூலாருந் தி முறைமைத்தாக வுணர்த்துதன் மரபென்பதுபற்றி, அங்ஙனங் கூறு மாகமங்களை நோக்குவோர் அவை யொன்றோடொன்று முரணுவனபோலக் கருதி மயங்குவர். அங்ஙன மயங்காமைப் பொருட்டு ஞானபாதப் பொருள்களை யெல்லாம் பொது வுண்மையென விருவகைப்படுத்து ஆராய்ச்சி செய்தொருதலையா னுணர்த்தவேண்டுதலின், அஃதேனையோரா லாகாமையின் வேண்டுமென்க. அங்ஙன முரணுவன போலத் தோன்றுவன யாவையெனின்? சுவாயம்புவ முதலியவற்றிற் பதார்த்த மேழென்றலும், பௌட்கர முதலியவற்றி னாறென்றலும், பராக்கியை முதலியவற்றி னைந்தென்றலும், சருவ ஞானோத்தர முதலியவற்றி னான்கென்றலும், இரௌரவ மிருகேந்திர முதலியவற்றின் மூன்றென்றலும், போல்வனவா மென்க. அவை யெல்லா மூன்றென்றதனு ளடங்குதலின், முப்பொரு ளொன்றலே எல்லாவாகமங்கட்குந் துணிபெனக் காட்டுதல்போல்வன பொரு ளொருமை கூறுதலா மென்பது.

வேதாகமப் பிராமாணியம்.

வைதிகரி லொருசாரார் "வேதம் பிரமாணநூல்" என்றும், "சிவாகமம் பிரமாணநூலன்" றென்றுங் கூறுவர். சைவரிலொருசாரார் "சிவாகமம் பிரமாணநூ" லென்றும், "வேதமதுபோல்வதோர் பிரமாணநூலன்" றென்றும், கூறுவர். நீலகண்டவாசிரியர் அப்பயதீக்கிதர் முதலிய சிவாத்துவித சைவாசிரியர்கள் நீலகண்டபாடியம், சிவாதித்தமணிதீபிகை, சிவதத்துவவிவேக முதலியவற்றில், அவ் வைதிகரை மறுத்துச் சிவாகமப்பிராமாணியம் வலியுறுத்துரைத்தார். அரதத்தசிவாசாரியர் உமாபதிசிவாசாரியர் முதலிய வைதிக சித்தாந்த சைவாசாரியர் சதுர்வேததாற்பரிய சங்கிரகம், பௌட்கரவிருத்தி முதலியவற்றில், வேதாகமப்பிராமாணியம் வலியுறுத் துரைத்தார்.

"வேதங்களொருவராற் செய்யப்படாது நிலைபேறுடைமையானும், ஆன்றோராற் றழுவப்படுதலானும், குற்றமின்றிப் பிரமாணமாமென்பது துணியப்படும். ஆகமங்களவ்வாறு நித்தமன்றி யொருவராற் செய்யப்பட்டமையானும், பிரமப்பொருள் வேதமொன்றானே யுணரப்படுமென்ப தெல்லார்க்கு மொப்பமுடிந்தமை யானும், அங்ஙனமாயினு மிருதிநூன்முதலியனபோல வேதமுதனூலாகக்கொண் டாகமங்கள் செய்யப்பட்டனவெனின்? அது நம்மனோர்க்குக் கொள்கையன்மையானும், அங்ஙனங்கொள்ளின், வேதப்பொருளுணர்ந்து நூல்செய்த மனுமுதலியோர்போல வாகமஞ்செய்த விறைவனுக்கு முற்றுணர்வின்மை பெறப்படுதலானும், அவ்வாறன்றி முற்றுணர்வியல்பாகவுடைய விறைவனாற் செய்யப்பட்டமையின் ஆகமங்கள் பிரமாணமெனக்கூறின், முற்றுணர்வுடைய விறைவனுண்மை துணிந்தபின்னர் அவனாற் செய்யப்பட்டமையி னாகமம் பிரமாணமெனத்துணியப்படும். ஆகமம் பிரமாணமெனத் துணிந்தபின்னர் அதனானிறைவனுண்மை துணியப்படுமென, ஒன்றனையொன்று பற்றுத லென்னுங் குற்றமாமாகலானும், ஆகமம் பிரமாணமென்பது தெளியப்படாதாம்; அல்லதூஉம், வாசிட்டலயிங்கத்திற் "பாஞ்சராத்திரம் புகழ்ந்தெடுத் தொருசிலர் பகர்வார்" என்பது முதலாகத் தந்திரவழி யொழுகுவோரை எடுத்துக்கூறி "அவர்மாமூட" ரெனவும், பாற்பபுராணத்தில் வசிட்டனுக்குந் திலீபனுக்குங் கூற்று நிகழ்வுழித் "திராவிட தேசந்தன்னிற் சித்திரசேனனென்பா" னென்றெடுத்துக்கொண்டு, "சித்திரசேனனென்னு மரசன் பாசண்டர்கூற்றேபற்றி வைதிக வொழுக்கத்தைக் கைவிட்டுப் பாசுபதவழியொழுகி நரகத்தில் வீழ்ந்தா" னெனவும், வாசிட்டலயிங்கத்திற் "சாண்டில்லிய னென்பானொருவன் றறுகண்ணனாய்ப் பிறர்மனைநயந்து வாசுதேவனைத் தீங்குநெறியானே வழிபட்டு நிரயத்தில் வீழ்ந்தா" னெனவுஞ், சூதசங்கிதையின் "மொழிபாஞ்ச

ராத்திரங் காபாலங் காளா முகஞ்சாக்தம் பவுத்த மாருகதர்
தன்னிற். கழிபாசு பதநூல்சாம் பவத்திற் றீக்கை காதலிப்
பீர் வேதியரிற் கடையர் காணீர்" என்றற்றொடக்கத்தாற்
"றந்திரவழியொழுகுதல் பொய்த்தொழி லுணர்ந்து வெகு
ண்ட கௌதமன் சாபப்பய" னெனவுங் கூர்மபுராணத்தில்
"அனைவருமரன்றனையரியை யண்மி" யென்றெடுத்துக்கொ
ண்டு "அறுமுனிவரிட்ட சாபவயத்தானே வேட்பித்தன்
முதலியவற்றி னதிகாரமின்மையான் விருத்தியின்றி வருந்து
வோர்க்கு விருத்தியின்பொருட்டுத் தந்திரஞ் செய்யப்பட்ட"
தெனவும், அதனுண் "மோகநூ லிருவோமுஞ் செய்வோம்
விடைக்கொடியா" வென்பதனு லாகமங்கண் மோகிப்பிக்கு
நூலெனவுங் கூறுதலால், ஆகமம் பிரமாணமல்லவென்பதே
தெற்றென விளங்குமாகலின், அவை வீடுபேறு முதலிய
மறுமைப்பயன் பயப்பிக்குமா றென்னையெனின்? கூறுதும்.

வேத நித்தமென்பதற்குப் பிரமாண மின்மையானும்,
தோற்றக்கேடுகள் காணப்படுதலா னநித்தமென்பதே துணி
யப்படுதலானும், 'அந்தக்ககரமேயிது' வென்னுமறித்துணர்வு
அந்தச்சுடரே யிதுவென்பதுபோலச் சாதியொருமைபற்றி
நிகழ்வதேயாமாகலானும், அவ்வாறன்றி யெழுத்துக்கணித்த
மெனக் கொள்ளினும் அவையொன்றோடொன்று தொடர்ப்
பட்டுவருஞ் சொற்க ளநித்தமேயாகலானும், உலகத்திற்
குத்தோற்ற வொடுக்கங்களுண்மையிற் பிரவாகநித்தமென்ப
தும் பொருந்தாமையானும், எல்லாவுயிர்கண்மாட்டும் பேரரு
ளுடைய பரமசிவனாற் செய்யப்பட்டமைபற்றியே வேதங்
கட்குப் பிரமாண முண்மை கொள்ளப்படும். அம்முறையா
னே சிவாகமங்களும் பிரமாணமாதல் றுணியப்படும். அது
"வேதமுத லுலகாயத நூலிறுதியாகியவெல்லா நெறியும் பரம
சிவனாற் செய்யப்பட்டமையானும், இறுதிக்காலத்துப் பரம
சிவனிடத் தொடுங்கிய வேதம் படைப்புக்காலத்து முன்போ
லவே தோன்றுதலானும், 'நித்த' மென்றுபசரித்துக் கூறப்

படும். ஆகலின், சிவாகமங்களை நித்தமென்பது மிக்கருத் தேபற்றி யென்க. அங்ஙன மல்லாக்கால், "வேதம் பரம சிவனாற் செய்யப்பட்ட" தென்னுஞ் சுருதிகளோடும், "அட்டாதச வித்தைக்கு முதற்கருத்தாவாகிய சூலபாணி" யென் றற்றொடக்கத்துப் புராணவசனங்களோடும் ஈண்டுக்கூறும் அனுமானவளவையோடும், முரணுமாறறிக.

ஒருவனின்னேன் வந்தேனென்புழி அவனு மவன் வாய் மொழியும்போல, முதல்வனு முதல்வனாற் செய்யப்படும் வேதாகமங்களுந் தம்முட் காரகவேதுவு ஞாபகவேதுவுமாகிய வேறுபாடுடைமையின், இன்னோரன்னவை யொன்றனை யொன்று பற்றுதலென்னுங் குற்றமாகா வென்க. இனி யான் றோராற் றழுவப்பட்டமைபற்றி வேதஞ் சிவாகமமிரண்டும் பிரமாணமெனத் துணிந்தபின்னர் அவற்றானே யவை பரம சிவனாற் செய்யப்பட்டனவென்பது துணியப்படுமாகலானு மொன்றனையொன்றுபற்றுத லாகாமையு முணர்க. ஆன் றோராற் றழுவப்படுத லாகமப்பகுதியினின்றாலெனின்? அற் றன்று; "துறக்கம் வேண்டியோன் சோதிட்டோமத்தான் வேட்க" வென்றற் றொடக்கத்துச் சுருதிகட்கு அவை வேட்குமாறு வகுத்துக் கூறுஞ் சுருதிகளு மத்தன்மையவாகிய கற்ப சூத்திரங்களு மின்றியமையாது வேண்டப்படுமாறு போல வேதத்துள் விதிக்கப்படுஞ் சிவபூசை முதலிய விதிக ட்கும் அவற்றை வகுத்துக் கூறுங் காமிக முதலிய சிவாகம ங்க ளின்றியமையாது வேண்டப்பட்டு நிற்றலின், அவை யா ன்றோராற் றழுவப்படுத லொருதலையாகலானென்க. இது சதுர்வேததாற்பரியசங்கிரகத்தில் அரதத்தாசாரியர் கூறிய வாற்றானறிக. அங்ஙனமாயினுந் தீக்கைப்பே றின்றோராற் றழுவப்படாமையின், அப்பகுதியிற் பிரமாணமாமாறென்னை யெனின்? அற்றன்று; சுவேதன் உபமன்னியன் அகத்தி யன் முதலியோர்க்குத் தீக்கைப்பேறு காண்டலானென்க.

உபமன்னியன் அகத்தியன் முதலியோர்பாற் கண்ணன் இரா மன் முதலியோர்க்குத் தீக்கைப்பேறு அரிவஞ்சம் பாரதம் பாற்பபுராண முதலியவற்றின் விரித்துக்கூறியவாறுங்காண்க. அஃதெல்லாரும் பெறுமை, எல்லாருக்கு மலபரிபாக மின் மையாற், பரமகஞ்ச சந்நியாசம்போல, அதற்குரிய வதிகாரி கள் சிலரேயாகலானென்பது. அற்றேல், வாமநூல் முதலா யினவும் பரமசிவனாற் செய்யப்பட்டமையின், காமிகமுதலிய வற்றோடொப்பப் பிரமாணமாதல் வேண்டப்படும் பிறவெ னின்? படாது; அவற்றுட் கூறுஞ் சுரைக்குடந்தாபித்தல் முதலிய வாசாரங்கள் வேதத்தொடுத்தோதி விலக்கப்பட் டமையிற், சவுத்திராமணியாகத்திற் சுரையேற்றல் வேதத் துள் விதிக்கப்பட்டதாயினு மேலோர்க்கேயாயவாறுபோ ல, அவையும் அவ்வோர்க்கே யுரியவென்பது பெறுதுமாக லின், அவையு மவற்றிற்குரிய வதிகாரிகள் வேறுபாட்டாற் பிரமாணமமெனக் கொள்ளப்படுமென்க. அங்ஙனமாயின், அது வேத விதியோடு முரணுமாலோவெனின்? அவற்றுட் கூறுங் கிரியைகட்கு வேதநெறியிற்றப்பியமாந்த ரதிகாரிக ளெனப் பிரித்துவைத்தலான் முரணாதென்க. இது காந்தத் துட் கூறப்பட்டது.

இனிப்பொருள்கண் முரணியவழி வலியவற்றான் மெலி யவை கண்டிக்கப்படுமெனக் கொள்க. எல்லாநெறியு மிறை வனாற் செய்யப்பட்டமையான் விசேடமின்மையின் அவற்று ளொன்றற்கொன்று வன்மை மென்மை கூறின், இதுவே மாறுகொளக் கூறலாமாலெனின்? அற்றன்று: அவற்றைப் பின் வழிப்படுத்து நூல்செய்தோர் தாரதம்மியந்தானே யவ ற்றிற்கு வன்மை மென்மை கூறுதலமையுமாகலின், பின்னூ ல் செய்தார் அவ்வந்நெறியிற் கூறும்பொருள்களை யம்மொழி யின் றாற்பரிய மறியாது மயங்கி அவற்றோடு மாறுகொளத் தொகுத்தும் விரித்துஞ் செய்தாராகலின், அவை மென்மை யெனப்பட்டன. மாறுகோளில் கூற்றினெல்லாம் பிரமாண

மேயாமென்க. இனி வேதத்தினுஞ் சிவாகமத்தினு மிந்திரன் முதலியோர் அவ்வாறு வழிப்படுத்து வேறு நூல்செய்யாது, வேதத்திற்கு வியாசர் முதலியோரும் ஆகமத்துக்குப் பிரணவர் முதலியோரும்போலச் சம்பிரதாயமாத்திரமே விளக்கினாராகலின், அவ்விரண்டினுள் வன்மை மென்மைகள் கூறுதல் பொருந்தாமையின், அவற்றுளொரோவழி மாறுகோள்போலத் தோன்றியவழி, வேதவாக்கியங்கடம்முண் மாறுபட்டவழிக்கருத்து வேறுபாடு பற்றிக் கூறியதெனத் தெரிந்துரைத்துக்கொள்வதுபோல, அவை முரணுதவாறு தெரிந்துரைத்துக்கொள்வதன்றி, அவை யொன்றனொன்று மறுக்கப்படாவென்க.

இவ்வாறன்றி, இன்னுமொருவாற்றான் விடுக்குமாறு: சாருவாக முதலிய வெல்லாச்சமயமும் பரமசிவனாற் செய்யப்பட்டமையிற் பிரமாணமேயாமாயினும், அவற்றுண் முதற்கண் மிகவுமந்தவுணர்வினரா யுலகவின்பமே பெரும்பயனெனவுந் தமக்குப்புறம்பாகிய மக்கண் முதலியோரே யான்மாவெனவு மபிமானஞ் செய்துழலுமதிகாரிகளுக்குப், பரமசிவனிரங்கித், துன்ப முதலிய வற்றோடு விரவுதலா னுலகவின்பம் பேருறுதிப்பயனன்றெனவு மக்கண் முதலியோ ரான்மாவல்லரெனவு முணர்த்தி, அவர்களுணர்வு அவ்வளவி னிலைபெறுதற் பொருட்டு நுட்பப்பொருளுணர்த்தப் புகிற் கொள்ளமாட்டாமையாற் றாலவுடம்பே யான்மாவெனவும் அவ்வுடம்புநசித்தலே பேருறுதிப் பயனெனவு மறிவுறுத்தருளினான். பின்பங்ஙன மறிவுறுத்த நெறியே யொழுகிப் பரமசிவன் றிருவருட்குரியராய் மலசத்தியிற்சிறிது நீங்கி, உடம்பே யான்மா உடம்பு நசித்தலே பெரும்பய னென்பவற்றினையப்பாடு தோன்றிய வதிகாரிகளுக்கு, உடம்பு முதலியன வான்மாவல்லவென்று மறுத்தற்பொருட்டுப் புத்தனா லறிவுறுத்தருளினான். இவ்வாறே மேலுஞ் சோபானமுறை யானுபதேசித்தருளியதென மாறுபாடின்மை யுணர்ந்துகொள்ளப்படும்.

இங்ஙனஞ்சாருவாக முதலிய நூல்களைச்சோபானமுறையாற் கொள்ளவே, அதிகாரி தாரதம்மியத்தான் மேலுள்ள நூல்க ள் கீழுள்ளநூல்களை மறுக்குமுகத்தாற் றோன்றினவாகலின், மாறுகோளில்லையென்பதூஉம், அவையு மொருவாற்றாற் பிர மாணமேயாமென்பதூஉம், போந்தமையுணர்க.

இது தயித்திரியத்தி லதிகாரிபேதம்பற்றி "அன்னமய கோசம் பிரம" மென்றும், அதனை மறுத்து மேலதனிற் சூக் குமமாகிய "பிராணமயகோசம் பிரம" மென்றும், அதற்கு மேல் "மனோமயகோசம் பிரம" மென்றும், அதற்குமேல் "விஞ்ஞானமயகோசம் பிரம" மென்றும், அதற்குமேல் "ஆ னந்தமயகோசம் பிரம" மென்றும், ஒன்றற்கொன்று சூக்கு மமா யுணர்த்துதல் போலவும், கவுசிதகவுபநிடதத்தி லதிகாரி பேதத்தால் இந்திரன் றயித்தியனுக்குத் தன்னையே பிரமமா கக் கூறியதுபோலவுங் கொள்க. அங்ஙனம் புல்லையெதிரே காட்டி யாக்களைப் பிடிக்குமாறுபோலச் சோபானமுறைமை பற்றிக் கூறியதென்பதும், அவையெல்லா மொருவாற்றாற் பிரமாணமென்பதும், சூதசங்கிதையிற் காண்க. இங்ஙனங் கூறியவாற்றானே, வேதமுஞ் சித்தாந்த சைவாகமமுமென் னு மிரண்டுமே யுத்தமநூலெனவும், ஏனைச் சாருவாகமுதற் பாஞ்சராத்திர மிறுதியாகிய நூல்களெல்லா மிவ்விரண்டினொ டு மாறுபட்டவழி மறுக்கப்படுமெனவும், அவற்றுள்ளும் வ ழிநூல் செய்தார் தாரதம்மியத்தாற் கீழ்க்கீழ் நூல்கண் மே ன்மேனூல்களான் மறுக்கப்படுமெனவும், உணர்ந்துகொள்க.

இனித் "தந்திரவழி யொழுகினோர் மூட" ரெனவும், "நிரயத்தில் வீழ்ந்தா" ரெனவும், "அவை சாபப்பய" னென வும், "விருத்திப் பொருட்" டெனவும், "மோகநூ" லெனவு ம் பூராணங்களிற் கூறியது, வேதப்பொருளொடு மாறுகொ ளக் கூறும் பாசுபதம் பாஞ்சராத்திர முதலிய புறச்சமயங்க ளையாம்; வேதப்பொருளையே விரித்துக் கூறப்புகுந்த வேத

சாரமாகிய சித்தாந்த சைவாகமங்களே யன்றெனவுணர்க. இது வும் வாயவ்வியசங்கிதை சனற்குமாரசங்கிதை கூர்மபுரா ண மகுடாகம முதலியவற்றுட் கூறியவாறு. இனிப் புறச் சமயவழி யொழுகினோரை யங்ஙன மிழித்துக் கூறியதூஉம், அந்நெறி யொழுகுதல் பற்றியன்று; மற்றென்னெனின்? அவற்றையே பொருளாகக் கொண்டு வேதநெறியை நிந்தி த்தமை பற்றி யென்க, அதுவும் ஆண்டே கூறப்பட்டது.

புறச்சமய நூல்கள் விருத்திப் பொருட்டுச் செய்யப்ப ட்டன வென்பதூஉம், உடலோம்புதற் பொருட்டென்றதன் று; விருத்தி யொழுக்கமுமாமாகவிற் சாபத்தால் வேதநெறி யி னீங்கினோ ராசரித்தற்பொருட் டென்றவாறும். மோக நூலென்றதூஉம், மணிமந்திர மருந்து முதலியவற்றான் விம் மிதம்பயக்கு நூலென்றவாறேயாம். இனி வேதமுஞ் சிவா கமமு மொன்றேயாயினு மிருபகுதிப்பட்டது, வேத மூன்று வருணத்தார்க்குஞ் சிவாகம நான்குவருணத்தாருக்கும் பொ துவாதல்பற்றி யாதலாற் சிவாகமங்கள் பிரமாணமென்பது தெற்றெனவுணர்க. இங்ஙனஞ் சைவாகமங்களுக்குப் பிரா மாணியம் பௌட்கரவுரையி னுமாபதிசிவாசாரியர் காட்டிய வாறே காண்க. நீலகண்டபாடியத்திற் பதியதிகரணத்திற் கா ட்டுமாறு, "சிவாகமங்களி னொருசாரன பரப்பிரமங் கேவல நிமித்தகாரண" மெனக்கூறும்; அதனை மறுத்தற்கெழுந்த தி வ்வதிகரணமென் றுரைப்பாருமுளர்; அது பொருந்தாது; யாம் வேதத்திற்குஞ் சிவாகமத்திற்கும் வேற்றுமைகண்டில ம்; சிவனாற் செய்யப்படுதலின் வேதமுஞ் சிவாகமமென வழங்கப்படுமாதலாற் சிவாகம மூன்றுவருணத்துக்கே யுரித் தாயது நான்குவருணத்துக்கே யுரித்தாயதுமென விருவகை ப்படும்; அவற்றுண் முன்னையது வேதமெனவும் பின்னைய து சிவாகமமெனவும் வழங்கப்பட்டன; இவ்விரண்டுஞ்செய் த கருத்தன் சிவனொருவனேயாம்; இவ்வாறு சுருதியினும் புராணங்களினுஞ் சிவாகமங்களினுங் கூறப்பட்டது; பஞ்ச

ப்பிரமம் பிரணவம் பஞ்சாக்கரம் பிராசாதமுதலிய மந்திரங் களும், பதி பசு பாச முதலிய பொருள் வழக்கமும், திருநீற் றி னுத்தூளனந் திரிபுண்டர முருத்திராக்கந் தரித்தல் சிவலி ங்கபூசை முதலிய தருமங்களும், பிறவும், வேதஞ் சிவாகம மிரண்டினு மொப்பக்காண்டலான், அவ்விரண்டும் பிரமாண மேயாகலானும், கருத்தா வொருவனேயாகலா னவ்விரண்டிற் கும் பொருளொன்றேயாகலின் அவற்றுள்ளு மாறுபாடின் மையானும், இவ்வதிகரணங் கேவல நிமித்தமாத்திரமே யி றைவனெனக்கூறு மிரணியகருப்பநூலாகிய யோகசாத்திரத் தை மறுத்தற் கெழுந்ததெனவே யாங் கூறுதும்" என்றிவ் வாறு நீலகண்டவாசாரியராற் காட்டப்பட்டது. இதனை வி ரித்துச் சிவாதித்தமணிதீபிகை சிவதத்துவவிவேகமுதலிய நூலுடையார் சிவாகமங்கட்குப் பிராமாணியங் காட்டியவா றும் அந்நூல்களுட்காண்க.

வேதஞ் சிவாகமமென விருபகுதிப்பட்டது, மூன்றுவ ருணத்திற்கு முரிமையாதலு நான்குவருணத்திற்கு முரிமை யாதலும் பற்றியென நீலகண்டபாடியத்திற் கூறப்பட்டது. "வேதநூல் சைவநூலென் றிரண்டேநூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க, ளாதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு மாரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலா, நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தியது நீண்ம றையி னொழிபொருள் வேதாந்தத், தீதில்பொருள் கொண் டுரைக்கு நூல்சைவம் பிறநூ றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சி த்தாந்த மாகும்" எ-ம், "உலகியல் வேதநூ லொழுக்க மென் பது, நிலவு மெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்" எ-ம் கூறு பவாகலின், அங்ஙனந் தூலாருந்ததி முறைமைபற்றிக் கூறு தலின் இருபகுதிப்பட்டதெனவே யாங் கோடும்.

இனிச் சைவரிலொருசாரார் சைவாகமங்களில், "உலக நூல், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திர" மென நூல்களையைவகைப்படுத்து, "மாந்திரமொழிந்த நான்

கும் புறநூ" லென வைதிகத்தினையும் அவற்றுடன் விலக்கு தலானும், "வேதாந்தத்திலேகனேயான்மா" வென வேதாந்த தைப் புறச்சமயங்களோ டெடுத்தோதி மறுத்தலானும்' வேதம் பிரமாணமன்றென்பர். அது பகுத்துணர்வில்லாதார் கூற்றேயா மென்று மறுக்க, என்னை? "ஆண்டு 'வைதிக' மென்றது மீமாஞ்சைநூலும், வைசேடிகநூலும், நையாயிகநூலுமென்னு மூன்றுமேயா" மெனவும், "புறச்சமயங்களோடு வைத்தெண்ணிய 'வேதாந்த' மாவது ஏகான்மவாதங்கூறும் வியாசநூ" லெனவும், சித்தாந்தப்பிரகாசிகையிற் சர்வான்ம சம்புசிவாசாரியர் கூறுதலான், அது வேறென்பது தெற்றென விளங்குமாகலின், ஆண்டு "வேத" மென்றதூஉம் மீமாஞ்சை நூலையெனக்கொள்க; வேதத்துள் விதித்த கருமகாண்டத்தை யாராய்ச்சிசெய்தலின் அதற்கு மப்பெயராயிற்று. அங ஙனங் கொள்ளாக்கால், வேதசாரஞ் சிவாகம மாதலாற் " சைவாசாரத்திற்குரியோன் வைதிக" னெனவும், "வேதாந்தப்பொருளைத் தெளித்துக் கூறுவது சித்தாந்த" மெனவும், "பிறநூல் பிற பொருள்களைக்கூறு" மெனவும், வேதத்தோடொற்றுமை யுடைமைபற்றியே சிவாகமங்கட்குப் பிரமாணமாதல் கூறும் வசனங்களோடு முரணுமாறறிக. 'பாசுபத' மென்பது யோகப் பெயராற் சைவாகமங்கட்கும் உரூடப் பெயராற் பாசுபதாகமங்கட்கு மாமாறுபோல, 'வேதாந்த' மென்பது யோகப்பெயரான் வேதத்தின் முடிபாகிய வுபநிடதங்களைக் கூறும்; உரூடப்பெயரால் அவற்றை யெடுத்துச் செய்த வேகான்மவாதநூலைக் கூறும். ஆதலின், அவ்விரு வேறுவகையுந் தெரிந்துணர்ந்து கொள்க.

வேதமோதுதற்கண்ணும் வைதிகாசாரத்தின்கண்ணும் உபநயனப் பேறுடையார்க்கன்றி யதிகாரமின்மைபோலச் சைவாகம மோதுதற்கண்ணுஞ் சைவாசாரத்தின்கண்ணுஞ் சிவதீக்கைப் பேறுடையார்க்கன்றி யதிகார மில்லையெனக் கொள்க.

வேதத்திற் கூறுங் கருமகாண்டப் பொருட்கு இன்றியமையாது வேண்டப்பட்டெஞ்சி நின்றனவாய பொருள்களையும் வேதமுடிபாய வுபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக்கொண்டு இனிது விளக்குதலின், சிவாகமஞ் சித்தாந்த சாத்திர மென்று வழங்கப்படும். இச்சித்தாந்த வாகமங்கள் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாத மென நான்கு பாதங்களுடையனவாம்.

இவற்றுள், சரியாபாதத்துட் பிராயச்சித்தவிதியும், பவித்திரவிதியும், சிவலிங்க விலக்கணமும், நந்தி முதலிய கணநாதரிலக்கணமும், செபமாலை யோகபட்டந் தண்டங் கமண்டல முதலியவற்றி னிலக்கணமும், அந்தியேட்டிவிதியும், சிரார்த்தவிதியும் கூறப்படும்.

கிரியாபாதத்துண் மந்திரங்களினது உத்தாரணஞ் சந்தியாவந்தனம் பூசை செபம் ஓமங்களும், சமயம் விசேட நிருவாணம் ஆசாரியாபிடேகங்களும், புத்தி முத்திகளுக் குபாயமான தீக்கையும் கூறப்படும்.

யோகபாதத்துண் முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசுரரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும், சகத்திற்குக் காரணமான மாயை மாமாயைகளைக் காணும் வல்லமையும், அணிமாதி சித்திளுண்டா முறைமையும், இயமம் நியமம் ஆசனம் பிராணயாமம் பிரத்தியாகாரந் தாரணந் தியானஞ் சமாதிகளினுடைய முறைமையும், மூலாதார முதலிய ஆதாரங்களின் முறையும் கூறப்படும்.

ஞானபாதத்துட் பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னு மான்மாக்களின் சொரூபமும், ஆணவங் காமிய மாயேயம் வைந்தவந் திரோதான சத்தி யென்னும் பாசங்களின் சொரூபமும், சத்தியின் சொரூபமும், சிவதத்துவமுதற் பிரகிருதி தத்துவம்வரை முப்பத்

தாறு தத்துவங்களினது உற்பத்தியும், இவை யான்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியாமுறையும், புவனங்கள் புவனேசுவரர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும், அதமப் பிரளய மத்திமப்பிரளய மகாப் பிரளயங்களின் சொரூபங்களும், அதமப் பிரளயங்களின் பின்னர்ச் சிருட்டியா முறைமையும், பாசுபதம் மாவிரதங் காபாலிக முதலிய மதங்களின் சொரூபங்களும் கூறப்படும்.

உயர் சிவஞானபோதமெனவே யாப்பும், கேட்போரும்; முதலிய பொருளும், நூற்பெயரும், நாடித் தீர்ந்து கண்டு மயர்வறவெனவே முதலிய பொருளின்வகையும், பயனும், நந்தி முனிகணத்தளித்தவெனவே வழியும், வெண்ணெய்ச்சுவேதவனன் மெய்கண்டதேவனெனவே ஆக்கியோன் பெயரும், தமிழ் வழங்கு நிலமே இந்நூல் வழங்குநிலமென எல்லையும் போந்தவாறுணர்க. வடநூலார் யாப்பை ஆனந்தரியமென்றும், முதலிய பொருளை விடயமென்றும், கேட்போரை அதிகாரிகளென்றும், பயனைப் பிரயோசனமென்றுங் கூறுப. யாப்புச் சம்பந்தமென்பாருமுளர்.

பாயிரம் முடிந்தது.

உ

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

திராவிடமாபாடியம்.

எனப்படும்

சிவஞானபாஷ்யம்.

மங்கலவாழ்த்து.

சைவாகமங்களுண் ஞானபாதப் பொருளினிகலறுத்து அவற்றின் பொருளுண்மை போதித்தற்கு ரௌரவாகமத்தினெழுந்த சிவஞானபோத நூலினைத் தமிழுலகமுய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து பொழிப்புரைப்பானெடுத்துக்கொண்ட வாசிரியர், சாக்கிரத்தே யதீதத்தைப் புரியுந் தமக்கு இடையூறு சிறிதுமணுகாமை யறிந்தாராயினும், ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும், மாணாக்கர்க் கறிவுறுத்தற்பொருட்டும், முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார், வாழ்த்தும் வணக்கமும் பொருளியல் புரைத்தலுமென மங்கலவாழ்த்து மூவகைப்படும், அவற்றுளிது பொருளியல் புரைத்தலெனக் கொள்க,

கல்லா னிழன்மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே. எனவரும்,

நந்திபெருமானுக்கு இந்நூலறிவுறுத்தருளிய முதலாசிரியரென்ப துணர்த்துதற்குக் கல்லானிழலென இடமுங் கூறினார். ஆண்டெழுந்தருளியிருந்து, சிவாகமப்பொருள்களொன்றோடொன்று முரணுவனவாக மலைந்து வினவிய நந்திபெ

ருமானுக்கு, இந்நூலான் மலவுநீர்த்தருளினாரென்பார், மலை யில்லாரென்றார்' இல்லார் இல்லாகச் செய்தாரெனப் பண் படியிற் பிறந்த வினைப்பெயர். இனி மலையில்லாரென்பது மேருவை வில்லாகவுடையரெனக்கொண்டு, கல்லானிழலிலெ ருந்தருளியிருந்து வீடுபேறும் மலையை வில்லாக வளைத்துப் பகைவரைவென்று போகமும் அளித்தருளியோ ரெனினுமமையும். எனவே ஐந்தொழிற்கும் வினைமுதலென்றவாறு யிற்று.

அருளியவென்பது செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். உண்ணியபுக்லென்றாற்போல. அது புனைவ ரென்னும் பிறவினை முதல்வினைகொண்டு முடிந்தது. அரு ளுதல், புனைந்தமைபற்றிக் கல்லானிழலில் வீற்றிருந்து மல வு நீர்த்தருளிய வாசிரியர் கருணைமீக்கூர்தல். அருளிய பொ ல்லாரெனப் பெயரெச்ச முடிபாக வைத்துரைத்தலு மொ ன்று.

பொள்ளார் பொல்லாரென மரீஇயிற்று: சுயம்புமூர்த்தி யென்றவாம்,

இணைமலர் பண்புத்தொகைநிலைக்களத்துப்பிறந்த அன் மொழித்தொகையாய்த் திருவடியை யுணர்த்திற்று. இணை யென்பதனைத் திருவடிக்கு அடையாக்கி இருபெயரொட்டா குபெயரென்றலுமொன்று. இவற்றியல்பெல்லாம் சூத்திர விருத்தியுளுரைத்தாம், ஆண்டுக்காண்க. புனைவரென்றதற் கேற்பத் திருவடியை மலராக வுருவகஞ்செய்தாரென்றலு மொன்று.

நல்லார்-கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தமுதியோர். புனை தல்-தாடலைபோலடங்கிநிற்றல். ஏகாரமீற்றசை. தேற்றமெ னினு மமையும்.

இப்பாட்டு வஞ்சித்துறை. இது கல்லென்பது முதல்வ வென்பதிறுவாய்ப் பன்னிருசொற்களாற் கூறவே, இந்நூல் பன்னிரு சூத்திரத்தாற் செய்யப்பட்டதெனவும், அவற்றுண் மும்மூன்று சொற்கள் ஒவ்வோரடியாக வைத்து நான்கடியாகக் கூறவே, இந்நூலும் அவற்றுண் மும்மூன்று சூத்திரம் ஒவ்வோரியலாக வைத்து நான்கியலாற் செய்யப்பட்டதெனவும், அவற்றுண் முன்னிரடியு மொரு வினைமுடியும் பின்னிரடியும் பிறிதோர் வினைமுடியுமாக இருவகைப்படுத்துச் செய்யவே, முன்னாறு சூத்திரமோரதிகாரமும் பின்னாறுசூத்திரம் வேறோரதிகாரமுமாக இந்நூலிரண்டதிகாரத்தாற் செய்யப்பட்டதெனவும், குறிப்பானுணர்த்தியவாறு காண்க. இரண்டாமோத்தின் முதற்சூத்திரம் இதுவுமதுவென முதலோத்தினிறுதிச் சூத்திரத்தோடு மாட்டெறியப்படுவதென்பதனை யுணர்த்துதற்கு மலையென்பதனை யீரடியுஞ் சாரவைத்தார். கல்லானிழன்மலை முதலடியினிடங் கூறவே முதலோத்துப் பிரமாணங் கூறுவதென்பதூஉம், இரண்டாமடியின் மலைவில்லா ரருளியவெனச் செய்கை கூறவே இரண்டாமோத்து இலக்கணங் கூறுவதென்பதூஉம், மூன்றாமடியிற் பொல்லாரிணைமலரெனத் திருவடி கூறவே மூன்றாமோத்துச் சாதனங்கூறுவதென்பதூஉம், நான்காமடியில் நல்லார்புனைவரெனப் பேறுகூறவே நான்காமோத்துப் பயன் கூறுவதென்பதூஉம், குறிப்பாற் பெறப்படும். பிறவு மிவ்வாறோர்ந்துணர்க. இங்ஙனம் நூனுதல் பொருளெல்லாம் குறிப்பாற்றன்னகத்தடக்கி நிற்றல் மங்கலவாழ்த்துக்கு இலக்கணமென்றுணர்க. இவ்வாறு நால்வகைப்படுத்தோதியது இந்நூலென்பது "ஈண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி முறைகளும் பெத்தமொடு முத்தியெல்லாம்" என்று வழிநூலாசிரியர் வகுத்தோதியவாற்றானுங் கண்டுகொள்க.

மங்கலவாழ்த்து முடிந்தது.

அவையடக்கம்.

மங்கலவாழ்த்துக் கூறுமுகத்தான் ஈண்டைக்கிறைவனு வான் இவனென்பதுணர்த்தி, இனி அவையடக்கங்கூறுமுகத் தான் அவ்விறைவனுரியம்பப்படு நூலுணர்ந்தாரதுயர்வும் வ ஞைச் சமய நூலுணர்ந்தாரதிழ்பும், உணர்த்துகின்றார்.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன். எனவரும்.

உணர்ந்தெனவே குருமுகத்தாற் கேட்கப்படுஞ் சிவாக ம நூல்பற்றி யென்பது வருவித்துரைத்துக் கொள்ளப்படும். தமையுடையதன்னெனவே தாந் தலைவனுக்குடைப்பொரு ளென்பதூஉம், எம்மையுடைமையெனவே யாந் தமக்குடைப் பொருளென்பதூஉம், பெறப்பட்டன. உடைப்பொருள் அ டிமையுமுடைமையுமென இருவகைப்படும். அவற்றுள் உயி ர்வருக்கமெல்லா மிறைவனுக்கு அடிமையெனவும், மாயை க ன்மங்களு மவற்றின் காரியங்களுமுடைமை யெனவும் உணர் ந்துகொள்க. தன்னுணர்வாரென்புழி இரண்டனுருபு விகா ரத்தாற் றொக்கது. உடைமையினென வதுப்பொருட்கண் வரும் இன்னுருபும் புணராமையானென்னும் ஆனுருபும் தொ க்குநின்றன. எமையிகழாரென்பது எம்மைக் குற்றங்கணிக் கிக் குணங்கொண்டு கோதாட்டுவாரன்றி இகழ்தல் செய்யா ரென்க. எனவே, எம்மாற் செய்யப்படுநூலையுமவ்வாறு கைக் கொள்வரென்பது குறிப்பெச்சம். தம்மையுணர்ந்து தமை யுடைய தன்னுணர்வாரெனவே, தம்மைபுணர்ந்தன்றித் தலை வனையுணர்தல் கூடாதென்பது பெற்றாம். அற்றேல் "தன் னாலே தன்னையறிந்தாற் றன்னையுந் தானேகாணும்" எ-ம். ,, அதிலறிவடங்கி மன்னிடவியாபியாய வான்பயன் றோன் றும்" எ-ம். தலைவனை யுணர்ந்தன்றித் தன்மையுணர்தல்

டாதென்னுஞ் சார்புநூல் இதனோடுமுரணும் பிறவெனின்? முரணாது. அஃதாண்டுச் சிவரூபத்தான் ஆன்மதரிசனமும், சிவதரிசனத்தால் ஆன்மசுத்தியுமாமாறு கூறிற்றெனவும், இது ஆன்மசுத்திப்பின் சிவப்பேறுமாறுணர்த்துகின்றதெனவு ந் தெரிந்துகொள்ளப்படுமாகலின். அரன்றன்னாலே தன்னை யுங் கண்டு தமைக்காணு மென்பதனோடு முரணாமையு மிவ்வா றே யுணர்ந்துகொள்க. இதனானே, தம்மையுணர்ந்து தமை யுடைய தன்னுணர்வாராவார் ஆன்மலாபப் பேறுடையாரெ ன்பது பெற்றும். அவர் சிவமயமேயாகலின் எம்மையுடை மை யென்றார். உடைமை - உடையராந்தன்மை. எம்மை யுடைமையென இரண்டாவது குறிப்புப்பெயர் கோடல் அ மையுமென்பது, "இரண்டாகுவதே" யென்னுஞ் சூத்திரத் துச் சேனாவரையர் புகழையுடைமை யென உதாரணங்காட் டி யாப்புறுத்தமையானுமறிக.

தம்மை யுணராரெனப் பொதுப்படக்கூறுதலானே, தா மொரு பொருளுண்டென்பதே யுணராத உலோகாயதரும், தம்மைக் குணிப்பொருளென்றுணராத புத்தர் சாங்கியர் மா யாவாதிகளும், தம்மை முதல்வனுக்கு அடிமையென்றுணராத வனைச்சமயத்தாரும் அடங்குவர். பாஞ்சராத்திரிகளும் சிவா த்துவித சைவரும் தம்மை உடைப்பொருளெனக்கொள்ளி னும், அவருட் பாஞ்சராத்திரிகள், உடையனல்லாதானை உ டையானென மயங்கிக் கோடலானும், உடையானுக்குப் பரி ணாமங்கூறுதலானும், சிவாத்துவிதசைவர் உடையானது சிற் சத்திக்குப் பரிணாமங்கூறுதலானும், பிறவாற்றானும் அவருந் தம்மையுணராரெனக் கொள்க. தம்மையுணர்ந்து தன்னுணர் வாரெனவே, தம்மையுணரார் தன்னுணராரென்பது தானே போதருமென்பதுபற்றி உணராரென்றொழிந்தார். முன்னி ன்றவுணரார் எதிர்மறைவினைப்பெயர். அவர் உடங்கியைந்து தம்மிற் புணராமையாவது, பிறவிக்குருடர் பலர் குழீஇக் கொண்டு வேழங்காண்டல் விருப்பான் அது நின்றுழிச்சென்

று கையினுலொவ்வோருறுப்பினைத் தைவந்து வேழமாவது முறம்போல்வதெனவும் உரல்போல்வதெனவும் உலக்கைபோல்வதெனவும் மலைபோல்வதெனவும் தம்முண் மாறுகொண் டொருவரையொருவர் மறுத்துக் கலாம் விளைத்தல்போல், சித்தாந்தநெறிநின்று ஆசான்றிருவருள் பெறுதார் தத்தமுணர்விற்கேற்பச் சமயநூல்களின் ஒவ்வொன்றனை ஆராய்ந்து அவற்றிற்கூறும் ஏகதேசப்பொருள்களைப்பற்றிக் கூறி ஒருவரையொருவர் மறுத்துத் தம்முண் மாறுகொண்டு கலாம்விளைத்தல். அங்ஙனம் கலாய்க்கின்றுழிக் கண்ணுடையானொருவனோக்கி, இவர் செவி முதலிய ஓரோருறுப்புக்களைபற்றிக் கூறிக் கலாம் விளைக்கின்றாரெனவும், வேழத்தினியல்பு வேறெனவுந் தெரிந்துணர்ந்து அவர்க்கு அதை யுணர்த்தலுறில், கொடிறும் பேதையும்போலத் தாங்கொண்டதேபற்றி அவனையுந் தம்முளொருவனாக வைத்து இழித்துக் கூறுமாறு கோடலேயன்றிப் பொருளெனக்கொள்ளமாட்டார். அது பற்றியவன் வெகுளாது இவரியல்பிதுவென நகையாடியொழிந்துவிடும். அதுபோல, ஒவ்வொரு சமயநூல்பற்றி அங்ஙனம் பிணங்குவாரை அவையெல்லா மொவ்வோரேகதேச விஷயபற்றிக் கூறினவாகலான் அவைபற்றிப் பிணங்கற்கவெனவும்,பொருட்டன்மை வேறெனவும் யாமிந்நூலானுணர்த்தப்புகின், அவரதனைக் கொள்ளமாட்டாது பயிற்சிவயத்தால் தாங்கொண்டதேபற்றி எம்மையுந் தம்முளொருவராக வைத்து இகழ்ந்துரைப்பாராகலின், அவ்வழியவர் வெள்ளறிவிது வென்று ஒழிவதேயன்றி அதனைக் கொள்ளாமென்பார் கேளாம்புறனென்றார். கேட்டல் - பொருளாகக்கோடல். அது 'உறுகேளாது' என்பதனானும் "கேளாரும் வேட்பமொழிவதாம்" என்பதனானுமறிக. புறன் புறச்சமயம்பற்றி யிகழ்ந்துரைக்குமொழியும் புறங்கூற்றுமொழியுமென்பது இரட்டுறமொழிதலாற் கொள்க. புறங்கூற்றுமொழியாவது புறச்சமயங்களல்லாத பாஷாணவாதசைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தேயிகழ்ந்து கூறும் மொழி.

இச்சமயங்களெல்லாம் புறப்புறச்சமயமும் புறச்சமயமும் அகப்புறச்சமயமும் அகச்சமயமுமென நான்கு வகைப்படும். அவற்றுள், புறப்புறச்சமயம் உலோகாயதம் நால்வகைப்பௌத்தம் ஆருகதமென அறுவகைப்படும். புறச்சமயம் தருக்கம் மீமாஞ்சை ஏகான்மவாதம் சாங்கியம் யோகம் பாஞ்சராத்திரமென அறுவகைப்படும். அகப்புறச்சமயம் பாசுபதம் மாவிரதம் காபாலம் வாமம் வைரவம் ஐக்கவாதசைவமென அறுவகைப்படும். அகச்சமயம் பாஷாணவாதசைவமுதல் சிவாத்துவித சைவமீறாக அறுவகைப்படும். இவையெல்லாம் அகம் புறமென்றிரண்டாயடக்குமாறுமோர்ந்துணர்க, இவ்வாறிரண்டாயடக்கியும் அவற்றைத் தம்முள் வேறுபாடுநோக்கி நான்காக வகுத்துக்கூறுதலும் அமையுமென்பது, தொல்காப்பியத்தின் அகம் புறமென்றிரண்டாயடக்கிக் கூறிய பொருளைத் தம்முள் வேறுபாடுநோக்கிப் பன்னிருபடலத்தின் அகம் அகப்புறம் புறம் புறப்புறம் என நான்காகப் பகுத்தோதியவாற்றானு முணர்க. இஃதறியாதார், தொல்காப்பியமும் பன்னிருபடலமுந் தம்முண் முரணுவனவாகக் கருதி, அவற்றுளொரு நூலையேபற்றி மற்றொன்றனை இகழ்வர். ஈண்டுக்கூறிய சமயத்தாருள், உலோகாயதர் முதல் ஆருகதரீறாகியவறுவரும், வேதஞ் சிவாகம மிரண்டனையும் நிந்திக்கு நாத்திகராயினும், ஒரு நூலென்றும் பிரமாணமென்றுங்கொண்டு ஒருநெறிக்கண்ணே நிற்றலான் அவர் சமயம் புறப்புறச்சமயமென வேறு வைத் தெண்ணப்பட்டன. தார்க்கிகர் முதற் பாஞ்சராத்திரிகளீறாகிய வறுவரும், வேதம் பிரமாணமெனப் பொதுவகையாற் கொள்ளினும், அவருட் டார்க்கிகர் தன்னாற் பிராமாணியங் கொள்ளாமையானும், வேதப்பொருளோடு முரணிப் பொருட்டன்மை கோடலானும், மீமாஞ்சகர் கருமகாண்டமாகிய வேதமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு ஞானகாண்டமாகிய உபநிடதங்களை யிகழ்தலானும் ஏகான்மவாதிகள் ஞானகாண்டமாத்திரைக்கே பிரமாணங்கொ

ண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும், ஏனைமூவரும் வேதவாக்கியங்களில் தத்தமதத்திற்குப் பொருந்துவன மாத்திரையே யெடுத்துக்கொண்டு ஏனையவற்றிற்குப் பிரமாணங்கொள்ளாமையானும், வேதப்புறமாகிய நூல்களைப் பிரமாணமெனக் கோடலானும், இவ்வறுவருஞ் சிவாகம நிந்தகராகலானும் இவர்சமயம் புறச்சமயமென வேறுவைத்தெண்ணப்பட்டன. பாசுபதர் முதலிய வைவரும், வேதஞ்சிவாகமமிரண்டிற்கும் பொதுவகையாற் பிரமாணங்கொள்ளினும், அவ்விரண்டிற்கும் புறமாகிய பாசுபதமுதலிய நூல்கட்குச் சிறப்புவகையாற் பிரமாணங் கோடலானும், வேதஞ் சிவாகம மிரண்டினும் ஆகாவென விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலானும், ஐக்கியவாதசைவர் வேதஞ்சிவாகம மிரண்டிற்கும் சிறப்புவகையாற் பிரமாணங்கொண்டு அவற்றின் விலக்கியனவொழித்து விதித்தவழி யொழுகுவாராயினும், எல்லாப் பெருங்கேட்டிற்கும் மூலகாரணமாகிய ஆணவமலத்துண்மை கொள்ளாமையானும், அதனுண்மை சாதிக்குஞ் சிவாகம வாக்கியங்களை இகழ்தலானும் அவ்வறுவகைச்சமயமும் அகப்புறச்சமயமென வேறுவைத்தெண்ணப்பட்டன, ஏனைப்பாஷாணவாதசைவர் முதலிய அறுவரும் பொருளுண்மையெல்லாஞ் சித்தாந்தசைவரோடொப்பக் கொள்ளும் அந்தரங்கவுரிமையுடையராயினும், அவ்வப்பொருள்கட்குக் கூறும் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுதலான் அவர்சமயம் அகச்சமயமென வேறுவைத்தெண்ணப்பட்டன. இவ்வாறு நால்வகைச் சமயங்கட்குஞ் சித்தாந்த சைவத்தோடுளதாகிய வேற்றுமைத் தாரதம்மியங் கண்டுகொள்க.

அகச்சமயமாறனுட் சிவாத்துவித சைவமாவது நிமித்தகாரணத்துக்குப் பரிணாமங் கூறுவதாகலின், அது நிமித்தகாரண பரிணாமவாதசைவமெனவுங் கூறப்படும், அங்ஙனங்கொண்ட சிவாத்துவித சைவமாவது யாதோ? எனவும், "நிகழ் சிவாத்துவிதாந்தத்துக்குலவினர்" என்றனமையின் இறுதிக்

கண்டெடுந்தோதப்படுஞ் சுத்தசைவம்போலுமென்னும் மயங்குப. சுத்தசைவம் நுட்பப்பொருளுணராமை மாத்திரையேபற்றி வேறுவைக்கப்பட்டதன்றிக் கருத்துவகையாற் சித்தாந்த சைவத்தின் வேறன்மையிற் சுத்தசைவஞ் சித்தாந்த சைவத்து ளடங்குமென்றுணர்க. அற்றாகலின்றே "நிலவுலோ காயதாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்; குலவினராளவள்வாக் கொள்கைய தாகி" என வேனைச்சமயங்களை யெடுத்தோதி விலக்கிச் சுத்தசைவத்தை அங்ஙனம் விலக்கா தொழிந்ததூஉ மென்க.

இனி யிவ்வாறன்றிப் பாஷாணவாதத்திற்கும் பேதவாதத்திற்குந் தம்முள் வேறுபாடு சிறிதாகலினவ்விரண்டனையு மொன்றாக வைத்தெண்ணிச் சுத்தசைவத்தையுமுடன்கூட்டி அகச்சமயமாறெனக் கோடலுமொன்று. இங்ஙனமாகலான் "மெய்தருசைவமாதியிருமூன்று" மென்றதூஉம் பாஷாணவாதமுதலிய வறுவகைச் சைவங்களையுமெனக் காண்க. பாசுபதர் முதலியோர்களைக்குமேலுள்ள தத்துவங்களையுணராமையின் அவர் வித்தையாதியெய்து தத்துவங்களேய்வரெனக் கோடல் பொருந்தாமையறிக. ஐக்கவாதசைவர் கலைக்குமேலுள்ள தத்துவங்களுண்டெனக் கொள்ளாராயினும் மூலமலமுண்டென்பதறியாமையின் மூலமல நீங்கிய முத்தர்க்கன்றிச் சுத்ததத்துவ புவனங்களினெய்துதல் கூடாமையின் அவர்க்கு முத்தித்தானம் மோகினிக்குமேற் சுத்தவித்தைக்குக் கீழ் விஞ்ஞானகலர்க்குரிய தானமேயாமாகலின், ஏனைப்பாஷாணவாதசைவர் முதலியோரே வித்தையாதிதத்துவங்களேய்வரென்றறிக. "புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியா" யென்புழியும் அகச்சமயமென்றது, "ஏகனநேகனிருள்கருமமாயை யிரண்டு" என்னும் ஆறுபொருளுங்கொண்ட பாஷாணவாதமுதலிய வறுவகைச் சைவங்களையேயாமெனவும், புறச்சமயமென்றது அங்ஙனம் பொருளுண்மை கொள்ளாத ஏனைமூவகைப்புறச்சமயங்களையுமெனவும் உணர்ந்து கொள்க.

புறப்புறச்சமயம்.

[உலோகாயதம்]

புறப்புறச்சமயமாறனுள் உலோகாயதமாவது காண்டலளவையொன்றேபிரமாணம், காணப்படும் நிலம் நீர் தீ வளியென நான்கே தத்துவங்கள், இவை நித்தப்பொருள்கள், இவற்றின் கூட்டமே யுடம்பு, பாகடையுஞ் சுண்ணும்புங் கூடியவழிச் செவ்வண்ணம் பிறக்குமாறுபோல இவற்றின் கூட்டரவினோருணர்வுண்டாம். அவ்வுணர்வு உடம்பு வளரவளரும் தேயத் தேயுமாகலின் உடம்பிற்குவேறேயுயிரென்பதும் பொய், உடம்பிற்கு இன்பத்துன்பங்களியல்பாயுள்ளன, இவற்றிற்குக்காரணம் வினையென்பதும் பொய், மயிலைச் சித்திரித்தாரையும் குயிலைக் கூவுவித்தாரையுங்காணாமையிற் கடவுளுண்டென்பதும் பொய், இம்மையின் மங்கைப் பருவத்து மகளிரோடு மணந்துண்டுடுத்து வாழ்வதே துறக்கவின்பம், அது பெறாது பகைவரால் நோயால் வறுமையால் நூல்களாற் பிறவற்றால் வருந்துவதே நிரயத்துன்பம், வேறே துறக்க நிரயமுளவென்பதும் பொய், நான்கு பூதக்கூட்டரவிற் பிராணவாயுவொன்று நீங்கில் உணர்விழந்து உடம்பு நாசமாம். அதுவே வீடுபேறு. வேறே வீடுபேறுண்டென்பதும் பொய், இவ்வுண்மையுணராத மடவோர் மறுமையுண்டெனக்கொண்டு தவங்கள் பட்டினிமுதலியவற்றான் வருந்துவர். கற்புமுதலிய சங்கேத நூல்கள் மதுகையின்றி மதியுடையோராற் செய்யப்பட்டன. பொன் நிலம் உணவு முதலிய தானங்களை யுயர்த்துக் கூறு நூல்கள் பசியான் வருந்தி நல்கூர்ந்தோராற் செய்யப்பட்டன. தேவதலம் தண்ணீர்ப்பந்தர் கூவல் பொய்கை சோலை முதலியன செய்தலையுயர்த்துக் கூறு நூல்கள் வழிச்செல்வோராற் கூறப்பட்டன. ஆகலான் இவற்றைக்கைவிட்டு உழவு பசுக்காவல் வாணிகம் செங்கோன்முறைமை முதலியவாக ஆன்றோர் காட்டிய நெறியின்

று இம்மையின்பங்களைநுகர்ந்து வாழ்தல் உறுதிப்பயன் என்பதாம். உலோகாயதநூல் செய்தோன் பிரகற்பதியென்றுணர்க. இவ்வுலோகாயதர் தேகான்மவாதிகளும் இந்திரியான்மவாதிகளும் பிராணான்மவாதிகளும் அந்தக்கரணான்மவாதிகளுமெனப் பலதிறப்படுவர்.

புத்தம்

இனிப் புத்தமாவது—உலகத்துப் பிறந்திறந்துழன்று சிலமுதலியவற்றானல்லுணர்வு தோன்றி முழுதுணர்ந்து முத்திபெற்றுத் தன்னைப்போற் பிறரு முணர்ந்துய்தற்பொருட்டுக் கருணையினாற் பிடகநூல் செய்தவன் புத்தக்கடவுள், அந்நூலிற் கூறும் பொருளாவன ஞானமே ஆன்மாவெனப் படும், அதுநீரோட்டம்போலச் சந்தானமாய்க் கணந்தோறும் தோன்றியழியும், அங்ஙனந் தோன்றியழியுங்கால் மான்மத நாற்றம்போல முதற்கணத்தின் அழிவெய்து ஞானத்திற்றோன்றிய வாசனை பிற்கணத்திற்றோன்றும், ஞானத்திற் பற்றுதலான் அறிவுமுதலாயின நிகழும், மற்றுமுளபொருளெல்லாங் கணந்தோறுந் தோன்றியழியும், இந்தஞானத்திற்றோன்றிய வாசனையழிவதே முத்தியென்பதாம். ஞானமுங் கூடக் கெடுதல் முத்தியென்பாருமுளர். இப்புத்தமதத்தர் மாத்தியமிகன் யோகாசாரன் சௌத்திராந்திகன் வைபாடிகனென நால்வகைப்படுவர். இந்நால்வரும், முறையே எல்லாப் பொருளுஞ் சூனியமெனவும், புறப்பொருள்சூனியமெனவும், புறப்பொருளுண்மை வழியளவையானறியப்படுமெனவும், புறப்பொருள் காட்சிப்பொருளாமெனவுங் கூறுப. இந்நால்வரும் ஆதிபுத்தனுடைய மாணாக்கர்.

மாத்தியமிகன்.

இவருள் மாத்தியமிகராவார் உலகத்துப்பொருள்கள் உள்பொருளாயினழியா, இல்பொருளாயிற்றோன்றா, உள்ளவுமில்லவுமாமெனின்? முரணும், இரண்டுமல்லவெனின்? உணர்

ச்சி கூடாவாகலின் இந்நான்கு பகுதியுமின்மையான் எல்லாப் பொருளுஞ் சூனியமே, மயக்கத்தாற் காட்சிப்பொருள்போலப் புலப்படுகின்றன என ஆசிரியன் பிடகநூலுணர்த்திய வழியதனை யுண்மையாகக்கொண்டு மேல்வினவாதார். ஆசிரியன்மொழிந்தது பொருளெனக் கோடலிற் றலைமாணாக்கர் அதற்குமேல் வினா நிகழ்த்தாமையிற் கடை மாணாக்கரென விரண்டுமொருங்குற்று நின்றமையின் மத்தியமாணாக்கராய் மாத்தியமிகரெனப் பெயர் பெற்றாரென்பது.

யோகாசாரன்.

இனி யோகாசாரராவார் அங்ஙனமாசிரியனுணர்த்திய வழிப் புறப்பொருள் பாழென்பதனை யுடம்பட்டு ஞானமுமவ்வாறு சூனியமாயின் வழங்கற்பாடு கூடாதன்றேயென வினாயினார்க்கு நன்றே வினாயினீர் ஞானமாத்திரமுள்ளது அந்த ஞானஞ் சாகாரநிராகாரமென் றிருவகைப்படும். அவற்றுள் வட்டம் சதுரம் கறுப்பு சிவப்பு முதலியவடிவிற்றாய் அகத்தே தோன்று ஞானஞ்சாகாரமெனவும் பந்தநீங்கியவழி யங்ஙனம் வேறுபாடின்றித் தொடர்ச்சியாயெழுவதாகிய ஞானம் நிராகாரமெனவும் கூறப்படும். இத்தன்மைத்தாகிய ஞானமேயன்றிப் பொருளென வேறில்லை, கனவின்கட் புறப்பொருளையவாவாது கேவல ஞானத்தானே வழங்கக் காண்டலான் நனவின்கண் வழங்குவது மவ்வாறேயாம், அவ்வுணர்வு அகத்தினிகழ்வதேயாயினும் அநாதிவாசனை வயத்தாற் புறத்தே காணப்படுவதுபோலத் தோன்றுகின்றதெனக் கொள்க என்றாசிரியனுணர்த்தினன்; அங்ஙனமுணர்த்தப்பட்டோர் ஆசிரியன் மொழிந்ததனையுடன்பட்டு அதற்கு மேல்வினாயினாராகலின், யோகாசாரரென்றாயினாரென்பது. புத்தமதவாசிரியன் மொழியுடம்படுதலையாசாரமெனவும் அதற்குமேல்வினாவுதலை யோகமெனவுங் குறியிட்டு வழங்குபவாகலானும் அவ்விரண்டானும் பெற்றபெயரென்றுணர்க.

சௌத்திராந்திகன்.

இனிச் சௌத்திராந்திகராவார் அங்ஙனமாசிரிய னுணர்த்தியவழிப் புறப்பொருண் முழுதுஞ் சூனியமென்பதென்னை? யானிதுகண்டேனென் றுணர்வுழி யானென்னும் ஞானம் அகத்துப்பொருளும் இதுவென்று சுட்டியறியப்படுவது புறத்துப்பொருளுமாகலான், அவற்றிற்கு வேறுபாடு தெற்றென விளங்குதலானும், இரண்டுமொருங்குணர்தலேபற்றி யொன்றென்றல் பொருந்தாமையானும், இரண்டு மொருங்குணர்தலெனவே வேறுபாடுண்மை தானே பெறப்படுதலானும், ஞானமே குடம் படம் முதலியனவாகத் தோன்றுநின்றதெனக் கோடல் பொருத்தமன்றென வினாயினார்க்கு, நன்றே வினாயினீர் புறத்துத் தோன்றுவனவும் உள்பொருளேயாம். அவை காட்சிப்பொருளல்ல குடவடிவிற்றாகிய ஞானமுணர்ந்தபின்னன்றிக் குடமுணர்தல் கூடாமையின் கணத்திற்றோன்றியழியுங் குடமுதலாயின அங்ஙனமுணருங்காறு நிலைபெறுதலின்மையாற் குடமுதலாயின தத்தம் வடிவினை ஞானத்தின் வைத்திட்டழிந்தபின்னை ஞானத்துட்பற்றிய வடிவானேயங்ஙன மிறந்துபோய்க் குடமுதலாயின வழியளவையின் வைத்துணரப்படும். இவற்றிற்குக்காரணமென்னை? யெனிற் புறம்அகம் என்னும் இருவகைச் சமுதாயமாம். அவற்றுட் புறச்சமுதாயம் நிலமுதலாயின. அவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். அவை நிலவணு நீரணு தீயணு வளியணுவென நால்வகைப்படும். அவை யொருங்குபல தொக்கவழிப் புறச்சமுதாயந் தோன்றும். இனி அகச்சமுதாயம் சித்தமும் சித்தப்பகுதியுமாம். அவற்றிற்குக் காரணம் ஐவகைப்படுங் கந்தங்கள். அவை உருவம் வேதனை ஞானங் குறி வாசனை என்பனவாம். கந்தமென்பது சமூகமென்னும்பொருட்டு; அவற்றுட் சித்தத்தாற் சிந்திக்கப்படுஞ் சத்தமுதலாயின உருவக்கந்தம். இவை புறத்துள்ளனவாயினும், அகத்திற் சித்தத்தாற் சிந்திக்கப்படுதலின் அகச்சமுதாயத்துள் வைத்தெண்ணப்பட்டன. இனி அகச்சமுதாயத்துட்பட்ட உடல் பொறி முதலியவற்

றை உருவக்கந்தமென்றலுமொன்று. அவ்வுருவக்கந்தத்தை யுணருமுணர்வு ஞானக்கந்தம்; அது சாகார நிராகாரமென் னும் வேறுபாட்டாற் பிரவிருத்தி விஞ்ஞானமென்றும், ஆலய விஞ்ஞானமென்றும் இருவகைப்படும். சாகாரஞ்சவிகற்பமா ம். நிராகாரம் நிருவிகற்பமாம். இனி யிவ்வுணர்வாற்றோன்று மின்பத்துன்பநோதுமல்கள் வேதனைக்கந்தம். சாத்தன் கொ ற்றன் முதலிய பெயர் குறிக்கந்தம். அப்பெயர்களாற் பகுத் துணருஞ் சவிகற்பவுணர்வு குறிக்கந்தமெனவும், நிருவிகற்ப மொன்றே ஞானக்கந்தமெனவுங் கோடலுமொன்று. அவற் றின வாசனை வாசனைக்கந்தமாம். வாசனையெனினுஞ் செய் கையெனினு மொக்கும். குறியெனினுஞ் சஞ்ஞையெனினு மொக்கும். இவ்வைந்தும் ஒருங்கு தொகுதலான் அகச்சமு தாயந் தோன்றும். இவற்றுள் உருவக்கந்தம் புறச்சமுதாயத் துள் வைக்கப்படும், ஏனைநான்குமே சித்தமுஞ் சித்தப்பகுதி யுமாகிய அகச்சமுதாயமென்பாரு முளர். சகமுழுதும் இவ் விருவகைச் சமுதாயத்துளடங்குமென் றாசிரியனுணர்த்தின ன். அதுகேட்ட மாணாக்கர் இங்ஙனம் மாணாக்கர் வினவிய கடாவிற்கேற்பவறிவுறுக்குஞ் சூத்திரங்கள் எவ்வளவின் முடி வுபெறுமெனக் கடாயினர்; அவ்வழி யாசிரியன் சூத்திராந் தம் கடாவிய நீர் சௌத்திராந்திகரெனப் பெயர் பெறுகவெ ன்றமையின் அவர்க்கது பெயராயிற்று.

வைபாடிகன்.

இனி வைபாடிகராவார் ஆசிரியனிங்ஙனமுணர்த்திய வழி யதுகேட்டமாணாக்கர் புறப்பொருள் ஞானத்தாலறியத் தறியற்பாற்றென்ற தென்னை? ஞானமே தனக்குக் காட்சிப் பொருளாகலானும்,காட்சிப்பொருளொன்றுமின்றாயின் வியா த்தியுணர்தற்கு இடமின்மையான் வழியளவை நிகழாதாகலா னும் இது மாறுகோளுரை போலுமெனக் கடாயினர்; ஆக லின் அவர் வைபாடிகரெனப்பட்டார், மாறுகோளுரை யெ

ணினும் விபாடையெனினு மொக்கும். அவர்க்குப் புறப்பொருள் காட்சிப்பொருளாமெனவும் ஆசிரியனுணர்த்தினன்.

இங்ஙனம் வினையினர் கருத்துக்கேற்ப நால்வகைப்படுத்துச் செவியறிவுறுப்பினும், கணபங்கமுதலியவற்றை உடம்பட்டுக்கோடலானும் எல்லாரும் முறையானே முழுதுஞ்ஞானியமென்று கோடற்குரியரென்பது ஆசிரியன் கருத்து. அங்ஙனமாயினும் வினையினர் கருத்துக்கேற்ப ஆசிரியன் கூறிய விடைப்பொருளை யுறுதியாகக் கோடலின் மதம் வேறுபட்டு நால்வராயினர். இங்ஙனம் புத்தமதநான்குங் கண்டுகொள்க.

ஆருகதம்.

இனி ஆருகதமாவது சீவனும் அசீவனும் ஆச்சிரவமும் சமுவரமும் நிச்சரமும் பந்தமும் வீடுமெனப் பதார்த்தங்களேழுள, இவற்றுட் சீவன் அநாதி சித்தனும் முத்தனும் பெத்தனுமென மூவகைப்படும். இவற்றுள் அநாதிசித்தன் அருகக்கடவுள். முத்தன் மோகமுதலிய பந்தத்தினீங்கினவன் பெத்தன் அவற்றுட்கட்டுண்டவன். இச்சீவன் எடுத்தவுடம்பளவின் வியாபகமாய் உடம்புதோறும் வெவ்வேறாம். இனி அசீவன் புற்கலமும் ஆகாயமும் தன்மமும் அதன்மமும் என நான்கு வகைப்படும். அவற்றுள் உருவப்பொருளான நிலமுதலிய நாற்பெரும் பூதமும் மரம் புல் முதலிய நிலையியற் பொருளும் பை முட்டை முதலியவற்றிற் பிறக்குமியங்கியற் பொருளுமெனப் புற்கலமறுவகைப்படும். இவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். உலகாகாயமும் உலகங்கடந்த வாகாயமுமென ஆகாயமிருவகைப்படும். உலகங்களுக்குட் படுமாகாயம் உலகாகாயமெனவும் உலகங்கட்குப் புறத்தே யெல்லையின்றியுள்ளது உலகங்கடந்தவாகாயமெனவு முணர்க. தன்மம் புற்கலத்தின் வேறாய் நன்மையைப்பயப்பது. அதன்மம் தீமையைப் பயப்பது. அசீவ பதார்த்தவகை நான்குமிங்ங

ணம் கண்டுகொள்க. இவையெல்லாம் அத்திகாயமென்னும் வாய்பாடு கூட்டி வழங்கப்படும்.

இனி ஆச்சிரவமாவது பொறிவழிச்சேறல்; கன்மத் தொடர்ச்சி யென்பாருமுளர். சமுவரமாவது அங்ஙனஞ் செல்லாமற் றடுத்து முத்திக்குக் காரணமாவது. அது நிலத்திலெறும்பு முதலியன சாவாது வழிநோக்கி மெல்ல வியங்குதலும் இனியவை கூறுதலும் நியமவுணவு முதலா யினவாம். நிச்சரமாவது, சுடுபாறையிற்கிடத்தல் தலைமயிர் பறித்தல் முதலிய தவம். பந்தமாவது, இருப்புக்குடம் பை தன்னகப்பட்ட சுரைப்பழத்தை நீர்நிலையிற் கீழ்ச் செலுத்துமாறுபோலச் சீவனுடைய சுதந்திரத்தையடக் கிப் பிறவியிற் சுழல்விக்கும் மோகமுதலிய வெண்குண முமாம். வீடாவது, இருப்புக்குடம்பைதகர்ந்தவழிச் சுரைப் பழமேலெழுமாறுபோலச் சீவன் மோகமுதலியவற்றினீங் கிச் சுதந்திரம்பெற்று உலகங்கடந்து எல்லையின்றியுளதா கிய ஆகாயத்தின்மேனோக்கியே சேறல். மேலெல்லைக்கணிரு த்தல் முத்தியென்பாருமுளர். இவ்வெழுவகைப் பதார்த்தங் களும் அநேகாந்தவாதத்தாற் கூறப்படும். அஃதாவது உடம் பெடுத்தற்குமுன் சீவனுண்டோவில்லையோவென்று வினவிய வழி உண்டாம், இல்லையாம், உண்டு மில்லையுமாம், சொல்லொ ணாததாம், உண்டுமாம் சொல்லொணாததுமாம், இல்லையுமாம் சொல்லொணாததுமாம், உண்டு மில்லையுமாஞ் சொல்லொணாத துமாம் எனவெழுவகையா னிறுத்தல். வினயவை யெல்லாம் இவ்வாறேயிறுக்கப்படும். ஆமென்பதீண்டுச் சற்றென்னும் பொருட்டாயதோ ரிடைச்சொல். சொல்லொணாததென் பது உளது மிலதுமல்லாத தென்னும் பொருட்டென்பது. எனவே உள்ளதும் இல்லதும் உளதிலதும் இரண்டுமில்லது மென நான்குபக்கமாய் இரண்டுமல்லதென்னும் பொருட்டா கிய சொல்லொணாத தென்பதனோடு உள்ளதும் இல்லதும் உளதிலதும் என்னும் மூன்றுங்கூட்ட எழுபக்கமாயினவென்க்

காண்க. பொருளியல்பு இவ்வெழுவகையுமொன்றாகச் சொல்லவும்படும் சொல்லவும்படாதென்பது கருத்தாகலின் முரணாமையுமறிக. இவ்வெழுவகையுள் ஒவ்வொன்றேபற்றிக் கூறும் ஏனைச்சமயத்தார் கோட்பாடெல்லா முள்ளடக்கிநிற்றலின் இங்ஙனம் அநேகாந்தவாதங் கூறுஞ்சமயமே மேற்பட்ட சமயமென்பது கருத்து. ஆருகதம் முடிந்தது.

இவருள் உலோகாயதன் காட்சிவாதியெனவும், புத்தன் கணபங்கவாதியெனவும், ஆருகதன் அநேகாந்தவாதியெனவும், புத்தருள்ளும் மாத்தியமிகன் சூனியவாதியெனவும், யோகாசாரன் விஞ்ஞானவாதியெனவும், ஏனையிருவருஞ் சமுதாயவாதிகளெனவும் உணர்க. இவ்வாறு புறப்புறச்சமய மாறுங் கண்டுகொள்க.

புறச்சமயம்.

[தருக்கம்.]

இனிப் புறச்சமயமாறனுள் தருக்கமாவது வைசேடிகமும் நையாயிகமுமென இருவகைப்படும். அவற்றுள் வைசேடிக நூலிற் கூறும் பொருளாவன, திரவியம் குணம் தொழில் சாதி விசேடம் சமவாயம் இன்மையெனப்பதார்த்தம் எழுவகைப்படும். இவற்றுட் டிரவியம் நிலம் நீர் தீ வளி ஆகாயம் காலம் திசை ஆன்மா மனமென ஒன்பதுவகைப்படும். அவற்றுள் நிலமுதலிய நான்கும் அநித்தப்பொருள்; அவற்றின் காரணங்களாகிய நால்வகைப் பரமாணுக்களும் ஆகாயமுதலிய வைந்தும் நித்தப்பொருள்கள். அவற்றுள் ஆகாயம் காலம் திசை மூன்றும் ஓரோவொன்றேயாய் வியாபகமாயுள்ளன. ஆன்மாக்கள் வியாபகமாய் எண்ணிறந்தனவாம். மனம் அணுவடிவிற்றாய் ஆன்மாக்கடோறும் வெவ்வேறாயிருக்கும். ஆன்மா பரமான்மா சீவான்மாவென விருவகைப்படும். பரமான்மா முற்றுணர்வுடையவன் எல்லாம் வல்லவன் அவன் இச்

சைவசத்தானே உலகந்தோன்றி ஒடுங்கும். அவனாற் செய்யப்பட்டது வேதம். இனிச் சீவான்மாக்கள் சிற்றறிவினவாய் வினைக்கிடாகப் பிறந்திறந்து இன்பத்துன்பங்களை நுகர்வன வாம். ஆன்மாக்களுக்கு மனத்தோடு கூடாதவழி அறிவில்லை. இங்ஙனந் திரவியமொன்பதுங் கண்டுகொள்க. இனிக்குணங்களாவன: திரவியம் பற்றுக்கோடாக நிகழ்வன. அவை உருவம் சுவை நாற்றம் ஊறு முதலியனவாக இருபத்துநான்கு வகைப்படும்.

அவற்றுட் புத்தி இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு முயற்சி அறம் பாவமென்னு மெட்டுக்குணமும் பாவனை யென்னும் வாதனையும் சீவான்மாக்களுக்குச் சிறப்புக்குணங்கள். இவற்றுட் புத்தி விருப்பு முயற்சி மூன்றும் பரமான்மாவுக்குச் சிறப்புக்குணங்கள். பரமான்மாவின் குணங்களாகிய புத்தி முதலிய மூன்றும் நித்தியம். சீவான்மாக்களின் புத்தி முதலிய மூன்றும் அநித்தியம். ஏனையவுமோர்ந்துணர்க. தொழிலாவன: எழும்பல் வீழ்தல் வளைதல் நிமிர்தல் நடத்தல் என ஐவகைப்படும். சாதியாவது பலபொருட்குப் பொதுவாகிய தன்மை. அது பரம் அபரமென இருவகைப்படும். விசேடமாவது ஒவ்வொரு பொருட்கே யுரியதன்மை. அவை நிலவணு முதலிய பரமாணுக்களும் ஆகாயமுதலிய வைந்துமாகிய நித்தப்பொருள்களின் வேறுபாடுணர நிற்பனவாய்ப் பலவாம். சமவாயமாவது அவயவமுதலியவற்றிற்கு அவயவி முதலியவற்றோடு நீக்கமின்றி யுளதாகிய வியைபு. அஃதொன்றேயாம். இன்மையாவது முன்னின்மையும் அழிவுபாட்டின்மையும் என்றுமின்மையும் ஒன்றினொன்றின்மையுமென நான்குவகைப்படும். ஆக இங்ஙனங்கூறு மெழுவகைப்பொருள்களின் சிறப்பியல்பு பொதுவியல்பு வேற்றியல்புணர புணரவே உடம்பு முதலியவற்றின் வேறாகிய ஆன்மாவினியல்பு விளங்கும். விளங்கவே உடம்பு முதலியவற்றை

நானென்றெண்ணிய மித்தையுணர்வு கழியும். அதுகழியவே முயற்சியின்மையின் அறம்பாவங்களில்லையாய்ப் பிறவியொழியும். ஒழியவே வரக்கடவனவாகிய துன்பங்களின்மையின் உடம்பு முகந்துகொண்ட வினைப்பயன் நுகர்ச்சியாற் கழிவுழி இறுதித் துன்பங்கெட்டு மனத்தோடு கூடுதற் கேதுவின்மையின் அறிவின்றிப் பாடாணம்போற் கிடப்பதே முத்தியென்பதாம். வைசேடிகநூல் செய்தவன் கணாதமுனிவன்.

இனி நையாயிகமாவது வைசேடிகநூலிற் கூறியவற்றைச் சிறுபான்மை வேறுபடுத்திப் பிரமாணம் பிரமேய முதலாகப் பதினாறுவகையான் விரித்துக்கூறுவதாம். நையாயிகநூல் செய்தவன் அக்கபாதமுனிவன். இங்ஙனமிருவகைப்படுந் தருக்கநூலார் சிலவற்றிற்குக் கணபங்கங் கூறுமாறுவது உண்டவுணவின்சாரமே அவயவங்களாய்ப் பரிணமித்துக் கணந்தோறும் வளர்ந்துந் தேய்ந்தும் வேறுபடுதலின் அவயவியாகிய உடம்பும் வளர்ந்துந் தேய்ந்துங் கணந்தோறும் பிறிது பிறிதாம். அங்ஙனங் கணந்தோறும் வளர்ந்துந் தேய்ந்தும் வருதல் காணப்படாதாயினும், மழைத்தாரையானிறையும் பொய்கைநீரும் இறைப்பக் குறையுங் கூவனீரும் போல முடிவின்கட் காணப்படுதலிற் கணந்தோறும் வளர்தலுந் தேய்தலுமுடைமை பெற்றாம். இவ்வாறே மண்டோடுதல் பூரித்தல் முதலியவற்றால் நிலமும் யாற்றுநீர்ப்பெருக்கு முதலியவற்றால் கடலும் கணந்தோறும் நிறைவு குறைவுடைமையான் இன்னோரன்னவையெல்லாம் கணபங்கமாய்ப் பிறிதுபிறிது தோன்றுமெனக்கொள்வர். சௌத்திராந்திகரும் வைபாடிகரும் சமணரும் தார்க்கிகரும் பரமாணுகாரணவாதிகளாயினும் அவருட் சௌத்திராந்திகரும் வைபாடிகரும் சமணரும் பரமாணுக்களொருங்கு புலதொக்குக் காரியமாமென்பர். தார்க்கிகர் அவ்வாறன்றி இறைவனிச்சைவயத்தாற் பரமாணுக்களிற் கிரியை தோன்றி இவ்விரண்டு பரமா

ணுக்கள் தம்மிற் சேர்ந்திரட்டையணுவாய் அவை மும்மூன்று தம்முட்சேர்ந்து மும்மையணுவாய் அவை நந்நான்கு தம்முட்சேர்ந்து நான்மையணுவாய் இவ்வாறே யொன்றற்கொன்று சினையு முதலுமாய் முறையே தோன்றிக் காரியப்படுமென்றும், ஒடுங்குங்கா லிறைவனிச்சைவயத்தான் அம்முறையே யொடுங்கு மென்றுங் கொள்வர். தார்க்கிகரும் சௌத்திராந்திகர் வைபாடிகரும் நிலவணு நீரணு தீயணு வளியணுவெனப் பரமாணுக்கள் நால்வகைப்படுமெனக் கொள்வர். சமணர் அவ்வாறு கொள்ளாது பரமாணுக்களெல்லாம் ஒரு தன்மையனவேயென்பர். இவை தம்முள் வேற்றுமை. இங்ஙனமாயினும் தார்க்கிகர் வேதநெறியினொழுகி வேதத்திற்குப் பிரமாணங் கோடலிற் புறப்புறச்சமயிகளாகிய நாத்திகரோடு சேராது வைதிகருள் வைத்தெண்ணப்பட்டாரென்க. தார்க்கிகர் மதம் முடிந்தது.

மீமாஞ்சை

இனி மீமாஞ்சையாவது: வேதத்திற் கருமகாண்டவாராய்ச்சி செய்தற்கெழுந்த நூலாகலின் அதுவும் வேதமெனப்படும். அது பன்னிரண்டத்தியாயமாகச் சைமினிமுனிவனாற் செய்யப்பட்டது. அந்நூல் கூறும் பொருளாவது: வேதம் ஒருவராற் செய்யப்பட்டதன்றி அநாதியே சுயம்புவாயுள்ளது; அங்ஙனமாகலின் வேதம் பிரமாணமெனப்படும். வேதத்துள்ளும் நீராடுக வேள்விசெய்க வழிபடுக என்றாற்போலத் தொழிற்படுத்துவனவாகிய சோதகவாக்கியங்களே பிரமாணமாம். உலகத்துச் சொற்பொருளுணரும் அவாவினராகிய இளையோர், ஆவினையாக்க மேதியை விடுக்க வெனவும் ஏவுமுதியோன் கூறுமொழிகேட்டும், அதுபற்றி யியற்று முதியோன் செய்யுந் தொழிலினைக் கண்டும், பின்பு மேதியை யாக்க ஆவினை விடுக்கவென மாறிக்கூறியவழி அங்ஙனஞ் செய்யுந் தொழிலினைக் கண்டும், இச்சொற் கிதுபொ

ருள் இச்சொற்கிதுபொருளெனவும் இங்ஙனஞ் சொற்பொரு
ளெல்லாந் தொழிற்படுத்துஞ் சொல்லானே உணர்தற்பாலன
வெனவுமுணர்ந்துகொள்வாராகலின், வேதத்திலும் அவ்வாறு
தொழிற்படுத்துஞ் சொற்களே பொருள்விளக்கிப் பிரமாண
மாமென்பது தெளியப்படும். அங்ஙனமன்றி உலகந் தோ
ன்றி யொடுங்குமென்றும் தோற்றியொடுக்குதற்கோரிறைவ
னுண்டென்றும் இந்திரன்முதலிய கடவுளருளரென்றும்
அவர் இவ்வியல்பினரென்றும் பொருளியல்புகூறும் வாக்கிய
ங்கள் பிரமாணமாகாவாயினும், அவை தொழிற்படுத்துவன
வாகிய சோதகவாக்கியங்கட்குப் புனைந்துரைவகையால் உப
காரமாதல்பற்றிப் பிரமாணமெனக்கொள்ளப்படும். இந்தி
ராயசுவாகா வருணாயசுவாகா என்றாற்போலும் வேதமந்திர
ங்களும் பொருளுடையவல்லவாயினும் விதிவாக்கியங்கட்கு
உபகாரமாதல்பற்றிப் பிரமாணமெனப்படும். சோதிட்டோ
மம் பரிமேதமென்றாற்போலும் வேள்விப்பெயர்களும் வேள்
விகளின் வேறுபாடுமுதலிய வுணர்த்திற்றலின் பிரமாணமாம்.

இங்ஙனம் வேதத்தின் விதிவாக்கியமல்லாதனவும் ஒரு
வாற்றான் விதிக்குபகாரப்படுதல்பற்றிப் பிரமாணமென உப
சரித்துக்கொள்ளப்படும். வேதமெல்லாம் இங்ஙனம் விதியும்
புனைந்துரையும் மந்திரமும் குறியீடுமென நால்வகைப்படு
ம். இவற்றுள் விதி அங்கியும் ஏனை மூன்றும் விதிக்கங்கமு
மாம். விதிவாக்கியம் விதித்தலும் விலக்குதலுமென இருவ
கைப்படும். அவைபற்றிச் செய்யும் வினையும் அறமும் பாவ
முமென இருவகைத்து. ஆன்மாவை யறிகவென விதித்த
லின் ஆன்மாக்கள் பலவாய் நித்தமாய் வியாபகமாய்ப் பிறந்
திறந்து வினைசெய்து வினைப்பயன்களை நுகர்ந்துவரும். வி
னைசெய்தவர்க்கு வினையே துறக்கமுதலிய பயன்களையுதவும்.
காமியப்பயன் குறித்து வினைசெய்யின் அவ்வப் பயன்களையு
தவும். காமியம் வேண்டாது விலக்கியனவொழித்து வே
ள்விகள் செய்யின் அவ்வினை முத்தியையுதவும். இவ்வான்

மாக்களுக்கு வேருய்ப் பரமான்மா வொருவன் உண்டென்ப தூஉம் உலகந் தோன்றி யழியுமென்பதூஉம் பொய். உலகம் என்றுமிவ்வாறே நிலைபெறுமென்பதாம். இங்ஙனஞ் செய்யப்பட்ட சைமினி சூத்திரங்கட்குப் பாடியஞ்செய்தான் சபரமுனிவன். சூத்திரத்திற்கும் பாடியத்திற்கும் சிறுபான்மை வேறுபாடுகொண்டு பட்டாசாரியன் சூத்திரமதம்பற்றி வழிநூல்செய்தான். பட்டன் மாணாக்கனாகிய பிரபாகரன் பாடிய மதம்பற்றி வழிநூல் செய்தான், இங்ஙனமாகலின் மீமாஞ்சைமத மிருவகைப்பட்டது. பட்டாசாரியன் கன்மமே பயன் கொடுக்குமென்றும் முத்தியில் நையாயிகர்போல் ஆனந்தமுண்டென்றுங் கொள்வன். பிரபாகரன் கன்மநாசத்தின் அபூருவமெனவொன்று தோன்றிநின்று பயன்கொடுக்குமென்றும் வைசேடிகர்போலப் பாடாணம்போற் கிடப்பதே முத்தியென்றுங் கூறுவன். பொருட்டன்மைகளினுஞ் சிறுபான்மை பட்டாசாரியனில் வேறுபடக்கூறுவன், பிரபாகரமதமெனினுங் குருமதமெனினு மொக்கும்.

மீமாஞ்சைநூல் பன்னிரண்டத்தியாயத்துள் முதலத்தியாய முதற்பாதத்திற் கருமங்களுக்கு நேரே பிரமாணமான விதிவாக்கியங்கட்குப் பிரமாணமில்லையென வாதிகள் கூறுஞ் சங்கைகளை மறுத்து வேதம் சுயம்புவாகலிற் பிரமாணமாமென்றும், இரண்டாம்பாதத்திற் புனைந்துரை வாக்கியங்களும் மந்திரங்களுமாகிய விரண்டும் விதிக்கு வேண்டப்படுந்திரவியங்களும் துதிகளும் முதலியவற்றைத் தெரிவித்தலிற் பிரமாணமாமென்றும், மூன்றாம்பாதத்தின் வேதத்தோடு முரணாது மனுமுதலிய வான்றோராற் செய்யப்பட்ட மிருதிமுதலியவற்றிற்கு மூலவேத முண்டென்று வழியளவையா னுணரப்படுதலின் அவை பிரமாணமாமென்றும், நாலாம் பாதத்தின் விதிவாக்கியத்தில் அகப்பட்ட வேள்விப்பெயர்கள் கருமவேறுபாடும் மாட்டேற்றும் அறுவாதமும் முதலியன வுணர்நிற்றலானும் கருமத்திற்குப் பெயராத

லானும் பிரமாணமாமென்றும், இவ்வாறு பிரமாணமாமாறுணர்த்துதலிற் பிரமாணவியலென்னும் பெயர்த்து. இரண்டாமத்தியாயம் அங்ஙனம் பிரமாணமாகிய வேதத்திற் பெறப்பட்ட கருமங்கள் வேதவாக்கியங்களிற் கூறும் பகுதி வினை வேறுபடுதலும் ஒருவினை பலகாற் கூறுதலும் தொகை கூறுதலும் வேறுவேறு குறியிடுதலும் குணவேறுபாடு கூறுதலும் வேறு பிரகரணத்திற் கூறுதலுமாகிய இவற்றான் ஒன்றற்கொன்று வேறுபாடுடைமை தெரிவித்தலிற் கருமபேதவியலென்னும் பெயர்த்து.

மூன்றாமத்தியாயம் அங்ஙனம் பலவேறுவகைப்பட்ட கருமங்கட்குச் சுருதி இலிங்கம் வாக்கியம் பிரகரணம் தானம் குறியீடு என்னுமிவற்றானே இதற்கிது அங்கமெனவும் இது அங்கியெனவும் அங்கமு மங்கியுமாமுறைமை கூறுதலின் அங்காங்கியலென்னும் பெயர்த்து. தலைமைப் பொருள் அங்கியுந் தலைமையில் பொருள் அங்கமுமெனக்கொள்க. சுருதி முதலியவற்றுட் சுருதியாவது வேறொன்றனை யவாவாது தான் கருதிய பொருளைத்தானே தெரிவிப்பது. அது விதிக்குஞ் சொல்லும் குறியீட்டுச்சொல்லும் விவகரிக்குஞ் சொல்லுமென மூவகைப்படும். இலிங்கமாவது: ஆற்றலாற்பொருளையுணர்த்துவது. அது சொல்லாற்றலும் பொருளாற்றலுமென விருவகைப்படும். ஒரு மந்திரத்தின் வருந் தொழில்பற்றி அத்தொழினிகழுங் கருமத்திற்கம்மந்திர மங்கமென்பது சொல்லாற்றலாற் பெறப்படும். "அவிபினைக் கருவியாற் சருவத்தாற் கையால் வாங்குக" வெனப் பொதுப்படக்கூறியவழிக் கருவியிறைச்சிக்குஞ் சருவம் நெகிழ்ந்த பொருட்கும் கை புரோடாச முதலியவற்றிற்கும் அங்கமென்பது பொருளாற்றலாற் பெறப்படும். வாக்கியமாவது: இங்ஙனஞ்சுருதியுமிலிங்கமுமின்றிச் சொற்றொடர்பற்றி யுணரவருவது. பிரகரணமாவது; சோதிட்டோமம் வேட்கவென்றாற் போலும்

விதிவாக்கியங்களாற் பொதுப்பட வுணர்ந்து சிறப்பானறியப் படாத கன்மங்களான் அவரவப்பட் டிவ்வாறு செய்யற்பாற் றென வகுத்துக் கூறுவது. அது பெரும் பிரகரணமென் றும் இடைக்கட்பட்ட பிரகரணமென்றும் இருவகைப்படும். தானமாவது: கிரனிறையிடமும் அண்மையிடமுமென இ ருவகைப்படும். அவற்றுளண்மை சொல்லினண்மையுமநு ட்டானத்தினண்மையுமென விருவகைத்து. குறியீடாவது: காரணத்தான் வரும் பெயர். அது வேதமரபுபற்றிய பெய ரும் உலகமரபுபற்றிய பெயரும் என விருவகைப்படும். இவ் வாறு சுருதிமுதலியவற்றி னியல்புணர்ந்துகொள்க.

நாலாமத்தியாயம் இங்ஙன மங்கமு மங்கியுமாகிய கன்ம ங்களை யனுட்டிப்பிக்கும் பிரயோகமாமாறு கூறுதலிற் பிர யோகவியலென்னும் பெயர்த்து. அங்கம் பிழைத்தவழி அங் கியின்பொருட்டு வேறங்கம் வேண்டப்படும். அங்கிபிழைத்த வழி அங்கத்தின் பொருட்டு வேறங்கி வேண்டப்படுவதின்று. அங்கம் பிழைத்தவழி அதற்கங்கி பலவுளவாயின் யாதொன் றற்கங்கமாயே மற்றொன்றற் கங்கமாம்; அதன்பொருட்டே வேறங்கம் வேண்டப்படும்; மற்றொன்றன் பொருட்டு வேண் டப்படுவதின்று என்றாற்போலத் தெரிவிப்பது பிரயோக முறையென்க.

அஞ்சாமத்தியாயம் ஒரு பிரயோகத்துட்பட்ட வங்கா ங்கிகளை யநுட்டிக்கு முற்பிற்பாட்டு முறைமையைச் சுருதி முறைமை பொருண்முறைமை பாட்முறைமை முதலியன பற்றித் தெரிவித்தலின் முறைமைப்பாட்டியலென்னும் பெ யர்த்து. இங்ஙன மிரண்டாவதில் உற்பத்திவிதியா னறியப் படுங் கன்மபேதமும், மூன்றாவதில் உபகரிக்கும் விதியான் அறியப்படும் அங்காங்கியியல்பும், நான்கினும் ஐந்திலும் பிர யோகிக்கப்படுவனவற்றின் விதியானறியப்படும்பிரயோகமும் முறைமைப்பாடுந் தெரித்துணர்த்தியபின், ஆறாமத்தியாயம்

பயன்கூறுமுகத்தான் அதிகாரிகளாவாரைத் தெரிவித்தலிற் பயனியலென்னும் பெயர்த்து. அதிகாரவிய லெனினுமாம். இங்ஙனம் நால்வகைப்படும் எடுத்தோத்து விதிகளை ஆராயு மாறு ஆறத்தியாயத்துள் உணர்த்தி மேலேழாவது முதற்பத் தாவதிறுவாய் நான்கத்தியாயங்களான் மாட்டேற்றுவிதியா ராயுமா றுணர்த்தப்பட்டது. இவ்வாறு செய்யற்பாற்றெனை எடுத்தோதுவது எடுத்தோத்து விதியெனவும் அதுபோலச் செய்கவெனமாட்டெறிவது மாட்டேற்றுவிதி யெனவு முணர்க.

அவற்றுள் ஏழாமத்தியாம் அதுபோலச் செய்கவென்னும் வசனத்தானும் அங்ஙனம் வசனமில்லவற்றிற்கும் பெயர் ஒருமையானும் அதுவுமில்லவற்றிற்கு இது செய்கவென விதித்தலானது செய்யுமாறு யாதானு மொன்றனோடு மாட் டெறியும் வசனமுண்டென வழியளவையா னுணரப்படும் விதியானும் மாட்டெறியுமா றுணர்த்தி, எட்டாமத்தியாம் அங்ஙனம் பொதுப்பட வழியளவையா னுணரப்படுவனவற் றுள் எதுபோலெது செய்யப்படுமென் றவாயவழிச் சொல் லொப்புமை பொருளொப்புமை பற்றி இன்னதுபோ லின் னது செய்யப்படுமெனத் தெரிந்தெடுத் துணர்த்துதலின் ஏழாவது மெட்டாவதும் மாட்டேற்றியலென்னும் பெயரின வாம். ஒன்பதாமத்தியாயம் அங்ஙனம் மாட்டெறிந்தமை பற்றிப் பகுதிப்பொருளிற் செய்யுங் காரியம் விகுதிப்பொரு ளிற் செய்வழிப் பகுதியிற் கூறும் மந்திரமும் சாமமுந் தொ ழிலும் விகுதிப்பொருளுக்கேற்ப வேறுபடக்கொள்ளுந் திற நியாயம்பற்றி யூகிக்குமா றுணர்த்துதலின் ஊகவியலென்னும் பெயர்த்து. பத்தாமத்தியாயம் அங்ஙனமூகித்தபின்னர் மாட் டெறிந்தவற்றுள் ஆண்டைக்குரியனவாகாதவற்றை நியாயம் பற்றி விலக்குமா றுணர்த்துதலின் விலக்கியலென்னும் பெயர் த்து. இங்ஙனம் பத்தத்தியாயத்தினும் எடுத்தோத்துவிதி யினும் மாட்டேற்றுவிதியினும் தெரிந்துணர்த்தவேண்டியவற்

ை.றத் தெரித்துணர்த்தியபின்னர் ஏனையிரண்டத்தியாயத்தி லும் இவ்விருவகைக்கும் பொதுவாகிய தந்திரமும்பிரசங்கமு மாமாறுணர்த்துதலின், பதினொராமத்தியாயந் தந்திரவியலெ ன்னும் பெயர்த்து. பன்னிரண்டாமத்தியாயம் பிரசங்கவிய லென்னும் பெயர்த்து.

தந்திரமாவது: கருமஞ்செய்யுங்காற் றலைமைவினை பல வுளவாய் ஒருதேசமும் ஒருகாலமும் ஒரு கருத்தாவுமாயவழி அவற்றிற்கெல்லாம் பொதுப்பட அங்கவனுட்டானம் ஒரு காற் செய்யவமையுமென்றாற் போல்வது. அங்ஙனமன்றி ம்றித்துஞ் செய்யற்பாலதாதலை யபாவமென்பர். பிரசங்க மாவது: முதற்கண்வந்த வாசிரியன் அமுதுசெய்தற்கட்ட வறுசுவையடிசில் ஆசிரியனையன்றியும் ஒருதலையானங்ஙன மட்டு இடுதற்குரியனாய்ப்பின்புவந்த மருகனுக்கு முபகாரமா தல்போல ஒன்றன்பொருட்டுச் செய்தவினை மற்றொன்றற்கு முபகாரமாதல். ஆசிரியனுக்கட்டவடிசில் ஆசிரியனுடன் வந் தவர்க்குமுபகாரமாதல் பிரசங்கமன்றென்பது. மீமாஞ்சை நூலிற் பன்னிரண்டத்தியாயமு நுதலிய பொருள் இங்ஙனந் தொகுத்துணர்த்தப்பட்டது. இவற்றிற்குதாரணம் விரிப் பிற் பெருகும். நையாயிகநூலிற் கூறுந் தர்க்கமும் மீமாஞ் சை நூலிற் கூறும் நியாயங்களும் எல்லா நூல்கட்கு முபகார மெனக்கொள்க. மீமாஞ்சை மதம் முடிந்தது.

ஏகான்மவாதம்

ஏகான்மவாதமாவது: மாயாவாதமும் பாற்கரியவாத மும் கிரீடாப்பிரமவாதமும் சத்தப்பிரமவாதமுமென நான்கு வகைப்படும். அவற்றுள் மாயாவாதமாவது: சச்சிதானந்த மாய் நித்தமாய் வியாபகமாய் நிற்பது பிரமம், பரமார்த்தத் திலே சத்தொன்றே மெய்ப்பொருள் ஏனையவெல்லாம் பிரம த்தின் விவர்த்தனமாய் இப்பியில் வெள்ளிபோல அவிச்சை யினாற் காணப்படுவனவாகலிற் பொய், இங்ஙனந் தோன்று

மூலகத்திற்கு முதற்காரணமாகிய மாயை பிரமம்போலச் சத்துமன்றி முயற்கோடுபோல அசத்துமன்றி அநிருவசனமாயிருக்கும். அநிருவசனமென்பது சொல்லொணுதென்னும்பொருட்டு. இந்த மாயைக்கு வேருகிய பிரமரூபமே யான் என வேதாந்த ஞானத்தாலறிவதே முத்தியென்பதாம்.

பார்க்கரியவாதமாவது: முன்கூறப்பட்ட பிரமமே சடமுஞ் சித்துமாகிய உலகங்களாய்ப் பரிணமித்தது. அங்ஙனம் பரிணமித்து விகாரப்பட்டமையை அறியாமையினுற் பந்தமாயிற்று. பரமார்த்தத்திலொருபொருளே. வேதாந்தஞானத்தான் உடம்பிற்கு வேருகிய வான்மரூபம் விளங்கும். அதுவே பரப்பிரமமென்றறிந்து அதன்கணிலயித்தலே முத்தியென்பதாம்.

கிரீடாப்பிரமவாதமாவது: முன்கூறப்பட்ட பிரமமே நான். யான் ஒருபடித்தன்றிப் பலவேறுவகைப்பட்டவிகாரப் பொருள்களோடு கூடிப்பலவாற்றுல் விளையாடுகின்றேனென்று இவ்வாறறிவதே முத்தியென்பதாம்.

சத்தப்பிரமவாதமாவது: காரணமாகிய பரப்பிரமம் இறுதிக்காலத்திற் சத்தவடிவிற்றுயிருக்கும். அவ்வவித்தைசயினுற் சடமுஞ் சித்துமாயவுலகங்களாய் விரியும். முடிவின்கட் சத்தமாத்திரையே யுள்ளது என்றிங்ஙனமறிவதே முத்தியென்பதாம். இங்ஙனம் நால்வேறுவகைப்பட்ட ஏகான்மவாதநூல் செய்தவன் வியாதமுனிவன்.

சாங்கியமதம்

இனிச் சாங்கியமதமாவது, மூலப்பகுதி நித்தமாய் வியாபகமாய்ச் சடமாய் எல்லாப்பொருட்குங் காரணமாய் முக்குணங்களுமொப்பநின்ற வவதாரமாய் அருவாயுள்ளது. இஃதிருபத்துநாலாந்தத்துவம். இதன்கட்டோன்றுங் காரியம் புத்திமுதனிலமீருன இருபத்துமூன்று தத்துவமுள,

இத்தத்துவமிருபத்துநான்கிற்கும் வேறாய் நித்தமாய் வியாபகமாய்த் அருவாய்ப்பலசாங்கியமாய் அறிவதுஞ்செய்வதுமின்றி அறிவுமாத்திரமாய் ஒன்றற்குக் காரணமாதலுங் காரியமாதலுமின்றி நிற்கு மான்மாக்கள் இருபத்தைந்தாந் தத்துவமெனப்படும். இவ்விருபத்தைந்தாந் தத்துவமாகிய புருடன் முத்தியினும் பெத்தத்தும் ஒருதன்மையனேயாம். புருடனுக்கு மலினமென்பதில்லை. தாமரையிலைநீர்போலொட்டற்று நிற்பன். அநாதியே புத்தியைச் சார்ந்த அவிச்சைவயத்தாற் பெத்தனெனப்பட்டு இன்பத்துன்பவுணர்வு தோன்றுகின்றது. புத்தியாவது மூலப்பகுதியின் பரிணாமம். அதுவே மானென்றும் அந்தக்கரணமென்றுங் கூறப்படும். அது பொறிவழியான் ஞானமாய்ப்பரிணமித்து விடயத்திற் செல்லும். புருடன் செய்வானென்பதும் புத்தியறியுமென்பதும் வேற்றுமையுணராமையானென்பது. மூலப்பகுதியையும் புருடனையும் பகுத்துணரவே அவிச்சை நீங்கும்; அதுவே முத்தியெனப்படும். ஆன்மாக்களுக்கு வேறாய் இறைவனொருவனுண்டென்பது பொய்யென்பதாம். இந்நூல் செய்தவன் கபிலமுனிவன். இதனுட் கூறுஞ் சற்காரியவாதம் சைவமுதலிய சற்காரியவாதநூல்கட்கெல்லாம் உபகாரமாம். இதனுட் கூறு மத்தியாசவாதம் மாயாவாதத்துக்கு உபகாரமாம். சாங்கியமுடிந்தது.

யோகமதம்

யோகமாவது நிலமுதற் புருடனீறாகிய இருபத்தைந்து தத்துவமும் பெத்தமுத்திகளும் நீதிக்கேதுவாம். இருபத்தாறாந் தத்துவம் இறைவனொருவனுளன்; அவன் முற்றுணர்வுடையனாய்ச் சாத்திரங்களை யருளிச்செய்து புருடருக்கு ஞானத்தை யறிவுறுப்பனாகலின், இவ்வான்மாக்களுக்கு வேறென்றுணரப்படுமென்பதாம். இந்நூல் செய்தவன் பதஞ்சலி முனிவன். யோகமதம் முடிந்தது.

பாஞ்சராத்திரமதம்

இனிப் பாஞ்சராத்திரமதமாவது: இருபத்துநாலாந் தத்துவமாகிய குணதத்துவத்தின்மேல் இருபத்தைந்தாந் தத்துவம் வாசுதேவனென்றொருவனுளன். அவனே பரம்பொருள். அவனிடத்தினின்றும் கண்ணனும் அநிருத்தனும் மகரத்துவசனும் ரௌகிணேயனும் என நால்வர் உலகங்களைப் படைத்தற்பொருட்டுத் தோன்றினர். இந்த நால்வகை வியூகங்களாற் சடமுஞ் சித்துமாகிய எல்லாவுலகமும் படைக்கப்பட்டனவாதலால், எல்லாம் வாசுதேவன் பரிணாமமேயாம். இங்ஙனம் கூறும் பாஞ்சராத்திரத்தினன்றி வேதங்களினுறுதிப்பயனுண்டாகாது. ஆதலாற் பாஞ்சராத்திர முறையே தீக்கை பெற்று வாசுதேவனை வழிபட்டு வாசுதேவனுருவின் இலயிப்பதலே முத்தியென்பதாம். இந்நூல் செய்தவன் வாசுதேவனென்க.

இவ்வாறு புறச்சமயமாறுங் கண்டுகொள்க.

அகப்புறச்சமயம்.

(பாசுபதம்) *

இனி அகப்புறச்சமயமாறனுட் பாசுபதமாவது: ஆன்மாக்கள் பலவாய் நித்தமாய் வியாபகமாய்க் காரியகாரணக் கூட்டரவாற்றேன்றும் ஞானத்தாற் றனித்தனி வேறுயுள்ளன. இவ்வான்மாக்களுக்கு ஆணவமலமென்பதொன்று இல்லை. மாயை கன்மமென்றிரண்டாற் பந்தமுற்று இன்பத்துன்பங்களை யனுபவிக்கும். இவற்றினுவர்ப்புத்தோன்றிச் சாத்திரமுறையானே தீக்கை பெற்றவன்பால் ஈசனுடைய ஞானம் போய்ப்பற்றும். அப்போது, குடும்பத்தின் பாரம் புத்திரர்பால் வைத்தொழித்துத் துறவறத்திற் செல்வார்போல, ஈசனுந் தன்னுடைய குணங்களை யவன்பாற் பற்றுவித்துத் தானதிகாரத்தினொழிவுபெற்றிருப்பன் என்பதாம்.

மாவிரதம்

மாவிரதமாவது: மேற்கூறிப்போந்த இயல்பையுடைய ஆன்மாக்கள் அவ்வாறே பந்தமுற்றுச் சுகதுக்கங்களை யனுப விக்கும் சாத்திரத்திற் கூறு முறையே தீக்ஷைபெற்று எலு ம்புமாலையணிதன் முதலிய சரியைகளின் வழுவாதொழுகின வர் முத்தராவார். முத்தருக்குச் சிவனோடு சமமான எல்லாக் குணங்களும் உற்பத்தியாம் என்பதாம்.

காபாலம்

காபாலமாவது: ஆன்மாக்களியல்பும் பந்தவியல்பும் மாவிரதர் கொண்டவாறேயாம். சாத்திரமுறையே தீக்ஷை பெற்றுப் பச்சைக்கொடியொன்று கைக்கொண்டு நாடோறும் மனிதர் தலையோட்டின் ஐயமேற்றுண்பவர், உன்மத்தராய்ச் சிவனுவேசித்தலால் எல்லாக்குணங்களும் பெற்றுச் சிவசம மாவர் என்பதாம்; இம்மூவரும் முறையே சங்கிராந்தசம வாதி எனவும், உற்பத்திவாதியெனவும், ஆவேசவாதியெனவு முணர்க. இம்மூன்றுமதமுஞ் செய்தார் முறையே மாயை வித்தை காலமென்னுந் தத்துவங்களின் வைகும் உருத்திரர் மூவரெனக்கொள்க.

வாமம்

இனி வாமமதமாவது: பாற்கரியன் கூறியவாறே சட முஞ் சித்துமாகியவனைத்துலகும் சத்தியின் பரிணாமமே. வா மநூலின் விதித்த முறையொழுகிச் சத்தியின் இலயித்தலே முத்தியென்பதாம். இந்நூல்செய்தார் சித்தபுருடர். சத்தி தத்துவத்தின் வைகும் ஞானமாவாற் செய்யப்பட்டது சுத் தசாத்தமென்றறிக.

வைரவம்

இனி வைரவமதமாவது: பெரும்பாலும் வாமமதத் தோடொத்துச் சிறுபான்மை ஆசாரங்களான் வேறுபட்டு வயிரவனே பரம்பொருளெனக் கொண்டு வைரவபதத்திற் சேர்வதே முத்தியென்பதாம்.

ஐக்கவாதசைவம்

இனி ஐக்கவாதசைவமாவது "இன்மைமல மாயை கன்ம மென்றிரண்டே யிறைதா னிலங்குபல வுயிர்களுமுன் புரிந்தவிரு வினையின், றன்மைகளா லெவர்களுக்குந் தனுகரண புவனந் தந்திடுமிங் கிதனாலே யிருபயனுஞ் சார்ந்து, கன்ம மெல்லா நேராக நேராதன் மருவக் கடவுளரு ளாலெவையுங் கழித்திடுவ னதனாற், பின்மலமா னவையணுகா பெருகொளி முன்புமிழ்ந்தே பெற்றிடும்" என்பதாம்;

இவ்வாறு அகப்புறச்சமயமாறுங்கண்டுகொள்க. காளா முகம் சாம்பவ முதலியனவும் இவற்றின் பகுதியாயடங்கும்.

இனிப் பாடாணவாத முதலிய அகச்சமயங்களாறின் கருத்துஞ் சங்கற்ப நிராகரணத்தின் விரித்தோதியவாற்றா னறிக. ஈண்டும் வந்துழி வந்துழிக் காட்டுதும். ஈண்டுக் கூறாத சமயங்களும், கூறியவற்றின் பகுதியாய் இவற்றுள்ளே யடங்கும். அஃதறிந்தடக்கிக்கொள்க.

முதற்சூத்திரம்.

ஈண்டு வடமொழிச் சிவஞானபோதத்துட் கூறியவாறே பொதுவுண்மையென் றிரண்டதிகாரமாகப் பகுத்துக் கொண்டு, பிரமாணம் இலக்கணம் சாதனம் பயனென நான்கு திறத்தாற் பொருளியல்புரைப்பான் எடுத்துக்கொண்ட வாசிரியர், அவற்றுண் முப்பொருளின் வைத்து முதற்கட் பதியுண்மைக்குப் பிரமாணங் கூறும் முதற்சூத்திரத்துக்கு வார்த்திகமாகிய மொழிப்புரைப்பான் புகுந்து சூத்திரத்தை மொழிபெயர்த்துச் செய்கின்றார்.

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்.

என்பது சூத்திரம்.

இங்ஙனம் பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டு இனி அதன் கருத்துரைக்கின்றார்.

சங்காரகாரணனாயுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகமென்பதுணர்த்துதனுதலிற்று. எனவரும்.

சங்காரமைவகைப்படும். அவற்றுள் முதலாவது நிவிர்த்திகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; இரண்டாவது பிரதிட்டாகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; மூன்றாவது வித்தியாகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; நான்காவது சாந்திகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; இறுதியது சாந்தியதீதகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம். அவற்றுள் ஈண்டைக் கேற்புடையது இறுதிக்கண்ணதாகலின் ஈண்டுச் சங்காரகாரணனென்றது சுத்த மாயாபுவனந்தஞ் சங்கரிக்குஞ் சங்காரகாரணனாகிய பரமசிவனை; அயன்மாலொடுங்கூடக்குண தத்துவத்தின் வைகிப் பிரக்ருதிபுவனந்தஞ் சங்கரிக்குங் குணிருத்திரனையன்றெனவுணர்க. என்னை? அவன் பிரகிருதியின் மேற்பட்ட புவனங்கட்குச் சங்காரகாரணன் அன்மையானும், பரமசிவன் இலயபோகவதிகாரமென்னு மூன்றவத்தையினும் முறையே அருவம் அருவுருவம் உருவம் என்னும் மூன்றுதிருமேனிகொண்டு, சத்தன் உத்தியுக்தன் பிரவிருத்தன் எனவுஞ் சிவன் சதாசிவன் மகேசனெனவும் பெயர்பெற்றுநிற்பனென்றும், இங்ஙனந் தொழிலான்° வேறுபட்டதன்றிப் பொருளான் வேறுபாடில்லையென்றும், பசுவர்க்கத்திற் பிரளயாகலரில் பக்குவமுடையவன் சீகண்டருத்

கும் கருத்தென்பது, சிவதத்துவ விவேகமுடையார் குணநி தனென்னுஞ் சுலோகத்திற் கடாவிடைகளான் விரித்துக்காட் டியவாற்றானறிக. இங்ஙனமாயினும், சீகண்டருத்திரன் அய ன்மால் போலச் சகலரிலன்றிப் பிரளயாகலர்களிற் பக்குவ முடையோனுய்க் கட்டுநீங்கி முத்திபெற்ற கடவுளாகலானும் பரமசிவனுக்குரிய எல்லாப்பெயர்களும் வடிவமுந் தொழிலு ம்பெற்றுடையவனாகலானும், சைவாகமங்களையறிவுறுக்குங் குரவனாகலானும், அயன்மாலிருவர்க்கு மேலாய்ச் சைவத்தி னெய்திச் சமயதீக்கை பெற்றோரால் வழிபடுகடவுளாயினு னென்க.

இங்ஙனம் கருத்துரைத்துக் கண்ணழித்துரைப்பான் பு குந்து ஈண்டு முதற்கண் உரைவகையாமாறுணர்த்துகின்றார்.

இதன் பொழிப்பு உரைத்துக்கொள்க எனவரும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு முன்னர்க் கண் ணழித்துரைக்கு முறைபற்றி உரைத்துக்கொள்க வென்றவா று. எனவே, பொழிப்புரை இங்ஙனமிருவகைப்படும். அவ ற்றுட் கண்ணழித்துரைக்கும் பொழிப்புரை மாத்திரையே யாமீண்டுரைக்கின்றாம். பிண்டமாகக் கொண்டுரைக்கும் பொ ழிப்புரை இதுபற்றி உணர்ந்துகோடலாமாகலின், அஃதியா முரைக்கின்றிலமென மாணாக்கர்க்கு அறிவுறுத்தவாறாயிற்று. இங்ஙனம் பொழிப்புரை யிருவகைப்படுமென்பது "பொழி ப்பெனப் படுவது பொருந்திய பொருளைப், பிண்டமாகக் கொண்டுரைப் பதுவே" எ-ம். "பாடங் கண்ணழி வுதா ரண மென் றிவை நாடிற்றிரிபில வாகுதல் பொழிப்பே" எ-ம். ஓதியவாற்றானறிக. இஃதேனைச் சூத்திரங்களினு மூய் த்துணர்தற்பொருட்டு முதற்கண் வைக்கப்பட்டது. பிண் டப்பொருளெனினுமொக்கும். உரைத்துக்கொள்க வென் புழிக் கொள்ளென்பது தற்பொருட்டுப் பொருட்கண்வந்த விகுதி பகுதியோடியைதற்குரிய அச்சாரியை பெற்று உரை

த்துக்கொள்ளென நின்றவழி அதுவும் பகுதித்தன்மைப்பட்டு மேல்வரும் வியங்கோள் விகுதிபெற்றுத் தமக்குப்பொருள் இனிது விளங்குதற்பொருட்டு உரைக்கவென்னும் பொருளாய் நின்றது. இது சூத்திரவிருத்தியுள் விரித்துரைத்தாம். ஆண்டுக் காண்க. இங்ஙனம் ஆசிரியராணை தந்தமையிற் கண்ணழித் துரைபற்றிச் சூத்திரத்துக்குப் பதப்பொருள் கூறுதும்.

அவனவளது—என்மனோர் புலவர் என்பது ஆண் பெண்ணலியென்றற்போலும் உலகத்தொகுதி தோற்றநிலையிறுதியென்னு முத்தொழி லுடைமையான் ஒருவனாற் றோற்றப் பட்டு நின்றுள்ளதேயாம். அற்றேல், அஃதியாவனிலுளதாமெனிற்? றொடுங்குதற்கு நிலைக்களமான கடவுளினின்றும் உளதாம். ஒடுங்கியவாறே யொழியாது மீளவுளதாவதெதனாலெனில்? சககமான ஆணவமலந் தீர்ந்தொடுங்காமையால் உளதாம். இங்ஙனமாகலிற் சங்காரத்தொழிலைச் செய்யுங் கடவுளே முதற்கடவுளென்று கூறுவர் அறிவுடையோர் என்றவாறு.

எனுமென்பது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சமாய் இவ்வாறென்னும் பொருள் குறித்துநின்றது. வடமொழி முதற்சூத்திரத்தின் ஆதியென்றதும் அப்பொருட்டு. அவையென்பது தொகுதி. அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயரெனக்கொள்ளின், உளவெனப்பிரித்துப் பயனிலையாக்கித் தானென்பது அசையாகக்கொள்க. வினைமை - வினையுடைமை. உடைமை - உடைத்தாந்தன்மை.

அவ்வக்காலத்தன்றி மூவினையும் ஒருகாலத்துப்படுதல் கண்டிலமென்பாரை நோக்கித் தன்மையின் வைத்தோதினர். தோற்றியவெனப் பிறவினைவாய்பாட்டா னோதுதலின், அதற்குரிய வினைமுதல் வருவித்துரைக்கப்பட்டது. தோற்றியவென்புழிப் படுசொற் றொக்குநின்றது; "இல்வாழ்வான்" என்புழிப்போல. திதிப்படுமுலகத்தைத் திதியெனவும் அங்

தத்தைச் செய்யுங் கடவுளை அந்தமெனவும் உபசரித்தார். காணப்பட்டவுலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், தோற்றியதிதியே யொடுங்கியுளதாமென உலகின்மேல் வைத்துக் கூறினார். சங்கார காரணனாயுள்ள முதலையே முதலாகவுடைத்திவ்வுலகமென்றதும் இக்கருத்தே பற்றி யென்க. தோற்றுவானொருவனுளன் அவன் ஒடுக்கி யுளதாக்குவனெனக் கடவுளின்மேல் வைத்தோதிய வடமொழிச் சூத்திரத்திற்குந் தாற்பரிய மிதுவேயெனக் கொள்க. ஏகாரந் தேற்றம். ஒடுங்கியென்பது பெயர். ஒடுங்கியென்புழி இன்னுருபும் மலத்தென்புழி ஆறனுருபுந் தொக்குநின்றன. ஆமென்பதனை முன்னுங்கூட்டுக. என்மனாரென்பது செய்யுண்முடிபாயதோர் ஆரீற்று முற்றுச்சொல். மன் எதிர்கால விடைநிலை. அது "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே" என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையருரையானு மறிக. ஈண்டுப் புலவரென்றது அளவையினியல்புணர்ந்தாரை. இதனுள், அவனவளது வெனுமவை மூவினைமையின் என்பதோரதிகரணம், தோற்றியதிதியே யொடுங்கியுளதாம், என்பதோரதிகரணம், அந்தமாதியென்பதோரதிகரணம். ஆகமூன்றதிகரணத்ததிச்சூத்திரமென்றுணர்க. இம்மூன்றும் ஒன்றற்கொன்று முறையே ஏதுவும் பயனுமாய் ஒருபொருள்மேல் வருதலின், ஒரு சூத்திரத்தாற் கூறினார். வருஞ்சூத்திரங்களினு மிவ்வாறே கண்டுகொள்க. தன்னாற் கூறப்படுபொருளும் அதன்கணையப்பாடும் அதற்குப் பிறர்கூறும் பக்கமும் அதனை மறுத்துக் கூறுஞ் சித்தாந்தத் துணிபும் இயைபும் என்னுமிவற்றிற்கு நிலைக்களம் ஈண்டதிகரணமெனப்படும். அவற்றுள் இயைபு நூலியைபும் அதிகாரவியைபும் ஓத்தியைபும் பாதவியைபும் அதிகரணவியைபும் எனவைவகைப்படும். அவையெல்லா மாண்டாண்டுக் காட்டுதும்.

முதலதிகரணம்.

இம்முதலதிகரணத்தாற் கூறப்படும் பொருளாவது மேற் கருத்தாவினுண்மை சாதித்தற்பொருட்டு உலகிற்கு முத்தொழிலுண்மை சாதித்தல்.

உலகம் முத்தொழிலுடைத்து என்பதாம்.

அதற்கவை உளவோ இலவோவென்று இரட்டுறத் தோன்றும் ஐயப்பாடு ஈண்டு மீமாஞ்சை நூலாரும் உலோகாயதநூலாரும் உலகந் தோன்றுதலுமழிதலுமின்றி என்றுமிவ்வாறே நிலைபெறுவதாகலின் உலகங் காரியப்பொருளாமெனவும், எனவே இதுகொண்டு கருத்தாவுண்மை சாதித்தல் முயல்கோடுடைத்து ஆன்வயிற்றுப்பிறத்தலான் என்பதனோடொக்குமெனவுங் கூறுவர். அவருண் மீமாஞ்சைநூலார் கூறுமாறுவது, உலகந்தோன்றி நின்றழியுமென்பது காட்சியளவையாற் பெறப்படுவதுமன்று; அவினாபாவமாகிய ஏதுக்காணாமையின், வழியளவையாற் பெறப்படுவதுமன்று. வேதத்துட் கூறப்படுதலாற் பெறுதுமெனின்? வேதத்தில் நடாத்துக நிறுவுக செய்கவென்றாற்போலத் தொழிற்படுத்தும் வாக்கியங்களே சொற்பொருளுணரும் வேட்கையாளர்க்கு அங்ஙனமேவுவோர் சொற்கேட்டு இயற்றுவோர் செய்யுந்தொழிலானே அவ்வச்சொற்பொருளுணரநிற்றலிற் பிரமாணமாம்; அவ்வாறன்றிப் பொருளியல்பு கூறும் வாக்கியங்களாற் சொற்பொருளுணரப்படாமையின் அவைபிரமாணமாகாவாயினும், தொழிற்படுத்தும் வாக்கியங்கட்கியாதானுமொருவாற்றான் உபகாரமாதலுடைமையான் உபசரித்துப் பிரமாணமெனக்கொள்ளப்படுமாகலானும், அதுபற்றி உரையளவையாற் பெறப்படுமென்பதுமின்றாகலானும் உலகிற்கு முத்தொழிலுண்மை பெறப்படாதென்பதாம். இவ்வாசங்கை நிகழ்ந்த வழியதனை நீக்குதற்கு ஈண்டு உளதாயொருவ

ளொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்தென்றது. எனவரும்.

எனவே, உலகர் தோன்றிநின்றழியும், அவனவளது வென்றிவ்வாறு பகுக்கப்படும் அவயவப்பகுப்புடைமையின் ஆடைபோலுமென்னும் அனுமானத்தானே மூவினையுடைமை துணியப்படுமென்பதாயிற்று.

சொற்பொருளுணர்ச்சி தொழிற்படுத்துஞ் சொன்மாத்திரையானே துணியப்படுமென்னும் வரையறையின்றித் தாய் தந்தை முதலியோர் இச்சொற்கு இதுபொருள் இச்சொற்கு இதுபொருள் எனத் தெரிவித்தலானும் நிகண்டு நூலானும் துணியப்படுமாகலின் அதுபற்றிப் பொருளியல்பு கூறும் வாக்கியங்கள் பிரமாணமல்லவென்றலின், ஈண்டென்பது மூன்றதிகரணத்தில் வைத்து முதலதிகரணத்தி லென்பதாம். அவயவப்பகுப்புடைமையான் முத்தொழிலுடைமை துணியப்படுமென்றுணர்த்துவார், ஒருவனொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமெனச் சூத்திரத்தினோதியவாறே உடம்பொடுபுணர்த் தோதினரென்க. பொருந்தாமையின் உரையளவையே பிரமாணமென்றோத லமையுமாயினும், அவர் மதமேபற்றி யவரை மறுத்தற்பொருட்டு மூவினையுடைமையும் வழியளவையாற் சாதித்தார். ஈண்டவயவமென்றது, ஆடையினேகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப்படு நூல்கள்போல ஒரு பொருளினேகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப்படுந் தகுதியுடையவற்றை. நில மலை கடன் முதலியவற்றின் ஏகதேசமாகிய மண் சிலை நீர் முதலியன தொடுதல் போழ்தல் முகத்தல் முதலிய தொழில்களானே தனித்தனி பிரித்தற்குரியவாமாறு காண்க. கலை ஆணவமலத்தினேகதேசத்தை நீக்கிக் கிரியையையெழுப்புமெனவும், ப்ரமசிவன் சுத்தமாயையினேகதேசத்தைக் கலக்கிச் சுத்ததத்துவங்களைத் தோற்றுவிப்பனெனவும் அனந்ததேவன் அசுத்தமா

யையி னேகதேசத்தைக் கலக்கிக் கலேமுதலியவற்றைத் தோ ற்றுவிப்பனெனவும் வழங்குவதுபற்றி அவயவமெனப்படா; வேறுவேறு பிரித்தற்குரியன வன்மையின். இவற்றை நீக்கு தற்கன்றே, ஒருபொருளினேகதேசமென்றொழியாது வேறு வேறு பிரித்தற்குரியன அவயவமென்றதூஉமென்க. இங்ங னமாயினும், தார்க்கிகர்மதத்திற் பரமாணுக்கள் அவயவமு டையனவல்ல வாகலான் அவை தோன்றிநின்றழியுமென்பது பெறப்படாமையின், அவயவமுடைமை காரியப்பாட்டிற்கு ஏதுவென்றல் யாண்டுஞ் செல்லாதாலெனின்? அற்றன்று: அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு சடமுமாய்ப்பலவுமாய் உரைக்கப்படுவனவெல்லாந் தோன் றியழியுமென்பது கருத்தாகக்கொள்க. இன்னுமழை கதிரின் றுன்னணுக்களே பரமாணுக்களாம். அவற்றை மும்மை யணுவெனக்கொண்டு அவற்றினும் நுண்ணியவாய்க் கட் புலனாகாதன உளவென்றதற்குப் பிரமாணமின்மையின் பரமாணுக்களும் அவயவமுடையனவேயாம். அல்லவெனக் கொள்ளினும், அவை சடமுமாய்ப் பலவுமாகலாற் றோ ன்றி நின்று அழிவனவேயாமென்க. ஆணவமலம் சடமா யினும் பலவன்று, ஆன்மாக்கள் பலவாயினுஞ் சடமல்ல. ஆகலான் அவற்றின்கட் செல்லாமையறிக. இங்ஙனமாயி னும், மாயை சுத்தமாயை அசுத்தமாயையென இரண்டாய்ச் சடமுமாகலான் அவை காரியப்பொருளாவான் செல்லும். அவை தனித்தனி யொன்றேயாமெனிற்? குடமுதலியன வுந் தனித்தனி யொன்றேயாகலாற் பலவாதல் யாண்டை யதென்பதாய் முடியுமாலோவெனின்? அற்றன்று. அவ னென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு சுட்டி யறியப்படுவனவெல்லாம் தோன்றிநின்று அழியுமென்ப தே சித்தாந்த முடிபெனக்கொள்க. இது விளங்குதற்பொ ருட்டன்றே, ஆண் பெண் அலியென்றுதல் ஒருவன் ஒருத்தி யொன்றென்றுதல் ஓதாது, அவனவளதுவெனச் சுட்டுப்பெ

யர்களானோதியதூஉமென்க. இதற்கிதுவே பொருளாதலுணர்த்துதற்கன்றே ஒருவனொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமென வுரைசெய்து எடுத்துக்கொண்டதூஉமென்க. "அசத்தாஞ் சுட்டி யுணர்பொருளானவெல்லாம்" "அறிவினாலறிந்த யாவுமசத்தாதலறிநீ" என்னுந் திருவாக்குக்களானும் இதுவேயிதற்குச் சிறந்த வுரையாதல் கண்டுகொள்க. அற்றேல், அவனேதானே யெனவும் அவனிவனாய் நின்ற முறையே யெனவும், அவனிவனானது மெனவும், அது நீயானாய் எனவும், பாவிக்கச்சொல்லுவது மெனவும், நித்தப்பொருள்களுஞ் சுட்டியறியப்படுமாலோவெனின்? அற்றன்று. அவையங்ஙனம் பொதுமையிற் சுட்டியறியப்படுமாயினும் அநுபவநிலையிற் சுட்டியறியப்படாவென்பது. "உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே" எ-ம். "அறிவிறந்தங் கறிந்திடீர்" எ-ம். 'பாவனையிறந்து நின்று பாவிக்கப் படுவதாகும்' எ-ம். "ஆட்பாலவர்க் கருளும்வண்ணமு மாதிமாண்புங், கேட்பான்புகி லளவில்லை கிளக்கவேண்டா" எ-ம். "ஏதுக்களாலு மெடுத்தமொழியாலுமிக்குச் சோதிக்கவேண்டா" எ-ம். ஓதுவனவற்றாலறிக. பிரபஞ்சமவ்வாறன்றிச் சிறப்பியல்புபற்றி அநுபவமாயுண்மையாற் சுட்டப்படுமென்னுங் கருத்தானன்றே, ஒருவனொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமென்றொழியாது, உளதாயென விசேடித்ததூஉமென்க. நித்தப்பொருள் சுட்டியறியப்படாதென்பது ஆறாஞ்சூத்திரத்திற் காண்க.

இங்ஙனம் வழியளவையானே உலகந் தோன்றிநின்றழியுமெனச் சாதித்து மீமாஞ்சைநூலாரை மறுத்தவழி, உலோகாயதநூலார் காட்சியளவையொன்றே பிரமாணமன்றி வழியளவை முதலியன பிரமாணமல்லவாகலான் அவற்றாற் சாதிப்பன பொருள்படாவாமென்பர். வழியளவையின்றாயின், மேல்வரும் பயனைக் குறித்து முயற்சி செய்வாரில்லையாதல்வேண்டும் "இம்மையின் முயற்சியாலேயிருநிதி யீட்

டப்படு" மென்பதே அவர்கொள்கையாகலானும், வழியளவையும் அதுபற்றி உரையளவையும் பிரமாணமெனக் காட்டிய வழி யவருமதனானே மறுக்கப்படுவாராயினும் அவர் மதமே பற்றி யவரை மறுத்தற்பொருட்டுத் தோன்றியழிதல் கண்கூடாகக் காட்டுவார் வேறுமோரேதுக் கூறுகின்றார்.

தோற்றமுமீறும் உள்ளதன்பாலே கிடத்தலின் என வரும்.

வார்த்திகப் பொழிப்பாவது உரைச்செய்யுளானும் பாச்செய்யுளானும் செய்யப்படுமென்னும் வடமொழிமதம்பற்றிக், கருத்துரையும் மேற்கோளும் ஏதுவும் உரைச்செய்யுளானுரைத்து, உதாரணம் பாச்செய்யுளானுரைக்கின்றார்.

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையி—னோதாரோ
வொன்றொன்றிற் றோன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து.

எனவரும்.

இது முதலுந் துணையுங் காரணமாகக்கொண்டே திரிதரும். அற்றாயினும் ஒன்று தோன்ற ஒன்று நிற்ப ஒன்றழிவதன்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கேயழியக் கண்டிலமாலெனின்? ஒவ்வொருகால விசேடத்திற் சாதி பற்றி யொருங்கே தோன்றி ஒருங்கேநின்று ஒருங்கேயழிவதனைக் காண்டலால் என்றாயினும் அதற்குரிய காலம்வருமென்று உலகத்திற்கு மங்ஙனமாதலுண்டென்று அக்காட்சி பற்றி யறியப்படுமென்பதாம்.

பூதாதி அன்மொழித்தொகை. பூதாதிக்கென நான்கனுருபு விரித்துரைக்க. ஆகுமென்பது முற்றுவினை. பெற்றிமையென்பது ஈண்டுச் சாதியை. ஓகாரம் எதிர்மறை. ஒவ்.

றொன்றினென்பது ஒன்றொன்றாய்ப் பார்த்துணர்வதுள்ளமே
என்புழிப்போல அடுக்குமொழி. கண்டும் உம்மை சிறப்பு.
பெற்றிமையினொன்றொன்றிற் றோன்றி யுளதாயிருதலாவது,
"பயில்வித்தெல்லாங் காரிடமதனிற் காட்டுமெங்குராங் கழியும்
வேனில்" என்றதுபற்றி யுணர்ந்துகொள்க. இங்ஙனஞ்
சொற்பிரபஞ்சம் பொருட்பிரஞ்சமென்னு மிரண்டனுட்
பொருட்பிரபஞ்சந் தோன்றிநின்றழியுமென்பது ஏதுக்களா
ற் சாதிக்கப்பட்டது.

இனி இரட்டுறமொழிதலான், அவனவளென்பதனாற்
பெறப்படு முயர்திணையும் அதுவென்பதனாற் பெறப்படு
மஃறிணையுமென்னும் இருதிணைப்பகுதித்தாகிய சொற்பிர
பஞ்சக் கூட்டம், இங்ஙனம் அவயவப்பகுப்புடைமையானும்
சடமுமாய்ப் பலவுமாகலானும், சுட்டியறியப்படுதலானும்,
திதியின்பால் வினையிரண்டுங் காணப்படுதலானும், தோன்றி
நின்றழிதலுடைத் தெனவும், பொருளுரைத்துக் கொள்க.
அற்றேல், வேதம் நித்தியமென்னுஞ் சுருதிகளோடு முரணும்
பிறவெனின் ? முரணாது; நித்தனாகிய பரமசிவனாற் செய்யப்
பட்டமையானும், இறுதிக்காலத்துப் பரமசிவனிடத்தொடு
ங்கிய வேதம் படைப்புக்காலத்து முன்போலவே தோன்று
தலானும், நித்தமென்றுபசரித்துக் கூறப்படுமாகலின். சிவா
கமங்களை நித்தமென்பதும் இக்கருத்தேபற்றியென்க. அங்
ஙனமல்லாக்கால், வேதம் பரமசிவனாற் செய்யப்பட்டதென்
னுஞ் சுருதிகளோடும் அட்டாதச வித்தைக்கு முதற்கருத்
தாவாகிய இச்சூலபாணியென்றற்றொடக்கத்துப் புராணவச
னங்களோடும் ஈண்டுக்கூறும் வழியளவையோடும் முரணுமா
றறிக. வித்தை பதினெட்டாவன: இருக்கு முதலிய வேத
நான்கும், சிக்ஷை கற்பசூத்திரம் வியாகரணம் நிருத்தம் சந்
தோவிசிதி சோதிடமென்னும் அங்கமாறும், புராணம் நியா

யநூல் மீமாஞ்சை மிருதியென்னும் உபாங்கம் நான்கும், ஆயுள்வேதம் வில்வேதம் காந்தருவவேதம் அருத்தநூலென்னும் இருக்கு முதலியவற்றிற்கு உபவேதம் நான்கும் எனவிவை. இவற்றுள் வேதநான்கும் பிரமகாண்டமும் பிரமஞானத்திற்கு நிமித்தமான கருமகாண்டமு முணர்த்துவனவாம். சிவாகமங்களும் பிரமகாண்டமாயடங்குமென்பர். வேதங்களை எடுத்தல் படுத்தல் முதலிய இசைவேறுபாட்டான் உச்சரிக்குமா றுணர்த்துவது சிக்ஷை. வேதங்களிற் கூறுங் கருமங்களை யனுட்டிக்கு முறைமை யுணர்த்துவது கற்பசூத்திரம். வேதங்களின் எழுத்துச் சொற்பொரு ளியல்புணர்த்துவது வியாகரணம். வேதங்களின் சொற்பொரு ளுணர்விப்பது நிருத்தம். வேதமந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும் அவற்றிற்கெழுத்து இனைத்தென்றலும் உணர்த்துவது சந்தோவிசிதி. வேதத்திற் சொல்லப்படுங் கருமங்கள் செய்தற்குரிய காலவிசேடங்களை யுணர்த்துவது சோதிடம். இங்ஙனமாகலின் இவையாறும், வேதத்திற்கங்கமெனப்பட்டன. பரமசிவன் உலகத்தைப்படைக்கு[illegible] லாயின கூறும் வேதவாக்கியப்பொருள்களை வலியுறுத்து விரித்துணர்த்துவது புராணம். இதிகாசமுமீண்டடங்கும். வேதப்பொருள்களை நிச்சயித்தற்கனுகூலமான பிரமாண முதலியவற்றை யுணர்த்துவது நியாயநூல். வேதப்பொருளின் றாற்பரியமுணர்தற்கு அநுகூலமான நியாயங்களை யாராய்ச்சி செய்துணர்த்துவது மீமாஞ்சை. அது பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சை யெனவும் வேதமெனவும் வேதாந்தமெனவும் வழங்கப்படும். அவ்வவ்வருணங்கட்கும் நிலைக்குமுரிய தருமங்களையுணர்த்துவது மிருதிநூல். புராணமுதலிய நான்கும் வேதத்திற்குபாங்கமெனப்படும். எல்லாமநுட்டித்தற்குச் சாதனமான யாக்கையை நோயின்றி நிலைபெறச்செய்வது ஆயுள்வேதம். பகைவரானலியின்றி உலகங் காத்தற்கு வேண்டப்படும் படைக்கலம் பயிறலை யுணர்த்துவது வில்வேதம்.

எல்லாக்கடவுளர்க்கும் உவகையைச்செய்யு மிசைமுதலியவற்றை யுணர்விப்பது காந்தருவவேதம். இம்மைக்கும் மறுமைக்கு மேதுவாகிய பொருள்களை யீட்டுமுபாயமுணர்விப்பது அருத்தநூல். இவை நான்கும் உபவேதமெனப்படுமென்றுணர்க.

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

முதலதிகரணத்திற் பிரபஞ்ச நித்தியமெனக்கொண்ட மீமாஞ்சை நூலாரையும் உலோகாயதநூலாரையு மறுத்துச் சொல்லும் பொருளுமென்றிருவகைப்பட்ட பிரபஞ்சம் உற்பத்திநாசமுடைத்தெனக் கருத்தாவினுண்மை சாதித்தற்கோதிய ஏதுவை ஏதுக்களாற் சாதித்தவழி, ஏதுவுண்டு சாத்தியமில்லையெனப் பிணங்கும் புத்தர் முதலியோரை மறுத்துச் சிறப்புப்பொதுவகையாலுஞ் சிறப்புவகையாலுங் கருத்தாவுண்மை சாதிக்கவெழுந்தது இரண்டாமதிகரணம். —ரையணவியையபும் இதனானே விளங்கும்.

இனியென்றது அதிகரணவியைபுணர்த்துதற்பொருட்டு. முன்வரு மதிகரணங்களும் இவ்வாறே கண்டுகொள்க.

இனி இல்லதற்குத் தோற்றமின்மையின் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை யென்றது எனவிங்ஙனஞ் சொற்பல்காமைப்பொருட்டுத் துணிந்ததாக வைத்துரைத்தாராயினும் பொருளியைபிற்கேற்ப இதனை மூன்றதிகரணமாக வைத்துரைப்பது ஆசிரியர் கருத்தெனக்கொள்க; அஃதாமாறு காட்டுதும்:—

இனி உலகமுள்ளது என்றது.

எ - து. மே - ள். எ-னின். உலகம் இல்பொருளாய்த் தத்தஞ் சார்பிலே தோன்றியழிதல் இயல்பென்றலே அமை

வுடைமையின், அது முனிவனையுடைத்தாயினும் தோற்றவாலொருவனை யுடைத்தாதல் செல்லாது எனப் புத்தரால் சொல்லுங்கடாவை யாசங்கித்துத் திதியென்னுஞ் சூத்திரக் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோட லுதலிற்று. இ - ள். வெ - டை.

இல்லதற்குத் தோற்றமின்மையின்.

எ - து. எது எ - னின். உள்ளதாதல் யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தலுதலிற்று.

இ - ள். இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு முக்காலத்து முற்பத்தியின்மையின் கண்டுற்பத்தி காணப்படுதலான் உலகமுள்ளது என மேற்கொண்டது. எ - று.

இனி யுலகஞ் செய்வோனையுடைத்து என்றது.

எ - து. மே - ள். எ - னின். உள்பொருளெனப்பட்ட பிரபஞ்சம் தன்முதற்காரணத்தினின்றும் தானே தோன்றியழியும் இதற்கொரு நிமித்தகாரணமாய் ஒரு கருத்தா வேண்டாம் எனச் சாங்கியர்கூறுங் கடாவையாசங்கித்துத் தோற்றியவென்னுஞ் சூத்திரக் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடலுதலிற்று. இ - ள். வெ - டை.

உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின்.

எ - து. எது. எ - னின், அதற்குப் பிரமாணமென்னை என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தலுதலிற்று.

இ - ள். மண்முதலியவற்றி னுள்ளதாகிய கடமுதலிய பொருட்குக் குயவன் முதலிய செய்வோரையின்றி வினைதன் முதலிய செய்தொழில் நிகழாமையின் உலகம் இவ்வியல்பிற்றாகலான் இனி யிவ்வுலகஞ்செய்வோனையுடைத்து எனமேற்கொண்டது எ - று.

இனி ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை யென்றது.

" எ - து. மே - ள். எ - னின். இத்துணையுங் கூறிய வாற்றான் உலகத்தைத் தோற்றுவிப்பான் உண்டெனப்பட்ட கருத்தாத் திதிகருத்தா சிருட்டிகருத்தா முதலியோரில் ஒரு வினையாதலமையும் எனப் பஞ்சராத்திரி முதலியோர் கூறுங் கடாவை யாசங்கித்து ஒடுங்கியுளதாமென்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடலுதலிற்று.

இ - ள். உலகம் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்காரகருத்தாவினின்றன்றி உளதாகாது. எ - று.

ஒடுங்கினவென்னும் பெயரெச்சஞ் சங்காரமென்னும் இடப்பெயரோடு முடிந்தது. சங்காரம் ஆகுபெயர்.

அல்லதில்லை என்று எதிர்மறைமுகத்தாற் கூறியது, வனைக்கடவுளரின் உளதாகாமை யாப்புறுத்தற்பொருட்டு.

இதனுள் ஒடுங்கின என்பதனாற் போந்த குறிப்பேதுவைப் புலப்படக் காணுமாறு.

ஆண்டு ஒடுங்குதலின்.

எ - து. ஏது. எ - னின். அதற்குப் பிரமாணமென்னை என்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தலுதலிற்று.

இ - ள். யாது யாண்டொடுங்கும் அஃததனிலுற்பத்தியாம். மண்ணிற்குடம்போலும் என்னும் அவினாபாவத்தாற் பிரபஞ்சஞ் சங்காரகாரணன்மாட் டொடுங்குதலின் மீளத் தோன்றுங்கால் ஆண்டுநின்றுந் தோன்றுதலே பொருத்தமுடைமையின் அவ்வாறு மேற்கொண்டது. எ - று.

இவ்வாறு மூன்றதிகரணப் பொருளும் இதன்கட்போந்தவாறும் இவ்வாறுரையாக்காற் பொருளியைபுபடாமையும் நன்குணர்வாற் கண்டுகொள்க.

இலயித்த தன்னி லிலயித்ததா மலத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்

*எ - து. உ - ம். எ - னின். உலகம் உள்ளதாயின் உள்ளதற்கு உண்டாகவேண்டுவதில்லையாகலாற் சற்காரியவாதம அடாது எனப் புத்தர் கூறுங்கடாவை யாசங்கித்து இல்லதற்குத் தோற்றமின்மையினென்ற வேதுவை வலியுறுத்துதலுதலிற்று.

இ - ள். இலயித்தது இலயித்த தன்னில் ஆம் எ - து, உள்ளதாயினுஞ் சங்காரகாலத்தி னொடுங்கியதாகலான் அவ்வொடுங்கியவுலகம் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்காரகருத்தாவினின்றும் படைப்புக்காலத்தின் மீளவுளதாம். அற்றேல், ஒடுங்கியது ஒடுங்கியவாறே யொழியாது மீளவுண்டாகவேண்டா; வேண்டுமாயின், முன்னொடுங்காது நிலைபெறவே யமையும். அவ்வாறன்றி ஒடுங்கி மீளவுளதாவது எற்றுக்கெனின்? மலத்தால். எ - து. உள்ளதாகிய உலகம் கருமமலம் பரிபாகமாதற்பொருட்டு ஒடுங்கி ஆணவமலம் பரிபாகமாதற்பொருட்டு மீளவுமுண்டாம். அற்றேல் முன்னின்ற பிரபஞ்சம் நாசமாக வேறு தோன்றுமென்னுமல் அதுவே ஒடுங்கி நின்று மீளவுளதாமென்றற்குப் பிரமாணம் என்னையெனின்? இலயித்தவாறு உளது ஆ வேண்டும். எ - து. எஃதெவ்வாறு நின்றொடுங்கிற்று அஃதவ்வொடுங்கியவாறே உளதாதல் எல்லாராலும் விரும்பப்படும். எ - று.

எனவே அந்நியமில்லையாயின் நெற்கமுகாய் நீளாது நெல்லாய் நீளுதற்கு எதுவென்னையென்னுந் தருக்கமே அதனையறிவுறுத்துமென்றவாறாயிற்று. சற்காரிய வாதத்தினியல்பு "தந்துமுதலகாரகம்" என்னும் ஞானமிர்தத்தினும் காண்க.

* இதுமுதல் ஐந்தாஞ் சூத்திரமுடிவுவரை சிவஞானபோதச் சிற்றுரை.

இதனானே, இல்லதுமுள்ளதுமல்லாத பொருடொன்று மென்னுஞ் சூனியவாதிகளும், இல்லதுமுள்ளதுமாய பொருடொன்றுமென்னும் அநேகாந்தவாதிகளும் மறுக்கப்பட்டவாறறிக.

இலயித்த
தத்திதியி லென்னி னழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு.

எ - து. ௨ - ம். ௪ - னின். இனிச் சற்காரியவாதத்தின் அவ்வக்காரியங்கள் தத்தமுதற்காரணத்தொடுங்கு மெனவே கோடலின் உலகிற்கு முதற்காரணமாகிய மூலப்பகுதி வாசுதேவனுருவாகலான் உலகம் அவன்மாட்டொடுங்கு மென்றலே அமைவுடைத்தன்றி முதற்காரணத்தின் வேறாய நிமித்த காரணமெனக் கொண்ட சங்காரகருத்தாவின்மாட்டொடுங்கு மென்றல் பொருந்தாதெனப் பாஞ்சராத்திரிகள் கூறுங்கடாவை யாசங்கித்து ஒடுங்கின சங்காரத்தின் எனவும் இலயித்த தன்னில் எனவுங் கூறிப்போந்த குறிப்பேதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். இலயித்தது அத்திதியில் என்னின். எ - து. உலகமொடுங்கியது அந்தமூலப்பகுதிவடிவாய திதிகருத்தாவின்கணென்னையாயின், அவை அழியாது. எ - து. நீயங்ஙனங் கொள்ளினும் மூலப்பகுதிக்கு மேலுள்ள புவனங்கள் அதனால் வியாபிக்கப்படாமையிற் கீழுள்ள ஏகதேசமாத்திரையே ஆண்டொடுங்குவதன்றி மாயாகாரியத்தொகுதி முழுவதும் ஆண்டொடுங்காது. அற்றேல், மாயாகாரியத்தொகுதி முழுவதும் யாண்டொடுங்குவதெனின்? அத்திதியும் ஆதியும் ஆம் அங்கு அழிவது. எ - து. அந்தத் திதிக்கடவுளும் படைப்புக்கடவுளும் தோன்றுதற்குக் காரணமாகிய அச்சங்காரக்கடவுளிடத்தே அவ்விருவரோடுங்கூட அழிவதாம் அத்தொகுதி. எ - று.

இவ்வெண்பாவினைச் "செய்யுட்களோசை சிதையுங் காலீரளபு, மையப்பா டின்றி யமையுமா—மைதீரொற் றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு, குன்றுமே லொற்றளபுங் கொள்" என்பதுபோல இரண்டதிகரணப் பொருள்படுமாறு இருதொடராக வைத்துரையாக்காற் பொருளியைபுபடாமையறிக.

இலயித்தவென்னும் பெயரெச்சம் தன்னென்னும் இடப்பெயரோடு முடிந்தது.

இலயித்ததென்றது ஏதுப்பொருண்மையுணரநின்ற பெயர். இலயித்ததெனச் சற்காரியவாதங் கூறவே இலயித்தவவத்தையின் அவ்வக்காரியசத்தி சமூகமாய்ச் சூக்குமமாய் நிற்பதொன்றுண்டு. அதுவே முதற்காரணமெனப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகியமாயையுண்மையும்பெறப்பட்டது.

ஆவென்பது முதனிலைத் தொழிற்பெயர். வேண்டுமெனச் செயப்படுபொருளைச் செய்ததுபோலக்கூறினார்.

அவை தொகுதி; அஃறிணைப் பன்மைப்பெயரென்பார்க்கு அழியாது அழிவதென்னும் ஒருமைகளோடியையாமையும் உத்தரமாகாமையுமுணர்க.

திதியும் ஆதியும்ஆகுபெயர். ஆமங்கு பெயரெச்சமுடிபு.

இரணியகருப்ப மதத்தையும் மறுத்தற்பொருட்டுப் படைப்புக்கடவுளையும் உடன்கூறினார்.

நிமித்தகாரணனாகிய முதல்வன் உலகிற்கு முதற்காரணனல்லனாயினும் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின், உலகம் ஆண்டொடுங்கி ஆண்டுநின்று தோன்றுதல் அமையுமென்பது வருகின்ற வெண்பாவிற் பெறப்படும்.

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்று ணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்
கூட்டானே மண்போற் குளிர்ந்து. [கோடேத்துக்

எ - து. உ - ம். எ - னின். உலகந் தனக்கு முதற்காரணமாகிய மாயையினொடுங்குவதன்றி நிமித்தகாரணன் ஒருவனுண்டெனக் கொள்ளினும் அவன்மாட்டொடுங்குமென்றல் பொருந்தாமையின், யாது யாண்டொடுங்கும் அஃததனினுற்பத்தியாம் என்னும் அபிப்பிராயத்தான் மாயையினொடுங்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும் இதற்கோரிறைவன் வேண்டா எனச்சாங்கியநூலார் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்னுமேதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். மண்போல் குளிர்ந்து வித்து உண்டா மூலம் முளைத்தவா தாரகம் ஆம் அத்தன் தாள் நிற்றல் அவர் வினையால் வித்தகம் ஆம். எ - து. மாயையும் உலகமும் வித்தும் அங்குரமும் போலுமாகலின் வித்துக்கு ஆதாரமாகிய நிலங் குளிர்ந்தவழி அதன்கண் வித்துள்ளதாக அதனினின்றும் அங்குரந்தோன்றியவாறுபோல மேலைவெண்பாவின் இலயித்தது என்றதனாற் பெறப்பட்ட மாயை தனக்காதாரமாய் நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தியின்கணுள்ளதாய் நிற்றலால் அச்சத்தி சங்கற்பித்தவழி அவரவர் வினைக்கீடாக அவ்வக்காரியங்களை அவ்வவ்வியல்பிற் பிறழாமற் பயக்குஞ் சதுர்ப்பாடுடைத்தாம். அல்லுழி உடைத்தன்று. நிலங்குளிர்ந்தவழி அதன்கட் கிடந்தன்றி வித்து முளையைத்தோற்றுதவாறு போலும்; ஆகலான் மாயையினொடுங்கித் தோன்றிய உலகம் அதற்காதாரமாய் நின்ற இறைவன் சத்தியினொடுங்கித் தோன்றியதேயாம். எ - று.

ஆகலானென்பது முதல் குறிப்பெச்சம். இது கிழங்கினின்றுந்தோன்றிய தாமரையைப் பங்கமென்பதனுணுமறிக. வழிநூலாசிரியர் "உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதெ னரன்பால்" எ-ம், "உலகவ ணுருவிற் றோன்றி யொடுங்கிடும்" எ-ம், ஓதியதூஉம், உலகவனுருவிற்றோன்றி

யொடுங்குமாறு வாதுளாகமத்தில் வகுத்தோதியவாறும் இவ்வியல்பு நோக்கியென்க. இஃதறியாதார் இன்னோரன்னவற்றைத் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப.

உவமவினை பொருளினும் பொருளடை உவமையினுஞ் சென்றியையும்.

உண்டாகவெனச் சற்காரியத்தை வலியுறுத்தல், வித்தில்வழி நிலத்தினின்றும் அங்குரந் தோன்றாதவாறுபோல மாயையில்வழிப் பிரமத்தினின்றும் உலகந் தோன்றாதெனப் பரிணாமவாதிகளையும், மாயை அநிர்வசனமென்னும் மாயாவாதிகளையும், வித்துநிலனும்போலென்றதனான் மாயை முதல்வனின் வேறு பொருளன்றென்னுஞ் சிவாத்துவித சைவர் பாஞ்சராத்திரிகளையும், மறுத்தவாறாயிற்று.

முதல்வன் பலவேறு வகைப்படச் சங்கற்பித்தலாமென்னின் என்னுங்கடாவை யாசங்கித்து, அவர் வினையாலென்றார்.

வித்தகம் விசித்திரமென் றுரைப்பாரு முளர்.

அற்றேல், கன்மாநுசாரி வினைப்பயத்தாற் றேற்றுவிப்பான் இறைவனாமெனின்?

வேட்டுவன் ஆடு அப்புழுபோல் வேண்டி உருவைத் தான் கொடுத்துக் கூட்டானே. எ-து. வேட்டுவனுக்கு விருப்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவினைக் கொடுக்குமாறுபோல இறைவனும் அவரவர் வேண்டுருவினைக் கொடுத்து அவ்வினைக்குத் தக்க பயன்களையுங் கூட்டுவனாகலான் அதுகொண்டு சுதந்திரத்திற் பிழுக்கென்னை. எ-று.

ஆதலான் அதுகொண்டு சுதந்திரத்திற் பிழுக்கென்னை யென்பது குறிப்பெச்சம்.

போல் அசை. குளிர்தலழியென்பது குளிர்ந்தெனத் திரிந்து நின்றது.

நிற்றலென்னும் ஐந்தாவது விகாரத்தாற்றாக்கது. ஏகாரம் எதிர்மறை.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவ—னாக்காதே
கண்டநனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி லிற்றின்றாங் கட்டு.

எ-து. உ-ம். எ-னின். மேலையுதாரணத்திற் கூறிய வாற்றான் உலகிற்கு முதற்கடவுள் உண்டெனக்கொள்ளினும் அவன் படைப்பு முதலியன தொழில் செய்வானாயின் விகார மெய்தி அதனிற் பந்தமுறுவானென்னுமவர்மதம்பற்றி நிக ழுங்கடாவை யாசங்கித்து வதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். இறைவன். எ-து. முதல்வன். காலத்தில் தாக் காது நின்று. எ-து. இறப்பு நிகழ்வு எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத்தொழிலுஞ் செய்துந் தனக்கு விகாரமி ன்றி நிற்குங்காலம்போல விகாரப்படாது நின்று, ஆக்கா தே கண்டு. எ-து. பிரபஞ்சத்தைக் கரணத்தாற்படையாது சங்கற்பமாத்திரத்தானே படைத்து, நோக்காது நோக்கி நொடித்து. எ-து. அவ்வாறே காவாது காத்து அழியாதழித் தலால்,—இன்றாங் கட்டு. எ-து. இவ்வாலனுக்குப் பந்த மின்றாதல். உளத்தில் கண்ட நனவு ~~உணர்வில் கண்ட கனவு~~ உணரக்கண்டவனில் இன்று. எ-து. கற்றநூற் சொல்லும் பொருளும் உள்ளத்திற் றோன்றுங்கால் உள்ளம் அவற்றிற் றொடக்குண்ணாதவாறுபோலுங் கனவின்கட் கண்டவற்றைப் பிறக்கு விடயங்களை யறிந்து வந்த நனவுணர்வின்கண்ணே விளங்கவறிந்தவன் அப்பொழுது அவற்றிற்றொடக்குண்ணா தவாறுபோலு மித்தன்மைத்து. எ-று.

எனவே இஃதிவ்வாறாக வென்றெண்ணுதலாகிய சங்கற் பமாத்திரையாற் செய்வதூஉம், கரணத்தாற் செய்வதூஉமெ ன வினைமுதல் இருவகைப்படுமென்பதூஉம் கரணத்தானன்

றிச் செய்யமாட்டாத குயவன் முதலியோர் சங்கற்பமாத்தி ரையாற் செய்யுமுதல்வனுக்கு வினைமுதலாதற் பொதுமை பற்றி ஒருபுடையுவமையாதலன்றி முற்றுவமையாதல் செல் லாமையானும் சங்கற்பமாத்திரையாற் செய்யுஞ் செய்திக்குக் கட்டுண்டன் முதலிய குற்றங்கள் பகைப்பொருளாகலானும் அவை யாண்டுளவாதற்கோரியை பின்றென்பதூஉம் கூறி ஏ துவை வலியுறுத்தவாறு காண்க.

ஆக்குதல் படைத்தல்; காண்டலும் அது. நோக்குதல் காத்தல். நொடித்தல் அழித்தல்; அது "நொடித்தான் மலை" என்பதனானுமறிக.

ஆக்காது நோக்காது என்றமையால் நொடியாதென் பது வருவித்துரைக்கப்பட்டது. நொடித்தலாமென்பது நொடித்தெனத்திரிந்தது.

அன்றே அசை! அநாதியே யெனினுமமையும்.

இம்மூன்றும் உவமவுருபுகள்.

உளத்தினென்பதற்குச் சங்கற்பத்தாலென் றுரைப்பி னுமமையும்.

இன்றுங்கட்டு என்பது "அருங்கேடன்" என்பதுபோ ல நின்றது.

இரண்டாமதிகரணமுடிந்தது.

மூன்றுமதிகரணம்.

இனிச் சங்காரமே முதலென்கின்றது.

பா-து. மே-ள். எ-னின். 'ஒடுங்கின சங்காரத்தினல்லதுற்பத்தியில்லை' எனவே சங்கார கருத்தா உலகிற்கு முதற்கடவுளென்பது போந்ததாயினும் தேர்முதலாயின பலர் கூடிச் செய்யக் காண்டலின் அவற்றினும் அதிவிசித்திரமான உலகத்திற்கு மற்றுடத்தன்மையராய முதற்கடவுளர் உளரெனக் கோடும் என்னும் அநேகேசுரவாதிகள் முதலியோர் மதம்பற்றி நிகழுங் கடாவையாசங்கித்து 'அந்தமாதி' என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோணுதலிற்று.

இ-ள். சங்கார கருத்தா ஒருவனே உலகிற்கு முதற்கடவுளென்றது. எ-று.

சங்காரம் ஆதியென்ப. ஏனையோர் முதல்வராகாரெனப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின்வழி யல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

எ-து. ஏது எ-னின். அதற்குப் பிரமாணமென்னை யென்னுங்கடாவையாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். ஒன்றொன்றாய்ச் சுட்டியறிவதாகிய உருவும் அருவுமென்றிரு வேறுவகைப்பட்ட பிரபஞ்சம் அவ்வாறு சுட்டியறிதலின்றி எவ்வுலகும் ஒன்றுபடுத்து நின்ற சங்கார கருத்தாவின்வழிப் பரதந்திரமாய் நிற்பதல்லது தனக்கெனச் சுதந்திரமுடைத்தாய் நிற்பதன்றாதலாற் சங்காரகாரணனொருவனே உலகிற்கு முதற்கடவுளன்றி ஏனையோர் முதற்கடவுளரல்லரென மேற்கொண்டது. எ-று. பிரபஞ்சத்திற்குச்

சுதந்திரமின்மையுஞ் சங்காரகாரணனுக்குச் சுதந்திரமுண்மையும் ஏதுமுகத்தாற் காட்டுவார் சுட்டுணர்வாகிய பிரபஞ்சமெனவும் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமெனவும் ஈரிடத்தும் உடம்பொடுபுணர்த்தோதினர். சுட்டுணர்வுடையதனைச் சுட்டுணர்வென்றது உபசாரம்.

ஈண்டுப் பிரபஞ்சமென்றது சேதனப்பிரபஞ்சத்தை: பிரிநிலையேகாரத்தான் விலக்குதற்குரியது அதுவேயாகலின்.

தேர்முதலாயின பலராற் செய்யப்படினும் அப்பலருந் தச்சனேவல்வழி நின்றே செய்பவாகலானும், வேதத்துட் காரணவாக்கியங்களிற் சுட்டுணர்வினராகிய நாராயணன் இரணியகருப்பன் இந்திரன் அங்கி சூரியன் முதலியோரைக் காரணமென்றது குயவன்போல் அவாந்தரகாரணமாதல்பற்றியேயாகலின் அவையெல்லாம் ஆகுபெயராற் சங்காரகாரணனாகிய முதற்கடவுளையே யுணர்த்திநிற்குமாகலானும், செய்துஞ் செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுதலாயிருக்கு முதற்கடவுள் சங்காரகர்த்தா வொருவனே யென்பது கருத்து.

*இனிப் பிரமன்முதலிய மூவரையு முறையே "படைப்புக்கடவு டிதிக்கடவுள் சங்காரக்கடவுள்" எனவும், "சாக்கிரமூர்த்தி சொப்பனமூர்த்தி சுழுத்திமூர்த்தி" எனவுங் கூறிப், பரமசிவனைத் 'துரியமூர்த்தி'யென வுபநிடதங்களெல்லா மூவரின் வேறாக வைத்தோதுதலின், அப்பரப்பிரம முழுமுதல்வனே நாயனாரால் "ஆதிபகவன்" என்று அங்ஙனம் விசேடிக்கப்பட்டானென்பது தெற்றென வுணர்ந்துகொள்க. இன்னும், மாலயனுருத்திரனென்னு மூவரையு முறையே சாத்துவிககுணமூர்த்தி இராசதகுணமூர்த்தி தாமதகுணமூர்த்தியென்றோதிப், பரமசிவனைக் "குணாதீத" னென்றவ்வா றுபநிடதமுதலியன வோதுதலானும் அம்முழுமுதல்வனே ஆதிசத்தத்தால் விசேடிக்கப்பட்ட பகவனென்பது துணிபாமெ

* இக்குறியிட்டது முதல் இக்குறியீடுவருமிடம்வரை பாஷ்யம்.

ன்க. இனிச் சங்காரவுருத்திரனுஞ் சங்கரித்தற் றொழிலின் பொருட்டுத் தாமதகுணத்தை மேற்கொண்டதல்லது இயல்பாகத் தாமதகுணமுடையனல்லன்; தாமதகுணத்தின் காரியமாகிய துயின் மயக்கம் வஞ்சமுதலியன அக்கடவுண்மாட்டின்மையின். துயின் மயக்கம் வஞ்ச முதலியன மாயோனுக்குளவாதல் புராண இதிகாசங்களிற் கேட்கப்படுதலின், அக்கடவுட்குச் சாத்துவிககுணங் கூறியது காத்தற்றொழின் மாத்திரைக்கேயெனக் கொள்க. இன்னோரன்னவையெல்லாம் பிரமதருக்கத்தவந்துள் விரித்துக் காட்டியவாற்றா னறிக. மாயோனுக்குக்காத்தற்றொழிலும் பிருதுவி முதற் பிரகிருதிமாயைகாறும் வியாபித்து நிற்கும் பிரதிட்டாகலாபரியந்தமேயென்க. என்னை? நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியதீதை யென்னு மைங்கலைகளான் வியாபிக்கப்பட்ட தத்துவ புவனங்களுக்கு முறையே பிரமன் மால் ருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னு மைவரு மதிகாரிகளென ஆகமங்க ளோதுதலினென்க.

பிரகிருதிக்கு மேலுந் தத்துவபுவனங்களுண்மை சைவோபநிடதங்களினுங் கேட்கப்படுதலின், அது சைவாகமப் பொருளென்று புறங்கூறுத லேலாதென்க. புராணங்களினும் பாரதத்தினு மாயோனுக்கும் பிரமனுக்குந் தாழ்வாகவுருத்திரப்பெயராற் கூறப்படுவோர் காத்தற்றொழிலும் படைத்தற்றொழிலு மினிது நடாத்துதற்பொருட்டுச் சங்காரவுருத்திரன் கூறாய் அவர்பாற் றோன்றிய நீலலோகிதன் முதலிய வவதாரமூர்த்திகளே யாமென்க. அது பாரததாற்பரிய சங்கிரக முதலியவற்றுட் காண்க. அதர்வசிகை முதலியவுபநிடதங்களிற் "பரமசிவன் மும்மூர்த்திகளையும் படைத்தான்" என்பதுபோலக் குணமூர்த்திகளை அங்ஙனங் கூறாது தம்மை யொழித் தொழிந்த விருவரையும் படைத்தார் எனவே கூறுதலின், அவர் முழுமுதல்வ ராகாமை கடைப்பிடிக்க. "அயனை முன்படைத் திடுமொரு கற்பத் தரியை முன்

படைத்திடுமொரு கற்பத்-துயருருத்திரன்றனைமுனம் படைப்ப னொருகற்பமற் றொருகற்பந் தன்னின், முயனு மூவரை யொருங்குடன் படைப்பன் முன்பிறந்தவர் மற்றிரு வரையுஞ், செயலி னுற்படைக்கவுமருள் புரியவன் சிவபிரா னெனி லேற்றமிங் கெவனோ" எனச் சிவதத்துவவிவேகத்திற் கூறியதனையும் ஈண்டு விரித்துரைத்துக்கொள்க. பாரதத்தில் "அளவில்பே ரொளிப் பகவனுஞ் சிவனுங் கச்சத னான்மா வாம்" என்றது அபேதம்பட வுபசரித்துக் கூறியதாம். ஆண்டு ஆன்மாவென்றது அந்தரியாமியென்னும் பொருட்டெனக் கொள்ளின், அளவில் பேரொளிப் பகவனென் றுயர்த்துக் கூறியதனொடு முரணுமாறறிக. பாரதத்தின் மோக்கதரும த்தில் "ஆதலாலெனக் கான்மாவே யாமுருத்திரனை முன்னர்க் காதலாற் பூசிக்கின்றேன் யான்" எனக் கண்ணன் கூறிய வாக்கியத்திற் சிவபிரானைத் தனக்கான்மாவென்றது அந்தரியாமி யென்னும் பொருட்டேயாம்; தன்னாற் பூசிக்கப்படுங் கடவுளாதற்குரிய ததுவேயாகலானென்க.

இனி வேதத்துட் கருமகாண்டத்தில் "விண்டு பரமன் அங்கியவமன், அவ்விருவருக்கு மிடையே யெல்லாத்தேவரு ம" என்றது, ஆண்டுச் செய்வதொரு வேள்வி விசேடத்தில் அவிப்பாக மேற்குமுறையின் விண்டு முந்தினவன்; அங்கி பிந்தினவன்; அவ்விருவருக்குமிடையே யேனைத்தேவரெல் லாமென்னும் பொருட்டாகலின், ஆண்டுப் பரமவமமென்ப ன ஆதியந்தமெனவே பொருள்படுமாறு காண்க. அவ்வாற ன்றி ஆண்டு விண்டு பரமனென்றதற்கு விண்டு எல்லாக்கடவு ளருக்கு மேற்பட்டவனென்றும், அங்கியவமனென்றதற்கு அங்கியெல்லாக்கடவுளருக்குங் கீழ்ப்பட்டவனென்றும் பொ ருள்கொள்ளின், "அங்கி கடவுளர்க்கு மேற்பட்டவன்" என் று ஆண்டாண்டுக்கூறுஞ் சுருதி மிருதி புராணங்கள் பலவற் றோடு முரணுமென் றொழிக. இவ்வாறு முன்பின் முரணு

மைப் பொருள்கொள்ளவறியாது "'விண்டு ஆன்மா' என்ற
துபற்றியும், "விண்டு பரமன்" என்றதுபற்றியும், விண்டு
வுக்கு முதன்மை கோடல் பொருந்தாமையறிக. இன்னும்
வருவனவெல்லா மிவ்வாறே யோர்ந்துணர்க. ஈண்டுக் கூறிய
வாற்றானுந் துரிய மூர்த்தியான பரமசிவனை ஆதிபகவனென்
றவ்வாறோதப்பட்டா னென்று தெளிந்துகொள்க.

பாஞ்சராத்திரிகளின்னுங் கூறுமாறு: அரசனுலாப் போ
துங்காலைத் தொகுதி தொகுதியாகச் செல்வாருள் அரச
னா விவனென்பது ஆடை யணி யானை குதிரைமுதலிய வை
பவம்பற்றித் துணியப்படாதாம். என்னை? அவை அமைச்
சர் படைத்தலைவர் முதலியோர்க்கும் பொது; அல்லதூஉம்
அரசனுவகையுற்றுழி யமைச்சர் முதலாயினோர்க்குத் தன்
சின்னமிக்க வரிசையளித்தலு முண்டாகலின். அதுபோல
வேதத்துட் கூறப்படுங் கடவுளருட் பரப்பிரமப் பொருளா
வானிவனென்ப தேனைப்பெருமைகளாற் றுணியப்படாதாம்
மற்றுக் கிரீடங்கவித்து வெண்கொற்றக் குடைநிழற்கீழ் வ
ருதலொன்றேபற்றி யரசனாவானிவனென்பது துணியப்படு
மாறுபோலக் காரணவாக்கியங்களுட் படைப்பு முதலியவற்
றிற்குக் காரணமாகக் கூறப்படுத லொன்றேபற்றி யவனே
பரப்பிரமமென்பது துணியப்படும். காரணப்பொருளாவான்
நாராயணனே யென்பது சுபாலமுதலிய வுபநிடதங்களிற் கா
ணப்படும். அற்றேல், சிலவுபநிடதங்களிற் காரணப்பொரு
ள் 'சத்' தென்றும் 'பிரம' மென்றும் 'ஆன்மா' வென்று
மிங்ஙனம் பொதுவகையானும், இரணியகருப்ப' னென்று
ஞ் 'சிவ' னென்று 'முருத்திர' னென்று மிங்ஙனஞ் சிறப்
புவகையானும், வெவ்வேறு பெயரானெடுத் தோதவும் படு
மாலோவெனின்? அற்றன்று; சுபாலமுதலியவற்றுட் கார
ணப் பொரு ணாராயணனென்ற துலகந்தோன்று முறைமை
யெடுத்துக்கொண்டவழிக் கூறப்பட்டதாகலான் அதுவே யு

ண்மைப்பொருளெனவுஞ் சத்துப் பிரமமான்மா வென்றுந் தொடக்கத்துப் பொதுப்பெயர்கள் சாதகநியாயம்பற்றி நாராயணனையே யுணர்த்திநிற்கும். அங்ஙனமன்றி இடுகுறிப் பெயர் காரணத்தை விலக்குமெனக் கொள்ளினும் ஆகுபெயராய்த்தான், மாயோனுடைய வாயிரம் பெயர்களுட் சிவன் முதலிய நாமங்களும் எடுத்தோதுதலின் இடுகுறியாய்த்தான் நாராயணனையே யுணர்த்திநிற்குமெனவுங் கொள்ளப்படும்.

அற்றேல், நாராயணன் முதலிய மாயோன் பெயர்களுங் காரணக்குறியாய்ச் சிவனையே யுணர்த்திநிற்குமாதலின், நாரணப்பொருள் சிவமென்னு முடிபிட தங்களை வலியுடையவென பாதிக்கொள்ளிற் படுமிழுக்கென்னையெனின்? அற்றன்று; மாயோன் பெயர்கள் ஏனையவெல்லாங் காரணப்பெயராய் வேறொரு கடவுளை யுணர்த்துமெனக் கொள்ளினும், நாராயணனென்னும் பெயர் இடுகுறிப்பெயராதலே யன்றி ஏனைய பெயர்கள்போலக் காரணப்பெயராகுமென்றற் கேலாது. அஃதெங்ஙனமெனின், நாரமென்பது நீர்; அயனமென்பதிடம். நாரம் அயனமாகவுடையவன் நாராயணனென அம்மொழித் தொகையாய் இருமொழியும் புணர்ந்தவழி, ரகரத்தின்முன் வந்த நகரம் ஒருமொழிக்கண்ணதாயின், ணகரமாய்த்திரியும். உயிரெழுத்துக்களும், யகர வகரங்களும், கவர்க்க பவர்க்கங்களும், இடைபெறினும், அங்ஙனந் திரியும்; ரகரநிலைமொழிக்கண்ணதாக நகரம் வருமொழிக்கண்ணதேல், இடுகுறிப்பெயராயின், ணகரமாய்த்திரியுமென்பது, பாணினி சூத்திரமாகலின், நாராயணனென்பதனைக் காரணக்குறியாக் குவார்க்கு நகரம் ணகரமாகத் திரியுமென்றற் கேதுவில்லை யென்பது. அற்றாகலினன்றே சிவன் முதலிய பெயர்போல அவயவப் பொருள்பற்றிக் காரணக்குறியாய் மற்றோர் கடவுளை யுணர்த்துதல் பொருந்த நாராயணனென்னுஞ் சிறப்புப் பெயராற் சுபால முதலியவற்றில் எடுத்தோதியதூஉமென்

றிங்ஙனம் பிதற்றுவர். இவையனைத்துஞ் சுவேதாச்சுவதர முதலிய வுபநிடதங்களையோதியுணராத மடவோர் கூற்றேயா மென்று மறுக்க. படைப்பு முதலியவற்றிற்குக் காரணமாதலொன்றே பிரமத்திற்குச் சிறந்தவிலக்கண மென்ப தொக்கும். அதுபற்றியன்றே பரப்பிரமப்பொருள் பரமசிவனே யெனத் துணிந்தாமென்க. சுபால முதலிய வுபநிடதங்கள் உலகந்தோன்றி யொடுங்குமுறைமையை யுணர்த்தப் புகுந்தனவன்றிக் காரணப்பொருளை யுணர்த்தப்புகுந்தனவல்ல. இடையே இயைபுபற்றிக் காரணப்பொருளுமுடன் கூறப்பட்டது.

சுவேதாச்சுவதரத்தின் அவ்வாறன்றிச் சுபாலமுதலியவற்றுட் பொதுவகையா னுணர்ந்த காரணப்பொருளைச் சிறப்புவகையா னுணர்தற்பொருட்டுக் ‘காரணமாகிய பிரமம் யா’தென முனிவர் வினவும் வினாவை முதற்கணெடுத்துக்கொண்டு, உபநிடதமுழுவதும் பரமசிவனுக்குரிய சிறப்புப்பெயர்களாற் பரமேசுரன் பெருமைவிளங்கக் கூறுதலானும், இவ்வாறேனை யுபநிடதங்களுண் முதற்கணெடுத்துக்கொள்ளாமையானும், ஏனை யுபநிடதங்களினுஞ் சுவேதாச்சுவதரம் வலியுடைத்தாகலான், அதனுட்கூறப்படுங் காரணப்பொருளாகிய பரமசிவனே பரப்பிரமமெனவும், ஏனைக் காரணவாக்கியங்களுட்கூறும் பெயர்களெல்லாஞ் சாகபசுநியாயத்தாற் பரமசிவனையே யுணர்த்தி நிற்கு மெனவும், இரணியகருப்பன் நாராயணன் முதலிய சிறப்புப்பெயர்களும் அவயவப்பொருள்பற்றிக் காரணப்பெயராய்த்தான், அங்ஙனமன்றி ஆகுபெயராய்த்தான், பரமசிவனையே யுணர்த்திநிற்கு மெனவும், உணர்க. எல்லாப்பெயரும் பரமசிவன் பெயரென்பதே வேதத்தின் றுணிபென்ப தாண்டுக்காண்க. நாராயணனென்னும் பெயர் மாயோனுக் கிடுகுறியாகலினன்றே இயைபுபற்றிப் பரமசிவனை யுணர்த்தும்வழி ஆகுபெயரெனக்கொண்டாமென்பது. கங்கையினிடைச்சேரி யென்புழிக் கங்கையென்பது இடுகுறி

யாய் வெள்ளத்தினை யுணர்த்திநிற்றலானன்றே கரையை யுண ர்த்தும்வழி இயைபுபற்றி ஆகுபெயரெனக் கொண்டதூஉ மென்க. கரையினை யுணர்த்தும்வழியு மாற்றலா னுணர்த்து மாயின், ஆகுபெய ரென்றற் கேலாமையறிக. இங்ஙனம் நாராயணனென்பது மாயோனுக்கிடுகுறிப் பெயராய்நின்றே கங்கையினிடைச்சேரி யென்புழிப்போல இயைபுபற்றி ஆகு பெயராய்ப் பரமசிவனை யுணர்த்துமெனக்கோடலின், ஆண்டு ணகரமாய்த்திரிதற் கிழுக்கின்மையின் நாராயணனென்னுஞ் சொல் அவயவப்பொருள்பற்றிக் காரணக்குறியாதற் கேலா தெனக் கொண்டவழியும், அவர் கருத்து நிரம்புமாறில்லை யென்க.

"உண்மையா ராய்க்குங்கால்" நாராயணனென்பது அ வயவப்பொருள்பற்றிக் காரணக்குறியாய்நின்றே பரமசிவனை யுணர்த்துமென்பது காட்டுதும்" என்றெடுத்துக்கொண்டு "நரருடைய தொகுதி நாரமெனத் "தொகுதிப் பொருள் பற்றி அண்விகுதி வரும்" என்னும் பாணினி சூத்திரத்தால் அண்விகுதி பெற்றுநிற்ப, அதன்மேல் ஆசாரப்பொருளுணர் த்துங் ககர ஙகர வித்துக்களையுடைய யகரவிகுதிவந்து திரிந்து நாராயவென அயனீண்டு நின்றவழி, அதுவும் பகுதித்தன்மைப்படுதலின், அதன்மேல் வினைமுதற் பொ ருளுண்மையுணர்த்தும் லகர டகர வித்துக்களையுடைய யகர விகுதி யநவெனத் திரிந்து நாராயநனென நின்றவழி, "வினை ப்பெயர் விகுதியினின்ற நகரம் ணகரமாய்த் திரியும்" என்ப தனால் அங்ஙனந்திரிந்து நாராயணனென வொருமொழியாய் உயிர்த்தொகையை யொத்து நிற்பனென்னும்பொருட்டாய்க் காரணக்குறியாயவாறு காண்க. இங்ஙன நாராயணனென்பது லகாடகர வித்துக்களையுடைய அகரவீற்றுச் சொல்லாதலின ன்றே பெண்பாலில் நாராயணியென ஙகரபகர வித்துக்களையு டைய ஈகாரவிகுதி யீற்றுன் யாண்டும்வழங்குவதூஉமென்க. அகரவிகுதி யீற்றுச்சொல்லெனக் கொள்ளாக்கால், நாராயணீ

யென வீகாரவிகுதி பெறுதற்கு விதியின்மையுணர்க. நாரா யணனென்னும் வடமொழிக்கு இங்ஙனம் விகுதிமேல் விகுதி புணர்த்துச் செய்கை செய்வனவெல்லாம் வடமொழிவியாகர ணம் வல்லார்வாய்க் கேட்டுணர்க. இன்னும் விரிக்கிற் பெரு குமென்றொழிக. இதிகாவது, செய்கை செய்தன்முதலிய வற்றிற்குக் கருவியாக முதனூலாசிரியனாற் படைத்திட்டுக் கொள்ளப்பட்ட கருவிச்சாரியை. "இரணியகருப்பன் கார ணப்பொருளென்பாரையும் இவ்வாறே கூறி மறுக்க."

"உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற், றசரதன் ம தலை தாபித் தேத்தலிற், கண்ணன் கயிலையி னண்ணிநின் றி ரப்பப், புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற், றுஞறு விழியுட னொராயிரங் கமலப், புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலின், ஆங்கவற் கிரங்கி யாழியீந் தருடலின், ஐங்க ணைக் கிழவனை யழல்விருந் தாக்கலின், அமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலிற், றென்றிசைத் தலைவனைச் செருத்து யிர் பருகலின், அவுணர் முப்புர மழியவில் வாங்கலிற், றக் கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற், றனஞ்செயன் றனக் குத் தன்படை வழங்கலின், மானுட மடங்கலை வலிதபக் கோறலின், மாயோன் மகவே வாகிய காலைத், தடமுலை தி ளைத்துச் சாத்தனைத் தருதலின், ஆழ்கடல் வரைப்பி னொன் றோ ரனேகர், அன்புமீ தூர வருச்சனை யாற்றலி, னொன்றிரு செல்வமு மாங்கவர்க் கருடலின், ஐயிரு பிறப்பினு மரியருச் சித்தலின், இருவரு மன்னமு மேனமு மாகி, அடிமுடி தே ட வழற்பிழம் பாகலிற், பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின் மையிற், கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற், பொய் புகல் வியாதன் கைதம் பித்தலின், முப்புர மிறுப்புழி முகு ந்தப் புத்தேண், மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலின், அயன்சிர மாலை யளவில வணிதலின், ஞானமும் வீடும் பே ணினர்க் குதவலிற், பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள்,

உம்பர்களெவர்க்கு முயர்ந்தோன், என்பது தெளிக வியல்புணர்ந்தோரே" என அர்த்தத்தாசாரியர் அருளிச்செய்தத னையு மீண்டு விரித்துரைத்துப் பரமசிவ பரத்துவ மினிது தெரிந்துகொள்க. இங்ஙனங் காத்தற்கடவுளாகிய நாராயணனும், படைத்தற் கடவுளாகிய இரணியகருப்பனும் பரமகாரணராகாமை தெரிக்கவே, இவரோடொருங்கெண்ணப்படுஞ் சங்காரக்கடவுளாகிய வுருத்திரனும் பரமகாரண னாகானென்பது தானே போதருமென்க.*

ஒன்றலா வொன்று ளதாகி நின்றவா
றென்றலா வொன்றிலவை யீறுத—லொன்றலா
வீறே முதலதனி னீறலா வொன்றுபல
வாறே தொழும்பா மங்கு.

எ-து. உ-ம். எ-னின். அங்ஙனமாயினும் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாயினாற்போலச் சுட்டுணர்வின்றிநின்ற சங்காரமும் பலவுளவெனக் கோடும் ஒன்றேயென்றற்குப் பிரமாணமென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். அவை. எ-து. சேதனப்பிரபஞ்சத்தொகுதி ஒன்று அலா ஒன்றால். எ-து. உருவும் அருவுமென்னும் அவ்விருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத ஒப்பற்ற பரம்பொருளாலே உளது ஆகி நின்றவாறு. எ-து. சிருட்டிப்பட்டுத் திதிப்பட்டவாறே ஒன்று அலா ஒன்றில் ஈறுதல். எ-து. அத்தப்பரம்பொருளின்கண்ணே சங்காரப்படுதலால் ஒன்று அலா ஈறே முதல். எ-து. அச்சங்காரக்கடவுளொருவனே உலகிற்கு முதற்கடவுள். அற்றேல், இவ்வாறு முத்தொழிற்படுஞ் சேதனப்பிரபஞ்சம் வீடுபெற்றவழிச் சுட்டுணர்வின்றிச் சிவசமமாமென வேதத்தும் ஆகமத்தும் ஓதுதலின் அவ்வழி அவையும் முதற்கடவுளாமென்றற்கு இழுக்கென்னையெனின்? அதனில் ஈறு அலா ஒன்று. எ-து. அப்பரம்

பொருள்போல் அழிவின்றி நித்தமாய சேதனப்பிரபஞ்சம் அங்கு. எ-து. வீடுபேற்றின்கண்ணும் பலவாறே தொழும்பு ஆகும். எ-து. பலவாற்றானும் பரம்பொருளுக்கு அடிமையாம். எ-று.

இது சொற்பொருட்பின்வருநிலை.

காரியப்பிரபஞ்சஞ் சடமாகலானும், சேதனப்பிரபஞ்சம் அவிச்சையாற் கட்டுற்றுச் சுட்டுணர்விற்றாய் நிற்றலானும், இவற்றைத் தொழிற்படுத்தற்கு இவற்றின் வேறாய் ஒருமுதற்கடவுளுண்டென்பது பெற்றாம். பெறவே, பிரபஞ்சம் விசித்திரகாரியமாய்க் காணப்படுதலின் இவ்வாறு நடாத்தும் முதற்கடவுள் முற்றுணர்வும் அளவிலாற்றலும் பேரருளுஞ் சுதந்திரமும் முதலிய நிரதிசயகுணங்களுடையனென்பதூஉம் பெறப்பட்டது. படவே, இத்தன்மையனாகிய முதற்கடவுளொருவனே அமையுமாகலின் வேறுமத்தன்மையருண்டெனக் கொள்ளின் மிகையென்னுங் குற்றமாம். அல்லதூஉம், இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமையில்வழி இலக்கியம் பலவாதல் செல்லாதென்னுங் கருத்தால், ஒன்றலாதொன்று என வரையறுத்தோதினார்.

ஈறே முதலென்றது முடிந்தது முடித்தல். ஈறு, ஆகுபெயர்.

இறந்ததுதழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது,

பலவாறுவன, இருணீங்கிய வழியுங் கண்ணுக்குக் காட்சி ஞாயிற்றை யின்றியமையாதவாறுபோல, மலநீங்கிய முத்திநிலையினும் ஆன்மாவுக்கு அறிவு வியஞ்சகமாய் உடனின்றறிவிக்கு முதல்வனை யின்றியமையாதவாறும், கண் படிகம் ஆகாயம்போலச் சார்ந்ததன்வண்ணமாயன்றி முதலவன் போலத் தனித்துநிற்குமியல்பில்லாதவாறும், முதல்வன்போல் ஐந்தொழிற்கும் வினைமுதலாமுரிமையின்றிச் சிவாநுபவ

மொன்றினுக்கே யுரித்தாயவாறும், சமவியாபகமாயினும் முதல்வனை நோக்கத் தூலவறிவாகலான் விளக்கொளியுட் கண்ணொளிபோல முதல்வனின் வியாப்பியமாயன்றி நில்லாத வாறும் முதலாயின. அற்றேல், முத்திநிலையின் ஆன்மாச் சிவமாமென்னுஞ் சுருதிக்குப் பொருளென்னையெனின்? அஃது உண்மையதிகாரத்துட் பெறப்படும். இதனானே சிவசம வாதி சங்கிராந்தவாதி உற்பத்திவாதி ஆவேசவாதிமதங்களும் மறுக்கப்பட்டன.

பதியுண்மைக்குப் பிரமாணங்கூறுவார் மலத்துளதாம் எனப் புனருற்பத்திக்கேதுக் கூறுமுகத்தான் மலத்துண்மைக்குப் பிரமாணமும் உடன்கூறினார். அதனை யீண்டு வேறோரதிகரணமாக வைத்துரையாராயினார்; அதிகரணத்திற்குரிய ஐயப்பாடு முதலியனவெல்லாஞ் சகசமலத்துணராமெனை அதனிலக்கணங்கூறும் வழிப்பெறப்படுதலால், ஈண்டு மிகைபட வேறோதல் வேண்டாமையின்.

இச்சூத்திரத்ததிகரணங்களாற்போந்த தொகைப்பொருளாவது: தோற்றக்கேடுகளதுண்மை காட்சி முதலிய அளவைகளான் அறிய வாராமையிற் பிரபஞ்சம் நித்தப்பொருளேயாம். அன்றித் தோன்றியழியுமெனக் கொள்ளினும், இல்பொருள் தத்தஞ்சார்பிற்றோன்றி நின்றழிதல் இயற்கையெனவமையும்; செயற்கை யென்றற்கு ஓரேதுவின்மையின். மற்றுள் பொருளாயின், அதுவேயமையும் இறைவன் வேண்டா; இரண்டுள்பொருள்கோடல் மிகையாகலின். வேண்டுமாயினும், மாயோன் முதலிய கடவுளரில் ஒருவனே யமையும் அவரையொழித்துச் சங்காரகருத்தா முதற்கடவுளென்றதற்குப் பிரமாணமென்னை? பிரமாணமுண்டாயினும், அதிவிசித்திரமாய பிரபஞ்சம் ஒருவனாற் செய்தல் கூடாமையின், மற்றும் அவ்வியல்பினராய முதற்கடவுளர் உளராதல்வேண்டும் என உலோகாயதர் மீமாஞ்சகர் புத்தர்

சமணர் சாங்கியர் பாஞ்சராத்திரிகள் அநேகேச்ரவாதிகண் மதம்பற்றிப் பூருவபக்கம் நிகழ்ந்தவழி அவரைமறுத்துச்சித் தாந்தஞ்செய்து முதற்கடவுளதுண்மை பொதுவகையானுஞ் சிறப்புவகையானுங் கருதலளவையின் வைத்துணர்த்தியவா றென உணர்க. இவ்வாறு சூத்திரந்தோறும் உணர்ந்துரைத் துக்கொள்க.

மூன்றமதிகரண முடிந்தது.

முதற்சூத்திர முடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாஞ்சூத்திரம்.

பொது வியல்பு.

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

எ-து. சூ-ம். எ-னின். புனருற்பவம் வருமாறுணர்த் துதனுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று.

இ-ள். உலகம் ஒடுங்கியினின்றும் மீளவுளதாமாற்றை வகுத்துணர்த்துமுகத்தானே துணைக்காரணமுதலியன இல் வழி இறைவன் உலகிற்கு நிமித்தகாரணனுதல் சாலுமாறு யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து அவற்றதுண்மைக் குப் பிரமாணமுணர்த்துதனுதலிற்று இச்சூத்திரம். எ-று.

சூத்திர வியைபும் இதனானே விளங்கும்.

ஒடுங்கியுளதாமென்றவழி ஒடுங்கியினின்றும் மீளவுளதாவது எவ்வாறென்று அவாய்நிற்றலின் அவ்வவாய்நிலைபற்றிப் புனருற்பவமே ஈண்டுக் கூறப்பட்டது.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. மேலைச்சூத்திரத்து எடுத்துக்கொண்ட சங்காரகாரணனாகிய முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாய் பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறுமாய் உயிர்க்கு உயிராதற்றன்மையாற் கண்ணொளியின் ஆன்மபோதம்போல் உடனுமாய்நின்று ஆணையென்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சத்தியான் வரும் இருவினைகளான் அவை இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன். எ - று.

அவையேதானே யாயென்பதனை இரட்டுறமொழிந்து கொண்டுரைக்க. இக்கருத்தேபற்றி "உலகெலா மாகிவேறுயுடனுமாய்" என்றார் வழிநூலாசிரியரும்.

மேலைச்சூத்திரத்தின் 'அந்தமாதி' என்புழி விகாரத்தாற் றொக்க பிரிநிலையேகாரத்தான் விலக்கப்பட்டு நின்ற சேதனப்பிரபஞ்சத்தை ஈண்டு அவையெனச் சுட்டிக்கூறினார்.

'ஒடுங்கியுளதாம்' என்றதற்கேற்ப ஈண்டும் போக்கினை முற்கூறினார்.

புரிதல் எப்பொழுதும் மேற்கோடல்.

ஆணையினென்பது சிங்கநோக்காய் இருவினையென்பதனோடும் நீக்கமின்றியென்பதனோடும் இயைந்து பொருடந்து நின்றது. ஆண்டு இன்னுருபு, முன்னர் ஏதுப்பொருட்கண்ணும், பின்னர் நீக்கப்பொருட்கண்ணுமாய், நின்றது. இன்னென்பது சாரியையெனக்கொண்டு ஈரிடத்தும் ஏற்குமுருபுகள் விரித்துரைத்தலுமொன்று.

அன்றே அசை. அநாதியே இவ்வாறு நிற்குமெனினு மமையும். ஆய்ப்புரியநிற்குமெனவே, அச்செயல்களெல்லாம் முதல்வன் கரணத்தானன்றிச் சங்கற்பமாத்திரத்தாற் செய்வனென்பது பெறப்பட்டது.

இதனானே மேல் 'அந்தம்' என்று உத்தேசமாயெடுத்துக்கொண்ட முதல்வனுக்கு இலக்கணங் கூறியவாறுமாயிற்று. இது தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு.

ஆணையினிருவினையினெனவே, தனது சிற்சத்தி துணைக்காரணம். இருவினையும் அதன்வழித்தாய துணைக்காரணம். இருவினையினெனவே அதற்குப் பற்றுக்கோடுண்டென்பதூஉம் பெற்றுமாகலின், அதுமுதற்காரணமென்பதூஉம் இருவினையிற் போக்கு வரவு புரியவெனவே ஒடுங்கியின் மீளவுளதாங்கால் இருவினைகட்கேற்பப் பலவேறு வகைப்பட்டு விரியுமென்பதூஉம் போந்தவாறு காண்க.

இதனுள் அவையே தானேயாய் என்பதோரதிகரணம்; ஆணையினிருவினையின் என்பதோரதிகரணம்; போக்குவரவு புரிய என்பதோரதிகரணம்; ஆணையினீக்கமின்றி நிற்குமன்றே என்பதோரதிகரணம்; ஆக நாற்கூற்றது இச்சூத்திரமெனக் கொள்க.

முதலதிகரணம்.

ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்கும் என்றது.

எ-து. மே-ள். எ-னின். மேன் முதற்கடவுளல்லவென விலக்கப்பட்டு நின்ற சேதனப்பிரபஞ்சமும் முதல்வனும் பொன்னும் பணியும்போல் அபேதமோ இருளும் வெளியும்போற் பேதமோ சொல்லும்பொருளும்போற் பேதாபேதமோ என்னுமையப்பாட்டின்கண் அம்மூன்றனுள் ஒரோவொன்றேபற்றி அவ்வம்மதத்தார் கூறும் கடாவை யாசங்

கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ - ள். வெ - டை.

ஈண்டும் இரட்டுறமொழிந்துகொள்க.

இதனானே, ஒருவிடயத்தைக் காணுங்கால் ஆன்மபோர் தம் கண்ணொளியெனத் தானென வேறின்றி உடனாய்நின்று காணுமாறுபோல, முதல்வன் புனருற்பவஞ் செய்யுங்கால் உயிர்களோடு உடனாய்நின்று செய்வனென்பதூஉம், பெறப் பட்டது.

அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந் நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு.

எ - து. ஏ - து. எ - னின். முதல்வன் அவ்வாறு மூவகையுமாய் நிற்பனென்றற்குப் பிரமாணமென்னை என்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ - ள். அத்துவிதமென்றசொல்லின் நகரம் இன்மை அன்மை மறுதலை என்னு முப்பொருளுணர்த்துமன்றே அவற்றுள் இன்மைப்பொருள்பற்றி அத்துவிதமென்ற மொழி மாத்திரையானே ஒருபொருளென்றல் பொருத்தமுடைத்தெனின்? தானே தன்னையொன்றெனக் கருதல்வேண்டாமையின் அவ்வாறு கருதும் பொருள் வேறுண்டென்பது பெறப்படுதலானும், எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம் அன்மைப் பொருண்மாத்திரையே யுணர்த்திப் பொதுமையினிற்பதன்றி ஏனைச்சொற்களின்மேல் வந்த நகரம்போல இன்மை மறுதலைப்பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கணின்மையின் அத்துவிதமென்கின்ற மொழிதானே பிறிது காரணம் வேண்டாது வேறின்மையையுணர்த்தி நிற்குமாகலானும், ஈண்டு அவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்குமென மேற்கொண்டது. எ - று.

ஆகலானென்பதற்கு ஆயிட்டென்பது அக்காலவழக்குப்போலும், அற்றாகலினன்றே "நீயோ செய்யாய் நின் மல ஞாயிட்டு" என்றார் வழிநூலாசிரியரும்; இனி "மழை பெய்து குளநிறைந்தது" என்புழிப்போல ஆயிடலாலென்பது ஆயிட்டெனத் திரிந்ததென்றலுமொன்று.

எண்ணும்மை விரித்துரைக்க.

வேறின்றி உடனாதல் பெறப்படவே, பொருண்மையாற் பேதமென்பதூஉம் கலப்பினால் அபேதமென்பதூஉந் தாமே போதருமென்பது கருத்து.

கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னேனென்றுங்—கோட்டி
யவனுளமா கில்லா னுளமவனு மாட்டா
த்வனுள்மா யல்லனுமா மங்கு.

எ - து. உ - ம். எ - னின். ஒருபொருள் மூவகையியல்பை யுடைத்தாதல் யாங்ஙனம் என்னுங் கடாவை யாசங்கித்து அவற்றுள் அவையேயாதலை உவமைமுகத்தான் வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். உள்ளம் கட்டும் உறுப்பும் கரணமுங்கொண்டு எ - து. உயிர் நரம்பு முதலியவற்றாற் பிணிக்கப்படும் உடம்பினையும் ஐம்பொறி முதலிய கருவிகளையுங் கைக்கொண்டு நின்று, இட்டது ஒருபேர் அழைக்க என் என்றுங்கு. எ - து. சாத்தா கொற்றா என உடம்பிற்கிட்ட பெயராற் பிறரழைத்தவழித் தான் என்னையென வந்து நிற்றல் காண்டுமன்றே இருவர் கை கோத்து நின்றுழியும் அவருள் அழைக்கப்பட்டோனேயன்றி ஏனோன் என்னையென்றல் உலகத்தின்மையின் அவ்வாறன்றி உடம்பின் பெயரான் அழைத்தவழி உயிர் என்னென்றற்குக் காரணம் பிறிதோராற்றாற் பெறப்படாமையின் அருத்தாபத்தியளவையானே அவ்வுழி உடம்பெ

னத் தானென வேற்றுமையின்றி அபேதமாய் நிற்றல் பெற்றும் அதுபோல ஒட்டி எ - து. முதல்வன் உயிர்களின் அபேதமாய் ஒட்டி நிற்போனும் அங்கு அவன் உளம் ஆகில்லான் உளம் அவனுமாட்டாது அவன் உளம் ஆய் அல்லனும் ஆம். எ - து. அவ்வாறொட்டியவழி உயிர் உயிரே, உடம்பு உடம்பே, உயிர் உடம்பாயொழியாது உடம்பு உயிராக மாட்டாது. அவ்வாறாயினும் உயிர் உடம்பாயும் அதனின் வேறாயுநிற்கும் உடம்பு அங்ஙனநில்லாது அதுபோல முதல்வன் முதல்வனே உயிர்உயிரே முதல்வன் உயிராயொழியான் உயிர் முதல்வனாகமாட்டாது. அவ்வாறாயினும் முதல்வன் உயிராயும் அதனின் வேறாயுநிற்பன். உயிர் அங்ஙனநில்லாது எ - று.

அவனுளமாகில்லானுளமவனு மாட்டாதவனுளமாயல்லனுமாமங்கு என்றது ஒன்றாயும் ஒன்றன்மைக்கு அநுபவங் காட்டியவாறு.

உறுப்பு ஆகுபெயர். எவனென்பது என்னென மரீஇயிற்று. ஒட்டியென்பது பெயர்; வினையெச்சமாகக்கொள்ளிற் சிறப்பும்மை விரித்துரைக்க.

ஒட்டுதல் பொருந்துதல். அங்கு அதுபோல.

ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளைகா—ணென்றின்று
லக்கரங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு.

எ - து. உ - ம். எ - னின். வேதத்துள் அத்துவிதமென்றதூஉமன்றி ஏகமெனவு மோதுதலின் அதற்கு மறுதலையாய் உயிர்களோடொட்டி நிற்பனெனப் பேதப்படக் கூறுவதென்னை என்னுங்கடாவை யாசங்கித்து அச்சொற்குத் தாற்பரியங் கூறுமுகத்தால் தானேயாதலை வலியுறுத்துதனுதலிற்று

இ - ள். இருக்கு ஒன்று என்றது ஒன்றேகாண். எ-து வேதம் ஒன்றென்றதற்குப் பொருள் ஒன்றென்பதேயாம்; வேறு பொருள்படாது. ஒன்றே பதி. எ - து. அதற்குத் தாற்பரியம் பதிப்பொருளொன்றே; இரண்டில்லை யென்பதாம். ஒன்று என்ற நீ பசுவாகி. எ - து. இஃதறியாது ஒன்றென்று சொல்லுகின்ற நீ அப்பதிப்பொருளின் வேறாய பசுவென்றறிவாயாக. பதியுஞ் சேதனமாக யானுஞ் சேதனமாக என்னைப் பசுவென்றதென்னையெனின்? பாசத்தோடு உளைகாண். எ - து. நீ மலத்தோடு கட்டுற்று நின்றாயாகலிற் பசுவெனப்பட்டனை. அற்றேல் இவ்வாறு வேற்றுமைகூறிற் பிரமமில்லையாயின் ஒருபொருளுமில்லையென்னும் வேதத்திற்குத் தாற்பரியமென்னையெனின்? அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாம் இக்கிரமத்து ஒன்று இன்று என்னும். எ - து. அகரவுயிரில்லையாயின் அக்கரங்களில்லையாமென்னும் இம்முறைபற்றி வேதம் பிரமப்பொருள் இல்லையாயின் ஒருபொருளுமில்லை யென்றோதும் அத்தனை. எ-று.

ஒன்றின்றாலக்கரங்களின்றா மகரவுயிரின்றேலிக் கிரமத்தென்னும் என்றது வேறாகியும் வேறன்மைக்கு அநுபவங் காட்டியவாறு.

இக்கிரமத்தாலெனா உருபு விரித்துரைக்க. இன்றென்னுமொருமை அப்பண்பின்மேனின்றது. காணென்பதனை மேலே கூட்டுக. ஆம் அசை.

பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணரு
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்னு
தத்துவித மென்றறையு மாங்கு.

எ - து. உ - ம். எ - னின். வேதம் ஏகமாய பிரமத்தை ஏகமென்றொழியாது பிரமம் அத்துவிதமெனவும் ஓரோ

ரிடங்களின் ஓதுதலின் அத்துவிதம் இருபொருட் கண்ண தென்பார்க்கு ஏகமாய பிரமத்தை அத்துவிதமென்றல் பொருந்தாதாய் முடியும் என்னுங்கடாவை யாசங்கித்து அதனை நீக்குமுகத்தானே அவையே தானேயாதலை வலியுறுத்துத லுதலிற்று.

இ - ள். பண்ணையும் ஓசையும்போலப் பழமதுவும் எண்ணும் சுவையும்போல் எங்கும் ஆம் அண்ணல் தாள் அத்துவிதம் ஆதல். எ - து. பண்ணும் அதனின் வேறன்றுயெண்ணப்படும் இசையும்போலவும் பழமும் அதனின் வேறன்றுயெண்ணப்படுஞ் சுவையும்போலவும் யாங்கணும் வியாபகமாய முதல்வன் றிருவருள் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதாகலான் அருமறைகள் ஒன்று என்னாது அத்துவிதம் என்று ஆங்கு அறையும். எ - து. வேதங்கள் ஏகமென்னுது பிரமம் அத்துவிதம் என்று அவ்விடங்களிற் கூறும் எ-று

ஆண்டுப் பிரமம் அத்துவிதமென்றது பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்குமென்னும் பொருட்டாகலான் அஃது ஏகமென்பதோடு முரணுமாறில்லையென்பதாம்.

பண்ணை யென்னும் ஐகாரம் பகுதிப்பொருள் விகுதி பண் பாலைப்பண் முதலாயின.

எங்குமாமண்ணலுளென விசேடித்தது, குணகுணிகள் போல் உடனாயும் அவ்வாறுடனாகாமைக்கு அநுபவங்காட்டியவாறு. வியாப்பிய வியாபகமாதலொப்புமை மாத்திரையே பற்றிக் குணகுணிகளை உவமை கூறினாரென்பது.

அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப னின்று.

எ - து. உ - ம். எ - னின். இங்ஙனம் வெவ்வேறுவகையும் எடுத்துக் காட்டின் அநேகாந்தவாதமா மென்னுங்கடாவை யாசங்கித்து அஃதாகாமை உவமைமுகத்தான் விளக்கி மூன்றனையும் ஒருங்கே வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். உருக்கி அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கற்போல் உடங்கு இயைந்து நின்று பிரிப்பு இன்றித்தானே உலகு ஆம். எ-து. அரக்கை யுருக்கி அதனொடு சேர்த்து அணைத்த கற்பொடி அவ்வரக்கினோடொன்றாய் ஒருங்கியைந்து நீக்கமின்றி நின்றாற்போல, முதல்வன் உயிர்களின் ஒருங்குகூடி நின்று நீக்கமின்றி உடனாகலால், தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம். அற்றேல், வாமதேவமுனிவன் முதலியோர் யானே யுலகெல்லாமாயினேன் எனக் கூறுதலானும், சர்வஞ்ஞானோத்தரத்தில் யானேயெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றேன் என்று உயிர்கண்மேல் வைத்தோதுதலானும், உயிர்களும் இவ்விலக்கணத்தனவாவான் செல்லும்போலுமெனின்? தமியேன் உளம் புகுதல் யானே உலகு என்பன் இன்று. எ-து. அம்முதல்வன் பாசக்கூட்டத்தினீங்கித் தனியாய் நின்ற என்னகத்துச் சோகம்பாவனையாற் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றலான் யானே யுலகெல்லாமென்பேனாயினேன் இம்முத்திகாலத்து. ஆகலின், அதுபற்றி உயிர்களும் அவ்வாறுவான்சேறலின்று. எ-று.

அதுபற்றி உயிர்களும் அவ்வாறுவான்சேறலின்றென்பது குறிப்பெச்சம்.

இவ்வொற்றுமைபற்றியன்றே அருச்சுனற்குக் கீதை நூல் செவியறிவுறுத்த கண்ணன் யானே யுலகெல்லாமாயினேனென்றதூஉம், முதல்வனது விச்சுவரூபத்தைத் தான் காட்டியதூஉம், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுகவென்றதூஉம், அதனை உறுதியாகக்கொண்ட அருச்சு

னன் அவன் கூறிய கருத்து நோக்கிச் சாங்காறுஞ் சிவபூசை செய்ததூஉம், கண்ணன்மேலிட்ட போதுகள் முதல்வன் திருமுடிமேற் கண்டதூஉமென்க. கண்ணன் உபமன்னியமுனிபாற் சிவதீக்கையுற்றுத் தன்னையுந் தலைவனையுமுணர்ந்தோனாகலிற் சிவோகம்பாவனையைத் தலைப்பட்டோனாதலறிக.

கலப்பாய்நிற்றலான் உலகேயாமென்பார் உடங்கியைந்து எனவும், பொருட்டன்மையால் வேறுநிற்றலால் தானேயாமென்பார் நின்று எனவும், உயிர்க்குயிராய் நிற்றலால் தானே யுலகாமென்பார் பிரிப்பின்றி எனவுங் கூறினார்.

ஈண்டும் இரட்டுறமொழிந்துகொண்டுரைக்க.

இன்றியென்னுஞ்செய்தெனச்சக்குறிப்பு மழை பெய்து குளநிறைந்தது என்புழிப்போலக் காரணகாரியப்பொருட்டாய் நின்றது.

இவ்வதிகரணத்தானே பேதமென்றும் அபேதமென்றும் பேதாபேதமென்றும் பிணங்குஞ் சமயிகளையெல்லாம் மறுத்து அம்மூவகையியல்புந் தன்கட்டோன்ற நிற்கும் அத்துவிதத்துண்மை ஏதுக்களானும் உவமைகளானும் உணர்த்தியவாறு. புடைநூலாசிரியரும் இவ்வதிகரணப்பொருளே பற்றி:—†

"புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
வறத்திறனால் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க
னறிவொளிபோற் பிறிவருமத் துவிதமாகுஞ்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம்."

என வகுத்தோதினார்.

ஈண்டுப் புறச்சமயத்தவரென்றது: முக்கூற்றுப் புறச்

† இது முதல் இக்குறியீவரும் வரை பாஷ்யம்.

சமயத்தவரெனக் கொள்க. அவரெல்லாஞ் சித்தாந்தசைவத்தோடொப்ப "ஏகனேக னிருள்கரும மாயையிரண்" டென்னு மாறுபதார்த்தங்களுங் கொள்ளாமையின், அவ்வறு வகைப் பதார்த்தங்களி னியல்பைக் கொளுத்தினுங் கொள்ள மாட்டாரென்பார், "புறச்சமயத் தவர்க்கிருளா" வென்றார். சங்கற்பநிராகரணத்திற் கூறப்படு மகச்சமயத்தவராகிய பாடாணவாதசைவர் முதலியோர் சித்தாந்த சைவத்தோடொப்ப ஏகன் முதலிய வாறு பதார்த்தங்கொண்டமையின், அவ்வாறு பதார்த்தங்கட்கும் பொதுவியல்பு சிறப்பியல்பு கூறுமாகமங்களின் றாற்பரிய மிதுவேயென் றெடுத்துக் காட்டிச் சித்தாந்தசைவப் பொருளுண்மையைக் கொளுத்திற் கொள்ள வல்லுநரென்பார், "அகச்சமயத் தொளியா" வென்றார். கொளுத்திற் கொள்ள வல்லுநரெனவே யகச்சமயத்தவருந் தாமே கொள்ளமாட்டாரென்பது கருத்தாகலிற் "சிவாத்துவிதாந்தத்துக்-குலவின ரளவளாவாக் கொள்கைய தாகி" யென்பதனோடு முரணாமை யறிக.

சிவாத்துவிதமாவது : நிமித்தகாரண பரிணாமவாதம். "சிவாத்துவி தாந்தத்துக் - குலவின ரளவளாவாக் கொள்கைய தாகியென" விருவா யெண்ணு முறைமைக்கணின்ற சுத்தசைவரை யொழித் தொழிந்த சமயத்தாரை யெல்லாம் விலக்கவே, சுத்தசைவ ரிந்நூல் கேட்டதுணையானே தாற்பரிய மினிதுணர்ந்து சித்தாந்தப்பொருள் கைக்கொள்வரென்பது பெறப்பட்டது. அத்துணை யணிமைய ராகலானன்றே சித்தாந்த சைவத்தைச் சாரவைத்தாரென்பது. இக்கருத்தறியாதார் "சிவாத் துவிதாந்தத்" தென்றமையிற் சிவாத்துவிதமாவது : இஃதிக்க ணெடுத்தோதப்படுஞ் சுத்தசைவம்போலுமென மயங்குப. நிமித்தகாரணமாகிய முதல்வன் மாயையோடுங் கூடி முதற்காரணமுமாய்ப் பரிணமிப்பனென்பதே சிவாத்துவித சைவர் கொள்கையென்க. இது சுத்தசைவர்க்கு ஏலாமையுமறிக.

இனித் தார்க்கிகர் முதலியோர் காட்சி முதலிய பிரமி
திக்குப் பொறி முதலியனவே பிரமாணமென்பர். பிரமா
ணம் பிரமேயப் பொருளாதல் செல்லாமையிற் பொறி முத
லாயினவு மேனைய போலப் பிரமேயமா யளந்தறியப்படும்
பொருளேயாகலின் அவற்றைப் பிரமாணமென்றல் பொருந்
தாது; மற்றுச் சிவஞானமுணர்த்த வுணர்வதாகிய வான்ம
சிற்சத்தியே அவர் பிரமாணமெனப் புகலுமிந்திரிய முதலிய
வற்றையு மளந்தறியும் பிரமாணமாம். பொறிமுதலியன வத
ற்கு வாயிலாதல் பற்றிப் பிரமாணமென்றுபசரித்துக் கூறப்
படுவனவே யாமென்பது சைவ சித்தாந்த மென்பார், "புக
லளவைக் களவாகி" யென்றார். சைவசித்தாந்தத்தி னெய்து
தற்கருமை கூறுவார் "பெருநூல் சொன்ன வறத்திறனால்
விளைவதா" யென்றார். எனவே, அஃதில்வழி விளையாதென்ப
தாம். "உடலுயிர் கண்ணருக்கனறி வொளிபோற் பிறி
வரு மத்துவிதமா" மாறு மேலுரைத்தாம். அத்துவிதமெ
ன்னுஞ் சொற்குப் பொருள் கூறுவார், "பிறிவருமத்துவித",
மென் றடைமொடு புணர்த் தோதினர். இஃதேனையோர்
கூறும் பொருள்போலன்றிச் சிறந்த தென்பார் "சிறப்பின
தா" யென்றார். வேதாந்தமுஞ் சித்தாந்தமும் வேறென்பா
ரை மறுத்துப் பலபொருள்படுஞ் சூத்திரத்தை யங்ஙனம்
படாமைத் தெளித்துரைக்கும் பாடியம்போல வேதாந்தத்
தைத் தெளித்துரைப்பதே சைவ சித்தாந்த மென்பார், மகு
டாகம முதலியவற்று ளோதியவாறே "வேதாந்தத் தெளி
வாஞ் சைவ சித்தாந்தத்திற" னென்றார். ஈண்டு வேதாந்த
மென்றது வேதத்தின்முடிபுகளாகிய வுபநிடதங்களை. வேதா
ந்த மெனப் பெயர் பெற்ற ஏகான்மவாத நூலையன்றென
வுணர்த்துதற்கு "வேதத் தலைதரு பொருளாய்" என விறு
தியினுங் கூறினாராகலின், அது கூறியது கூறலன்மையுணர்க.
திறன், பொது வுண்மையென்னும் வகை. இங்கு-இந்நூலின்
முதனூல் வழிநூல்களிற் "பொதுவுண்மை" யென வகுத்

றுக் கொண்டோதினும் எடுத்தோதாமையால், அவ்வகை தெரிவரிதாகலான் அது தெரியுமாறு "பொது உண்மை" யென்றெடுத்தோதிய நூல்களின் கருத்து ஈண்டுத் தெரியச் செய்தமென்பார், "சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றாம்" மென்றார். சைவ சித்தாந்த மென்றது, சுத்த சைவ முதலியவற்றிற் செல்லாமைப்பொருட்டு. †

முதலதிகரணமுடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனாணையின் வரும் என்றது.

எ-து. மே-ள். எ-னின். முதல்வன் அவ்வாறு உயிர்களோடியைந்து நின்று புணருற்பவஞ் செய்யுங்கால் உலகத்துக்குப்போல் அவனுக்குத் துணைக்காரண முதலியன வேண்டப்படுமோ படாவோ என்னும் ஐயப்பாட்டின்கண் முதல்வனது சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காய் முடிதலின் அவனுக்கு அவை வேண்டப்படா எனப் பிரமவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதற்று. இ-ள். வெ-டை.

ஈண்டு இருவினையென்றது முற்பிறவிகளினீட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக்கிடந்த புண்ணியபாவங்களை யென்க; எனவே, மாயையினுண்மையும் பெறப்பட்டது. இவை வேண்டப்படுதல்பற்றி முதல்வன் சுதந்திரத்திற்கு இழுக்கில்லை யென்பார் முதல்வனாணையின் வரும் என்றார்;

ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனாக்கினையாகலான்,

எ - து. வ து. எ - னின். ஆணையேயன்மையும் இருவினை பெற்றுக்கு என்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ - ள். ஒரு பட்டணத்தைப் புரக்கும் வேந்தன் பாடி காவற்றொழிலைக் களைகணுவாரொருவன்மாட்டு வைத்தாற் போல எல்லாவறிவு முதன்மை யநுக்கிரகங்களுடைய அம்முதல்வன் புனருற்பவத்தைச் செய்வதாகிய தனதாணையை அவ்விருவினைகண்மாட்டுவைத்து நடாத்துதலே முறைபாகலான் இனியிவ்வான்மாக்களுக்கு இருவினைமுதல்வனுணையின் வரும் என மேற்கொண்டது. எ - று.

முதல்வன் செய்யுஞ் செய்தியெல்லாம் உலகத்தோடொப்ப நிகழ்வனவாகலின் ஈண்டைக்கு அரசன் செய்தி உவமையாயிற்று.

பாடிகாவலாவது களைகணுவாரொருவனைக்கொண்டு வேந்தன் செய்விப்பதொரு தண்டத்தொழில் விசேடம். அது "கோடி காவனைக் கூறுத நாளெலாம், பாடி காவலிற் பட்டுக் கழியுமே." என்னுந் திருப்பாட்டானு மறிக. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறெல்லா முரைப்ப.

உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலி
னுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று.

எ - து. உ - ம். எ - னின், வினை உண்டென்பதற்கும் அதுவே உயிர்க்குப்பயனாய் வருமென்றற்கும் மேல் வினை பேறுமாற்றிற்கும் அது முதல்வனையின்றி யமையாமைக்கும் பிரமாணமென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். உள்ளதே தோற்ற எ - து. இல்லது தோன்றுதென்பது மேற்கூறிப் போந்தமையான் முன்உள்ளதாய புண்ணிய பாவமென்னும் இருகூற்றுச் சஞ்சிதவினையே தன் பயனாகிய இன்பத்துன்பங்களையும் அவை நுகர்தற்குரிய நிலைக்களமாகிய உடம்பினையுந் தோற்றுவிப்ப, உயிர் அவ்வுடலின் அணையும். எ - து. அவ்வின்பத் துன்ப நுகர்ச்சி சடத்துக்குக் கூடாமையிற் சித்தாகிய உயிரே அவ்வுடம்பிற் பொருந்தி அவற்றையநுபவிக்கும். முன்வினையை ஈண்டநுபவித்தொழிந்தால் மேலைக்கு வினையுண்டாமாறியாங்ஙனமெனின்? முன் செய் வினை உள் அடைவே உள்ளதாம். எ - து. முன் செய்த வினை அநுபவித்தற்கேதுவான முறைமையிலே மேலைக்கு வினையுளதாம். அற்றேல், அவ்வினையே பயனாக வருமெனவமையும் முதல்வன் எற்றுக்கெனின்? செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோல். எ - து. உழவர் செய்யுந் தொழிற்குத் தக்கபயனை விளைநிலம் விளைவிப்பதன்றி அத்தொழிறானே விளைவிக்கமாட்டாததுபோல வள்ளலவன் செய்வன். எ - து. உணவும் வித்துமாய்த் தொன்றுதொட்டு வரும் அவ்வினைகளை வள்ளலாகிய முதல்வனே அவ்வுயிர்கட்குக் கூட்டுவன். செயல் சென்று அணையா எ - து. அவ்வாறன்றி வினைதானே உயிர்கட்குப் பயனைப் வந்து பொருந்தமாட்டாது. எ - று.

வள்ளலென்றார், தற்பயன் குறியாது "வேண்டுவார் வேண்டிய" வாறே நல்கும் அருளுடைமை நோக்கி.

உள்ளடைவு உள்ளுதற்கேதுவாகிய அடைவென விரியும். ஏகாரம் ஏழாவதன்பொருட்கண் வந்தது. உள்ளுதல் ஈண்டநுபவித்தல்; அதற்கேதுவாகிய முறைமையாவன அநுபவித்தற்குத் துணைக்காரணமாகிய விருப்பு வெறுப்புக்கள் அவற்றின்கணுண்டாமாறு முன்னர்க் காட்டுதும்.

மேல் முதல்வனுக்கு வினை வேண்டப்படுமென்பதற்கு

அரசனை யுவமை கூறினார்; ஈண்டு வினை முதல்வனையின்றி யமையாதென்பது உணர்த்துதற்கு உழவுதொழிலை யுவமை கூறினாரெனக் கொள்க.

அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர் தாஞ்சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போ—லவ்வினையைப்
பேராம லூட்டும் பிரானி னுகராரே
லார்தா மறிந்தணைப்பா ராங்கு.

எ - து. உ - ம். எ - னின், இருவினை சடமாதலிற் சென்றணைப்பமாட்டாவாயினும் உயிர்கள் சேதனமாதலின் அவையே அவற்றது பயனை யறிந்து எடுத்துக்கொண்டு நுகரும் ஆதலால் எற்றுக்கு என்னுங் கடாவை யாசங்கித்து அதனை மறுத்து நுதலிற்று.

இ - ள். காந்த பசாசம்போல், எ - து. ஒருவனெடுத்து நேரொக்கப் பிடித்தவழி இரும்பினை வலித்துக்கொள்ளுங் காந்தம்போல-அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானில். எ - து. அவ்வினைப் பயன்களைப் பிறழாமல் நுகர்விக்கும் முதல்வனால்-அவ்வினைஞர் தாம். எ - து. அவ்வினைகளைச் செய்யும் ஆன்மாக்கடாம்—அவ்வினையைச் செய்வதனில் சென்று அவ்வினையை நுகராரேல் ஆர் தாம் அறிந்து அணைப்பார். எ - து. அவற்றைச் செய்தற்கு நிலைக்களமாகிய உடம்பின்கட் பொருந்தி அவற்றது பயனை அநுபவிப்பர்; அவ்வாறநுபவியாராயின், வேறே எவர்தாம் அவற்றையறிந்து கூட்டுவார்—ஆங்கு. எ - து. அறிவுஞ் சுதந்திரமுமின்றி மலத்தின் மறைப்புண்டு கிடக்கும் அப்பெத்தகாலத்து. எ - று.

ஒருவருமில்லையென்பதாம்.

ஆன்மாக்களுக்குத் தமக்கென அறிவின்மையானும் வினை சடமாகலானும், மாயை தாரகமாமத்தன்றி ஆற்றல் எனப் போந்தமையானும், முதல்வனே அறிந்தணைப்பனெனப்பாரி

சொடவானவை கூறுவார், பிராணிகராமெலவர்தா மறிந்தனைப்பாரென்பர். இது சொற்பொருட்பின்வருநிலை.

நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வா
ளலர்சோகஞ் செய்கமலத் தாம்.

ஏ-து. உ-ம். எ-னின். அவ்வினை ஆதியோ அநாதியோ ஆதியெனின் முன்பில்லது இடையே தோன்றுமென்பது சற்காரியவாதத்துக் கேலாது அநாதியெனின் ஒருவர் கூட்டவேண்டுவதில்லையென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினிற் களிம்பும் சொல்லின் புதிது அன்று தொன்மையே. எ-து. நெல்லின்கணுமியும் செம்பின்கட் களிம்பும் எக்காலத்துளவாயினவென்று ஆராய்ந்து சொல்லுங்கால் அந்நெல்லுஞ் செம்பும் உளவாயினவன்றே உள்ளனவன்றி இடையே வந்தனவல்ல; அதுபோல, வல்லி மலகன்மம் அன்று உளவாம். எ-து. மாயை மலம் கன்மமென்னு மும்மலங்களும் அநாதியேயுள்ளனவாம் ஆதலின் அலர் சோகம் பொன்வாள் செய் வள்ளலால் ஆம். எ-து. முன்னேயுள்ளனவாய தாமரைப்பூ அலர்தலும் கூம்புதலும் ஞாயிற்றினாற் செய்யப்படுமாறுபோல அவை தத்தங் காரியங்களைச் செய்தல் முதல்வனாலேயாம். எ-று.

இஃதெடுத்துக்காட்டுவமை.

புதிதன்றென்பதனைத் தனித்தனி கூட்டுக.

தொன்மையினுள்ளவற்றைத் தொன்மை என்றுபசரித்தார்.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

மாயை இறைவனுக்குப் பரிக்கிரகசத்தியாகலின், வல்லி யென்றார்.

வினைக்குத் தொன்மை கூறுவார் இனம்பற்றி மாயை மலங்களுக்குந் தொன்மைகூறினார்.

மூலமலத்தின் காரியம் மோகம், மதம், இராகம், கவலை தாபம், வாட்டம், விசித்திரம் என எழுவகைப்படும். இவை முறையே மயக்கத்திற்கேதுவாதலும், மதித்தற்கேதுவாதலும், ஆசைபிறத்தற்கேதுவாதலும், கவலுதற்கேதுவாதலும், தபித்தற்கேதுவாதலும் வாடுதற்கேதுவாதலும், நானாவித ஹேதுவாதலுமாம். இருவினையின் காரியம் இன்பதுன்ப முதலாயின. மாயையின்காரியம் தநுகரணமுதலாயின. வள்ளலாமெனவே திரோதான சத்தியது உண்மையும் பெற்றாம். அது பாகம் வருவித்தற் பொருட்டு மலத்தின்வழி நின்று போகமுதலியவற்றைத்தொழிற்படுத்துவதாகிய சிவ சங்கற்பத்திற்கேதுவாதல்பற்றி மலமென்றுபசரித்துக் கூறப் படும். இவ்வாறு மல கன்ம மாயை திரோதானம் மாயாகாரி யமென்னும் ஐவகைப்பாசமுங் கண்டுகொள்க.

இவற்றுள் மாயை சுத்தமாயை அசுத்தமாயையென் றிருவகைப்படும். இவ்விரண்டனுட் சுத்தமாயையின் காரியமே அசுத்தமாயை யென்பாரும், சுத்தமாயைபோல அசுத்தமாயையும் அநாதியேயாமென்பாரும், ஒன்றுதானே ஊர்த்துவமாயை அதோமாயையென இருவகைப்படுமென்பாரும் எனப் பலதிறத்தர் ஆசிரியர். இனி முதல்வனது கிரியாசத்தியே சுத்தமாயையெனப்படுமென்பாருமுளர். அது முதல்வனுக்குத் தாதான்மியசத்தியாகலிற் பரிக்கிரகசத்தியாகிய சுத்தமாயையாதல் யாண்டையதென்றொழிக. சுத்தமாயையி னின்றும் பஞ்சகலைகளும் நால்வகைவாக்குஞ் சிவதத்துவமை ந்தும் சுத்தகாலமுதற் சுத்தநிலமீறாகிய முப்பத்தொன்றுந் தோன்றும். அசுத்தமாயையினின்றும் அசுத்தகாலமுதல்

அசுத்தநிலமீறாகிய முப்பத்தொரு தத்துவங்களுந் தோன்றும். இந்தத் தத்துவங்களெல்லாம் பொதுவுஞ் சிறப்பும் பொதுச்சிறப்புமெனத் தனித்தனி மூவகைப்பட்டு உயிர்கடோறும் வெவ்வேறாவாம். "புவன வடிவாகிய தத்துவங்கள் எல்லாருக்கும் பயன் றருதலின் பொது. சூக்குமதேக வடிவாகிய தத்துவங்கள் தனக்குப் போகநுகர்தற் கருவியாதலின் சிறப்பு. தூலதேகவடிவாகிய தத்துவங்கள் தனக்குப் போக நுகர்ச்சிக்கும் சந்தனம் பூமாலைபோல மனைவி முதலியோர் அநுபவிப்பவும் படுதலின் பொதுச்சிறப்பு.

*இனி ஏகான்மவாதிகளு ளொருசாரரான மாயாவாதிகண் மாயையாவது மெய்ப் பொருளென்றுஞ் சொல்லப்படாது, பொய்ப்பொருளென்றுஞ்சொல்லப்படாது, அநிருவசனமாய் நிற்பதொன் றெனவும், அற்றாதலினன்றே மாயை யெனப் பெயர்பெற்றதெனவும், அத்தன்மைத்தாகிய மாயையிற் சித்தாகிய பரப்பிரமங் கண்ணாடியி னிழல்போல அத்தியாசமாய்த் தோன்று மெனவும், அங்ஙனந்தோன்றிய வழிப் பேய்த்தேர் நீராகவுங் கயிறு பாம்பாகவுந் திரிவுகாட்சியாற் காணப்படுமாறுபோல அத்தோற்ற மண்புன லனல் கான் முதலிய பிரபஞ்சமாய்க் காணப்படு மெனவும், இங்ஙனமாதலிற் சித்தினுடைய விவர்த்தனமே சகமெனவுங் கூறுவர். மெய்ப்பொருளு மன்றிப் பொய்ப்பொருளுமன்றி நிற்ப தொன் றுண்டென் றெடுத்துக் காட்டுதற்கொரு பொருளின்மையின், வழியளவைக் கேலாமையான் வழியளவைக் கேலாதாகவே யுரையளவைக்கு மேலாதாகலானும், பேய்த்தேரிற்றோன்று நீர் மாத்திரையே யசத்தியமாவதன்றி யுள்பொருளாய்த் தோன்றுவதாகிய பேய்த்தேர் அநிருவசனமாகாமையின் அஃதீண்டைக் கெடுத்துக் காட்டாதல் செல்லாமையானும், மாயை யநிருவசன மென்பது ஒரு சமயத்தார்க்குங் கொள்கை யன்மையானும், அஃதொன்றாகவை

* இதுமுதல் இக்குறிவரும்வரை பாஷ்யம்.

த்து மறுக்கற்பாற் றன்றென் றொழிக. அல்லதூஉம், விவர்த்
தனவாதிகள் ஒன்று பிறிதொன்றுபோலத் தோன்றுதல்
விவர்த்தனமென்பர். அஃதசத்தியமேயாம். பிரவஞ்சஞ்
சத்தியமென்பது காட்சி முதலியவெல்லா வளவைகளானுந்
துணியப்படுதலின், அத்தன்மைத்தாகிய பிரவஞ்சஞ் சித்தி
னுடைய விவர்த்தனமாமாறியாண்டையதென்க. இதனா
மாயை யசிருவசன மன்றென்பது தெற்றென வுணர்க. மா
யை யசிருவசனமாயின், அதன் காரியமாகிய பிரவஞ்சஞ்
சூனியமாதல் வேண்டுமாகலா னென்பது.

அற்றேல், பிரவஞ்சஞ் சத்திய மென்றதற்குப் பிரமா
ணமென்னை? காட்சியே பிரமாணமெனின்,—அற்றன்று;
காட்சியனே நிகழ்காலத்துப் பிரவஞ்சஞ் சத்தியமென்றுணா
ரப்படுமாயினு முக்காலத்தினு மொருதன்மைத்தாகிய சத்திய
ப்பொருள் பிரவஞ்சமென்பது அதனானுணரப்படாமையின்.
அன்றியுங் காட்சியளவையான் இது குடம் இஃதாடையென
விதிமுகத்தாற் காணப்படுவதன்றி, இஃதாடையன்று இது
குடமன்றென மறுதலைமுகத்தாற் காணப்படாமையின், அ
ன்மையாத லுணர்ந்தன்றிப் பேதந் தோன்றாமையின், பே
தப்பிரவஞ்ச முண்மைக்குக் காட்சியளவை பிரமாணமன்று.
அற்றேல், ஆடை குடத்தின் வேறு குடமாடையின் வேறு
என்னுங் காட்சியெல்லார்க்கு மொப்ப முடிந்ததாகலிற் பே
தப் பிரவஞ்ச வுண்மைக்குக் காட்சியளவை பிரமாணமன்றெ
ன்றல் பொருந்தாதெனின்? அற்றன்று; அத்தன்மைத்தா
கிய காட்சி சவிகற்பமாகலின், சவிகற்பமெல்லா மயக்கமா
லாமென்க. பேதப்பிரவஞ்சவுண்மைக்குக் காட்சியளவை
பிரமாணமின்றாகவே, அவினாபாவமாகிய வேதுவுணர்தற்
கிடமின்மையின், வழியளவை பிரமாணமன்று. அவ்விரண்
டிற்கு மாறுபாடாகிய பொருளினுகமவளவையும் பிரமாணா
மாகாதென்க.

இன்னும், இஃதிதனின் வேறென்னுஞ்சவிகற்பகக்காட்சி பிரமாணமென்பார்க்கும் அபேதவுணர்வு நிகழ்ந்தன்றிப பேதவுணர்ச்சி நிகழாது; எய்தியதற்கன்றி விலக்கின்மையின். அங்ஙனமாகவே, முற்படத்தோன்றும் அபேதவுணர்ச்சி பிரமாணமென்பதொருதலையாகக் கோடல் வேண்டும். வேண்டவே, பிற்படத் தோன்றும் பேதவுணர்ச்சி யதனை யவாய் நிற்றலிற் பிரமாணமாகாமையறிக. அபேதவுணர்ச்சி காட்சி யளவையானே பெறப்படுதலின் குடமாடையின் வேறன்று; திரவியமாகலால், ஆடைபோலுமென்னு மனுமானமும், வேற்றுமையின்றிக் கூறும் வேதவாக்கியங்களும், அதற்குப்பிரமாணமாமென்க. ஆகவே, மண் வளி தீ நீர் முதலியனவாக நீ வேற்றுமைபடக் கூறும் வாக்கியங்களெல்லா மிவ்வளவைகளோடு முரணுதலின், உபசாரமேயன்றிப் பொருள் படாவென்பது கண்டுகொள்க. இங்ஙனம் பேதவுணர்ச்சிக்குப் பிரமாணமின்மையிற் பேதப் பிரபஞ்சமாகிய பிரமேயமின்மையுந் தானே போதரும். அவ்விரண்டு முளவெனக் கொள்ளினும், பிரமிதிக்கும் பிரமேயத்திற்குஞ் சம்பந்தமென்னை? தாதான்மியமோ? காரணகாரியத் தன்மையோ? சையோகமோ? சமவாயமோ? வேறொன்றோ? எனக் கடாயினார்க்குத், தாதான்மியமாவது ஒன்றுதானே யொருவாற்றானிருவகைப்பட்டுப்பிரிப்பின்றிநிற்றற் குரித்தாதலாகலின், அத்தன்மைத்தாகிய தாதான்மிய சம்பந்தங் குடஞானத்திற்குங் குடத்திற்கு முண்டெனின்,—குடஞானம்போலக் குடமுமகத்தின்கண்ணதாதல் வேண்டும், குடம் புறத்தின் கண்ணதாகலுங் குடஞானமகத்தின் கண்ணதாகலு மெல்லார்க்கு மொப்பமுடிந்தமையின், அவற்றிற்குத் தாதான்மியங்கூறல் பொருந்தாமையானும், காரண காரியத் தன்மையே சம்பந்தமெனின்? காரணகாரியங்களி னொன்றுள்வழி யொன்றின்றுதல் பொருந்தாமையின், கனவின்கட் குடஞான முதலிய வுணர்வுண்மையின், குடமுதலியனவு மாண்டுளவாதல் வேண்

டும். அஃதின்மையானும், விடயமும் விடயிப்பதுமாந் தன்மை சம்பந்தமெனின்? விடயமாவதிதுவென்றறிய வாராமையானும், சம்பந்தமே பெறப்படாமையின், பேதப் பிரபஞ்சம் பிரமிதிக்குப் புலனாகாமையானும், பிரபஞ்சம் அசத்தியப்பொருளே யாகலான், அதற்றிற்குக் காரணமாகிய மாயையநிருவசன மென்றல் பொருத்தமுடைத்தென்று, இங்ஙனமாயாவாதிகள் கடாவிடைகளாற் சாதிப்பாராகலின், ஆன்டி-பூக் கென்னை யெனின்? கூறுதும்.

பிரபஞ்சஞ் சத்தியப் பொருளென்பதற்குக் காட்சியளவையே பிரமாணமாம். கயிற்றை யரவெனக் காணுந் திரிவு காட்சியிற்போல மாசறு காட்சியின் வேறுபடுதலின்மையின், கேழ்காலத்திற் கண்டது முக்காலத்தினு மொக்குமாகலானும், நிருவிகற்பக் காட்சியின் விதிமுகத்தாற் பேதமறியமாட்டாதாயினுங் குற்றியோ மகனோ வென்னுமையத்தின் பின்னர் இது குற்றியே மகனன்றென வெதிர்மறைமுகத்தாற் பேதமுணர்வு காட்சிக்குப் புலப்படுதலானும், திரிவுகாட்சியிற் கயிறு பாம்புபோலவு மாலைபோலவு மொவ்வொருவர்க் கொவ்வொரு காலத்திற்றோன்றும்; அதுபோலன்றி மாசறுகாட்சியின் எல்லார்க்கு மெக்காலத்துங் குடங் குடமேயாய்த் தோன்றுதலல்லது வேறுபடத் தோன்றாமையிற் சவிகற்பக் காட்சி பிரமாணமே யாகலானும், அன்றியுங் கயிற்றுக்கு மரவிற்குங் கோணி நீண்டு கிடத்தன் முதலிய விலக்கண வொப்புமையா னொன்றையொன்றாகத் திரியக் காண்டல் பொருந்தும்; அதுபோலச் சித்தாகிய பிரமத்தைக் குடமுதலிய பொருளாகத் திரியக்காண்டற்குத் தம்மு ளொப்புமையின்மையின் அதனை யவ்வாறு திரிவுகாட்சியென்றல் பொருந்தாமையானும், சவிகற்பக்காட்சிக்கு நிருவிகற்பக்காட்சி காரணமாகலிற் காரணத்துள்ளதே காரியத்தினு முண்மையாற் பெயர் சாதி குண முதலிய பேதவுணர்ச்சி நிருவிகற்பக் காட்

சியி னின்றுபிற் சவிகற்பக் காட்சியினு மின்றாய் முடியுமாக
லின், நிருவிகற்பக்காட்சியினுஞ் சூக்குமமாய்ப் பேதந் தோ
ன்று மாகலானும், அதுபற்றி யெய்தியதற்கே விலக்காகிற்
பேத முணர்ந்தன்றிப் பேதமின்மை யுணர்தல் கூடாமையின்
அபேத ஞானமும் பேதஞானத்தை யவாவி நிற்றலின்,
அபேத ஞானமுற்படத் தோன்றுதல்பற்றிப் பிரமாணமெ
ன்றல் பொருந்தாமையானும், ஆடை குடத்திற்கு வேறெ
ன்றற் றொடக்கத்துப் பேதவுணர்ச்சி முக்காலத்தினும் வேறு
படாமையின், ஆடை குடத்தின் வேறன்றென்றற் றொடக்
கத்து அபேதவுணர்ச்சி யெதிர்காலத்தின் வேறுபடுதலின்,
வேறுபடாமையும் வேறுபடுதலும் பற்றியே பிரமாணமென்
றும் அப்பிரமாணமென்றுங் கோடல் பொருத்தமுடைத்தா
கலானும், காட்சியளவையே பேதவுணர்ச்சிக்குப் பிரமாண
மாதலறிக. ஆகவே, அபேதஞ் சாதித்தற்கு முற்கூறிய
வனுமானமும் போலியாயவாறு காண்க.

அங்ஙன மல்லாக்கால், அவ்வனுமானத்தானே ஆடை
யெடுக்கச்சென்றான் குடத்தையெடுத்து வருதல் வேண்டு
மென்றொழிக. இதனானே யபேதங்கூறு மாகமங்களு முப
சாரமென்பது கண்டுகொள்க. இன்னும் பிரவஞ்ச மித்தை
யெனத் துணிவதற்குக் கொண்ட பிரமாண மெய்யோ? பொ
ய்யோ? எனக் கடாயினார்க்கு, மெய்யெனிற் பிரவஞ்சத்துட்
பட்ட பிரமாண மெய்யெனவே யம்முறையாற் பிரவஞ்சமு
மெய்யேயாம். பொய்யெனிற் பொய் பிரமாண மாகாமையிற்
பிரவஞ்ச மெய்ப்பொருளென்பது தானே போதரும். அற்
றேல், பிரமிதிக்கும் பிரமேயத்திற்குஞ் சம்பந்த மென்னை
யெனின்? அறியப்படுவது மறிவது மாகிய விடய விடயித்த
ன்மையே சம்பந்தமென் றுணர்க. விடய விடயித் தன்மை
சம்பந்த மன்றென்னையாயின்: நீ பிரவஞ்ச மித்தை யென்
றுணரு முணர்விற் கதுவிடய மாகாமையிற் பிரவஞ்சமித்தை
யன்றெனப்பட் டுனக்கே வழுவாமென் றொழிக.

அற்றேல், விடயமாவதியாதெனின்? எவ்வுணர்வு நிகழ்ந்துழியெப்பொருள் விளங்கும் அஃததற்கு விடயமென்க, விளங்குதல் விளங்குதற் குரிமையாதல். ஆகவே, இங்ஙனங் கூறியவாற்றாற் பிரமாணமுஞ் சம்பந்தமு முண்மையிற் பிரமேயமாகிய பிரவஞ்ச மெய்ப்பொருளே யாகலான் அதற்கு முதற்காரணமாகிய மாயையு மெய்ப்பொருளாவதன்றி யநிருவசனமாதல் பொருந்தாமை யறிக.

இனி வேதத்துளோரிடத்தும் பிரமப்பொருளை "உபாதான" மென்னுஞ் சொல்லா லெடுத்தோதக் காணாமையால், பிரமம் பிரவஞ்சத்திற்குப் பரமாதார வியாபக நிமித்தமென்பதே வேதத்துக்குங் கருத்தாமென்க. இன்னும், அவ்வம்முதற் காரணங்களின் குணமெல்லா மவ்வக்காரியங்கட்கு முளவென்பது நியமமாதலின், சித்தாகிய பிரமத்திற்றோன்றிய பிரவஞ்சமுஞ் சித்தாதல் வேண்டுமன்றிச் சடமாதல் பொருந்தாதெனக. அற்றேல்; பாலினுண்டாகிய தயிருக்குப் பாலின்குணமு நெல்லினுண்டாகிய பதர் பலாலங்கட்கு நெல்லின் குணமுங் கொம்பி னுண்டாகிய புல்லுக்குக் கொம்பின் குணமுஞ் சிலம்பியி னுண்டாகிய நூலுக்குச் சிலம்பியின் குணமுங் கோமயத்தினுண்டாகிய தேளுக்குக் கோமயத்தின் குணமுங் காணாமையின், காரணத்தின் குணமே காரியத்திற்குங் கோடுமென்னு நியமம் பொருந்தாதாலெனின்? அற்றன்று; ஒன்றன்குண மொன்றற்காதலின்மையின், காரணத்தின் குணமே காரியத்திற்கு மென்பதற்குத் தாற்பரியம், காரணத்தின் குணங்களோ டொத்த குணங்களே காரியத்திற் குளவாதலன்றி யவற்றிற்கு மறுதலையான குணங்க ளுளவாகாவென்பதேயாமாகலான், ஈண்டெடுத்துக்காட்டியவற்று ணியமத்துக் கிழுக்கின்மையறிக. சிலம்பியி னூல் வருவதற்குச் சூக்குமகாரணஞ் சிலம்பி வயிற்றினுண்மையானுங் கோமயத்திற்றோன்றியது தேளினுடம்பேயாகலானும், இன்னோரன்ன

வையெல்லாம் பிறவிப்பேதமாகலானும், ஆண்டையப்பாடின்மை கண்டுகொள்க.

ஈண்டுக் கூறியவாற்றான் மாயையே பிரபஞ்சத்திற்கு முதற்காரணமென்பதூஉம், அதற்குத் தாரகமாய் விரவிநின்றதிட்டித்தலான் முதல்வ னிமித்த காரணமே யாவனென்பதூஉம், துணிபொருளாயினமை காண்க. "மாயையான் விசேடிக்கப்பட்டு விசிட்டனாய் நின்று முதல்வனு முதற்காரணமாம்" என்ற நீலகண்ட வாசிரியரும் பரந்து சென்றுமுடிவின்கண் இவ்வாறு கோடலே சித்தாந்தமாக வலியுறுத்தினர். அது சென்மாதிகரணத் திறுதியிற் சிவாதித்தியமணிதீபிகையினுங் காண்க.

அற்றேல், "பிரமத்தையுணர்ந்தோன் எல்லா முணர்ந்தோன்" என்றற் றொடக்கத்து வேத வசனங்கள் பயப்பாடிலவாமெனின்: உடையானியல்புணர்ந்தவழி, உடைப்பொருளான உயிர் மாயை கன்மங்களும் அவ்விலக்கணத்து ளகப்பட்டு வியாப்பியமாய் நிற்றலின், அவையு மினிது விளங்கு மென்பது அவற்றிற்குப் பொருளாதலின், பயப்பாடுடையனவேயாமென்க. நான்மணிமாலையில், "நுரையுந் திரையு நொய்யுறு கோட்டும், வரைவில் சீகர வாரியுங் குரைகடற் பெருக்குஞ் சிறந்தும் பிறங்குவ தோன்றி, யெண்ணிலவாகி யிருங்கட லடங்குந் தன்மைபோலச் சராசர மனைத்து, நின்னிடைத் தோன்றி நின்னிடை யொடுங்கும்" என்றது, முதல்வன் மாயைக் காதாரமாய் நிற்றல் பற்றி யாகலின், ஆண்டையப்பாடின்மை யறிக. இது கிழங்கினின்றுந் தோன்றுந் தாமரையைப் பங்கசம் என்பது போல்வதோ ருபசார வழக்கெனக் கொள்க. மாயைக்குத் தாரகமாய் நிற்றல்பற்றியே யவ்வாறுரைத்ததென்ப துணர்ந்து கோடற்கே, நீரிற் றோன்றியொடுங்கு நுரை முதலியவற்றை நீர்க்கிடனாகிய கடலிற் றோன்றியொடுங்குதல் போலென் றுவமை கூறினாரென்க.

கடலென்றது-நீர்க்கிடங் கொடுத்து நிற்கு மாகாயம். இன்ற திருத்தாண்டகத்தும் மீண்டும் "இருநிலனாய்த்தீயாகி யெமக் மடிக ணின்றவாறே" என்பது முதலாக எழுந்த தமிழ்வேத திருவாக்குக்களும், "அறிவானுந் தானே யறிவிப்பான் றானே, யறிவா யறிகின்றான் றானே—யறிகின்ற, மெய்ப் பொருளுந் தானே விரிபொழில்பா ராகாய, மப்பொருளுந் தானே யவன்" என்னும் அம்மை திருவாக்கும், உலகெலா மாகி வேறா யுடனுமாய் முதல்வன் நிற்றல்பற்றியாகலின், ஆண்டாசங்கை யின்மையுங் கண்டுகொள்க. இதனானே, அபேதங்கூறும் வசனங்களு முபசாரமேயன்றி யுண்மையன் றென்பது கண்டுகொள்க. இவ்வாறன்றி முதல்வன் மாயை போல முதற்காரணமாவனெனின்? அது மேற்கூறிய குற்ற ங்கட் கிடனாதலன்றியு "நிருவிகாரி" யென்னுஞ் சுருதிகளோ டு முரணுதலு முடைத்தென்க. இங்ஙனங் கூறியவாற்றால் "காரிய காரணங்கண் முதறுணை நிமித்தங் கண்டாம், பாரின் மண் டிரிகை பண்ணு மவன்முத றுணைநிமித்தந், தேரின் மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக, வாரியன் குலால னாய்நின் றாக்குவ னகில மெல்லாம்" என்னு மத்துவித சைவ சித்தாந்த வழக்கே சுருதி யுத்தி யனுபவ மூன்றற்கு மேற்ற தாய் உண்மைப் பொருளை வலியுறுத்தற் குரிய மெய்ப் பிரசங்கமா மென்றறிந்துகொள்க.

அற்றேலஃதங்ஙனமாக; நிமித்தகாரணனாகிய முதல் வன் முதற்காரணமாகிய மாயைக் காதாரமாவனாயின், உவமப் பொருளாகிய குயவனு மண்ணுக்காதாரமாதல் வேண்டுமா லெனின்? அறியாது கடாயினாய். உவமமெல்லாமொருபுடை யொத்தலேயன்றி முழுவது மொத்தலின்று. முழுவது மொக்குமென்பாரை முதல்வனுக்குரிய வியாபக முதலிய குணங்களுங் குயவனுக்கு முளவாதல் வேண்டுமெனக் கடா யினார்க்கு விடை யென்னையெனக் கூறிமறுக்க. ஒருபுடை

யொத்தலானன்றே யொருபொருளுக் கோரோ ரியல்புபற்றி வேறுவேறுவமை கூறியதூஉமென்க. அற்றேல், இவ்வியல் பிற் குவமை யாதோவெனின்? நன்றே கடாயினாய். குழவி யுடம்பின் முதற்காரணமாகிய வுதிரசுக்கிலங்களுக் காதார மதற்கு நிமித்தகாரணமாகிய தாய் தந்தை யாதலுஞ் சிலம்பி நூலின் முதற்காரணத்துக் காதார மதற்கு நிமித்தகாரண மாகிய சிலம்பியாதலு மறிந்தாயன்றே? இவ்வாறு பலவுள வெனக் கொள்க.

ஆதிபகவனாகிய முதல்வன் எள்ளினெய்போலப் பசு பாசங்களிற் கலந்து நீக்கமற ஔபச்சிலேடிக வியாபகமாய் நிற்குமியல்பினனாதலின், அவன் பிரபஞ்ச காரியமியற்றுதிய ற்றுதற்குக் குலாலனை யங்ஙன முவமையாகக் கூறுதல் கருத் தாவாதன் மாத்திரைக்கேயன்றி வேறில்லையென்பது தெரி ந்துகொள்க. இயற்றுதியற்றுதலாவது, கரணத்தானன்றிச் சங்கற்பமாத்திரையாற் செய்தலாம், மற்றுக்குலாலன் சங்க ற்பத்தானன்றிக் கரணத்தாற் காரியஞ் செய்யும் வினைமுத லாகலின் சங்கற்பத்தாற் காரியஞ்செய்பு மாதி பகவனுக்குக் கருத்தா முறைமையினுஞ் சிறிதொப்புப்பற்றியே யுவமமாகின் றானென் றுணர்க. ஈண்டுச் சங்கற்ப மென்றது, வியாபக சிற்சத்தி[illegible]தப் பிரேரகத்தினை. கர்த்திருத்துவமங்ஙன மிருவகையாமாறு............என்னும் பௌட்கராகம வசனத் தானறிக.

இறைவனெள்ளினெய் போலப் பசுபாசங்களிற் கல ந்து நீக்கமற ஔபச்சிலேடிக வியாபகமாய் நிறைந்து நிற்கு மென்னு முத்துவித சைவ சித்தாந்த திருவசனவுரையை, இக் காலத் தோன்றும் வாதிகளுளொருசாராருட்பட்டார், எள்ளி னெய் தோலிடையுற்றுப் பிரிந்திருக்கக் காண்டலின், உவமே யமா முதல்வனு மொன்றனிடை யீடுற்றுப் பிரிந்து வியாபக மாகுங் கொலென் றாசங்கை நிகழ்த்துவர். ஒரு பொருட்

கொரு பொருளாவும் மாதலொருபுடை யொத்தல்பற்றியே
யென்பது மேற்கூறினுமாகலின்; அங்ஙனமாசங்கித்து இவ்
வுமை யிலக்கணமறியார் கூற்றேயாமென்றொழிக. பசுபாசங்
களின் முதல்வன் கலந்து நீக்கமற வியாபகமாய் நிற்றற்கு
எள்ளினெய்யை யுவமானமாகக் கூறுவது, நெய் எள்ளில்
உள்ளும் புறம்புமாய்க் கலந்திருத்தல் பற்றியேயன்றிப் பிறி
தில்லையென்க. இங்ஙன மாசங்கிப்பார் ஆவிரம்பூப் பொன்
னோடொக்கு மென்றவழி யஃதுருக்கியடித்து நீட்டவும் படு
ங்கொலெனவும், இவனுதல் பிறைமதி போலு மென்றவழிக்
குறைதலும் வளர்தலும் வானறியங்குதலு மென்றினையவும்
இவனுதற் குளகொலெனவு மாசங்கிப்பாராகலின், அவை
யவர் வெள்ளறிவு வியாபாரமாமென் றொழிக்கப்படுவன வல்
லது மறுத்தற் கேற்பன வல்லவென் றறிக. ஈண்டுக்குறை
தல் மறைதலும் வளர்தல் வெளிப்படுதலுமாம், இன்னும்,
அவர் பசுபாசங்கண், மெய்ப்பொருளென்பார் முதல்வன் வி
ய பகத்துக்கு நானதை கூறுபவராவர். யாதினாலெனின்? பசு
பாசங்களுள்ள விடங்களின் முதல்வனிருப் பிடையறவுற்று
அவன் வியாபகங் குறைவுறுதலா லென்றிங்ஙன மாசங்கை
நிகழ்த்தாநிற்பர், இன்னோரன்ன வாசங்கைகளை அவர் பிரா
கிருத அவயவ கண்டப் பொருட் பற்றியே நிகழ்த்துகின்
றார். என்னை? அவயவமுடைய கண்டப்பொருளன்றி நிரவ
யவவகண்ட சச்சிதானந்தப் பொருள் மற்றொன்றானிடை
யறவுற்றுக் குறைவுறா தாதலானென்க. ஆதிபகவனாகிய
விறைவ னிரவயவகண்ட சச்சிதானந்த முதற்பொருளாத
லின், அவன் அநாதியே தன்போல நித்தியமாய்த் தனக்கு
வியாப்பியமான சிதசித்துக்களில் யாண்டுங்கலந்து நீக்கமறத்
தன்பூரணத்திற்கு நானதையாதுமின்றி யவையே தானாய்
நிற்கும் பெற்றியுடையனா மென்க. இனி அப்பெற்றி யுயிர்
களா லிற்றென வறியவு மோதவும் வாரா சொல்லுயாம்,
அற்றாகலினன்றே சுருதிகளுமவன் சொரூபவியல்பு

மனசாதீத மென்றும்" "அநிர்த்தேசியம்" என்று மிங்ஙன மெடுத்து முறையிட்டோய்ந்தன வென்பது. "வாக்கு மன ங்கழிய நின்ற மறையோனே" என்னுந் தமிழ்வேதமு மக் கருத்தேபற்றி யெழுந்தது. வளி தீ நீர் நில மெனவொன்றற் கொன்று தூலமாகி நிலைபெறும் பூதங்களுணிற்குஞ்சூக்கும பூதமான வாகாய மிடங்கொடுத்து வியாபகமாய் நிற்கும் பெ ற்றியே மக்கட் குற்றறிதற் கரிதாய நுண்பொருளாம். ஆன யின், நிரவய வவகண்ட சத்தாயுஞ் சித்தாயு மானந்தமாயு நிற்கும் பரப்பிரமமுதற் பொருள் பசுபாசங்களுக்கு அந்தரி யாமியாயும் வியாபியாயும் பூரணமுற்று நிற்குஞ் சொரூபவிய ல்பை, மாயா தனுகரணங்களாற் கட்டுற் றவற்றி னுபகாரத் தானுஞ் சுத்த மாயா நாத விருத்தி காரிய சத்த சமூகமான வேதமுதலிய கலையறிவு மின்மினி விளக்கதுதானுஞ் சிறிது றிவு விளங்கி, அங்ஙனம் விளங்கிய சிற்றறிவு மாத்திரையா னே, நாம் பிரமமென்று தருக்கி, இறைவன் றிருவருட்கபு லாய்க் கேவலமுற்றுழலும் பசுபோதப் புல்லறிவுபிர்கள், நா மறிந்தாமென் றுருப்படுதலும், பசுபாசங்கள் மெய்ம்மொ ருளாயின் அவற்றினிருப்பான் முதல்வன் வியாபகத்திற் கிடையறவு முட்டுற்று நுனைதை புகுதருமென்று பாண்டித் தியம்போல அபிநயித்துக் குதர்க்க நிகழ்த்தலும், புல்லறிவு முதிர்ச்சியாவதல்லது மற்றியாதுமென்க.

மலர்தலை யுலகத்துச் செவிப்புலனுமோசை எழுத்தோ சை யெனவும், இசையோசை யெனவும், இருவகைப்படும். இவற்றுள் எழுத்தோசை விந்துமுதற் காரணமாக அதனினி ன்றும் விருத்தியாய்த் தோன்றிச் செவிப்புலனாவது. இசை யோசை ஆகாய முதற்காரணமாக அதன்கட்டோன்றிச் செ விப்புலனாவது; வடநூலார் எழுத்தோசையை வர்ணாத்மக சத்தமென்றும், இசையோசையைத் தொனியாத்மக சத்த மென்றுங் கூறுப. சத்த தன்மாத்திரையின் காரியமாகிய

வாகாயமே சத்தத்திற்கெல்லாங் காரணமாகலின், எழுத்தோசைக்கு வேறுகாரணமாமாறென்னையெனின்? அற்றன்று; ஆகாயமெழுத்தோசையைப் புலப்படுத்துவதாகிய விசையோசைக்குக் காரணமாவதன்றி அதனாற் புலப்படுவதாகிய வெழுத்தோசைக்குக் காரணமாகாதென்க. ஒளியுமுருவமும் போலப் புலப்படுப்பதும் புலப்படுவதுமாகிய விசையோசைக்கும் எழுத்தோசைக்குந் தம்முள் வேற்றுமை அனுபவத்தின் வெளிப்படத்தோன்றுதலானும், கடலோசை முதலாயின வெழுத்தோசையின் வேறாதல் எல்லார்க்குமொப்ப முடிந்ததாகலானும், அவ்விரண்டன் காரணமும் வேறென்பது துணியப்படுமென்க. இன்னும், அங்காப்பு முதலிய அகமுயற்சியாற் புலப்படுவது எழுத்தோசையெனவும், அதனைப் புலப்படுப்பதாய் எடுத்தல் படுத்தல் முதலிய புறமுயற்சியாற் பிறப்ப திசையோசையெனவும், தம்முள் வேறுபாடு தெரிந்துணர்ந்துகொள்க.

“மா வென்ப தொடுங்குதல் யாவென்பது வருதலாகலின், எல்லாக் காரியங்களுந் தன்பால் வந்து ஒடுங்குதற்குந் தன்கணின்று தோன்றுதற்குங் காரணமாய் நின்றது மாயையெனப்படுமாகலான், ஒன்றற்கொன்று நுண்ணிதிற் செல்லுஞ் சூக்குமங்கட்கு முடிவிடமாய் நின்ற சூக்குமப் பொருள் யாது அதனை மாயையென்றலே பொருத்தமுடைமையறிக.

இனி முதல்வன் மாயைக் காதாரமாய் விரவி நிமித்தகாரணனாயினும், மாயையான் விசேடிக்கப்பட்டு விசிட்டனாய் முதற்காரணமுமாவனெனச் சிவாத்துவிதசைவர் கூறுவர். அது பொருந்தாது. என்னை? தோன்றி நின்றழியு முடம்பொடு கூடியவழி விகாரப்படுதல்பற்றி யுடம்பொடு விசிட்டனாய்நின்ற சீவான்மாவுந் தோன்றிநின்றழிவனென்பது பொருந்தும்; அதுபோல மாயையொடு விசிட்டனாய் முதல்வனு முதற்காரணமாமெனபார்க்கு, விசிட்டமாவது விசேடண

மும் விசேடியமு மவ்விரண்டினியையு மென்னு மவற்றின் வேறன்மையான் முதல்வனு மவ்வாறு விகாரியாதல் வேண்டப்படும். படவே, 'நிருவிகாரி' என்னுஞ் சுருதியோடு முரணுமாகலானென்க. விசிட்டமாவது அம்மூன்றற்கும் வேறெனக்கொள்வார்க்கு, முதல்வன் முதற்காரணமென்பதே பொருந்தாதாய் முடியுமென் றறிக. அல்லதூஉம், நிமித்தகாரணமே முதற்காரண மென்றெடுத்துக் காட்டுதற் கோர் பொருளின்மையின் அது வழியளவைக் கேலாமையானும், வழியளவையினும் ஆகமவளவைவலியுடைத்தெனின்? அற்றாயினும், வழியளவை யாகமவளவை யொடு முரணாதாகலானும், ஒரோவழி முரணுமாயின், அதுபற்றி யாண்டுந் துணிவுபெறாமையின், வழியளவை பிரமாணமன்றெனப்பட்டு, அதுபற்றியோதிய நிகமாகமவசனங்கள் பயனிலவாய் முடியுமாகலானும், நிகமாகமப்பொருள்கடம்முண் முரணுவன போலத் தோன்றியவழி யவற்றுள் வன்மை மென்மை யுணர்ந்து பொருள்கோடற்கு வைத்ததே வழியளவையாகலான் அஃததனோடு முரணுதல் பொருத்தமின்மையானும், அது விடையன்மை யறிக. இனி இவ்விரண்டும் பொருந்தாமையானும், வேறுவிடுக்குமாறின்மையானும், மாயையே முதற்காரணம்; அதற்குத் தாரகமாய் விரவிநின்றதிட்டித்தலான் முதல்வனு முதற்காரண மெனக் கோடல்வேண்டும், அங்ஙனங்கொள்ளின் விகாரியாதலின்மையான், முதல்வனு முதற்காரணமாமென்பது வாய்பாடுமாத்திரையே யன்றிப் பொருட்படாமையின், அஃது எமது அத்துவித சித்தாந்தமென்றொழிக.*

கன்மமும் *"நாசோற்பத்தி பண்ணிவருமாதலா லநாதி" என்பதுபற்றிப் பிரபஞ்சம்போலப் பிரவாகாநாதியென்பாரும், †"ஏக னநேக னிருள்கரும மாயையிரண்

* சிவப்பிரகாசம், பொது. ௧௬, நண்ணியிடு.
† திருவருட்பயன்,

டாகவிவை யாருகிபில்." எ - ம். "ஆணவ முதலன் றது போற் கருமமும்." எ - ம். ஒப்பு வோதுதல்பற்றி மூவகை வினைக்கும் முதற்காரணமாய மூலகன்மமொன்று அநாதிநித்த மாயுண்டென்பாரு மென்று இருதிறத்தராசிரியரென்க. இவ் வினை யீட்டப்படுங்கால், மந்திர முதலிய அத்துவாக்களிட மாக மனம் வாக்குக்காயமென்னும் மூன்றானீட்டப்பட்டு, தூலகன்மமாய் ஆகாமியமெனப் பெயர் பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறுஞ் சூக்குமகன்மமாய்ப் புத்திதத்துவம் பற் றுக்கோடாக மாயையிற் கிடந்து, சாதி ஆயுப் போகமென் னும் மூன்றற்குமேதுவாய் முறையே சனகந் தாரகம் போக் கியம் என்னு மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணிய பாவமென்னும் பரியாயப் பெயர்பெற்று, பின்னர்ப் பயன் படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என் னு முத்திறத்தாற் பலதிறப்பட்டு, பிராரத்தமெனப் பெயர் பெறும். ஆதிபௌதிகமாவது சடம் வாயிலாக வருவது. ஆத் தியான்மிகமாவது சடத்தோடு கூடிய சேதனம் வாயிலாக வருவது. ஆதிதைவிகமாவது ஒருவாயிலானன்றித் தெய்வந் தானே காரணமாக வருவது. இன்னும் இவ்வினைகள் உலகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என்று ஐவகைப்பட்டு ஒன்றற்கொன்று ஏற்றமுடைத்தாய், முறை யே நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளினடங்கி, அசுத்தம் மிச் சிரம் சுத்தமெனப்படும் போகங்களைப் பயப்பிக்குமென்ற றிக. உலகவினை : கூவல்தண்ணீர்ப்பந்தலாதியமைத்தல். வை திகவினை ; வேள்வியாதிசெய்தல். அத்தியான்மிகவினை : சி வபூசையாதி செய்தல். அதிமார்க்கவினை : யோகஞ்செய்தல். மாந்திரவினை ; மந்திரோச்சாரம் ஞானநூலோதலாதி செய் தலாம்.

இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றாமதிகரணம்.

—:o:—

இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்றது.

எ-து. மே-ள். எ-னின். புனருற்பவம் சடத்துக்கன்றிச் சித்துக்கு முளதாயினன்றே முற்செய்வினையே ஈண்டைக்கு வருமென மேற்கூறியதமையும் அஃதுண்டோ இல்லையோ என்னுமையப்பாட்டின்கண் குடமுடைந்தவழிக் குடாகாயம் ஆகாயத்தோடு கூடுமாறுபோல உடம்பு நீங்கியவழி உயிர் பிரமத்தோடு கூடுமென்னுஞ் சுருதிபற்றி இறந்தவுயிர் மீளப் பிறப்பதில்லையெனக் கிரீடாப்பிரமவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ-படை.

வருதல் தொன்றுதொட்டவ்வாறுதல்.

மாறுதல் ஈண்டிறத்தலென்பது 'போக்குவரவுபுரிய' என்னு மூலத்தானும், ஏதுவுதாரணங்களோடு உளதாகிய இயையானுமுணர்க. இஃதுணராது அச்சு வேறுபடுதலென்றுரைப்பாருமுளர். அஃதீண்டைக்கியாதுமியையாமையுணர்க.

தோற்றமும் ஈறும் உள்ளதற்கல்லது உளதாதலின்மையான்.

எ-து. ஏது. எ-னின். அதற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். உற்பத்தியும் நாசமுந் தொடர்ச்சியாயுள்ள பொருட்கன்றி ஏனைப்பொருட்கு உற்பத்தி கூடாமையான் இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்துவருமென மேற்கொண்டது. எ-று.

தோற்றமும் ஈறுமென்னுமும்மைகளை எதிரது தழீஇயினவாகக் கோடலிற் றொடர்ச்சியாயென்பது போந்தவாறறிக. உளதாதல் ஈண்டுத் தோன்றுதல்.

இனி இவ்வாறன்றிக் குடாகாயவுவமையேபற்றி இருவினையான் வரும் புனருற்பவம் உயிரின்பொருட்டுச் சிவத்துக்கேயாமெனச் சிவாத்துவிதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து மூலப்பகுதியிற் றோன்றும் புத்திதத்துவத்திற்கே அதுவெனச் சாங்கியர் கூறுங்கடாவை யாசங்கித்து மேற்கோடலு மேற்று, இவ்வதிகரணமெனக்கொண்டு தோற்றமும் ஈறும் அவ்வுரிமையுள்ளதற்கேயன்றி வினையவற்றிற்கு உளதாதலின்மையான் இவ்வான்மாக்களே மாறிப்பிறந்துவருமெனமேற்கொண்டதென்றுரைப்பினுமாம். இப்பொருட்கு உரிமையென்பது அவாய்நிலையான் வந்தது.

உளதாதலென்னும் ஒருமை தோற்றவீறுகளோடு தனித்தனி சென்றியையும்.

ஆன்மாக்களே யென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற் றொக்கது.

இனி மாயாவாதி முதலியோர் மதத்தை மறுத்தற்பொருட்டு மேற்கொண்டதென்பாருமுளர். அத்துவிதமென்ற சொல்லானே அவரை மறுத்து ஆன்மாக்களைப் பெறவித்தமையின் ஈண்டவர் மதம்பற்றிக் கடா நிகழ்தற்கோரியையின்மையுணர்க.

கண்ட நனவைக் கனவுணர்விற் றன்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினாற்—கண்செவிகேட்
டுள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றன்.

எ-று. உ-ம். எ-னின். புனருற்பவமாங்காற்படும் இயல்புகளுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று. கண் செவி கேட்டு உள்ளதே தோற்ற உளம் அத்தூடு விண்படர்ந்து கண்ட நனவைக் கனவு உணர்வில் தான் மறந்து மனம் தள்ள

வினையினால் அணுவாய்ச்சென்று கருவில் விழுந்தான் எனக் கொண்டுகூட்டுக.

இ-ள். கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற எ-து. கண் செவி முதலிய உறுப்புக்களையுடைய இவ்வுடம்பு கெட்டவழித் தனக்குக் கேடின்றிப் படைப்புக்காலந் தொடங்கிச் சங்காரகாலமளவும் நிலைபெற்றுள்ளதாகிய சூக்கும தேகம் பூதசாரவுடம்பு முதலியனவாய்க் காரியப்பட உளம் அத்தூடு விண்படர்ந்து. எ-து. உயிரானது அப்பூதசார முதலிய உடம்பின்கட் பொருந்தித் துறக்க நிரயங்களிற்சென்றநுபவித்துப்பின்னர், கண்ட நனவைக் கனவு உணர்வின் தான் மறந்து' எ-து. நனவின்கட் கண்டவற்றைக் கனாக்காணும் காலத்து மறந்து அறிவு வேறுபட்டாற்போல, முன்னைக் கண் செவி கெட்டவாறும் உள்ளதே தோற்ற அத்தூடு விண்படர்ந்தவாறும் ஆண்டநுபவித்தவாறுமாகிய இன்னோரன்னவற்றை மறந்து அறிவு வேறுபட்டு.—மனந் தள்ள வினையினால் அணுவாய்ச்சென்று கருவில் விழும் தான். எ-து. முன்னுடம்பு இறக்குங்கால் அடுத்த வினை காட்டுங் கதிநிமித்தம்பற்றி உயிர் அவாவுமாறு மனஞ்செலுத்துதலான் அக்கதிக்கட் சேறற்கேதுவாய் எஞ்சிநின்ற புண்ணியபாவ சேடத்தாற் சூக்கும தேகமாத்திரையாய்ச் சென்று அம்மனந்தள்ளிய கதிக்கு அமைந்த அக்கருவின்கட்படும்' எ-று.

இன் உவமவுருபு' தான் அசை. மறத்தற்குச் செயப்படுபொருள் அவாய்நிலையான் வந்தது.

விண்படர்ந்தென்னும் உபலக்கணத்தால் நிரயம்படர்ந்தென்பதூஉம் பெறுதும். படர்ந்தெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

அத்தூடென்புழி அன்சாரியைவிகாரத்தாற்றொக்கது. பொருந்தியென்பது சொல்லெச்சம். வினை, ஆகுபெயர்.

உடம்பு நீங்கிப்போங்கால் முதற்கட் கெடுவன கண்ணுஞ் செவியுமாகலின், அச்சிறப்பு நோக்கிக் கண்செவி கெட்டென்றுபசரித்தார். கெட்டவழி யென்பது கெட்டெனத் திரிந்து நின்றது.

ஐம்பெரும்பூதத்தின் காரியமெனப்பட்ட தூலவுடம்பு சூக்குமவுடம்பின் காரியமாமாறென்னை யென்னும் ஐயநீக்குதற்கு உள்ளதே தோற்றமென்றார்.

ஏகாரந் தேற்றம்.

ஆகாயமுதலிய தூலபூதங்கள் சத்தமுதலிய சூக்கும பூதங்களின் காரியமாதலின், அதுபற்றியே தன்மாத்திரைமயமாகிய சூக்குமவுடம்பிற்றோன்றுவதாய தூலவுடம்பு ஐம்பெரும் பூதமயமெனப்பட்டதன்றிப் பிறிதில்லையென்பது *"பூத தனுசரீரம் போனாற் புரியட்ட ரூபந்தானே யாதனு சரீரமாகி" எ-ம் † "சூக்குமவுருவே தென்னிற் றூலகாரணமதாகும்." எ-ம். ‡ "தூலமா முருவினுக்குச் சூக்கும முதல்." எ-ம். "$ மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங் கேநின் றென்னிற் கூறிய சூக்கு மத்தாம்." எ - ம். § "விதிப்படி சூக்குமத்தே யுருவரும்." எ - ம். ¶ "மனுதிகரு முடல்." எ - ம் வழிநூலாசிரியரும் இவ்வாறே கூறியவாறு காண்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. அது தோன்றுங்கால் || "காலமுற்று, நீக்கிட மரம்பின் வேரோர் நிண்மர நிகழ்த்து." மாறுபோலச் சூக்குமவுடம்பு கெடாது நிற்பத் தூலவுடம்பு * "வேறொரு குறியாமாரம் விரசங்கிலியுமா" தல்போல வினைக்கீடாக அச்சுவேறுபட்டு † "மதி

* சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம். ௯௧. † நான்காஞ்சூத்திரம். ௬௦. ‡ இரண்டாஞ்சூத்திரம். ௯௦. $ இரண்டாஞ்சூத்திரம். ௭௭. § இரண்டாஞ்சூத்திரம். ௭௩. ¶ பதினொராஞ்சூத்திரம். ௩. அநாதியுட. || இரண்டாஞ்சூத்திரம். ௭௪. சூக்குமய்
* இரண்டாஞ்சூத்திரம். ௭௭. † இரண்டாஞ்சூத்திரம். ௭௧.

க்கெழு கலைகள் போல வருவது போவதாம்." என்பதூஉம் வழிநூலாசிரியர் கூறிய வாற்றானறிக.

அணு சூக்குமவுடம்பு.

தள்ள தள்ளுதலானென்க.

அக்கருவிலெனச் சுட்டுவருவிக்க.

தான் அசை.

உள்ளதே தோற்றவென்றதனால் உடற்றிரிவும், விண்பட்டென்றதனால் இடத்திரிவும், கண்ட நனவைக் கனவுணர்விற்றான் மறந்தென்றதனால் அறிவுத்திரிவும் பெறப்பட்டன.

உள்ளதே தோற்றவென்றதனால் புதிது புதிதாய்த் தோன்றுதல்பற்றிச் சற்காரியவாதத்திற்கு இழுக்கின்மையும், அத்தூடு விண்படர்ந்தெனவும் அணுவாய்ச் சென்று கருவில் விழுமெனவுங் கூறியதனால் போக்குவரவுபற்றி வியாபகத்துக்கு இழுக்கின்மையும், வினைச்சேடத்தாலென்றதனால் துறக்க நரகங்களின் அநுபவித்தொழிந்தமைபற்றிப் புனருற்பத்திகாரணத்திற்கு இழுக்கின்மையும், மனந் தள்ளவென்றதனால் அஃதெஞ்சுதற்கேதுவுங்காட்டியவாறு.

வேதத்துட்கூறப்படும் பஞ்சாக்கினிவித்தையின் இயல்புணர்த்துவார் கண் செவி கெட்டவழி விண் படர்ந்து மறந்தணுவாய்ச் சென்று கருவில் விழுமென்றார். பஞ்சாக்கினி வித்தையினியல் பாவது: துறக்கம், மேகமண்டலம், நிலம், தந்தை, தாய் இவ்வைந்திடமங்கியாகவும் அவ்வவ்விடங்களினெய்திய ஆன்மா ஆகுதியாகவும் வைத்துத்தியானித்தல்.

மறந்து விண்படர்ந்தெனக் கூட்டியுரைப்பாருமுளர். துறக்கநிரயங்களிற்படர்ந்து அநுபவிப்புழி அறிவுதிரியாமை புராணங்களுட்காண்க.

அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது.

எ - து. உ - ம். எ - னின். உயிர்க்குப் புனருற்பவமா, காமைக்கு வாதிகளான் எடுத்துக் காட்டப்படுங் குடாகாய வாகாயவுவமைக்குப் பொருள்கூறி மேலதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ - ள். அரவு தன் தோல் உரிவும் அக்கனவும் பரகாயம் போய்வரும் அப்பண்பும் பரவில் வேறு. எ-து. கண் செவிகெட்டவழி உள்ளதே தோற்ற அத்துடு வின் படர்தற்குப்பாம்பு தோலுரித்துப் புதிதொருதோல் போர்த்துச் சேறலும் புருடன் நனவுடம்பினீங்கிக் கனவுடம்பிற் சேறலும், யோகிகள் தம்முடம்பு நீங்கிப் பரகாயத்திற்சென்று மீடலுமாகிய இவ்வுவமைகள் மிக்கு வழங்குதற்கண் இவற்றிற்குமாறுக, குடாகாய ஆகாயக் கூத்தாட்டு ஆம் என்பது அடாது. எ - து. குடவாகாயங் குடமுடைந்தவழி ஆகாயத்தோடு கூடுமாறு போல்வதோர் கூத்தாட்டாமென்று நீ கூறுதல் பொருந்தாது. உள்ளம் போம் ஆறு அது. எ - து. சூக்குமவுடம்பு விட்டுப் போமாற்றிற்கே அவ்வுவமையாகலான். எ - று.

எனவே, உடல்விட்டுப் போமாற்றிற்கு இவ்விருவகையுவமைகளும் ஆகமங்களிற் கூறுதலின், அவை தம்முண் முரணுதவாறு, அரவுதன்றோலுரிவு முதலியன தூலவுடல் விட்டுப் போமாற்றிற்கும், குடாகாயவுவமை சூக்குமவுடம்புவிட்டுப் போமாற்றிற்குமெனக் கோடல் பொருத்தமுடைமையின் அவ்வேறுபாடுணராது குடாகாயவுவமையுந் தூலவுடம்பு விட்டுப் போமாற்றிற்கே போலுமென மலையற்கவென மேலதனை வலியுறுத்தவாறு காண்க.

மேலைவெண்பாவில் 'கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து' என்றது அறிவு வேறுபடுமுறைமைக்கு எடுத்துக்காட்டியதெனவும், ஈண்டு அக்கனவுமென்றது அதனையே உடல் வேறுபடுமுறைமைக்கு எடுத்துக்காட்டியதெனவுந் தெரிந்துகொள்க.

பரவு முதனிலைத்தொழிற்பெயர். இல்லுருபு தொழினிகழ்ச்சிக்கண் வந்த ஏழாவது.

பரவுதல் எல்லார்க்கும் புலனுமாறு மிக்குநிகழ்தல்.

ஈண்டு உள்ளமென்றது சூக்குமவுடம்பை.

போமாற்றிற்கென்னும் நான்காவது விகாரத்தாற் றொக்கது; "ஐந்தவித்தா னாற்றல்" என்புழிப்போல.

குளவாம்பல் குளாம்பலென மரீஇயினாற்போலக் குடவாகாயங் குடாகாயமென மரீஇயிற்று. குடாகாயம் வடநூல் முடிபென்று கோடலுமொன்று.

ஆகாயக்கூத்தாட்டென்பது உவமத்தொகை. இதனை உம்மைத்தொகையாகக்கொண்டு குடாகாயவாகாயமுங் கூத்தாட்டும்போலென்றுரைப்பாருமுளர்.

நான்காமதிகரணம்.

—:o:—

இனி நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது.

எ-து. மே-ள். எ-னின். அங்ஙனம் புனருற்பவமாதற் கேதுவாய் இருவினைகளைச் செலுத்தி நிற்பதெனப் போந்த ஆணையெனப்படுஞ்சத்தியாவது முதல்வனின் வேறோ அன்றோவெனும் ஐயப்பாட்டின்கட் பொருட்குச்சத்தி வேறென்

மீமாஞ்சகர் முதலியோர் மதமும் அன்றென்றும் மாயாவாதிகள் முதலியோர் மதமும் பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து இச் சூத்திரத்தின் இறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடலுதலிற்று. இ-ள். முதல்வன் தனதாணையாகிய சிற்சத்தியோடு சமவேதமாய் நிற்பன். எ-று.

அன்னியயோகவியவச்சேதம் அயோகவியவச்சேதம் என்றற்றொடக்கத்து வடசொற்கள் பிறிதினியைபு நீக்குதல் இயைபின்மை நீக்குதல் என்றற்றொடக்கத்தனவாக மொழிபெயர்த்து வழங்கப்படுமாறுபோலச் சமவாயமென்னும் வடமொழி தமிழின்கண் நீக்கமின்றி நிற்றலெனை மொழிபெயர்த்து வழங்கப்படுமென்றுணர்க. வடமொழி இரண்டாஞ் சூத்திரத்திறுதியின் ஆணை முதல்வனோடு சமவேதமாய் நிற்குமென ஆணைமேல் வைத்தோதியதனை ஈண்டு முதல்வன் மேல் வைத்தோதினார். கண்ணழிப்புழி இருவினை முதல்வனாணையின் வருமெனக் கூறிப்போந்த ஆணை ஈண்டுக் கூறுவதையே இனிது விளங்குமென்னுங்கருத்தாற் சொற்பல்காமைப் பொருட்டு அதனையொழித்தெடுத்துக்கொள்ளப்பட்டது. இப்பொருள் காணமாட்டாதார் சருவவியாபியாய் நிற்றலாலென்னும் ஏதுவின்பொருளே மேற்கோளுக்கும் பொருளாகக் கொண்டுரைப்ப. அது கூறியது கூறலாதலுமன்றி மொழிபெயர்த்தல் யாப்பிற்கேலாமையுமறிக. ஈண்டுச் சமவாயமென்றது தாதான்மிய சம்பந்தத்தை. அஃதாவது பொருளான் ஒன்றேயாயும் ஒருவாற்றாற் பேதமாதற்கு உரிமையுடைமை;

அவன் ஏகாநேகமிரண்டுமின்றிச் சருவவியாபியாய் நிற்றலான்.

எ-து. ஏது. எ-னின். அதற்குப் பிரமாணமென்னையொன்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளை வலியுறுத்துதலுதலிற்று. இ-ள். அம்முதல்வன் ஒன்றே வேறேயென்னும் இருதன்மையுமின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய் எங்க

ஞும் வியாபியாய் நிற்றலான் இனி ஆணையினீக்கமின்றி நிற்குமன்றேயென மேற்கொண்டது எ-று.

அவினாபாவமுணர்த்துவார் ஏகாநேகமிரண்டுமின்றியென மேற்கோளிற்போந்தபொருளை அநுவதித்துச் சருவ வியாபியாய் நிற்றலானென ஏதுக்கூறினார். சருவவியாபியாய் நிற்றல் அவையேதானேயாயென்னும் அதிகரணத்தாற் சாதிக்கப்பட்டமையின் அதனை ஈண்டேதுவாக வைத்து ஆணையினீக்கமின்றி நிற்குமென்னு மேற்கோளைச் சாதித்தவாறு.

எங்குமுள னென்றளவை யொன்றன் றிரண்டென்னி
லெங்கு முளனன் றெவற்றெவனு—மங்க
ணவையவ னன்றில்லைப் பொன்னொளிபோ லீச
னவையுடைமை யாளாநா மங்கு.

எ-து. உ-ம். எ-னின். ஏதுவும் மேற்கோளுந் தம்முள் அவினாபாவமாமாறு யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று எ-து. யாங்கணும் அவையே தானேயென மேற்கூறிய அளவையானே முதல்வன் ஒரு பொருளாதல் கூடாது. எ-று. ஒன்றாயிற் கங்கைக்கரையினின்ற ஒருமானுடனே காவிரிக்கரையினும் ஒருங்குநிற்கமாட்டான் அதுபோல ஒருபொருள் ஓரிடத்துளதாதலன்றி யாங்கணும்வியாபித்து நிற்கமாட்டாதென்பதாம். இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று. எ-து. அற்றேல் முதல்வன் இருபொருளாய் நிற்குமெனக் கோடுமெனின்? யாங்கணும் அவையேதானேயாயுளனாதல் கூடாது. எ-று. தன்மாட்டே வேற்றுமையுடையானுக்குப் பிறபொருள்களின்கண் வேற்றுமையின்றி வியாபித்து நிற்றல் சாலாதென்பதாம். அற்றேல் இவ்விரண்டோடு முரணுதலின் எங்குமுளனல்லனெனக் கோடுமெனின்? எவற்று எவ

னும் அங்கண் அவை அவன் அன்று இல்லை. எ-து. எவ்வி டங்களிலுள்ள எத்திறப்பொருளுமாகிய அவ்விடத்து அவை களெல்லாம் அகரவுயிரின்றேல் அக்கரங்களில்லையாமாறுபோ ல அம்முதல்வனையின்றி யமையாவாகலான் எங்குமுளனல்ல னென்றல் பொருந்தாது. எ-று. ஆகலான் எங்குமுளனல்ல னென்றல் பொருந்தாதென்பது குறிப்பெச்சம். அற்றேல் வேறு விடுக்குமாறென்னையெனின்? ஈசன் பொன் ஒளிபோ ல். எ-து. எங்குமுளனாகிய முதல்வன் ஞாயிறும் ஒளியும்போ ல ஒன்றுதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மி யத்தாற் சிவமுஞ்சத்தியுமென்றியைந்து நிற்கும். எ-று. அற் றேல் பசுபாசங்களும் வியாபகமெனக் கோடலின் அவையும் இம்முறைமைபற்றி ஏகாநேகமிரண்டுமின்றி முதல்வன்போ லத் தத்தஞ் சத்திகளோடு தாதான்மியமாய் நிற்குமென்பது பெறப்படுதலான் முதல்வனொடு சமமாவான் செல்லுமெனி ன்? அவை உடைமை நாம் ஆள் அங்கு. எ-து. அவ்வாறா யினும் முதல்வனது வியாபகத்தை நோக்கி வியாப்பியமாக லின் அப்பாசங்கள் உடைமையாம்; பசுக்களாகிய நாம், அடி மையாவேம் அம்முதல்வன் மாட்டு. எ-று.

அன்றெனப் பாடமோதுவாருமுளர்.

பாசங்கள் உடைமையாமாறும் பசுக்கள் அடிமையாமா றும் 'தாரகமாமத்தன்றுணிற்றல்' எ-ம். 'அதனிலீறலாவொ ன்று பலவாறே தொழும்பாகும்' எ-ம். மேற்பெறப்பட்ட மையின், அவற்றை ஈண்டெடுத்துக்காட்டி ஆசங்கை நீக்கி யவாறு.

என்றவென்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற் றொக்கது. "புகழ்புரிந்து" என்புழிப்போல. அளவையா னென ஆறுருபு விரித்துரைக்க.

ஒன்றன்று உளனன்று என்புழி ஒன்று உளனென்னுந் தருமிவாசகங்கள் ஆகுபெயரால் அத்தருமங்களின்மேனின்

றனவாகலான் உளனென்பதூம் அஃறிணையொருமையோடு முடிந்தது.

அன்மை கூடாமைப்பொருட்டு.

எவற்றெவனுமென்பது ஏழாம்வேற்றுமைத்தொகை அஃறிணைக்கண்வரும் எவனென்னும் வினைவினைக்குறிப்புச் சொல் ஈண்டுப் பெயர்த்தன்மைப்பட்டு எவனுமென என்சா ர்பொருண்மைபுணர்த்தி நின்றது.

அன்றியென்னும் வினையெச்சம் செய்யுளாகலின் அன்றெனத் திரிந்தது.

இன்மை ஈண்டு அமையாமைப்பொருட்டு.

பொன் ஆகுபெயர்.

ஆம் என்பது உடைமையோடியையும்.

பொன்னொளிபோலீசனென்பது தொகையுவமமாக லிற் பொதுவியல்பு விரித்துரைக்கப்பட்டது.

இவ்வதிகரணத்தாற் போந்த தொகைப்பொருள், முதல்வன் வியாபகனாதலின் வியாபகப்பொருட்கு ஒன்றாய் நிற்றல் கூடாது; அது கூடாமைபற்றி இரண்டாய் நிற்பனெனின் வியாபகனாதல் கூடாது; வியாபியல்லனெனின் பசுபாசங்கள் அவனையின்றியமைதல் கூடாது; ஆகலான், முதல்வனொருவனே ஞாயிறுமொளியும்போலச் சிவமுஞ்சத்தியுமெனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டுச் சருவவியாபியாய்ப் பொருமையினிற்பனெனச் சமவேதமாய் நிற்குமாறு தெளிவிக்குமுகத்தானே தாதான்மியசத்தி யுண்மைக்குப் பிரமாணங் கூறியவாறுமென்றுணர்க. அஃதாமாறு—தன்னை விளக்குவதூஉம் விடயங்களை விளக்குவதூஉந் தானேயாகிய ஞாயிறொன்றுதானே விடயங்களை விளக்குழிக் கதிரென்னுந் தன்னை விளக்குழிக் ஞாயிறெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்

பட்டியைந்துநிற்றல்போலப், புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய்த் தன்னியல்பினிற்பதூஉம் புறப்பொருளை நோக்கி நின்றுணர்த்துவதூஉமாகிய இருதன்மையையுடைய பேரறிவாய சைதன்னியமொன்றே அங்ஙனம் புறப்பொருளை நோக்கி நிற்குநிலையிற் சத்தியெனவும், புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்குநிலையிற் சிவமெனவுந் தாதான்மியத்தால் இருதிறப் பட்டியைந்து நிற்குமெனவுணர்க.

இனித் தீயின் சத்தி யொன்றுதானே சுடுதல் அடுதல் முதலிய தொழில் வேறுபாட்டால் சுடுஞ்சத்தி அடுஞ்சத்தி யென்றற் றொடக்கத்துப் பலவேறுவகைப்படுமாறுபோலச் சிவசத்தி யொன்றே காரியவேறுபாட்டால் பரை ஆதி இச்சை ஞானம் கிரியையென்று ஐவகைச்சத்திகளாயும், முறையே ஐந்தும் நான்கும் எட்டும் பதின்மூன்றும் எட்டுமாகிய கூறுபாடுடைய ஈசானிய முதலிய ஐவகைச்சத்திகளாயும், ஆரணி செனனி ரோதயித்திரி என்னும் மூவகைச் சத்திகளாயும் நிவிர்த்தி பிரதிட்டை முதலிய ஐவகைச்சத்திகளாயும், வாமை சேட்டை முதலிய அட்டசத்திகளாயும், பரவாகீசுவரி அபரவாகீசுவரி மனோன்மனி மகேசை உமை திரு வாணியென எழுவகைச் சிவபேதங்கட்கும் முறையே எழுவகைச்சத்திகளாயும், அத்தியான்மிகமெனப்படும் உன்மனை சமனை முதலிய கலைகளாயும், இன்னும்பல வேறுவகைப்பட்டு நிற்கும். அவ்வச்சத்திகளோடு புணர்ந்த சிவமும் அவ்வாறே பலவகைப்பெயர் பெற்று நிற்கும். அவ்வச்சத்திகட்கு இடமாய விந்துவும் அங்ஙனம் பலவேறு வகையான் விருத்திப்பட்டு அப்பெயர் பெறும். இவற்றி னியல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க.

*ஐவகைச் சத்திகளாவன நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை யென்பனவாம், தாய், தந்தை,

---

*இதுமுதல் இக்குறிவரும் வரை பாஷ்யம்.

மனைவி, மக்கள், மண், பொன் முதலிய பந்தங்களினின்று நிவிர்த்தி செய்யுஞ் சிவசத்திக்கு நிவிர்த்தி யென்று பெயர். அங்ஙனம் நிவிர்த்தி பெற்ற ஆன்மாக்களை மீள நோக்காத வண்ணம் பிரதிட்டை செய்யுஞ் சிவசத்திக்குப் பிரதிட்டை யென்று பெயர். அங்ஙனம் பிரதிட்டைபெற்றவான்மாக்களுக்கு அனுமானஞானம் ஆகமஞானமின்றி அநுபூதிஞானத்தைப் பயப்பிக்குஞ் சிவசத்திக்கு வித்தை யென்று பெயர். அங்ஙனம் அநுபூதிபெற்ற ஆன்மாக்கட்கு விருப்பு வெறுப்பு சங்கற்ப முதலிய எல்லாத்துன்பங்களையுஞ் சாந்தமாகச் செய்யுஞ் சிவசத்திக்குச் சாந்தி யென்று பெயர். அங்ஙனம் சாந்தமாய் நின்றதுமொழியச் செய்யுஞ் சிவசத்திக்குச் சாந்தியதீதை யென்று பெயர், இங்ஙனம் சிவசத்தியாகிய திருவருட்சத்தியொன்றே காரிய வேறுபாட்டால் ஐந்து பேதப்பட்டது. இங்ஙனமே சிவமும் நிவிர்த்திபதி முதலியவாக ஐந்து பேதப்பட்டது,

அட்டசத்திகளாவன : வாமை சேட்டை ரௌத்திரி காளி கலவிகரணி பலவிகரணி பலப்பிரமதனி சர்வபூதமனி என்பனவாம்.

அத்தியான்மிகமெனப்படும் கலைகளாவன: உன்மனை சமனை வியாபினி சத்தி நாதாந்தம் நாதம் நிரோதி அர்த்தசந்திரன் விந்து விடம் அருக்கீசம் மேதை யென்பனவாம்.

சத்தப் பிரவஞ்சம் அர்த்தப் பிரவஞ்சமெனக் காரிய மிருவகைப்படும். இவையிரண்டுந் தம்முள் வேறுபாடுடையவாயினும், சத்தமென்னுஞ் சாதியான் வேறுபாடின்மையானும், சத்தப்பிரவஞ்சம் அர்த்தப் பிரவஞ்சத்தைப் பற்றியன்றி யில்லாமையாலும், சுத்தமாயையொன்றுதானே சத்தரூபமு மர்த்தரூபமுமாகிய விரண்டுதன்மையுமுடைத்தாய் அவ்விரண்டற்கு முதற்காரணமாமெனக் கொள்ளப்படும். இனி

சொற்பொரு ளுணர்த்துதற் கனுகூலமாகு ஞாபகசத்திகளும் பொருள் காரியப்படுதற் குபகாரமாகுங் காரகசத்திகளும் அவ்விரண்டன்கண்ணுந் தாதான்மியத்தா லுளவாத லருத்தாபத்தி யளவையாற் கொள்ளப்படும். அற்றேல், எழுத்தானியன்ற பதங்களாதல், பதங்களானியன்றவாய்நிலை தகுதி யண்மைகளான் எழுவாய் பயனிலை முதலியவாய்த்தொடர்ந்து நிற்கும் வாக்கியங்களாதல் அவ்வப்பொருள்களை யறிவுறுக்குமெனவே கோடும்; அவ்வாறன்றி யெழுத்தின் வேறாய்ப் பொருள்களை யறிவுறுக்குஞ் சத்திகளுண்டென்பதற்குப் பிரமாண மில்லையாலோவெனின்? அற்றன்று; 'கால்' என்புழிக் ககரவாகார லகரவெழுத்துக்களையன்றி அவற்றின் வேறாய்ப் பதமென்ப தொன்றின்மையானும், அவ்வாறே 'கால் கிடந்தது' என்புழி அப்பதங்களின் வேறாய் வாக்கிய மொன்றின்மையானும், எழுத்தின் வேறாய்ப் பதவாக்கியங்கள் பொருளுணர்த்துவன வல்லவென்பது பெறப்படும். படவே, நையாயிகர் மதம்பற்றிக் ககரவாகார லகர வெழுத்துக்களே அப்பொருளுணர்த்துமெனக் கோடல் வேண்டும். அங்ஙனங் கொள்வுழி, அவை யொருங்குகூடிப் பொருளுணர்த்துமோ? ஓரோவொன்றே பொருளுணர்த்துமோ? எனக் கடாயினார்க்கு, ஓசை யுணர்வு தொழின் மூன்று முக்கணப்பொழுதே நிலைபெறுமென்பது நையாயிகர் முதலியோர்க்குடம்பாடாகலின், முறைபிற் பிறந்து நின்று கெடுமெழுத்துக்கள் ஒருங்குகூடி நின்று பொருளுணர்த்துமென்பது கூடாமையின், ஓரோவொன்றே பொருளுணர்த்துமெனல் வேண்டும். 'க' என்ற மாத்திரையானே 'கம்பலம்' என்னும் பொருளுணர்த்தாமையனும், உணர்த்துமெனினுங் ககர மொழிந்த வெழுத்துக்களை யுச்சரித்தல் பயனிலவாய் முடியுமாகலானும், ஒன்றொன்றே பொருளுணர்த்து மென்பது பொருந்தாமையின், எழுத்துப் பதவாக்கியங்களின் வேறாய்ப் பொருளறிவுறுப்பனவாகிய ஞாபகசத்திகளுண்டென்பது கண்டுகொள்க. சத்தி

யெனினும் போடமெனினும் ஆற்றலெனினும் பொருந்தும். இவ்வாற்றாற் சொல்லாற் புலப்பட்டுப் பொருளறிவுறுக்கு ஞாபகசத்திகள் சொற்றோறும் வெவ்வே றுண்டெனவே கோடும். ஆயினும், 'ஆ' ,ஆண்டு, என்றாற்போல்வன வொன்றாய் நின்று வெவ்வேறு பொருளுணர்த்தக்காண்டலின், ஒருசொற் சத்தியானே ஒருபொருளன்றிப் பலபொருளுணர்ப்படுதலு முண்டாங்கொலெனின்? அற்றன்று; ஆ ஆண்டு என்றாற்போல்வன வெவ்வேறு பொருளுணர்த்துதலின், ஒருசொல்லெனப்படா; வெவ்வேறு சொற்களே யாமென்க. இனி வெவ்வேறு சொற்களாயினும், எழுத்தொப்புமையானே பலபொருளொருசொல்லென்று அங்ஙனம் வழங்கப்பட்டனவென்பது. இன்னும், ஆவென்பது பெற்றத்தினையு மரவிசேடத்தினையு முணர்த்தும்வழிப் பெயர்ச்சொல்லெனவும், இரக்கக்குறிப்பினை யுணர்த்தும்வழி இடைச்சொல்லெனவும், ஆதற்புடைபெயர்ச்சியை யுணர்த்தும்வழி உரிச்சொல்லெனவுங் கொள்ளப்படுதலின், எழுத்தொப்புமைபற்றியே உபசாரத்தான் அவ்வாறு வழங்கப்பட்டன வென்பது தெற்றென வுணர்க.*

நாம்காமதிகரண முடிந்தது.

இரண்டாஞ்சூத்திர முடிந்தது.

மூன்றாஞ் சூத்திரம்.

உளதில தென்றலி னெனதுட லென்றலின்
ஐம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா.

ஏ-து. சூ-ம். எ-னின். ஆன்மப்பிரகாச முணர்த்துத னுதலிற்று.

ஏ-து. க-ரை. எ-னின். சூத்திரக் கருத்துணர்த்துத னுதலிற்று.

இ-ள். மேல் அவையேதானே யென்றெடுத்துக்கொள்ளப்பட்ட உயிர் சூனியமுதலியவற்றுள் ஒன்றாகற்பாற்றொ அன்றாதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து உயிர் அவற்றிற்கு வேறுண்டென்பது கருதலளவையான் விளக்கி மேலைச் சூத்திரத்தின் உயிர்கண்மேல் வைத்தோதிய முதல்வ னிலக்கணத்தை வலியுறுத்துதல் மூன்றாஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

முதன்மையுடைமைபற்றி உலகிற்கு நிமித்தகாரணமாய பதிப்பொருளுண்டென்பது முதற்சூத்திரத்துட் கூறி, காரணமாதற் பொதுமையான் இயையுடைமை நோக்கித் துணைக்காரண முதற்காரணங்களது உண்மையும் அவற்றால் உலகங் காரியப்படுமாறும் இரண்டாஞ் சூத்திரத்துட்கூறி அவற்றானாய பயன் கோடற்குரிய பசுக்களதுண்மைக்குப் பிரமாணம் ஈண்டுக் கூறுகின்றாரென்றுணர்க. இதனானே சூத்திரவியைபும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. இலதென்றன் முதலிய அறுவகை யேதுக்களானும் மாயாவியந்திரதனுவினு

ன்னும் பெயரடையாற் பெறப்படுங் குறிப்பேதுவானும் இவற்றின் வேறாய் இவ்வுடம்பினுள் உயிரெனப்படுவதொன்றுண்டு. எ-று.

இது பூட்டுவிற் பொருள்கோள்.

உளதென்றது சாதியொருமை. அறிதலினென்றது ஐம்புலனோடுஞ் சென்றியையும்.

தனுவினுளான்மா வுளதென்றாரேனும், காணப்பட்ட உடம்பாற் காணப்படாத உயிருக்குண்மை கூறவேண்டுதலின் இவ்வுடம்பு சூனியமுதலியவற்றின் வேறாய ஆன்மாவையுடைத்தென உடம்பின்மேல் வைத்தோதுதல் ஆசிரியர் கருத்து. அற்றாகலினன்றே பதியுண்மை உலகின்மேல் வைத்தோதியதூஉமென்பது.

*இவ்வான்மாக்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென மூவகைப்படும்.

விஞ்ஞானகலர் விஞ்ஞானத்தாற் கலையற்றவர். பிரளயாகலர் பிரளயத்திற் கலையற்றவர். சகலர் கலையோடு கூடினவர். இவை காரணப்பெயர். விஞ்ஞானகலர் ஆணவபந்தமொன்றுமேயுடையர். பிரளயாகலர் ஆணவம் கன்மமென்னும் இரண்டு பந்தமுமுடையர். சகலர் ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்றுபந்தமுமுடையர். இனி விஞ்ஞானகலர், அநாதியே மலபந்தமாத்திரம் உடைய விஞ்ஞானகலரும், அநுபவத்தானுதல், விஞ்ஞானத்தானுதல், யோகத்தானுதல் சந்நியாசத்தானுதல், தீக்ஷையானுதல், இடையே மாயாபந்தம் கன்மபந்தமுழுவதும் நீங்கி, அசுத்தமாயையின் மேலுள்ள புவனங்களினுகரக்கடவனவாகிய போகங்கட்கு ஏதுவாய் நின்ற மலபந்தம் ஒன்றே உடையவராகிய விஞ்ஞானகலருமென, இருவகையர். பிரளயாகலர், அநாதியே மலகன்மங்

* இதுமுதல் இக்குறிவரும் வரை பாஷ்யம்.

கள் மாத்திரமுடைய பிரளயாகலரும், இடையே பரிபக்குவ விசேடத்தால் மாயாபந்தமாத்திரம் நீங்கி ஏனை இரண்டுமுடைய பிரளயாகலருமென, இருவகையர். சகலர், தேவர் மக்கள் முதற் பலவகைப்படுவர். விஞ்ஞானகலருக்குரிய புவனங்கள், அசுத்த மாயைக்கும் சுத்தவித்தைக்கும் இடையே உள்ளன. பிரளயாகலருக்குரிய புவனங்கள், அசுத்த மாயை முதல் அராக மீறான தத்துவங்களில் உள்ளன. சகலர்க்குரிய புவனங்கள், மூலப்பகுதி முதல் பிருதுவி ஈறான தத்துவங்களில் உள்ளன. இன்னும், இம்மூவகை ஆன்மாக்கள் இயல்பெல்லாம் ஆகமங்களுட்காண்க.*

ஈண்டு மேற்கோள் ஒன்றாயினும், எழுவகை மதங்களை வேறுவேறு மறுக்குமேதுக்கள் ஏழாகலான் ஆன்மாவுளதென்னு மேற்கோள் அவற்றோடு தனித்தனிசென்றியைதலின் ஏழதிகரணத்ததாயிற்று இச்சூத்திரமென்றுணர்க. இதனுட் கூறிய வேதுவேயேதுவும் மேற்கோளும் அதுவேயாகலான் ஏனைச்சூத்திரங்களுட்போல வேறெடுத்துக் கூறவேண்டாமையின், இவை யேதுவாமாறும் இவற்றான் மேற்கோளைச் சாதிக்குமாறும் இனிது விளக்கி வலியுறுத்துதன் மாத்திரையே ஈண்டுரைக்கப்படுவதெனக் கொள்க.

முதலதிகரணம்.

—:0:—

ஈண்டு இலதென்றலின் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, அந்தக்கரணான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமுகான்மவாதி என்னுமெண்மருள் அந்தக்கரணான்மவாதிகள் ஆன்மாவினதிலக்கணங்கூறும்வழி அநுவாதமுகத்தான் மறுக்கப்படுதலின் அவரையொழித்து, ஒழிந்த எழுவர்மதங்களையு முறையே மறுத்து உயிருண்மை சாதிப்பான்றொடங்கி, அவ

ற்றுள் இது சூனியமேயான்மாவென்னு மாத்துமிகர் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ-டை.

ஆன்மாவிலதென்றலினென வருவித்துரைக்க.

எவற்றினையும் அன்றன்றெனவிட்டு ஆன்மா இலதென்று நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எ-து. பொ-ரை. எ-னின். ஆன்மா இலதென்றலே பற்றி அஃதுண்டெனக் கோடல் முயற்கோடில்லையென்னு மேதுவால் அஃதுண்டெனச்சாதித்தலோடொக்கும் என்னுங் கடாவை யாசங்கித்து அதன்றூற்பரிய முணர்த்துதனுதலிற்று.

இ-ள். ஆன்மா இலதென்னுஞ் சூனியான்மவாதிகளும் இல்லையென வாளா கூறுதலமையாமையின் உடல் பொறி கடயமனைத்தினையும் முறையானே இஃதான்மாவன்று இஃதான்மாவன்றென ஒரோவொன்றாகக் கழித்து இவ்வாறாகலின் ஆன்மாவென்பது சூனியமென்று அங்ஙனங் கூறுபவாகலான் அவற்றை ஒரோவொன்றாக விட்டு அங்ஙனங் கூறிக்கொண்டு நிற்பதோரறிவுண்மையின் அவ்வறிவே மேல் அவையே தானேயாயென்பதனுள் ஆகமவளவையாற் சாதித்துப் போந்த ஆன்மாவென்றவாறும். ஈண்டிலதென்றலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ-று.

அங்ஙனமறியுமறிவுஞ் சூனியமேயெனின், அஃது என்னை ஈன்றாண்மலடி யென்பதனோ டொக்குமென் றொழிக வென்பது கருத்து,

இன்மை ஈண்டுச் சூனியப்பொருட்டு. சூனியமாவது உள்ளதுமன்று இல்லதுமன்று இரண்டுமாவதுமன்று வேறுமன்றெனப்படும் பாழ்.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது,

*சிலர் ஆன்மா இந்த உடம்பினைப் பற்றிநின்று சீவிப்பதாமென்பர். உடம்போ பல்வகைக் கருவிகளால் யாப்புற்றியல்வதொரு பாவையாம். இனி அப்பல்வகைக்கருவிகளுள் ஆன்மாவென்று அச்சிலர் சொல்லப்படுவது யாது? உடற்கருவிகள் பலவற்றையும் தனித்தனியே பேதித்து ஆன்மா இதுவன்று இதுவன்று என்று நீக்கிச் சோதனைசெய்துபோதருங்கால், அவ்வுடற்கருவிகளெல்லாம் அங்ஙனம் ஆன்மாவன்றென்று நீங்கியபின், அங்ஙனஞ் சோதித்து நீக்கப்படுங் கருவியாதுமின்றாய் முடிவில் சூனியம் தலைப்படக் காண்கின்றோம். ஆதலால், சிலர் உண்டெனக்கொண்டு கூறும் அவ்வான்மாச்சூனியமேயாம், உள்பொருளாகமாட்டாது என்பதாம். அவர் இவ்வாறு அளவைகாட்டித் தங்கொள்கை நாட்டுகின்றார். அவர் உடற் கருவிகளனைத்தினையும் இஃதான்மாவன்று இஃதான்மாவன்று என்று தனித்தனி சோதித்து நீக்கிச் செல்லுழிச் சூனியம் முடிவாய்த்தலைப்படுவதனால் ஆன்மாச்சூனியமேயாமென்றல் பெரியதோர் அறியாமையேயாம். என்னை? உடற்கருவிகளனைத்தினையும் இஃதான்மாவன்று இஃதான்மாவன்றென்று சோதித்தலாகிய வியாபாரத்தினைச் செய்கின்றுழி, சோதனைசெய்து நிற்பதாகிய அறிவே அவ்வான்மாவாகுமென்று துணிந்தறியமாட்டாராய் அங்ஙனம் போலிமுடிபு கோடலாலென்க. இனி அவ்வறிவு சோதனை செய்து போதருங்காலையிலும், சோதனை முடியுங்காலையிலும் ஒரு தன்மையாகவே நிற்பதொன்றாகலானும், உடற்கருவிகளெல்லாம் அசேதனமாயொழியத் தான் சேதனமாய் விளங்கி நிற்பதாதலானும், அதுவே அவ்வான்மாவாகுமென்று அவர் அறிந்தமைவாராக.

அவர் சோதனை செய்துகொண்டு நிற்கும் அவ்வறிவைக் கைவிட்டுச் சூனியமே யான்மாவாகுமென்று கொண்

---

* இதுமுதல் இக்குறிவரும்வரை ப்ராஷ்யம்.

டது யாதுபோலுமெனின்? வழிநடப்போர் பதின்மர் ஊரெல்லைக்கட்சென்றுழித் தம்முள் யாவனேனும் நீங்கினனோ வென்று சங்கையுற்று அச்சங்கைதீர்த்தல்வேண்டி வேறு வேறாய்த் தனி பிரிந்துநின்று தம்மை மறந்து மற்றையரைக் கணித்து ஒன்பதின்மரேநின்றேம், ஒருத்தனைக்கண்டிலே மென்று, கருத்தழிந்து கவலையுற்ற கையறியாமைச் செய்தி போலுமென்க. இனி அங்ஙனஞ் சோதித்து அறியுமறிவுஞ் சூனியமேயெனின்? அங்ஙனமறியுமறிவுஞ் சூனியமென்ற வுடம் அவ்வறிவேயன்றிப் பிறிதொன்றன்மையான், அது மகப்பயந்தோம்புவாளை மலடியென்னு மதனோடொக்குமென் றொழிக. என்னை? மலடிக்கு மகப்பயந்தோம்புமாறில்லையா தலின், மகப்பயந்தோம்புவாள் மலடியாதல் செல்லாதவாறு போல, இஃதான்மா இஃதான்மாவன்றென்று விவகரிக்கு மாறு சூனியத்துக்கேலாமையினென்க. சூனியமாவது உள்ளதுமன்று, இல்லதுமன்று, இரண்டுமாவதுமன்று, வேறு மன்றெனப்படும் பாழாம். ஆகவே, உள்பொருளாய் உணர் வுடையதாய் நிற்பதொன்றே அங்ஙனம் விவகரிப்பதென வேண்டப்பட்டுச் சூனியம் ஆன்மாவென்பது போலியாயொழிதல் காண்க.

இனி அங்ஙனம் அறியுமறிவும் நானன்றென நீக்கின், அவ்வாறு நீக்கிய வறிவு வேறுண்டெனப்பட்டு மேலும் அநவஸ்தையாமாகலின், அதுவே அவ்வான்மாவென்று துணிபாகக்கொள்க. இது சூனியான்மவாதிகளைமறுத்து ஆன்மாக் கருவிகளனைத்திற்கும் வேறாய் இவ்வுடம்பகத்து நிற்பதொரு சேதனப்பொருளென்று சாதித்தவாறும்.*

அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்
நின்றேன் றுளததுவே நீயனைத்து—நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி.

எ-து. உ-ம். எ-னின். அவ்வறிவை உடல் பொறி விடய முதலியவற்றின் வேறாகப்பிரித்துக் காணுமாறும் அதுவே உயிராமாறுந் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். அனைத்தும் நின்று எ-து. உடல் பொறி விடய முதலிய அனைத்தினும் அதுவது தானாகநின்று. அன்று அன்று என விட்டு. எ-து. முறையானே இது நானன்று இது நானன்றென ஒரோவொன்றாகக்கண்டு நீக்கியவழி அஞ்செழுத்தாய் ஒன்று நின்றுளது. எ-து. அவ்விடத்து அகர முதலிய சூக்குமபஞ்சாக்கரரூபமாயறிந்து வந்ததோரறிவு நிலைபெற்றுளதன்றே? அதுவே நீ. எ-து. அறிவு நானன்றெனக் கழிப்பின் அங்ஙனங்கழித்த உணர்வு வேறுண்டெனப் பட்டு மேலும் வரம்பின்றியோடுமாகலிற் சூக்கும பஞ்சாக்கர ரூபமாய் நின்றறிந்து வந்த அவ்வறிவுதானே நீயென்பதறிவாயாக. அற்றேல், மாயையுஞ் சிவமுமுளவென்பது மேலைச்சூத்திரங்களாற் சாதிக்கப்பட்டமையின் அவையே அவ்வறிவினையுமறிந்து நீக்குமெனவமையுமாகலான் வரம்பின்றி யோடுமாறில்லையாலெனின்? சார்மாயை. எ-து. நின்னாற் சாரப்பட்ட மாயை. அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போல் காட்டலான் நீ அல்லை. எ-து நிலமுதலிய காரியமனைத்துமாய் நின்னொடு விரவி நின்று இப்பெத்தகாலத்துக் கண்ணுக்குக் கண்ணாடிபோல் உனக்கறிவை விளக்கி நிற்றன் மாத்திரையேயன்றி அறிவதன்றாகலான் நீ அம்மாயையல்லை. தற்பரமும் அல்லை. எ-து. மாயையான் விளங்கி யறியும் நீ அதற்கு அதீதமாகிய சிவமுமல்லை. தனி எ-து. அவற்றின் வேறு எ-று.

விட்டவழி யென்பது விட்டெனத் திரிந்து நின்றது.

அவ்வறிவாவது இதுவென்றுணர்த்துவார் அன்றன்றென நின்றனைத்தும் விட்டவழியென ஏதுப்பொருளை அநு

வதித்து அஞ்செழுத்தாயொன்று நின்றுளதென அடைபா யங்கூறினார். அஞ்செழுத்தாய் நின்றறியுமாறு வருகின்ற சூத்திரத்துட் பெறப்படும். இதற்குப் பிறரெல்லாங் கூறியது கூறலென்னும் வழுப்பட மேலு மோரிமையின்றி யுரைத்தார்.

அனைத்துநின்றென்புழி முன்னர்க் கண்ணும் பின்னர் ஆக்கச்சொல்லுந் தந்துரைக்க. ஏகாரந் தேற்றம். தற்பரமென்றது குறிப்பேதுவாய் நின்ற பெயர்.

அனைத்து நின்றின்று தற்பரமபோற் காட்டலால் பரமாயை நீயல்லை தற்பரமுமல்லை தனியென்றதனானேவருகின்ற அதிகரணங்களுக்கெல்லாந் தோற்றுவாய் செய்தவாறுமாயிற்று.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

——:():——

இனி எனதுடலென்றலின் ஆன்மாவுளதென்றது.

பொ-து. மே-ள். வா-னின். அவ்வறிவு உடம்பின்கணன்றி நிகழக் காணாமையானும் நானுணுகினேன் பருத்தேனென உடம்பினையே நானென்று வழங்கக் காண்டலானும் உடம்பே யான்மாவெனுந் தேகான்மவாதிகள் கூறுங்கோட்டையாசங்கித்துச் சூத்திரத்தினிரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ-டை.

நான் பருத்தேன் சிறுத்தேன் கரியேன் மனிதன் பார்ப்பானென உடம்பின் குணவிசேடங்களை உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கினும் யானுடம்பு யான்கை யான்கால் எனவுடம்பை அவ்வாறு வழங்குவாரின்றி எனதென வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்டலின் அதுவே உயிர்

வேறுண்டென்பதனை அறிவுறுக்குமென அவன் வழங்குமுறையேபற்றி அவனை மறுத்தவாறு.

என்பதி என்மனையென்றாற்போல என்கை என்காலென நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது.

எ-து. பொ-ரை. எ-னின். எனதுடலென்பது பிறிதின் கிழமைப்பொருள்படாது தலைமாத்திரையாய் நிற்குமிராகுவை இராகுவினது தலையென்று வழங்குமாறுபோல அபேதம்பற்றியே வழங்கப்படுமென அமையுமென்னுங் கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த்துத லுதலிற்று. இ-ள். இராகுவினது தலையென்றாற்போல்வன சிறுபான்மைவழக்கமாகலின் ஆண்டொற்றுமைப்பொருள் கோடலமையும் ஈண்டவ்வாறன்றி என்பதி என்மனைவி என்பொருள் என்றுவழங்குமாறுபோல என்கை என்கால் என்கண் என்செவி என்பொறி என்பிராணன் என்னறிவெனப் பலவாற்றானும் பெரும்பாலும் உலகத்தார் வழங்கக் காண்டலின் இவ்வழக்கமிருதிப்பாடு பிறிதின்கிழமைப்பொருட்கணன்றி வாராமையான் அங்ஙனங்கூறிக்கொண்டு நிற்கும்பொருள் வேறொன்றுண்டென்பது பெறப்படுதலின் அதுவே மேலுரையளவைபற்றிச் சாதித்த ஆன்மாவென்றவாறும், எனதுடலென்றலின் ஆன்மாவுளதெனமேற்கொண்டது. எ-று.

*இனித் தேகான்மவாதிகள் உடம்பே யான்மாவாகுமென்பர். அறிவு உடம்பின் கணன்றி நிகழக்காணாமையாலும், நான் துணிந்தேன் நான் பருத்தேனென உடம்பினையே நானென வழங்கக்காண்டலாலும், உடம்பே ஆன்மாவாகுமென்று அவர் அளவை காட்டித் தங்கொள்கை நிறுத்துவர். நான் பருத்தேன் சிறுத்தேன் கரியேன் மனிதன் பார்ப்பானென வுடம்பின் குணவிசேடங்களை உபசாரத்தால் ஆன்மாவிற்கேற்றி வழங்குவர், அங்ஙனம் வழங்குவரேனும், யா

* இதுமுதல் இக்குறிவரும் வரை பாஷ்யம்.

ன் உடம்பு, யான் கை, யான் காலெனவுடம்பை அப்படி வழங்குவாரல்லர், என்னுடம்பு, என் கை, என் காலென வேற்றுமைப்படவே யாவரும் வழங்குவராகலானும், இவ்வுடம்பு சடமாகலானும், ஆன்மாச் சித்தாகலானும், தேகத்தின் வேறாய் அதன்கண் நிலைபெறுவது ஆன்மாவாகுமென்று அறிக.

அபேதக்கருத்தினால் என்னுயிரென்று வழங்குமாறு போல அபேதக்கருத்தினால் எனதுடலென்று வழங்குதலும் அமைவதாம்; ஆதலின் அதுகொண்டே ஆன்மாத் தேகத்தின்வேறாய் உண்டென்றல் அமையாதென்றல் இசையாதெனின், என்னுயிரென்று அவ்வாறு பிறிதின்கிழமைப்பொருள் பட வழங்கப்படுவது பிராணவாயுவேயாம். இனி ஆன்மாத் தன்னை ஒற்றுமைப்பொருளில் வேற்றுமையாக அங்ஙனம் ஒரோவழிவழங்கினும் அது விளக்கின் சோதியென்றாற் போல்வதோர் பேதகற்பனையென்றே யொழிக்கப்படுவதாம். இவ்வாறன்றி என்பதி என்மனைவி என்பொருளென வழங்குமாறுபோல, என்கை என்கால் என்கண் என்செவியெனப் பலவாற்றாலும் பெரும்பாலும் உலகத்துப் பிறிதின்கிழமைப் பட வழங்குதலின், அதுபற்றி ஆன்மாத் தேகத்திற்கு வேறாயுண்டென்று சாதித்தல் பொருந்துவதே யாமென்க.

அவருள் ஒருசாரார், நிலம் நீர் அனல் வளி யென்னும் பூதநான்கும், சடமாயினும், பாக்கு வெற்றிலை சுண்ணமென்பனவற்றின்கண் முன்னர் இல்லாத செவ்வண்ணம் அவை யொருங்குசேருங்காலை அச்சேர்க்கைக்கண் புதுவதாக வுண்டாதல்போலத், தம்முளொன்றாய்க் கூடிங்காலை அக்கூட்டரவில் அவற்றின்கண் முன்னர் இல்லாததோர் சேதனம் புதுவதாய்த்தோன்றி வியாபரிக்குமென்பதமைவதாம்; தேகத்தின்வேறாக ஆன்மா ஒன்றுண்டென்றல் பொருந்தாதென்பர். நிலம் நீர் அனல் வளியென்னும் பூதநான்கும் உண்மையில் சடமாகலின் அவை கூடிய கூட்டரவில் சேதனம் புது

வதாகத்தோன்றுமென்றல் ஒருவாற்றானும் இசையாது. அன்றியும், தத்தமியற்கையிற் சடமாய் நிற்கும் அப்பூதநான்கும் தாமொன்றாய்க் கூடியவழிச் சித்தியல்பாய் மாறுமென்றல் இயற்கை விரோதமுமாம். பாக்கு வெற்றிலை சுண்ணாம்புகளில் முன்னில்லாத செவ்வண்ணம் கூட்டத்தில் விளங்கினவென்றல் இயற்கைவிரோத மாகமாட்டாது. செவ்வண்ணம் சிற்குணமன்று; சடப்பொருட்குணமேயாம். இன்னும், பாக்கின்கண் இனிது தோன்றாது அடங்கிநிற்கும் செவ்வண்ணம் அதனோடு வெற்றிலை சுண்ணாம்பு கூடும்பொழுது இனிதுவிளங்கித் தோன்றுவதாயிற்று. இங்கு முன்னில்லது கூட்டத்திற் புதுவதாய்த் தோன்றிற்றில்லை. உள்ளதே புதிதாக விளங்கித் தோன்றிற்று. இல்லதற்குத்தோற்றம் முக்காலத்தும் இல்லை உள்ளதற்கே எக்காலத்தும் தோற்றம் உண்டு. உள்ளது உள்ளதேயாம். அதற்குத் தோற்றம் கூறல் இயையாதெனின், அற்றன்று. சத்திமாத்திரையாயுள்ள சூக்குமம் காரணவுபகாரத்தால் வியத்தியாய்த் தூலமுற்று விளங்குமென்பதே உள்ளது தோன்றுமென்பதற்குத் தாற்பரியமாதலால், அதற்குத் தோற்றங்கூறுதல் இயைபேயாமென்றுவிடுக. எடுத்துக்காட்டு இங்ஙனம் விரோதமுறுதலின் பூதநான்கின் கூட்டரவில் முன்னில்லாத வேரறிவு தோற்றி வியாபரிக்குமென்ற அவர்கொள்கை கழுத்திற் கையிட்டுத்தள்ளி ஒதுக்கப்படுமென்க. இவ்வாறாகலின், பூதக்கூட்டத்திரண்ட தேகத்திற்குவேறாக ஆன்மா ஒன்று உண்டென்பது சாலுஞ்சித்தாந்தமேயாகுமென்க. *

எனதென்ற மாட்டி னெனதலா தென்று
துனதலா துன்கைகால் யாக்கை—யெனதென்று
மென்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா
ணுன்னிலவை வேறு முணர்.

எ-து. உ-ம். எ-னின், பதி மனைவிமுதலிய பொருள்

கள் தம்மின் வேறாதல் கண்டு பிறிதின்கிழமைப்பொருள்பட எனதென்றாற்போலன்றிக் கைகான்முதலியவற்றைத் தற்கிழமைப்பொருள்பட எனதென்று கூறிநிற்றலின் அவ்விருவேறுமொழியுந் தம்முளொக்குமாறென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து அதனைப்பரிகரித்து நுதலிற்று.

இ-ள். எனது அலாது எனைத்து எனது எனப்படாட்டிம். எ-று. நீ உலோகாயதநூல் கேட்குமுன்னெல்லாம் பதி மனைவிமுதலிய புறப்பொருளையே உயிரெனக்கொண்டு மயங்கிநின்றாயன்றே அக்காலத்து அவற்றை எனதென்றென வேறுபடுத்து தனித்தனி எனதென்றே தற்கிழமைப்பொருளாகக் கூறிக்கொண்டு நின்றாற்போல, உனது அலாது உன்கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவு என்றும் உரைத்து நீ நிற்றி நாண். எ-று. உனதன்றாகிய உன் கை கால் யாக்கைகளைத் தனித்தனி எனதென்றும் அங்ஙனமறிதற்குச் சாதனமாகிய அறிவினை என்னறிவென்றும் தற்கிழமைப்பொருளாகக் கூறிக்கொண்டு நீ பொருளொடு பொருள் வேறு நிற்கின்றாய் காண். உன்னில். எ-று. உலோகாயதநூல் ஆராய்ந்தபின்னைப் பதி மனைவி முதலிய பொருள்கள் உனக்கு வேறாதல் கண்டாற்போலக் கை கால் முதலியவற்றி னியல்புகளையும் ஞானக்கண் முதலியவற்றான் ஆராய்ந்து பார்க்கியபின் அவை வேறாம் உணர். எ-று. அக்கைகான் முதலியன உனக்கு அன்னியமாம் அதனை யறிவாயாக. எ-று.

இன் உவமையாறு.

உனதலாதென்பதனைக் கைகால் யாக்கைகளோடு தனித்தனி கூட்டுக.

இரண்டாமதிகரணமுடிந்தது.

மூன்றாமதிகரணம்.

—:o.—

இனி ஐம்புலனறிதலின் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். ஐம்பொறிகள் ஐம்புலன்களை யறியுமென்றல் எல்லார்க்குமொப்ப முடிந்தமையின் அவை உடல்போற் சடமன்மை பெறப்படுதலானும், அவற்றை எனதென்னும் வழக்கம் பெரும்பான்மையன்றாகலானும், அவையே உயிராதலமையுமெனை இந்திரியான்மவாதிகள் கூறுங்கடாவையாசங்கித்து மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ-படை.

ஐம்புலனாகிய சத்தப்பரிசரூபரசகந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்ததொன்றறியாமையின் இவ்வைந்தினையும் ஐம்பயனுமறிவதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எ-து. பொ-ரை. எ-னின். ஐம்புலனறிதலின் ஆன்மா ஐம்பொறியின்வேறெனச் சாதித்தற்கேதுவாமாறு யாங்ஙனமென்னுங்கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த்துதனுதலிற்று. இ-ள். வெ-படை.

*இனிச் செவி மெய் வாய் கண் மூக்கென்னும் ஐம்பொறிகளும் சத்தம் பரிசம் இரதம் ரூபம் கந்தமென்னும் விஷயங்கள் ஐந்தனையும் தனித்தனி அறியவல்லனவாம்; அவை சடமெனப்படா; ஆதலால், அவையே ஆன்மாவாகுமென்று இந்திரியான்மவாதிகள் சொல்வர். ஐம்பொறிகள் ஒன்றறிந்ததனை மற்றொன்றறியாமையானும், அவை அவற்றை வேறுவேறாக விஷயிப்பதல்லது இத்தொழிற்பாடுடையேம் யாமென்று தம்மை அறியமாட்டாமையானும், அவ்வைம்பொறிக

* இதுமுதல் இக்குறிவரும் வரை பாஷ்யம்.

ளையுங் கொண்டங்ஙனம் அறியும் ஆன்மா வேறுண்டென்பதே தேற்றமாம். இன்னும், ஐம்பொறிகள் தத்தமக்குரிய விஷயங்களை நேரேயியைந்து நின்றறிவனவேயாம். ஒருசாத்தன் ஒருதேயத்திற்சென்றகாலத்தில் ஐம்பொறிகள் கொண்டு கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்த விஷயவனுபவங்களை மற்றோரிடத்திருக்கும் பொழுது நினைந்து அவ்வண்ணம் நுகர்ச்சியுறுகின்றான். அச்சாத்தன் இடம்பெயர்ந்து மற்றோரிடத்துத் தான் இருக்கும்பொழுது அத்தேயத்தில் சென்றகாலத்துத் தனக்கு நேர்ந்த விஷயங்களை ஐம்பொறிகள்கொண்டு அவ்வாறறியுமாறில்லை. என்னை? அவ்விஷயங்கள் இடத்தாலும் காலத்தாலும் அவன்றனக்கு மிக வேறுபட்டுப் பிரத்தியக்ஷம் பெறாமையாலென்க. இனிச் சென்றகாலத்துக் காட்சியுற்ற அவ்வைம்புலன்கள் சாத்தற்கு மற்றோரிடத்திருக்கும்பொழுது விஷயமுறாதல் அவ்விந்திரியங்களுக்கு வேறாய் அவ்விந்திரியங்களைக்கொண்டு அறியவல்ல மனக்கருவியுடைய சேதனவான்மா அவனகத்து நிலைபெறுதல்பற்றி யல்லது கூடாமையால், இவ்வருத்தாபத்தியாலும் மனக்கருவிபற்றி இந்திரியங்களின்வழி நின்றறியும் ஓர் ஆன்மாச் சாத்தன் உடம்பகத்து இந்திரியங்களுக்கு வேறாயுண்டென்பது இனிது தெளியப்படும். இவை தேகேந்திரியான்மவாதிகளை மறுத்து உடம்பகத்து ஆன்மாத்தேகேந்திரியங்களுக்கு வேறாக உண்டென்று சாதித்தவாறாம்.*

ஒன்றறிந்த தோன்றறியா தாகி யுடன்மன்னி
யன்றும் புலனுயவ் வஞ்சேழுத்தை—யொன்றறித
லுள்ளதேயாகி லதுநீ தனித்தனிகண்
டுள்ளலவை யொன்றல்லை யோர்.

ஏ—று. உ ம். எ-னின். இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாவென்றதொக்கும் ஐந்துமைந்துபிறவெனக் கோடலின் அதனானமைக்காவதோரிழுக்கில்லை. இனி இவ்வைக்கையுங்

கொண்டு ஐம்புலனையும் ஒருபொருளே யறியுமெனின் அதற்குப் பிரமாணங் கண்டிலம். குடத்தைக் கண்டயானே அதனைத் தீண்டினேனென மறிந்துணர்வு நிகழ்தல் ஐந்துமோருடம்பின்கண்ணே நிலைபெறு மொற்றுமைபற்றியமையுமெனக் கோடுமென்னுங்கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். உடல் மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி-எ-று உடம்பின்கண்ணே நிலைபெற்று. ஒருவிடயத்தையறிந்த இந்திரியம் மற்றொருவிடயத்தை அறியாதாய். அன்று நம் புலன் ஆய் அவ்வஞ்செழுத்தை. எ-து. அங்ஙனந் தம்முண்மாறுபடுஞ் சத்தமுதலிய புலன்களைச் சூக்குமபஞ்சாக்கரத்தாற் செலுத்தப்பட்டாராய்ந் தறிகின்ற அவ்வைம்பொறிகளின் றொழிற்பாட்டை. அறிதல் ஒன்று உள்ளதேயாகில்-எ-து. கண் உருவத்தையறிவது செவி ஓசையையறிவதென்று இவ்வாறுணர்தலையுடையதோர்பொருள் இல்லதோ உள்ளதோவென வினவினார்க்கு இல்லதெனின் இவ்வறிவு நிகழாதாதல்வேண்டுமாகலான் உள்ளதேயாமெனின்? அது நீ. எ-து அவ்வாறுணர்வதியாது அதுவே நீயாகியவான்மா அவ்வாறுணர்வனவும் அவ்விந்திரியங்களேயென்றுற்படுமிழுக்கென்னையெனின்? அவை தனித்தனிகண்டு உள்ளல். எ-து. அவ்விந்திரியங்கள் தத்தம்விடயங்களை வேறுவேறு கண்டறிதன்மாத்திரையேயன்றி இத்தொழிற்பாட்டையுடையேம் யாமெனவும் அறியமாட்டாவாகலான், ஒன்று அல்லை ஓர். எ-து. அவ்வைந்தின் றொழிற்பாட்டையுமறிந்து அவற்றின் வரும் பயன்கொள்வதாய நீ யவற்றின் வேறுவை அதனையாராய்ந்தறிவாயாக. எ-று.

ஆகியென்னுஞ் சிறப்புவினை ஆயென்னும் பொதுவினையோடு முடிந்தது ; இவனுமிவளுஞ் சிற்றிலிழைத்துஞ் சிறுபறையறைந்தும் விளையாடுப என்றாற்போல. ஆயென்பது வினைத்தொகை. அவ்வஞ்செழுத்தென்க, அஞ்செழுத்தாற்

செலுத்தப்பட்ட பொறியை ஆகுபெயரான் அஞ்செழுத்தென்றார். அஃதிருமடியாகுபெயராய் ஐம்பொறியின் றொழிற்பாட்டை யுணர்த்திநின்றது.

உள்ளல் உள்ளலாமெனன்க.

இம்மூன் றதிகரணங்களானுஞ் சாக்கிரத்தினிகழுமியல்புபற்றி ஆன்மாவினுண்மை சாதிக்கப்பட்டது.

மூன்றமதிகரண முடிந்தது.

நான்காமதிகரணம்.

—:0:—

இனி ஒடுக்கமறிதலின் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். * "நேசவிந்திரியங்கட்கு நிகழறிவிதனாற் காண்டும்" என நீவிருங் கோடலின் அவ்விந்திரியங்களின் வேறாய் அங்ஙனமறிவது புரியட்டகவுடம்போயா மெனவமையும் அது புறத்து நிகழாதாயினும் அகத்தே நின்று இந்திரியங்களைப் புறத்திற் செலுத்தியறியுமெனக் கோடுமெனச் சூக்குமதேகான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து நாலாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். ஐம்பொறிகளு மொடுங்கின சொப்பனத்தானத்தின் நிகழ்ந்தவற்றையறிதலின் ஆன்மா வேறுண்டு. எ-று.

ஒடுக்கம் ஆகுபெயர்.

நனவின்கட் கனவுகண்டாமென்றுங்கண்டிலமென்றும் நிற்பதுளதாகலின் அதுவே யவ்வான்மாவாமென்றது.

எ-து. பொ-ரை. எ-னின். சொப்பனத்தினிகழ்ந்தவற்றையறிவதுஞ் சூக்குமதேகமேயாகலின் இது சித்தசாதனமா

* சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம். ௯௪. ஓசை நற்பரிச.

மாமென்னுங் கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த்துதலிற்று. இ-ள். வெ-ளிடை.

இஃதென்சொல்லியவாறோவெனின் ஒடுக்கமறிதலின்றி ஒடுக்கத்தினிகழ்ந்தவற்றை நனவின்கண் மயங்கியறிதலென்னும் பொருட்டாதலாற் சித்தசாதனமாதல் யாண்டையதென விடுத்தவாறென்பது. கனவுகண்ட சூக்குமவுடம்பே நனவின்கண் அதனையறியுமாயிற் கண்டபடியறியாது மயங்கியறிதல் கூடாமையின் உயிர்க்காயின் அதுபோல் ஒரு தன்மைத்தாகவின்றி அகத்துச்சேறலும் புறத்துச்சேறலும் வேறுபாடுடைமையான் அதுபற்றி மயங்கியறிதல் கூடுமாகலின் அங்ஙனமறியுமுயிர் வேறுண்டென்பது கண்டுகொள்க.

அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்விதி னவ்வுடலிற் சென்றடங்கி—யவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுட னீயல்லை மற்று.

எ-து. உ-ம். எ-னின். கனவின்கட் செல்லுமாறும் ஆண்டு நிகழுமாறும் மீளவருமாறுமுணர்த்தி அதனை வலியுறுத்துதலிற்று.

இ-ள். அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் தாம் கிடப்ப. எ-து-மேல் உயிரன்றெனக்கூறிப்போந்த தூலவுடம்பினின்று உயிர்ப்பனவாய ஐம்பொறிகள் ஆண்டே உயிர்ப்பொழிந்து கிடப்ப. அடங்கிச் செவ்விதின் அவ்வுடலிற் சென்று-எ-து. அவை யங்ஙனங்கிடந்தவழிப் புறத்து நிகழுந் தொழிற்பாடெல்லாமடங்கி அவ்வுடம்பினுள்ளால் வருத்தமின்றிச்சென்று. அவ்வுடலின்வேறு ஒன்றுகொண்டு விளையாடி-எ-து. அத்தூலவுடம்புபோல அதனின் வேறாய தோருடம்பை யெடுத்துக்கொண்டு வேறோராற்றாற்கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று விளையாடி. மீண்டு அதனை மாறல்-எ-து. மீளவதனை மாறி மேற்சேறலான், நீ உடல்

அல்லை மற்று. எ-து. நீ அச்சூக்குமதேகமல்லை அதனின் வேறானவை எ-று.

உயிர்ப்பவென்றது அன்பெறாத அகரவீற்றுப் பலவறி சொல். உயிர்த்தல் தொழிற்படுதல்.

காமும் மற்றும் அசை.

மீண்டு-மீள.

மாறல் மாறலானென்க.

இவ்வதிகரணத்தாற் சொப்பனத்தினிகழு மியல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது.

நான்காமதிகரண முடிந்தது.

ஐந்தாமதிகரணம்.

—:o:—

இனிக் கண் படில் உண்டிவினையின்மையின் ஆன்மாவு மென்றது.

எ-து. மே-ள். எ-னின். சொப்பனத் தானமாத்திரையி னன்றித் தொழிற்படாத சூக்குமதேகம்போலன்றிச் சுழுத்தி துரியங்களினுந்தொழிற்படுவதாய பிராணவாயுவே அடங்கு தல் விடுதல் செய்தறிவதாகிய ஆன்மாவாதலமையுமெனப் பிராணான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தி னிரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனு தலிற்று. இ-ள். வெ-படை.

உண்டிவினை உம்மைத்தொகை. அஃது * "உண்டியும் வினையு மின்றிக் கிடந்து" என வழிநூலாசிரியர் கூறியவாற் றானு மறிக.

---

* சிவஞானசித்தி. நான்காஞ்சூத்திரம். ௩௦. கண்டுணர்.

ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருதிக் கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியாநிற்ப துளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எ-து. பொ-ரை. எ-னின். கண்படைகொண்டவழி உண்டிவினையில்லையென்றது-உடற்கோ பிராணவாயுவுக்கோ வென வினாயினார்க்கு உடம்பு உயிரன்மையான் அதற்கவை யில்லாமைபற்றி ஈண்டைக்காவதோரிழுக்கில்லை இனிப் பிரா ணவாயுவுக்கென்னின் அது துயின்றெழுந்தபின்னர்ச் சுகமா கத் துயின்றேனென்றறிதல் பிறிதோராற்றாற் பெறப்படா தென்னும் அருத்தாபத்தியான் ஆண்டும் இன்பத்துன்பநுக ர்ச்சியுண்டென்பது பெற்றாம். விழித்துழிப்போல உறங்குழி யும் பிராணவாயுவியங்குதலான் வினையுண்மையுங் கண்டாமா கலின் அதற்கு அவையாண்டில்லையென்றல் மாறுகோள்படு மென்னுங்கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த் துதனுதலிற்று இ-ள். ஈண்டு உண்டியென்றது விடயங்களி னிடமாக வரும் இன்பத்துன்ப நுகர்ச்சியை; வினையென்றது உடம்பு சேட்டித்தலையாகலின். இவ்விரண்டும் பிராணவா யுவை யொழித்தெழுந்த கருவிகளெல்லாமொடுங்கிய துயிலி டத்து அஃதியங்காநிற்பவும் உடம்பின்கண்ணே நிகழ்தலின் மையின் அவையொடுங்காத நனவினிடத்து அவையிரண்டும் அதன்கணிகழ்தலுண்மையின் அவ்வின்மையுண்மைகட்கே துவாகக் கருவிகளையொடுக்கியும் ஒடுக்காது நிற்பதியாது அது வே அவ்வான்மாவென்றவாறும். கண்படில் உண்டிவினையின் மையின் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ-று.

பிராணவாயுவை யொழித்தொழிந்த கருவிகளென்பது ஆற்றலான் வந்தது.

இன்பத்துன்பநுகர்ச்சியை இன்பத்துன்பமென்றுபசரி த்தார்.

சிவனம் சிவித்தல்; சேட்டிக்த லென்றதாம்.
செவ்வெண்டொகை விகாரத்தாற்றொக்கது.

சிவியாநிற்பதென்பது சிவியாநிற்றலென்னுந் தொழிற் பெயர்மாத்திரையாய் நின்றது. "உறங்குவதும்போலும்" என் புழிப்போல.

உராதென்றது தனித்தனி சென்றியையும்.

துயின்றுழியும் விழித்துழியுந் திரிபின்றி ஒருதன்மைத் தாதல்பற்றி உடம்பு பிரகிருதியெனப்பட்டது. பிருகிருதிக் கென்றது உருபுமயக்கம்.

இரண்டுகாலத்துமொப்ப வியங்குதல்பற்றிப் பிராண வாயுவைப் பிரகிருதியெனக்கொண்டு அதற்கவையின்மையி னென்றுரைப்பாரும், பிரகிருதிவிகாரமாகிய சித்தத்திற்கு அவையின்மையினெனவுரைத்துச் சுழுத்தியின்கண்ணுந்தொ ழிற்படுவதாகிய சித்தமேயுயிரென்னுஞ் சித்தான்மவாதிகளை மறுத்தற்கெழுந்த திவ்வதிகரணமென் றுரைப்பாருமுளர்.

கண்டறியு மிவ்வுடலே காட்டோடுங்கக் காணுதே
யுண்டி வினையின்றி யுயிர்த்தலாற்—கண்டறியு
முள்ளம்வே றுண்டா யோடுங்கா துடனண்ணி
லுள்ளதா முண்டிவினை யூன்.

எ-து. உ-ம். எ-னின். துயிலிடத்துக் கருவிகளெல்லா மொடுங்குதலின் இன்பத்துன்பநுகர்ச்சியுஞ் சேட்டையும் பிரகிருதிக்கில்லையாயினவாகலான் அதுபற்றிப் பிராணவாயு வை யான்மாவென்றற் கிழுக்கென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று. இ-ள். கண்டு அறியும் இவ்வுடலே-எ-து. கண்டறிதற்கு நிலைக்களமான இவ்வுடம்பின்கண்ணே. காட்டுக் காணுதே ஓடுங்க-எ-து. காட்டாய கருவிகள் தொழிற்படாதேயொடுங்கவும். உண்டி வினை இன்றி-எ-து. அவையொடுங்கியவழி உண்டியும் வினை

யும் பிரகிருதிக்கில்லையாகவும், உயிர்த்தலான்-எ-து பிராணவாயு நிலைபெற்று இயங்குதலான். கண்டு அறியும் உள்ளம் வேறு உண்டு-எ-து. கண்டறியு முரிமையையுடைய உயிர் பிராணவாயுவின் வேறாயுண்டு. ஒடுங்காது உடல் நண்ணில் ஊன் உண்டி வினை உள்ளதாம்-எ-து. அவ்வுயிரொடுங்காது அவ்வுடலின்கணெய்திற்றாயின் அவ்வுடம்பு கருவிகளின் றொழிற்பாட்டானாய உண்டியும் வினையுமுடைத்தாம். ஆய். எ-து. அதனையாராய்ந்தறிவாயாக. எ-று.

இது அருத்தாபத்தியளவை.

கண்டறிதல் ஒருபொருட்பன்மொழி.

இன்றியென்னும் வினைக்குறிப்புச் செயவெனெச்சந்திரிபு. சிறப்பும்மைகள் தொக்கன. அவை *"அறிந்திடா துடலுறக்கத் தறிவின்மை கரண மின்மை, யறிந்திடு முதலி யாகி னதுநிற்கக் கரணம் போகாது" என்னும் பொருள் விளைத்து நின்றன.

ஊன் ஆகுபெயர்.

உயிர் வேறுண்டென்றதனை வலியுறுத்துவார் உடம்பாட்டுமுகத்தானு மோதினர்.

இவ்வதிகரணத்தானே சுழுத்தி துரியங்களினிகழ்வியல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது. இதுகாறுஞ் சார்மாயை நீயல்லையென்றதனை வலியுறுத்தியவாறு.

ஐந்தாமதிகரணமுடிந்தது.

ஆறுமதிகரணம்.

—:o:—

இனி உணர்த்தவுணர்தலின் ஆன்மாவுளது என்றது.

---

* சிவஞானசித்தி, மூன்றாஞ்சூத்திரம். ௬. அறிந்திடும்.

எ-து. மே-ள். எ-னின். பிரமப்பொருள் மேற்கூறிப்போந்த சடப்பொருள்கள்போலன்றிச் சித்தாகலான் அதுவே உயிராதலமையுமெனை விஞ்ஞானான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து ஆறுங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். தொழிற்படுங்கருவிகளொான்றுமின்றிக் கேவலமாய் அதீதாவத்தையினின்றுழி அறியுமாறின்றிப் பின்னர்க் கலைமுதலிய கருவிகளால் அறிவிக்கவறிந்து வருதலுண்மையின் எக்காலத்துந் திரிபின்றியறிந்தாங்கறிந்து நிற்குஞ் சித்தாகிய பிரமத்திற்கு இது தகாமையான் அங்ஙனமுணருமான்மாவேறுண்டு. எ-று.

உணர்த்தவுணர்தலெனவே முன்னுணராது கிடத்தல் பெற்றாம்.

அவனறிந்தாங்கறிவனென்றறிவிக்கவறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின் அதுவேயவ்வான்மாவாமென்றது.

எ-து. பொ-ரை. எ-னின். அறிந்தாங்கறிவதாகிய பிரமப்பொருள் அவிச்சைக்காலத்துங் கருவிகளோடுங்கூடியன்றியறியாதெனக் கோடுமாகலின் அதுபற்றி உயிர் வேறுண்டென்றல் பொருந்தாதென்னுங்கடாவை யாசங்கித்து அவ்வளவினவன்மசிமூக வென்னுநியாயத்தால் வேறு மதன்றுற்பரியமுணர்த்துதனுதலிற்று. இ-ள். கருவிகளோடு கூடியவழியுந் தன்னியல்புணருமாறின்றி அம்முதல்வன் இதுபோலமறந்து மறந்தறிதலின்றி அறிந்தவாறேயறிந்து நிற்கும் பேரறிவுடையனென வேதாகமங்களானறிவிக்கவறிந்து குரவனறிவுறுக்கு முபதேசமொழியைப் பெற்றுடையதாய் நிற்பதொன்றுளதாகலின் அதுவே மேலுமாயளவையாற் சாதித்துப்போந்த ஆன்மாவென்றவாறும். உணர்த்தவுணர்தலின் ஆன்மாவுளதெனை மேற்கொண்டது. எ-று.

அறிந்தாங்கென்பது அப்பொருட்டாதல் “எண்ணிய வெண்ணியாங் கெய்துப” என்பதனானுமறிக. இதற்குப் பி

றவாறுமுரைப்ப. அவையெல்லாம் பொருந்தாமை யோர்ந்துணர்க.

அறிந்து மறிவதே யாயு மறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி—யறிந்த
தேதுவறிவு மன்றாகு மெய்கண்டா னொன்றி
னதுவதுதா னென்னு மகம்.

எ-து. உ-ம். எ-னின். கருவிகளோடு கூடியவழியும் அவித்தை நீங்காமையின் விடயங்கண்மாத்திரையேயறியுமன்றித் தன்னியல்பறியுமாறில்லை அஃதுபதேசத்தாலறியப்பாலதேயாமாகலான் அதுபற்றி இழுக்கென்னையென்னுங்கடாவை யாசங்கித்து அதனையும் மேற்கூறிய நியாயத்தானுடம்பட்டு இன்னுமொருதாற்பரிய முறைக்குமுகத்தானே விடயங்களையறியுமிழியும் படும் வேறுபாடுகூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று. அவனறிதாங் கறியுமாறும் உயிர் மறந்து மறந்தறியுமாறும் தெரித்துணர்த்தி வலியுறுத்துதனுதலிற்று. எனினுமமையும்

இ-ள். அறிந்தும் அறிவதே ஆயும் அறியாது-எ-து கருவிகளெல்லாவற்றோடுங் கூடிச் சாக்கிரத்தானத்தினின்று விடயங்களையறியுமிடத்தும் ஒருங்கேயறியமாட்டாது ஒன்றனையறிந்தும் ஒன்றனையறியப்புகுவதாயும் முன்னறிந்த தொன்றனை அறியாதொழிந்தும். அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி-எ-து. இங்ஙனமொரோவொன்றாக அறியப்பட்ட விடயத்தையும் இடையீடின்றி அறியமாட்டாது விட்டுவிட்டாங்கே ஐந்தவத்தைப்பட்டடங்கி. அறிந்தது ஏது-எ-து. மீளவறிந்து வருதல் கண்கூடாகக் காணப்படுதலான் அங்ஙனமறிந்து வந்த பொருள் யாது அது சடமன்றென்பது மேற்காட்டப்பட்டது முன்னருங் காட்டப்படும். அறிவும் அன்று-எ-து. ஒன்றாக இயல்பாகவுணர்தலே பேரறிவாகலின் அதுவுமன்றாம். மெய்கண்டான் ஒன்

றின்-எ-து. இனி மெய்யாகிய சித்தாந்தநெறியினையுணர்ந் தோன் வேறென்னையோவென மனமொருங்கியாராயுமாயி ன். அது அது தான் என்னும் அகம் ஆகும்-எ-து. காட்டு மொளிக்கு வேறாய கண்ணொளிபோல அவ்வறிவிற்கு வேறா ய் அதுவதுவே தானெனச் சார்ந்ததின்வண்ணமாய் நின்றறி யுமியல்பையுடைய உயிராம். எ-று.

அறிந்தும் அறிவதேயாயும் என்னும் உம்மைகள் எண் ணின்கண் வந்தன. அறியாதுமென்னு மெண்ணும்மை விகா ரத்தாற்றொக்கது. அறிந்ததையுமென்னுமும்மை இழிவுசிற ப்பு. அறிவுமென்னுமும்மை இறந்ததுதழீஇயது. ஏகாரம் அசைநிலை.

அங்கு-உணர்த்துமுறைமைத் தானமாகிய இலாடத்தி னென்றவாறு.

அறிந்ததையும் விட்டடங்கி யறியுமாறு வருகின்ற சூத்திரத்திறுதியினும், அதுவதுதானெனச் சார்ந்ததின்வண் ணமாமாறு உண்மையதிகாரத்தும் பெறப்படும்.

அறிந்துமறிவதேயாயு மறியாதறிந்ததையும் விட்டங் கடங்கியறிந்தகேது என்பதற்கு ஓதியதனை ஓதியபொழுதே யுணர்ந்தும் பலகாலோதி யுணர்வதாயும் பலகாலோதியு முண ர்தலின்றியும் உணர்ந்ததனையும் பின்னர் மறந்தொழிந்தும் இவ்வாறேறுதி யுணர்ந்தறியாதென்றுரைத்தலுமொன்று. இப் பொருட்கு அடங்கியென்புழியும் எண்ணும்மை விரித்துரை க்க.

இங்ஙனம் மூவகைப்படுத்துரைக்கவே, உணர்த்தவுண ர்தலென்னு மேதுவான் முறையே அதீதத்தின்கணிகழு மிய ல்புபற்றியும் சுத்தத்தினிகழு மியல்புபற்றியும், உணர்த்து முறைமைக்கணிகழு மியல்புபற்றியும் உயிருண்மை சாதிக்கப் பட்டது. இது தற்பரமுமல்லை தனியென்றதனை வலியுறுத் தியவாறு காண்க.

விஞ்ஞானமே ஆன்மாவென்னும் புத்தரின் யோகாசாரன் மதத்தை மறுத்தற்கெழுந்தது இவ்வதிகரணமெனக்கொண்டு அதற்கியைய வுரைப்பாருமுளர்.

ஆறுமதிகரண முடிந்தது.

ஏழாமதிகரணம்.

இனி மாயாவியந்திர தனுவினுள் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். உடம்பு முதலியவற்றுள் ஒரோவொன்றே ஆன்மாவாதலின்றென்றதொக்கும் அவற்றுள் ஒன்று குறைந்தவழியும் அறிவு நிகழாமையானும் எல்லாங் கூடியவழி அது நிகழ்தலானும் அனைத்துங்கூடிய சமுதாயமே உயிராதலமையுமெனச் சமுதாயான்மவாதிகளாகிய சௌத்திராந்திகர் வைபாடிகர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தி னிறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். மாயாகாரியங்களான் யாக்கப்பட்டியன்ற சூத்திரப்பாவைபோலு முடம்பின்கண்ணே அவற்றிற்கு வேறாய் ஆன்மாவுண்டு எ-று.

எனவே அவையெல்லாம் மாயையின் காரியங்களாய் நிலைபெறுதனவாகலின் நிலைபேறுடைய உயிராகாவென்றவாறாயிற்று.

மாயை ஆகுபெயர் இகரம் விரித்தல்விகாரம்.

அவை தாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.

எ-து. வ-து. எ-னின். சித்தமுஞ் சித்தப்பகுதியுமாகிய *அகச்சமுதாயமைந்தும் மாயாகாரியமென்பது எம்மனோர்க்கு உடம்பாடன்மையின் அதுபற்றி ஆன்மா வேறுண்டெ

* அகச்சமுதாயம் ஐந்து - உருவம், வேதனை, ஞானம், குறி, வாதனை.

னச் சாதித்தலமையுமாறென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து அவ்வாளினவன்மகிழ்கவென்னு நியாயம்பற்றி வேறுமோராற்றாற் சாதித்தனுதலிற்று. இ-ள். நீ ஐந்துகந்தமெனத் தோண்ட மாயாகாரியங்கள் ஆன்மாவெனப் பெயர்பெறுமாறின்றி வேறு வேறு பெயர்பெற்று நிற்பனவாகலான் மாயாவியந்திரதனுவினுள் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ-று.

வேறு வேறு என்பது வெவ்வேறென மரீஇயிற்று.

கலையாதி மண்ணந்துங் காணிலவை மாயை
நிலையாவாந் தீபமே போல—வலையாமன்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடி லதுதனுவாந்
தானத்தின் வேறாகுந் தான்.

எ-து. உ-ம். எ-னின். அவை தனித்தனி வெவ்வேறு பெயர்பெறினுந் தொக்க சமுதாயத்தின்கண் ஆன்மாவெனப் பெயர்பெறுமெனக் கோடுமாகலின் அதுபற்றி யிழுக்கென்னையென்னுங் கடாவை யாசங்கித்து அவை வெவ்வேறு பெயர்பெறுமவழியும் அவர் கூறியவாறு பெயர்பெறாது வேறு பெயர் பெறுமாறும் அவை மாயாகாரியங்களேயாமாறும் அவை தொக்க சமுதாயத்தினும் ஆன்மாவெனப் பெயர்பெறாது வேறுபெயர் பெறுமாறுமுணர்த்தி அதனை வலியுறுத்து தனுதலிற்று.

இ-ள். காணின் கலை ஆதி மண் அந்தம்-எ-து. அங்ஙனந் சமுதாயமாதற்குரியவை யாவையென்று அளவைகளானறியப்புகிற் கலைமுதனிலமீறாகிய தத்துவங்களேயாம். அவை மாயை நிலையாவாம்-எ-து. அவையனைத்தும் மாயையின்காரியங்களாகலின் நிலைபெறுதலின்றிச் சிலகாலநின்றழிவனவாம். ஞானத்தை அலையாமல் முன் உணர்ந்து நாடில்-எ-து. அவை தொக்க சமுதாயத்தின் விளங்கித்தோன்றுவதாய ஞானத்தினியல்பை அசையாமற் கருத்தை யொருக்கி

முன்னுணர்ந்து பின் அச்சமுதாயத்தை யாதென்றாராயின், அது தீபமேபோலத் தனுவாம்-எ-து. அச்சமுதாயங் கண்ணுக்கு விளக்குப்போல உயிர்க்குத் தூலசூக்குமபரங்களாகிய உடம்பாம். தான் அத்தின் வேறு ஆகும் தான்-எ-து. ஆகலாற் கண் விளக்கின் வேறாயினாற்போல உயிர் அவ்வுடம்பின் வேறாம். எ-று.

ஆமென்பது மேலுஞ்சென்றியையும்.

மரபை ஆகுபெயர்.

தானென்பது முன்னையதெழுவாய்; பின்னையது அசை.

அதனினென்பது அத்தினென மரீஇயிற்று, "இத்தைமெய்யெனக் கருதி" என்புழிப்போல.

இதனானே தனியென்றதனை வலியுறுத்தவாறு.

இவ்வாறு மூன்றாஞ்சூத்திரத்தானும் சைவாகமங்களுட் கூறப்படும் பதிமுதலிய பொருள்களதுண்மை அநுமானவளவையான் வலியுறுத்தப்பட்டது. ஆகமவளவையே யமையுமாகலின் அநுமானவளவை மிகையாம்போதுமெனின்? ஆகாது: மந்தவுணர்வுடைய மாணாக்கர்க்கு வேற்றுச்சமயநூல்களை நோக்கியவழிச் சைவாகமப்பொருளின் மலைவு நிகழாமைப்பொருட்டும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென்னு நான்குவகையானன்றி ஆகமங்களைக் கேட்டதுணையானே அநுபவங் கூடாமையிற் சிந்தனை செய்து வன்மைமென்மையுணர்ந்து தெளிந்துகோடற்பொருட்டும் கருதலளவையும் வேண்டப்படுமாகலானென்க.

ஏழாமதிகரணமுடிந்தது.

மூன்றாஞ்சூத்திரமுடிந்தது.

பிரமாணவியல் முற்றிற்று.

இலக்கணவியல்.

நான்காஞ்சூத்திரம்.

——(:o:)——

அந்தக் கரண மவற்றி‍ெனான் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.

எ-து. சூ-ம். எ-னின், இதுவுமது.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்துணர்த்துதனு தலிற்று.

இ-ள். பிரமாணம் இலக்கணமிரண்டானும் பொருளுண்மை பெறற்பாற்றென்னு முறைமைபற்றி மேற்பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட பதி பாச பசுக்களுக்கிலக்கணம் எதிர்நிரனிறையாக வைத்துக் கூறுவான்றொடங்கி அவற்றுள் இது மேலடுக்க நின்ற ஆன்மாவினிலக்கணங் கூறுதனுதலிற்று.

சொற்பல்காமைப்பொருட்டும் ஒத்து வேறுயவழியும் இயைபுடைமையுணர்ந்து கோடற்பொருட்டும் ஈண்டு இதுவுமதுவென மாட்டெறிந்துரைத்த ஆசிரியர், இங்ஙனமுரைத்துக்கோடற் கேற்பவன்றே ஆண்டு ஆன்மாவினதுண்மையுணர்த்துதனுதலிற்றெனச் சிறந்தெடுத்தோதாது பொதுப்பட ஆன்மப்பிரகாசமுணர்த்துதனுதலிற்றென்றதூஉமென்க, இவ்வாறன்றி மேலைச்சூத்திரத்தின் ஆன்மாவினதுண்மை கூறுமுகத்தாற் றொருத்தோதிய அஞ்சவத்தையை ஈண்டிலக்கணங்கூறுமுகத்தான் விரித்தோதப்படுதலின், இதுவுமதுவென்றது மேலைச்சூத்திரப்பொருளோடு மாட்டெறிந்ததென்றுரைப்பினுமாம். இதனானுஞ் சூத்திரவியைபு இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு: ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரஞ் சித்தமென்னு நான்கனுள் ஒன்றன்றாயினும் நண்ணுணர்வின்மையிற் சூழ்ச்சித்துணைவராகிய அமைச்சரோடு கூடிநின்று தன்றொழினடாத்தும் அரசன்போல, சகசமலத்தினான் உணர்வின்றிக் கஞ்சுகம்போலுங் கலாதிகளாற் பொதுவகையான் உணர்வு நிகழினுஞ் சிறப்புவகையான் நிகழுமாறு அவற்றாற் பெறப்படாமையிற் சிறப்புவகையானுணருமாறு தனக்குச் சூழ்ச்சித்துணையாகிய அவ்வந்தக்கரணங்களோடு கூடி நின்று சாக்கிரமுதலிய ஐந்தவத்தையுடைத்தாம். எ-று.

எனவே, அங்ஙனநின்று அஞ்சவத்தைப்படுதல் ஆன்மாவுக் கிலக்கணமென்றவாறாயிற்று. இஃது உயிர்க்குத் தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு.

ஒன்றன்றாயினும் சகசமலத்து உணராது அமைச்சரசேய்ப்ப அவற்றொடு சந்தித்துநின்று அஞ்சவத்தைத்தாமெனவியையும்.

உணராது சந்தித்ததென்பது காரணகாரியப்பொருட்டாய் நின்றது. சந்தித்தது வினையெச்சமுற்று.

இவ்வாறன்றி ஆன்மா அவற்றினொன்றன்றாயினும் சகச மலத்துணராமையால் அவற்றொடு சந்தித்தது சந்தித்தவழி அவையுந்தானும் அமைச்சரசேய்ப்ப நிற்றலான் ஐந்தவத்தைத்தாயிற்று எனவதிகரணம் பகுத்துக்கோடற்கேற்ப வேறு வேறு வினைமுடிபு செய்துரைத்தலுமொன்று.

வடமொழிச்சூத்திரத்தோதுதலின் ஈண்டும் ஆயினுமெனவருவித்து ஒருதொடராக வைத்துரைக்க. அந்தக்கரணமவற்றினொன்றன்றாயினுமெனவே, அவற்றினொன்றாதலும் அநுவாதமுகத்தால் ஈண்டுபெற்றாம். இஃதுணராதார் அந்தக்கரணமவற்றினொன்றன்றென்றதனை வேறுதொ

டாராக வைத்துரைப்ப. அங்ஙனமுரைப்பின், முன் வருவன வற்றை அவாய்நின்று ஒருபொருண்மேல் வாராமையின் ஒரு சூத்திரமாதற் கேலாமையறிக.

அவை சந்தித்ததென்புழி ஒடுவுருபு விகாரத்தாற் றொக்கது; இரண்டாவது விரிப்பினுமமையும்.

ஆன்மாவென்பது மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கற்பாலதாகவும், ஈண்டு வேறோதியது ஒத்து வேறாதலிற் றென்றுணர்க.

ஆன்மாவென்னுஞ்சொற்குப் பொருள் வியாபகமென் பதூஉம் சித்தசித்தென்பதூஉமாம்.

மலத்து மலத்தாலெனவிரிக்க.

அமைச்சரசு அமைச்சரொடு கூடிய அரசென உருபும் பொருளும் உடன்றொக்கன.

காரணப்பொருட்டாய நின்றென்னும் வினையெச்சம் அஞ்சவத்தைத்தென்னும் வினைக்குறிப்புமுற்றோடு முடிந்தது.

இதனுள் அந்தக்கரணமவற்றினொன்றன்றென்றது ஓரதிகரணம்; ஒன்றன்றாயினுஞ் சகசமலத்துணரா தமைச்சர சேய்ப்பவவை சந்தித்ததென்றது ஓரதிகரணம்; அமைச்சர சேய்ப்பநின்றஞ்சவத்தைத்தேயென்றது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

முதலதிகரணம்.

—;0:—

ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தியகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது.

ஏது. மேல், எ-னின், ஏனையவெல்லாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்பனவாகலான் உயிராகா ஆயினும் மனமுதலிய அந்தக்கரணங்கள் சிந்தையைச் சிவனென்றுஞ் சிவ

னைச் சிந்தையென்றும் இங்ஙனம் மூயிரென்றும் பெயராலும் வழங்கப்படுதலுண்மையாலும் இந்திரியமுதலியவற்றை அவ்வாறு கூறுமையின் அஃதாகுபெயரென்றற்கேலாமையாலும் அவையே தனித்தனி ஆன்மாவாமென்றல் அமைவுடைத்தென அந்தக்கரணான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடலுதலிற்று. இது மேலைச்சூத்திரத்துள் ஓதற்பாலதேயாயினும் ஈண்டிலக்கணங்கூறும் வழியும் அவற்றோடு சந்தித்து அமைச்சரசேய்ப்ப நிற்பதென அவத்தைக்கேதுவாக எடுத்தோதவேண்டுதலின் ஈரிடத்துமெடுத்தோதுதல் "சில்வகையெழுத்தின் செய்யுட் டாகிச், சொல்லுங் காலை யுரையகத் தடக்கி, நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகி" என்னுமிலக்கணத்ததாய சூத்திரத்துக் கேலாமையான் அதுபற்றி விதிமுகத்தானன்றி அநுவாதமுகத்தான் ஈண்டுணர்த்தப்பட்டது., இ-ள். வெ-டை.

ஈண்டு அந்தக்கரணமென்றது உள்ளந்தக்கரணமாகிய கலாதிகளினுஞ் செல்லாமைப்பொருட்டு மனோபுத்தியகங்காரசித்தங்களிலெனக் கிளந்தெடுத்துரைத்தார். கலாதிகளுண்டெனக்கொண்டோரின் உயிர் வேறுண்டெனக்கொள்ளாதார் இன்மையின் ஆண்டாசங்கை நிகழாமையாலும் அமைச்சரோடு உவமிக்கப்பட்டு அவத்தைக் கேதுவாவன அம்மனமாதியேயன்றிக் கஞ்சுகத்தோடு உவமிக்கப்பட்டு அதீதத்தினு நீங்காது உடனிற்பனவாய கலாதிகளன்மையாலும் அவற்றை ஈண்டெடுத்தோதவேண்டாமையின் மனமுதலிய புறவந்தக்கரணங்களே ஈண்டுக் கூற நின்றனவென்பது கருத்து.

அவைதாம் பிரகாசமாய்நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

எ-து. ஏது, எ-னின், * "மனமும் புத்தி யகங்காரஞ்

* சிவஞானசித்தி, சார்வாகசூத்திரம். உ. சுருவியா.

சித்த நான்கு, மருவியான் மாவே யென்ன வரும்" என நீயிரு ங்கோடலின் உயிர் அவற்றுளொன்ருதலமையுமென்ருற்படு மிழுக்கென்னையென்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். அவ்வந்தக்கரணங்கடாம் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாய்நின்றே தம்மை நோக்கி அசித்தாய் நிற்றலால் தன்னை நோக்கியுஞ்சித்தாய் நிற்குமி இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்காரசித்தங்களில் ஒன்றன்றெனை மேற்கொண்டது. எ-று.

எனவே, உயிரான் அதிட்டிக்கப்பட்டு ஐம்பொறிகளறிந்த விடயங்களுள் ஒன்றனை இஃதியாதாகற்பாற்றெனச் சித்தஞ்சிந்தித்தறியும், யான் சிந்தித்தேனென்றறியமாட்டாது. மனம் அதனை இஃதின்னதாகற்பாற்றெனவும் அஃதாமோ அன்றோவெனவும் இவ்வாறு சங்கற்பவிகற்பஞ்செய்தறியும்; யான் சங்கற்ப விகற்பஞ்செய்தேனென்றறியமாட்டாது. அகங்காரம் அதனை இன்னதெனத் துணிவேன் யானென்று ஒருப்பட்டெழுந்தறியும்; யானொருப்பட்டெழுந்தேனென்றறியமாட்டாது. புத்தி அதனை இன்னதிதுவென நிச்சயித்தறியும்; யானிச்சயித்தேனென்றறியமாட்டாது. ஆகலான் அவ்வாறின்றி அவற்றொடு கூடி யான் சிந்தித்தேன் பற்றினேன் எழுந்திருந்தேன் நிச்சயித்தேனென்றும் அதன்பின் அது வதுவாய்ப் பரிணமித்துச் சுகதுக்கமோகரூபமாய்த் தன்மாட்டு வந்த புத்திதத்துவத்தின் பரிணாமங்களைக் கலாதிகளொடு கூடி நின்று இது சுகம் இது துக்கம் இது மோகமென்றறிந்தும் யான் சுகித்தேன் யான்றுக்கித்தேன் யான் மோகித்தேன் என்றறிந்தும் இங்ஙனம் பிறவற்றை நோக்கியுந் தன்னை நோக்கியுஞ் சித்தாகிய ஆன்மாத் தம்மை நோக்கிச் சித்தாகாத அந்தக்கரணங்களின் ஒன்ருமாறியாண்டையதென மறுத்தவாருயிற்று. *"இவன்ருனும் புத்தியுஞ்சித் திவனு

* சிவஞானசித்தி, பதினொராஞ்சூத்திரம். கக, சிவன்சீவ.

மோ புத்தி' ' என வழிநூலாசிரியர் கூறியதும் இவ்வியல்பு நோக்கி.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசம் என்பன சித்து அசித்தென்னும் பொருளவாம்.

ஏனையோரை நோக்கி அரசனுக்கு அணுக்கராதற் சிறப்புப்பற்றி அமைச்சரை அரசரென்று உபசரித்துக் கூறப்படுமாறுபோலப் புறக்கருவிகளை நோக்கி ஆன்மாவுக்கு அணுக்கமாய் நிற்றற்சிறப்புப்பற்றி மனம்புத்தியகங்காரஞ்சித்த நான்கு மருவி யான்மாவேயென்ன உபசரித்துக் கூறப்படுமத்தனை யென்றொழிக. சூழ்ச்சித்துணையாதல்பற்றி அந்தக் கரணங்கள் அமைச்சரையொக்குமெனவே, ஏனைக்கருவிகள் ஏனைப்பரிசனங்களை ஒக்குமென்பது பெற்றாம். அது ஞானமிர்தத்திற்காண்க.

மேலைச் சூத்திரத்திற்கூறிய ஏதுக்களே ஈண்டைக்குமமையுமாயினும், சிறந்தமைபற்றி வேறேதுக்கூறினார்.

மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்
மனமாதி மன்புலனி னல்லன்—மனமே
லுதித்தொன்றை யுள்ள முணர்த லதனி
லுதிக்குங் கடற்றிரையை யொத்து.

எ-து. உ-ம் எ-னின். அவ்வந்தக்கரணங்கள் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாறும் தம்மின் மேலுள்ளவற்றை நோக்கியுந் தம்மைநோக்கியும் அசித்தாமாறுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். மனம் ஆதியால் உணர்தல் மன்னு புலன்கள்- எ-து. மனமுதலிய அந்தக்கரணங்களாலுணரப்படுவன ஐம்பொறிகளாற்றரப்பட்டுப் புறத்தே நிலைபெற்ற விடயங்களாம். உள்ளம் உணர்தல் மனம் மேல் உதித்த ஒன்றை- எ-து. ஆன்மாவுணர்வது மனத்துக்கு மேலெனப்படும் புத்தி

யிற்றோன்றிய தோன்றலையாம். கடற்றிரையை ஒத்து உதிக்கும்-எ-து. அவ்விருவேறுணர்வுங் கடலிடையெழுந்து கரைசாருந்திரைபோலப் பரம்பரையின் ஆன்மாவின்மாட்டு வந்து தோன்றும். அதனின் மனம் ஆதி மன் புலனின் அல்லன்-எ-து. அதனானே மனமுதலியன அவ்விடயங்களின் வேறாயினாற்போல ஆன்மாவும் அம்மனமுதலியவற்றின் வேறாம். எ-று.

உதிக்குமென்னும் பயனிலைக்கு உணர்தலிரண்டும் எழுவாய். மன்அசை,

செவ்வெண்டொகை விகாரத்தாற் றொக்கது.

புலனின் இன் உவமவுருபு.

அல்லனென ஆறீஉவறிசொல்லாற் கூறியது வடமொழி மதம்பற்றி.

உதித்தவென்னும்பெயரெச்சவீறு விகாரத்தாற்றொக்கது.

புத்தியிற்றோன்றியதோன்றுவது சுகதுக்கமோகரூபவிடயம்.

பரம்பரையிற் றோன்றுதலாவது முன்னர் வாயிற் காட்சியுணர்வு தோன்றி அதன்பின் மானதக்காட்சியுணர்வு தோன்றி அதன்பின்னர்த் தன்வேதனைக்காட்சியுணர்வு உயிரின்கண் வந்து தோன்றுதல்.

இதனானே அந்தக்கரணங் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாறும் மேலுள்ளவற்றை நோக்கி அசித்தாமாறும் உயிர் அவ்வாறன்றி யாண்டுஞ் சித்தாமாறுங் கண்டுகொள்க.

சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதா யாங்காரம்
புந்தியா யாய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேறு
மவ்வேறும் போதுபோ லாங்கு.

எ-து. உ-ம். எ-னின். மேற்பொதுவகையாற் கூறிப்போந்த அந்தக்கரணங்களினியல்பு சிறப்புவகையாற்கூறுமுகத்தான் மானதக்காட்சியுள்ளுங் கடற்றிரைபோலப் பரம்பரையின் வெவ்வேறாயுணர்வு நிகழுமாறுணர்த்தி உயிர்வேறாதலை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். உள்ளம்-எ-து. புருடதத்துவமென நின்றவுயிர். ஈங்கு-எ-து. வாயிற்காட்சியாற் கண்டவிடயங்களினொன்றனை மனமாதியானுணரும் மானதக்காட்சியின்கண்ணும் ஒருபெற்றித்தாதலின்றி, சித்தமாய்ச்சிந்தித்து-எ-து. சித்தமாய் நின்று இஃதியாதாகற்பாற்றெனச் சிந்தித்தும், மனமாகிப் பந்தித்து-எ-து. அதன்பின் மனமாய் நின்றுஇஃதின்னதாகற்பாற்றெனப்பற்றியும், ஆங்காரம் ஆய்த்தெளியாது-எ-து. அதன்பின் அகங்காரமாய் நின்று இஃதாமோ அன்றோ இதனை யின்னதெனத் தெளிவேன் யானெனத் தெளிவுபிறவாதெழுந்தும், புந்தியாய் ஆய்ந்து-எ-து. அதன்பின்னர்ப் புத்தியாய்நின்று இஃதின்னதெனத் தெளிந்தும், வெவ்வேறு தானே துணிந்து இவ்வேறாம்-எ-து. இங்ஙனம் வெவ்வேறாகவே யுணர்தலான் அவ்வாறுணரும் புருடன் இவ்வந்தக்கரணங்களின் வேறாம், போது அவ்வேறாம் போல்-எ-து. ஞாயிறுமுதலியவற்றோடு கூடிநின்று நாழிகை நாள் பக்கந் திங்கள் யாண்டு முதலியனவாய்ப்படும் பாகுபாடுசெய்யுங் காலதத்துவம் அஞ்ஞாயிறுமுதலியவற்றின் வேறாயினாற்போல். எ-று.

ஆய்தல் ஈண்டு நிச்சயித்தற்பொருட்டு.

துணிதலென்பது அறிதலென்னும் பொருண்மாத்திரையாய் நின்றது.

தான் அசை. ஏகாரந் தேற்றம்.

இவ் அவ் என்பன வகரவீற்றஃறிணைப்பன்மைச் சுட்டுப்பெயர்.

வேறும் போதுபோலெனவே, ஆண்டு நீக்கப்பொருள் ஞாயிறுமுதலியனவென்பது தானே விளங்குமென்பது நோக்கி அவ்வெனச்சுட்டியொழிந்தார். சாரியையும் உருபும் உடன்றொக்கன.

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஆங்கும் வெவ்வேறு தானே துணிந்தெனவே மானதக்காட்சியும் இங்ஙன நால்வேறுவகைத்தாய் ஒன்றற்கொன்று முறையே ஏதுவும் பயனுமாய்க் கடற்றிரைபோலப் பரம்பரையிற் றோன்றுமென்றவாறாயிற்று.

செய்யுளாகலின் முறைபிறழ வைத்தார்.

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாத முளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று.

எ-து. உ-ம். எ-னின். அம்மானதக்காட்சியினிகழுஞ் சவிகற்ப வுணர்விற்கேதுவாய் அவற்றையுடனின்று செலுத்தும் அக்கரங்களிவையென்பதும் அவற்றுணர்வு மாறிமாறித் தோன்றுமாறு முணர்த்துதனுதலிற்று. இ-ள். வெ-டை

* "மன்னு மகார மனஞ்செலுத்தும் புத்தியினை, யுன்னு முகார முபகரிக்கு—முன்னுகு—மாங்காரந் தன்னை யகாரஞ் செலுத்தியிடு, நீங்காத சித்தம் விந்துநோ" என்பவாகலானும், ஈண்டோதிய முறையே முறையெனவும், † "அவ்வுடனுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்காரங்கள்" என வழிநூலாசிரியரோதியது எதிர்நிரனிறைப் பொருளெனவுங் கொள்க. "அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்கா ரங்கள்" என்றதே முறையெனக்கொண்டு அதற்கியையக் கொண்டுகூட்டி யுரைப்பாருமுளர்.

* துகளறுபோதம். † சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம் ௩.

பகாதிவற்றைநாடிற் பிரணவமாமெனவும் போன்று மெனவுங் கூட்டுக.

அந்தக்கரணங்களைச் செலுத்தும் அக்கரங்களைக் கூறு வார் ஒப்புமைபற்றிப் புருடனைச் செலுத்தும் அக்கரமும் உடன்கூறினார்.

உடனின்று செலுத்துதல்பற்றி அபேதமாக வைத்தோதப்பட்டன.

* "நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதிகலையைப்பற்றி" அகரமுதலிய பஞ்சகலைவடிவாய் நின்று இவற்றை வேறுவேறு செலுத்துதல்பற்றிக் கணந்தோறும் நினைப்பு மறப்புமாகிய சகலகேவலங்கள் அதிருட்டமாய்க் கறங்கோலைபோல மாறி மாறி நிகழுமெனவும், மாசகலத்தின்கட் கணந்தோறும் அங்ஙனமுணர்வுதித்தும் ஒடுங்கியும் வருதல் சமுத்திரத்தின்கட் புதிது புதிதாய்த் திரைதோன்றியும் ஒடுங்கியும் வருமாறுபோலுமெனவுமுணர்க. கடற்றிரையுவமை மேற் பரம்பரையாய் உணர்வு வருதற்கெடுத்துக்காட்டினார் ; ஈண்டுப் புதிது புதிதாய் வருதற்கெடுத்துக்காட்டினார்; ஆகலாற் புனருக்தியன்மை யுணர்க.

எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமா
நண்ணிய விந்துவோடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன்மா லோடு பரமனதி தெய்வ
மகரவுக ரம்மகரத் தாம்.

எ-து. உ-ம். எ-னின். அவ்வக்கரங்களுஞ் சடமாகலின் அவற்றை யதிட்டிக்கும் அதிதெய்வங்கள் இவையென்பதுணர்த்துதனுதலிற்று.

இ-ள். எண்ணிலவோங்காரத்து நண்ணிய விந்துவோடு நாதத்ததிதெய்வங் கண்ணில் ஈசரொடு கூடிய சதாசிவமாம்.

* சிவஞானசித்தி, முதற்சூத்திரம். உச.

அகரவுகரமகரந்ததிதெய்வங்கண்ணிற் பகரயன் மாலோடு பரமனும். எ-று.

எண்ணிலோங்காரம் எண்ணத்தின்கண் நிலவிய ஓங்காரமென வினைத்தொகை. எண்ணம் ஈண்டு மானதக்காட்சி.

ஒடு எண்ணின்கண் வந்தது.

ஈண்டு அயன் மால் பரமனென்றது சுத்தவித்தையின் வைகுவாரை. பரமன் உருத்திரன். அகரவுகரம் மகரத்தா மென்புழி மகரம் இசைப்பொருட்டாய் ஒற்றில்வழி யொற்றாய் வந்தது.

முதலதிகரணமுடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனி இவ்வான்மாச் சகசமலத்தினு லுணர்வின்றென் றது.

எ-று. மே-ள். எ-னின், ஆன்மா அந்தக்கரணங்களி னொன்றன்றாயின் அவற்றோடு சந்தித்து நிற்றற் கேதுவென் னையெனின் அவர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோ ளுத விற்று. இ-ள். வெ-படை.

ஆகந்துகமலங்களி னீக்குதற்குச் சகசமலமென விசே டிக்கப்பட்டது: படவே, உயிர் முதல்வனைப்போல் அந்தக் கரணமுதலியவற்றின் வேறாய தனிப்பொருளாயினுஞ் செம்பிற்களிம்புபோல வேறுகாரணமின்றி மூலமலந் தன் னோடு உடனாய்நிற்றலிற் றன்னியல்பான் உணருமாறின்றிக் க ருவிகளைக் கூடிநின்றுணர்வதாயிற்றெனவிடுத்தவாறாயிற்று. இதனானே மலத்துளதாமென மேற் பிரமாணத்தாற் பெற விக்கப்பட்ட மூலமலத்திற்கு ஈண்டிலக்கணங் கூறினரென் பது பெறுதும். அறியாமையைச் செய்தலாகிய கேவலத்தி னிகழுமியல்பே மலத்திற்குத் தன்னியல்பு, கருவிகளோடு

கூடி அவத்தையுறுவதாகிய விபரீதவுணர்வைச் செய்யுஞ் சகலத்தினிகழுமியல்பே பொதுவியல்பாகலான்; மலத்திற்கு இருவகையிலக்கணமும் ஈண்டே பெறப்பட்டன.

அது தான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்.

எ-து. ஏது. எ-னின். சகசமலத்தினுல் உணர்வின்றியொழியிற் பின் கருவிகளோடு கூடியவழி அறிவுண்டாமாறியாங்ஙனமெனச் சற்காரியவாதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். அச்சகசமலமாவது ஞானத்திற்குத் திரோதகமாய் அதனையில்லையென்னும்படி மறைத்துக்கொண்டு நிற்றலான், இனி இவ்வான்மாச் சகசமலத்தினுல் உணர்வின்றென மேற்கொண்டது. எ-று.

மலத்தினதிலக்கணம் வடமொழிவழக்குப்பற்றிக் கூறுவார் ஞானதிரோதகமாயெனவும், அதனைத் தமிழ்மொழியான் *விளக்குவார் மறைத்துக்கொடு நிற்றலானெனவுங் கூறினாராகலான், அது கூறியது கூறலன்மையுணர்க. திரோதகமென்னும் வடமொழி மறைத்தலைச்செய்வதென்னும் பொருட்டாய் வினைமுதன்மேனின்ற வினைப்பெயர்.

*மூலமலத்தினியல்பு சிறிது காட்டுதும். மூலமலமாவது பிராந்தி ஞானமே பிறிதில்லையென்பரொருசாரார். ஒருசாரார் ஞானுபாவமென்பர். ஒருசாரார் தமோகுணமென்பர். ஒருசாரார் மூலப்பகுதியிற் றேன்று மவிச்சையென்பர். ஒருசாரார் மாயை கன்மங்களென்பர். ஒருசாரார் சிவசத்தியென்பர். ஒருசாரார் ஆன்மாவின் குணமென்பர். மலமாவது இவை யனைத்தினும் வேருய் ஒன்றாய் நித்தமாய் வியாபகமாய் ஞானதிரோதகமாகிய திரவிய மென்பது தொகுத்துக் காட்டுதும். மேற்கூறிய அளவைகளால் ஆன்மாத் தோற்றக்கேடின்றி நித்தமாய் வியாபகமாய் நிற்பதென்பது

---

* இதுமுதல் இக்குறிவரும் வரை பாஷ்யம்.

குணியாம். இனி ஆன்மாவுக்குத் தோற்றக்கேடுக ளுளவா யின், செய்த வினை நசிப்பச் செய்யாதவினை யுண்டாமெனப் பட்டு வினை யிலக்கணத்தோடு முரணும். ஈன் றணிய குழவி தாய் முலைப்பால் பசிப்பிணி தீர்க்கு மருந்தென் றறிந்ததன்க ண் முயலுதல் காண்டும். அஃதும்மைப்பயிற்சி வயத்தா னு ளதாகிய வாசனை யில்வழிக் கூடாது. இனி நித்தப்பொரு ளை யவயவ முடைத்தெனப்பட் டழிவெய்துவதாகிய வேக தேச மென்றல் கூடாமையின், ஆன்மா வியாபியென்பதும் பெற்றாம். பெறவே, அவ்வக் குணங்கள் அவ்வக் குணிக ளின் வேறன்மையின், ஆன்மாவின் குணமாகிய ஞானமும் அவ்வாறே நித்தவியாபகமாதல் பெறப்பட்டது. அறிவாவ து ஒன்றனை விடயித்தலே பிறிதன்றாகலின், அங்ஙனம் விட யிப்பதாகிய வறிவு ஒருகா னிகழ்ந்தும் ஒருகா னிகழாதுங் காலத்தானும் இடத்தானும் ஏகதேசமாய் நிகழ்தலுங் காண் டும். அவ்வறிவு செயற்கையா னிங்ஙன நிகழ்தற்குக் கார ணமுண்டென்பது பெறப்படுதலின், அது பிராந்தி ஞானமு தலியவற்று ளொன்றென்றல் கூடாமையின், பாரிசேடிய வளவையான் அவற்றின் வேறாகிய சகசமலம் அத்தன்மைத் தா யுண்டென்பது பெற்றாம்.

அற்றேல், காரணம் பிராந்தி ஞானமுதலியவற்றி னொ ன்றேயாக; அவற்றின் வேறுண்டென்பதற்குப் பிரமாண மென்னையெனின்? கூறுதும். கயிற்றை யரவெனக் காணு ம் பிராந்தி கண்ணின்கண் யாதானு மோர் குற்றமில்வழி நிக ழாமையின் அதுபோலத் தேகமே யான்மா வென்றறிதற் றொடக்கத்துப் பிராந்தி ஞானமும் ஆன்மா வின்க ணொரு குற்ற மில்வழி நிகழாமையின், அக்குற்றமாகிய சகசமலம் பிராந்தி ஞானத்தின் வேறா யுண்டென்பது பெறப்படும். இனி ஞானாபாவமே யது வெனின்? ஞானத்தின் என்றும பாவத்திற்கும் அழிவுபாட்டபாவத்திற்கும் ஒன்றினொன்ற பாவத்திற்கும் ஒருகாலு மழிவின்மையான் முத்தியென்பு

தோன்றில்லையாய் முடியும். வீடு பேறுண்மை வேதாகமங்களிற் பெறப்படுதலின், அவற்றோடு முரணுமைப் பொருட்டு ஞானபாவமாவது ஞானத்தின் முன்னபாவமெனக் கொடல்வேண்டும்' வேண்டவே, நித்தமாகிய ஞான முன்னில்லாதொழிதற்கு வேறு காரண முண்டெனப் பெறப்படுதலின்; அதுவே சகசமல மெனப்படு மென்க. இனித் தமோகுண முதலிய வொன்றன் காரியமாய் இடையே தோன்றி யழிவனவாகலின், அவை யநாதியே ஞான திரோதகமாய் ஆன்மாவைப் பந்திக்கமாட்டாமையின், சுத்தமாய் நின்ற வான்மாவை இடையே பந்தித்து நின்றனவெனின், அவை யிடையே பந்தித்தற்குக் காரணம் வேண்டும். காரணமின்றிப் பந்திக்குமெனின், முத்திபெற்றவழியும் பந்திக்குமென்பது முடியுமாகலின், அவற்றின் வேறாய் அநாதியே பந்திப்பதாகிய சகசமல முண்டென்பது பெறப்படும். இனி மூலப்பகுதியிற் றோன்று மவிச்சையே யதுவெனின்? மூலப்பகுதியிற் றோன்று மவிச்சை அநாதியி லான்ம ஞானத்தினைப் பந்தித்ததென்ற லேலாமையானும், அது மாயாகாரிய மாகலின், ஞான வியஞ்சகமாவதல்லது ஞான திரோதகமாகாமையானும், அநாதியே ஆன்மஞானத்தினைத் தடைசெய்து நிற்குஞ் சகசமலம் வேறுண்டென்பது பெறப்படும். இனி மாயை கன்மங்கள் ஆன்மாவின் வேறுமாய்ச் சடமுமாய்ப் பந்தமுஞ் செய்து நிற்றலின், அவையே யமையும்; வேறு மோர் சகசமல முண்டெனக்கோடல் மிகையாமாலோவெனின்? அவை யங்ஙனமாயினும், ஞானதிரோதக மல்ல வாகலான், ஞான திரோதகமாகிய மூலமலம் வேறுண்டென்க.

இனிச் சிவசத்தி ஞான திரோதகமாய் நிற்குமெனின்? சித்தாகிய சிவனது சத்தியுஞ் சித்தாவதன்றிச் சடமாதலின்மையாற் றனக்குப் பகையாகிய சடப்பொருள் சித்தைப் பந்தமுறுத்துவதன்றிச் சித்துப்பொருள் சித்தைப் பந்தமுறுத்துமாறின்மையானும், உறுத்துமெனின், முதல்வனது பெரு

ங்கருணைக் கிழுக்காகலானும், சடப்பொருளாய்ப் பசுமுறு விக்குஞ் சகசமலம் வேறுண்டென்பது பெறப்படும். இனி மலஞ் சடமாய் நிற்றலின், ஆன்மாவின் குணமெனக்கோட லே பொருத்தமுடைத்தெனின்? அறியாது கூறினாய்; கு ணமாயினிடையே நீங்குதல் கூடாமையானும், ஆன்மா வறி தற்குணமுடைத்தாகலின், அறியாமையு மறிவுமாகிய விர ண்டு மறுதலைக்குண மொருபொருட்குக் கூடாமையானும் அஃதான்மாவின் வேறாயதோ ரகவிருளாகிய திரவிய மென் பது தெற்றென வுணர்ந்துகொள்க. சிவாதித்தமணிதீபிகை யுடையாரு முதலதிகரணத் திறுதியிற் பயன் கூறும்வழி, ஞானாபாவமே யஞ்ஞான மென்பாரைமறுத்து, மலந் திரவிய மென்றும், அநாதிப்பொருளென்றும், மலசத்திகள் பலவெ ன்றும், முத்தியின் மலசத்திக்குக் கேடன்றி மலத்துக்குக் கேடின்மையின் அநாதிப்பொருளாதற் கிழுக்கில்லை யென்று ம், கடா விடைகளான் விரித்துக் கூறியவாறுண்டுக் காண்க.

அஞ்ஞானமென்னு மகவிருண் ஞானாபாவ மாகாதெ ன்று இவ்வாறு மறுக்கப்படவே, அந்தகாரமென்னும் புறவி ருள் ஆலோகத்தின் அபாவமென்பதூஉ மறுக்கப்பட்ட வா றாயிற்று. அதுவுஞ் சிறிது காட்டுதும். ஆலோகத்தி னபா வமே யந்தகாரமென்பார்க்கு, அம்முறை பற்றிச் சுகத்தி ன பாவமே துக்கம்; தன்மத்தின் அபாவமே அதன்மம்; சை யோகத்தி னபாவமே விபாகமென் றிவ்வாறு கோடல் வே ண்டும். அங்ஙனங் கொள்ளாமையால் அவர்க்கு மது கருத் தன்று போலுமென மறுக்க. அன்றியும், ஆண்டொளியில் லை, இருளுள்ளதென, ஒளியின்மையின் வேறா யிருளென்னு முணர்வு நிகழ்தலானும், யாட்டின் கழுத்திற் றூங்கு முலை யோ டொக்கும் அபாவத்தாற் செய்யக்கடவதொன்று யா ண்டு மின்மையானும், கண்ணொளியைத் தடைசெய்து நிற்ப தாகிய விருளை அபாவமென்றல் கூடாமை யறிக. இவ்விரு ளின துண்மை வெள்ளிடையினலரவிழித்து நோக்கியவழியு

யறைத்தற்றொழி னிகழ்தல்பற்றிப் பாரிசேடிய வளவையா னறியப்படும், அற்றேல், நீல்வடிவிற்றாய்த் தோன்றுதலின் இருள் காட்சிப்பொருளொன்றாற் படுமிழுக்கென்னை யெனி ன்? அற்றன்று; துன்னிய விருளின்கண் விழித்துழிப்போ லக் கண்ணிமை யிறுக மூடியவழியு மொருதன்மைத்தாய்த் தோன்றுதலின், வேற்றுமை யின்மையான், அது மயக்கவு ணர்வேயாமென்பது போதருதலின், விழித்துழி யவ்வாறு தோன்றுவது மதுபோல மயக்கவுணர்வாவதன்றி, இருளின் றோற்றமன்றென்பது அனுபவத்தாற் கண்டு கொள்க.

உலகாயதர் செவி முதலிய விடங்களே யிந்திரிய மெ ன்பராகலின், கண்ணென்னு மிடத்தின் வேறாக ஒளிப்பொ ருளாகு மிந்திரியம் உண்டென்பதற்குப் பிரமாண மென்னை யெனின்? செவிடனுக்குச் செவியுளதாகவு மோசை கேளா மையின், அது கேளாமைக்குக் காரணஞ் செவியென்னு மு றுப்பின் வேறு யதனை அதிட்டித்து நிற்கு மிந்திரிய மில்லா மையே யன்றிப் பிறிதின்மையாற் செவியென்னு முறுப்பு இந்திரியமாகாமை எல்லார்க்கும் விளங்கக் கிடந்தது. இது பற்றி யேனை யிந்திரியங்களும் அவ்வ விடங்களின் வேறுதல் கண்டுகொள்க. ஞானேந்திரியங்களைந்தும் அறிதற் கருவிக ளாகலின், சாத்துவிகாகங்காரத்திற் றோன்றியனவாம். கண் ணிந்திரியம் ஒளிக்கருவியாகலின், உருவத்தை யறிவதாம். இது ஆன்மாவின் ஞானசத்தியா லதிட்டிக்கப்பட்டுப் பொரு ள்களை விசேடண விசேடிய வியல்புபற்றி அறியுமா றின்றி நிருவிகற்பமாயறியுங் கருவியென் றுணர்க. இது ஏனை ஞா னேந்திரியங்களுக்கு மொக்கும். காட்டு மொளியின் வேறு ய்க் கண்ணுக் கொளிக்குண முண்டென்றற் கேது வென்னை? கண்ணுக் கொளிக்குண முண்டெனின்? மின்மினித் துணை யாயினுந் தானே விளங்குதல் வேண்டுமாலெனின்? ஆகாயத் தின் கண்ணதாகிய சத்தகுண முரசு குணில் சையோக முத

லிய வியஞ்சகங்களான் விளக்கப்பட்டுழி விளங்கி அல்லுழி விளங்காதொழிதலே யன்றித் தினைத்துணையாயினுந் தானென விளங்குமா றின்றென்பது பற்றி வியஞ்சகத்தி னெதிரொலி வடிவாற் றோன்று மவ்வோசையை ஆகாயத்தின் குணமன் றென்பார் யாருமில்லை. அதுபோலக் கண்ணின் கண்ணதாகிய வொளியும் வியஞ்சகமாகு ஞாயிற்றி னொளிமுதலிய வுள்வழி விளங்கி அல்லுழி விளங்காமை மாத்திரையே பிறிதில்லையாகலான், அதனைக் கண்ணின் குண மன்றென்றல் அறிவில்லார் கூற்றேயா மெனவும், அக்கண்ணொளி தன்னை விளக்குதற்குரிய வியஞ்சகப்பொருள் ஏகதேசமாயின் ஏகதேசத்து விளங்கியும் வியாபகப்பொருளாயின் வியாபகமாய் விளங்கியு நிற்கு மியல்பிற்றெனவு முணர்க. இனிக் கண்ணுக் கொளியில்லை, ஞாயிற்றினொளி முதலியனவே கண்ணின்கணின்று காண்டல் வியாபார நிகழ்த்துமெனின்? அங்ஙனமாயின், ஞாயிற்றி னொளி முதலியன கண்ணின்கணின்றே காண்டல் வியாபார நிகழ்த்துமென்னு நியமம் வேண்டா; உடம்பினுள் யாண்டாயினு மோரிடத்தைப்பற்றி நின்றுங் காண்டல் வியாபார நிகழ்த்துமென் றொழிக. அற்றேல், அவ்வாறு ஒளியுடைத்தாகிய கண்ணிந்திரியந் தன் றொழிற்பாடு நிகழ்தற்குப் பிறிதோ ரொளியி னுபகாரத்தை யின்றி யமையாதவா றென்னையெனின்? அங்ஙன மாயினுங் கண்ணிந்திரியந் தூலவொளியாகலின், தமோகுணசாரமான இருளென்னும் பகைப்பொருளின் சத்தியான் மடங்கிக், காண்டல் வியாபார நிகழ்த்துதற்கு அங்கியென்னும் பூதத்தின் கூறான ஞாயிற்றி னொளி விளக்கொளி முதலிய சூக்குமவொளி யுபகாரத்தை வேண்டற்பால தாகின்றதென் றுணர்க.*

இதனானே ஞானபாவமே அஞ்ஞானமென்பார் மதமும் மறுக்கப்பட்டது; அபாவம் ஒருகாரியத்தைச் செய்யமாட்டாமையின்.

மாயா தனுவிளக்கா மற்றுள்ளங் காணுதே
லாயாதா மொன்றை யதுவதுவாய்—வியாத
வன்னிதனைத் தன்னுண் மறைத்தோன்றுங் காட்டம்
றன்னைமல மன்றணைத ருன். [போற்

எ-து. உ-ம். எ-னின். ஆகந்துகமலமே ஞானதிரோதகமாதலமையும் வேறுமோர் மலமுண்டென்றல் மிகைபோலுமென ஐக்கவாதசைவர் முதலியோர் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து ஆகந்துகமலத்தானுஞ் சகசமலத்தானுஞ் செயப்படுங் காரியங்கட்குத்தம்முள் வேற்றுமை பெரிதாமாறுணர்த்துமுகத்தான் ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். உள்ளம் மாயா தனு விளக்கு ஆக் காணுதேல் ஒன்றை ஆயாது-ஆம்- எ-து. உயிர் ஆகந்துகமலமெனப்படும் மாயாகாரியமாகிய உடம்பு தனக்குக் காட்டாகக்கொண்டு காணுதாயின் ஒருவிடயத்தையுமறிவதில்லையாம். மலம் தன்னை அன்று அணைதல் தான்-எ-து. சகசமலம் உயிரை அநாதியேபற்றிநிற்றல். அது அது ஆய் வியாத வன்னிதனைத் தன்னுள் மறைத்து ஒன்று ஆம் காட்டம் போல்-எ-து காட்டமுதலியவற்றுள் அதுவதுவேயாய் நின்றுக் தனக்குக் கேடில்லாத வன்னியைத் தனக்குண்மறைத்துவைத்து ஒன்றேயாய் நிற்குங் காட்டம்போலும். எ-று.

எனவே, காட்டாய் நின்று விடயங்களையறியும் வண்ணம் உயிர்க்கறிவை விளக்குதல் மாயையின் செய்தி; அவ்வறிவைத் தடை செய்துகொண்டு நிற்றல் மலத்தின் செய்தி; இவ்விரண்டும் இங்ஙனம் ஒளியுமிருளும்போல் இகலி நிற்பனவாகலான் அத்தன்மைத்தாய மாயை இத்தன்மைத்தாய மலமாதல் யாண்டையதென மறுத்தவாறாயிற்று.

மற்றென்பது மலமன்றணைத லென்பதனேடியைந்து வினைமாற்றின்கண் வந்தது.

முற்றும்மை சிறப்பும்மைகள் தொக்கன.

ஆழுந் தானுங் கட்டுரைக்கண் வந்த அசை.

வன்னி அது அதுவாய்க் காட்டத்துண் மறைந்துழிக் காட்டமேயாயுஞ் சூரியகாந்தத்தின்மறைந்துழி அதுவேயாயும் இவ்வாறே அவ்வவற்றின் மறைந்துழித் தானென்பதொன்றில்லையென்னும்படி நிற்றல். அங்ஙனமாகியும் வியாமை, கடைதல் முதலிய தொழிற்பாடு நிகழ்ந்தவழித் தோன்றுதலாற் பெற்றும். தன்னுண் மறைத்தல் வன்னியென்பதொன்றில்லையென்னும்படி பொதிந்துகொண்டு தானேயாதல். ஒன்றாங்காட்டம் ஒன்றேபோல் அத்துவிதமாங் காட்டமென்றவாறு. இவ்வாறு உவமைக்கோதிய அடையுந்தொழிலும் இயையும் பொருட்கண்ணுங் கூறிக்கொள்க.

மாயை கன்மங்கள்போல ஆதியன்றெனக் காலத்தானும் வேற்றுமை கூறுவார் அன்றணைதலென்றார்.

இங்ஙனங் கூறிப்போந்த மலமாவது ஞானாபாவமென்பாரும், பிராந்திஞானமென்பாரும், தமோகுணமென்பாரும், பஞ்சக்கிலேசத்துள் ஒன்றாகிய அவிச்சையென்பாரும், மாயை கன்மங்களென்பாரும், சிவசத்தியென்பாரும், உயிர்க்குணமென்பாருமாய், அவ்வச்சமயநூல்பற்றி மயங்குவாருமுளர். அம்மலத்திற்குப் பற்றுக்கோடாகிய சூனியமுதலியவற்றின் வேறெனப்பட்ட ஆன்மாவும் இயற்கையாற் சடமென்பாரும், அறிவுமாத்திரையேயெனக் குணிப்பொருளன்றென்பாரும், சுதந்திரவறிவுடைத்தென்பாரும், அவ்வுடம்பளவிற்றென்பாரும், அணுவளவிற்றென்பாரும், உருவென்பாரும், அருவென்பாரும், உருவருவென்பாருமாய், இன்னும் பலதிறப்படக்கூறி மயங்குவாருமுளர். அவையெல்லாம் பொருந்தாமை ஆகமங்களுட் காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

இச்சகசமலம், ஞானதிரோதகமாய்த், திரவியமாய், அறியாமைக் குணத்ததாய்ச், செம்பிற் களிம்புபோல உயிரின் குற்றமாய், அநாதிபந்தமாய்ச், சடமுமாய்ப் பலவுமாயின் அழிவெய்துமாகலின் அநாதிபந்தமாதல்பெறப்படாமையின் ஒன்றேயாய், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் உயிர்ப் பாகுபாட்டிற் கேதுவாய் உயிர்கடோறுந் தனித்தனி வெவ்வேறாய் மறைத்துநின்று தத்தங்காலவெல்லையி னீங்குவனவாகிய சத்திகள் பலபலவுடைத்தாய், உயிர்கண்மூன்றவத்தைகளும் படுதற்கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய் வியாபகவுயிர் அணுத்தன்மைப்படுமாறு செய்தலின் ஆணவமென்னும் பெயர்த்தாய்ப், பசுத்துவம் பசுநீகாரம் மிருத்தியுமூர்ச்சை மலம் அஞ்சனம் அவித்தை ஆவிருதியென்றற்றொடக்கத்துக் காரணக்குறிகளுமுடைத்தாய் நிற்பதெனவும் படலம் படர்ந்த கண் ஞாயிற்றின் சந்நிதியினிற்பினும் படலத்தான் அவ்வொளியை யிழந்து இருளினழுந்துமாறுபோல முதல்வன் சந்நிதியினிற்பினுஞ் சோபானமுறையின் அறிவிக்க அறியுந் தன்மைத்தாய உயிர் அநாதியேயறிவித்தால் அறியமாட்டாமையின் அம்மாட்டாமையான் அவ்வறிவை இழந்து அறியாமையாய் அழுந்துதலின் அஃதவ்வுயிர்க்குப் பந்தமாயிற்றெனவுமுணர்க. அநாதியே மலத்தினீங்குதல் முதல்வன் வினையாய் அநாதிமுத்தத்தன்மையென எண்குணங்களுள் வைத்தெண்ணப்படுவதென்பது சிவாகமங்களுக்கெல்லாம் ஒப்பமுடிந்தாற்போல அநாதியே மலத்தைப்பற்றுதல் உயிரின் வினையாய் உயிர்க்குற்றங்களுள் வைத்தெண்ணப்படுவதென்பதூஉம் அவற்றிற்கெல்லாம் ஒப்பமுடிந்தது. ஈண்டுப் படுங் கடாவிடைகளெல்லாம் ஈரிடத்துமொக்கும்.

இரண்டாமதிகாரமுடிந்தது.

மூன்றுமதிகரணம்.

—:o.—

இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனாய் நிற்குமென் றது.

எ-து. மே-ள். எ-னின். இருளகப்பட்ட கண் விளக் கோடு கூடியவழி விடயங்களைக் காண்டலேயன்றி வெவ்வே றவத்தைப்படுமாறில்லை அதுபோல மலத்தகப்பட்ட உயிர் க ருவிகளோடு சந்தித்தவழி ஒருதன்மைத்தாயறிதலே அமைவு டைத்து அவ்வாறன்றி மேலைச்சூத்திரத்தோதிய முறையான் ஐம்புலனறிந்தும் ஒடுக்கமறிந்தும் உண்டி வினையின்றிக் கிட ந்தும் உணர்ந்தவுணர்ந்தும் இங்ஙனம் வெவ்வேறு அவத்தை ப்படுமாறியாங்ஙனமென அவர்கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற் கோடனுதலிற்று. இ-ள். வெ-டை.

அவத்தையெனப்படுவன பலவுளவாகலின் அவற்றுள் ஈண்டு ஐந்தவத்தையெனப்பட்டவை யாவையென்னும் ஐய நீக்குதற்குக் கிளந்தெடுத்துரைத்தார்.

அவந்திதன் என்னும் வடமொழி ஆடூஉவறிசொல் லாற் கூறியது அம்மதம்பற்றி.

அமைச்சரசேய்ப்ப நிற்றலானென்பதூஉம் ஈண்டு வரு வித்துரைத்துக்கொள்க. கொள்ளவே, *“ படைகொடு பவ னிபோதும் ” வேந்தன் “ கடைதொறும் விட்டுவிட்டுக் காவ லுமிட்டு” அந்தப்புரத்திற் செல்லுமாறுபோல ஆன்மா அங் ஙனம் அஞ்சவத்தைப்படுதல் அமைவுடைத்தென விடுத்த வாறுமிற்று

அதுதான் மலசொரூபத்தின் மறைந்து அரூப சொரு பியாய் நிற்றலான்.

---

* சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம். ௩௨.

எ-து. எது. எ-னின். அரசன்போல் உயிர் அஞ்ஞானமஞ்சவத்தைப்படுமாயின் வியாபகத்திற்கிழுக்காய் முடியும் போலுமென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். அவ்வுயிர்தான் மலவடிவின் மறைப்புண்டவழி அருவுடம்பாகிய தத்துவசொரூபியாய்நிற்றலான் அத்தத்துவங்கள் தொழிற்படுமவத்தை வேறுபாடுபற்றி இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனாய் நிற்குமெனா மேற்கொண்டது. எ-று.

"சீவனே வியாபி யவத்தையி லிழிந்து திரும்புதல் குற்றமாங் கருவி சேருதல் பிரிதலில்லையா முறையிற்செயப்படுங் கருவியே தெரியுந், தாவிலாவறிவு தங்கினவிடமே தகுமுயிர்க் கிருப்பிடம்" என்றதூஉம் இப்பொருள்பற்றி யென்க.

தத்துவவன்னரூபனாதல் விடுபெற்றுழியும் உண்டுபோலுமென்று ஆசங்கை நிகழாமைப்பொருட்டு, மலசொரூபத்தின் மறைந்தெனா மேற்கூறிப்போந்ததனை வழிமொழிந்து கொண்டு அரூப சொரூபியாய் நிற்றலானென்று எதுக்கூறினார்.

மறைந்தவழியென்றது மறைந்தெனத்திரிந்து நின்றது.

ஒன்றணையா மூலத் துயிரணையு நாபியினிற்
சென்றணையுஞ் சித்த மிதயத்தினன்றுவே
யையைந்தா னன்னுதலிற் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

எ-து. உ-ம், எ-னின். தத்துவங்கள் தொழிற்படுதற்கண் நிகழும் அவத்தை வேறுபாடு தெரித்துணர்த்தி அஃதே துவாதலை விசியுறுத்துதனுதலிற்று. நல் நுதலில் வாக்காதி மெய்யாதி மன்ற எய் ஐயைந்தாம் கண்டத்தின் வாக்காதி மெய்யாதி விட்டு அகன்று வேறு ஐயைந்தாம் இதயத்திற்

சித்தஞ்சென்றணையும் நாபியினில் உயிர் அணையும் அணையா மூலத்து ஒன்று என வியையும்.

இ-ள். சாக்கிரத்தானமெனப்படும் இலாடத்திற் புறவிந்திரியம் பத்தினையுந் தேற்றமாகப் பொருந்திய இருபத்தைந்து கருவி தொழிற்படும்; சொப்பனத்தானமெனப்படுங் கண்டத்தின் அப்பத்தினையும் விட்டு நீங்கி வேறாய இருபத்தைந்து கருவி தொழிற்படும்: சுழுத்தித்தானமெனப்படும் இதயத்தின் அவற்றுள் இருபத்திரண்டு கருவிகளை விட்டு நீங்கி முன்னர்க் கூறப்படும் இரண்டு கருவிகளோடு கூடிய சித்தந் தொழிற்படும்; துரியத்தானமெனப்படும் உந்தியிற் சித்தத்தையும் விட்டு நீங்கி முன்னர்க் கூறப்படும் புருடதத்துவத்தோடு பிராணவாயுக் கூடித் தொழிற்படும்; இக்கருவிகளொன்றும் அணையாத அதீதத்தானமெனப்படும் மூலாதாரத்திற் புருடனொன்றே நிலைபெறும். எ-று.

எனவே, இலாடத்தானமுதலிய ஐந்தினுநிற்குங்கருவிகள் முறையே முப்பத்தைந்தும் இருபத்தைந்தும் மூன்றும் இரண்டும் ஒன்றுமென்பது போந்தவாறுணர்க.

மன்றவென்பது தேற்றப்பொருட்டாகிய இடைச்சொல்.

ஏய்தல் பொருந்துதல்; வினைத்தொகை.

வாக்காதி மெய்யாதியையென இரண்டாவது விரித்துரைக்க. அஃறிணைடத்துஞ் சென்றியையும்.

வருகின்ற சூத்திரத்தின் மெய் வாய் கண் மூக்கு எனச் செய்யுட்கேற்ப மெய்யை முற்கூறுதலின் அம்முறைபற்றி ஈண்டுச் செவியாதியென்னாது மெய்யாதியென்றார். அவற்றொடுகூடிய இருபத்தைந்தாவன அவ்விந்திரியம் பத்துக்கும் விடயமாகிய வசனாதி சத்தாதி பத்தும் அவற்றினுக்கு உட்கருவியாகிய அந்தக்கரணங்களொன்கும் அவற்றொடு கூடி

அவத்தையுறுவதாகிய புருடனென்றும், அஃதவத்தையுறு தற்குரிய மதுகைக்கேதுவாய் அகங்காரத்தாற் செலுத்தப் படும் பிராணாதி வாயுக்கள் பத்துமென இவை. ஈண்டுச் சத் தாதியென்றது வசனாதிபோலும் விடயங்களையெனக்கொ ள்க. எனவே, பூதங்களின் கூறாய் அவற்றுடனின்று தே ராழிக்குத் தேருறுப்புப்போல இந்திரியங்களின் றொழிற்பா ட்டுக்கு மதுகையை விளைத்து நிற்பனவாய புறக்கருவி யறு பதில் ஈண்டுக் கூறிப்போந்த விடயங்கள் பத்தும் வாயுக்கள் பத்தும் ஒழித்தொழிந்த புறக்கருவிகள் நாற்பதும் அவற்றை யுடைய பூதங்களைந்தும் அவற்றிற்கு வழியாயுடனிற்பன வாய சூக்குமபூதமெனப்படுந் தன்மாத்திரைகளைந்துமென் னும் ஐம்பது கருவிகளுங் கீழ்நோக்கிய சாக்கிரத்தானத்தில் தமது சத்திமடங்கி வினைக்கீடாகத் தொழிற்படாதொழியு மெனவும், அவையொழிந்தவழி அவத்தைக்கேதுவாய்நின்ற ஏனைப் பொறி முதலிய முப்பத்துநான்கும் அவற்றோடு கூடி ய புருடதத்துவமும் இருவகைப் பூதங்களானும் புறக்கருவி களானுந் தரப்படும் மதுகையின்மையின் ஆண்டுப் பொறிக ளின் றொழிற்பாடு மெத்தென நிகழுமெனவுங் கொள்க. கலாதிகளுஞ் சுத்ததத்துவமும் அவத்தைக் கேதுவாகாமை யான் உடனெண்ணாராயினர். ஏனையவும் விரிந்தநூல்களுட் கூறியவாறுபற்றி உணர்ந்து கொள்க.

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு.

எ-து. உ-ம். எ-னின். அங்ஙனம் அதீதத்தையெய்திய புருடன் மீளப் பிரேரக வவத்தையாகிய உணர்த்துமுறை மைச் சாக்கிரத்தைத் தலைப்படுமாறு அறுவாத முகத்தான் விளக்கி அவ்விடத்தினும் முறைமையிற் செலுத்தும் பிரேர

கக் கருவிகளோர்ந்தின் றொழிற்பாடுபற்றி ஐந்தவத்தை நிகழுமென்பதூஉம் அவை இவையென்பதூஉஞ் சுத்தாவத்தையும் இவைபோலுண்டென்பதூஉங் கூறி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்-எ-து. இலாடத்தானத்தினீங்கி ஆண்டாண்டவத்தைப்பட்டுக் கீழ்ப்போந்து மூலாதாரத்தி னெய்தியபின் மறித்தும் அவ்வாறே ஆண்டாண்டவத்தைப்பட்டு மேற்சென்று இலாடத்தானத்தின் உணர்த்துமுறைமைச் சாக்கிரத்தைத் தலைப்பட்ட புருடன், இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும்-எ-து. ஆண்டுஞ் சாக்கிரச்சாக்கிர முதலிய ஐந்தவத்தையுறும்;—இலாடத்தே அவ்வவ்விந்திரியத்து அத்துறைகள்கண்டு-எ-து. அவையாவன அவ்விலாடத்தானத்தின்கண்ணே அவ்வப்பொறிகளான் அவ்வவ்விடயங்களையுணர்ந்து, அநுவே-எ-து. அப்போதப்போதே, அவ்வவற்றின் நீங்கல்-எ-து. அவ்வவ்விடயங்களினீங்குதலாம். அது ஆங்கு-எ-து. இனி முன்னர்க் கூறப்படும் சுத்தாவத்தையும் இவைபோல ஐவகைப்படும். எ-று.

மேற்செல்வுழி ஆண்டாண்டுப்படு மவத்தைகளுங் கீழ்ச்செல்வுழிப் போலன்றி விசேடமின்மையின் வகுத்தோதாது இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ளமென அநுவாத முகத்தாற் கூறியொழிந்தார்.

இழியுங்காலும் ஏறுங்காலுங் கண்டத்தானத்திற் கனாக்காண்டலுண்டென்பது முறைமையே ஞானாமிர்தத்திலும் போற்றிப் பஃறொடையினுங் காண்க.

அவ்வவ்விந்திரியம் ஆண்டாண்டு விடயித்தற்குரிய இந்திரியம்.

அவ்வவ்விடயம் ஆண்டாண்டுப் புலனாதற்குரிய விடயம்.

கண்டு நீங்கலென் வினையும்.

அது அவ்வக்காலம். ஈண்டும் அடுக்கிக் கூறிக்கொள்க.

கண்ணுருபு தொகுத்து ஏகாரம் விரித்தார்.

கண்டதென் றொருமொழியாகவைத் துரைப்பாருமுளர். குற்றியலுகரத்தின்முன் உடம்படுமெய் பெறுதற்கு ஒத்திலாமையானும் பொருட்சிறப்பின்மையானும் அஃதுரையன்மையறிக.

அப்போதப்போதே நீங்கலாவது விடயங்களைக்கண்ட கண்டபொழுதே அவற்றை அயர்த்துவிடுதல். * "ஒன்றன்பாலும் வருபயன் மாறி மாறி வந்திடும்" என வழிநூலாசிரியர் கூறியதும் இவ்வியல்பு நோக்கியென்க. † "கரணந்தன்னிற் செயற்றொறுங் கண்டுகொண்ணீ" ‡ "உய்ந்திடுங் கரணந் தன்னிற் செயற்றொறு முணர்ந்து கொள்ளே" என்பனவுமது. இந்நுட்பமுணர்ந்து கோடற்கு நூலாருந் தநியாயம் பற்றிக்கைப்பொருளை வீழ்த்தித் தெளிதன் முதலிய தூலத்துள் வைத்துக்காட்டுப.

இனி அருபசொரூபியாய் நிற்புழிப்படும் ஐந்தவத்தையினியல்பு கூறுதற்கெடுத்துக்கொண்ட இவ்வதிகரணத்தின் அதனோடியையில்லாத சுத்தத்தின்கட்படும் ஐந்தவத்தை கூறுதற்கு ஓரியையில்லையாயினும் அவத்தையெனப்படுவன ஈண்டோதியன மாத்திரையே போலுமென மயங்காமைப் பொருட்டு வேறுமைந்தவத்தையுள அவை முன்னர்க் கூறப்படுமென்னுந் துணையே கூறுவார் அதுவாங்கு என்றொழிந்தார். இக்கருத்தேபற்றி *"பிறிவிலா ஞானத்தோரும் பிறப்

* சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம் ௯௪. ஒருபுல்லுகரு.
† நான்காஞ்சூத்திரம், ௨௰. அறிதருமுதல்வ. ௪.
‡ ௨௪. உய்த்திடுங்கரணக்.
* சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம், ௨௰. அறிதருமுதல்வ

பற வருளாலாங்கே, குறியொடு மைந்தவத்தை கூடுவர் வீடு கூட" என்றெழுந்தார் வழிநூலாசிரியரும்.

இவ்விரண்டு வெண்பாக்களானுங் கூறிப்போந்த முத்திறத்தைந்தவத்தைகட்கு முறையே மூலமாய கேவலஞ் சகலஞ் சுத்தமென்ற மூன்றனுள் வைத்துத் தன்னுண்மையெனப்படுங் கேவலத்தினியல்பு சகசமலத்துணராதென்பதனானே பெற்றும். ஏனைச் சகலத்தினியல்பு வருகின்ற சூத்திரத்தினுஞ் சுத்தத்தினியல்பு அப்பாலைச் சூத்திரத்தினும் பெறுதும்.

மூன்றமதிகரண முடிந்தது.

நான்காஞ்சூத்திர முடிந்தது.

ஐந்தாஞ் சூத்திரம்.

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

எ-து. சூ-ம். எ-னின். இவ்வான்மாக்களிடத்தும் தமது முதலுபகார முணர்த்துதனுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக் கருத்துணர்த்துதனுதலிற்று.

இ-ள். ஐந்தவத்தைப்படும் வழிக் கருவியும் உயிரும் அமைச்சும் அரசுமேய்ப்ப நிற்பின் அவையே யமையுமாகலான் முதல்வனுல் ஆண்டைக் காகற்பாலதொரு பயனில்லை

போதுமென்னுங் கடாவை யாசங்கித்து ஆண்டும் இன்றிய மையாது வேண்டப்படுவதாய முதல்வனுடைய உதவியை அறிவிக்கு முகத்தானே இரண்டாஞ் சூத்திரத்தினோதிய துணைக்காரண முதற்காரணங்களதிலக்கண முணர்த்துதல் இவ்வஞ்சாஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

இதனானே சூத்திரவியையும் இனிது விளங்கும்.

மாயை கன்மங்கள் திரோதான சத்திக்குக் கருவியாய் அதனுளடங்குதலிற் றமது முதலுபகாரமெனப்படுந் திரோதான சத்தியதிலக்கணங் கூறவே அவற்றதிலக்கணமுங் கூறியவாறுதலறிக.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. மேலைச்சூத்திரங்களின் அங்ஙனங் கூறிப்போந்த உயிரானே மெய் வாய் கண் மூக்குச் செவியென்பன தத்தம் விடயங்களை இஃதின்னதென்று அளவிட்டறிந்தும் அங்ஙனமறியுந் தம்மையுந் தம்மையதிட்டித்து நின்று செலுத்தும் அவ்வுயிரையும் அறியமாட்டா; அவ்விந்திரியங்கள்போல் உயிர்களுந் தமதறிவிற்கு வியஞ்சகமாகிய முதல்வனது சிற்சத்தியான் மேற்கூறிப்போந்த இருவகையஞ்சவத்தையினின்று வினைப்பயன்களை யறிந்து அநுபவிக்குந் தம்மையுந் தம்மைச் செலுத்துந் திருவருளையும் அறியமாட்டா; உயிர்கள் அவ்வாறுணர்தல் காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் சந்நிதிமாத்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறுபோலக் கரணத்தானன்றிச்சங்கற்பத்தான் அதிட்டிக்கு முதல்வன் சந்நிதிமாத்திரையினும் ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதலின்று. எ-று.

ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதலின்றென்பது குறிப்பெச்சம்.

செவி யென்பது சொல்லெச்சம்.

ஐம்பொறிகளைக் கூறியது உபலக்கணமாகலின் ஏனைக் கருவிகளும் அவ்வாறாதல் கொள்ளப்படும். அற்றாகலினன்றே * "பொறிபுலன் கரணமெல்லாம் புருடனு லறிந்து" என்றார் வழிநூலாசிரியரும்.

விடயங்களை யறிவுழி முதல்வன் உடனின்று செலுத்துவனாயின் அவ்விடயங்களோடொப்ப முதல்வனையும் அறிதல் வேண்டுமென்பாரை நோக்கி, அளந்தறிந்தென்றொழி யாது அறியாவென்றார்.

ஆங்கவை ஒருசொன்னீர்மைத்து. தம்முணர்வின்றமி யென்றது தமது முதலென்னும் பொருள்பட வந்த ஆறாம் வேற்றுமைத்தொகை.

ஈண்டு அருளென்றது ஏற்புழிக்கோடலால் திரோதான சத்தியின்மேனின்றது. அருளாலென விரித்து அளந்தறிந்தறியாவென உவமைக்கோதிய வினையைப் பொருளினுங் கூட்டியுரைக்க.

இதனுள் விளம்பிய வுள்ளத்து மெய் வாய் கண் மூக்களந்தறிந்தறியாவென்றது ஓரதிகரணம்; ஆங்கவைபோலத் தாந்தமுணர்வின் றமியருள் காந்தங்கண்ட பசாசத்தவையே யென்றது ஓரதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

முதலதிகரணம்.

—:0:—

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவானுணருமென்றது.

எ-து. மே-ள். எ-னின். தாமரையிலையி னீர்போற் புருடன் பற்றற்று நிற்பப் புருடன் சந்நிதியிற் புத்திதத்துவமே ஐம்பொறி வழியான் விடயங்களையும் அறியுமெனவுமை

---

* சிவஞானசித்தி, ஐந்தாஞ்சூத்திரம், ௧.

யும் அவ்வாறன்றிக் கருவிகளோடு கூடிப் புருடனே அவத்தைப்படுமென மேற்கூறிய தன்மையுமாறென்னையெனச் சாங்கியநூலார் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ-ள். வெ-டை.

உணர்விற்கேதுவாகிய பொறிகளை உணர்வென்றுபசரித்தார்.

அவற்றினுன் ஆன்மா வொற்றித்துக் காணினல்லது அவையொன்றையும் விடயியாவாகலான்.

ஏ-து. ஏது. எ-னின் அதற்குப் பிரமாணமென்னையென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இ-ள். அவ்வைம்பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்றறிந்தாலன்றி அவை ஒருவிடயத்தையும் விடயிக்கமாட்டாவாகலான் ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவாலுணருமென மேற்கொண்டது. எ-று.

ஆன் உடனிகழ்ச்சிப்பொருட்கண் வந்தது.

உம்மை இழிவுசிறப்பு; முற்றுமாம்.

எதிர்மறைமுகத்தாற் கூறினர், இன்றியமையாமை விளக்குதற்கு.

ஐம்பொறியை யாண்டங் கரசா யுளநிற்ப
வைம்பெறிக ளுள்ள மறியாவா—வைம்பொறியிற்
காணாதேற் காணாது காணுமுளங் காணாதேற்
காணாகண் கேளா செவி.

எ-து, உ-ம், எ-னின், உயிர் அங்ஙனமொற்றுமைப்பட்டு நின்று செலுத்துதலும் அவை உயிரையின்றியமையாமையும் எற்றாற்பெறுதுமென்பாரை நோக்கி எதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். அரசு ஆய்-எ-து. அரசன் அத்தாணிமண்டபத்தின்வைகித் தன்கீழ்க் கருமஞ்செய்வாரை அவரவர்க்குரிய காரியங்களிற் செலுத்தி ஆளுமாறுபோல, உளம் ஐம்பொறியை ஆண்டு அங்கு நிற்ப-எ-து. உயிர் ஐம்பொறிகளை அவ்வவற்றிற்குரிய விடயங்களிற்செலுத்தி யாண்டு இலாடத்தானத்தி னிற்றலான், ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம்-எ-து. அரசனாலேவப்பட்டோர் ஏவிய கருமமாத்திரை யினன்றி அதிகத்திற் செல்லமாட்டாமைபோல அவ்வைம்பொறிகள் உயிரையறியமாட்டாவாயின. அற்றேல், ஐம்பொறிகள் உயிரானன்றியறிதல் அமையாதாயினும் உயிர் ஐம்பொறிகளானன்றியும் அறிதலமையும்போலுமெனின்? ஐம்பொறியில் காணாதேல் காணாது உளம் காணாதேல் காணா கண் கேளா செவி-எ-து. ஒருகருமஞ் செய்தற்கண் அரசரும் அமைச்சர்முதலாயினாருந் தம்முள் இன்றியமையாதவாறுபோல ஒன்றனை விடயித்தற்கண் உயிரும் ஐம்பொறிகளுந் தம்முள் இன்றியமையா. எ-று.

அன்னவாதல் உயிர் ஐம்பொறியினீங்கிச் சொப்பனத்தானத்தினெய்தியவழிக் கண்டுகொள்க.

நிற்பவென்னுஞ் செயவெனெச்சம் மழைபெய்யக் குளநிறைந்தது என்புழிப்போல நிற்றலாலெனக் காரணப்பொருட்டாய் நின்றது.இவ்வாறுரையாக்கால் இஃதேதுவின் பொருள் வலியுறுப்பதாய உதாரணமாதற்கேலாமை யறிக.

முதலதிகரண முடிந்தது.

)ரண்டாமதிகரணம்.

—:o:—

ந் தமது முதலாலே யுணருமென்றது.

ஏ-து. மே-ள். எ-னின். கருவி சடமாகலிற் சித்தாகிய உயிரானன்றி அமையாவாயினுஞ் சித்தாகிய உயிர் முதல்வனது உபகாரத்தையவாய் நிற்பதன்றி அவாவுமாயின் முதல்வனும் அவ்வாறே பிறிதொன்றனுபகாரத்தை அவாவுமெனப்பட்டு மேலும் வரம்பின்றியோடும் என ஈசுரவவிகாரவாதி முதலியோர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் பிற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ-டை.

தமது முதலென்பது யானெம்மூர் புகுவன் நீ நும்மூர் புகுவை யென்புழிப்போல வேறுமுடிபு கோடலிற் பால்வழுவின்மையுணர்க.

உம்மை இறந்தது தழீஇயவெச்சம்.

)ம்முறைமை தமக்கொருமுதலுடையவற்றிற்கேயன்றி ஏனைப்பொருட்கின்மையின் வரம்பின்றியோடுமாறில்லையென்பார், தமது முதலென்று உடம்பொடு புணர்த்தோதினர். தம்முணர்வின்றமியென்றது மது.

தத்துவங்களுமுயிருந் தமக்கொரு முதலுடையனவாதலும் முதல்வனுக்கு அஃதின்மையும் மேற்கூறிப்போந்த சூத்திரங்களாற் பெறப்பட்டனவென்பது கருத்து.

இவ்வான்மாத் தன்னாலே யுணருமிந்திரியங்களைப்போலத் தானுந் தன்னையுணராது நிற்றலான்.

ஏ-து. ஏ-து. எ-னின். உயிர் ஐம்பொறியிற் சடமன்மையுரான் அவற்றை யெடுத்துக் காட்டி மேற்கோடல் ஈண்

டைக்கமையாதென்பாரை நோக்கி அதனைச் சாதித்தனுதலி ற்று. இ-ள். வெ-டை.

சடமுஞ் சேதனமுமாய வேறுபாடுபற்றித் தம்முள் ஒவ்வாவாயினுந் தம்மையுந் தமது முதலையும் அறியமாட்டா மைக்கண் ஐம்பொறியும் உயிருந் தம்முள் ஒக்குமாகலின், அதுபற்றி அங்ஙனமேற்கோட லமையுமென்பது கருத்து.

மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னு மறையி னியன்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணு வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா
ணெண்ணுன் சிவனசத்தை யின்று.

எ-து. உ-ம். எ-னின். தன்னாலுணரும் இந்திரியங்களை ஈண்டைக்கு உவமை கூறின் அவ்விந்திரியங்கட்கு வரும்பயன் அவற்றினொலொற்றித்துக்காணும் உயிர்க்காயவாறுபோல உயிர்க்குவரும் இன்பத்துன்பப்பயனும் உயிரானொற்றித்துக்காணும் முதல்வனுக்காதல்வேண்டுமென்பாரை நோக்கி அங்ஙனமாகாமை கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். மன்னு சிவன் சந்நிதியின் மற்று உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய்-எ-து. ஈண்டுக் கூறிய கருதலளவையேயன்றி நிலைபெற்ற முதல்வனது சந்நிதியிற் பிரவஞ்சஞ் செயப்படுகின்றதென்றோதும் வேதப் பொருளையும் அறியாது பிணங்குகின்ற பேதாய்-உளம் சொன்ன சிவன் கண்ணு வினையால் கண்டு அறிந்து நிற்கும் காண்-எ-து. உயிராவது தமக்கெனவோர் காரணமின்றித் தன்பொருட்டே அறிவனவாய அவ்விந்திரியங்கள்போலன்றி அவ்வேதத்துள் எடுத்தோதப்படும் முதல்வன் தனக்குக் காட்டாகிநிற்பத்தான் செய்த வினைக்கீடாக ஒன்றனையறிந்து நிற்கும்; இவ்வேறுபாடு அறிவாயாக. இன்று, (ஆகலாற்) சிவன் அசத்தை எண்ணான்-எ-து. அங்ஙனங் காட்டாகி நிற்பினுந் தனது சந்நிதியின் அசத்தெல்லாஞ் சூனியமாகலான்

மங்கலவடிவினனாய முதல்வன் அவ்வுயிர்போல் அவற்றை அநுபவியான். எ-று.

இதனுட் சிவனென்றது மன்னுசிவனென்புழிப் பேரின்பத்துக்குக் காரணமென்னும் பொருட்டாய்த் தனது சந்நிதிக்கண் உலகத்தைச் சேட்டிப்பித்தற்குரிய இயைபுணர நின்றது; சொன்னசிவனென்புழி முற்றுணர்வினனென்னும் பொருட்டாய்க் காட்டாதற்குரிய இயைபுணரநின்றது; எண்ணான் சிவனென்புழித் தூயதன்மையனென்னும்பொருட்டாய் அசத்தையெண்ணாமைக்குரிய இயைபுணர நின்றது. ஆகலாற் கூறியது கூறலன்மையுணர்க. அஃது அம்முப்பொருளுடைத்தென்பது சோமசம்புபத்ததி வியாக்கியான முதலியவற்றுட் காண்க. சிவதத்துவவிவேகத்துள் மூவகைப் படித்தோதிய பொருளும் இவையேயாமாறு கண்டுகொள்க.

ஈண்டு உலகமென்றது உயிர்களை.

மறையினியலும் பொருளை மறையினியலென்றுபசரித்தார்.

இறந்ததுதழீஇயவெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது.

மறந்தா வென்பது விளியுருபேற்ற பெயர்.

ஈண்டுச் சந்நிதியென்றது அவிகாரவாதிகள்கூறும் அபிமுகமாத்திரையன்றென்பார் சொன்னசிவன் கண்ணென்றார். சிவசத்தி அவ்வக்காரியங்களின் உன்முகமாதலாகிய *சங்கற்பமே ஈண்டுச் சந்நிதியெனப்படுமென்பதாம்.

காந்தங்கண்ட பசாசத்தவையேயென்றது ஒருபுடையுவமையாதல்பற்றியே பிறிதன்றென்பது கருத்து.

வினையாலென்றது ஐம்பொறிபோலன்றி உணர்த்துபவன் உயிர்க்கேயாதற்கேதுக் காட்டியவாறு.

கண்டறிதல் ஒருபொருட்பன்மொழி.

---

* சங்கற்பமென்றது: வியாபகச்சிற்சத்தி சந்நிதிப்பிரோகத்தினை.

எண்ணல் ஈண்டநுபவித்தன்மேற்று.

இன்றென்பது சாதியொருமை.

அவனெதிர் என்பது அவாய்நிலையாய் வந்தது.

ஆகலானென்பது சொல்லெச்சம். இன்றாதல் யானை யுங் குனியுஞ் சத்தெதிர் எனபுழிப் பெறப்படும். இக்கருத் தேபற்றி *"மாயை மருவிடான் சிவனவன்க, ணாணைதரா கசேதனத்தால்" என்றார் வழிநூலாசிரியரும். † "உன்னுந ரந் தெரிந்த கிடமுறுவதெல்லா, முன்னுடைய தென்றுப் பேயுற்றனையோ, மன்னுயிர்கள்—எவ்வகையே காணிங் கழிவு றுவ மாவதுவுஞ், செவ்வகையே நின்றசிவன் பால்." என்ற தூஉம் இவ்வியல்பு நோக்கி.

வெய்யோ னொளியி லொடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்
கண்டனாய் மன்னுதலைக் காண்.

எ-து. உ-ம். எ-னின். உயிர் அங்ஙனமுணர்ந்த வுணர் ந்தக்கால் முதல்வனின் வேறாநின்றுணருமோ ஒன்றாய் நின்றே யுணருமோவென்பாரை நோக்கி அவ்விரண்டியல்புமின்றி நின்றுணருமாறுணர்த்தி அதனை வலியுறுத்த துதாகிற்று.

இ-ள், வெய்யோன் ஒளியில் ஒடுங்கி-எ-து. ஞாயிற்றின் ஒளியினடங்கி, விளங்காது-எ-து. அதனின் வேறாய் விளங் கித் தோன்றுதலின்றி, வெய்யோனை ஆகாத மீன்போல-எ-து. அதுவாயொழிதலில்லாத நாண்மீன்கள் அஞ்ஞாயிற் றினை ஒளியுடையவாமாறுபோல, கண்டு கேட்டு உண்டு உயி ர்த்து உற்று அறியும் ஐம்புலனை மெய் அவனில் கண்டு-எ-து.

* சிவஞானசித்தி, ஐந்தாஞ்சூத்திரம். ௪. இறைவன்றன்.

† திருக்களிற்றுப்படியார். ௮௭.

கண்டுங் கேட்டும் உண்டும் உயிர்த்துந் தீண்டியும் அறியப்படும் ஐவகை விடயங்களையும் உயிர் மெய்ப்பொருளாகிய முதல்வனால் உணர்ந்து, உடனாய் மன்னுதலைக் காண்-எ-து. வேறாதலும் ஒன்றாதலுமின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய் அடங்கி உடனாய் நிலைபெறுதலை அறிவாயாக. எ-று.

உவமை பவடை பொருளினும், பொருள்வினை உவமையினுஞ் சென்றியையும்.

ஐ சாரியை.

நான்மீன்முதலியவற்றின் ஒளியெல்லாம் ஞாயிற்றின் ஒளியேயென்பது வேதநூற்றுணிபாகலான் அஃதின்னைக் குவமையாயிற்று.

உயிரென்னும் எழுவாய் மேலைவெண்பாவினின்றும் வருவித்துரைக்கப்பட்டது.

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை—யருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணார் கண்ணுக்
கிரவிபோ னிற்குமர னேய்ந்து.

எ-து. உ-ம் எ-னின். அங்ஙனமாயினும் உயிர்கட்குப் பலவேறுவகைப்பட உணர்வு நிகழ்தலின் அஃதுணர்த்துதல் வேறுபாட்டானாய தெனல்வேண்டும் வேண்டவே, நிருவிகாரியென்னுஞ் சுருதியோடு முரணி முதல்வன் விகாரியாவான் செல்லுமென்பாரை நோக்கி விகாரியாகாமை யுணர்த்தி அதனைவலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். அருள் ஈசற்கு அன்றே உண்டாம்-எ-து. உயிர்கட்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதற் கணுளதாகிய இரக்கம் முதல்வனுக்கு அநாதியேயுள்ளது; அதுசத்தி-எ-து. அவ்விரக்கம் வேறு பொருளன்று முதல்

வனுக்குளதாகிய சத்தியேயாம். அருளும் அவனன்றி இல்லை அருளின்று அவன் அன்றே இல்லை-எ-து. இரக்கமும் அவனுங் குணமுங் குணியுமாகலின் அவ்வருளு முதல்வனையின்றி யமையாது முதல்வனும் அதனையின்றி யமையானாய், அருட்கண்ணார் கண்ணுக்கு இரவிபோல் ஏய்ந்து நிற்கும் அரன்- எ-து. ஞானக்கண்ணுடையாருணர்விற்கு ஞாயிறு தன்னொளியோடு தாதான்மியமாயியைந்து நிற்குமாறுபோல் அவ்வருளோடு தாதான்மியமாயியைந்து நிற்பன் முதல்வன்; ஆகலாற் றன்வயத்தனாகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்திசங்கற்பமாத்திரையான் அனைத்துஞ் செய்தல்கூடும். எ-று.

எனவே யவ்வாறியைந்து தம்வயத்தனாய் நிற்குமுதல்வன் விகாரமின்றியே தனது சத்திசங்கற்ப மாத்திரையானனைத்துஞ் செய்வன். அவ்வாறியைந்து தம்வயத்தனாய் நிற்கு முதல்வன் விகாரமின்றியே தனது சத்தி சங்கற்ப மாத்திரையா னனைத்துஞ் செய்வனென்பது குறிப்பெச்சம்.

அருளாவது: உயிர்கட்குப் பசுத்துவநீக்கிச் சிவத்துவமளித்தற்கண்ணுளதாகிய விரக்கம்.

அன்றே யருளுண்டாமெனக் கூட்டுக.

உம்மை யெதிரதுதழீஇயது.

இன்றியென்னும் வினையெச்சக்குறிப்பு இன்றெனத் திரிந்தது. அன்றே யசை.

இவ்வியல்பு சித்தாந்தநெறி யுணர்ந்தார்க்கன்றி விளங்காதென்பார், 'அருட்கண்ணார் கண்ணுக்கிரவிபோனிற்குமரனேய்ந்து' என்றார்.

சத்தியதுண்மையு மதனியல்பும் நீக்கமின்றி நிற்குமென்னு மதிகரணத்தின் விரித்துரைத்தமையி னாண்டுக் காண்க.

இரண்டாமதிகரண முடிந்தது.

இதுமுதல் பன்னிரண்டாஞ்சூத்திர முடிவுவரை பாஷ்யம்.

சிவஞானபோதத்திற்குத் திருவாவடுதுறைச் சிவஞான யோகி செய்த சிவஞானபாடியத்தில் பொதுவதிகாரம் இலக்கணவோத்தி லிரண்டாம் பாதமாகிய விவ்வைந்தாஞ் சூத்திர முடிந்தது.

ஆறாஞ்சூத்திரம்.

இனி யாசிரிய ராறாஞ்சூத்திரத்திற்கு வார்த்திகப் பொழிப்புரைப்பான் புகுந்து சூத்திரத்தை மொழிபெயர்த்தருளிச் செய்கின்றார்.

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

எ-து. சூ-ம். எ-னின்.

இங்ஙனம் பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டென்பது சூத்திரமெனக்காட்டி யினி யதன் கருத்துரைக்கின்றார்.

சத்து மசத்தும் வரைசெய்துணர்த்துதனுதலிற்று என வரும்.

மேலைச் சூத்திரத்தி னைம்பொறிக ளான்மாவா லளந்தறிந்தறியாதவாறுபோலத் தாந்தமுணர்வின்றமியருளா னளந்தறிந்து மங்ஙன மறிவிக்கு முதல்வனையுந் தம்மையு மறியமாட்டா வென்றதுபற்றி, அற்றேல், முதல்வனெவ்வாற்றானு மறியப்படாத பொருளோவென் றுசங்கை நிகழ்ந்தவழியதனை நீக்கி இலக்கணவோத்துட் கூறுதற் கெஞ்சிநின்ற பதிப்பொருளதிலக்கணம் பாரிசேட வளவையானுணர்த்து முகத்தானே மேற் பொதுவியல்பாற் கூறிப்போந்த வான்மாவுக்குச் சிறப்பியல்பு பாரிசேட வளவையான் வருஞ் சூத்திரத்

தின் விளக்குதற் பொருட் டவ்வான்மாவின் வேறாகிய சத்தி னையு மசத்தினையு மிலக்கணத்தாற் றம்முண் மயங்காதவாறு வரைந்துவைத்துணர்த்தி யுண்மையதிகாரத்திற்குத் தோற்று வாய் செய்தல் இவ்வோத்தின் மூன்றாம் பாதமாகிய வாறாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

ஆசங்கைபற்றிய வியைபா னதிகரண வியைபுபெறப் பட்டது.

மேலைச் சூத்திரங்களிற் கேவல சகலங்களினியல்பு மு றையே விளக்கி ஈண்டுச் சுத்தத்தினியல்புவிளக்குதல் முறை மைபற்றிய வியைபாகலானதனானே பாதவியைபு பெறப்பட் டது.

பிரமாணவோத்துட்கூறிய பொருள்களு ளேனைப்பொ ருள்களுக் கிலக்கணங்கூறி யெஞ்சிநின்ற பதிப்பொருளுக் கிலக்கணங் கூறுத லவாய்நிலைபற்றிய வியைபாதலா னதனா னே யோத்தியைபு பெறப்பட்டது.

பதிப்பொருளுக்குப் பொதுவியல்புமேற் பெறப்பட்ட மையி னீண்டுக் கூறுமிலக்கணஞ் சிறப்பியல்பெனக் கொள்க.

அற்றாகலினன்றே யிதனை முதற்கட் கூறா துண்மைய திகாரத்தைச் சாரவைத் திறுதிக்கட் கூறியதூஉ மென்க.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. தம்முணர்வின் றமியாகிய முதற்பொரு ளளவைகளா னறியப்படு மியல்பிற் றெனி? னங்ஙன மறியப்படும் பிரவஞ்சம்போ லழிபொருளா கிய வசத்தாம். எவ்வாற்றானு மறியப்படாத வியல்பிற்றெ னி? னங்ஙன மறியப்படாத முயற்கோடு, ஆமைமயிர்க் கம் பலம்போலச் சூனியமாமாகலா னிவ்விரண்டு கூறுபாடுமன்றி யொருவாற்றா னறியப்படாமையு மொருவாற் றா னறியப்படு தலுமென்னு மிரண்டுவகையானுஞ் சிவமாகிய சத்தாயுள்ள தெனக் கூறுவர் மெய்யுணர்வி னிலைபெற் றுயர்ந்தோர். எ-று.

உணருருவெனின் அசத்தென மாறுக.

எனினென்பதனையுணராதென்பனோடுங்கூட்டியுரைக்க.

இன்மையின் இல்லையாகலானென்க.

முற்றும்மைதொக்கன.

அல்லதென்பது வினைபெயர்த்தக் குறிப்புமுற்று.

அன்றி யாமெனக் கூட்டுக.

ஒருவாற்று னறியப்படாமை, பாசஞானம் பசுஞானங்களா னறியப்படாமை.

ஒருவாற்று னறியப்படுதல், சிவஞானமொன்றானே யறியப்படுதல்.

இரண்டு வகையிற் சிவசத்தாமென விசைக்குமெனக் கொண்டு கூட்டுக.

பாசஞானம் பசுஞானங்களா னறியப்படாமையிற் சிவமாதலும், பதிஞானத்தா னறியப்படுதலிற் சத்தாதலும் பெற்றுமென்பார் இரண்டுவகையிற் சிவசத்தாமென்றார்.

சிவசத்தென்னு மிருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு.

சடமாகிய சத்தி னீக்குதற்குச் சிவசத்தென்றார்.

சிவசத்து சித்துச் சத்தென்னும்பொருட்டு.

உலகென்ற துயர்திணை.

எழுவாய் மேலைச்சூத்திரத்தினின்று வருவித்துரைக்கப் பட்டது.

இருதிறனுமன்றி யிரண்டுவகையானுஞ் சித்துமாய்ச் சத்துமாய்நிற்றன் முதல்வனுக்குச் சிறப்பியல்பென்பது போந்தவாறு கண்டுகொள்க.

இன்னு முதல்வனுக்குரிய வேனைச்சிறப்பியல்புக் குணங்களெல்லா மிவ்விரண்டனுளடங்கும்.

அற்றேல் "நின்னைக் காணு மாந்தர் தம்மையுங் காணுந்தன்மை யோரே" எ-ம், "தன்னாலே தனையறிந்தாற் றன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே" எ-ம், "மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை, யாப வாருயிரின் மேவு மருளொளி லொளியாய் நிற்கும்" எ-ம், "உன்னரிய திருவருளை யொழியமல முளதென்று ணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா முனக்கே" எ-ம், "சுடரா லிருடேடச் சொல்லார்க ளெந்தாய், சுடரா லிருடேடச் சொன்னாய்" எ-ம், ஓதியவாற்றா னேனைப் பசுபாசங்களுஞ் சிவஞானத்தா னன்றி யறியப்படாவென்பது போதருதலி னவையு மவ்விரண்டு வகையு முடைமையாற் சிவசத்தாவான் செல்லும் பிறவெனிற்? செல்லா. என்னை? அவை சிறப்புவ கையா னறியப்படுதலில் சிவஞான மொன்றானே யன்றி யா காதாயினும், பொதுவகையானே யேனைஞானங்கட்கு விடய மாத லுண்மையி னொருவாற்றான் உணருரு வாதற் கிழுக் கின்மையானென்க.

அஃதெங்ஙனமெனிற்காட்டுதும். "ஆன்மாவினுண்மை யுணர்ந்தவர்தமையுணர்ந்தோர்" "கருமிது பசுஞானம் பின் சிவஞானந் தனக்குமேலாம்" எ-ம், "காதலினா னன்பிரம மென்னு ஞானங் கருது பசுஞானம்" எ-ம், "ஓதுதலிற் பசு ஞானத்தானே யுண்மைசுட்டு முணர்விற்கும், நான் பிரம மென்னு முணர்விற்கும் ஆன்மா விடயமாதல் பெற்றாம். "வருந்தீபமெனத் தெரிந்தாங் கொருவி" எ-ம், "இவை கீழ்நாடலாலே" எ-ம். ஓதுதலின் ஒருவுதலுங் கீழ்நாடுதலு மாகிய வப்பசுஞானத்திற்குப் பாசம் விடயமாதல் பெற்றாம். இனி யிதனை யானறிந்தே னறிகின்றிலே னென்றுழி இது வென்னுஞ் சுட்டுணர்விற்கு விடயம் புறத்தே தோன்றுங் குடமும், யானென்னு முணர்விற்கு விடயம் அந்தக்கரணங் களை யதிட்டிக்கு மான்மாவும், அறிந்தேனென்னு முணர்வி

ற்கு விடயம் அவ்வான்மபோதமும், அறிகின்றிலே னென்னு முணர்விற்கு விடய மறியாமையுமே யன்றி வேறின்மையின் இங்ஙன முணருமுணர் வெல்லார்க்கு மொப்பநிகழ்கின்றமையிற் பசுபாசங்கள் பாசஞானத்திற்கு விடயமாதல் கண்கூடாகப் பெறப்பட்டது.

மெய்யுணர்வில்லாதார் உடம்புமுதலியவற்றை யானென மயக்கத்தான் மதிப்பினும் இதனை யானறிந்தேனென்புழி யானென்னு முணர்விற்கு விடயமான்மாவே யென்பது அனுபவ மதன்மாட்டு நிகழ்தல்பற்றி யுணர்ந்துகொள்க.

இருளின்கட் கயிற்றை யரவெனமதித்து இது கிடக்கின்றதெனக் கூறினும் ஆண்டிதுவென்னு முணர்விற்கு விடயமாய்க் கிடந்தது கயிறே யன்றி யரவன்மையான் யாண்டு மவ்வாறே கண்டுகொள்க.

அற்றேற், சிவனுண்டு சிவனில்லையெனவும்,மெய்யுணர்வில்லாதார் வழங்கக் காண்டலிற் சிவனும் பொதுவகையானவ்வாறே பாசஞானத்திற்கு விடயமாம்போலுமெனின் அற்றன்று என்னை? குடமுண்டு குடமில்லை யென்றவழிப் புத்தி விருத்தியிற் பரிணமித்துத் தோன்றி யான்மாவின்கண் வந்தனுபவமாமாறுபோல வுலகத்துள்ளார் சிவனுண்டு சிவனில்லை யென்றவழிச் சிவப்பொருளவ்வாறு பொதுவகையானுயினு மனுபவத்தானுணர வாராமையின் இன்னோரன்னவாயுணர்ந்துரைப்பன வெல்லாம் பேதைப்பருவத்துப் பெண்களாமநூற்பொருளை யுணர்ந்துரைக்குமாறுபோல வாசகஞான மாத்திரையே யன்றி யனுபவஞான மல்லவாகலானென்க, அனுபவஞானத்திற்கு விடயமாவதே யீண்டுணருருவென்றெடுத்துக்கொள்ளப் பட்டதென்றுணர்க.

•

அற்றேல், ஈண்டுக்கூறியவாற்றானே பசுபாசங்கள் சிறப்புவகையா னுணருருவல்லவாயினும் பொதுவகையா னுண

றருவாமாகலின் முதல்வன்போற் சிவசத்தாவான் செல்லா வென்பது பெற்றாம். அங்ஙனமாயினும் உணருரு வெல்லா மசத்தென்றலி னவையு மசத்தாவான் செல்லும் செல்ல வே, முப்பொருளுஞ் சத்தென்னுஞ் சைவசித்தாந்தத்தோடு முரணி யவசித்தாந்த மாமாலோவெனின்? அறியாது கடா யினாய்; சற்காரியவாதங் கூறுஞ் சைவசித்தாந்தத்திற் சத் தின் வேறாய் அசத்தென்பதொன்றின்மையிற் பிரவஞ்சமுஞ் சத்தியப்பொருளே யாமென்பது மேலே காட்டப்பட்டது. அங்ஙனமாகவும் ஒருநன்மைத்தாய் நில்லாது காரியவவத்தை யிற் றூலமாய் விளங்கிநின்ற பிரவஞ்சம், காரணவவத்தையிற் சூக்குமமாகிய சத்திவடிவாய் விளங்காது நிற்கும் வேறுபாடு டைமை மாத்திரையேபற்றி யன்றோ பிரவஞ்ச மசத்தெனப் பட்டது. அவ்வாறே காரணவவத்தையின் விளங்காது சூக் குமமாய் நிற்குந் தத்த மியல்பி னீங்கிக் காரியவவத்தையிற் றூலமாய் விளங்கிநிற்கும் வேறுபாடு மாத்திரையேபற்றிச் சத்தாகிய மாயை கன்மங்களையும் ஒளிமுன்னிருள்போலப் பெத்தக்காலத்து மேற்பட்டுநின்ற தனது சத்தி முத்திக்கா லத்து மடங்கிச் சூனியம்போ னிற்றல் மாத்திரையேபற்றிச் சத்தாகிய வாணவமலத்தினையு மசத்தென்றற் கிழுக்கென்னை யென்க.

இக்கருத்தேபற்றியன்றே "பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே" எ-ம். "பொய்ம்மாயப் பெருங்கடலுள்" எ-ம் பிறாண்டு மிவ்வாறோதியதூஉமென்க.

இஃதறியாது பொய்யாவது மெய்க் கெதிர்மறையாவ தொன்றென்னு நையாயிகர் முதலியோர் மதமடாதென்ப தூஉம் அபாவவாதத்தில் விரித்துக் காட்டினும் ஆண்டுக் காண்க.

இனிச் சத்தாகிய வான்மாவும் அநாதியே தனக்குரி மையில்லாத மலத்தின் மறைப்புண்டு தனது சத்திமடங்கிச்

சூனியம்போற் கிடத்தன்மாத்திரையேபற்றி யவ்வாறசத்தா தற்கும் முத்திக்காலத்தின் மறைப்பு நீங்கியவழித் தனது சத்தி விளங்கித் தனக்குரிய சிவானந்தத்தை யனுபவிக்கு முதன்மை யுடைத்தாய் மீளமலத்தின் மறைப்புண்ணுதலின்றி, யென்று மொருதன்மைத் தாதல்பற்றிச் சத்தாதற்கும் பொருளாய் நிற்றலிற் சதசத்தெனப்படும். "அசத்தைச் சத்துடனின்று நீக்குந்தன்மையாஞ் சதசத்தாமே" யென்பதூஉமிப்பொருட்டு.

இங்ஙனமே சத்தாகிய வான்மாவை யொருவாற்றானொத்தென்றலுஞ் சத்தாகிய மலமாயைகன்மங்களை மேற்கூறியவாறுபற்றி அசத்தென்றலுமாகலினவைபங்களும் பொதுவகையானுணருருவாதல்பற்றிச் சித்தாந்தத்திற் கிழுக்கென்னையென் றொழிக.

அநாதிமுத்தனாகிய முதல்வன் ஏனையபோலத் தனாது சத்தி மடங்குத லின்றிப் பெத்தத்து முத்தியினு மொருதன்மையனேயாய் மேம்பட்டு நிற்றலின், ஆண்டொரு வாற்றானு மசத்தென்றற் குரிமையின்மையின் எவ்வாற்றானுஞ் சத்தேயாதலு மெவ்வாற்றானுஞ் சித்தேயாதலு முதல்வனுக்கேயுரிய விலக்கணமாதல் கண்டுகொள்க.

அங்ஙனஞ் சித்தாயினு "மவனுக்கிவறு மசித்தாமே" யென் றதனலின், முதல்வனை நோக்கச் சித்தாதலின்மையின் எவ்வாற்றானுஞ் சித்தாதலாகிய விலக்கணம் எவ்வாற்றானுஞ் சத்தாதலாகிய விலக்கணம்போல ஆன்மாக்கண்மாட்டுச் செல்லாமை கண்டுகொள்க.

உணருந வாற்றெல்லாவழி, மலமாயை முதலியனவு முணருநவாகலி னவையு மசத்தாவான் செல்லுமா லெனக் கடாயினார்க்கு இங்ஙனஞ் செவ்வனே யிறுக்கமாட்டாதார், அபாவத்தினியல்பாவுணரா நையாயிகர் முதலியோர் கூறியதே

போலு மெனமயங்கி முப்பொருளுஞ் சத்தென்னுஞ் சித்தா ந்தத்தோடு முரணுமைப்பொருட் டண்டுச் சதசத்தென்பன சித்தசித் தென்னும் பொருளவெனவுஞ், சுத்தமசுத்தமென் னும் பொருளவெனவும், இடர்ப்பட்டுத் தமக்கு வேண்டிய வாறே யுரைப்ப.

மூலமல முதலியன போலப் பிரவஞ்சமு மெய்ப்பொ ருளே யாயினுங் காரியவவத்தையி னின்ற தூலவடிவம் இத் துணைப்பொழுது நிற்குமென நம்மனோரா லறிய வாராது, நீ ர்மே லெழுத்துங் கனவும் பேய்த் தேரும் போல நிலைபெறு வதுபோலத் தோன்றிக் காட்சிப்புலனாய் விரையக்கெட்டு ம றைந்து போதற் சிறப்புடைமை பற்றி யசத்தென்று மழி பொரு ளென்று மிக்கு வழங்கப்படுமென்க.

அஃதங்ஙனமாக, ஆசிரியர் வடமொழி யாருஞ் சூத்தி ரத் தோதியவாறே உணருருவசித் தெனச்சூத்திரஞ் செய் யாது உணருரு வசத்தெனச் சூத்திரித்தது, முதனூலொடு முரணும்பிறவெனின்? முரணாது; அசத்தெனவே சடமென் பதுந்தானே போதரு மென்னுங்கருத்தா னவ்வாறு சூத்திரி த்தாராகலானென்க. அக்கருத்துணர்ந்துகோடற்கன்றே" அ றிபொரு ளசித்தசத்தா" மெனக்கூட்டி யுரைத்தார் வழி நூலாசிரியரும்.

அற்றேல், அம்முறைமைபற்றி யசித்தெனவே யசத் தென்பதுந்தானே பெறப்படுமென்றுமோ வெனின், என் னும், என்னை? அசித்தாகிய மல மாயை கன்மங்கள் நீர்மே லெழுத்து முதலியன போல நிலைபெறுவது போலக் காட்சிப் புலனாய்த்தோன்றிச் கடிதியின் மறைந்துபோ மசத்தாதலின் மையின் என்று மொருதன்மையனாகிய முதல்வனை நோ க்கி அசத்தெனப்படு மாயினும், அங்ஙனந் தோன்றி மறைவ தாகிய பிரவஞ்சத்தை நோக்கிச் சத்தே யாமாகலிற் சிறப்பு

வகையா னுணருருவாகிய வசத்துப் பொதுவகையானுணரு ருவாகிய சடத்தின் வியாப்பிய மாவதன்றி வியாபகமாதலின் மையானென் றொழிக.

ஈண்டசத் தென்றதற்குப் பக்கங் காரியப் பிரவஞ்ச மாத்திரையே யென்பது வருஞ் சூத்திரத்திற் காட்டுதும். இதனுள் உணருரு வசத் தெனினுணராதின்மையி னென்ற தோரதிகரணம். இருதிற னல்லது சிவசத்தாமெனவிரண்டு வகையினிசைக்குமன்னுலகே என்ற தோரதிகரணம். ஆக விரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

முதலதிகரணம்.

—:o:—

அவற்றுட் பிரவஞ்சம் போல முதல்வனு மளவைக ளா னறியப் படும்பொருளேயா மென்னு நையாயிகர் முதலி யோர் மதத்தை மறுத்தற் கெழுந்தது முதலதிகரணம்.

ஈண்டு அறிவினாலறியப்பட்ட சுட்டு அசத்து, எனவ ரும்.

சுட்டப்படும் பொருளைச் சுட்டென்றார்; ஆகுபெய ரான்.

சிவஞானத்தாலறியப்படும் பொருளினீக்குதற்கு அறி வினாலென விசேடித்தார். ஈண்டறிவென்றது உலகத்துள் ளாரறியுமறிவை.

அறிவினைச் சுட்டென்றது அதனாற் சுட்டியறிவதது வேயாகலின்.

இஃதுணர்ந்து கோடற்கன்றே "அறிவினாலறிந்த யாவு மசத்தாதலறிதி" யென்ற புடைநூலாசிரியர் "தொன்மை யறிவுதா னொன்றை முந்தி யதுவது வாகக்காணு மறிவு மசத்தென" மீளத் தெரித்துணர்த்தியதூஉ மென்க.

அற்றேல், இல்லையென்னு முணர்விற்கு விடயமாயனுப லத்தியைப் பயப்பிப்பது மாத்திரையன்றே அசத்தாவ தவ்வாறனறி இஃதுகுடமிஃதாடை யென்றாற்போல உள்ளதென்னு முணர்விற்கு விடயமா யுபலத்தியைப்பயப்பிக்கும் பிரபஞ்சமு மசத்தேயாயிற் சத்தசத்தென்னும் பாகுபாடே பெறப்படாமையின் உணருரு வாதல் மாத்திரையேபற்றி அறிபொரு ளசத்தென்றல் சாலா தென நையாயிகர் முதலியோர் மதம்பற்றி யாசங்கை நிகழ்ந்தவழி, யதனை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்ததேது.

அவைதான் பிரகாசமாய் நின்றே யப்பிரகாசமாய் நிற்றலான், எனவரும்.

இல்லையென்னுமுணர்விற்கு விடயமா யனுபலத்தியைப் பயப்பித்தலன்றே யசத்தினியல்பாவ தெனின்? நன்று சொன்னாய், அங்ஙனமனுபலத்தியைப் பயப்பிப்பது முன்னுண்டென்னு முணர்விற்கு விடயமாயுபலத்தியைப் பயப்பிக்கு நிராசதகுணமிருதிப் பாட்டினின்றபொருளேயன்றிப்பிறிதன்மையாற் பாவம்போல வபாவமு மபாவப்பொருளின்றன்மை யெய்துதற்குக் காரணம் பொருட்பெற்றியாகிய காமதகுண மிகுதிபாடே யென்பது பெறப்படுதலிற் பொருட்பெற்றியின் வேறுபாவமென வொன்றின்மையானறிவினலறியப்பட்ட சுட்டரற்தே யென்றற்கிழுக்கென்னை யென்பதாம்.

ஈண்டுப் பிரகாச மப்பிரகாசமென்பன வுபலத்தி யனுபலத்தியென்னும் பொருளவா யாகுபெயரானவை நிகழ்தற்கிடனாகிய பொருளை யுணர்த்தி நின்றன.

அற்றேல், ஒருசாரன வங்ஙனமாயினு மறியப்பட்டனவெல்லா மவ்வாறசத்தாமென்றல் பொருந்தாது; பிரமாணமின்மையின்.

அன்றியு மிவ்வேதுவேபற்றி யறியப்பட்டனவெல்லா மசத்தெனக்கொண்டு பதிமுதற் பொருள்களினுஞ் செல்லாமைப்பொருட்டு நித்தப்பொருள்க ளளவையா னறியப்படாவெனக் கொள்ளின், "அருளினாலாகமத்தே யறியலாம ளவினாலுந், தெருளலாம்" என்றற் றொடக்கத்துச் சுருதிகளோடு முரணி இந்நூலின் மேற்கோளுமேதுவு மெடுத்துங் காட்டுமாக வைத்துப்பதிமுதலிய பொருள்களினியல்பு வழியளவையாற் சாதித்தற் கெழுந்த வதிகரணங்களும் பயனில வாயஃதுமக்கே யவசித்தாந்தமாமாலோவெனு மாசங்கையை நீக்கி யேதுவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா
மசத்தாகு மெய்கண்டா னுயின் எனவரும்.

அறியாய் எ-து. விளியுருபேற்ற பெயர்.

மெய்கண்டானுயி னறிவறிந்தவெல்லா மசத்தாமெனு மாறுக.

அசத்தினியல்பை யறிந்தாயாயினிவ்வாறு பிணங்குவா யல்லை யென்பார் அசத்தறியாயென்றும், "எந்தைதாட்பால் வணங்கித்தலைநின்று கேட்க" வென்பார் கேண என்றும் உபலத்திக்கு விடயமானவை யெல்லா மனுபலத்திக்கு விடயமாத லொருதலை யென்பார் அறிவறிந்த வெல்லா மசத்தாகுமென்றுஞ், சத்தினியல் புணர்ந்தார்க்கன்றி யசத்தினியல் புணர வாராதென்பார் மெய்கண்டா னென்றும், ஆய்தற்கருமைநோக்கி யாயினென்றுங் கூறினார். கூறவே யுபலத்திப் பட்டனவெல்லா மனுபலத்திப்படுதலு மொருதலையாகலினவ்வா றன்றி யென்றுமோரியல்பாய் நிற்பதாகிய பதிப்பொருளறிவினலறியப்படுவ தன்றென்பதூஉம் பெறப்பட்டது."

"போதமிகுத்தோர் தொகுத்த பேதமைக்கே பொருந்தினே ரிவர்க்கன்றிக் கதிப்பாற்செல்ல, வேதுநெறியெது

மவர்கட்கு" நூலாகலின் அருளினு லாகமத்தே யறிதலும் அளவினுற் றெருளுதலு முண்மை ஞானத்தைத்தோற்றுவிக்கு முகத்தானவருக்குப் பயன்படுத லுடைமையினீண்டுக்கூறுமதிகரணங்கள் பயன்படாமையு மறியப்படாதென்றதனோடு முரணுதலு மின்மையா னவசித்தாந்த மாதல் யாண்டையதென்பது கருத்து. இஃதுணர்ந்து கோடற்கன்றே "ஞானச்செய்தியாற் சிந்தையுள்ளே மருளெலா நீங்கிக்கண்டு வாழலா"மென்பதனை யவற்றின்பின்னாக வைத்தோதியதூஉமென்க. "அருளினுலாகமத்தே யறியலாமளவினாலுந், தெருளலாம்" எனப்பொதுப்பட வோதி "ஞானச்செய்தியாற் சிந்தையுள்ளேமருளெலா நீங்கிக்கண்டு வாழலா" மெனவிதந்தோதுதலின் மருளெலா நீங்கிச்சிந்தையுள்ளே காண்டல் ஞானச்செய்தியொன்றானன்றி யேனையவற்றாற்கூடாதென்பதூஉம் அவையெல்லாமனுபவ ஞானத்தைத்தோற்றுவித்தன் மாத்திரையாற் பயன்படுதலுடைய வென்பதூஉம் போந்தவாறுகாண்க.

அவை யங்ஙனம் பயன்படுதலும் அனுபவமுடைய தேசிகனரு ளில்வழிக்கூடாதென்பார் "மறையினு லயனுன் மாலான் மனத்தினல் வாக்கான் மற்றுங், குறைவிலா வளவினாலுங் கூறெணுதாகிநின்ற, விறைவனார்" எ-ம், "அருளினுலாகமத்தே யறியலா மளவினாலுந் தெருளலாம்,, எ-ம். கூறினார்.

இங்ஙன மசத்தென்றதுவேறுபொருளெனக்கொண்டு சத்தாகிய திரவிய முதலிய பிரவஞ்சத்தை யுணருருவாதல் பற்றி யசத்தென்றல் சாலாது; சாலுமாயினு மதுபற்றி முதல்வனறியப்படாத பொருளென்றல் பொருந்தாதென்னுநையாயிகர் முதலியோரை மறுத்து மேற்கோளைச் சாதித்தவழிச் சற்காரிய வாதத்திற் சத்தாகிய பிரவஞ்சத்தை யசத்தென்ற லவசித்தாந்தமெனச் சாங்கியர் முதலியோர் கூறு

மாசங்கையை நீக்குதற்கெழுந்த தாகலினதனையே "பெரியா ரைப் பிழையாமை" யென்புழிப்போல விரட்டுற மொழிந்து கொண்டு வேறுமோரதிகரணமாக வைத்துப் பொருள்கோ டற்பாற்று; அஃதாமாறு, அறிவினு லறியப்பட்ட சுட்டு அசத்து.

அஃதெங்ஙன மெனின் மேற்கோளைச் சாதித்தற் கெழு ந்தவேது.

அவை தாம் பிரகாசமாய் நின்றே யப்பிரகாசமாய் நிற் றலான்' எனவரும்.

காரியவவத்தையிற் றாலமாய் விளங்கிநின்றே காட்சிப் புலனுய்ச் சடுதியின் மறைந்து காரணவவத்தையின் விளங் காது நிற்கும் வேறுபாடுடைமையா னங்ஙனம் புலனுகாத காரணமாகிய மாயை முதலியவற்றை நோக்கிக் காரியமாகிய பிரிவஞ்ச மசத்தாதல் சாலு மாகலி னீண்டறிவினுலறியப் பட்ட சுட் டசத்தென மேற்கொண்டதென்பதாம்.

அற்றேல், அங்ஙன நிலைபெறுதல் போலத் தோன்றிக் காட்சிப்புலனுய்க்கணத்தின் மறைந்து போதன்மாத்திரையே பற்றிச் சத்தியமாகிய பிரவஞ்சத்தை யசத்தென்ப தெவ்வா றென்னு மாசங்கையை நீக்கி யுவமை முகத்தானே யவ்வே துவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்,

—அசத்தலாய்

நீரிலெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரினவை யின்றாமா றேப்பு. எனவரும்.

அசற்காரிய வாதியல்லாத வறிவுடையோனே அங்ஙன ந்தோன்றி மறைவனவாகிய பிரவஞ்சம் அசத்தாமாற்றிற் குவமை யாதாயின், நீர்மேலெழுத்து முதலியனவாம் என்ப தாம்.

எனவே அப்பொழுதுள்ளனவாகிய நீர்மேலெழுத்து முதலியவற்றை யங்ஙனே சடுதியின் மறைந்து போதல்பற்றி யசத்தென்றல் எல்லார்க்கு மொப்ப முடிந்தமையி னவை போலப் பிரவஞ்சத்தையு மசத்தென்றல் சாலுமென்றவா றாயிற்று.

"உண்டுபோ லின்றும் பண்பினுலகினை யசத்துமென் பர்,, என்றார் வழிநூலாசிரியரும்.

உண்டுபோ லின்றுதல் இத்துணைப் பொழுதினசிக்கு மென்றறிய வாராது நெடுங்கால நிலைபெறுவன போலத்தோ ன்றிக் காலம்வந்துழி யங்ஙனே சடுதியின் மறைந்துபோதல். "நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும், பெருமையு டைத் திவ்வுலகு" என்றோதியதூஉ மிவ்வியல்பு நோக்கி யென்க. அசத்துமென்ப ரென்னு மெதிர்மறை யும்மையாற் பொருட்டன்மை பற்றிச்சத்தேயா மென்பது போந்தவா றுணர்க.

அசற்காரிய வாதியை யசத்தென்றுபசரித்தார்.
நிகழ்னென்பதனை யாண்டுங்கூட்டுக.
குவ்வுருபு விகாரத்தாற் றொக்கது.

நீரிலெழுத்துத் தோன்றியபொழுதே மறைந்து போத ற்கும், கனவிற்காட்சி முடிவுபெறுதலின்றி யிடையே மறை ந்துபோதற்கும், அருஞ்சுரத்தின்கண் முதுவேனிலின் நண்ப கற்கடுமை பற்றித்தோன்றி ஞாயிற்றின்கிரண முகிற் படல த்தின் மறைந்தவழித் தானுமறைந்து போவதாகிய பேய்த் தேர், ஒரு காரணங்காட்டி மறைந்து போதற்கு முவமை யெனக் கொள்க.

நீரினெழுத்து முதலியன பொய்யென்பாரை மறுத்த ற்கு நிகழ்னென் றடைகொடுத்தார்.

நீரிலெழுத்து எழுதுங்கா லுள்ளதாய்த் தோன்றுதலி

னதுபொய்யாமா றியாண்டைய தென்பது.

கனவு மெய்யென்பது மேற்காட்டினும்.

அன்றியுங் கனவின்கண் மகளிரை மணந்து பேருவகை யுற்றுழியும் புலி முதலியவற்றைக்கண் டச்சமிக்குற்றுழியும் அவ்வனுபவக்குறி தூலவுடம்பின்க ணிகழக்காண்டலானும் இன்னோரன்னவை மெய்யாதல் பெறப்பட்டமையின் ஏனைக் கனவி னிகழ்ச்சியு மவ்வாறே மெய்யா மென்பதுதானே போதரும். சூக்குமவுடம்பிற் பெறப்படு மனுபவங்கள் மிக்கு நிகழ்ந்துழி யொற்றுமைபற்றித் தூலவுடம்பினுங் குறிநிகழும். மிக்கு நிகழாதவழித் தூலவுடம்பிற் குறிநிகழுமா றில்லையென் றுணர்ந்துகொள்க.

இனிப் பேய்த்தேரை நீரெனக்காண்டன் மாத்திரையே பொய்யாவதன்றிப் பேய்த்தேர் பொய்யன்றென்பது கண்கூடாகவறியப்படும். இங்ஙனமாகலின் நீர்மேலெழுந்து முதலியன சத்தேயாகவும் ஒருவாற்றாற் பிரவஞ்சத்தை நோக்கி யசத்தென்றற் குரிமையுடையவாயினாற்போல நாதமுடிவாகிய பிரவஞ்சமுங் காரணப்பொருளை நோக்க வொருவாற்றா னசத்தென்றற் குரிமையுடைமையி னதுபற்றிச்சற்காரிய வாதத்திற் கிழுக்கின்மை யுணர்க.

இவ்வெண்பாவின் 'அசத்தறியாய்' எ-ம். 'அசத்தலாய்' எ-ம். வேறு வேறு விளித்தலானும் 'ஆயின் ஓரின்' எ-ம். 'அசத்தாகும் இன்றுமாறு எ-ம். ஒருபொருட்கிளவியை யிருகாற் கூறுதலானும் இதனை இங்ஙன மிருதொடராகவைத்து 'இலயித்ததன்னிலென்பதுபோல இரண்டதிகரணப்பொருள்பட வுரைத்துக்கோடலே யாசிரியர் கருத்தாதலறிக.

இவ்வாறன்றி யிதனை யொருதொடராக வைத்துரைப்பின் அசத்தறியாய் அசத்தலாயென்றதனால் ஒருபயன்படா

மையும் ஆயின் ஓரிரெனன்றிருகாற் கூறுதலும் அசத்தாகும் இன்றுமென்றிருகாற் கூறுதலுங் கூறியது கூறலென்னுங் குற்றமாதலு மறிக.

இனி யொருவாற்றானு முணரப்படாத பொருள் சூனியமென்பது எல்லாச் சமயத்தார்க்கு மொப்பமுடிந்தமையி னுண்டதிகரணத்திற் குரிய வையப்பாடு முதலியன நிகழாமையானதனை வேறோரதிகரணமாக வைத்துரைத்திலர். அங்ஙனமாயினும் உணராத பொருளைச் சத்தென்றற் படுமிழுக் கென்னையோவென மாணாக்கர்க்காசங்கை நிகழாமைப்பொருட்டு வழிநூலாசிரியர் "உணராதபொருள் சத்தென்னிலொரு பயனில்லைத் தானும்' புணராது நாமுஞ்சென்று பொருந்துவதின்று மென்றுந், தணவாத கருமமொன்றுந் தருவதுமல்லவானத், திணரார்பூந் தொடையு மாமைக்கெழுமயிர்க் கயிறும் போலும்" என விடுத்தொழிந்தாரென்க.

முதலதிகரணமுடிந்தது.

இரண்டாமதிகரணம்.

மேலையதிகரணத்தின் உணர்பொருளியல்பும் உணராதபொருளியல்பு முரைக்குமுகத்தான் அசத்தியனியல்பை வரைசெய்துணர்த்தியவழி, யிரண்டு மிவ்வாறாயின் முதல்வனதியல்பு வேறென்னையோவென்னு மாசங்கையை நீக்கிப் பாரிசேட வளவையான் முதல்வனது சிறப்பியல்புணர்த்து முகத்தானே சத்தினியல்புவரை செய்துணர்த்துதற் கெழுந்த திரண்டாமதிகரணம்.

இனி யென்றது இவ்வியைபுணர்த்துதற்பொருட்டு. அதிகரணந்தோறும் இனியென்பன அவ்வவற்றிற்கு மேற் போந்த வதிகரணங்களோ டுளவாகிய வியைபுணர்த்துதற்

பொருளவென்பது மேலே காட்டினும். யாண்டுங் கடைப்பி டித்துக்கொள்க.

இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்கு மனாதீதகோசர மாய் நின்றவதுவே சத்தாயுள்ள சிவமென்றுணர்தற்பாற்று. எனவரும்.

இருதிறனுவன யாவை யென மலையாமைப்பொருட்டிவ் விரண்டு தன்மையுமென மேற்போந்தவற்றைச் சுட்டிக்கூறி னார்.

இரண்டுவகை யாவன விவையென்பார் வாக்கு மனாதீத கோசரமா யென்றார்.

ஈண்டு வாக்கென்றது வாக்காகிய நாதமுடிவான பாச ஞானத்தை.

மனமென்றது அவற்றின் வேறாகிய பசுஞானத்தை.

வாக்கு மனாதீதகோசரமாய் நின்றவென்பது அவ்விர ண்டன் விருத்திகளைக் கடந் ததீதமாயும் வேறறநின் றுணரு மனுபவஞானமாத்திரையின் விளங்கிக்கோசரிப்பதாயும் நின் றவென்றவாறு.

அங்ஙனநின்ற பொருளிதுவென வளவைகளா னறிய வாராமைபற்றி யதுவெனப் பொதுப்பட மகாவாக்கியத்துட் கூறியதனை யனுவதித்துச் சத்தாயுள்ள சிவமாதலைச் செவி யறிவுறுக்கின்றூ ராகலி னது சத்தாயுள்ள சிவமே யெனப் பிரிநிலையேகாரத்தை மாறிக்கூட்டுக. சத்தென்னும் வட மொழிக்குப் பொருளுரைப்பார் சத்தாயென் றெழியா துள் ளவென்றார்.

என்றுணரற்பாற்று என்றுயர்ந்தோரா னறியும் பான் மைத்தென்க.

வாக்கு மனாதீதமென்றது தமிழ்நூன்முடிபு. மரவடி மராடியென மரீஇயினாற்போல மனவதீதமெனற்பாலது மனா தீதமென மரீஇயிற்று.

அதீதகோசரமென்பது வடநூன்முடிபு.

வாக்கு மனாதீதப்பொருளாகலான் உணருருவாந் தன்மையும், கோசரப்பொருளாகலா னுணராதாந் தன்மையுமில்லை யென்பது பெறப்படுதலி னிவ்விரண்டு வகையுமின்றி யென்றார்.

அற்றேல், ஐந்தொழிற்கும் வினைமுதலாதல்பற்றி யுண்டெனத் துணியப்பட்ட முதல்வன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்பனென்ப தெற்றாற் பெற்றாம்; ஆகமவளவையாற் பெற்றாமெனின்? வழியளவைக்கேலாவா யாகமங்களுட்கூறப்படுவனவெல்லாம் புனைந்துரைவகையானன்றிப் பிரமாணமாகாவாலென்னு மாசங்கையை நீக்கி அவ்வளவினவன் மகிழுகவென்னு நியாயம்பற்றி வாக்கு மனாதீதகோசரமாய் நிற்றலை வழியளவையாற் சாதித்து இவ்விரண்டு தன்மையுமின்றி யென்றதனை வலியுறுத்துதற் கெழுந்தவேது.

பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவ தின்மையானும், அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசமின்மையானும் என வரும்.

வாக்கு மனங்களா னொருதியுணரப்படுவதாகிய பிரகாசப் பொருட்கு, முன்ன ருண்மை யதிகாரத்துட் கூறப்படுஞ் சாதகங்களினின் றறியப்படவேண்டுவதின்மையானும், ஒருவாற்றானு மறியப்படாத வப்பிரகாசப் பொருட்குச் சாதகத்தினின்று மறியப்படுந் தன்மை யின்மையி னதனானுவதோர் பயனின்மையானும், இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்கு மனாதீத கோசரமாய்நிற்றல் பெறப்படுதலின், அங்ஙனநின்ற வதுவே சத்தாயுள்ள சிவமென்பதாம்.

பிரகாசிக்கப்படுவதனைப் பிரகாசமென் றுபசரித்தார். அற்றேல், வாக்கு மனாதீத மென்றதொக்கும், கோசரமென்றல் பொருந்தாது, என்னை? பரம்பிரமப்பொருள் அவிச்சை

வயத்தான் ஞாதாவெனவும், ஞேயமெனவும் பகுக்கப்பட்டு முன்னர்க் கூறப்படுஞ் சாதகங்களினின் றறியவும்படும். அவிச்சை நீங்கியவழி ஞாதிருஞான ஞேயமென்னும் பாகுபாடு சிறிதுமின்மையிற் சத்தென்றுத லசத்தென்றுதல் ஒருவாற்றுனு ஞேயமாமா றின்றிக் கேவல ஞானமாத்திரையேயாய் நிற்பதொன்றுகலானென மாயாவாதி மதம் பற்றி யாசங்கை நிகழ்ந்தவழி யதனை நீக்கிக் கோசரமாதலை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

எண்ணிய சத்தன் றசத்தன்று மென்றுலென்
கண்ணி யுளவென்றன் மெய்கண்டா—னெண்ணி
யறிய விரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மெய்சிவன்று ளாம். எனவரும்.

பரமார்த்தமாகிய பரம்பொருள் விவகாரத்திற் கருதப்பட்ட சத்துமன் றசத்துமன்றென்னில், அங்ஙனமொருபொருளுண்டென்றல்யாது பிரமாணங்கருதியோ வதனைக்கூறுவாயாக. பிரமாணமொன்றுமுண்டென்னி ன்தற்கது பிரமேயமெனப்பட்டு ஞேயபாவான் செல்லுமென் றஞ்சி யாண்டதற்குப் பிரமாணமில்லை யென்பையாயிற் சத்தினியல்பையுணர்ந்தோ ராய்ந் தறியிற் காட்சி முதலிய பிரமாணங்களா லறியப்பட்டதூஉம் ஒருவாற்றானும் பிரமாணமில்லாத சூனியமுமாகிய விரண்டு மேற்கூறியவாற்று னசத்தேயாம். ஆகவே சத்தென்னுஞ் சாங்கோக்கிய முதலிய சுருதிகளோடு புராணமாதலாற் சத்தென்றோதப்படு மறிவினு லறியப்படாத மெய்ப்பொருள் நீ கூறுஞ் சூனியமன்று சைவவுபநிடதங்களினுஞ் சைவாகமங்களினு மன்னிய மின்றி நின்றுணருமனுபவ மாத்திரையிற் கோசரிப்பதென் றோதப்படுஞ் சிவனருளாமென்க.

அறிய வென்னுஞ் செயவெனெச்சம் மழை பெய்யக் குளநிறையு மென்புழிப்போலச் செயினென்னு மெச்சப்பொருட்டாய் நின்றது.

இரண்டுமெனா முற்றும்மை விரிக்க.
அசத்தாமென மாறுக.
சத்தாகிய மெய்யெனக் கூட்டுக.

தான் முயஅதெ"ன்புழிப்போல அறிவறியா மெய் யென்றது வாளா பெயராய் நின்றது. "பெயர் நிலைக் கிளவியினுஅ குரவு" மென்ற சூத்திரத்தாகலின்.

சிவன்முளனச் சிவசத்தியின்மேல் வைத்துயர்த்துக் கூறினர். இறைவனர் கமலபாத மென்றதுமது.

இதனாற் போந்த பொருள் சத்து மன்றி யசத்துமன் றி யொரு பொருளுண்டென்பதற்குப்பிரமாண மென்னை? பிரமாணமில்லாத சூனிய மெனிற்? சூனியமு மழிபொருளு மாகிய இரண்டுமசத்தே யாமென்பது மேற்காட்டினமையிற் பிரமப் பொருளசத்தெனப்படுச் சத்தென்னுஞ் சுருதிக ளொல்லாவற்றேடு மூவாறு மாகலா னவற்றிற் சத்தென் றே தப்படும் பரம்பிரமப்பொருள் உண்மைஞானத்திற் கோசரிப் பதென யாங்கூறுஞ் சிவமேயன்றி நீ கூறுஞ்சூனிய மன்றெ ன மாயாவாதியை மறுத்துக் கோசரமென்றதனை வலியுறுத் தியவாறு மென்க.

எவ்வணியறிய விரண்டாமசத்தாத லென்பதற்குப் பிற ரெல்லாம் வருகின்ற வெண்பாவிற் கூறும் பொருள்படக் கூ றியது கூறலாக்கி யுரைப்ப.

அற்றேல், முதற்பொருள் கோசர மென்றல்பொருந் தும். வாக்கு மனாதீத மென்றல் பொருந்தாது. என்னை? பிர காசித்த பொருளையும் வேறே ராற்ற னறிதுமென வேட் கை சென்றுழி அவ்வாற்றாற் புதுவதாய்ப் பிரகாசிக்கவேண் டுதலிற் பிரகாசத்திற்குப் பிரகாசிக்கவேண்டுவ தின்மையி னென்னுமேது யாண்டுஞ் செல்லாமையானும், மனத்தோடு கூடாதவழியான்மாவுக் கறிவுண்டாத லின்மையின் வாக்கு

மனாதீதமாய வழிக் கோசரமா மாறின்மையாலும் ஆன்மாவினோடுகூடி மனமுதலிய கருவியாத லவற்றோடுகூடி யான்மாவாதலறியு மென்றல் பொருத்தமுடைத்தாகலானென நையாயிகர் முதலியோர் கூறு மதம் பற்றி யாசங்கை நிகழு மதனை நீக்கி முதற்பொருள் வாக்குமனாதீதமாய் நின்றே கோசரமா மென வலியுறுத்தற் கெடுத்துக் காட்டு முதா

உணர்ப வசத்தாத லொன்றுணரா தொன்றை
யுணருநீ தானுணரா யாயி—னுணருமுனிற்
றனிரண்டா மெய்கண்டான் றன்னை யுணர்தலாற்
றனிரண்டாய்க் காணான் றமி. எனவரும்.

நின்னா லறிவனவாகிய கருவிகளெல்லா மேற்கூறியவாற்றா னசத்தாம்; அசத்தெனவே அசித்தாதலும் பெறப்பட்டதாகலி னவற்றுளொரு கருவியு முதற்பொருளை யறியமாட்டாது. அவற்றா னறிகின்ற நீதானு மதனையறியமாட்டாய் நீயோர் கருவியாயின் அங்ஙன மறியப்படும் பொருள்கள் போல வுணர்கின்ற நின்னின் வேறாம்; ஆகவே யதனா லுனக் காவதோர் பயனின்றாம். அற்றேல், மனநீங்கிய வழி யான்மாவுக் கறிவுண்டாமாறில்லை. உண்டாயினும் அதனாலறிவழியும் வேறாய் நின்றன்றியறிதல் கூடாதாலெனின்? அற்றன்று ஆன்மாவுக் கியல்பாயுள்ள வறிவினை மனமுதலிய கருவிகள் விளக்குவன மாத்திரையே யன்றி முன்னில்லதனை யுண்டாக்குவன வல்ல வென்பது மேற்காட்டப்பட்டதாகலி னவ்வுண்மையை யுணர்ந்தோன் சத்தாயுள்ள சிவத்தை யறியுங்காற் றன்னறிவு தன்க ணடங்கி அதுவாய் நின்று அதனானே யதனை யறியு மாகலா னேனைப் பொருள்களைப் போல அத்தனி முதற்பொருளை வேறாய் நின்றறிவானல்ல னென்க.

இதனாற் போந்தது சத்தாகிய சிவம் பாசஞானத்தானாதல் பசுஞானத்தானாதலறியப்படாது. அறியப்படிற் குட முதலியன போல ஆன்மாவின் வேறா யவிச்சையான் வருந்

க்கதுக்கங்களைப் பயப்பதன்றி யவிச்சையி னீங்கிய பெரும் பாவனைப் பயவாதாகலான் ஆன்மாவறியு முண்மையை யுணர்ந் தோரன் வினையபோல வசத்தல்லாத தனிமுதற் பொருளாக லான்றனை யதனையே யொற்றித்து நின்று காண்பனென னை யாயினர் [illegible]லியோரை மறுத்துக் கோசரமாமாறுணர்த்தி வாக்கு மனதீதமென்றதனை வலியுறுத்திய வாறு மென்க.

உணர்பவென்பது அகரவீற்றஃறிணைப்பன்மைப் பெய ர்ச்சொல்.

ஒன்றும் என முற்றும்மை விரித்துரைக்க.

உன்னினென்னு மின்னுருபு நீக்கப்பொருட்கண் வந்தது.

ஒற்றிரட்டியாமை புறநடையாற்கொள்க.

இரண்டாதல் வேறாதல்.

தான் அசை.

தமியையென இரண்டனுருபு விரித்துரைக்க.

உணராயாயினென ஒரு தொடராக்கியுரைப்பின் உண ர்தற்பொருளில்லை யெனவிடுத்தல்வேண்டும். அவ்வாறன்றி யிரண்டாயென விடுத்தலுணர்பொருட்கன்றி யேலாமையின் அஃதுரையன்மையறிக.

அற்றேல், தன்னை யறிந்தன்றித் தன்னாலறிதல் கூடா மையாற் றன்னாலே தனையுணருமென்பது தன்னைப்பற்றுத லென்னுங்குற்றமா மாகலின், அவ்வாறன்றி வாக்குமனாதீத மாய் நிற்கின்ற பொருள் யோகநூலிற் கூறுந்தியான பாவ னைகளிற் கோசரமாமென்றலே பொருத்தமுடைத்தெனப் பாதஞ்சலமதம்பற்றி யாசங்கை நிகழ வதனை மறுத்துத்த ன்னாலன்றிக் கோசரமாகா தென்பதனை வலியுறுத்துதற்கெ டுத்துக்காட்டுமுதாரணம்.

பாவகமேற் றனசத்தாம் பாவனா தீதமெனிற்
பாவகமா மன்றென்னிற் பாழதுவாம்—பாவகத்தைப்

பாவித்த ருனேனென்னிற் பாவகமாந் தன்னருளாற்
பாவிப் பதுபரமில் பாழ். என்வரும்.

நீ கூறும் பாவனை யேனைப்பாவகங்கள்போல மனமுத லியவற்றோடு கூடிநின்று பாவிக்கும்பாவனையோ அவற்றோடு கூடாது நின்று பாவிக்கும் பாவனையோ இரண்டுமின்றிப் பாவிக்கும் பாவனையோ இம்மூவகையுமின்றிப் பித்தவ னுண்டவனைப் பாவிக்குமாறுபோல வுணராத பொருளை யுணர்ந்ததாகவைத்துப் பாவகஞ் செய்வதாகிய பாவனையோ கூறுவாயாக வென வினவிய வின்னான்கினையு முறையே மறு த்தவாறு.

அற்றேல், ஒருவாற்றானும் பாவனைக்கெய்தாதபொருள் சூனியமாம்போலு மென்பாரை நோக்கித் தன்னருளாற் பா விப்பது பரமில்பாழெனச் சித்தாந்தஞ் செய்தார்.

ஏனைப் பாவகங்கள்போல மனமுதலியவற்றோடு கூடி நின்று பாவிக்கும்பாவகமெனின்? அறிவினாலறியப்பட்ட சுட்டாகலா னசத்தேயாம்.

தான் அசை.

பாவகமாமென்பது பாவனை மாத்திரையே யன்றிப் பய னிலை யென்பதாம்.

பாவகத்தைப் பாவித்தலென்புழிப் பாவித்தலென்பது செய்தலென்னும்பொருட்டாய் நின்றது. "உண்ணலு முண் ணேன் வாழலும் வாழேன்" "கறைமிடறணியலு மணிந்த ன்று" என்புழிப்போலக் கொள்க.

மேலைவெண்பாவிற் றன்னென்றது தனது சத்தியே யாகலாற் றன்னைப் பற்றுதலென்னுங் குற்றமாமாதியின் றடையுதென விடுப்பார் தன்னருளாற் பாவிப்பதென்றார்.

தன்னருளை யறியுமாறு மதனாற்பாவிக்குமாறுந் தன்மை யதிகாரத்திற் பெறப்படும்.

அற்றேல், பாவனையும் பாசஞானம் பசுஞானங்களானுவ தாகலிற் சத்தாகிய சிவ மதன்கட் கோசரமாகாதென்றதொ க்கும். அங்ஙனமாயினுந் தன்னருளாற் பாவிக்கவேண்டா ஆன்மாப் பசுத்துவநீங்கிய முத்திக்காலத்திற் சிவனைப்போல முற்றுமுணர்தன் முதலிய வெண் குணங்களுமுடையனென் றாகமங்களிற் கூறுதலி னுண்டான்மாவி னறிவு சிவஞானத் தோ டொத்த ஞானமேயன்றிப் பசுஞானமன்மையா னவ்வ றிவா னறியப்படுங் கோசரப் பொருளென்றலே பொருந்த முடைத்தெனச் சிவசமவாதிமதம்பற்றி யாசங்கை நிகழ்ந்த வழி யதனை மறுத்துத் தன்னருளானன்றிக் கோசரமாகா மையை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

அறிய விரண்டல்ல ருங்கறிவு தன்று
லறியப் படானறிவி னுள்ளா—னறிவினுக்குக்
காட்டாகி நின்றனைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டா தறிவழிந்து கண்டே. எனவரும்.

ஆகமங்களி னத்துவிதமேகூறுதலி னான்மாத் தன்ன றிவா னறிவதற்குத் தன்னின் வேறல்ல னாகலானுஞ், சம மாதலின்றித் தூலசூக்குமம் முறையிற் றன்னறிவுக்குள் ளாய் நிற்றலிற் றன்னறிவினாலறிய வாரானாகலானுந், தன் னறிவிற்கு வியஞ்சகமாயறிவித் துயிர்க்குயிராய்நிற்றலானும், அத்தன்மையனாகிய முதல்வனைப் பசுத்துவநீங்கியவழியும் ஆன்மாவினறிவு தான் கண்டறிந்து தன்குணியாகிய வான் மாவுக்குக் கோசரமாம்படி காட்டமாட்டாது, தன்னின் வே றின்றித் தனக்குண் ணிற்றலிற்றன்னாற் காணப்படாது, தன க்குக்காட்டாகின்ற ஆன்மாவை யறியமாட்டாத கண்ணொ ளியைப்போல வென்பதாம்,

அல்லன் படான் உள்ளான் நின்றான் என்புனகுறிப் பேதுக்களாகலி னங்ஙன மொருதொடராதக் கொண்டு ரைக்க,

ஆங்கு அசை.
அறிவினுள்ளானுகலி னறியப்படானென்சு
காட்டுமுதனிலைத் தொழிற்பெயர்.
கண்டறிந்து காட்டாதெனக்கூட்டுக.

கண்டறிதல் குழிந்தாழ்ந்த கண்ணென்புழிப் போலச் சிறப்பின்கண் வந்த மிமிசை.

கண் முதலியவற்றை நோக்கி ஆன்மாச் சத்துச்சித்தென்பதுதோன்ற மெய்யென்றார்.

கண்ணறியா மெய்யென்றதற்குக் கண்ணையறியாத வுடம்புபோலவென்றுரைப்பாருமுளர்.

உடம்பிற்கறியுந்தன்மையின்மையாலும், உடம்பிற்குக் கண் காட்டாதலின்மையாலு மீண்டுவமையாதற் கேலாமையி னதுபோலியுரையென்றொழிக.

அற்றேல், அத்தன்மையனாகிய முதல்வனைத்தலைப்பட்டவான்மா வம்முதல்வனோ டொன்றாய்ப் போதலேயன்றித் தானெனவேறுநிற்குமாறின்மையிற் றன்னருளா லான்மாவுணருமென வேறுபடுத்துக்கூறுதல் பொருந்தாதெனச் சிவாத்துவிதசைவர் மதம்பற்றி யாசங்கை நிகழ வதனை மறுத்து முத்தியின் முதல்வனொடு நிற்கு மியல் புணர்த்து முகத்தானே தன்னருளாலுணரு மான்மாவிற் கோசர மாமாறு வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டு முதாரணம்.

அதுவென்னு மோன்றன் றதுவன்றி வேறே
யதுவென் றறியறிவு முண்டே—யதுவென்
றறிய விரண்டல்ல ளுங்கழிவு ணிற்ற
லறியுமறி வேசிவமு மாம். எனவரும்.

சத்தாகிய சிவம் மாயாவாதிகள் போல நிருவசனமாகக் கூறப்படுவதொன் றன்மையான் முத்தியினு மறிபொருள் வேறுண்டென்பது துணியப்படுமென்பார் அதுவென்னு

மொன்றன் றதுவன்றி வேறே யதுவென்றறியறிவு மாங்கு
ண்டென்றும், அங்ஙனமற்றி லதுபற்றியொன்ருய் நிற்றற்
கிழுக்கில்லையென்பார் அதுவன்றறிய விரண்டல்ல னறிவுனி
ற்ற லறியுமறிவே சிவமுமாமென்றுங் கூறினர்.

உம்மைசிவமாயுஞ் சிவமாகாமையை விளக்கி நின்றது.
அறிவுமென்ற வும்மை யிறந்தது தழீஇயது.

அதுவென்னு மொன்றன்ருகலானென வேதுப்பொரு
ள்படக் கொண்டுரைக்க.

இங்ஙனமைந்து வெண்பாக்களானு முறையே வாக்கு
மனுதீதமென்றல் பொருந்துங் கோசரமென்றல் பொருந்தா
தென்னு மாயாவாதிகளையுங், கோசரமென்றல் பொருந்தும்
வாக்கு மனுதீதமென்றல் பொருந்தா தென்னு நையாயிகர்
முதலியோரையும், பாவனைக்குக் கோசரமாதலே யன்றித் த
ன்னுணர்வு முணர்விற்குக் கோசரமென்றல் பொருந்தா
தென்னும் பாதஞ்சலரையும், பசுத்துவ நீங்கியவழியான்மா
வின் ஞானத்திற் கோசரமாமென்னுஞ் சமவாதசைவரையும்,
முத்தியிற் சிவமேயன்றி யான்மாவென வேறின்மையின் ஆ
ன்மாவுக்குக் கோசரமாமாறியாண்டைய தென்னுஞ் சிவாத்
துவித சைவரையு மறுத்து வாக்குமனுதீத கோசரமாய் நிற்
றலை வலியுறுத்துதலி னிவ்வைந்து மொருபொருண்மேல்
வந்தவாறு காண்க.

அற்றேல், பொருந்துமாற்ருேடுஞ் சிவாகமங்களோடு
முரணுதலான் எனையோர் கூறுவன வெல்லாம் பொருள்ப
டாமையி னவற்றை மறுத்தலமையும். சமவாதசைவரி லொ
ருசாரார் முத்திக்காலத்தி னறுவகைக் குணங்களும் விளங்
கிச் சதாசிவக்கடவுளோடொப்ப நின்றைந்தொழில் செய்வ
னென்புழுடம் அவற்ருெடு முரணுதலின் மறுக்கப்படுவ
தேயா

மற்றொருசாரார் கூறுஞ் சிவசமவாதம் பொருந்துமாற்றிற்குஞ் சைவாகமங்களுக்கு மியைபுடையதுபோலத் தோன்றுதலி னவ்வொருசாரார் மதம்பற்றி யான்மாத் தன்னறிவானே முதல்வனையறியு மென்றல் பொருத்தமுடைத்துப் போலும். அஃதெங்ஙனமெனின்? அவர் கூறுமாறு 'ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தென' வெனவாசிரியர் உருவக முகத்தா னோதிய வான்மாவி னியல்பை, வழிநூலாசிரியர் "மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப், பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப் பெருமையொடுந்தானாக்கிப் பேணுமாபோற்; றன்னிய வைம்புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையுமறியாது துயருறுந் தொல்லுயிரை, மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்" என உவமமும் பொருளுமாகவைத்து விளங்கக்கூறினார். கூறவே மன்னர் சாதியிற் பிறந்த மன்னவன்மகன் அம்மன்னவனோடொப்ப எல்லாக்குணங்களு முடையவனாகியும் வேடரிடத்தே தங்குதலா னவ்வாற்றலை யறியாது மயங்கிச் சிறுமைப்பட்டு நின்று பின்னதனை யவனறிந்து பலவகை யுபாயங்களினானு மவ்வேடரினின்றும் பிரித்துநீயென்மகனாகலின் நீயுநானு மொருசாதியேம் என்னோடொப்ப அரசுரிமை செய்யு மெல்லாவாற்றலு முடையையெனத் தெரிவித்து முடிசூட்டித் தன்னைப்போலவாக்கி யுதவி செய்தவழி முன்னின்ற சிறுமை நீங்கி யங்ஙனமெல்லாப் பெருமையு முடையனாய் மீளவவனுதவியை வேண்டாது தானே சுதந்திரனா யின்புற்று வாழ்வன்; அதுபோல ஆன்மாச் சிவனோடொப்ப முற்றுமுணர்தன் முதலிய வெண்குணங்களையுமுடையனாயும் ஐம்புல வேடர் சுழலிற் பட்டமையாற் சிவனுந்தானு மொருசாதியெனத் தன்னாற்றலையறியாது செயற்கை வயத்தாற் சிற்றுணர்வுஞ் சிறுதொழிலு முடையனாய்ச் சிறுமைப்பட்டு நின்று, பின்பு சிவன் குருவை யதிட்டித்து நின்று சிவநீக்

கை செய்து செவியறிவுறுத்தி யல்லைம்புல வேடரினின்று நீக்கி யென்னேடொப்ப நீயு மெண்குணங்களுமுடையை யெனத் தெரிவித்துத்தன்னைப்போலாக்கி யுதவிசெய்தவழிச் செயற்கையானாகிய சிற்றறிவு சிறுதொழில்களைவிட்டியற்கையாலுள்ள பேரறிவு பெருந்தொழில்களின் பகுதியவாகிய வெண்குணங்களுமுடையனாய் மீளவுஞ் சிவனுதவி செய்யவேண்டாமையிற் பரதந்திரநீங்கிச் சிவனைப்போலத் தன்வயத்தனாய்ப் பின் பிறழ்வுற்று வாழ்வனென்பது பெறப்படுதலானும்; "உன்னைப் போலென்னைப் பாவிக்கமாட்டேன்" எ-ம்; "எண்குணத்துளோமே" எ-ம். பிறாண்டு மான்றோரெல்லா மிவ்வாறே கூறுதலானுஞ், சிவாகமங்களின் ஆண்டாண்டுச் சிவசமமாதலே முத்தியென்றோதுதலானும் முத்தனாகிய வான்மாத் தன்னறிவானே சிவ முதலிய வெல்லாப் பொருளையு மறிவனென்பது.

இன்னு முத்திபெற்ற வான்பர்க்கள் சிவனேடொப்பர்; மலமுழுவது நீங்கி விளங்கிய சிற்சத்தியுடைய ராகலின். யார் யார் சிவனேடொப்பரல்லர் அவர் முழுவதும் மலநீங்கிய சிற்சத்தியுடையரல்லர். சகலர் முதலியோர்போலும் என்னும் வழியளவையானுஞ் சிவசமமாதலே முத்தியென்பது பெறப்படும். இன்னு முத்தியிற் சிவசமமாகாதவழிச் சுதந்திரமுடையனல்லனும். ஆகவே "பரதந்திரியங் கரைகழி பந்தம்" என ஞானாமிர்தத்திற் கூறுதலானுஞ், சிவாகமங்களினு மிவ்வாறே கூறுதலானு முத்தியும் பெத்தமெனப்பட்டு வழுவாம். அற்றேல், முத்திபெற்ற வான்மாக்கள் சிவசமமாயவழிச் சிவனைப்போல வைந்தொழில் செய்வரெனல்வேண்டும். செய்வரெனக்கொள்ளின் அநேகேசுரவாதமாய் முடியுமாலெனின்? முடியாது ஐந்தொழில் செய்யுங்கருத்தாவாதற்றன்மை சிவனுக்குக் கருணையானுள்ளது. முத்திபெற்ற வான்மாக்களுக்குத் தள்ளப்படாமையானுள்ளதாகலான் ஐந்தொ

ழில் செய்தற்குச் சிவனொருவனே யமையுமாகலினவர் பிறை படச்செய்யுமா றின்மையானென்பது. இக்கருத்தானன்றோ "உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக்குரிய னுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" யென வழிநூலாசிரியரு மோதினார். ஆண்டுச் சிவானுபவமென்றது ஆகுபெயராற்றன்னுடையதாகி யச்சிவத்துவத்தை யனுபவித்தலென்றவாறும். இன்னும் நூல்களி னுண்டாண்டுச் சிவசமமாதல் முத்தியென்பதனோடு முரணுவனவாகத் தோன்றுவனவெல்லாம் முரணாதவாறு ஆகுபெயராகவைத்துப் பொருள்கொள்ளப்படுமென்றிங்ஙனஞ் சைவரிலொருசாரார் உருவசமவாதிகளிற் சிறுபான்மை வேறுபடப் புதிதாக வொருமதங்கொண்டு தாங்கள் கொண்டதற்கேற்பச் சிவாகமவாக்கியங்களையுந்தமக்கு வேண்டியவாறெல்லா மிடர்ப்படுத்தி நலிந்து பொருள்கொண்டுரை செய்து தாமே தம்மில் வியந்துகொள்வாராகலா னுண்டிழுக்கென்னையெனின்? நடுவுநிலைமை யுடையராய்ச் சிவாகமங்களை யோதியுணர்ந்தார்க்கு அவருரைப்பனவெல்லாம் இந்திரசாலம்போல ஆரவாரமாத்திரையேயன்றி நிலைபெறமாட்டாவாகலி னவைபொரு பொருளாகவைத்து மறுக்கற்பாலன வல்ல வாகலானும்' எத்தன்மையராயினுஞ் சிவதீக்கை யுடையராய்ச் சிவாகமத்தின் விதித்தவா றொழுகி யகச்சமயத்தினின்றலின் அவரைப்பழிக்க லாகாமையானும் அவரறிவு அவ்வளவிற்றென்று போதலே பொருத்தமுடைத்தென்றொழிக.

அற்றேல், வழியளவைக்கு மாகமவளவைக்கு மியைவனபோல வித்துணை வலியுறுத்தி யவருரைத்தனவெல்லா மாரவாரமாத்திரையாய்ப்போமாறியாங்ஙனம் அதனையறியுங் குதுகுல முடையே னென்பையாயிற், சிறிது காட்டுதும். மன்னவன் மகனை யான்மாவுக் குவமை கூறியதுபற்றிச் சிவசமமாதல் முத்தியெனக்கொண்டாய் ஈண்டு வினாவுதும். மன்னவன் மகன் வேடரி னீங்கி மன்னவனைச் சார்ந்தவழி மன்னவனேவலினின்று பணிந்தொழுகுவானோ மன்னவனோடொ

ப்பத் தன்னாணையுடன் செலுத்தியரசாட்சி செய்வனோ கூறுவாயாக. மன்னவனேவலி னின்று பணிந்தொழுகுவனெனிற் றிட்டாந்திகப்பொருளினு மவ்வாறுகொள்ளப்படும்; படவே யஃதெம்மனோர் சித்தாந்தமாகலி னுனக் கவசித்தாந்தமாம். இனி மன்னவ னேவல்வழிநின் றரசாட்சி செய்யினும் அது பரதந்திரமாவதன்றிச் சுதந்திர மன்மையானுனக் கேலாது. அதிகாரத்தைத் தன்மாட்டு வைத்து மன்னவன் வறிதேயிருப்பத் தானரசாட்சி செய்வனெனினுமது பாசுபதர் மதமாய் முடியுமாகலி னுனக்குச் சித்தாந்த மன்று. மன்னவனோ டொப்பத் தன்னாணையுடன்செலுத்திச் சுதந்திர மா யரசாட்சி செய்வனென்னில் அஃதநேகேசுரவாதிமதமாய் முடியும். அன்றியுந் தந்தையைப் பணிந்தொழுகலின்றி யவன் செய்த நன்றியுமறந்து அவனோடொப்பத் தானு மரசாட்சி செய்வனாயி னவன் நன்மக்களுள் வைத்தெண்ணப்படாமையி னீண்டைக் குவமையாதல் செல்லாது. இனிப் பணிந்தொழுகுதலுமின்றி யரசாட்சி செய்தலுமின்றித் தனக்கு வேண்டும் போகங்களை நுகர்ந்துகொண்டு சுதந்திரனா யிருப்பனெனினும் "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச், செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பனவாகலின்வேடரொடு கூடி மயங்கிச் சிறுமைப்பட்டு நின்ற தன்னையவரினீக்கிப் பெருமையொடுந் தானாக்கிப் பெரியதோ ருதவிசெய்து தந்தையு மாயினானை அவனேவல்வழி நின்று பணிந்தொழுகாது தானும் மன்னவனோடொப்பச் சுதந்திரமாய்த் தன்னாணையுடன்செலுத்தி யரசாட்சி செய்யு மகனோடொப்பவனேயாகலான் ஈண்டைக்கேலாதென் றொழிக.

அஃதேல்; அநாதிமுத்தனாகியசிவனும் ஆதிமுத்தனாகிய ஆன்மாவும் ஒருசாதியென்பதுணர்ந்து கோடன்மாத்திரைக்கே மன்னவனையு மவன் மகனையு மொருபுடையொப்புமை பற்றி யெடுத்துக்காட்டியதெனின்? நன்றேகூறினாய்; ஒரு

சாதிமாத்திரையா னுனக்குப்போந்ததென்னை மன்னவனு மவன்மனைவியும் மன்னர்சாதியேயாயினும் மன்னவன் செய்யு மரசாட்சி யவன்மனைவியுஞ் செய்வாளென்றற்குரிமை யின்மையினதுபோலச் சிவனு மான்மாவுஞ் சித்தாதல்பற்றி யொருசாதியாயினும் சிவனோடொப்ப வைந்தொழில்செய்யு முரிமையுடையனல்ல னென் றொழிக.

இன்னு மன்னவன் மகன் ஏனையோர்போல ஆணையிற் பிறழுதலின்றி யந்தரங்கவுரிமையுடைமையி னம்மன்னவன் செய்யுந் தண்டத்தை நோக்கிச் சுதந்திரனே யன்றிப் பரதந்திரமுடைய னல்லனுயினு மன்னவனுணைவழிநிற்கு முரிமையுடைமையான் மன்னவனை நோக்கிப் பரதந்திரனே யாவன்; அதுபோல முத்தனாகிய வான்மாவும் ஏனையான்மாக்கள்போலப் பந்தமுற்றுப் பிழைபடுதலின்றி யிறைபணிவழுவாது நிற்கு மந்தரங்க வுரிமையுடைமையா னிலயம் போக மதிகாரமென்னு மவத்தைபற்றிப் பொதுவியல்பி னின்ற முதல்வன் செய்யு மைந்தொழிலை நோக்கிச் சுதந்திரனேயன்றிப் பரதந்திரனல்லனுயினு மிறைபணி வழுவாது நிற்றல்பற்றி யிலய முதலியவற்றினீங்கித் தன்னியல்பி னின்ற முதல்வனை நோக்கிப் பரதந்திரனே யன்றிச் சுதந்திரனல்லனென்றறிக.

இஃதுணராது கோடற்கன்றே சிவஞானசித்தியாரிற் சிவனென்றும் பதியென்றும் வேறுவைத்தெண்ணியதூஉ மென்க.

சிவாகமங்களிலோரோரிடத்தி லான்மாப் பெத்தத்திற் பரதந்திரன் முத்தியிற் சுதந்திர னெனவும், பரதந்திர னுதல்பற்றி மலவுண்மை துணியப்படுமெனவுங், கூறுவனவெல்லாம் பொதுவியல்புபற்றிப் பதியெனநின்ற முதல்வன் செய்யு மைந்தொழிலின்கட் பட்டுநிற்றலு மவற்றினகப்படாது நிற்றலும்பற்றியே யிரிதில்லை யாகலி னதுபற்றித்தன்னியல்பி னின்ற முதல்வனை நோக்கியுஞ் சுதந்திரனுவன்போலுமென

மலைபற்க. இவ்வுண்மை யுணராததூஉமன்றி, விஞ்ஞானதீக்கையின் உடல் பொருள்களோடொப்பச் சற்குரவன்கையிற் றானஞ்செய்தளித்துந் தானஞ்செய்தளித்த பொருளென்றறியு மறிவு சலியாமைப்பொருட்டு நாளு நாளுஞ் சிவபூசையிற் செபங்கன்மங்களோடொப்பச் "சிவோதாதா" வென்னு மந்திரமோதி யான்மாவையுஞ் சிவனுடைமையாகப் பூசிரொடு தானஞ் செய்தளித்தும், தான் சுதந்திரனே சிவனுடைமையல்லனென்னப் பிணங்கிப் பரமசற்பாத்திரத்திற் றானஞ்செய்த பொருளை யபகரிக்க நினைக்கும் நினைவுடையோரோடு பேசினு முய்தியில்லதோர் கொடியபாவமா மென்றொழிக.

தன்னைத் தானஞ்செய்தலாவது, தான் சிவனுக்குப் பரதந்திரனென்றறிந்து அவனருளாலல்ல தொன்றையுஞ் செய்யானாகி நிற்றலே யாமென்றுணர்க.

அற்றேல், மலவாசனை நீங்குதற்பொருட்டுத் தன்னைத் தானஞ் செய்ததாகப் பாவித்தன்மாத்திரையே யாகலினது பற்றி யிழுக்கென்னை யெனின், அங்ஙனமாக அப்பாவனை போலியோ வுண்மையோ வெனக்கடாயினார்க்கு உண்மையெனிற் பரதந்திரனாதற் கிழுக்கில்லை. போலியெனிற் பசித்தவனுண்டான்போல வெத்துணைப் பாவகஞ் செய்யினும் பசிநீங்குதல் கண்டிலமாகலி னதுபோலப்போலிப்பாவனையான் மலவாசனை நீங்குமாறின்மையின், அது விண்டொழிலாய் முடியும். இன்னும் பாவனை போலியென்பார்க்குப் பாவனையின் வழி யவர் செய்யுமந்திரங் கிரியைகளும் போலியாய்முடியும் முடியவே, பாவனை முதன்மூன்றும் அவர்செய்யுஞ் சிவதீக்கையுஞ் சிவபூசையுஞ் செபந்தியானமுதலிய வெல்லா வாசாரங்களு மங்ஙனம் போலியாச் செய்வது, தமக்காலும் பிறர்க்காலும் பயன்படுமாறின்மையின் மாணாக்கரை வஞ்சித்துப் பொருள்கொண்டு தம்முடம்பை யோம்புதற்பொருட்டுச் செய்யு மாரவார மாத்திரையே போலுமென்றொழிக.

அற்றேல், கருடபாவனை செய்வோன் கருடனாதல் கண்டிலம். அப்பாவனையால் விடந்தீருதல் கண்டாமாகலிற் போலிப்பாவனையும் பயன்றருமென்பது பெறப்படுமாலெனின்? அறியாது கூறினாய்; மாந்திரிகன் றன்னுடம்பைக் கருடனாகப்பாவிப்பனல்லன், மற்றென்னையோவெனிற்? கருடனுக்கதிதெய்வமாகி நிற்கு மந்திரமூர்த்தியாகத் தன்னான்மாவைப் பாவிப்பன். அங்ஙனம் பாவித்தவழிச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்குமியல்புடைய ஆன்மா ஆண்டம்மந்திரரூபியாய் நிற்றற் கிழுக்கின்மையினது பற்றி யாசங்கையின்மையுணர்க.

இன்னும் பாவனைகளு முபாசனைகளுங் கற்பித்துக்கொண்டு செய்யும்போலியென்றல் மாயாவாதி கூறுங் கூற்றாகலினது சைவசித்தாந்தத்திற்கேலாமையறிக.

அற்றேல், ஆன்மாச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்குமியல்புடையனென்றற்கும், அதனானே தன்னாற் கணிக்கப்படு மந்திரரூபியாய் நிற்பனென்றற்கும், விலங்குபுள்ளுக் கதிதெய்வமாய் நின்றதிட்டிக்கு மந்திர முண்டென்றற்கும், பிரமாண முண்டாயி னன்றே யதுபற்றிக் கருடபாவனை முதலாயின உண்மைப்பாவனை யென்று கொள்ளப்படுமாகலி னிவற்றிற்குப் பிரமாண மென்னையெனில்? சருவஞானோத்தர முதலிய வாகமங்களே பிரமாணமாமென்றறிக.

அஃதெங்ஙனமெனிற் காட்டுதும். சருவஞானோத்தரத்திற் பசுவும், பாசமும், அதிகாரஞ்செய்து நிற்பதாகிய பதியும், அதிகாரத்தினொழிந்து தன்னியல்பினிற்பதாகிய சிவமும் எனப் பதார்த்தம் நான்கென்றெடுத்துக்கொண்டு அவற்றிற்குத் தனித்தனி யிலக்கணமு முணர்த்திப் பின்பதுகேட்ட வாறுமுகக்கடவுளுக்கு அங்ஙனம் அப்பிரமேயமா யொன்றாலுமுவமிக்கப்படாததா யதிசூக்குமமாய் வியாபகமாய்த் தன்னியல்பினிற்குஞ் சிவத்தையறியுமா றெங்ஙனமென் றுசு

ங்கை நிகழாமைப்பொருட்டுச் சிவப்பொரு ளத்தன்மைத்
தாயினு மதனை யறிதற்குபாயங் கூறுகின்றாம்; அவ்வுபாயம்
வாதிகளெவரானு மறியப்பட்டதன்றாய்க் குருபரம்பரையி
னறியப்படுவது, ஒருவர்க்கும் யாங்கூறினே மல்லே மதனை நீ
கேட்பாயாகவென் றதன்பெருமை யெடுத்துக்காட்டி அநாதி
முத்தனாய் நின்ற சிவனுக்குரிய தன்மைகளு மத்தன்மைய
னாகிய சிவனே நானெனச் சிவோகம்பாவனை செய்யுமாறும்
அவ்வாறன்றித் துவிதபாவனை செய்தாற் படுமிழுக்கும் விள
ங்க விரித்துணர்த்தித் துவிதபாவனையைக் கைவிட்டுச் சிவோ
கமென அத்துவிதபாவனை செய்வோன் ஏகதேசமாய் நின்ற
றிவதாகிய சிற்றறிவினீங்கிமுழுவதும் வியாபகமாய் நின்றறி
வதாகிய முழுதுணர்வு விளங்கிச் சிவனை யறிந்து தான் சிவ
னே யாவனெனச் சிவனை யறிதற்குபாயங் கூறிப், பின்னது
கேட்ட வறுமுகக்கடவுட்கு மேலுத்தேசங் கூறும் வழியு
மிலக்கணங்கூறும்வழியுஞ் சிவனுமான்மாவுமிருபொருளென
வைத்தோதுதலிற் சிவனின் வேறாகிய வான்மாச் சிவோக
மெனப் பாவிக்கு மத்துவிதபாவனையாற் சிவனேதானாகி ஐக்
கமாமா றெங்ஙனமென் றாசங்கை நிகழாமைப்பொருட்டு ஆ
ன்மாத் தன்னியல்பை யறியாது பசுத்துவத்தோடு கூடியவ
ழிப் பசுவாய் நின்றா னதுபோலத் தன்னையறிந்து சிவத்துவ
த்தோடு கூடியவழிச் சிவமாய்நிற்பதற் கையமில்லை யாகலாற்
றன்னையுந் தலைவனையும் பராபரபேதத்தானுந் தூலசூக்கும
பேதத்தானு மெப்பொழுதும் பயின்றறிதல்வேண்டுமென்
றோதி, அற்றேல், ஆன்மாவினியல்பு தனித்துநில்லாது பசுத்
துவத்தோடுகூடிப் பசுவென்னவுஞ் சிவத்துவத்தோடுகூடிச்
சிவமெனவும் பலதன்மைப்பட்டு நிற்குமாறென்னையென்று
மீளவு மையுறாமைப்பொருட்டு "அதவா" வென்றெடுத்துக்
கொண்டு தெளிவுபிறவாது மீளமீள மயங்குதற்கேதுவாய
வார்த்தைகளை விகற்பித்திங்ஙனம் பலவாச்சொல்லியென்னை
யெனக்கூறி யொழித்தெல்லாச் சங்கைகளுநீங்கித் தெளிவு

பிறத்தற்கேதுவாய்த் தொகுத்தொருவார்த்தையினுணர்த்து வான் புகுந்து...ஞானவேதநம

என்றருளிச்செய்தார். இதன் பொருள் ஆன்மா வங்ஙன மிருதன்மைப்படுமாறென்னை யென்றையுறுதுமேல் எல்லாப் பொருளின்றன்மைகளு மான்மாவுக்குளவாம். அஃதெங்ஙன மெனின், ஆன்மா யாதனை யாதனைப்பற்றினன் அதனதன் சுபாவமே தன்சுபாவமாந் தன்மையுடைமையா னதுவதுவா யே நிற்பன். என்றிங்ஙன மான்மாவை யறியுமாறு தொகுத்துக் கூறினாங் கண்டுகொளென்பதாம்.

இங்ஙனந் தொகுத்துணர்த்திப் பின்னு மிவ்வாறறியு மான்மஞானத்தின் பெருமையு மதனாற்பெறும்பேறு மதனை யறிதற் குபாயமும் அறிந்தானது பெருமையும் விரித்துக் கூறி யிதற்கு மேற்சொல்லற்பாலது சிறிதுமில்லை யாகலான் மனோவிகற்பங்களை யொழித் திங்ஙனந் தன்னுண்மை யறிந் துபாயங்களைச்செய்வோனிங்கே சீவன்முத்தனா யகம்புறமெங்கும் வியாபித்துத் தற்றருமதருமியாய்த் தற்றருமமெனப் பட்ட முற்றுணர்தன் முதலிய வெண்குணங்களு முடையனா யங்ஙனஞ் சிவத்துவத்தைப் பெற்றுச் சிருட்டிப்படுந் தன்மை முதலியன வின்றிச் சிவசம மாவன். இத்தன்மையுடையானுக்குத் தவஞ் செபந்தியானம் பூசை முதலிய வொன்றும் வேண்டா சத்தியஞ், சத்தியஞ், சத்திய முக்காலுஞ் சத்தியம் இதற்கு மேலறியற்பாலன வொருநூலினுமில்லையென வலியுறுத்திப், பின்னு மான்மாவெல்லாவற்றினு மதுவதுவாய் நிற்குமாற்றைப் பூதான்மா முதலறுவகைப்படுத்து விரித்தின்னுங் கூறுதுங்கேட்பாயாக வென்றெடுத்துக்கொண்டு பூதபரிணாமமாகிய வுடம்பினியல்புகளும், ஆன்மா வவ்வுடம்பைப்பற்றியவழிப் பூதான்மாவென நிற்குமாறும, அகத்தின் கண்ணவாகிய வாக்குக்களினியல்பும் ஆன்மா வவற்றைப்பற்றி யந்தரான்மாவென நிற்குமாறும், சூக்கும, பூதமுதலிய

தத்துவங்களினியல்பும்,ஆன்மா வத்தத்துவங்களைப்பற்றியவழித் தத்துவான்மாவென நிற்குமாறும், தத்துவங்களுள்ளுமான்மா எவ்வெத்தத்துவங்களைப் பற்றின னவ்வத்தத்துவ மயமேயாய் நிற்பனென்பதூஉம், ஆன்மாப் போத்திருத்துவ மெய்திப் புருடதத்துவமென நிற்குமியல்பும், அங்ஙனம் புருடதத்துவமாய் நின்று பிரகிருதி குணங்களைப் பற்றி யின்பத்துன்பங்களை நுகரும்வழிச் சீவான்மாவெனநிற்குமாறும், சுரர் நரர் விலங்கு புள்ளுத்தாபரம் எல்லாவற்றிற்குமதிதெய்வ மந்திரங்களுளவெனவுந், தாபரசங்கமங்களுள் மந்திரங்களா னதிட்டிக்கப்படாத வுயிர்களில்லை யெனவும், மந்திரங்களை யுச்சரிக்கு முறைமை யிவ்வாறெனவு, மிவ்வாறு மந்திரங்களினியல்பும்,அவ்வம்மந்திரங்களைக் கணிப்புழி யான்மாப் படிகம்போல வவ்வம்மந்திரமயமேயாய் மந்திரான்மாவெனநிற்குமாறுந், தன்னின் வேறாகிய விவ்வைவகைப் பெயரு நீங்கியவழி, மேற்கூறிய வத்துவிதபாவனையாற் பரமான்மாவென நிற்குமாறும், விரித்துந் தொகுத்துங்கூறி ஆன்மாச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்குமென மேற்கூறியதனை மீளவும் வலியுறுத்தி யிவ்வறுவகையு ளேனைய வெல்லா முபாதிபற்றிச் செயற்கையாதலும், அத்துவிதபாவனையாற் பரமான்மாவென நிற்றல் சித்தென்னுஞ் சாதிப்பொதுமை பற்றிய வியற்கையாதலுந் தெரித்துணர்த்தி யிங்ஙனமாகலானத்துவித பாவனையுடையோன் ஞானக்கண்ணாற் சிவனை யான்மாவிற்கண்டு முழுதும் வியாபகமாய் நின்றறிவதாகிய முற்றுணர்வுடையனா யவ்வப்பொருளியல்பெல்லாமறிந்து மலவாசனைநீங்கிக் கேவலமாய்நின்று முடிவுகாண்கில்லாப்பேரின்பத்தைப் பெறுவனென முடிந்தது முடித்துக்காட்டி யிங்ஙனஞ் சீகண்டருத்திரநாயனா ரறுமுகக்கடவுளுக்குச் சருவஞானோத்தரத்தின் ஞானபாதஞ் செவியறிவுறுத்தருளினார். இன்னு மிதனை யீண்டுரைத்தவாறு பற்றி விரித்துரைத்துக்கொள்க.

இவ்வாகமத்து ளித்துணை வலியுறுத்திச் சிவனோடொற்றுமைப்பட நின்று தன்னைப் பாவிப்பதாகிய வான்மஞானமொன்றே யப்பிரமேயமாய் ஒன்றோடு முவமிக்கப்படாது நின்ற அச்சிவனையறிதற் குபாயமென்று, மிங்ஙனம் பாவிக்கவே;யச்சிவனோடொற்றுமைப்பட்டுப் பேரின்பத்தைப்பெறுவனென்றும்,அசுத்தப்பொருளோடொற்றுமைப்பட்டுநின்றவான்மாச் சுத்தப்பொருளோ டொற்றுமைப்பட்டு நிற்குமாறெங்ஙனமென்னு மையநீக்குதற்குத் தொகுத்தொருவார்த்தையாற் கூறுதுமென்றெடுத்துக்கொண்டு ஆன்மா எதனையெதனைச் சார்ந்தா னதனதன் சுபாவமே தன்சுபாவமா யதுவதுவாய் நிற்பனென்று, மிங்ஙனமாகலாற் சிவனோடொற்றுமைப்பட்டு நிற்புழிச் சிவன் குணங்களாகிய வெண்குணங்களுந் தன்றன்மையாகக்கொண்டு சிவனேயாய் நிற்பன். இதுவே சிவத்துவத்தைப் பெறுதலென்றும் இதற்குமேலறியற்பாலன வொருநூலினுமில்லை முக்காலுஞ் சத்தியமென்று வலியுறுத்தியும், ஆன்மா எல்லாவற்றினு மதுவதுவாய் நிற்குமாற்றை யின்னும் விளங்கக் கூறுதுமென் றெடுத்துக்கொண்டு பூதான்மாத் தத்துவான்மா, மந்திரான்மா, அந்தரான்மாச், சீவான்மா, பரமான்மாவென வறுவகைப்படுத்து அவ்வவற்றிற்கூடியவழி அவ்வப் பெயர்பெற் றதுவதுவாய் நிற்பனென ஆண்டாண்டு நிற்குமாறு விரித்துணர்த்தியும், படிகத்தை யுவமைகூறியு, மிங்ஙன மேனை யாகமங்கள்போலப் பொருள் கவர்ச்சிப்படுதற் கிடங்கொடாத வண்ண மறுமுகக்கடவுண்மாட்டுவைத்த கருணைமிகுதியா னங்கையி னெல்லிக்கனிபோல வான்மாவி னியல்புவிளங்க வுணர்த்திப் பலகாலும் வலியுறுத்தி யெல்லா வாகமங்களினு மிது சிறந்ததென்பது தோன்றச் சருவஞானோத்தர மென்னப் பெயருமிட்டருளிச்செய்த சிகண்டருத்திரக் கடவுளின் றிருவுளக்குறிப்பொடு முரணித் தமக்கு வேண்டியவாறே யிவ்வாகமத்திற் கூறப்படும் வாக்கியப்பொருளை யெல்லா மிடர்ப்படுத்தி நலிந்து பொருள்கொ

ண்டுரைசெய்வாரு முளர். அவருரைபோலி யென்பது சொற்கிடக்கை முறையானு மேற்பாயிரத்துட் கூறிய நியாயத்தானும் விளங்கக்கிடந்தவா றறிக.

இன்னு மதமு மறுப்புமாக வைத்தோதப்படும் பவுட்கரம், மதங்கம், மிருகேந்திரமுதலிய சிவாகமங்கட்குச் சுபக்கம் பொதுவகையாற் கூறிவைத்துப் பலவாற்றானும் பரபக்கங்களை மறுப்பது மாத்திரையே கருத்தென்பதூஉமவ்வாகமங்களானே பரபக்கங்களினுளவாகிய வையப்பாட்டி னீங்கிச் சுபக்கத்தைச் சிறப்புவகையானறிய லுறுவார்க்குத் தூலாருந்துதி நியாயம்பற்றி யதனைச் சிறந்தெடுத் தோதுத லுபதேச மாத்திரையானுணர்த்துவனவாகிய சருவஞானோத்தரந் தேவிகாலோத்தர முதலிய சிவாகமங்கட்குக் கருத்தென்பதூஉம், இங்ஙனமாகலாற் பவுட்கர முதலியவற்றி னோதப்படுஞ் சுபக்கப்பொருள் சருவஞானோத்தர முதலியவற்றின் பொருள்பற்றியே தெளிந்துகொள்ளப்படுமென்பதூஉ, மாறிக்கொள்ளின் வழுவாமென்பதூஉ மவ்வச்சிவாகமங்களி னியல்புநோக்கி வன்மை மென்மை பற்றி யுணர்ந்துகொள்க.

இன்னும் பவுட்கரத்திற் காட்சிப்பிரமாணத்தினியல்பு கூறும்வழி இந்திரியத்திற்கும் விடயத்திற்கு முளவாகிய சம்பந்தஞ் சையோகமுத லறுவகைப்படுமென நையாயிகர்மதம் பற்றிக்கூறி யுதாரணமு மவ்வாறே காட்டப்பட்டன. ஆங்காரத்தின் காரியமாகிய சோத்திரத்திற்கும் ஆகாயத்தின் குணமாகிய வோசைக்குஞ் சமவாய சம்பந்தங்கூறுதல் மேற்பாசபடலத்துக் கூறிப்போந்ததனோடு முரணுதலி னது சித்தாந்தமன்று; பிறர் மதம்பற்றிப் பொதுவகையாற் கூறியதென்பதுனக்குமொப்பமுடிந்தது. குணகுணிகளுஞ் சாதிவடிவுகளுந் தம்மின் வேறல்லவென்பதூஉ, மாண்டுக்கூறிப்போந்தமையின் ஈண்டு வேற்றுமைப்படுத்துக் குடவுருவத்தைக் கண்காணுங்காற் சையுத்தசமவாயமென்றும், உருவத்தன்

ண்மையைக் காணுங்காற் சையுத்தசமவேதசமவாய மென்று மோதியதூஉஞ் சித்தாந்தத்திற் கேலாமையிற் பிறர்மதம்பற்றிப் பொதுவகையாற் கூறியதே யாமெனக் கொள்ளப்படும். சுத்தமாயையி னுண்மைக்குப் பிரமாணங் கூறும்வழி சுத்தாத்துவாவிற் கன்மமில்லையெனச்சாதித்தது, பிறர்மதம்பற்றிப் பொதுவகையாற் கூறியதே யாமென்பது இருவினையதிகரணத்திற் காட்டினும். இன்னோரன்னவையெல்லா முபசாரம் பற்றிப் பொதுவகையாற் கூறப்பட்டனவன்றிச் சித்தாந்தமல்லவென்ப தனக்கு முடம்பாடே யாமாகலிற் சுபக்கப் பொருளைப் பொதுவகையானாட்டிவைத்துப் பலவாற்றானும் பரபக்கங்களை மறுத்தற்பொருட்டே யெழுந்த சிவாகமங்கள் பற்றிப் பொருளுண்மை தெளியப்படாதென்பதூஉ, மவற்றையு முன்னொடுபின் மலைவற வுய்த்துணர வல்லார்க்குச் செம்பொருளினிது விளங்குமென்பதூஉம், பரபக்கங்களைச் சிறிதுந் தீண்டாது சிறப்புவகையாற் சுபக்கமாத்திரையே கூறுதற்பொருட் டெழுந்த சருவ ஞானோத்தர முதலாயவற்றின் அங்ஙன முய்த்துணர வேண்டாது சித்தாந்தப்பொருளினிது விளங்குமென்பதூஉங் கண்டுகொள்க.

அற்றாகலி னன்றே பவுட்கர முதலியவற்றின் இத்துணை வலியுறுத்தி யெடுத்துக்கொண் டோதாததூஉஞ், சருவ ஞானோத்தர முதலியவற்றி னிதற்கு முன்னொருவர்க்குங் கூறினே மல்லேம் அதனை நீ கேட்பாயாகவெனவும், இதற்கு மேற்சொல்லற்பாலன வொருநூல்களினுமில்லை யெனவுந் தெளிவு பிறவாமைக் கேதுவாய்ப் பலபடச்சொல்லி, யென்னையென் றெடுத்துக்கொண்டு சார்ந்ததன் வண்ணமாய் நிற்றல் ஆன்மாவினியல்பா மிங்ஙனமான்மாவினிலக்கணந் தொகுத்துரைத்தா முணர்ந்துகொள்ளென்னவுஞ், சத்தியஞ்சத்திய முக்காலுஞ் சத்தியமெனவும் இத்துணைவலியுறுத்தியோதியதூஉ மென்க.

அற்றேல்; இங்ஙனங் கூறியவாற்றாற் சூறுவனுரோனுத் தாரத்திற்குச் சொற்கிடந்தவாறன்றிநலிந்து பொருள்கோடல் பொருந்தாதென்ற தொக்கும். ஏனையவெல்லாஞ் சொற்கிடந் தவாறே வேறுபொருள்படாவாயினு மாண்டுத் தற்றரும த ருமியென்றது தற்றருமத்தோடொத்த தருமத்தையுடைய னென வேறுபொருள்படுமென்றற் கிழுக்கென்னையெனின்? அறியாது கூறினாய்; அங்ஙனம் பொருள் கொள்ளிற் படிகம் போலத் தன்னாற் சாரப்பட்டபொருளின்றன்மையே தன்ற ன்மையாகக் கொண்டதுவதுவாய் நிற்பது ஆன்மாவினிலக்க ணமெனத் தொகுத்தொருவார்த்தையின் விளங்கமேலோதி ய வர்க்கியத்தோடுமுரணுதலை மறந்தாய்போலும். இன்னு மான்மாச் சார்ந்ததன் வண்ணமாய் நின்றறிவன் ஒன்றறியும் வழி மற்றொன்றனையறியாமையின், யாவன்சார்ந்ததன் வண் ணமாகாது நின்றறிவா னவனொன்றறியுங்கால், மற்றொன்ற னையறியாதா னல்லன் சிவன்போலு மென்னும் வழியளவை யும் இவ்வாகமவளவையை வலியுறுத்தியவாறுகாண்க.

இதனானே தற்றருமதருமியென்றதும் பின்னதனை யெண்வகைப்படுத்தோதியதூஉம் மிருகேந்திரத்திற்கலை முத லியவற்றைச் சிற்சங்கசித்தென்றதுபோல வைத்துப் பொ ருள்கோடலே பொருத்தமுடைமை யறிக.

இன்னுந் தற்றருமதருமி யென்பது தற்றருமத்தாற் றருமியென வேற்றுமைத்தொகைப் பொருள்படாது, தற்ற ருமம்போலுந் தருமத்தையுடையனென் றன்மொழித்தொ கைப்பொருள் படுமாயின் ஆண்டுத்தற்றருமதருமா வென நிற்பதன்றி அன்மொழித்தொகைமே லுடைப்பொருள்விகு தி வாராதென்னும் வடமொழி வியாகரணவிதியொடு முர ணித் தற்றருமதருமி யெனவுடைப் பொருள் விகுதிபெற்று நிற்றல் பொருந்தாமையிற் சொல்லியல்பானும் அது பிறிது பொருள்படுதற் கேலாமையறிக. அற்றேற் சார்ந்ததன் வண்

ணமாய் நிற்றல் ஆன்மாவினியல்பன்று செயற்கை யென்றாற்படுமிழுக்கென்னையெனின்? அவ்வா றோதாமையானுஞ், செயற்கை யீண் டோதுதற் கோரியைபின்மையானுஞ், செயற்கையாயவழி யத்துவிதபாவனையா லிருபொருளொற்றுமைப்பட நிற்ற லெவ்வாறென மேலோதியதுபற்றி நிகழுமாசங்கைக்கு விடையாகாமையானுஞ், சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மாற்றைப் பூதான்மாமுதற் பரமான்மா வீறாக வறுவகைப்படுத்தின்னும் விரித்துக்காட்டுகின்றாமென வியற்கை செயற்கை யிரண்டினுஞ் சேறற்குரிய விலக்கணமாக வதனைக் கூறுதலானும், மலத்தானாய செயற்கை யறியாமையாதலுங், கலை முதலிய கருவிகளானாய செயற்கையேகதேச வறிவாதலு மாத்திரையே யாகலின், இவற்றின் வேறாகிய சார்ந்ததன் வண்ணமாந்தன்மை யிவைபோல மலமுதலியவற்றானாகிய செயற்கை யென்றற்கோரியைபின்மையானும், ஆஃதான்மாவினியல்பென்ப தன்றிச் செயற்கை யென்றற் கேலாமையறிக,

அற்றேல், அவ்வவற்றின் குணமே தன்குணமாதலன்றித் தனக்கென வேறுகுணமில்லைபோலு மெனின்? ஆன்மாவுக்கு விசேடகுணமில்லையாயிற் குணகுணிகட்கு வேற்றுமையில்லை யென்பது மேற்காட்டுதலிற் குணமில்வழிக் குணியுமில்லை யெனப்பட்டுச் சிவாத்துவித மதமாய்முடியு மாகலி னதுபொருந்தாது. படிகத்திற்குச் சார்ந்ததன் வண்ணமாதல் மாத்திரையேயன்றி யதனைப்பற்றுந் தன்மையுங் கண்ணுக்குச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்றன் மாத்திரையேயன்றி யவ்வாறு நின்றவவ்வப்பொருள்களைக் காணுந்தன்மையும் வேறுளவாயினாற்போல ஆன்மாவுக்குச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்றன் மாத்திரையேயன்றி யவ்வாறு நின்றவற்றை யறியுந்தன்மையாகிய விசேடகுண மவற்றின் வேறுண்டென்க. இவ்வுண்மை விளங்கப் புடைநூலாசிரியரும் " இரு

ளொளியலாக் கண்டன்ணமயதா" மெனச் சித்தாந்தஞ் செய் தார்; இதனுனே தனித்துநின்றறியு மறிவுஞ், சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியு மறிவு மெனச் சித்திருவகைப்படுமா று, மிரண்டுந்தம்மு ளொவ்வாதவாறும், படிகம் மாணிக்கத் தைச் சார்ந்தவழி மாணிக்கவண்ண முழுதுந் தன்வண்ணமா கக்கொண்டு நிற்றல்பற்றிப் படிகத்தை மாணிக்கமேயென வ தனேடொப்புமைகூறுத லமையு மதுபற்றி மாணிக்கத்தை ப் படிகத்தோடொப்புமை கூறுத லமையாதவாறுபோல ஆ ன்மாச்சிவத்தைச் சார்ந்தவழிச் சிவத்தின் குணமுழுவதுந் தன்குணமாகக்கொண்டு நிற்றல்பற்றி யான்மாச் சிவமேயெ னச் சிவத்தோடொப்புமை கூறுத லமையு மதுபற்றிச் சிவ த்தை யான்மாவோடொப்புமைகூறுதல் சாலாதென்பதூஉம், படிகம்போலச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மான்மா மலமுழுவது நீங்கித் தன்னறிவு வியாபகமாய் விளங்கியவழி யுந் தன்னாற் சாரப்பட்ட சிவத்தை மாத்திர மறிதலின்றி மற்றொன்றனை யறிதல் செல்லாதென்பதூஉம், இதுபற்றிய ன்றே சிவனுக்கடிமை யெனப்பட்டதென்பதூஉம் இன்னோ ரன்னவை பிறவு மறிந்து கொள்க.

இக்கருத்தேபற்றி "சிவன் சீவனென்றிரண்டுஞ் சித் தொன்றுமென்னில் அவனுக் கிவனு முசித்தா" மென்றார் வ ழிநூலாசிரியரும். இதனுனே முழுவது மலநீங்கிய சிற்சத் தியுடைமைபற்றி யான்மாவுஞ் சிவமுந் தம்முளொப்பரென் றோதிய வழியுளவையும் போலியா யொழிந்தவாறுணர்க. எ ன்னை? மலநீங்கித் தன்னறிவு முழுவதும் விளங்கியவழியு ம துவதுவாய் நின்றறிதலே யான்மாவினியல்பாதலி னவ்வாற ன்றித் தனித்து நின்றறிவதாகிய சிவமுந்தானுந் தம்முளொ த்தல் சாலாமையா னென்பது,

இன்னு மிதனுனே நீரொடுநீரும் பாலொடுபாலுஞ் சேர்ந்தாற்போலென ஐக்கவாதங் கூறுவார் மதமும், குடமு

கிடந்தவழிக் குடாகாய மாகாயத்தோடு கூடி யொன்றுமாறு
ம், சிறைமுறிந்தவழி யாற்றுநீர் கடனீரோடு கூடி யொன்று
மாறும்போலெனச் சிவாத்துவிதங் கூறுவார் மதமு மறுக்கப்
பட்டன. ஆகமங்களி னவ்வாறவற்றை யெடுத்துக்காட்டிய
தோற்றமைப்படச் சேர்தன்மாத்திரைக் கொருபுடை யொ
ப்புமையாதல்பற்றியே பிறிதில்லை யென்க.

இன்னுந் தற்றருமதருமியென் றோதியதனை மீளவும் [illegible] விரித்துணர்த்துவான் புகுந்து முற்றுணர்தன் முதலி யன்வாக வெண்வகைப்படுத்தோதி, யவற்று ளநாதிபோத மென்றொருகுணம் முற்றுணர்வு முதலியவற்றின் வேறுவை த்தெண்ணப்பட்டது; படவே அஃதநாதிமுத்தத்தன்மையெ ன்னுங் குணத்திற்குப் பரியாயப்பெயரா னநாதியே ஞானம் விளங்குதலெனப் பொருடருவதே யாமாகலி னக்குணமநாதி முத்தனாகிய சிவனுக்கன்றி யிடையே முத்திபெற்ற வான்மா வுக்கில்லை யென்ப துனக்கு மொத்தலா னநாதிபோத னல்லா த வான்மாவுக்கு அநாதிபோதத் தன்மைகூறியது, மாணிக்க வொளி முழுவதுந் தன்னைச்சார்ந்த படிகத்தின் விளங்கினாற் போலச் சிவனுக்குரிய தருமந் தன்னைச்சார்ந்த வான்மாவின் மாட்டு விளங்குதன்மாத்திரையே பற்றியாகலி னேனைக்கு ணங்க ளான்மாவிற் கோதியதூஉ மவ்வாறே யாமென்பது தெளியக்கிடந்தவா றறிக.

இன்னும் பவுட்கர மதங்க முதலியசிவாகமங்களிற் சிவனுக்குரிய வெண்குணங்களே யன்றி யவற்றோ டொப்ப வேறு யான்மாவுக்கெண்குணங்களுளவென யாண்டானுமோ தாமையானுந் தற்றருமதருமியென்பதற்குத் தற்றருமமே தனக்குத் தருமமாக வுடையனென்னாது, தற்றருமமாகிய சிவத்துவத்தோ டொப்ப வதனின் வேறு தருமமாகிய சிவ த்துவமுடையனெனப் பொருள்செய்த லவசித்தாந்தமென் றொழிக.

அதுவதுவேயாய் நின்றறித லான்மாவி னியல்பாத லின் ஆன்மா மலமுழுது நீங்கிச் சிவத்தைச் சார்ந்தவழித் தன்னறிவு முன்போ லேகதேச மாதலின்றி வியாபகமாய் விளங்கினும் மாணிக்கத்தை முழுவதும் பற்றிய படிகம் அம் மாணிக்க மாத்திரையேயன்றி மற்றொன்றனையும் பற்றாதவா றுபோல அச்சிவத்தையேயன்றி மற்றொன்றனையு மறியுமா றில்லையெனவு, மாணிக்கத்தினொளி படிகத்தின் முழுவதூஉம் விளங்காதவழி விளங்காத பாகத்தான் மற்றொன்றனைப்பற் றுமாறுபோலச் சிவத்துவமாகிய வெண்குணங்களுந் தன்பால் முழுவதும் விளங்காதவழி மற்றொன்றனையுமறியும்; அறிய வே அதுவதுவா யழுந்துந்தன்மையானது பெந்தத்திற்கேது வா மாகலி னங்ஙன மாகாமைப் பொருட்டுச் சிவத்துவமுழு வதுந் தன்பால் விளங்கும்படி சிவோகம் பாவனையி லுறை த்து நிற்றல் வேண்டுமெனவு மறிக.

அற்றாகலி னன்றே சிவதீக்கையிற் பிராசாதநெறியா னே யான்மாவைச் சிவனிடத்தில் யோசித்துப் பின்னுஞ் சிவ னுடைய வெண்குணங்கள் தன்மாட்டு முழுவதும் விளங்கும் படி பொரோவொன்றனை மும்மூன்றுருத்தியான் விளக்குவித் துச் சிவசமமாகச் செய்வதூஉ மென்றுணர்க. இவ்வாறன் றிச் சிவன் குணத்தோடொப்ப வேறுகுண முடைமையே சிவசமமென்னுஞ் சொற்குப்பொரு ளென்பாரைக் குணங்க ளொருபுடை யொத்தலாற் சிவசமமோ முழுவதுமொத்த லாற் சிவசமமோ வெனக் கடாயினார்க்கு ஒருபுடையொத்த லாற் சிவசமமெனவிடுப்பின் ஒருபுடையொக்குமென்பதெல் லா வாதிகட்கு முடம்பாடாதலி னதனை னுனக்குப் போந்த தொன்றின்மையானும், முழுவதுமொத்தலாற் சிவசமமெனி ன் முழுவதுமொத்தவழி யொன்றேயாதலின் இருபொருளா ய் நிற்குமாறின்மையானுங் குணங்களான் வேற்றுமையின் றாயினுங் குணிப்பொருள் வேறாதலமையுமெனிற் சைவசித்

தாந்தத்திற் குணமே குணியுமாய் நிற்பதாகலினதனை மறந்து
ணையாயிகர்மதத்தில் வீழ்ந்து குணமுங் குணியுந் தம்முள் வே
றெனக்கொண்டு இரண்டிற்குங்குணங்களொன்று குணியான்
வேறென்றல் பொருந்தாமையாலுங் குணங்களின் வேற்று
மையில்வழிக்குணிகளின் வேற்றுமை பெறப்படாமையாலு
ம், நித்தப்பொருள்களின் வேறுபாடு தெரிப்பதற்கு விசேட
மென் றொருபதார்த்தமுண்டெனத் தார்க்கிகர் கொண்டது
போலச் சைவசித்தாந்தத்திற் கொள்ளாமையி னிலக்கணவே
றுபாடே யிலக்கியத்தின் வேறுபாட்டைத் தெரிவிப்பதாக
லானும், இதனானே யதுவதுவாய் நின்றறிதலாகிய பொது
விலக்கணமாத்திரையேயன்றி யான்மாக்களுக்குத் தனித்தனி
சிறப்பிலக்கணங்க ளுளவென்பதும் பெறப்படும். அற்றாக
லினன்றே மலசத்திகள் பலவாயின. அவையிவையென்பது
ண்மை யதிகாரத்திற் காட்டப்படு மாகலினதுபற்றி யாசங்
கையின்மையானும், இன்னுஞ் சிவமும் ஆன்மாவும் இலக்கண
த்தாலொன்றுயவழிப் பதிபசுவென வேறுவைத்தெண்ணுதல்
பொருந்தாமையானும், பசுத்துவசாதிவேறுகலி னதுபற்றி
வேறெண்ணிய தெனிற் பசுத்துவ முபாதியாவதன்றிச் சாதி
யாகாமையி னங்ஙனங்கூறுதல் சாதியிது உபாதியிது எனவே
றறியாதார் கூற்றேயாகலினதுபற்றி வேறெண்ணுதல் பொ
ருந்தாமையானும், இதனானே பசுவாய்நின்ற வான்மாச்சாதி
வேறு சிவமாய்நின்ற வான்மாச்சாதி வேறெனக்கொண்டவ்
விரண்டற்கு மத்துவிதங்கூறுதல் சருவஞானோத்தரத்தின்
கருத்தெனத் தமக்குரியநயத்தைவிட்டு மாயாவாதிமதம்பற்
றி யுரைசெய்தலும் போலியாகலானும், இன்னுஞ் சிவனுமா
ன்மாவு மிலக்கணத்தாலொன்றுயவழிச் சிவனை யின்றக்கமாட்
டாத வாணவமலம் ஆன்மாவுக்காவாரகமாதல் செல்லாமை
யானும், ஞாயிற்றையிருள் மறைத்தல் கண்டிலமாகலானுஞ்,
சிவனுக்கொப்பாரு மிக்காரு மில்லையென வெல்லாச் சிவாக
மங்களு முழக்குதலானும், பிறவாற்றானுஞ், சிவசமமென்னு
ஞ் சொற்கு அதுபொருளன்மை யுணர்ந்துகொள்க.

இங்ஙனஞ் சிவாகமங்களையும் பொருந்துமாறுகளையு முன்னொடுபின் மலைவறநோக்கிப் பொருண்மை துணியமாட்டாதார் ஐந்தொழிலி னேவப்பட்டுப் பிணிப்புண்டு முன்னி ன்ற பரதந்திரத்தனைநோக்கி முத்திபெற்ற வான்மாச் சுதந் திரனென்றோதப்படும்.

அங்ஙனமாயினு மதுவதுவாய் நிற்குமியல்பானே யுபாதியினீங்கிச் சிவமேயாயவழிச் சிவமொன்றனையேயறி ந்து நிற்பதாகலிற் சிவனுக்கடிமையாமென்னு முணர்வு நிலை பெறும்படி சிவதீக்கையினுஞ் சிவபூசையினு மந்திரமுதலிய மூன்றுனுந் தானஞ்செய்தளித்த பொருளாகலா னதனைநோ க்கிப் பரதந்திரனேயாமென்பது முணரார்து "துன்பமாமெல் லாம் பரவசனாய்த்தான்றுவளி னின்பமாந் தன்வசனேயி ருக்கில்" என்றது மிக்கருத்தேபற்றி யோதியதென்பதற் காண்டுத்துவளினென்றதே சான்றாமென்பது முணரார்து மா சுநீங்கியவழி யாடையின் வெண்மை யாடைமுழுவதும் வி ளங்கினாற்போல மலநீங்கியவழி, யான்மவியாபக முழுதினும் விளங்கினின்ற அான்மஞானமுன் னேகதேசத்தின் விளங்கிச் சிற்றறிவாய் நின்றதனைநோக்கிப் பேரறிவெனப்படும்.

அங்ஙனமாயினும் வியாபக முழுதினுஞ் சிவமாய்நி ன்று சிவமொன்றனையே யறிவதன்றி மற்றொன்றனை யறி யுமாறின்மையின் முழுது மொருங்கேயுணரும் பேரறிவாகிய சிவஞானத்தை நோக்கச் சிற்றறிவேயாமென்பது முணராது, "பண்டைச் சிற்றறிவொழிந்து ஞானம்பெருகி யென்றது" மிக்கருத்தேபற்றியோதிய தென்பதற்கு "நாயகன்றன் பரி தம் பெறுவது சுத்தமா" மென வாண்டோதியதே சான்று மென்பது முணராது, சிவத்துவ முழுவதுந் தன் மாட்டு வி ளங்குதலாற் சிவனதாகிய சுதந்திரமு முற்றுணர்வுந் தானு டையனாயினும் "ஆழவமுக்கி முகக்கினு மாழ்கடலி னாழிமுக வாதுநாழி" யென்னு நியாயத்தாற் றன்னளவிற்பாலது

சிவமொன்றே யென்பது முணராது, தனக்கு வேண்டும் பெ ரும்பயனிற் சிறிதுங் குறைவின்மையி னேனையவற்றை யறி யாமைபற்றி யொருதாழ்வில்லை யென்பது முணராது, அது வதுவாய் நின்றனுபவிக்கு மான்மா வேனையவற்றையு மறிவு ழிச் சிவானுபவ விளைவிற் குறைபடு மாகலி னேனையவற்றை யறிதல் முத்திப்பெரும்பயனுக் கிடையூறென்பதும் ஏனைய வற்றை யறியாமையே முத்திப்பெரும்பயனுக்குச் சிறந்த கா ரணமென்பது முணராது, இக்கருத்தேபற்றியன்றே " இன் பங்கொடுத்தலிறையித்தை விளைவித்தன் மல"மென்றோதிய தென்பது முணராது, எண்குணங்களி னாதிபோதமென மூற்றுணர்வின் வேறுவைத்தெண்ணியது அநாதிமுத்தத்த ன்மைக்குப் பரியாயப்பெயரேயாகலி னதுவு மதனோடெ னெண்ணிய வேனைக்குணங்களு மநாதிமுத்தனாகிய சிவனுக் கே யுரியகுணங்களென்பது முணராது, அக்குணங்கள் முழு வதும் படிகம்போலப்பற்றியதன்வண்ணமாய் நிற்குமியல்பு டைய வான்மாவின்மாட்டு விளங்கிய வுபசாரத்தா லவையே யான்மாவுக்குரிய குணங்களுமாமென்பது முணராது " வள ம்படவேண்டாதார் யார்யாருமில்லை" யென்னு முறையானே முடவன் மலைபிற்றேனை யவாவிவாயூறினாற்போலச் சிவனோ டொப்ப யாமும் எல்லாமறிந்தைந்தொழில் செய்வே மாக வென்றெண்ணு மாசைமிகுதிப்பாட்டாற் சிவாகமங்களினோ ரோரிடங்களி னான்மாமுத்தியிற் " சுதந்திர" னெனவு " மு ற்றுணர்வின" னெனவும் " எண்குணமுள்ளா" னெனவுஞ் " சிவசமமாவ" னெனவு மேற்கூறியமுறைமைபற்றி யோ திய வாக்கியங்கள் மாத்திரையே யெடுத்துக்கொண்டு தமக்கு வேண்டியவாறெல்லாம் வலியுறுத்தி யுரைசெய்து சிவகதி, சிவலயம்,சிவயோகம்,சிவசாயுச்சியம், சிவானன்னியம்,சிவதா தான்மியம், சிவைக்கியம் என்பனவும் ஆகுபெயராற் சிவசம மென்னும் பொருள்பயக்குமென மாறிக்கூறித்தாமே தம் மை வியந்துகொள்வர். அதனாற் றன்மாணாக்கரை வஞ்சித்

தன் மாத்திரையேயன்றித் தம்மாசை நிரம்புமாறில்லையென் றொழிக.

அற்றேல், ஆன்மாச் சிவனோடத்துவிதமாய் நிற்பனென்பது பெறப்படு மாயினன்றே யதுபற்றிச் சிவசமமென்றுபசரித்துக் கூறியதென்றதமையும். அத்துவிதமாய் நிற்குமா றென்னையெனின்? அஃதத்துவித மென்னுஞ் சொற்குப்பொரு ளுணரவே யினிது விளங்கும்.

அற்றேல், அதற் கென்னையோ பொருளெனிற்? காட்டுதும், அத்துவிதமென்னுஞ் சொல்லின் நகரம் இன்மை, அன்மை, மறுதலையென்னு மூன்றனு ளொருபொருள் பயக்கும். அவற்று ளின்மைப்பொருள்கொண்ட மாயாவாதிகள் இரண்டின்மை யொருபொருள் மாத்திரையினன்றி யிரண்டு முதலியவா யெண்ணப்படும் பொருள்களி னில்லாமையா னத்துவிதமென்னுஞ் சொற்குப்பொரு ளொன்றென்பதேயாமெனவும், ஒருபொருளாயினுங் குணங்குணியென வேற்றுமை தோன்ற நிற்பிற் கேவலமொன்றாதலின்மையி னத்துவிதமென்ற துபசாரச்சொல்லாய் முடியுமாகலாற் றன்னின் வேறொருபொருளுமின்றித் தானுங் குணமுடைப்பொருளென விசேடிக்கப்படுதலின்றி நிருவிசேடமாய் நிற்கும் பரம்பிரமப்பொருளென்பது அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளெனக் கோடலி னவர் கேவலாத்துவிதிகளென வழங்கப்படுவர். இராமாநுசர் சிவாத்துவிதசைவர்முதலியோரும் அவ்வாறே யின்மைப்பொருள்பற்றி யொன்றெனப் பொருள்கொண்டு சத்திசங்கற்ப முதலியகுணங்கள் பரம்பிரமப் பொருட்குளவென் றுபநிடதங்களிற் கூறுதலானு, மவைவிசேடத்தைக்குண மென்றற்கேதுவின்மையானும், பசுபாசங் களுண்மையு முபநிடதங்களு ளோதப்படுதலானும், அவற் றோடு முரணிக் கேவலாத்துவிதமெனக்கோடல் பொருந்தா மையிற் றன்னோ டியைபுடைய பசுபாசங்களானுந், தன்குண

களாகிய சத்திசங்கற்ப முதலியவற்றானும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரம்பிரம மிரண்டில்லை யொன்றென்பதே யத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளென விசிட்டாத்துவிதங் கோடலி னவர் விசிட்டாத்துவிதிகளென வழங்கப்படுவர். பேதவாதிகள் மறுதலைப்பொருள்பற்றி யிரண்டன் மறுதலையாகிய வொன்றெனப் பொருள்கொண்டு அங்ஙனங்கொள்ளவே, அவ்வொன்றன் மறுதலையாகிய விரண்டாவது முண்டென்றற் கிழுக்கின்மையின் அத்துவிதமென்பதுந் துவிதமென்னும் பொருளைப் பயக்குமென்றுபோவர் அவரெல்லாரும் அத்துவிதமென்ற சொற்குப்பொருளொன்றென்பதேயாமெனக்கொண்டு தத்தமதங்களோடு முரணாமைப்பொருட்டுக் கேவலமென்றும் விசிட்டமென்று மறுதலையென்று மடைகூட்டி யிடர்ப்பட்டுப் பொருள்கொள்வர். அவருள் மாயாவாதி கூறுங்கேவலமும், பேதவாதிகள் கூறு மறுதலையுஞ் சுருதிகளோடு முரணுதலினீண்டைக் கேலாவாம். ஏனையோர் கூறும் விசிட்டமென்பது பொருந்துமாயினும் அத்துவிதமென்னுஞ் சொற்குப்பொருளொன்றெனக் கோடல் பொருந்தாது. என்னை? யொன்றென்பது பொருளாயின் ஒன்றெனவே விளங்கக்கூறவமையும். அவ்வாறன்றி யத்துவிதமென வுய்த்துணரவைத்தோதவேண்டாமையானும் ஒன்றெனப் பொருள்கொள்ளின் மகாவாக்கியப்பொருள் பயப்பதோர் விசேடமின்மையின் அத்துவிதமென்றதுபற்றி யாண்டொருபயன்படாமையானு மென்க.

மற்றென்னையோ வத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளெனிற் சித்தாந்த சைவருரைக்குமாறு காட்டுதும். "அதுநீயாகின்றாய்" எ-ம், "அதுவாகின்றேன்" எ-ம், "அதுவிதுவாகின்றது-எ-ம் மூவிடம்பற்றி நிகழுந்தத்துவமசிமுதலிய மகாவாக்கியங்களைக் கேட்டவழி அதுவென்பதோரு பொருள் நீயென்ப தொருபொருளாகலின் இருபொருள் ம

ற்றொருபொருளாமாறி யாங்ஙனமென்னு மையநீக்குதற் கெழுந்ததாகலின் அதுவிதுவாதற் கேதுவாயவ்விரண்டிற்கு முளதாகிய சம்பந்த விசேடமுணர்த்துதலே யத்துவித மென்னுஞ் சொற்குப்பொருளென்றுணர்ந்து கொள்க.

அற்றேல், அத்துவிதமென்னுஞ் சொல்லாற் பெறப்படுஞ் சம்பந்தம் ஐக்கமோ தாதான்மியமோ சமவாயமோ சையோகமோ சொரூபமோ வேறோ வெனக்கடாயினார்க்கு யாற்றுநீருங் கடனீருந் தம்மிற் சேர்ந்தாற்போலவும், குடாகாயமு மாகாயமுந்தம்மிற் சேர்ந்தாற்போலவும், ஐக்கமெனின் அங்ஙனஞ் சேர்ந்தவழி யொருபொருளேயாகலி னொன்றெனவே யமையும் அத்துவிதமென்றுய்த்துணரவைத்தோத வேண்டா. அன்றியு மொன்றாயவழி அதுவதுவாய்நின்றறிதலாகிய வான்மாவினிலக்கணம் முத்திக்காலத்தில்லை யெனப்பட்டு வழுவாமாகலி னதுபொருந்தாமையானும், குணகுணிகட்குத்தம்மிலுளதாகிய சம்பந்தம் போலுந்தாதான்மிய மெனின் ஆன்மா முதல்வனைப்போலக் குணகுணிப்பொருளாய் நிற்பதன்றி முதல்வனுக்குக் குணமாகாமையி னவ்வாறியைதல் கூடாமையானுந், தாதான்மியத்தின் வேறாய நையாயிகர் கூறுஞ் சமவாயமென்ப தொன்றின்மையானும், விரலும் விரலுஞ் சேர்ந்துநின்றாற்போலச் சையோகமெனின் அவ்வியாப்பிய விருத்தியாகிய சையோகம் வியாபகப்பொருள்கட்குக் கூடாமையானும், யாதானுமோரியைபுபற்றிக் கூறப்படுஞ் சொரூபமெனின் அதுமகாவாக்கியப்பொருளை வலியுறுத்துதற்கெழுந்த வத்துவித மென்னுஞ்சொற்குப் பொருளாகாமையானுஞ், சொரூபசம்பந்தமாத்திரையாற் சிவானந்தத்தை யனுபவித்தல் கூடாமையானும், இவற்றின் வேறாயின்னதென்றறியவாராத வநிருவசனமெனி னங்ஙனங்கூறுதல் மாயாவாதிகூற்றாய் வழுவாமாகலானு மவையெல்லா மீண்டைக்கேலாமையின் வேறு விடுக்குமா றென்னையெனிற்? கூறுதும்.

ஒருபொருளே யவயவ வவயவிகளாயாதல் குணகுணிகளா யாதல் வேற்றுமைப்பட்டிரண்டாய் நிற்றற் கேதுவாகிய தா தான்மியமும், அதுபோல விருபொருளே யதுவ்துவாயொற் றுமைப்பட் டொன்றாய் நிற்றற் கேதுவாகிய தாதான்மியமு மெனத் தாதான்மிய சம்பந்த மிருவகைப்படும். அவற்றுண் முன்னையது தாதான்மிய மென்றும் பின்னையது அத்துவித மென்றும் வழங்கப்படும்.

அத்துவிதமென்னுஞ் சொல்லியல்பு மேற்கூறியவாற் றான் வேறுபொருட்கு மாறின்றி யன்மைப்பொருள்பற்றி யிரண்டென வேற்றுமைப்படாமையை விளக்கிநிற்றலாமெ ன்க. இதுவே ஆசிரியர்கருத்தென்பது "அத்துவிதமென் ற சொல்லே யன்னியநாத்தியை யுணர்த்துமாயிட்" டென் றதனானும், புடைநூலாசிரியர் "பிறிவருமத்துவிதமாகுஞ் சிறப்பினதாயென்" றுடம்பொடு புணர்த்தோதியதனானு மறிக.

இவ்வத்துவிதம் அபேதசம்பந்தமாகிய ஐக்கமுமன் றிப் பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமுமன்றிப் பே தசம்பந்தமாகிய சையோகமுமன்றிக் கலப்பு முடனாதலும் வேறாதலுமாகிய மூன்றுந் தன்கட்டோன்ற நிற்றல்பற்றி யம்மூன்றற்கும் பொதுவாகக்கூறப்படுமாகலா னவ்வத்து விதத்திற்கு ஒரோரிடங்களின் "அலைகடலிற் சென்றடங்கு மாறுபோல்" எ-ம், "வானத்தில் வானும் மணத்தில் மண மும்போல்" எ-ம், அபேதவுவமையும் 'பண்ணுமோ சையும்போலப் பழமதுவு' மெண்ணுஞ் சுவையும்போல்-எ-ம், "நீருமிரதமும்போலாங் காணரனருள்"-எ-ம், பேதாபே தவுவமையும், இரும்பைக்காந்தம் வலித்தாற்போ லியைந்" தெனப் பேதவுவமையும், ஒருபுடை யொப்புமைபற்றி யெ டுத்துக்காட்டுப வாகலின், அங்ஙனந் தம்முண்முரணுவன போல வேறுவேறெடுத்துக்காட்டுதல்பற்றி மலைவுற்க; இம்

மூன்றமையுந் தன்கட்டோன்ற விவற்றிற்குவேறாய் நிற்கும் அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக் காட்டப்படுமுவமையா வது, ஆன்மபோதமுங் கண்ணொளியுந் தம்முளத்துவிதமாய் நிற்றலாமென்க. 'காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின்' எ-ம், "காட்டக் கண் டிடுந்தன்மையுடைய கண்ணுக்கேயு முயிர்காட்டிக் கண்டிடு மாபோல விசனுயிர்க்குக்காட்டிக் கண்டிடுவன்" எ-ம், "அறி வொளிபோற் பிறிவருமத்துவிதமாம்" எ-ம் மூன்று நூலாசி ரியருஞ் சித்தாந்தமுடிபுணர்த்தும்வழி யிதனையே யெடுத்து க்காட்டியவாறறிக.

இவ்வத்துவிதம் ஏனையோர் கூறு மத்துவிதம்போ லக் கேவலமென்றுதல் விசிட்டமென்றுதல் மறுதலையென் றுதல் யாதானு மொன்றான் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றேபொருளுணர்த்து தலிற் சுத்தாத்துவிதமென வழங்கப்படும். ஈண்டுச் சுத்த மென்றது யாதானுமொன்றான் விசேடிக்கப்படாது நிற்றலை. அது "விசிட்டசத்தை," "சுத்தசத்தை" யெனத்தார்க்கிகர் கூறும் வாய்பாட்டானு மறிக. ஏனையோர் கூறு மத்துவித ங் கேவல முதலியவற்றான் விசேடிக்கப்படாதவழி, யவர்கூ றும் பொருடருதற்கேலாமையி னவையெல்லாஞ் சுத்தாத்து வித மாகாமையுங்காண்க.

இங்ஙன மொருபொரு ளிருதன்மையான் வியாபக மும் வியாப்பியமுமாய் வேற்றுமைப்பட்டு நிற்குந்தாதான் மியம்போல வியாபகமும் வியாப்பியமுமான விருபொரு ளொருதன்மையா னொற்றுமைப்பட்டுநிற்குந் தாதான்மிய சம்பந்தமொன்றுண்டெனவும், அதுவே யன்மைப்பொருள் பற்றி யத்துவிதமென்னுஞ் சொல்லானுணர்த்தப்படுவதெ னவு மறியமாட்டாதா ரத்துவிதமென்னுஞ் சொற்குத் த் தமக்கு வேண்டியவாறே பொருள் செய்வாரும், "இலஞ்

தின்கண்ணே தயிலம்போல முதல்வ னெல்லாப்பொருளினும் அகமும் புறமுமாய் விரவிநிற்ப" னென்னுஞ் சுருதியும், "ஆன்மா எதனை யெதனைப்பற்றினன் அதனதன் வண்ணமே தன்வண்ணமாக்கொண் டதுவதுவாய் நிற்ப"னெனத் தொகுத்தொருவார்த்தையிற் றெளிய வுணர்த்துஞ் சுருதியும், முப்பொருளுஞ் சமவியாபகமாயினும் "நீரும் எண்ணெயும்போல வொன்றற்கொன்று தூலசூக்குமங்களா மியல்புடைமையின் அதுபற்றி வியாப்பியமும் வியாபகமுமாய் நிற்பனவா" மென்னுஞ் சுருதியும், இன்னும் இவை போல்வன பிறவும் பயின்றறியாமையிற் "கற்றதூஉ மின்றிக் கணக்காய்வார் பாடத்தாற், பெற்றதாம் பேதையோர் சூத்திரம்—மற்றதனை, நல்லாரிடைப்புக்கு நாணாது சொல்லித்தன், புல்லறிவுகாட்டிவிடும்" என்னு முறைமை யராய்த் தாங்கற்றது கொண்டு முன்னொடு பின் மலைவறநோக்கு மாறின்றிச் சிவதீக்கையி னத்துவாசுத்திசெய்தபின் னான்மாவைத்துவாதசாந்தத்திற் சிவனொடுசம்பந்தப்படுத்திச் சிவனுக்குரிய வெண்குணங்களையு மான்மாவின்மாட்டு விளக்கிச் சிவசமமாகச் செய்த முறைமையு மறந்து சாங்கியர் மதத்தில் வீழ்ந்து முப்பொருட்குஞ் சன்னிதி மாத்திரையே சம்பந்தம் பிறிதில்லையெனத் தம்மறிவின்மையைப் புலப்படுத்திச் சுத்தாத்துவிதமெனச் சைவத்திற் கூறும் வாய்பாட்டோடு முரணாமைப்பொருட்டு அநாதிமுத்தனாகிய சிவனும் இடையே முத்தனாகிய வான்மாவுஞ் சுத்தமாதற்சாதிபொருமையேபற்றிச் சுத்தாத்துவிதமென வழங்கப்படுமேயென்று போவாருமாயினாரென் றொழிக, முப்பொருள்களு ளான்மாச் சார்ந்த தன் வண்ணமாய் நிற்குமியல்புடைமையி னெவ்வெவற்றைச் சார்ந்தா னவ்வவற்றோடு மாத்திரையே யத்துவிதமாய்த் தத்தம் வண்ணமாகச் செய்யு மவ்வவற்றை நோக்கித் தூலமாதலுடைமையி னவ்வவற்றின் வியாப்பியமேயாய் நிற்பனென் றுணர்க, இப்பொருளே பயப்ப "வசித்திடவரும் வியாதி"

யென்றார் வழிநூலாசிரியரும். அங்ஙனநிற்கு முறைமையுள்ளூந் தனக்கந்நியசாதியாகிய வேகதேசப் பொருள்களைச் சார்ந்தவற்றின் வியாப்பியமாய் நிற்றல் மலத்தானாகிய செயற்கையெனவும், சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியு மறிவாகிய தன்னை நோக்கிச் சூக்குமமாய்த் தன் சாதியாகிய சிவத்தைச் சார்ந்ததனின் வியாப்பியமாய் நிற்ற லியற்கையெனவுந் தெரிந்துணர்ந்துகொள்க. இவ்வாறன்றித் தன்சாதியாகிய சிவத்தின் வியாப்பியமாய் நிற்றலும் ஏனையவற்றின் வியாப்பியமாதல்போலச் செயற்கையென்றல் சார்ந்ததன் வண்ணமாய் நின்றறிதல் செயற்கையென்பார் கூற்றேயாகலி னதுபொருந்தாமை மேற்காட்டியவாற்றானறிக.

அற்றேல், ஈண்டோதியனவெல்லா மொக்கும். முத்தியிலான்மாச் சிவானந்தத்தை யனுபவிப்ப னென்றற்குப் பிரமாண மென்னை யெனிற்? "சிவானுபவஞ் சுவானுபூதிகமா" மென்றற் றொடக்கத்துச் சுருதியே பிரமாணமென்க. இன்னுஞ் சிவானந்த மான்மாவா லனுபவிக்கப்படும் ஆனந்தமாகலின், உலகானந்தம் போலு மென்னும் வழியளவையும் பிரமாணமாதல் கண்டுகொள்க. அற்றேல், அனுபவிக்கப் படுவன வெல்லாஞ் சடமாதல் காண்டுமாகலி னதுபோலச் சிவானந்தமுஞ் சடமாவான் செல்லும் பிறவெனின்? அவ்வாறே யறியப்படுவன வெல்லாஞ் சடமாதல் காண்டுமாதலினது போலச்சிவமும் அறியப்படிற் சடமாவான் செல்லுமென்பது பற்றி, சிவம் ஞேயப்பொரு ளன்றென்றல் வேண்டும்; வேண்டவே, யுணராதபொருள் சூனியமெனப்பட்டவு சித்தாந்த மாமாகலி னதுகடாவன்றென்க.

அற்றேல், சத்தாகியசிவ மேனையபோ லன்றிச் சுட்டிறந்துநின் றறியப்படும் வேற்றுமை யுடைமையா னவைபோலச் சடமாவான் செல்லாதெனின்? நன்று சொன்னாய்; சுட்டிறந்துநின் றறியப்படும் பொருள் சுட்டிறந்து நின்றறி

ங்கே யனுபவிக்கப்படுவதாகலிற் சட்டியறிற் றனுபவிக்கப் படு மேனைய பொருள்கள்போ லன்றி வேற்றுமை யுடைமை யா னவைபோலச் சடமாவான்சேறல் யாண்டையதென்க.

இன்னு மான்மாவா லறியப்படும் பொருளெல்லா மவனு லனுபவிக்கப்படும் பொருளே யாமென்னு மவிநா பாவத்திற் கியாண்டு மிழுக்கின்மையானும் ஆன்மாவாலறியப்படுஞ்சிவா னந்த மவனு லனுபவிக்கப்படுமென்றற் கையமென்னை யென் றொழிக.

இதனானே சிவானந்த மனுபவப் பொருளாயிற் போக் கிய ரூபமோ போகரூபமோ வென்றுசங்கித்துக் கூறுவார் கூற்றும் போலியாய வாறுகாண்க. ஆன்மாவுக்குப் பிரமேய ரூபமாய் ஞேயமெனப்பட்டன வெல்லா மவனுக்குப் போக் கியமா மென்க.

அற்றேல், இம்முறைமை பற்றிச் சிவனுக்கு ஞேயமெ னப்பட்ட பசுபாசங்க ளவனுக்குப் போக்கியமாம் போலு மெனின்? அறியாது கூறினாய்; அறிந்த பொருளி னழுந்து தலே சார்ந்ததன் வண்ணமாயறிதல்; அதுவே யனுபவமெ ன்னுஞ் சொற்குப் பொருளாகலி னவ்வியல்பு ஆன்மாவுக்கே யன்றிச் சிவனுக் கின்மையாற் சிவனுக்கெல்லாப் பொருளு மறியப்படும் ஞேயமாதல் மாத்திரையே யன்றி யனுபவிக்கப் படும் பிரமேய ரூபமாத லின்மையிற் போக்கியமாவான் செல்லாமை யுணர்க. இன்னும் பிரமாண ரூபமாகிய ஆன்ம சிற்சத்தி சிவனுக்காகத் தனக்காகத் தன்னோடொத்த பிற வான்மாக்களுக்காக மெய்யாகிய நினைவுணர்விற்கு விடயமா தல் போல்வதோர் ஞேயமாதல் மாத்திரையே யன்றிப் பிரமேய மாதலில்லை யென்பதற்குப் பவுட்கரத்தில் ஆன்மா வே பிரமாதா, வியஞ்சகத்தால் விளங்குவதாகிய வான்ம ஞானமே பிரமாணம், அதனறிதல் வியாபாரமே பிரமிதி, யேனைய வெல்லாம் பிரமேயமென்னுஞ் சுருதியும் ஒருவாற்

ருனும் பிரமாணம் பிரமேய மாகாது. பிரமேயம் பிரமாண மாகாதெனவரைசெய்து வைத்தோதி, யிதனானே பிரமேய மாயறியப்படுவன வாகிய வைம்பொறி முதலியவற்றைப் பிரமாணமென்றல் பொருந்தாதென நையாயிகர் முதலியோரை மறுத்துச் சித்தாந்தம் வலியுறுத்திய சுருதியுமே சான்றாகலான், ஒருவாற்றான் ஞேயமாயினும், பிரமேயமாதல் பெறப்படாத வான்ம சிற்சத்தி தன்னானாதல் பிறிதோரான் மாவானாதல் சிவசத்தியானாத லனுபவிக்கப்படும் போதுமென்றாசங்கித்தற்குச் சிறிது மேலாமை யறிக.

அற்றேல், இன்பமெல்லாம் வினையின் பயனாதல் காண்டுமாகலின், சிவானந்தமு மின்பமாயி னதுவும்வினையின் பயனாய் முடியுமா லெனின்? னறியாதுகூறினாய்; என்னை? தோன்றி யழியுஞ் சடவின்ப மாத்திரையே வினையின் பயனாவதன்றி யதனின் வேறாய் நித்தியானந்தமான சித்தின்ப மதுபோல வினையின் பயனும்போதுமென் றெண்ணுதற் கோரியைபின்மையானென்க. அற்றேல் சிவானந்த மின்பப்பொருளென்றற்குப் பிரமாண மென்னை? யானந்த மென்னுஞ் சொல்லே பிரமாணமெனின் ஆனந்த மென்னும் வடசொற்கு நிறைதலென்பதே பொருளாகலினது பிரமாண மாகாதா லெனின்? அற்றன்று. தாதுக்கள் பலபொருள் விளக்குமென்பது வடநூலார் துணிபாகலி னுண்மை யுணர்த்தி நிற்கும் பவமென்னுஞ்சொல் அநுபவம், பரிபவம், விபவமென வுபசர்க்கங்களோடு கூடியவழி வேறுபொருளுணர்த்தி நின்றாற்போலநிறைதலை யுணர்த்தி நிற்கும் நந்தமென்னுஞ்சொல் ஆவென்னுமுபசர்க்கத்தோடு கூடிய வழி யின்பமென்னும் பொருளுணர்த்தி நிற்றல் சாலும். ஆற்றாகலி னன்றே யின்ப மானந்தமென்பன வொரு பொருட்கிளவியாக வைத்து யாண்டும் வழங்கப்பட்டனவாகலான், அதுவே பிரமாண மென்க.

இன்னுஞ் சருவ ஞானோத்தர முதலியவற்றின் ஆனந்தமென்னுஞ்சொன் மாத்திரையா னன்றி முத்தியிற் பரம

சுக முண்டெனச்சுகமென்னுஞ் சொல்லானும் பெரும்பானு மோதுதலின், ஆனந்தத்திற்குப் பொரு ளின்பமன்றெனக் கொண்டதனானும் நின்கருத்து நிரம்புமாறில்லை யென்க. அற்றேல், உலகத்திலின்பமென்னும் பொருளாவது புறப்பொருள்களைப்பற்றிவந்த புத்தி தத்துவத்தின் பரிணாமத்தானாகிய சத்துவகுணத்தின் விளக்கமே வேறொன்றன்றாகலின் முத்தியினு முற்றுணர்வு முதலிய வெண்குணங்களின் விளக்கமோ யின்பமாவதன்றி வேறுயின்பமென்ப தொன்றில்லை யெனின்? நன்று சொன்னாய்; ஆன்மாவின் வேறாகிய மூலப்பகுதியின் கண்ணதாகிய சாத்துவிக குணம் ஆன்மாவின் மாட்டு மேம்பட்டு விளங்குதலே யுலகவின்பம். அதுவதுவாய் முந்திநின்றறிதலே யனுபவமெனப்படுமாகலி னதுபோல ஆன்மாவின் வேறாய்ச் சிவன்கண்ணே யுளவாகிய முற்றுணர்தன் முதலிய வெண்வகைக் குணங்களு மான்மாவின் மாட்டு மேம்பட்டு விளங்கும் விளக்கமே சிவானந்தவின்பம். ஆன்மா அதுவாயமுந்திநின் றவ்விளக்கத்தை யறிதலே யனுபவமெனப்படுமென்பதெம்மனோர் சித்தாந்த மாகலி னதனானனக்குப்போந்த தென்னையென்பது.

அற்றேல், சாத்துவிக குணம் ஆன்மாவின் குணமே மூலப்பகுதியின் குணமன்றென்றாற் படுமிழுக்கென்னையெனின்? அது சிவாகம வழக்கோடு முரணுவார் கூற்றாமென மறுக்க. அற்றேல், பசுத்துவமாய் நின்ற வான்மஞானமே சிற்றின்பமெனப்படும்; அதுபோலச் சிவத்துவமாய் நின்ற வான்மஞானமே முத்தியின்பமெனக் கோடுமெனின்? அற்றன்று. ஆன்மாவின் ஞானமே யின்பமாயி னதனையறிந்தனுபவிக்கு ஞானம் வேறியாதோவெனக் கடாயினார்க்குக் குணியாய் நின்ற ஞானமே யதனையறிந் தனுபவிக்குமென விடுப்பிற் குணியாய் நின்றஞானம் அறிவு மாத்திரையாய் நிற்பதன்றி யேனைமுகமாய் நிற்ற லின்மையானு மெதிர்முக மாகாமையு

மாதலுமாகிய வியல்பு பற்றியே ஞாதாவெனவு ஞானமெனவும் பகுத்தோதியதனை மறந்து ஞாதாவு மதனை யெதிர்முகமாகுமென முரணிக்கூறினை ஞாதாவும் ஞானமாவான் சென்றிலக்கணவழுவா மாகலானும், ஞானமே யாயவழி ஞாதாவென்ப தொன்றின்றாய் முடியு மாகலானுங் குணகுணிகளிரண்டிற்கு மிடையே பொதுவாக வொருஞானமுண் டதுவே யாண்டு ஞாதாவெனப்படு மெனின்? மேலுமவ்வாறனவத்தையாய் முடியு மாகலானும் ஒருபொருள் குணங்குணியென்றிருபகுதிப் படுவதன்றி மூன்றுவதொருபகுதியுண்டென்று கூறுவார் யாண்டுமின்மையானும் குணம் குணி இரண்டற்கும் பொதுவாக இடையே ஞானம் ஒன்றுண்டென்று கூறுதல் அவசித்தாந்தமென்க.

†இவ்வாறு நாலாஞ்சூத்திரமுதலிய மூன்றினும் மேற்பிரமாணத்தாற்கூறிப் போந்த பசுபாசபதிகட்கு இலக்கணங்கூறுமுகத்தான் முறையே கேவலஞ் சகலஞ் சுத்தமென்னும் மூன்றவத்தையுங் காட்டப்பட்டன. இம்மூன்றனுட் கேவலம் மருட்கேவலமும், சகலகேவலமும், பிரளயகேவலமும், விஞ்ஞானகேவலமும், அருட்கேவலமுமென ஐவகைப்படும். அவற்றுள், மருட்கேவலமாவது அநாதிகேவலம். சகலகேவலமாவது சங்கரித்தபின்னர்ப் புனருற்பவத்திற் கேதுவாய்ப் படுங்கேவலம். ஆண்டுச் சூக்குமவைந்தொழிலுண்டென விருகேந்திரத்துட்கூறுதலின் அநாதிகேவலத்தோடு இதனிடை வேற்றுமையாமாறு கண்டுகொள்க. பிரளயகேவலமாவது மாயையோடு இயைபின்றி ஆண்டுப்படுங் கேவலம். விஞ்ஞானகேவலமாவது மாயைகன்மங்களென்னும் இரண்டனோடும் இயைபின்றி ஆண்டுப்படுங் கேவலம். அருட்கேவலமாவது தத்துவசத்திப் பின்னர்ப்படுங் கேவலம். அது துகளறுபோதத்திற்காண்க. இனிச் சகலமுஞ் சகலத்திற்

† இதுமுதல் இக்குறிவருவரை சிற்றுரை.

கேவலம், சகலத்திற் சகலம், சகலத்திற் சுத்தமென மூவகைப்பட்டு ஒரோவொன்று ஐந்துவகைப்படும். அவற்றுட் சகலத்திற்கேவலமைந்தும் "ஒன்றவிணையாமூலத்து" என்றதனுட் காண்க. சகலத்திற் சகலமைந்தும் "இலாடத்தேசாக்கிரத்து" என்றதனுட்காண்க. சகலத்திற் சுத்தமைந்தும் "யோகிற்றருவதோர் சமாதி" என வழி நூலாசிரியர் தொகுத்தோதியது சித்தாந்தசாராவலி யோகபாதத்தின் வகுத்துக் கூறுதலான் ஆண்டுக் காண்க. இனிச் சுத்தமுஞ் சீவன் முத்தி அதிகாரமுத்தி போகமுத்தி இலயமுத்தி பரமுத்தியென் றைவகைப்பட்டுச் சாக்கிரமுதலிய பெயர் பெறும்; அவற்றை முன்னர் வகுத்தோதுபர்.

இரண்டாமதிகரணமுடிந்தது.

முதலாவது பொதுவதிகார முடிந்தது.

சிவஞானபோதத்திற்குத் திருவாவடுதுறைச் சிவஞானயோகிசெய்த சிவஞானமாபாடியத்தில் பொதுவதிகாரம் இலக்கணத்தின் மூன்றும் பாதமாகிய இவ்வாறுஞ் சூத்திரமுடிந்தது.

உ-வது உண்மையதிகாரம்

சாதனவியல்.

ஏழாஞ் சூத்திரம்.

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

எ-து. ஞ்-ம். எ-னின். இவ்வதிகாரந் தூலாருந்ததிநியாயம்பற்றி மேலையதிகாரத்தின் முப்பொருள்களின் பொதுவியிலக்கணமுகத்தா னுணர்த்தி

ய வாசிரிய ரவற்றது சிறப்பியல்பு சாதனமுகத்தானும் பய ன்முகத்தானு முணர்த்துவா னெடுத்துக்கொண்டாராகலி னு ண்மையதிகாரமென்னும் பெயர்த்து. சிறப்பியல்பு பொது வியல்புபோ லிடையே நீங்குதலின்றி யெக்காலத்து மொரு தன்மைத்தாயுள்ளதுபற்றி யுண்மையெனப்படுமாகலி னட் பெயர்த்தாயிற்று. இதனானே யதிகாரவியைபு மினிதுவி ளங்கும்.

இதனு ளிம்முதலோத்து மேற்பொதுவியல்பாற் பெற ப்பட்ட முப்பொருள்களி னுள்ளும் விள்ளற்பாலதனை விள் டு அதனான்வருந் துன்பத்தி னீங்குதலுங், கொள்ளற்பாலத னைக்கொண்டு அதனான் வருமின்பத்தை யுறுதலுமாகிய பய ன் பெறுதற்கேதுவாகிய சாதனஞ்செய்யுமா றுணர்த்துத லிற் சாதனவியலென்னும் பெயர்த்து. "உழப்பின்வாராவு றுதிகளுளவோ, கழப்பின்வாராக் கையுறவுளவோ" என்ப வாகலிற் பெரும்பயன் பெறுதற்குரிய முயற்சிசெய்த பின் னர்த்தேயாகலி னிவ்வோத்து முன்வைக்கப்பட்டது; ஒரு பொருட்கிலக்கண முணராதவழி அதனான் வரும்பயன் பெ றுதற்குரிய சாதனஞ்செய்யுமா றியாங்ஙனமெனச் சாதன த்தையவாவுத லொருதலையாகலி னவ்வவாய்நிலைபற்றிய வியை பானே யோத்தியைபு கண்டு கொள்க. இதனு ளிம்முத பாதமாகிய வேழாஞ் சூத்திரம் ஆசிரியர்தாமே யுரைக் னறமையி னினிது விளங்கும்.

வரலாறு, மேலதற்கோர் புறனடையுணர்த்துத னுதல ற்று.

எ-து. கருத்துரை. எ-னின். சூத்திரக்கருத்துரைக்கி ன்றது. இ-ள். மேலைச்சூத்திரத்தினுணருரு வசத்தெனவும், இருதிறனல்லது சிவசத்தெனவும் வரைசெய்துணர்த்தியவ ழி யவ்வாறுணரும்பொரு ளவ்விரண்டினு ளொன்றோ வே

றே யென்றுசங்கை நிகழுமன்றே அதனை நீக்கி அச்சூத்திர த்திற்குப் புறனாக வெடுத்தோரொழிபாகிய சதசத்தி னியல்பு வரைசெய் துணர்த்துமுகத்தானே மேற்பொதுவியல்பு கூறிப்போந்த வான்மாவுக்குச் சிறப்பியல்பு கூறுதனுதலிற் றிச்சூத்திரம் எ-று.

அதிகாரம் வேறாயவழியும் பாதவியை புணர்ந்துகொட ற் கிவ்வாறுரைசெய்தாரென்பது.

புறனடையை வடநூலார் வாக்கியசேடமென்ப. இத னுட்கூறப்படு மூன்றதிகரணமும் மூன்றுபுறனடைபோலு மென்னு மலையாமைப் பொருட் டோர் புறனடையென்றார். முன்னைய விரண்டு மிறுதியதிகரணத்தைச் சாதித்தற் கேதுவாயோர்பொருண்மேல் வந்தனவேயாமென்பது கருத்து.

ஒன்றனை யறிந்தவழி யதனான் வரும் பயன்பெறுதற் குரிய முயற்சிசெய்யலுறுவார்க்கதனைச் சாதிக்குமாற்ற றமக் குண்டென்பதூஉஞ், சாதித்தால் வரும்பய னிதுவென்ப தூஉம், அதனைப் பயப்பித்தற்குச் சிறந்தசாதனமாவதிது வென்பதூஉம், அதுவருவாயு முணர்ந்தாலன்றி யதன்கண் மனவெழுச்சி செல்லாமையி னீண் டோதப்படுஞ் சாதனஞ் செய்து பயன்பெறுதற்குரிய வதிகாரியை யுணர்த்துவதாகிய விது சாதகவோத்தின் முன்வைக்கப்பட்டது.

இச்சூத்திரத [illegible] ...ழிப்பு மேலையதிகரண த்துட்கூறிய விரண்டனுள் வாக்குமனாதீதமாகிய [illegible] சந்நிதியி னுணருருவாகிய வசத்தெல்லாம் பாழேயாகலிற் ச த்தாகிய சிவ மசத்தாகிய பாசத்தை யறிந்தனுபவியாது. அச த்தாகிய பாசமறிவில்லாத சடமாகலிற் சத்தாகிய சிவத்தை யறிந்தனுபவியாது. ஆதலாற் பாரிசேடவளவையானே யிரு திற னறிவுளதொன் றுண்டென்பது பெறப்படுதலி னதுவே சத்தாதற்றன்மையு மசத்தாதற் றன்மையுமாகிய விரண்டு மன்றி யுள்ள வான்மாவா மென்றவாறு.

இரண்டினு ளொன்றனைப் பிரிக்கின்றமையிற் சத்தே யென்னுமேகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

அசத்திலதாகலி னென்றுரைக்க.

அசத்துச் சத்தையறியாமைக்குஞ் சத்தெதிர் சூனிய மாதலே யேதுவாதலமையு மாயினும் வலியுறுத்துதற் பொருட்டு வேறுமோரேதுக்கூறினார். இக்கருத்தேபற்றிச் "சத்தின்முன் னிலாமையானுந் தனைக்கொடொன்றுணர்தலா னு" மென விரண்டனையு முடனெடுத்தோதினார் வழிநூலாசிரியருமென்க.

அறிதலீண் டனுபவித்தன் மேற்று.

இனைத்தென வறிபொருட்கு வினைப்படு தொகுதிக்கண் வேண்டப்படு முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

இதனுள் யாவையுஞ் சூனியஞ்சத்தெதிராகலிற் சத்தே யறியா தென்ற தோரதிகரணம்; அசத்திலதறியா தென்ற தோரதிகரணம்; இருதிற னறிவுளதிரண்டலா வான்மாவென் ற தோரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்த திச்சூத்திரமென் றுணர்க.

முதலதிகரணம்

அவற்றுள் "மண்டிய வுணர்வுயிர்க்காய் மன்னிநின்றறி யு" மென்னுஞ் சிவாத்துவித சைவரை மறுத்தற் கெழுந்தது முதலதிகரணம்.

அஃதாமாறு. சிவாத்துவித சைவர்மேலைப் பொதுவ திகாரத்திற் கூறியவாறே பதிபசு பாசங்களதியல்புந் தத்துவ ங்களுக்குத் தோற்ற வொடுக்கங்களும் அஞ்சவத்தைப்படும் வேறுபாடுகளு மனைத்துஞ் சித்தாந்தசைவரோடொப்பக் கொண்டு பசுபாசங்கள் பதிவியாபகத்தின் வியாப்பியமாய் நிற்பனவன்றித் தனித்த முதலன்மையின் முப்பொருட்குந் தம்முள் வேற்றுமை குணகுணிகளுக்குத் தம்முளுளதாகிய வேற்றுமைபோல வுட்பேதமேயன்றிப் புறப்பேதமின்மை

யான் மரத்தின் வியாப்பியமான கவடு, கொம்பு முதலியன வெல்லாம் மரமேயாமாறுபோலச் சதசத்து, மசத்துமாகிய வனைத்துஞ் சத்தெனவே படுமெனவும், படவே பதித்தன் மையின் வேறாய்ப் பசுவுக்கறியுந் தன்மையுண்டெனிற் றனித்த முதலெனப்பட்டு வழுவாமாகலிற் சத்தாகிய பதிப் பொருளே யான்மாவினிடமாக நின்றறியுமெனவும், அனைத் துஞ் சத்தாயவழிச் சத்தின்வேறு யறியப்படும் பொருளொ ன்றின்மைபி னஃதறியுமா றியாங்ஙன மெனக்கடாயினார்க் குப் புறப்பேதமின்றாயினு மகப்பேதமாகிய சத்தாகிய பாச முண்மையின் அதனையதறிதல் கூடுமெனவும், சத்தின் முன் னரசத்தெல்லாஞ் சூனியமாகலி னஃததனையறிதல் கூடாதெ னிற் சத்தின் முன்னசத்துச் சூனியமென்றல் "தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னினின்றே,, யெனவும் "கூடுமொ ளிவளர் குடிலை மாயை மேவி"யெனவும் 'தாரகமா மத்தன்று ணிற்ற'லெனவும் "விமலனுக்கோர் சத்தியாய்" எனவும் "உலகமே யுருவமாக" எனவும் "அத்துவா மூர்த்தியாக" வெனவும் "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி" யெனவும் வரு மித்தொடக்கத்துச் சுருதிகளெல்லா முரணி மாயாவாதி கூற் றாய் முடியுமன்றே யெனவுங் கூறுவராகலா னதனைமறுத்துச் சத்தேயறியா தென்று மேற்கோளைச் சாதித்தற் கெடுத் தோதிய வேதுவை வலியுறுத்துகின்ற திவ்வதிகரணமெனக் கொள்க.

அதிகரண வியைபுபற்றியுந் தலைமைபற்றியுஞ் சத்துணா யல்பு முதற்கணெடுத்துக் கொள்ளப்பட்டது.

வரலாறு, சத்தினிடத் தசத்துப் பிரகாசியாது எனவ ரும்.

வாக்குமனாதீத கோசரமாய்ச் சுட்டுணர்வின்றி நின்ற றியப்படுஞ் சிவசத்தின் முன்னர்ச்சுட்டியறியப்படு மசத்தா கிய பாசம் விளங்கித்தோன்றா தென்பதாம்.

ஈண்டுச் சூனியமென்றது விளங்காமைப் பொருட்டென் பார் பிரகாசியாதென்றுரைத்தார். "மூனைத்திடா" தென்றார் வழிநூலாசிரியரும்.

மூனைத்திடாமையாவது: இதுகுடம் இஃதாடை யென்ன நம்மனோராற் சுட்டியறியப்படுமாறுபோல முதல்வனாற் சுட்டியறியப்படுவதாய் வேறுநில்லாமை யென்க. எனவே யீண்டுச்சத்தெதிர் யாவையுஞ் சூனியமென்றது கொண்டு "தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னினின்றே" யென்றதற்றொடக்கத்துச் சுருதிகளோடு முரணுதலும், மாயாவாதி கூற்றாதலு மின்மைபி னிவ்வேதுவானே யிதுகுட மிஃதாடையென்றிவ்வா றசத்தின்கண் ணிகழுஞ்சுட்டுணர்வுடைய்து சிவசத்தென்றல் பொருந்தாமையிற் சத்தேயசத்தைய றியுமா றியாங்ஙனமெனச் சிவாத்துவித சைவரை மறுத்தவாறு காண்க.

அற்றேல், அசத்துவிடயமாய் விளங்குதற்குரிய சிற்றுணர்வு சிவசத்துக்குண்டென்றாற் படுமிழுக்கென்னையென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்தவேது.

மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான் எனவரும்.

இ-ள். ஆன்மாவக்கக் .... சார்ந்து சுட்டிறந்த ...... தனனியல்பு விளங்கினவிடத்துச் சுட்டியறிவதாகிய பொதுவியல்பு விளக்கமின்றி நிற்றலானீண்டுச் சத்தினிடத் தசத்துப்பிரகாசியாதென மேற்கொண்டதென்றவாறு.

எனவே முத்திநிலையி லான்மாச் சிவத்தைச்சார்ந்து தன்னியல்பைத் தலைப்பட்டவழிச் சுட்டுணர்வு நிகழாதென்பது இருவர் மதத்தினு மொக்குமாகலான் ஆன்மாவுக்கு ஆண்டுச் சுட்டுணர்வு நிகழாமை பிறிதொன்றாற் பெறப்படாமையின்

அநாதிமல முத்தனாகிய முதல்வனுக்குச் சுட்டுணர்வில்லையெ ன்பது பெறப்படுதலின், அத்தன்மையனாகிய முதல்வனிட த்தசத்துச் சுட்டியறியப்படுவதாய் விளங்கி வேறுநிற்பது யாங்ஙனமெனமேற்கோளைச் சாதித்தவாறு காண்க.

எக்காலத்து நிலைபெற் றுள்ளதாகிய தன்னியல்பே மெய்யெனப்படும் இடையே விளங்கி மறைவதாகிய பொது வியல்பே பொய்யெனப்படுமென்பது மேலையதிகரணத்துள் சற்காரிய வாதத்தும் அபாவவாதத்து முரைத்தாங் கடைப் பிடிக்க.

மெய்யினிடத்து மெய் பிரகாசித்தவிடத்தெனவுரைக்க.

மெய்பிரகாசித்தவிடத்தென வான்மாவுக்கென்பது பெ ற்றும்.

இவ்வாறுரைக்க அறியாதார் மேற்கோளுமேதுவு மொ ருபொருளே பயப்ப வுரைசெய்வர். அவ்வாறுரைப்பின் ம லைதீயுடைத்துத் தீயுடைமையானென்பதுபோல மேற்கோ ளைச் சாதிக்கு மேதுவாதல் செல்லாமையறிக.

அற்றேல், இதுபற்றி முதல்வனசத்தை யறியானெனி னவனது முற்றுணர்வுடைமைக் கிழுக்காமாலென்னு மாசங் கையை நீக்கி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டுமுதா ரணம்.

அந்நிய மிலாமை யரற்கோன் றுணர்வின்று
மந்நியமி லானசத்தைக் காண்குவனே—லந்நியமாய்க்
காணு னவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணு வசத்தின்மை மூற்று. எனவரும்,

தன்னுள் வியாப்பியமான பசுபாசங்களோடு வேற்று மை யில்லாத முதல்வனுக்குச் சுட்டியறியக்கிடப்ப தொன் றில்லையாகலா னத்தன்மையனாகிய முதல்வ னசத்தை யறிய னுறுவானாயிற் சுட்டுணர்வின்றி நின்றவாறே யறிவானன்றி

யெம்மனோர்போலத் தனக்கு வேறாகச் சுட்டியறிவா னல்லன். நன்மை யில்லாத வசத்து ஞாயிற்றின் முன்னிருள்போல அவனெதிர் விளங்குதலில்லை யாகலானென்க. எனவே சுட்டுணர்வு முற்றுணர்வைத்தடுப்ப தாகலான் அஃதில்லாமை முற்றுணர்வுக்கு மேம்பாடாவதன்றி யிழுக்கன்மையா னதுபற்றி யாசங்கையில்லையென்பது வலியுறுத்தவாறுகாண்க.

" மாயாதனுவிளக்காய்" எ-ம், " ஆதலா லிரண்டுஞ்சோதியிருளென வேறாம்" எ-ம், " இகலிவருமிவை யுணரிலிருள் வெளியாந்தன்மை" எ-ம் ஓதுதலின் மாயையு மதன்காரியமும் மலம்போல முதல்வனுக்கு மறுதலைப்பொரு ளன்மையா னீண்டுக்கதிர் முன்னிருள்போல வென்றது விளங்காமை மாத்திரைக்கொருபுடை யுவமையாக வெடுத்துக்காட்டியதேயாமென வவற்றொடு முரணுதவாறு காண்க.

மற்று அசை.

மற்றுக்காண்குவனே லென மேலே கூட்டியுரைத்து வினைமாற்றின் கண்வந்த தெனினு மமையும்.

மாணு வென்பது பெயரெச்சவெதிர்மறை.

இன்மை யின்மையா னென்க.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

——(:o:)——

மேலையதிகரணத்திற் சிவாத்துவித சைவரை மறுத்துச் சத்தேயறியாதென்றதனைச் சாதித்தவழி யதனை யுடன்பட்டுச் சிவசங்கிராந்தவாதசைவர் ஆன்மா விளக்குப்போல விகாரமின்றி யறிவுமாத்திரையாய் நிற்பதன்றி, யொன்றனை யறியுமாறில்லை யவ்வான்மாவின் சந்நிதியிற் காந்தபசாசம் போல வுடலியங்குழியதன்க ணின்று கருவிகளே விடயங்க

ளை யனுபவிக்கு மெனவும், மலநீங்கும்வழிக் கண்ணாடியின் முகவொளி தோற்றுமாறுபோல முதல்வன் றிருவருள் ஆன்மாவின்மாட்டுச் சங்கிரமித்துத் தோன்றுமெனவும், அவ்வழியுப்பளத்திட்டவையெல்லா முப்பாமாறுபோல ஆன்மாச் சிவமேயா யவ்வான்மாவின் சந்நிதியி லறிவனவாகிப் பசுகரணங்களுஞ் சிவகரணங்களாய் மாறிச் சிவத்தை யறியுமெனவுங் கூறுவர். அவற்றுட் சந்நிதிமாத்திரையானே கருவிகள் விடயங்களை யறியுமென்பது ஐம்பொறிக ளான்மாவாலுணருமெனச் சாங்கியரை மறுத்தவதிகரணத்தானே மறுக்கப்பட்டமையின் அவையே சிவகரணங்களாய்ச் சிவத்தையறியுமென்பதனை மறுத்து அசத்தறியா தென்றதனைச் சாதித்தற்கெடுத்தோதிய வேதுவை வலியுறுத்துதற் கெழுந்த திரண்டா மதிகரணம். இவ்வதிகரண முன்வைக்கற் பாலதாயினுஞ் சத்ததிகாரப்படாமையி னவ்வியைபுபற்றி யதனை முன்வைத்தாரென்பது.

அசத்தினுக் குணர்வின்று எனவரும்.

ஈண்டசத்தென்றது தத்துவப்பிரவஞ்சத்தை.

ஏனைப்பிரவஞ்சத்திற் கறிவுண்டெனக்கொள்வார் யாருமின்மையானுண்டையப்பாடு நிகழாமையி னதனையோரதிகரணமாகவைத்துச் சாதிக்கவேண்டாமையா னென்பது.

சூத்திரத்தினிலதென்றது அறிவிலதென்னும் பொருட்டென்பார் உணர்வின்றென வுரைத்தார்.

அற்றேல், ஆன்மசந்நிதியில்வழித் தத்துவங்களுக்குணர்வில்லையென்ற தொக்கும். அஃதுள்வழியு மவற்றிற்கறிவில்லையென்றல் பொருந்தாது. என்னை ? பதிஞானம் பசுஞானங்களோடொப்பப் பாசஞான மொன்றனை வைத்தெண்ணுதலினவற்றிற்கறிவுண்டென்பது பெறப்படுமாலென் றாசங்கை நிகழ்ந்தவழி, யதனைநீக்கி யம்மேற்கோளைச் சாதித்தற் கெழுந்தவேது. அதுதானிருவிக்கில் இன்றாகலான் எனவரும்.

இ-ள். அவ்வசத்தாகிய தத்துவப்பிரவஞ்சமானது பொதுமையா னோக்கும்வழி யறிவுடையதுபோலத் தோன்றினும் ஐயந்திரிபின்றி மாசறுகாட்சியா ளுராயும்வழி யறிவில்லதாகலா னசத்தினுக்குணர்வின்றென மேற்கொண்டதென்றவாறு.

எனவே பாசம் வாயிலாய் நிகழும் பசுஞானமே பாசஞானமென்று பசரித்துக் கூறப்படுமதனைப் பாசத்திற்குள்ள ஞானமெனக்காண்டல் நிரூபியாதவழிப்படு மடமையே பிறிதில்லையென்றவாறாயிற்று.

அற்றேல், உள்ளதுபோலத் தோன்றி யில்லாதாதல் யாங்ஙனமென்னு மாசங்கையை யுவமைமுகத்தானீக்கி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

பேய்த்தேர்நீ ரென்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தே ரசத்தாகும் பெற்றிமையின்—வாய்த்ததனைக்
கண்டுணர்வா ரில்வழியிற் காணு மசத்தின்மை
கண்டுணர்வா ரில்லதெனக் காண். எனவரும்

பாலைநிலத்தின்கட் காணப்படும் பேய்த்தேரை நீரென்றுகருதி யதனையுண்ணவருகின்ற நீர்வேட்கையுடைய படவோனுக்கு அதனையடுத்தவழி, தன்னாலணையப்பட்ட அப்பேய்த்தேர் நீராதலின்றி யசத்தாந்தன்மைபோலக் குரவனறிவுறுக்கு முபதேசமொழி கிடைத்து அவ்வசத்தினியல்பை யாராய்ந்தறிவாரின்றி யறியமாட்டதாருள்வழி, யவர்க்கவ்வசத்தின்கண் ணறிவில்லதா யசத்தாந்தன்மை யின்றி யறிவுள்ளதாய்ச் சத்தாந்தன்மையே காணப்படும். குரவனறிவுறுக்கு முபதேச மொழிகிடைத்து அவ்வசத்தினியல்பை யாராய்ந்தறிய வல்லார்க் கஃதறிவில்லதே யாமென்றறிவாயாகவென்க.

மற்று வினைமாற்றின்கண் வந்தது.

மை பகுதிப்பொருள் விகுதி.

இன் உவமவுருபு.

வாய்த்தல் கிடைத்தல்.

இல்வழியி னென்பதூஉம், அசத்ின்மை யென்பதூஉம் மறுதலைப்பொருளுணர நின்றன.

நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது "ஐந்தவித்தா னாற்றல்" என்புழிப்போல.

இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்று மதிகரணம்.

—:○:():○:—

மேலையதிகரணங்களாற் சிவசத்தின்றன்மையே யான்மாவுக்குத் தன்மையன்றி வேறில்லை யென்னுஞ் சிவாத்துவித சைவரையும், ஆன்மாவுக்குத் தன்மையென்பதொன்றில்லை யென்னுஞ் சிவசங்கிராந்த சைவரையுமறுத்துச் சத்துமசத்துந் தம்முளொன்றினை யொன்றறியுமாறில்லை யெனச் சாதித்தவழி, யிரண்டி னிவ்வாறாயி னிவற்றை யறியும்பொருள் வேறென்னையென்னு மாசங்கையை நீக்கிப் பாரிசேடவளவையாற் சதசத்தாகிய வான்மாவினியல்பை வரைசெய்துணர்த்துதற் கெழுந்தது மூன்றுமதிகரணம்.

இருதிறனறிவுள திரண்டலா வான்மா எனவரும்.

ஈண்டுச்சத்தெதிர் நில்லாத வசத்துஞ் சத்து மறியப்படாமையான் ஆன்மாவாது மறியப்படாதவழியவை பயப்பாடின்றிச் சூனியமாய் முடியுமாகலா னிரண்டலா வான்மா விருதிற னறிவுளதேயாம். தம்முளொன்று மொன்றனுபவிக்கப்படாத ஞாயிற்றையும் விடயத்தையு மனுபவிக்குங் கண் போலுமென வனுமானங்கூறிக்காண்க.

ஈண்டிருதிற னறிவுளதென்னுந் தொகைச்சொல் விரியுங்காற் படும் பொருள் வேறுபாடுரைக்கு முகத்தானே யான்

மாவினியல்பு வேறு வேறு கூறுஞ்சமயங்களெல்லா வற்றை யுமறுத்தவா றுணர்த்தற் கெழுந்த பொழிப்புரை.

இவ்விரண்டினையு மறிவதாய் உபதேசியாய் நின்ற அவ் வறிவு இரண்டன்பாலு முளதாய் உள்ளவதுவே அவ்வான் மாவாமென்றது எனவரும்.

இ-ள். மேற்கூறிப்போந்த சத்து மசத்துமாகிய விவ்வி ரண்டினையு மறியுந்தன்மைத்தாய் அறிவிக்க வறிவதாகிய வுபதேசியாய் நிலைபெற்ற சத்தசத்திரண்டன்பாலு மனுபவ வறிவுளதாயுள்ளவதுவே சத்துமசத்துமல்லாத சதசத்தா கிய வான்மாவென்றவாறு மிருதிற னறிவுள திரண்டலாவா ன்மாவென மேற்கொண்டது.

ஆயென்னும் வினையெச்ச மிரண்டும் நின்றவென்னும் பெயரெச்ச வினையொடு தனித்தனி முடிந்தன.

நின்றவென்னும் பெயரெச்சம் உளவென்பதன் முடி பாகிய வதுவென்னும் பெயர்கொண்டு முடிந்தது.

இருதிறனறிவென்னுந் தொகைச்சொல் ஈண்டு மூன்று பொருளின் மயங்கிற்றென்னுங் கருத்தா லிவ்வாறுரைக்கப் பட்டது. அவற்றுளிருதிறனையு மறியுமறிவென்னு மிரண் டாம் வேற்றுமைத்தொகைப் பொருள்பற்றி யிரண்டினையு மறிவதாய் நின்றவறிவெனவும், இருதிறனால் விளங்கிய வறி வென்னு மூன்றாம் வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி யுபதேசியாய் நின்றவது வெனவும், இருதிறனினு முள்ள வறிவென்னு மேழாம்வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி யிரண்டன்பாலு முளதாயுள்ள வதுவெனவு முரைத்தாரெ னக்கொள்க

இரண்டினையு மறிவதாய்நின்ற வதுவென் னிரண்டாம் வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி யிரண்டையுமிவ்வாறுயி ரிவற்றை யறியும்பொருள்

க்கு விடைகூறி யவ்விருவர் மதங்களையு மவற்றோடொரு தன்மையவான புறச்சமயங்களையு மறுத்தவாறு.

உபதேசியாய் நின்ற வதுவென மூன்றும் வேற்றுமைத்தொகைப்பொருள் பற்றி ஆன்மா வறிவிக்கவேண்டாது தானேயறியு மியல்பிற்றென்னுஞ் சமவாதசைவர் ஈசுரவவிகாரவாத சைவர் ஐக்கியவாதசைவர் மதங்களையு மவற்றோடொரு தன்மையவான புறச்சமயங்களையு மறுத்தவாறு.

இரண்டன்பாலு மூளதாயுள்ள வதுவென வேறாம் வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி யான்மாவினறிவு சத்தோடு கூடுமாறில்லையென்னும் பாடாணவாதசைவர் பேதவாதசைவர் மதங்களையும் சத்தினோடு கூடியவழியொன்றாய்ப் போதலேயன்றி யதன்பா லுளதாமாறில்லையென்னும் சத்தசைவர் மதத்தையு மவற்றோடொரு தன்மையவான புறச்சமயங்களையு மறுத்தவாறு.

இவ்விரண்டினையு மறிவதாயெனவே அவ்வறியுந்தன்மை யிவ்விரண்டின் றன்மை போலன்றி யிருளொளியலாக்கண் டன்மைபோல வேறுபடுவதோர் தன்மை யென்பதூஉம், உபதேசியாய்நின்ற வெனவே யத்தன்மை யாகாயத்தன்மையாகிய வோசைபோலத் தன்னை விளக்குவதாகிய வியஞ்சகமுள்வழியே விளங்குவதோர் தன்மை யென்பதூஉம், இரண்டன்பாலுமுளதா யெனவே யதுபடிகம்போலச் சார்ந்ததன் வண்ணமா யழுந்துவதோர் தன்மையென்பதூஉம் பெற்றாம்.

இனி இம்மூன்றனு மிரண்டினையு மறியுமென்றதனை வலியுறுத்தி யிரண்டலாமையை யுணர்த்துதற் கெடுத்துக்காட்டுமுதாரணம்.

அருவுருவன் றானறித லாயிழையா யான்மா
வருவுருவ மன்றாகு மண்மை—யருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்றுத னில்லாது
தோன்றன் மலர்மணம்போற் றேக்கு. எனவரும்.

அருவுருவந் தானறித லாயிழையா யான்மா வருவுருவ
மன்றாகும்-எ-து. ஞானாகிய நூல்களை யாராயுமான்மாவே, யரு
வாகிய சத்தினையு முருவாகிய வசத்தினையுமறிவதாகலா னஃ
தவ்விரண்டு மன்றி வேறாமென்க.

அற்றேல், அவ்வான்மாத் தன்னையறியுமோ அறியா
தோவெனக் கடாயினார்க்கு அறியுமெனிற் றன்னோ டொப்
படமூன்றனையு மறிவதென்றா தவ்விரண்டனையு மறிவதா
றென்றல் பொருந்தாது. அறியாதெனின் அறியாதபொருள்
சூனியமெனப்பட்டு வழுவாமாலெனின், உண்மை யருவுரு
வாய்த் தோன்றியுட னில்லாது தோன்றாது நில்லாது தோன்
றல் பலர்மணம்போற் றொக்கு-எ-து. ஆன்மாவி னுண்மைத்
தன்மை சத்துமசத்தும்போல விளங்கித்தோன்றி யவற்றொ
டொப்ப நிற்பதுமன்று விளங்கித் தோன்றாது சூனியமாய்
நிற்பதுமன்றாய் மலரின்கண் வாசமிவ்விருவகையு மன்றியத
ன்கண்ணடங்கித் தோன்றுமாறுபோலச் சத்தினு மசத்தினு
ஞ்சார்ந்ததன் வண்ணமா யடங்கித்தோன்றுவதோ ரியல்பா
மாகலா னஃதவ்விரண்டினையு மறியுமுகத்தா னறியப்படுவ
தன்றி யவைபோலத் தனித்தறியப் படுவதொன்றன் றெ
ன்க; ஆகலா னஃதவ்விரண்டினையு மறியு முகத்தானறியப்ப
டுவதன்றி யவைபோலத் தனித்தறியப்படுவ தொன்றன்றெ
ன்பது குறிப்பெச்சம்.

சுட்டி யுணரப்படாமைபற்றிச் சத்தை யருவென்றுஞ்
சுட்டப்படுதல் பற்றி யசத்தை யுருவென்றுங் கூறினார். உணை
ருரு வசத்தென்புழி யுருவென்றது மதுபற்றி.

அறிதலானன்றாகு மெனக்கூட்டுக.

இழை நூலாகலானீண்டுச் சாத்திரத்தை யுணர்த்திற்று.

ஆய்தல் நுணுகுதல் "ஓய்தலாய்த னிழத்தல் சாஅ
யாவயினான்கு முள்ளதனுணுக்கம்" என்றார் தொல்காப்பிய
னாரும்.

ஆபிமையெனப் பொருளினுணுக்கம் நான்மேலெடுத்த ப்பட்டது.

இமையென விரண்டாவது விரித்துரைக்க ஆன் மாவுக் கறியுந்தன்மை யுண்டாகலானன்றே வேதாகம முதலிய நூல்களுள்ளவாயினவென வதனை வலியுறுத்துவார் ஆயிமையா யான்மாவென வுடம்பொடு புணர்த்தோதினர்.

“ பலர்புகழ்புலமை னில்லுதலானு” மென்றார் புடைநூலாசிரியரும். இவ்வாறின்றி ஆயிமையா யென்பதனை மகடூஉ முன்னிலையாக வைத்துரைப்பின் இவ்வுதாரணம் வலியுறுத்துதற் கெழுந்த தன்றாய்க்கூறியது கூறலென்னும் குற்றப்படுமென் றொழிக.

அருவுருவாயென்புழி, யாக்கச்சொல் உவமப்பொருள் குறித்து நின்றது.

“ஆள்வாரிலி மாடாவேனோ” வென்புழிப்போலத் தொக்குத் தோன்றலெனக்கூட்டுக.

அற்றேல், ஆன்மாவுக்கவ்வறியுந் தன்மை சிவசத்தோ டொப்பச் சுதந்திரமா யுண்டென்றாற் படுமிழுக்கென்னையெ ன்னு மாசங்கையை நீக்கியுபதேசியா யென்றதனை வலியுறுத்தி யிரண்டலாமையை யுணர்த்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்
பெயர்த்துணர்நீ சத்தாகாய் பேசி—லசத்துமல்லை
நீயறிந்து செய்வினைக ணீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமைதான். எனவரும்.

நீயறியுமுறைமை சொல்லி லறிவை விளக்குதற்குரிய வியஞ்சக மில்வழி யொருவிடயத்தை யின்னதென்றறியமாட்டாது மயக்கத்தை யுற்றும் பசிநோய்க் கன்னம்போல அம்மயக்க நோய்க்கு மருந்தாகிய வியஞ்சகமுள்வழி யும்மய

க்கநீங்கி யதனையின்னதென நிச்சயித்தும், இங்ஙனமறிவுழியு மொருங்கே யறியமாட்டா தொருவிடயத்திற் சென்ற வறிவைமாற்றி மற்றொரு விடயத்தை யறிந்து வருகின்றாயாகலி னிவ்வாறு மாறிமாறி யொன்றொன்றா யுணர்கின்ற நீ யெல்லாவற்றையு மொருங்கே யோரியல்பா னுணர்வதாகிய சத்தின்றன்மையுடையா யல்லை. அற்றேல், வியஞ்சக முள்வழியன்றி யறியமாட்டாதயான் சத்தின்றன்மை யுடையேனாவேனோ வெனின் வியஞ்சக முள்வழியும் நீமுன்னறிந்துசெய்த வினைகளை யிப்பொழுது நீயே யறிந்தனுபவிக்கின்றா யன்றி யசத்தாகிய பிரபஞ்ச மறிந்தனுபவித்த லின்மையா னவ்வசத்தின்றன்மை யுடையாயுமல்லை வியஞ்சக முள்வழி அறிதலொப்புமையாற் சத்தாதலும் அஃதில்வழி யறிவுநிகழாமை யொப்புமையா லசத்தாதலுமாகியதோர் தன்மையுடையனீ யவ்விரண்டினும் வேறாகிய சதசத்தாவையென்க.

பேசில் நீ யசத்தாகாய் துய்யாமையா லசத்துமல்லை வேறெனக்கூட்டுக.

வியஞ்சகமில்வழித் தலைப்படுவதும், அஃதுள்வழி நீங்கியு நிற்பதாகிய மயக்கம் உண்டியில்வழித் தலைப்பட்டுஉ அஃதுள்வழி நீங்கியுநிற்பதாகிய பசியொடொத்தலி னதனைப் பசி நோயாகவும் தீர்த்த லொப்புமைபற்றி வியஞ்சகத்தைப் பசிதீர்க்கு மருந்தாகவு முருவகஞ்செய்தார்.

இது ஏகதேசவுருவகம்.

மருந்தெனப்பொதுப்பட வுருவகஞ் செய்தாராயினும் பசிநோய் தீர்க்குமருந்தே யீண்டைக் கேற்புடையதாகலி னேற்புழிக்கோடலா னவ்வாறுரைக்கப்பட்டது.

அது பகுதிப்பொருள்-விகுதி.

தானென்பது, முன்னிலையது எழுவாயுருபுபட நின்றது பின்னியது அசைநிலை.

துவ்வாமை துய்யாமை யெனமரீஇயிற்று.

அற்றேல், இம்மயக்கம் ஆன்மாவுக்கே யன்றிச் சிவத்துக்கில்லவழி யிரண்டற்குந் தம்முள் ளியைபுகூடாதாகலிற் சிவசத்துக்கு மஃதுண்டெனக் கோடல்வேண்டுமென்னு மாசங்கையை யுவமமுகத்தா னீக்கி யான்மாவிரண்டின்பாலு முளதாதலை வலியுறுத்தி யிரண்டலாமையை யுணர்த்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தா
லஞ்ஞான முள்ள மணைதல்காண்—மெய்ஞ்ஞானந்
தானே யுளவன்றே தண்கடனீ ருப்புப்போற்
றானே யுளமுள வாய்த் தான். எனவரும்.

மேலைவெண்பாவிற் பெறப்பட்ட மயக்கமாகிய வறியாமை வியஞ்சகமில்வழித் தலைப்பட்டும் அஃதுள்வழிநீங்கியு மிவ்வாறு நிலைபேறில்லதாகலா னஃதெப்பொழுது மொருதன்மைத்தாய் நிலைபெற்று விளங்கு ஞானமாகிய சிவசத்தின்கண்ணே நிகழ்தலின்றி, மெய்ஞ்ஞானமாகிய அச்சிவசத்துள்ள அநாதியே தானே குளிர்ந்த கடலின்கண் மருவாது கடலிடத்துளதாகிய நீரின்கண்மருவு முப்புப்போலத் தான் பொருந்துதற்குரிய சதசத்தாமியல்புடைய வான்மாக்களு முள்ளனவாக வவ்வான்மாக்களைப் பொருந்துமாற்றை யறிவாயாக வென்க.

அஞ்ஞான மசத்தாகலான் மெய்ஞ்ஞானந்தன்னில் விளையாது.

மெய்ஞ்ஞான முள்ளவன்றே தானேயென்புழித் தானேயென்பது கட்டுரைக்கண் வந்தது.

தானே யுளமுளவாத்தானென்புழித் தானென்பது, முன்னையது எழுவாய் பின்னையதசைநிலை.

வயுளம் வினைத்தொகை.

[illegible]தலெனக்கட்டே.

ஆயனைதலென்பது மழைபெய்யக் குளநிறைந்த தென்
றற்போலக் காரண காரியப்பொருட்கண்வந்தது.

கடலென்றது நீர்க்கிடங்கொடுத்துகிற்கு மாகாயம்.

உப்புத் தான்மருவுதற்குரிமையில்லாத கடலின்கணின்
றிக் கடலோ டியைபுண்டத்தாயுந் தான்மருவுதற்குரிமையு
டைய நீரின்கண்ணே யுளதாயினாற்போல அஞ்ஞானமுந்
தான்மருவுதற்குரிமையில்லாத மெய்ஞ்ஞானத்தின்கணின்றி
யம்மெய்ஞ்ஞானத்தினோ டாதியே யியைபுடைத்தாயுந்தான்
மருவுதற்குரிமையுடைய வான்மாவின்கண்ணுளவாதலமையு
மென்பார் தண்கடனீருப்புப்போ லென்றார்.

இதனானே வியாபக வியாப்பியங்களாமாறும் பெறப்ப
ட்டது. இதனு ளான்மாவுக்கு இரண்டின்கண்ணு மியைபு
டைமை கூறவே யிரண்டின்பாலு முளதாதலை வலியுறுத்திய
வாறுகாண்க.

இவ்வதிகரணத்தி னிருதிறனையு மறியு மறிவுள தென
வே யிருதிறனாகிய சத்து மசத்துமெனப்பட்டன வெல்லாம்
பிரமேயமென்பதூஉம், அவற்றை யறியு மான்மாவே பிர
மாதா ஆன்மாவி னறிவாகிய சிற்சத்தியே பிரமாணம் அவ்
வறிவு நிகழ்ச்சியே பிரமிதி யென்பதூஉம், இருதிறனா
ல் விளங்கு மறிவுளதெனவே யிரண்டனுள் அசத்தான் விள
ங்கும்வழி தனக்கு வேறாய்நின்று விளக்குங் காட்சியு மனு
மானமு மாகமமு மெனப்படும். அசத்தாகிய பாசஞான மூன்
றுஞ்சத்தான் விளங்கும்வழி,அன்னியமின்றித் தனக்காதார
மாயுடனின்று விளக்குஞ் சிவஞானமுந் தானே வியஞ்சகமா
மாகலினதுபற்றி யவ்வையும் பிரமாணமென் றுபசரித்துக்
கூறப்படு மென்பதூஉம், இருதிறனினு மறிவுள்தெனவே
யிரிடத்தும் கேடின்றி யசத்தான் விளங்கி யசத்தை யறிவுழி
யசத்தின்பாலும் சத்தான் விளங்கிச் சத்தையறிவுழிச் சத்

தின்பாலு மதுவதுவாய் நின்றுளதென்பதூஉம் பெறப்படும்.

இவ்வாறன்றி வியஞ்சகங்களே பிரமாண மென்னுந் தார்க்கிகர் முதலியோர் மதங்கள் பொருந்தாமையும், அவ்வியஞ்சகங்களா னிகழும் பிரமிதி வேறுபாடு மவற்ற தியல்புகளுமீண்டு விரிப்பிற்பெருகும் பவுட்கர முதலிய சிவாகமங்களிற் காண்க

மூன்றமதிகரண முடிந்தது.

சிவஞான போதத்திற்குத் திருவாவடுதுறைச் சிவஞான யோகி செய்தசிவஞானமா பாடியத்தில் இரண்டாவது உண்மையதிகாரத்திற் சாதனவியலில் முதற்பாதமாகிய வேழாஞ் சூத்திரம் முடிந்தது.

எட்டாஞ் சூத்திரம்.

**ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே.**

என்பது சூத்திரம் எ-னின்.

ஞானத்தினைப்புணரு முறைமையினை யுணர்த்துத னுதலிற்று.

மேலைச் சூத்திரத்தாற் சாதித்தற்குரிய வதிகாரந் தனக்குண்டென் றறிந்த வான்மாவுக்குச் சாதித்தலாற் பெறப்படும் பயனிது வென்பதூஉம், அதற்குச் சிறந்த சாதனமாவதிதுவென்பதூஉம், அதுவருவாயு முணர்த்து முகத்தானே யவ்வான்மாவின் ஞானம் மேலிருதிற னென்றதனுள் அசத்தான் விளங்கிச் சத்தின்பா லுளதா யசத்தினையறிந்து நின்

றவாறுஞ், சத்தான் விளங்கிச் சத்தின் பாலுளதாய்ச் சத்தினையறிந்து நிற்குமாறுந் தெரிசிக்கு முறைமையினை யுணர்த்துதல் சாதனவியலி னிரண்டாம் பாதமாகிய விவ்வெட்டாஞ்சூத்திரத்தின் கருத்தென்க.

மேலிருதிற னறிவுள தென்றவழித் தம்முள் மாறுபட்ட பொருளிரண்டின் பாலுமறிவுளதாமா றியாங்கனமென்னு மாசங்கையை யீண்டு நீக்குதலி னவ்வாசங்கைபற்றிய வியைபானே யதிகரண வியைபும், மேலான்ம ரூப முணர்த்தி யீண்டதனைத் தெரிசிக்குமா றுணர்த்துதன் முறைமையாதலி னம்முறைமைபற்றிய வியைபானே பாதவியைபும், மேலைச் சூத்திரத்தாற் சாதித்தற்குரிய வதிகாரியை யுணர்ந்தவழி யேனைப்பயனும், சாதனமும், வருவாயும் யாவையென விவற்றை யவாய் நிற்றலின் அவ்வவாய் நிலைபற்றிய வியைபானே போத்தியையும் பெறப்பட்டன.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. ஆன்மா முன்னே செய்துகொள்ளப்பட்ட புண்ணிய விசேடத்தா லிப்பொழுது தமக்கந்தரியா மியா யுண்ணின் றிதுகாறு முணர்த்திவந்த பரம்பொருளே குருவடிவங்கொண் டெழுந்தருளிச் சிவதீக்கைசெய்து மன்னவகுமாரனாகிய நீ யைம்பொறிகளாகிய வேடரோடுகூடிவைகி வளர்ந்து நின்பெருந்தகைமை யறியாது மயங்கி யிடர்ப்பட்டாய் நின்பெருந்தகைமை யாவதிவ்வியல்பிற் றென்றறிவுறுப்ப வறிந்த மாத்திரையே யவற்றைவிட்டு நீங்கி அன்னியமின்றி யனன்னியமாந்தன்மை யினிலைபெற்று அம்முதல்வன் றிருவடிகளை யணையுமென்றவாறு.

ஆன்மாவென்பது மேலைச்சூத்திரத்தினின்றும் வருவிக்கப்பட்டது.

தவத்தினிற் றம்முதல்குருவுமாய் ஐம்புலவேடரின் வளர்ந்தயர்ந்தனையென வுணர்த்தவிட்டன்னிய மின்மையி னரன்கழல் செலுமெனக் கூட்டுக.

மன்னவ குமாரனாகிய நீயென்பது தோன்றா வெழுவா யாய் நின்றது.

புலன் ஆகுபெயர்.

வளர்ந்தயர்ந்தனை யென்பது ஈந்து புகழ்பெற்றானென் புழிப்போலக் காரணகாரியப்பொருட்டாய் நின்றது.

அயர்த்தல் மறத்தல்.

தம்முதலென்றது வேறாமுடிபாகலின், யானெம்மூர்புகு வன் என்புழிப்போலப் பால்வழுவின்மைகண்டு கொள்க.

குருவுமென்ற வும்மை யிதுகாறு முயிர்க்குயிராயுண்ணி ன்றுணர்த்தியதூஉ மன்றி யென விறந்தது தழீஇயிற்று. சி றப்புமாம்.

அன்னிய மின்மையி னென்பது, அயரா வன்பினென்ப துபோலச் சேறற் கேதுவாய் நின்றது.

அன்னியமின்றாந் தன்மையுடையவனாகிச் செல்லுமெ ன்பதாம்.

அரனென்பது சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது. "கற்பாடழித்த கனமாமணித்தூண்செய்திரானா" னென்பு ழிப்போல.

வெண்கொற்றக்குடையும் (ஙல) மணிமுடியுஞ் சிங்காதனமும் மன்னவர்க்கேயுரிய சிறப்படையாளமாம்; அதுபோலப் பிர வஞ்சமெல்லாவற்றிற்கு மூலகாரணமாதலாகிய வொருபெரு வெண்கொற்றக்குடையும், எவற்றையு மொருங்கே யோரிய ல்பா னறியும் பேரறிவாகிய வொருபெருஞ் சுடர்முடியும், எவற்றினையு மங்கங்கே யுயிர்க்குயிராய் நின்று செலுத்துத லாகிய சிங்காசனமும், பிறர்க்கின்றித் தனக்கே யுரிமையாகச் சிறந்தமைபற்றிப் பசுக்களுக்குப் பாசங்களை யரித்தலா லர னென்னுந் திருப்பெயருடைய முதல்வனை மன்னவனாகவும், அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ்செல்வமுழுதாந் தன

தேயாகக்கொண் டனுபவிக்குஞ் சுதந்திரமுடைமையுஞ், சித்தெனப்படுஞ் சாதியொப்புமையும்பற்றி, ஆன்மாவை மன்னவகுமாரனாகவும், அவ்வான்மாவை யறிவுப் பெருஞ்செல்வமுழுவது மாறலைத்துக்கொண்டு சிறுமை யுறுத்துதலும் விதிவிலக்கையிழப்பித்திழிதொழிலி னிற்பித்தலுமாகிய வியல்புபற்றி யைம்பொறிகளை வேடராகவும் உருவகஞ்செய்தார்.

இஃதேகதேசவுருவகம்.

“மன்னவன்றன் மகன் வேடரிடத்தேதங்கி” யென வழிநூலாசிரிய ரோதியது முற்றுருவகம்.

ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தெனவெனவே ஐம்புலவேடரின் வளர்ந்தயர்தலும் அனுவாதமுகத்தா னீண்டுபெற்றாம்.

இதனுள் தவத்தினி லுணர்த்தவென்ப தோரதிகரணம்; தம்முதல் குருவுமா யுணர்த்தவென்ப தோரதிகரணம்; ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தென்ப தோரதிகரணம்; விட்டன்னியமின்மையி னரன்கழல் செலுமேயென்ப தோரதிகரணம் ஆக நான்கதிகரணத்ததிச் சூத்திரமென் றுணர்க.

முதலதிகரணம்.

அவற்றுளீண்டைக்குச் சிறந்த சாதன மிதுவென்பதூஉம் அதுவருவாயு முணர்த்துதற் கெழுந்தது முதலதிகரணம்.

இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தால் ஞானநிகழும் எனவரும்.

இவ்வான்மாக்களுக்குச் சாதிக்கு மாற்றலாகிய வதிகாரமுள்ளனவென மேலைச்சூத்திரத்தாற் பெறப்பட்டமையின் ஈண்டு ஞானமாவது சாதனமாகிய ஞானமென்க.

ஆளுடைய பிள்ளையார் முதலிய நாயன்மார்க்குந் தவ மின்றியு ஞான நிகழ்ந்ததாலோ வென்னு மாசங்கையை நீக் குதற்கும் படிமுறையானன்றி யிவ்வொரு பிறவியிற்செய்த தவந்தானே யமையாதென்ப துணர்த்துதற்கும் முற்செய் தவமென விசேடித்தார்:

ஈண்டு ஞானமென்றது: குரவனுணர்த்தியவாறு சிவஞா னங்கண்ணாகக் கொண்டறிவதாகிய வறிவினை.

நிகழ்தல் ஐயந்திரிபின்றி விளங்குதல்:

அற்றேல், "மும்மை நற்பதிக டம்மின் முளைத்தவர் முடிந்தோர் மூவரிச்செம்மை நற்கழல் கண்டோர்கள் சிவத்தி னைச்சேர்வர்" எ-ம், "திருந்தடி காணச் சிவன் முத்தராய்த் திரியலாமே" எ-ம், "சிவார்ச்சன மார்ச்சன மாகிற் பவமக லும் பரபோகம் பெறலாகும்" எ-ம், "ஆதாரயோக நிராதா ரயோகமென, பீதானத்தெய்தும் விதியிரண்டே" எ-ம் பிற ண்டு மிவ்வாறோதுதலின் வீடு பேற்றிற்குக் காரணம் இத்த ன்மையவாகிய தவங்களொன்றே யமையுமன்றி ஞானக் காரணமெனினும் இவற்றோடொப்பது ஒருகாரணமே யென வமையும்; அவ்வாறன்றிச் சிறந்த சாதனமென்றற்குப் பிரமா ணமென்னை யெனவும், "பொருவி னிருவாண மறுவகையு மொருவி நினைவரிதாம் பரபதத்து ளுயிர்விரவப் பயிற்று" மென இவ்வாறு சிவாகமங்களினுந் தீக்கையே வீடுபேற்றி ற்குச் சிறந்த காரணமென் றோதுதலி னதுவேயமையும் ஏனைச்சரியை கிரியாயோக ஞானங்களெல்லாந் தீக்கைக் கங்க மாக விதிக்கப்பட்டன வெனக்கோடல் பொருந்துமுடை த்து அதனையொழித்து ஞானமே வீடுபேற்றிற்குச் சிறந்த காரணமென்றற்குப் பிரமாண மென்னை யெனவு மாசங்கை நிகழ்வுழி யதனை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த வேது.

மேற்சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறி

யாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா வாகலான். எனவரும்.

இ-ள். வெளிப்படை.

தவமெனப்பட்டன விவையென்பார் சரிபை கிரியா யோகங்களை யென விதந்துரைத்தார்.

கிரியா யோகங்களென வும்மைத்தொகை வடநூன் முடிபு.

சரியை யென்பது தொகைநிலைச்சொல்.

கிரியை யோகமிரண்டற்குந் தீக்கை யொன்றே யென் பது தோன்ற அவ்விரண்டினையுந் தொகுத்தோதிச் சரியை யை வேறுவைத்தார்.

மேற்கோளின் முற்செய்தவத்தா னென்றதற்கேற்ப ஈண்டும் மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழியென் றார்.

மேலாகிய வுண்மைச் சரியைகிரியா யோகங்களை யெ ன்றுரைப்பினு மமையும்.

கொடா வென்னும் பயனிலைக்கெழுவாய் அவையென் றெடுத்துக்கொள்க.

காட்டிக்கொடுக்க வெனற்பாலதனை யீண்டெதிர்மறை யாற் கூறினார். ஞானத்தினை யின்றி யமையாமை யுணர்த் துதற்கு.

சரியைகிரியா யோகங்களைச் செய்துழி என்ற துபலக் கணமாகலிற் றீக்கை செய்துழியதுவும் ஞானத்தைக்காட்டி யல்லது மோட்சத்தைக் கொடாதெனவு முரைத்துக்கொ ள்க.

அவையெல்லாம் ஞானத்தைக்காட்டி யல்லது மோட்ச த்தைக்கொடாமையை வலியுறுத்துவார் நன்னெறியாகிய வென ஞானத்தை விசேடித்தார். நன்மை யென்ப்படுவன

வெல்லாவற்றுள்ளுஞ் சிறந்த நன்மையெனப்படுவது வீடுபே றென்ப; அதனைத்தலைப்படுதற் கேதுவாய்ச்சிறந்த நெறி யாகலின் ஞான நன்னெறியெனப்பட்டது.

விழுச்சுடர்ச் செம்பொன்மேருமால்வரையைத் தலைப் படலுறுவாராய்த் தென்றிசைக்கணின்றும் வழியினைக் கொண்டு சென்று நாவலந்தீவிற் பாரதவருடத்தினை யெய்தி யாண்டுநின்று நெறியினைப்பினூர்க்கு அஃதறிந்துள்ளார் ஆண் டுக்காட்டியநெறியே யதற்குச் சென்னெறியாயினும் அந்நெ றியிமயத்தையிடையிட்டுக் கிம்புருடவருடத்திற் செலுத் தும், ஆண்டுநின்றுஞ் செல்லுநெறி யேமகூடத்தை யிடையி ட்டரிவருடத்திற்கொண்டு செலுத்தும், ஆண்டுநின்றுஞ் செல்லுநெறி நிடதத்தை யிடையிட்டு இளாவிரதவருடத் திற்கொண்டு செலுத்தும், ஆண்டுநின்றுஞ் செல்லுநெறி யி டையீடின்றி மேருமால்வரைக்கே கொண்டு செலுத்தும். இவ்வாறு நாற்றிசையுள் யாண்டுநின்றெய்தினும் நாவலந்தீவி னைத்தலைப்பட்டு இளாவிரதவருடத்திற் கொண்டு செலுத் தும் ஆண்டுநின்றுஞ் செல்லுநெறி யிடையீடின்றி மேருமா ல்வரைக்கே கொண்டுசெலுத்தும், இவ்வாறு நாற்றிசையுள் யாண்டுநின்றெய்தினும் நாவலந்தீவினைத் தலைப்பட்டு இளாவி ரதகண்டத்தினைத் தலைப்பட்டன்றி மேருமால்வரையை யெ ய்தல்கூடா தென்பதூஉம், கூடாதாயினு மவையெல்லாம் இ ளாவிரதகண்டத்திற் செலுத்துமுகத்தான் மேருமால்வரை க்கு வழியேயாமென்பதூஉம் எல்லார்க்கு மொப்பமுடிந்தது; அதுபோல வீடுபேற்றைக் காதலித்து அவ்வச்சமயந்தோறு முளவாகிய பந்தமும் பிரிவுந் "தெரிபொருட் பனுவற் படி வழிச்சென்று சென்றேறி"ச் சைவத்தினெய்தப் பெற்றோர் ஆசிரியன் காட்டுஞ் சைவாகம நெறியிற் சமயதீக்கையுற்றுச் சரியைநெறியைத் தலைப்பட்டு அதுமுற்றியபின்னர் விசேட தீக்கையுற்றுக் கிரியை நெறியைத் தலைப்பட்டு அதுமுற்றிய பின்னர் யோகநூல்கேட்டு யோகநெறியைத்தலைப்பட்டு இம்

மூன்றுமுறையான் முற்றியபின்னர் நிருவாணதீக்கை பெற்றான் ஞானநெறியைத் தலைப்பட்டு வீடுபேறடைவன்,

இவ்வாறன்றி வீடுபேறடைதல் கூடாதென்பதூஉம், கூடாதாயினு மவையெல்லாம் ஞானத்திற்கு நிமித்தமா முகத்தா னேதுவாதல்பற்றி யவையவையே வீடுபேறடைவிக்கு மென்பதூஉஞ் சாலுமென்றுணர்த்துவார் நெறியென்று உருவகஞ்செய்தார்,

இக்கருத்தேபற்றிப் " புறச்சமய நெறிநின்று மகச்சமயம்புக்கும் புகன்மிருதிவழி யுழன்றும் புகலுமாச்சிரம, வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள்பல தெரிந்து மாரணங்கள் படித்துஞ், சிறப்புடைய புராணங்களுணர்ந்தும்வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவரிதிற் சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற்சிவனடியைச் சேர்வர்" என்றும், " சன்மார்க்கஞான"மென்று மோதினர் வழிநூலாசிரியரும்,

நன்னெறி சன்மார்க்க மென்பன வொருபொருட்கிளவி.

"சென்றாற் சைவத்திறத்தடைவ ரிதிற் சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வர்" எ-ம், " படிவழிச்சென்று சென்றேறி " எ-ம் ஓதிய விதனானே முதல்வன் வியாபகமாய் நின்றவாறே விளக்கினுமான்மாக்களி னறிவு துலவறிவாகலின் அவ்வாறு விளங்கமாட்டாது, தத்தமக்கேற்ற சோபானமுறையே சிறிது சிறிதாக வேகதேசமாய் விளங்கி விளங்கி மேம்பட்டுவந்தே வியாபகமாய் விளங்குவ தோரியல்பிற் றென்பதூஉம், அத்தன்மை நோக்கியதற் கேற்பச் சோபானமுறையாய்த் தானே, முதல்வனது சிற்சத்தியு முற்பக்கத்திற் றிங்கள் போலத்திரோதான சத்திரூபமாய் நின்றறிவிக்கு மென்பதூஉம்,எனவே ஆன்மாக்களினறிவு அங்ஙனம் விளங்காதவழி நிகழுமறியா

மையாகிய மலமும் அதற்கேற்ற பலபலசத்திக் குடைத்தா யம்முறையே சிறிது சிறிதாக முற்பக்கத்திருள்போலக் கீழ்ப்பட்டுத் தேய்ந்து தேய்ந்து முடிவின்கட் பற்றறக்கழியு மென்பதூஉம், அது தேயத்தேய வதற்கேற்பத்திரோதான சத்தியு மம்முறையே சிறிது சிறிதாகத் தன்றன்மை நீங்கிச் சிற்சத்திருபமாய்ப் பதிந்து பதிந்து முடிவின்கண் அதிதீவிர சத்தியாய்ப் பதியு மென்பதூஉம், அது பதியப் பதிய வம்முறையே விடயவெறுப்புண்டா மென்பதூஉம், அதுவுண்டாக வுண்டாக அம்முறையே வீட்டின்கண் விருப்ப நிகழு மெனவும், அது நிகழ நிகழ வதற்கேற்ப ஆண்டாண்டுப் பலவேறுவகைப்பட வுபதேசங்கள் சோபானமுறையான் மேற்பட்டுளவா மென்பதூஉ, மதற்கேற்ப ஆன்மாவின்கணனுபவ ஞானங்களு மவ்வாறே மேற்படு மென்பதூஉங் கண்டுகொள்க.

இனித் தீக்கையும் ஞானத்திற் கங்கமாய் நின்றே வீட்டினைக் கொடுக்குமென்பது பாயிரத்திறுதியிற் காட்டினாங் கடைப்பிடித்துக்கொள்க.

அற்றேல், காரணமுள்வழிக் காரியநிகழ்ச்சிக் கிடையீடின்மையின் முற்செய்த சரியை கிரியா யோகங்கள் ஞானத்தைக் காட்டுமித்த மென்பார்க்கு அவை செய்து கொண்டபொழுதே யிடையீடின்றி ஞானநிகழ்தல் வேண்டும்; அவ்வாறன்றி மற்றொரு பிறவியின் ஞானநிகழுமாறென்னை யென்னு மாசங்கையை நீக்கி யேதுவை வலியுறுத்துதற் கெழுந்த வுதாரணம்.

> தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து
> பவஞ்செய்து பற்றறப் பாராகத்—தவஞ்செய்த
> நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
> கற்றார்சூழ் சொல்லுமாங் கண்டே. என்வரும்.

சரியை கிரியா யோகங்களாகிய தவத்தினைச் செய்தவர் ஒருதலையாக வவ்வத் தவப்பயன்களை யெய்தற்குரிய

வுலகத்தினை யெய்தி யாண்டவற்றை நுகர்ந்து வைகி மீளநில த்தின் வந்து பிறத்தலைச் செய்தே யெஞ்சிய வினைப்பயன் களை நுகர்ந்து விடயப்பற் றறுத்தற் பொருட்டவ்வாறு தவ ஞ்செய்து தோன்றிய நல்வினைத்தின் வந்து பிறந்து அவற்று ன் விடயப்பற்றறுத்து ஞானத்தினைத் தலைப்படுவ ரென்ப தனை விட்டுநூலை யுணர்ந்தாரது சூழ்ச்சி யந்நூலின் கருத்து ணர்ந்து சொல்லுமென்க.

நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதல் தவ முதிர்ச்சி யுடையார்க்கன்றிக் கூடாதென்பார் தவஞ்செய்தா ரென்றும், தவமாகப் பிறிதொன்றாக இவ்வுலகத்துடம்பொடு நின்றீட்டிய வினைகள் அவ்வுலகத்திற் செலுத்தித் தத்தம் பயனுகர்விக்கப் படுதலை யொரு ஞான்றும் பிறழமாட்டா ரென்பார் என்றுந் தவலோகஞ் சார்ந்தென்றும், அத்தவஞ் செய்துழியும் ஞானநிகழ்ந்தா லன்றி யேகதேசப் பற்றறுதல் கூடாமையி னதுபற்றி யவ்வுடம் பிறக்குஞான்று மனமொ ருவிடயத்திற் சென்று பற்றியதாயி னதனை யனுபவித்தற் குத்துணையா யெஞ்சிநின்றவுடல் வினையொடு மாண்டுப் பிற ந்தனுபவித்தன்றி யவ்விடயப் பற்றறுதல் கூடாதென்பார் பவஞ்செய்து பற்றறுப்பாராக வென்றும், தவஞ்செய்தார் மனம் நல்விடயங்களி னன்றிப் பற்றுதலின்மையி னவற்றை யனுபவித்தற் குரித்தாய்ச் சிறந்த பிறவியெய்துவ ரென்பார் தவஞ்செய்த நற்சார்பில் வந்துதித் தென்றும், தவமுதிர்ச்சி யுடையார்க் கெழுந்த நுகர்ச்சி மெலிதாய்க் கழிந்தொழிவ தன்றி யேனோர்க்குப்போல முறுகுத லின்மையி னிடையீ டின்றி ஞான நிகழுமென்பார் ஞானத்தை நண்ணுதலை யென் றும், இவையெல்லாம் வேதாகம நூற்றுணிபென்பார் கற்றார் சூழ்கண்டு சொல்லுமா மென்றுங் கூறினார்.

ஆகவென்னுஞ் செயவெ னெச்சம் உண்ணவந்தானெ ன்புழிப்போலத் தற்பொருட்டாய் நின்றது.

கற்றாரது சொல்லுதற் றொழிலைச் சூழ்ச்சிமே லேற்றிக்கூறினார்.

கற்றார் தமது சூழ்ச்சியா லுணர்ந்து சொல்லுவரென்பது.

ஆம் அசை.

தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்தெனப் பொதுப்படக் கூறினாராயினுஞ் சரியைக்குச் சாலோகமுங் கிரியைக்குச் சாமீபமும் யோகத்திற்குச் சாரூபமுமா மென்பது "சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சிய மென்று சதுர்விதமா" மெனவும் உண்மைச் சரியை கிரியா யோகத் தன்மையோர்க்குச் சாலோக சாமீப சாரூபங்கள் மருவியிடு" மெனவும் வழிநூலாசிரியர் புடைநூலாசிரியர் விதித்தோதிய வாற்றானறிக.

அற்றேல், "பால்போ லொருதன்மையாகு மறவினையா போலுருவு பலகொள வீங்கு" என்பவாகலின், நல்வினையெனப்பட்டன வெல்லாம் புண்ணியங்களா மன்றே அவற்றுளேனையவற்றை யொழித்துச் சரியை கிரியா யோகங்கள் மாத்திரையே யீண்டுத்தவமென விதந்தெடுத்துக் கொண்டோதிய தென்னை யோவென்னு மாசங்கையைநீக்கி யேதுவை வலியுறுத்துதற் கெழுந்த வுதாரணம்.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைத்து வருவினையி லின்ப—மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்
மருவுவனு ஞானத்தை வந்து. எனவரும்.

நல்வினை செய்யத் தொடங்கி யறநூலையாய்வா ரதுணர்விற்கு விடயமாய் வரும்பொழுதே தம்மாற் றலைப்படுங் காமியப் பயனைக் கூறிக்கொண்டே வருவனவாகிய புண்ணியங்களா லுளவாய வின்பம் பசித்துண்டு பின்னும் பசிப்

பாலுக் கவ்வுண்டியான் வருமின்பத்தை யொக்கு மாகலான் ஒருவனுக்குப் பந்தமுறுத்துதற்கட் பொன்விலங்கு மிருப்பு விலங்கும் போலத் தம்முட் சமமாகச் சொல்லப்பட்ட புண்ணிய பாவங்களிரண்டுந் தம்மைப் போற் கெடுதலில்லாத சரியை கிரியா யோகங்களானே துலையொப்ப நேராயின் அத்தவங்களின் பயனாகிய பதமுத்திகளை யனுபவித்து வைகுமான்றே. தானே ஞானநெறியைத் தலைப்படுவன். அவை யங்ஙனேராகா விடின் மீள நிலத்தின்கண் வந்து பிறந்து வினையொப்பு நிகழ்ந்து குரவன் திருவருள் பெற்று ஞானத்தைத் தலைப்படுவ னென்க.

பொருளுக்கோதிய பயனை யுவமையினுங் கூட்டியுரைக்க.

அறநூலுட் கூறப்படு நல்வினையின் பயனெல்லாம் அழிவெய்துவன வென்பதற் கவ்வறநூல் சான்றென்பார் இசைத்து வருவினை யென்றார்; எனவே வேள்வி முதலிய வற்றை விதித்த வறநூலே யவற்றிற்குப்பயன் காமியமென் பதூஉமுடன் கூறுதலிற் காமியப் பொருளெல்லா மழிவெய்துமென்ப தெல்லார்க்கு மொப்ப முடிந்தமையா னவ்வழிவெய்துவன வற்றைப் பயப்பன வாகிய புண்ணியங்களழிவின்றி நிலைபே றுடைத்தாகிய ஞானத்தைப் பயக்கமாட்டா வென்ற வாறாயிற்று.

இசைத்து வருதல் ஆடிவருதல் பாடிவருதல் போல உடனிகழ்ச்சி வினை.

நூலின் வினை வினைமே லேற்றப்பட்டது.

சரியை கிரியா யோகங்களான் வரும் பயனிவைபோ லழிவெய்துவ தன்றென வேற்றுமை கூறுவார் இறப்பிறவ மென்றார்.

இசைத்துவருவினையி னின்பம் நிலைபெறாமை பசித்துண்டு பின்னும் பசிப்பார்க் கவ்வுண்டியான்வரு மின்பத்தை யொக்

குமெனவே யிறப் பிறவத்தான் வருமின்ப நிலைபேறுடைமை, பசித்துண்டு பின்னர்ப் பசியாதாராகிய கடவுளர்க் கல்வமிழ்த வுண்டியான்வரு மின்பத்தை யொக்கு மென்பதூஉ மாயிற்று.

சரியை முதலியவற்றிற்குச் சிறந்த பயன் ஞானமேயாகலிற் சாலோக முதலிய பதமுத்திகள் அவாந்தரப்பயனென் றுணர்ந்து கொள்க.

பின்னுமென்ற வும்மை யிறந்தது தழீஇயது.

ஒப்பிலென்பது செயினென்னும் வினையெச்சம்.

தவத்தா னென்பதனைத் தவத்து ஆன் எனப்பிரித்துத் தவத்தென்பதற் கேதுப்பொருட் கண்வரு மின்னுருபு விரித்துரைக்க.

ஆன் அவ்விடம்.

• "ஆன்வந்தியையு முதனிலையானு" மென்றார் தொல்காப்பியனாரும்,

ஒப்பிலென்றதனால் ஒவ்வாவிடி லென்பது வருவித்துரைக்கப்பட்டது,

ஆம் அசை.

தவத்தா னெனக்கூட்டி யெழுவாயாக வைத்துரைப்பாரும் ஆனுருபேற்ற சொல்லாக வைத்துரைப்பாரு முளர்.

ஈண்டுக் கூறப்பட்ட இருவேறு புண்ணியங்களு ளிசைத்து வருவினைக ளெல்லாம் பசுக்களை நோக்கிச் செய்யப்படுதலிற் புண்ணிய மெனவும், இறப்பிறவங்க ளெல்லாஞ் சிவனையே நோக்கிச் செய்யப்படுதலிற் சிவ புண்ணிய மெனவும் பேர்பெறும்,.

அற்றேல், "யாதொரு தெய்வங் கொண்டீரத் தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார் தாம் வருவ" ரென்பு

வாகலிற் பசுக்களை நோக்கிச் செய்தலுஞ் சிவபிரானை யேன்று கோடலிற் பசுபுண்ணியமுஞ் சிவபுண்ணிய மாலோ வெனின்? அறியாது கூறினாய். ஈண்டுப் பசுபுண்ணியஞ் சிவ புண்ணிய மொனப்பகுத் ததுசெய்வாரது கருத்து வேறு பாடு பற்றியேயன்றி யேன்றுகோடல் பற்றியன்று. செய் வாரது கருத்து வேறுபா டுணர்ந் தவற்றிற்கிசையவே முத ல்வன் பயன் கொடுப்ப னாகலானென்பது.

அற்றாகலி னன்றே மகவெனப் பல்லுயி ரனைத்தையு மொக்கப் பார்க்கு மெய்ஞ்ஞானிகள் பசுக்கண்மேல் வைத்த கருணையா லவற்றின்கட் செய்தனவுஞ் சிவபுண்ணியமே யாயின வாறு.

அற்றாயினுந் தண்ணீர்ப் பந்தர் முதலிய வுலகவினை போலன்றி வேள்வி முதலிய வைதிகவினை சிவனை நோக்கி யவிப்பாகங்கொடுத்தலும், வழிபடுதலு முடைமையி னவை சிவபுண்ணியமு மாமென்றற் கிழுக்கென்னை யெனின்? அற் றன்று; ஆண்டுச் சிவபிரானுக்கு அவிப்பாகங் கொடுத்தலும், வழிபடுதலும் பசுக்களாகிய வேனைக் கடவுளரோ டொப்ப வைத்துச் செய்தலே யன்றிப் பொதுநீக்கிப் பசுபதியென் னுங் கருத்தாற் செய்தலின்மையி னவையெல்லாங் கருத்து வகையாற் பசு புண்ணியமேயாம்.

ஆண்டுச் சிவபுண்ணியமும் அபுத்திபூர்வமாய் நிகழ்தலி னது புத்தி பூர்வமாயினிச் செய்யக் கடவனவாகிய சிவ புண்ணியங்களுக் கேதுவாதன் மாத்திரையாற் பயன்படுத லுடைத்தென்க.

அவ்வேள்வி முதலியனவுஞ் சிவபிரானை நோக்கிப் பொதுநீக்கிச் செய்யின் அஃதேனைய போலப் பசுபுண்ணிய மாதலின்றி முன்னர்க் கூறப்படும் பொதுச் சிவபுண்ணியமா மெனக் கொள்க.

இஃதுலக வினைக்கண்ணு மொக்கும். "வேம்பினொடு தீங்கனியும் விரவி யெனைத்தீற்றி" யென்றோதியதூஉ மிவ் வியல்பு நோக்கி யென்க.

இனிச் சிவபுண்ணியம் அபுத்தி பூருவம் புத்தி பூருவ மென் றிருவகைப்படும்; அவற்றுள் அபுத்தி பூருவம் வேள்வி முதலியவற்றுட் போலப் பொது நீக்கி யறியுமா றின்றிச் சிவபிரானை நோக்கிச் செய்வதூஉம், அந்நோக்கமு மின்றி மாவலி முன்னைப் பிறப்பிற் செய்தது போலச் செய்தவினை யாதானு மோராற்றாற் சிவபிரானுக்குரிய பணியாய் முடிவ தூஉமென விருவகைப்படும்.

இனிப்பொது நீக்கிச் செய்யப்படுவதாகிய சிவபுண் ணியமும் பொது சிறப்பென் றிருவகைத்து; அவற்றுட் பொதுவாவது சிவபுண்ணியத்திற் கங்கமாகிய சிவ தீக்கை யின்றி யவ்வாறு செய்வது. சிறப்பாவது சிவபுண்ணியத்திற் கங்கமாகிய சிவதீக்கை யுடையரா யவ்வாறு செய்வது. இவ் விரண்டும்பத்தி காரணமாக வுண்மையாற் செய்வதூஉம், புகழ் முதலிய வுலகப்பயனை நோக்கிச் செய்வதூஉ மென வெவ்வே றிருவகைப்படும். அச்சிறப்புச் சிவபுண்ணிய மிர ண்டுஞ் சரியையுங் கிரியையும் யோகமும் அவற்றா னிகழு ஞானமுமென வோரோவொன்று நந்நான்காய் அந்நான்கினு ள்ளும் சரியையிற்சரியை கிரியை யோகம் ஞானம்,கிரியையிற் சரியை கிரியை யோகம் ஞானம், யோகத்திற் சரியை கிரியை யோகம் ஞானம், ஞானத்திற் சரியை கிரியை யோகம் ஞா னம் என வோரோவொன்று நந்நான்காய் முப்பத்திரண்டு வகைப்பட்டு விரியானின்னும் பலதிறப் படுமென் றுணர்க.

அவற்றுட் டிருக்கோயி லலகிடன், மெழுகன் முதலி யன சரியையிற் சரியை. ஐயைந்து மூர்த்திகள், விநாயகக் கடவுண் முதலிய வாவரண மூர்த்திகளி லொருமூர்த்தியைப் பூசித்தல் சரியையிற் கிரியை. நெஞ்சின்கண் ணுருத்திரக்

கடவுளைத் தியானஞ் செய்தல் சரியையில் யோகம். அத்தி யானபாவனையி னுறைப்பா னேரனுபவவுணர்வு நிகழ்தல் சரியையின் ஞானம். சிவபூசைக்கு வேண்டப்படு முபகரண ங்களெல்லாஞ் செய்து கோடல் கிரியையிற் சரியை. சிவாக மத்தின் விதித்தவாறே யைவகைச்சுத்தி முன்னகச் சிவலி ங்கவடிவிற் செய்யும் பூசனை கிரியையிற் கிரியை. அகத்தே பூசை யோமந்தியான மூன்றற்கு மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படு மந்தரியாகங் கிரியையில் யோகம். அவ்வந்தரி யாக வுறைப்பின்கண் ணிகழுமோ ரனுபவவுணர்வு கிரியை யின் ஞானம். இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமமென்னு நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமுந் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தின் ஞானம். இந்தயோகஞ் சகளஞ் சகளநிட்களங் களைப் பற்றிநின்று செய்யுஞ் சாலம்பயோகமும், நிட்களத் தைப் பற்றிநின்று செய்யும் நிராலம்ப யோகமு மென்றிரு வகைப்படும். இயம முதலிய வட்டாங்கங்களி னியல்பெல் லாம் ஈண்டுவிரிப்பிற் பெருகும். சிவாகமங்களுட் காண்க.

இனிக்கேட்டன் முதலிய நான்கனுட் கேட்டல் ஞான த்திற் சரியை. சிந்தித்தல் ஞானத்திற் கிரியை. தெளிதல் ஞானத்தில் யோகம். நிட்டைகூடுதல் ஞானத்தின் ஞானமெ ன்றுணர்ந்து கொள்க.

இவற்று ளுபாயச் சரியையிற் சரியைமுதல் உபாய ஞானத்தின் ஞானமீறாகிய பதினாறு வகையி னின்றும் பல வேறு வகைப்பட விரியுஞ் சிவபுண்ணியங்களுக் கெல்லாம் பயனவ்வவற்றிற் கேற்பக் காலாக்கினி யுருத்திரர் முதல் குணதத்துவ மத்தகத்திற் சிகண்ட புவனத்தின் கீழுள்ள வுருத்திரரீறான வவ்வப் புவனபதிகளுலகத்திற் சாலோக முதலியவற்றைப் பெறுதலாம். உண்மைச்சரியையிற் சரி யைமுதல் உண்மையோகத்தின் ஞானமீறாகிய பன்னிருவ

கையினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணி யங்களுக்கெல்லாம் பய னவ்வவற்றிற் கேற்பச் சிகண்ட புவ னமுதற் சுத்தவித்தைக்குக் கீழுள்ள அவ்வப்புவன பதிகளு டைய சிவலோகத்துச் சாலோகமுதலிய பதமுத்திகளைப்பெ றுதலாம். உண்மைஞானத்திற் சரியை முதலிய மூவகையி னின்றும் பலவேறு வகைப்படுஞ் சிவபுண்ணியங்களுக் கெல் லாம் பயன் அவ்வவற்றிற் கேற்பச் சுத்தவித்தை முதலிய வதிகாரதத்துவம் போகதத்துவங்களின்வைகும் மந்திரர் மந் திரமகேசர் முதலியோர் புவனத்துச் சாலோகமுதலிய வபர முத்தியைப் பெறுதலாம்.

இனிப்பல வேறுவகைப்பட விரியு ஞானத்தின் ஞான ங்களுள் முடிவாகிய ஞானத்திற்குப் பரமுத்தியே பயன்; ஏனையவற்றிற்கு இலயதத்துவத்திற் பலவேறு வகைப்பட்ட வபர்முத்தி பயனெனக்கொள்க.

உண்மைச்சரியை முதலியவற்றிற்குச் சுத்த வித்தை முதலிய தத்துவத்துச்சாலோக முதலியவற்றிற் சேறல் பய னென்றுரைப்பாருமுளர். சிவதத்துவபுவனங்கள் ஆணவமல் நீங்கி வாசனை மாத்திர முடையவராலெய்தப்படும் அபரமுத் தித்தானமன்றி யேனையோ ரெய்தும் பதமுத்தித்தான மன் றென்பது சிவாகமங்களுக் கெல்லாமொப்ப முடிந்ததாகலின் ஞானத்திற் றலைப்பட்டன்றி மலநீங்குதல் கூடாமையானும்; "ஈசன் யோகக்கிரியா சரியையினி னின்றோர் ஊனமிலா முத்திபதம் பெற்றுலகமெல்லா மொடுங்கும்போ தரன்முனி லாதொழியின் ஞானநெறி யடைந்தடைவர் சிவனை" எனப் பதமுத்திகளைப் பெற்றோர்க்கு மீட்சி கூறுதலிற் சுத்தவித் தைமுதலிய தத்துவ புவனங்களி னெய்தினோர்க்கு ஆண்டு நின்றவாறே பரமுத்தியைத் தலைப்படுதலன்றி யொருவாற் றானு மீட்சியில்லையென்பது சிவாகம நூற்றுணி பாகலானுஞ் சிவாகமங்களோடு முரணி யவ்வாறு கூறுதல் பொருந்தாமை யறிக.

சரியை முதலியவற்றி னின்றோர்க்குப் பயன் சுத்ததத்துவ புவனத்துச் சுத்தசாலோக முதலாயினவெனச் சிலவிடங்களிற் கூறியது, ஞானத்திற் சரியை முதலியவற்றி னின்றோர்க்கென்னுங் கருத்தே யாமென்றொழிக.

சரியை முதலியவற்றி னியல்பென்னை யெனிற் கூறுதும். அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபிரான் உயிர்கள் சோபானமுறையா னுணர்ந்துய்தற் பொருட்டுத் தூலமாகவுஞ், சூக்குமமாகவும், அதிசூக்குமமாகவு மூவடிவங் கொண்டருளி, யவ்வடிவங்களின் வழிபடு முறைமையும் வேதாகமங்களி னவனால் வகுத்தருளிச் செய்யப்பட்டன வாகலா னம்மூவகை வடிவின் வைத்துப் பக்குவமுறைமையான் மேம்பட்டு நிகழும் நுண்ணுணர் வின்மையிற் சகளமாகிய தூலவடிவ மாத்திரத்தைப் பொருளென் றுணர்ந்து காயத்தொழின் மாத்திரையா னாகமத்தின் விதித்தவாறு வழிபடுவது சரியை.

அஃதடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத்தா னுண்ணுணர் வுடையராய்ச் சகள நிட்களமாகிய சூக்கும வடிவமே பொருள் சகளவடிவ மதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனியென் றிவ்வாறுணர்ந்து புறத்தொழிலானு, மகத்தொழிலானும் விதித்தவாறே வழிபடுவது கிரியை.

அஃதடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத்தா னதிநுட்ப வுணர்வுடையராய் நிட்களமாகிய வதிசூக்கும வடிவமே பொருள் சகளமுஞ் சகளநிட்களமும் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனியென் றிவ்வாறுணர்ந்து அகத்தொழின் மாத்திரையா ஞண்டைக்கு விதித்தவாறே வழிபடுவது யோகம்.

மூன்றுமிவ்வாறு முறையே யடிப்பட்டு வரவர நிகழ்ந்த பக்குவ முதிர்ச்சியானே யுள்ளவாறுணர்வு விளங்கி அகண்

டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பே சொரூப மேனிச் சகளமுதலிய மூன்றுந் தூலாருந்ததி நியாயமாகவுத னையுணர்தற் பொருட்டும், வழிபடுதற் பொருட்டுங் கொண் டதிருமேனியென்றிவ்வா றுணர்ந்து காயத்தொழின் மனத் தொழிலிரண்டையுங் கைவிட்டுக் கேட்டன் முதலிய வறிவு த்தொழின் மாத்திரையான் வழிபடுவது ஞானம்.

ஆகலா னறிதலொப்புமையாற் சரியை முதலிய நான் கு ஞானமேயாமெனவும், ஆயினும் அரும்பு, மலர், காய், கனி யாதல்போலச் சோபான முறையாகிய தம்முள் வேறுபாட் டான் முறையே யொன்றற் கொன்றதிகமாய் நான்கா மென்னு முறைமைக்கண் ணின்ற ஞானமே முடிவாகிய ஞானமா மெனவும், எனவே யிந்நான்கினுமறிவு நாலுவி வ்ரயர் அறி யாமையாகிய மலமும் அம்முறையே தேய்ந்து தேய்ந்து வ ருதலின் இவற்றின் பயனாகிய சாலோக முதலிய நான்கு முத்தியே யாமெனவும், ஆயினும் அம்மல நீக்கமு மவ்வாறு நிக்முஞ் சோபான முறையானே யவையொன்றற் கொன் றேற்றமா யவற்று ணான்கா மென்னு முறைமைக்க ணின்ற சாயுச்சிய மொன்றே முடிவாகிய பர முத்தியாமெனவு முணர்ந் துகொள்க.

சாலோகமுதலிய நான்கனு ளவ்வச்சரியைக்கேற்ப அவ் வப் புவனபதியுலகங்களி னெய்தி யொருவர்மனையிற் பணி செய்யு மகத்தொண்டர்க்குளதாகிய வுரிமைபோலவவ்வுல கத்துள் யாண்டுந் தடையின்றியியங்கி யவ்வப்போகங்களை நுகர்ந்து வாழ்வது சாலோகம்.

அவ்வளவினன்றி ணமர்தார்க்குளதாகிய வுரிமைபோல அவ்வப்புவன பதிகளுக் கணுக்கராய் வைகியவ்வப் போக விசேடங்களை நுகர்ந்து வாழ்வது சாமீபம்,

அவ்வளவினன்றித் தோழர்க்குரிய வுரிமைபோல அவ்வு

ப்புவன பதிகளோடொத்த வடிவமும், ஒத்தவணிகலனும்,மொ த்த போகநுகர்ச்சியும் பெற்றுவாழ்வது சாரூபம்.

இம்மூன்று முரிமை விசேடம்பற்றி முறையேதொண் டர் முதலியோரியல்பை யொத்தலினிவற்றை யடைதற்கு நெறியாகிய சரியை முதலிய மூன்றுந் தாதமார்க்கம் புத்திர மார்க்கஞ் சகமார்க்கமெனப் பெயர்பெற்றன வென்பது,

இனிச்சரியையின் ஞானமுதல் யோகத்தின் ஞானமீறாகிய ஞானவிசேடங்கட்குப் பயனெனப்படுஞ் சாயுச்சியமாவது ஒத்த வடிவினராய் வாழ்தல் மாத்திரையேயன்றி யவ்வப்புவ னபதிகளா னதிட்டிக்கப்பட வவ்வதிகாரங்களை யவ்வவர் போலவே செய்துகொண்டு வாழ்வதென்றுணர்க.

அற்றேல், இவ்வாறன்றிப் புவனபதிகளுடைய சாயுச் சியமாதலாவது: அவ்வப் புவனபதிகளா னதிட்டிக்கப்படுவதி ன்றியே யவரோடொப்ப வதிகாரஞ்செய்யு மாற்றலுமுடை மையென்றாற் படுமிழுக்கென்னை யெனின்? நன்று சொன் னாய்; அவ்வச் சாயுச்சியத்தினின்றோர் அவ்வப் புவனபதிக ளா னதிட்டிக்கப்படுதலின்றியே அவரோடொப்ப வதிகாரஞ் செய்யு மாற்றலுடைய ராயவழிவறிதே யிருப்பரோ அதிகா ரஞ் செய்துகொண்டிருப்பரோ வெனக்கடாயினார்க்கு வறி தேயிருப்பரென விடுப்பின் அவ்வாற்றலாற் போந்த பயனெ ன்னை? அல்லதூஉம் விடுபயக்கும் மெய்யுணர்வு நிகழுங்கா றும் மேன்மேலவாச்சேற லொருதலையாகலின் ஆற்றல்பெற் றுழி வறிதே யிருத்தல்கூடாது.

இனியதிகாரஞ்செய்துகொண் டிருப்பரென விடுப்பின் அவ்வப்புவன பதிகளதிகாரத்தை மாற்றி முழுவதுந்தாமே யதிகாரஞ்செய்வரோ அவருமதிகாரஞ் செய்யத் தாமும் அதி காரஞ்செய்வரோ அவரதிகாரத்தை மாற்றித் தாமே யதிகா ரஞ்செலுத்துவரெனின், அவ்வப்புவன பதிகளாதலேசாயுச்

சிய மெனப்பட்டு வழுவாம். அன்றியும், பிரளயாகலர் விஞ்ஞானகலரிற் புண்ணியப் பேறுடையார்க்கன்றிச் சகலரிற் புண்ணியப்பேறுடையார்க்குப் புவனபதிகளாதல் கூடாது. அவ்வாறின்றி யவருமதிகாரஞ் செலுத்தத்தாமு மதிகாரஞ் செலுத்துவரெனின், ஒருகம்பத்தி னிரண்டானைபோலவும் ஒருநகரியினிருவேந்தர் போலவு மாறுதலேயன்றி யவ்வதிகாரமினிதுசெல்லாது. அல்லதூஉந் தமக்குப் பாதியதிகாரமாய் முடியும்புவனபதிகட்குப் பாதியதிகாரங் குறையுமென் றிவ்வாறெல்லா மௌளலாய் முடியுமாகலி னவ்வப்புவன பதிகளோடொத்த வாற்றலுடைமை யவ்வச் சாயுச்சிய மென்றல் போலியென்றொழிக.

இனி முடிவாகிய ஞானத்திற்குப் பயன்படுஞ் சாயுச்சியத்தினியல்பு முன்னர்க்காட்டுதும். சரியை முதலியவற்றிற்குச் சாலோக முதலியன வவாந்தரப் பயனெனவும், ஞானமொன்றே யுண்மைப்பயனெனவுங் கொள்க.

இனித்தவ மிவ்வாறு சரியைமுத னால்வகைப்பட்டு அவற்றுள்ளும் பலவேறுவகைப்பட்டு நிகழ்தற்கேற்பப் பக்குவ மாதற்பொருட்டு மலத்திற்கனுகூலமாய் நின்று நடாத்திய திரோதான சத்திமலம் பரிபாகமெய்தியவழி யக்கருணை மறமாகியசெய்கை மாறிக் கருணையெனப்படு முன்னைப் பராசத்தி ரூபமேயா யான்மாக்கண் மாட்டுப்பதிதலாகிய சத்திநிபாதமுஞ் சோபானமுறையான் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரமென நால்வகைப்பட்டு அவற்றுள்ளும் பலவேறுவகைப்பட்டு நிகழுமெனக் கொள்க.

எனவே சத்திநிபாதத்திற்குக் காரணம் மலபரிபாகமென்பதூஉ, மதுவுமவ்வாறு பல வேறுவகைப்பட்டு நிகழுமென்பதூஉம் பெறப்பட்டன.

சத்திநி பாதமென்னுஞ் சொல்லியல்பு சத்தியினது வீழ்ச்சியென்றவாறு.

நி யென்பது ஏற்றமாகவெனப்பொருள் குறித்துநின்ற தோரிடைச்சொல்.

ஓரவைக்களத்தி னடுவே ஒருகல் வந்துவிழ்ந்தா லவ்வி ழ்ச்சி யவ்வவைக் களத்துள்ளாரை யாண்டுநின்று மகல்விக் கும்; அதுபோலச் சத்திநிபாதம் நிகழ்ந்த மாத்திரையே அஃதவ்வான்மாவை மனைவிமக்கண் முதலிய வுலகத்துழனி யினச்ச நிகழ்ந்து அவ்வவ்வுலக வாழ்க்கையினின்று வெரீஇப் பெயர்ந்துண்மைக் குரவனை நாடிச்செல்லுமாறு செய்வித்த லினவ்வொப்புவமை தோன்றச் சத்திநிகழ்ச்சி யென்னுது சத்திவீழ்ச்சியென் றோதப்பட்டது.

மலபரிபாகமாவது; தனதுசத்தி தேய்தற்குரிய துணை க்காரணங்க ளெல்லாவற்றோடுங் கூடுதலேயாம்.

இனி யிறப்பிறவத்தா னிகழு மிருவினை யொப்பாவது யாதெனிற்? கூறுதும். சஞ்சிதமா யீட்டப்பட்டுக்கிடந்த விருவினைகளும் பக்குவமுறையானே பயனுய் வரும்வழி நல் வினையுண்மிக்கதாகிய பரிமேதவேள்விப் புண்ணியமும், தீவி னையுண்மிக்கதாகிய பிரமக்கொலைப்பாவமு மொருங்கே பக் குவமெய்திப் பயன்படுதற்க ணெதிர்த்தனவாயின் அவைதம்மு ளொன்றொனொன் றடிக்கப்பட்டுச் சுந்தோபசுந்த நியாயமாய்க் கெட்டொழியுமாகலி னவை யவ்வாறு தம்முளொத்தலே யிருவினையொப்பென்ப ரொருசாரார். சஞ்சிதமாய்க் கிடந்த புண்ணியங்களும் பாவங்களு மிகுதிகுறைவின்றித் தம்மு ளொத்தல் இருவினை யொப்பென்ப ரொருசாரார். மிக்கவினை யிரண்டுந்தம்முளொத்துக் கெட்டனவாயினு மனைய யொழி த்தொழிந்த புண்ணியபாவங்க டத்தம்பயனைத் தருதற்கிடை யீடின்மையானு மிருவினைகண் முழுதுந்தம்மு ளொக்குமாறி ல்லை; யொக்குமெனினு மதுபற்றி யாணவமலம் நீங்குமாறி ன்மையான் விஞ்ஞான கலராவாரன்றி முத்தியெய்துதல் கூடாமையானும், மிவ்வாறு பௌட்கரத்து ளெடுத்தோதி யவ்

டிரண்டினையு மறுத்தலானும் ஈண்டோதிய விருவினை யொப் புஎனவை பொருளல்ல வென்றொழிக.

இனியிவ்விரண்டு மிவ்வாறாக வேறு வேறு பொருள் படுதற் கேலாமையானுஞ், சிவப்பிரகாசத்தில் "எதிர்வினையு முடிவினை யுதவுப்பயனு னேராக" வென ஏனைவினைகள்போல ஆகாமியவினையு முடிவினையுமொத்தல் வேண்டுமென் றோது தலி னஃதொத்தல் பிறிதோராற்றாற் பெறப்படாமையா னும், மலபரிபாகக்குறி சத்திநிபாதக்குறி சிவபுண்ணியக் குறிக ளெல்லாம் ஆன்மா வறிவின்கண் விளங்குமாறுபோல இருவினை யொப்புக்குறியுந் தன்னறிவின்கண் விளங்கு மாறி ல்லை யாயி னதுமுத்திக் கேதுவாதல் கூடாமையானும், ஒன் றின் விருப்பும் ஒன்றின் வெறுப்பு மாதலின்றிப் புண்ணிய பாவ மிரண்டினு மவற்றின் பயன்களினும் ஒப்ப வுவர்ப்பு நிகழ்ந்து விடுவோன தறிவின்கண் ணவ்விருவினையும் அவ் வாறொப்ப நிகழ்தலே யீண் டிருவினை யொப்பென்றதற்குப் பொருளென்ன நுண்ணுணர்வாற் கண்டு கொள்க.

"எதிர்வினை நேராக" வெனப் புடைநூல் செய்த வாசிரியர், இஃதறியாது வேறு வேறுரைப்பாரை நோக்கிய ன்றே "இருவினை துக்க வருவினை நில்லா ஒருவினைபுரிகா லிருவினையாகா வொப்புறுமாறு செப்புக" வென்று சங்கற்ப நிராகரணத் தோதியதூஉ மென்க. "இனையபல பிறவிகளி" னென்னுஞ் செய்யுளின் எதிர்வினையு மென்பதற்கு வேறு முடிபாக வைத்துத் தமக்கு வேண்டியவாறே யுரைப்பாரு முளர்; அது பொருந்தாமை சொற் கிடக்கை முறைநோக்கி யுணர்க.

ஆண்டிருபயனு மென்ற வும்மை யேனை யிரண்டும்மை களோ டொப்ப எண்ணும்மையாதலே பொருத்த முடைத் தாகவி னதனை வேறு பிரித்து முற்றும்மையாகக் கொண் டுரைத்தலும் பொருந்தாமை யறிக. இன்னு மவர் "உம்மு

ந்தர்கு மிடனு மாருண்டே" யென்னுஞ் சூத்திர விதிபற்றி "நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து" என்றதே போல நகரு மென்னும் பெயரெச்சத்தை நகருந்தென வைத்தோதிய வாசிரியர் கருத்துணராது நக ரென்பதனை முதனிலைப் பெயராக்கிக் கண்ணுருபு விரித்திடர்ப் பட்டுரைப்பர். "ஒரு காலத்து." எ-ம், "முந்த." எ-ம், ஓதிய சொற்குறிப்பு மறிந்திலர் போலும். அன்றியு மவ்வாறுரைப் பார்க்கு அந்த முற வந்த வினையு மெனவே யமையு மாகலின் ஒரு காலத்த ருந்த முந்தநுகருந்துபயனென்றசொன்முழுவதும் வெற்றெனத் தொடுத்தலாய் முடியுமாகலானும் அவ்வுரை போலியென் றொழிக.

இனியிருவினைகள் பசுநல்வினை தீவினையென்றுஞ், சிவநல்வினை தீவினை யென்றும் இருவேறு வகைப்படு மெனவே யிருவினை யொப்பு மவ்வாறு பசுநல்வினை தீவினைகள் தம்மு ளொத்தலாகிய விருவினை யொப்பென்றுஞ், சிவநல்வினை தீவினைகள் தம்மு ளொத்தலாகிய விருவினை யொப் பென்றும் இருவேறு வகைப்படு மென்பதூஉம் பெற்றாம்.

சிவநல்வினை தீவினைக டம்மு ளொத்தலாவது: சிவநல் வினையுந் தீவினைபோலத் தமது முதலுபகாரத்தை மறந்து பிறவிக் கேதுவாய்ப் பசுபோக முனைத்துச் செய்யப் படுவ தொன் றெனத் தெளிந்து உவர்த்து விடுவோனது அறிவின் கண் ணவ்வாற்றா னொப்ப நிகழ்தல்.

இவ்விருவகை வினையொப்புண் முன்னையது பக்குவத் தானிகழும் பசு புண்ணியத்தினும் நிகழ்வனவா யுளவென மேற்கூறப்பட்ட அபுத்தி பூருவம் புத்திபூருவ மென்னும் பொதுச் சிவபுண்ணியத்தா னுண்டாவதாய் மலபரிபாகத் தைத் தோற்றுவிக்கு முகத்தானே மந்ததர மெனப்படு முதற் சத்திநி பாதத்தில் பின்னையது பலதிறப் படுவனவாகிய நால்வகைச் சத்திநி பாதத்தா னவ்வாறே நால்வகைப்பட்ட

முறையா னிகழ்ந்து முடிவின்கண் ஞானத்திற் கேதுவா மென்றுணர்க.

இனி ஞானத்திற்குக் காரணங் கிரியை முதலியன வென்பதூஉம், சரியை முதலிய வற்றிற்குக் காரண மந்தர முதலிய சத்திநிபாத மென்பதூஉம் யாண்டு மினிது விளங்கக் கிடந்தன,

இவை யெல்லாவற்றிற்கு மூலகாரண மெனப்பட்ட பக்குவமாவது தமக்குரிய சோபான முறையா னன்றி யறிய மாட்டாததோரியல்புடைய வான்மாக்களுக் கம்முறையா னிகழு மாறறிய........வல்லுதலே யாமென்பதுமே லாண் டாண்டுக் கூறியவாறு பற்றியுணர்ந்து கொள்க, அவ்வல்லு தற்குக் காரணங் கேவலக் கிடையினு நீங்கா துடனாய் நின்று நோக்கிவரு முதல்வனது கருணை நோக்கத்தி னடிப்பாடெனவறிக.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்,

—:*:—

மேலையதிகரணத்தின் உயிர்க்கு விடுபயக்கு நல்லறிவு தவத்தினாலே வருமெனச் சாதித்தவழி, அற்றேல், மேற்சரியை கிரியா யோகங்களைச் செய்துழிப் பிறிதுகரணம் வேண்டா தவைதானே ஞானத்தைக்காட்டும்போலு மென்னு மாசங்கையை நீக்குதற் கெழுந்தது இரண்டாமதிகரணம்,

இனி யிவ்வான்மாக்களுக்குத் தமது முதற்கணே குருவுமாயுணர்த்தும் என்றது.

இது மேலை யதிகரணத்தோதிய சரியை முதலியவற்றா னிகழும் ஞானங் குரவனையின்றியமையாதவாறு மக்குரவன தியல்பு முணர்த்துகின்றது.

இனியென்றது சரியை முதலிய மூன்றுஞ்செய்து முற்றியபின் னென்றவாறு.

இவ்வான்மாக்களுக் கென்பது இம்முற்றுப்பேறுடைய வான்மாக்களுக் கென்றவாறு.

தமக்கு முதலாயிருகாறு முண்ணின் றுணர்த்தி வந்த பரம்பொருட்கன்றி யேனையோர்க் கவ்வியல்பறிந்துணர்த்துதல் கூடாதென்பார் தமது முதறுனே யென்முர்.

ஏனையோரிற் பிரித்தமையி னேகாரம் பிரிநிலைக்கண் வந்தது,

இக்கருத்தேபற்றி " அகத்துறு நோய்க்குள்ளினரன்றி யதனைச் சகத்தவருங்காண்பரோதான் " என்முர்புடைநூலாசிரியரும்,

இனித்தானே யென்பதனைத்தாமே தருபவரை யென் புழிப்போலக் கொண்டுரைத்தலு மொன்று.

இதனுனே கருணைமிகுதி கூறியவாருயிற்று.

உம்மைக்குப் பொருள் மேலுரைத்தாம்.

ஈண்டுக்குருவடி வென்றது மானிடவடிவினை.

அற்றேல், மாயாவுருவன் மாயாவுருவினை யேய்வனுயி னெம்மனோரி லொருவனுய் முடியும். அல்லதூஉம் ஆகமங்களின் ஆசான் மூர்த்தியாகிய வாதாரத்தை யதிட்டித்து நின் றுணர்த்துவன் முதல்வனென வேற்றுமைப்படுத்தோதுதலி னீண் டிவ்வாறு கூறுத லவற்ரெடுமுரணுமாலென் னு மாசங்கை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்தவேது.

அஞ்ஞானிய மின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான், எனவரும்,

இஃள், அம்முதல்வன் வேற்றுமையின்றி யுடலின்கணுயிர்போல்வதோர் கலப்பினு லான்மாவே திருமேனியாக வுடையனுய் நிற்றலான் இனி யிவ்வான்மாக்களுக்குத் தமது

முதற்றானே குருவுமா யுணர்த்துமென மேற்கொண்ட தென்றவாறு.

முதல்வன் கலப்பினா லவையேயாதல் பொதுவதிகாரத்துட் பெறப்பட்டமையி னீண்டதனை யேதுவாகவைத்து மேற்கோளைச் சாதித்தார்.

ஈண்டுச் சைதன்னிய மென்றது ஆன்மாவை. அறிவொளிபோலென்றாற் றொடக்கத்துப்போல வேற்புழிக் கோடலாற் பெறப்படும்.

இவ்வாறன்றி யறிவு சொரூபியாயெனப் பொதுப்படவுரைப்பி னவ்வேது ஆன்மாக்கண்மாட்டுஞ் சேறலி னீண்டெடுத்துக்கொண்ட மேற்கோளைச் சாதிக்கமாட்டாது அநைகாந்திகமாய் முடிவதூஉ மன்றி மேற்கூறிய வாசங்கைக்கு விடையாகாமையு முணர்க.

அற்றேல் இது விடையாமா றியாங்ஙன மெனிற்? கூறுதும். சிலவாகமங்களிற் குருமூர்த்தி யாதாரத்தையதிட்டித்துநின் றுணர்த்து மென்றது பொருட் டன்மையாற்றானே யாமென மேலோதிய விதிபற்றி. ஈண்டுத் தம்முதலே குருவுமா யுணர்த்து மென்றது, கலப்பினாலவையே யாமென்றோதிய வியல்புபற்றி. ஆகலி னிரண்டுந்தம்முண் முரணுமா றின்மையானும் "மாயை மாமாயை மாயா வருவிருவினையின் வாய்மை, யாயவாருயிரின் மேவு மருளெனிலொளியாய் நிற்கு" மென்ப வாகலின், முதல்வனுக்குத் திருமேனியாகிய சைதன்னிய முதல்வனைச் சார்ந்தவ்வண்ண மாயவழி யவ்வுடம்பு மவ்வா றருண்மயமே யாகலி னிழுக்கின்மையா னவ்வுடம் பிடங்கோடல் பொருத்தமுடைமையானுந், தமது முதற்றானே குருவுமா யுணர்த்துமென மேற்கொண்டது சாலுமென விடுத்தவா றென்றறிக. "மாயை மாமாயை" யென்னுஞ் செய்யுள் வேறு பொருள்படுதற் கேலாமை மேலிருவினை யதிகரணத்தின் விரித்துரைத்தாங் கடைப்பிடிக்க.

அற்றேல்; சிலவான்மாக்களுக்குக் குருவடிவங்கொண்டுணர்த்துதலின்றியு ஞானநிகழ்த லுண்மையின் ஈண்டுக் குருவடிவங் கொண்டுணர்த்திய பின்னன்றி ஞான நிகழாதென வரைந்தோதியது யாண்டுஞ் செல்லாதாலெனின் ஆசங்கையை நீக்கியதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன். எனவரும்.

விஞ்ஞானகலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும் அன்றிப் பிரளயாகலருக்குத் தான் குருவாய் முன்னுணர்த்தும். அஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்ப்பின் மெய்ஞ்ஞான முணர்த்து மெனமாறுக.

எளிதி னடப்படுத னோக்கி அரிசிதானே யடப்பட்டதென்றாற்போல எளிதின் விளைவிக்கப்படுதனோக்கி மெய்ஞ்ஞானந்தானே விளையுமென்றார். அரசனெடுத்த வாலயமென்புழிப்போல விவ்விகுதி குன்றிநின்ற தென்றலுமொன்று. இவ்வாறுரையாது வியஞ்சகமின்றித் தானே விளையுமென்றுரைப்பிற் சிவாகம மெல்லாவற்றோடு முரணுமென்றொழிக.

தானே விளைதலாவது: வேறிடத்தினில்லாது தன்மையினின்றே விளைப்ப விளைதல்; "உண்ணின் றறுத்தருளி" யென்றார் புடைநூலாசிரியரும். பிரளயாகலருக்குத் தான் குருவாய் நின்று முன்னுணர்த்துதலாவது; விஞ்ஞானகலர்க் குண்ணின் றுணர்த்திய வாறுபோலன்றி நாற்றோளு முக்கண்ணுங் கறைமிடறு முதலிய வுறுப்பிற்றாய் முத்தொழி னடாத்தி நின்ற தனதியற்கை வடிவே குருவடிவாகக் காட்டி முன்னின் றுபதேச முகத்தா னுணர்த்துதல்;

சகலர்க்குக் குருவாய்ப் பின்னுணர்த்துதலாவது: அவர் வடிவுபோலுங் குருவடிவாகிய மானுடப்போர்வையின் மறைந்துநின் றுபதேசமுகத்தா னுணர்த்துதல்.

மெய்ஞ்ஞானம் வீடுபயக்கு முணர்வு.

ஈண் டஞ்ஞானமென்றது அவிச்சையை.

சகலர்க்கே விசேடணமா யோதுதலா னென்பது:

அச்சகலர் மேற்கூறிய சரியை கிரியா யோகங்கள் செய்து முற்றிய சகலர்.

அக்குரு மேற்கோளிற் கூறிப்போந்த குருவென்க. எனவே யீண்டுச் சரியை கிரியா யோகங்களைச் செய்தோர்க்குத் தம்முதல் குருவுமா யுணர்த்துமெனச் சகலர் வர்க்கமே யெடுத்துக்கொண்டோதிய தாகலி னஃதேனைப் பிரளயாகலர் விஞ்ஞானகலர் வர்க்கத்துச் செல்லாமைபற்றி யிழுக்கில்லை யென விடுத்தவா றுணர்க.

செய்யு ளிறுதியின் முன்னென்றது முன்னாகிய முதல்வனென வெழுவாயாய் நின்றுணர்த்துமென்னும் பயனிலைகள் கொண்டது.

இம்மூவருட் சகலர்க்குணர்த்துங்கால் இயற்கை வடிவை யொழித்துப் பிறிதொரு மானுடவடிவ மாதாரமாக நின்றுணர்த்துதலினது சாதாரமென்றும், ஏனையிரண்டு மன்னவல்லவாதலா னிராதாரமென்றுங் கூறப்பட்டன.

அற்றேல், மூவகை யான்மாக்களுக்கு மோரியல்பாய் நின்றுணர்த்தவன்மையும், அவ்வாறன்றி விஞ்ஞானகலர்க்குத் தன்மையினும், பிரளயாகலர்க்கு முன்னிலையினும், சகலர்க்குப் பின்னிலையாகிய படர்க்கையினுமின் றிவ்வாறுணர்த்துத லெற்றுக் கென்னு மாசங்கையை ஆன்மாக்களது சிறப்பியல்பும் அவற்றிற்குத் தம்முள் வேறுபாடு முணர்த்து முகத்தானீக்கி யவ்வேறுபாட்டிற்கேற்ப வெவ்வேறாய்நின் றுணர்த்து

தலை யமைவுடைத்தென வதனை வலியுறுத்தற்கெடுத்துக் காட்டு முதாரணம்.

அழிவிக்க வன்றி யழியா வுளங்கள்
செழியுமா முன்பின் குறைக—ணெறியிற்
குறைவுடைய சொற்கோள்ளார் கோள்பவத்தின் வீடென்
குறைவில்சகன் சூழ்கோள் பவர்க்கு. எனவரும்.

ஆன்மாக்களதுவதுவாய்ச் செறிந்தறிவனவன்றி முத ல்வன்போலச் செறியாது நின்றறிவன வல்ல வாகலானும் முதல்வன் வியஞ்சகமாய் நின்று படிவழிபோல வைத்து முறையான் விளக்கினாலன்றி யவற்ற தறிவு விளங்காதென் பது பெறப்படும். அவ்வறிவுகளவ்வாறுபடிவழி முறைபோல விளங்குதலு மொருதன்மையானன்றிக்கல்விக்குறைவுடைய கணக்காய்வார்போல முன்னும் பின்னுமாய் விளங்குந் தார தம்மிய முடையனவாம். ஆகவே அவ்வறிவுகள் விரியாற் பலவேறுபாடுகளுடையவாயினு மவ்வாறுணர்தற் கேற்ப நிக முழும் பந்தவேறுபாடுபற்றி விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகல ரென வகையான் முத்திறப்படுமென்பதூஉம்பெறப்பட்டது.

அவ்வான்மாக்களுட் பலவாற்றானுங் கேட்டுச் சிந்தித் தன்றித் தெளியப்படாத குறைபாடுடைய நூல் வேண்டாத நுண்ணுணர்வுடையார்க்கு முதல்வனாற் கொள்ளப்படுந் தன் மை மாத்திரையானே முத்திகூடுமென் றறிவாயாக; நூல் வேண்டுந் தூலவறிவுடைய சகலர்க்கு ஞானத்தாற் குறைபா டில்லாத சகத்தின்கண்ணுளதாகிய குரவனால் முத்திகூடுமெ ன்றறிவாயாக வென்க.

உளங்கள் செறியுமாகலானெறிபி ன றிவிக்கவன்றி யறி யாவெனக்கொண்டு கூட்டியுரைக்க.

அறிவித்தற்கெழுவாய் மேலைவெண்பாவினின்றும் வரு விக்கப்பட்டது.

அன்றியறிபாவென வெதிர்மறையாற் கூறினர் இன்றி யமையாமையையுணர்த்துதற்கு.

நெறியின் றின் உவமவுருபு.

முன் பினன்றேகமென ஆக்கச்சொல் வருவித்துரைக்க.

குறை வுடையார்களைக் குறைகளென உபசரித்தார் போலவென்பது சொல்லெச்சம்.

குறைகளுஞ் சொல்லும் சூழும் ஆகுபெயர்.

" கொள்ளார்க்கென நான்கனுருபு'; ஐந்தவித்தா னாற்ற லென்புழிப் போல விகாரத்தாற் றொக்கது.

பவம் சம்பவம் உண்மை யென்பன வொருபொருட் கிளவி.

ஈண்டுண்மை யென்றது நிராதாரத்தை.

ஈண்டுச் சகமென்றது நிலவுலகத்தை.

சகனெலென்க,

விடென் என்பதனை பிரிடத்துங் கூட்டுக.

நூல் குறைவுடையதாயினும் அதனைக் கேட்பித்துச் சிந்திப்பித்துத் தெளிவிக்குங் குரவனதறிவ னதறிவாற்ற லிற் குறைபா டின்மையிற் றெளிந்து விடெய்தல் கூடுமென் பார் குறைவில் சகனென விசேடித்தார். குறைவில் சகனெ ன்புழிச் சிர்சிதையாமை முன் செய்வினை மாயையென்பத ற்குரைத்தவாறுபற்றி யுணர்ந்துகொள்க. கொள்ளார் கொள் பவரென ஆடேஉவறி சொல்லாற் கூறியது வடமொழி மதம் பற்றி.

ஆன்மா வதுவதுவாய்ச் செறியுமாறும், அறிவினைய றிவிக்கும் வியஞ்சகத்தை யின்றியமையாதவாறும், வியஞ்சக த்தானறிவு விளங்கும் வழியு மொருங்கே முழுவதும்விளங் காது படிவழி யேற்றம்போல அடிப்பட்டு வரவர மெல்ல மெல்ல விளங்குமாறும், அவ்வாறு விளங்கு மறிவுகளும் ஒன் று போலன்றிக் கணக்காய்வாரறிவின் மந்ததீவிரங்கள்போல

முன்னாகவும் பின்னாகவும் விளங்குமாறு, மதற்கேற்ப மல சத்திகளும் பலவாமாறு மாண்டாண்டு விரித்துரைத்தாங் தடைப்பிடித்துக் கொள்க.

இதனாற் போந்தது தத்தமக்கேற்ற சோபான முறை யானறிவு விளங்குதலுடைய மூவகை யான்மாக்கண்மாட் டும் விரவி நிற்கு மூலமலமாகிய வறியாமைப் பொருளொன் றே யாயினு மவ்வான்மாக்கள் தபக்குவ பக்குவ தாரதம்மிய ங்கட் கேற்பப் பலவேறு வகைப்படப் பிணிக்கு மலசத்திக ள் தூலசூக்கும வேறுபாட்டாற் பலவேறு வகையவாகலி ன வற்றின் விஞ்ஞான கலர்க்குப் பிணிப்பாகியமலசத்தி சூக்கு மம், பிரளயாகலர்க்குப் பிணிப்பாகியமலசத்தி தூலம், சகலர் க்குப்பிணிப்பாகிய மலசத்தி தூலதரமாம். அற்றாகலினன்றே விஞ்ஞான கலர்க்கு மாயை கன்மங்க ளுளவாகவு மவரவற் றாற் பிணிப்புண்டு மயங்குத லின்றி மலமாத்திரையாற் பிணி ப்புண்டதூஉம், பிரளயாகலர்க்கு மாயை யுளதாகவும் அவர துனிற் பிணிப்புண்டு மயங்குதலின்றியேனையிருமலத்தானும் பிணிப்புண்டதூஉஞ், சகலரவ்வாறின்றி மூவகையானும்பிணி ப்புண்டதூஉ மாகலானம் மூவகைமலசத்தியுட் சூக்கும மல சத்தியுண்ணின்றுணர்த்தியவாறேயெளிதி னீங்குதல் கூடுமா கலானுந், தூலமலசத்தி யெதிர்நின்றுபதேச முகத்தாற் றெ ரித் துணர்த்தியுவழியன்றி நீங்குதல் கூடாமையானும், தூல தரமலசத்தி உபதேச முகத்தானும் நூன்முகத்தானும் அனு பவமுகத்தானும் பலவேறு வகைப்படவலியுறுத்தி யுணர்த் திய வழியன்றிநீங்குதல் கூடாமையானு மவ்வேறுபாட்டிற் கேற்பத் தம்முளிருவேறு வகைப்படும்திரோதாரமாயுஞ் சாதா ரமாயு நின்று அறிவை யுணர்த்துவன்முதல்வ னெனமேலை வெண்பாவிற்கூறிய பொருளை வலியுறுத்திய வாறுமென்க.

அவ்வா றுணர்த்தும்வழிச் சூக்கும மலமுடைய விஞ் ஞான கலர்க்குந் தூலமல முடைய பிரளயாகலர்க்கும் மலபரி

பாகத்திற் கேற்ப நாலாஞ் சத்திநிபாதந் தீவிரமாயுந் தீவிரத ரமாயு நிகழுமாகலி னவ்விருவகைச் சத்திநிபாதம் பற்றியு ணர்த்தித் தீவிரத்தா லுணர்த்தப்பட்டார்க்கு அபரமுத்தி யுந் தீவிரதரத்தா லுணர்த்தப்பட்டார்க்குப் பரமுத்தியும் பய க்கு மெனவும், தூலதர மலமுடைய சகலர்க் கம்மல பரிபா கத்திற் கேற்ப மந்ததர முதலிய நால்வகைத்தா னிகழுமா கலின் அந்நால் வேறுவகைச் சத்திநிபாதம் பற்றி யுணர்த்தி மந்ததரத்தாற் சாதக நிலையும்; மந்தத்தாற் சீவன் முத்தி நி லையும், தீவிரத்தால் அபரமுத்தி நிலையுந், தீவிரதரத்தாற் பர முத்தி நிலையும்பயக்கு மென்றறிக.

ஈண்டுச் செய்யப்படுந் தீக்கையினியல்பெல்லாம் மேற் பாயிரத்துள் விரித்துரைத்தாங் கடைப்பிடிக்க.

இவ்வெண்பாவிற்கு இவ்வாறன்றி யான்மாக்களறிவி னாலன்றி யறியா வாகலா னவற்றிற் கறிவிக்கவே முந்துநூல் களை யெல்லா மவ்வச்சமயநெறியின் முன்னொடு பின் னிணங்காது மாறுபடுங் குறைகள் செறிவனவா மாதலி னக் குறைபாடுடைய நூல்களைக் கொள்ளாது குறைபா டில்லாத முதல்வனது சித்தாந்த நூல்களைக்கொள்பவர்க்குக் கொண்ட பிறவியிற் றானே வீடுபேறு மென்றுரைப்பாரு முளர்.

அற்றேல்; நூல் கொள்பவராகிய சகலர்க் கந்நூலா னே யறித லன்மையுமாகலாற் குரவன் மிலகயாமர் லென்னு மாசங்கையை நீக்கு முகத்தாற் றமது முதற்றானே குருவாமா ற்றை யுவமையின் மேல் வைத்துத் தெளிவிக்க வேண்டியுமுரைத் ததற் கெடுத்துக்காட்டுமுதாரணம்.

இல்லார் முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
ன்ல்லா யுளவாமா னீர்நிழல்போ—லில்லா
வுருவாகி நின்றானை யார்றிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று. என்வறும்;

தீவத்தானன்மையுடைய மாணுக்கனே ஏந்திய விழை களை யுடையாட்குக் குழவிமாட்டுளதாகிய வருவாகிய வன் பினை வெளிப்படுத்தற் கவ்வன்பின்வடிவாகிய முலைப்பாலுங் கண்ணீருங் குழவியைக்காணு முன்னவண்மாட் டில்லாவா ய்ப் பின்னுளவா மதுபோல நீரின்கண் ணிழல்போ லான்மா வின்மாட்டுப் பொருந்தி வெளிப்படுத லில்லாத வருவமாய் நின்ற முதல்வனை யார்தா மறிவா ரம்முதல்வன் ருனேகுரு வடிவாய்த் தோன்றி நின்றுணர்த்தா னுயினென்க. ஒருவரு மறிவாரில்லை யென்பதாம். ஆகவே யருவாய் நின்ற முதல் வனை யறிவித்தற்கு நூன்மாத்திரையா னமையாமையி னம் முதல்வனே குருவாய்த் தோன்றி யுணர்த்தல் வேண்டுமென விடுத்தவாறாயிற்று.

எதிர்மறையாற் கூறினு ரின்றியமையாமை யுணர்த்து தற்கு.

பொருள்வினையை யுவமையினுங் கூட்டியுரைக்க.

முலைப்பாலுங்கண்ணீருமன்பை விளக்குமென்பது "சுர ந்த திருமுலைக்கே துய்யதிரு ஞானஞ், சுரந்துண்டார் பிள்ளை யெனச் சொல்லச்—சுரந்த, தனமுடையா டென்பாண்டி மா தேவி தாழ்ந்த, மனமுடையா ளன்பிருந்த வாறு" என்பத னுனும் "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர் புன் கணீர் பூசறரும்" என்பதனுனுமறிக. அவ்விரண்டு மன்பின் வடிவே பிறவல்லவென்பது அன்பை வெளிப்படுத்தற்குரிய காரணமுள்வழி வெளிப்பட்டஃதில்வழி வெளிப்படாத வொ ற்றுமைநோக்கிக் கண்டுகொள்க.

இவ்வொற்றுமை யுணர்த்துவார் இல்லாவா யுளவா மெ ன்ருர்.

இல்லாவென்பது வினையெச்சக்குறிப்பு முற்று.

ஆல் அசை.

இவ்வுவமையானே முதல்வன் குருவாதல் கூடுமாறியா ங்ஙனமென்னு மாசங்கையு நீக்கப்பட்டது.

இஃதெடுத்துக்காட்டுவமை.

நீரகத்தியங்கு முயிர்கட்கிடங்கொடுத்த லுண்மையான் நீரின்கண் வெளியுண்டென்பதூஉம், உண்டாகவே யாண்டு நீரிற்கு நிழலுண்டென்பதூஉம் பெறப்பட்டன.

அந்நிழல் வேறுநில்லாது நீரின்கண் விரவிநிற்றலி னீர் போலப்புலப்படாதாயிற்று. அதுபோலச் சிவசைதன்னிய மும் யானென்னு முணர்விற்கு விடயமாய்ப் புலப்படுமான்ம சைதன்னியத்தோடும் விரவிப்புலப்படாது நிற்பதொன்றெ ன்பார் நீர்நிழல்போலுற் றில்லாவருவாகி நின்றனை யென் றார்.

அருவப்பொருள்போற் புலப்படாத வியல்புபற்றி முத ல்வனை யருவென்றல் சாலுமென்பார் இல்லாவருவாகி யென் றார்.

நீர் நிழல் தோன்றாமை மாத்திரைக் கொருபுடையுவ மையாகலாற் றோன்றுதற் குவமை வேறுகூறினார்.

இரண்டாமதிகரணம் முடிந்தது.

மூன்றுமதிகரணம்.

—:◌:():◌:—

இரண்டாமதிகரணத்தின் உயிர்க்கு முதல்வனே சற்கு ருவாய் வந்துணர்த்துவனெனச் சாதித்தவழி, அற்றே, லிது காறும் பசுகரணமாய் விடயங்களை யுணர்த்திநின்றன ஐம் பொறி முதலிய கருவிகளாமன்றே, அவை பாசம் நீங்கியவழிச் சிவகரணமாய்நின்றுண்மை ஞானத்தினை யுணர்த்துதற் கமை யுமாகலிற், றம்முதல் குருவுமா யுணர்த்துதல் மிகையாமாலெ ன்னு மாசங்கை நீக்குதற் கெழுந்தது மூன்றுமதிகரணம்.

இனி யிவ்வான்மாக்களையுணர்வுகளான் மயங்கித் தம் மை யுணரா எனவரும்.

இனியென்ற திவ்வியையபுணர்த்துதற் பொருட்டு.

இவ்வான்மாக்கள் தம்முதல் குறுவுமாயுணர்த்த வுணரு மியல்புடைய வான்மாக்கள்.

ஐவகை யுணர்விற் கேதுவாகிய பொறிகளை யையபுணர் வென் றுபசரித்தார்.

ஐம்பொறி யென்றது உபலக்கணம்.

மயங்கி யுணரா வென்றது ஓதியுணர்ந்தானென்பதுபோ லக் காரண காரியப் பொருட்டாய் நின்றது.

அற்றேற், சகசமலத்தா லுணர்வின்றி நின்ற வான்மாக் கள் கருவிகளா னறிவு விளங்கி யறியுமென்பதுமேற் பொது வதிகாரத்துட் கூறிப்போந்தமையி னீண்டையுணர்வுகளா லா ன்மாக்கள் மயங்குமென்றல் முரணுமாலென்னு மாசங்கை யை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த வேது.

அவை தாம் பளிங்கிலிட்ட வன்னம்போற் காட்டிற்றைக் காட்டிநிற்றலான் எனவரும்.

இ-ள். பளிக்குக் கல்லிற் சேர்த்திய பலவேறு வகைப் பட்ட நிறங்க ளப்பளிங்கி னொளி தோன்றாதவா றடக்கித் தம்மா லதன்கண் விளக்கப்பட்டதத்த மியல்பினையே விளக் கிநிற்குமா றுபோல அவ்விந்திரியங்கடா மான்மசொரூபம் வி ளங்காதவா றடக்கி யவ்வான்மாவின்மாட்டுத் தம்மால் விள க்கப்பட்டதத்தம் விடயமாத்திரையே விளக்கி நிற்பனவாக லான் இனி யிவ்வான்மாக்களையுணர்வுகளான் மயங்கித் தம் மை யுணரா ரெனவ மேற்கொண்ட தென்றவாறு.

"விடயங்களுள்ளும் அவ்வவ்விடய மாத்திரையே யவ்வ வ்விந்திரியங்காட்ட வல்லுமென்பார் காட்டிற்றையென வொ ன்றறி சொல்லாற் கூறினார். கூறவே யொன்றறிந்த தொன் றறியாதாகிப் பளிங்கிலிட்ட வன்னம்போ லான்மாவினியல்

பை மயக்கி விடயக்காட்சிக்கே யேதுவாகிய கருவியா னான்
மாவினியல்பு விளங்குமா றில்லையென வவற்றதியல்பைத் தெ
ரித்துக்காட்டி யான்ம சொரூபத்தை யுணர்த்துதற்குக் குரவ
னொருவனே யான் வேண்டுமென மேலையதிகரணத்தை வலியு
றுத்தவாறு.

இங்ஙன முரையாதார்க்கு இனியென்பதனானுணர்த்தப்
படு மேலையதிகரணத்தோடேனதாகி யியைபு கூடாமையறிக.

அற்றேல், குருவாகி வந்துணர்த்தியவழியுங் காட்டிற்
றையே காட்டிநிற்கு மிந்திரியங்களுள்வழித் தன்னியல்பு வி
ளங்காது, அவைநீங்கியவழிக் கேவலமாய் முடியுமாகலி னறி
யுமா றியாங்ஙன மென்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வ
லியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

பன்னிறங் காட்டும் படிகம்போ லிந்திரியந்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு. எனவரும்

தன்னைச் சார்ந்த பல வேறுவகைப்பட்ட வன்னங்களை
யே தன்மாட்டுக்காட்டு மியல்புடைய படிகம்போல ஆன்மாத்
தன்னைச்சார்ந்த விந்திரியங்களினியல்பே தன்மாட்டு விளக்கு
வதாகிய தனது சார்ந்ததன் வண்ணமாந்தன்மை முன்னர்ச்
சிந்தித் துணர்ந்துகொண்டு பின்னர்ப் பல வேறுவகைப்பட்ட
வியல்புடைய பொதுவியல்பைச் செய்யு மிந்திரியங்களைத்
தனக்கு வேருகக் கண்டவற்றானாகிய பொதுவியல்பு பொது
வியல்பேயா யொழியுமாறு தனது சிறப்பியல்பை யுணர்ந்தா
னாயினவன் பரம்பொருளாகிய சிவத்துக்கடிமையாய்ப் பரம்
பொருளினியல்பு தன்மாட்டு விளங்கச்செய்வன். அப்பொழு
து முன்விளங்கிய பொதுவியல்பு தனக்கு வேறு யொழியு
மென்க.

ஆமென்பதனைப் பின்னுங் கூட்டுக.

ஈண்டுப் பொய் மெய்யெனப்பட்டன அப்பொருளவா தல் மேலே காட்டினுங் கடைப்பிடிக்க.

ஆகவென்பது கடைக்குறைந்தது.

பொய் பொய்யாக வென்பது நிலம் வலிதாயிற்றென்ப துபோலக் கொள்க.

இதனாற் போந்தது, கருவிகள் செயற்படாது தன்னி னீங்கிய வழியே. கேவலமாம் அவ்வாறின்றி யவை தத்தந் தொழிற்பாட்டின் மடங்காது நிற்புழியவற்றதியல்பைக் குரு வாய்வந் துணர்த்த வுணர்ந்து தானவற்றை விட்டு நீங்கிய வழிச் சுத்தமாதல் கூடுமாகலா னவை காட்டிற்றைக் காட்டி நிற்றல்பற்றி யாண்டுத் தன்னியல்பு விளங்குதற் கிழுக்கில்லை யென வலியுறுத்தவாறு மென்பது,

மூன்றுமதிகரணம் முடிந்தது.

நான்காமதிகரணம்.

மூன்று மதிகரணத்தி னுயிர் பஞ்சேந்திரியங்களிற் பற் றுகையாற் றன்னை யறியமாட்டாதெனக் கருவிகளினியல்பு கூறி யதனானே குருவாய்வந் துணர்த்துத லொருதலையான் வேண்டுமென விரண்டாமதிகரணத்திற் போந்த பொருளை வலியுறுத்தியவழி அற்றேற், குருவாய்வந் துணர்த்தினும் இனையவையொழிய வறிகுவதெவ்வாறு அறியினும் விட்டுச் செல்லுமாறுதா னெவ்வாறென்னு மாசங்கையை நீக்குதற் கெழுந்தது நான்காமதிகரணம்.

இனி யிவ்வான்மாத்தன்னை யிந்திரியத்தின் வேறுவான் காணவே தமதுமுதல் சீபாதத்தை யணையு மெனவரும்,

ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை யுணராவெனப்பட் டவான்மா சித்தாய் வியாபகமாகிய தன்னியல்பைச் சடமா

யேகதேசமாகிய விந்திரியத்தின் வேறாக வுணரும் வியாபக வுணர்விற்கு இந்திரியத்தானாகக்கடவ தொன்றின்மையிற் சற் குரவ ரவ்வாறுணர்த்தவே பிறிதுகாரணம் வேண்டாது தன க்காதாரமாகிய முதல்வனது திருவடியினைத் தலைப்படுமென் பதாம்.

தமது முதலென்பது வேறு முடிபாகலின் வழாநிலையா கலறிக.

அற்றேல், அவ்வாறுணர்தல் கூடுமாயினுஞ் சேறற்குரிய முயற்சியின்றி யறிந்தமாத்திரையே செல்லுமாறியாங்ஙன மென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழு ந்தவேது.

ஊசல் கயிறற்றாற் றாய்தரையே யாந்துணையா மௌ ரும்.

இ-ள். ஒருவனேறியிருந் தாடாநின்ற வூசல் கயிறற்ற வழியினவனுக் குற்றுழி யுதவுந் தாய்போ லாண்டுத்தாரகமா வது நிலனேயன்றிப் பிறிதில்லை யென்னு மொப்புமையால் இனி யிவ்வான்மாத்தன்னை யிந்திரியத்தின் வேறுவான் காண வே தமது முதல் சிபாதத்தை யணையுமென மேற்கொண்ட தன்றவாறு.

இதனாற் போந்தது, கருவிக ளான்மாக்களா னறியப் படாது நீங்கியவழி மலந்தாரகமாம் அறியப்பட்டு நீங்கிய வழிச் சிவமேதாரகமாமாகலி னாண்டுச் செய்யக்கடவதோர் முயற்சி வேறில்லையென்பதாம்.

அற்றேற், கருவிக ணீங்கி மலந்தாரகமாய்க் கேவலப்பட்ட வுயிர் மீளவுங் கருவிகளைக் கூடிச் சகலப்படுமாறுபோலக் கருவிக ணீங்கிச் சிவந்தாரகமாய்ச் சுத்தப்பட்ட வுயிரும் மீண்டுக் கருவிகளைக் கூடும்போலு மென்னு மாசங்கையை உவமைமுகத்தா னீக்கி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டு முதாரணம்.

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்
*டலைகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிலரன் பாதத்தை யுற்று. எனவரும்.

ஒருவா னணையை யுயர்த்துக்கட்டித் தடைசெய்ய ஆண்டுத் தடையுண்டு தங்கிநின்ற நீர்போலக் கருவிகளாகிய பாசஞானந் தனது வியாபகத்தைத்தடுப்ப அதன்கண்ணே யேகதேசமாய்த் தடையுண்டுநின்ற வான்மா அவ்வணை முறிந்து தடைவிட்டொழிந்தவழி யிடையீடின்றிக் கடலிற்சென்றடங்கி அக்கீரேயாய்ப் பின்பு மீளுதல் செய்யாத வாற்றுநீர் போலக் கருவிகளாகிய பாசஞானத் தடையினின்று நீங்கியவழிச் சிவபிரானது திருவடியைப் பொருந்தி யத்திருவடி நிறைவேயாயடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது நிலைபெறுமென்க.

சிறை செய்யநின்ற செழும்புனலி னுள்ளஞ் சிறைவிட்டலைகடலிற் சென்றடங்கு மாறுபோற் சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்துலைவிலரன் பாதத்தை யுற்று மீளாதெனமாறுக.

புனலின் இன் உவமவுருபு.

தேகத்தின் மிகுதி யுணர்த்துவார் செழும்புனலென்றார்.

மலசத்திக்குக் கேடின்மையிற் கேவலப்பட்ட வுயிர் கருவிகளின் மீளுதல் கூடும் சிவசத்திக்கவ்வாறு கேடின்மையிற் சுத்தப்பட்ட வுயிரதுபோன் மீளுதற்கோ ரியைபில்லை யென்பார் உலைவிலரனென்ன விசேடித்தார்.

அடங்குமென்னும் உவமவினையைப் பொருளினும் மீளாதென்னும் பொருள்வினையை யுவமையினுங் கூட்டியுரைக்க.

அற்றேல், "மருவு பசுகரணங்கள் சிவகரணமாகத்தான் வியசாக்கிரமதனிற் றுரியாதீதந் தோன்றமுயல்" எ-ம், "மா

யை மாமாயை மாயா வருவிருவினையின் வாய்மை, யாயவா
ருயிரின் மேவு மருளொளியிலொளியாய் நிற்கும்" எ-ம், இவ்
வாறோதுதலின் ஆண்டுப்பசுகரணம்போலப் பாசஞானமு
ஞ் சிவஞானமேயா மென்பது பெறப்படுதலின், ஆற்றலை
கடற்கே பாய்ந்தநீ ரந்நீராய்மாறி யவ்வாற்றான் மறித்தாற்
போல உலகிலரன் பாதத்தையுற்ற வுயிர் புலன்வழிமீளினும்
அதனாற்போந்த விழுக்கென்னை யென்னு மாசங்கையை நீக்கி
தனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

> எவ்வுருவுந் தானென்னி லெய்துவா ரில்லைதா
> னிவ்வுருவின் வேறே லிறையல்ல—னெவ்வுருவுங்
> கண்போ லவயவங்கள் காணவக் கண்ணில்லார்
> கண்பேறே காணக் கழல். எனவரும்.

இனியீண்டுக் கூறுவது பதிப்பொருட்கே யன்றிப் பசு
பாசங்களுக் கொருதன்மை யில்லை யெனக்கொண் டிவ்வாறுக
ற் பசுஞானம் பாசஞானங்களுஞ் சிவஞானமேயா மென்ப
தோ, அன்றிப் பசுபாசங்களுக்குப் பதிப்பொருளை யன்றித்
தமக்கெனவமைவுள வெனக்கொண் டிவ்வாறாயினும் உப்ப
ளத் தடுத்த புற்பலாலங்க ளவ்வுப்பே யாமாறுபோலப் பசு
ஞானம் பாசஞானங்களிற் சிவஞானஞ் சங்கிரமமாய்ப் பற்று
தலா னவையுஞ் சிவஞானமே யாமென்ப தோசொல்வாயாக.
பசுபாசங்களினுளவாகிய தன்மைகளெல்லாம் பதிப்பொரு
ளின் றன்மையே பிறிதில்லை யென்னிற், பசுவுக்கொரு தன்
மையில்வழிப் பசுக்கள் பாசத்தைவிட்டுப் பதியினையடையு
மாறில்லையாய்ப் "பாசத்தைப் பசுக்கள்விட்டுப் பதியினை
யடைய முத்தி" யென்னும் வேதாகம வசனங்களோடு முர
ணும், இனிப் பதிப்பொருளை யின்றி யமையுந்தன்மை யவற்
றிற்கு வேறுளவெனக் கொள்ளி னப்பொழுது பசுபாசங்க
ளின் றன்மைகட்குச் சிவனு லாகப்படுவ தொன்றின்மையிற்
சிவனுக்கிறைமை யின்றாய் முடியுமாகலி னவ்விரண்டுங்கூடா

வேறென்னையோ விடுக்குமா றெனின், ஆன்மாவை யின்றிய மையாவா யான்மாவா லதிட்டிக்கப்படு மைவகையுறுப்புக்களுள்ளும் மெய் வாய் மூக்குச் செவி யென்னு நான்குறுப்புக்களூர் தம்மாட்டுவந்தவிடயங்களை யியைந்தறியுந் தன்மையன வன்றிக் கண்ணுறுப்புப் போலச் சேய்மைக்கண்ணுளதாகிய விடயத்தையும் வியாபித்தறியுந் தன்மையுடையன வல்ல. கண்ணுறுப் பவ்வாறின்றிச் சேய்மைக்கண்ணு மொளியாற் சென்றிசைந்தறியுந் தன்மைத்து. அற்றேல், ஒளிமழுங்கிய கண்ணுக்கு ஏனையுறுப்புக்களோ டொப்பத் தன்கண்வந்த விடயத்தை மாத்திரமே காண்ப தன்றிச்சேய்மைக்கண்ணும் வியாபித்துக் காணுமாறில்லையாலெனின்? மாசமிகுதியாற் கண்ணொளி யிழந்தார் கண்பெற்றவிடத் தவ்வியல்பிற்றாகிய கண்ணினது வெற்றிப்பாட்டைக் காண்பாயாக வென்க.

எனவே யதுபோல முதல்வனை யின்றியமையாவாய் முதல்வனு லதிட்டிக்கப்படும் பசுபாசஞானங்களுட் பாசஞான மேகதேசமாய் விளங்கு மியல்பிற்றன்றிப் பசுஞானம் போல வியாபகமாய் விளங்குமியல்பிற்றன்று. பசுஞான மவ்வாறின்றி வியாபகமாய் விளங்கு மியல்பிற்று. அற்றேற், பசுஞானம் பாசஞானம்போ லேகதேசமாயன்றி விளங்கக் கண்டிலமாலெனிற்? பசுத்துவத்தா னவ்வான்ம ஞானத்தை யிழந்தார் பசுத்துவ நீங்கி ஆன்மஞானத்தைப் பெற்றவழி வியாபகமாய் நிகழும் தன்து வெற்றிப்பாட்டை யறிவாயாகவெ னப் பொருளினு முரைத்துக்கொள்ளப்படும்.

இஃதொட்டென்னு மலங்காரம்.

இஃதென் சொல்லியவாறோவெனின்? ஆன்மாப் பசுத்துவ நீங்கிச் சிவத்துவம் பெற்றவழிப் பசுகரணமுஞ் சிவகரண மாயவாற்று னவ்வழிப் பசுஞானத்தோ டொப்பப் பாசஞானமு மூப்பனத்தடுத்த பொருள்போலச் சிவஞானமே யாமென்பது சிவாகம நூற்றுணிபாகலினவ்வைம்பொறியின்

மீளினு மிழுக்கின்மையின் மீளாதென மேலைவெண்பாவிற்
கூறியதேற்றுக் கென்னுஞ் சங்கிராந்தவாத சைவரை மறு
த்து முதல்வனே பசு பாசமென்றபேதங் கூறுதலும், முத
ல்வன் வேறு பசுபாசம் வேறெனப் பேதங் கூறுதலு மேலா
மையின் முதல்வனுக்கும் பசுபாசங்கட்குஞ் சரீர சரீரிபாவத்
தாற் பேதங்கூறுதல் வேண்டும். வேண்டவே, சரீர சரீரிபா
வத்தின் ஆன்மா வைம்பொறிகளோ டபேதமாய் நிற்பினு
மவை தத்தந் தன்மையிற் றிரியாவாய் விடயங்களினின்றியை
ந்தறிதலுஞ் சென்றியைந் தறிதலுமாகிய விருவே றியல்பு
டைமையாகிய பேதங் கண்ணொளி மயங்கியவழிக் காணப்
படாததாயினும் ஒளிபெற்றவழிக் காணப்படுதலி னவ்வாறே
பசுஞான பாசஞானங்களிற் சிவஞான மபேதமாய் விளங்கி
னும் அவைதத்த மியல்பிற் றிரியாவாய்ப் பாசஞானத்துக்
கேகதேச விளக்கமும், பசுஞானத்திற்கு வியாபகவிளக்கமு
மாகிய பேதமுடைமை பசுத்துவ நீங்காத பெத்தநிலைக்க
ணறியப்படாதாயினும் பசுத்துவ நீங்கிய முத்திநிலைக்க ணறி
யப்படுமாகலினவ்வியல்பிற்றாகிய வான்மஞான மவ்வியல்பின
வாகிய வையுணர்வுகளை மீளப்பற்றுமா றில்லையென மேலை
வெண்பாவின் பொருளை வலியுறுத்த வாறுமென்க.

இவ்வாறுரையாதார்க்குச் சொற்கிடக்கைமுறை யேலா
மையும், மேலைவெண்பாவினோ டியைபின்மையு முணர்க.

“எங்குந்தானென்னினு மெய்தவேண்டா” வென்னும்
வழிநூலுமிவ்வாறே பொருள்படுமா றுணர்ந்துரைத்துக்கொ
ள்க.

ஏனை நான்கிந்திரியமும் விடயங்களினின் றுஞ்சென்றி
யைந்தன்றி யறியமாட்டாமையும், கண்ணிந்திரிய மவ்வா
றின்றிச் சேய்மைக்கண்ணுஞ் சென்றியைந்தறியும் வேற்றுப்
பாடுந் தத்துவங்களி னியல்புரைப்புழிக்காட்டினாம் கடைப்
பிடித்துக்கொள்க.

உருவென்றவற்றுள் முன்னைய விரண்டும் பொருட்டன்மையை யுணர்த்தின பின்னைய துறுப்பின்மேற்று.

உறுப்பாதாரமாக நிற்றலானும், உறுப்புப்போறலானும் இந்திரியங்களை யுறுப்பெனவும், கழலணிதற் கேறுவாகிய வெற்றிப்பாட்டைக் கழலெனவு முபசரித்தார்.

கழல் காலணி மணிவடம்.

சுட்டு சிறப்பின்கண் வந்தது.

காண் முன்னிலை யேவல்.

பேறே யென்னு மேகாரம் ஏழனுருபின் பொருளுணர நின்றது.

ஒற்றிரட்டியாமை இலேசாற்கொள்க.

அற்றேல், "நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள யா னைம் புலன்கள் கொண்டு, விடுந்தகை யேனை விடுதி கண்டாய்" எனப் பிறண்டு மிவ்வாறேருதுபவாகலின் ஒழிவிலரன் பாத த்தை யுற்றோர் மீளுதலுமுண்மையின் மீளாதென்பதமையா தா லென்னு மாசங்கையை நீக்கி யதனை வலியுறுத்துதற் கெ டுத்துக்காட்டு முதாரணம்.

ஐம்பொறியி னல்லையெனு மந்த தரசிவனை
யைம்பொறியை விட்டங் கணைசகல—னைம்பொறியி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமல கன்மம்வரி
னீங்கானை நீங்கு நினைந்து. எனவரும்.

நீ நின்னுலதிட்டிக்கப்பட்டவழியும் ஏகதேசவறிவைச் செய்வனவாகிய வைம்பொறிகள்போலல்லை, யவற்றின் மேம் பட்டு வியாபகமாயறியும் வெற்றிப்பாடுடையையென மேலை வெண்பாவா லுணர்த்தப்படுந் தீவிரதரத்திற் றீவிரதரமான சத்திநிபாதமுடையோனே! யவ்வியல்பினவாகியவைம்பொறி களைக் கைவிட்டே சிவன்றிருவடியையெய்தி முன்னவ்வைம் பொறியினின் றுங்கதுவா யுறைத்து நிற்பாயாக; அவ்வாறனை

ந்துநின்றுயாயிற்சகலனை யைம்பொறிவிட்டுநீங்காதவாறுபோல அச்சிவனுன்னை விட்டு நீங்கான் கல்லெறிவுழிநீங்கி யல்லுழிப் பரக்கும் நீரின்கட் பாசிபோல நீயவ்வாறுறைக்குநிற்புழி நீங்குவனவாகிய மலகன்மமாயைகள் பயிற்சிவயத்தானேயோவழி யங்ஙிலை நிகழ்ந்தமைபற்றிவந்துகூடுமாயின் நின்னிலை குலைந்தவழியும் நின்னைவிட்டு நீங்காத வம்முதல்வனையுணருமாறு முன்னர்க் கூறப்படு முபாயத்தினின்று சாதித்து அவற்றை நீக்கிக்கொள்கவென்க.

ஐம்பொறியினல்லையெனு மந்தரமென மேலெவ்வ்பாவிற் போந்த பொருளை யநுவதித்துவிட்டன்றிச்சேறல் கூடாதென்பார் சிவனை யைம்பொறியைவிட்டங்கனை யென்றும், சிவனை யைம்பொறியின் விட்டவழி மீளாமையை வலியுறுத்துவார் சகலனும் பொறியினீங்கானென்றும், ஒரோவழி மீட்சியுளதாயி னதற்குக் காரணமிஃதென உவமைமுகத்தா னுணர்த்துவார் நீர்ப்பாசிபோலென்றும், ஐம்பொறியின் மீளுமாயினவற்றிற்கு மூலமாகிய மலகன்மமாயைகளும் அதுபற்றாகவந்து தலைப்படுமென்பார் மலகன்மம் வரினென்றும், அம்மீட்சியை நீக்குதற்குபாயங் கூறுவார் நீங்கானை நினைந்துநீங்கென்றுங் கூறினார்.

இன் இரண்டு முவமவுருபுகள்.

அந்தமென்றது நாலாஞ் சத்திநிபாதத்தை.

அதுவு நால்வகைப்படுமாகலி னவற்றுள்ளு மேம்பட்ட சத்திநிபாதமுடையாயென்பார் அந்ததர என்றார்.

சகலனை என்னு மிரண்டனுருபு விகாரத்தாற்றொக்கது.

மலகன்ம மெனவே யினம்பற்றி மாயையுங்கொள்ளப்படும்.

நீங்கானை நீங்கு நினைந்தெனவே வருகின்ற பாதத்திற்குத் தோற்றுவாய் செய்ததுமாயிற்று. "மங்கலமென்ப மனைமாட்சிமற்றத, னன்கலனன் மக்கட்பேறு" என்புழிப்போல.

இம்மூன்றுபாட்டும் முறையே திருவடிஞானத்தைப் பெற்ற வுயிர்மீளப் பாசஞானத்திற் சேறலில்லையெனவும், பாசஞானத்தின் மீளுதலிழுக்கெனவும், ஒரோவழிப் பயிற்சி வயத்தான் மீளுமாயின் மீளாது செய்துகொள்ளற்பாற்றெனவுங் கூறித், தாய் தரையே யாமென்னும் பிரிநிலையேகாரப் பொருளை வலியுறுத்தியொரு பொருண்மேல் வந்தவாறுகாண்க.

சிவஞானபோதத்திற்குத் திருவாவடுதுறைச் சிவஞான யோகி செய்த (சிற்றுரை) பாடிய மிரண்டாவ தூண்மையதிகாரத்துச் சாதனவியலி லிரண்டாம் பாதமாகிய விவ்வெட்டாஞ் சூத்திரம் முடிந்தது.

நான்காம் சாதனவியல் முடிந்தது.

ஒன்பதாஞ்சூத்திரம்.

—:o:—

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

எ-து. சூத்திரம் எ-னின். ஆன்மசுத்திபண்ணுமாறுணர்த்துதனுதலிற்று. மேற்பொதுவதிகாரத்துட் கூறிப்போந்த முப்பொருள்களுள் விள்ளற்பாலதனை விண்டதனுன்வருந் துன்பத்தி னீங்குதலுங் கொள்ளற்பாலதனைக் கொண்டதனுன் வரும்பேரின்பத்தைப் பெறுதலுமாகிய வீடுபேறடைதற்குரிய வியல்பு தனக்குண்டென வேழாஞ் சூத்திரத்தாற் பெறுவிக்கப்பட்ட வான்மாவுக் கவ்வீடு பேற்றைப் பயப்பித்தற்கட் சிறந்த சாதகமாவது விள்ளற்பாலதாகிய பகைப்பொருளிது கொள்ளற்பாலதாகிய நட்புப் பொருளிது வெனக்

துருமுகத்தான் விவேகித் தறியு ஞானமொன்றே யாமெனவும், அவ்வறிவு பாசப் பற்றற்று லன்றிநிகழாமையிற் பாசஞானத்தா லெய்தற்பாலதன் றெனவும் மேலைச் சூத்திரத்தா னுணர்த்தியவழி அற்றேற், பாசஞான மேகதேச வுணர்வாகலினதனால் வியாபகப் பொருளை யறியும்விவேக ஞான நிகழாதாயினும், பசுஞானம் வியாபக வுணர்வாகலினதுவே யதற்கமையு மென்னு மாசங்கையை நீக்குவதாகிய வான்மசுத்தி செய்யுமா றுணர்த்துமுகத்தானே யச்சாதகத்தை நிகழ்விப்பதிது வென்பதூஉம், அதனைப்பெறுமாறு, மதுநிலை பெறுமாறுமாகிய சாதிக்கு முபாயம் வகுத்துணர்த்துதல் சாதகவோத்தின் மூன்றும் பாதமாகிய விவ்வொன்பதாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

மேலைச்சூத்திரத் திறுதியதிகரணத்தாற் பாசஞானப் பற்றற்றாலன்றியறியக் கூடாதென்றவழி அற்றேற், பசுஞானத்தாலறிதல் கூடும்போலு மென்னு மாசங்கையை மீண்டு நீக்குதலின், அவ்வாசங்கை பற்றிய வினையபானே யதிகரணவியைபும், மேலான்மதரிசனமாமாறுணர்த்தி, மீண்டான்மசுத்தியாமா றுணர்த்துதல் முறைமையாகலின் அம்முறைமை பற்றிய வியைபானே பாதவியைபும், மேற்சாதகமாவ திது வென்றுணர்த்தியவழி யதனைச் சாதிக்குமா றியாங்ஙனமென்றவாய் நிற்றலின் அவ்வவாய் நிலை பற்றிய வியைபானேயோத்தியைபும பெறப்பட்டன.

அற்றேல், பசுத்துவமுடைய ருபவழியே யான்மாப் பசவென நிற்பதாகலிற் பாசப் பற்றறுதிகூறலே, பசுப்பற்றறுதியும் பெறப்படுதலி னாசங்கை நிகழாதாலெனி னவ்வியல்பு முன்னர்க் கூறப்படுதலானும்கி நிகழுமென்ப துணர்ந்து கொள்க.

அஃதன்னமாக, சிவப்பிரகாசத்தில் தான் பணியை நீத்ததே யான்மசுத்திஎன் றோதுதலின், அத்தன்மைத்

தாகிய வான்மசுத்தி வருகின்ற சூத்திரத்தின் இறைபணி நிற்க வென்பதனுற் பெறப்படுவதெனவே கொள்ளற்பால தாகலானும், அழுக்கு நீங்குதலே யறுவைக்குச் சுத்தியாமா றுபோலப் பாசக்ஷயம் பண்ணுதலே யான்மாவுக்குச் சுத்தியா மாகலானு மதனை யான்ம சுத்தி பண்ணுமா றுணர்த்திற் றெனல் வேண்டும்.

அவ்வாறுரையாது பதியை நாடியெனவும், தன்னிழ லாம் பதியெனவும் சிவதரிசனம் பண்ணுமாறே யுணர்த்து தற்கெழுந்த விச்சூத்திரத்தை யான்ம சுத்திபண்ணுமாறுண ர்த்திற்றெனல் மலைவாம் பிறவெனின்? ஆகாது; சிவதரிசனம் பண்ணுமா றுணர்த்திற்றென்பது சூத்திரத்தானினிதுவிளங் குதலி னதனை யெடுத்துரையாது சிவதரிசனம் நிகழ்வது ஆன்ம சுத்தியென்னு முடனிகழ்ச்சி யுணர்த்துதற்குந் தம முள் வேறுபாடு சிறுபான்மையுடையனவாகிய விவ்விருசூத் திரமும் ஒருபொருண் மேலனவென்பதுணர்ந்து கோடற்கும் அவ்வா றுரைத்தாராகலின்.

அஃதங்ஙனமாக; ஆன்மாத்தன்னை யிந்திரியத்தின் வேறுவான் காணவே தமதுமுதல் சிபாதத்தை யணையுமென்ன றமையிற் றமதுமுதல் சிபாதத்தை யணைதற் கான்மதரி னமே யமையு மான்மசுத்தி வேண்டுவ தென்னைகொனின்? அஃதொக்கும். திரியக்காண்டலும், இரட்டுறக் காண்டலும், தெளியக்காண்டலு மெனக்காட்சி மூவகைப்படும்; இம்மூன் றும் அதிபரிபக்குவ முடையார்க்குக் கேட்ட மாத்திரையே யொருங்கு நிகழும் ஏனையோர்க்குச் சோபான முறையாற் கேட்டல் சிந்தித்த றெளிதலென்னு மிம்மூன்று முறையே நிகழ்வனவாகலின், ஆன்ம தரிசனத்தைப் பயக்குஞ் சிவ ரூபத்தின்பின் ஆன்மசுத்தியைப் பயக்குஞ் சிவதரிசன மொருதலையான் வேண்டப்படுமென் றுணர்ந்துகொள்க. இத னானே யுருவதரிசன சுத்திகட்குத் தம்முள் வேறுபாடுஞ்

காண்க. "நேசமுடன் றிருவடிக்கீ ழிங்காதே தூங்கு நிலையுடையோர் நின்றிடுவர் நிலைபதுவே யாகி, யாசையொடு மங்கு நீங்கு மாகியல மருவோ ரரும்பாச மறுக்கும்வகை யருளின் வழி யுரைப்பாம்" என வழிநூலாசிரியர் கூறியது மிக்கருத்தேபற்றி யென்க.

இம்மூவகைக் காட்சியுமே யுருவ தரிசன சுத்தியெனப் படுமென்பது.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு, பசுஞானத்தானும் பாசஞானத்தானு மறியப்படாத முதல்வனை யம்முதல்வனது ஞானக்கண்ணானே தன்னறிவின்கண்ணே யாராய்ந்தறிக. அப்பதி ஞானத்தைப் பெறுமாறியாங்ஙன மெனின்? நிலமுதலாக மீறாகிய பாசக்கூட்டம் நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் ணதிவேகமுடைய பேய்த்தேரி னியல்பிற்றாய்க்கழிவ தென்றறிந்து நீங்கவே, யப்பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அங்ஙனம் விளங்கிய ஞானத்தான் நேயத்தைக் கண்ட காட்சி சலியாமைப் பொருட்டு அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்து விதிப்படியறிந்து கணிக்கப்படு மென்றவாறு.

நாடியென்பது "நன்றுமன்னிது நாடாய்கூறி" யென்புழிப்போல இகரவிற்று முன்னிலையேவல்.

நாடியெண்ணு மெனக்கூட்டி வினையெச்ச முடிபாகவைத்துரைப்பினு மமையும்,

சிந்தையின்கண் ணென்னுமேழ னுருபு நோக்கது,
உரா முதனிலைத் தொழிற்பெயர்,
கண்ணுருபு விரித்துரைக்க.

பறவாக்குளவி, பாயாவேங்கை யென்றாற்போல வுருவுராப்படாத வேகதலையுடைய தேரெனச் செயப்படு

பொருட்கண் வந்த பெயரெச்ச மறையாக வைத்துரைப்பினு மமையும்.

இப்பொருட்குத் திருத்தார் நன்றென்றேன் றியேனெ ன்புழித் தியேனென்பது போல உராவென்பது குறுக்கல் விகாரம்.

பின்வந்த பதி, யாகுபெயர்.

ஞானக் கண்ணினிற் சிந்தை நாடியெனவே யேனைஞான ங்களானறிய வாராமை பெறப்படுமாயினு, மினிது விளங்கு தற்பொருட் டதனை யறுவாதமுகத்தா னோதினார்.

உணராப்பதியையென்பதனை வேறுதொடராக வைத் துப் பொருள்பட வோதுவாருமுள ரஃதாசிரியர் கருத்தாயி னதனை வேறோரதிகரணமாக வைத்துரைப்ப ரவ்வா றுரை யாமையாலும், ஞானக்கண்ணினி னாடியெனவே யேனைஞான ங்களா னாடப்படாமைதானே பெறப்படுதலி னதனை விதி முகத்தா னோதவேண்டாமையாலும், வடமொழிச் சூத்திரத் திற்கும், "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்புரிய பரம்பரனை" யெனும் வழிநூற்கு மேலாமையாலும், அதுபா டமன்மையறிக.

இதனுளுனக்கண் பாசமுணராப்பதியை ஞானக்கண்ணி னிற் சிந்தைநாடி யென்பதோ ரதிகரணம், உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத் தண்ணிழலாம் பதியென்ப தோரதிகரணம், விதியெண்ணு மஞ்செழுத்தே யென்பதோ ரதிகரணம். ஆகமூன்றதிகரணத்த திச்சூத்திர மென்றுணர்க

முதலதிகரணம்.

அவற்றுண் முதலதிகரணமேற்பாசஞானத்தா லறியப்ப டாதென மேற்கூறிப்போந்த முதல்வனைப் பசுஞானத்தா னறிதல் கூடுமென்னுஞ் சிவசமவாத சைவரை மறுத்தற்கெ ழுந்தது.

ஈண் டம்முதலே ஞானக்கண்ணாலே காண்க எனவரும்.

அம்முதலே யென்றது ஊனக்கண் பாசங்கள் ளுணரப் படாதெனப்பட்ட முதலே. ஊனக்கண் பாசங்களை யெடுத்தோதி விலக்கினமையின் ஈண்டு ஞானக்கண்ணென்றது சிவ ஞானத்தையெனக்கொள்க.

ஏனை ஞானங்களிற் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக் கண் வந்தது.

அற்றேற், பாசஞானம் பசுஞானங்கள் ளறியப்படாத பரம்பொருள் சிவஞானத்தா னறியப்படு மென்றற்குப் பிரமாணமென்னை யென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்தவேது.

அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான் என வரும்.

இ-ள். சத்ததிகாரத்திற் காட்டினும்.

வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றல் ஆண்டு பெறப்பட்டமையி னதனை ஈண்டேதுவாக வைத்து மேற்கோளைச் சாதித்தார். வாக்கு மனாதீதமாயுங் கோசரமாதல் பிறிதொன்றாற் பெறப்படாமையிற் சிவஞானத்தானே யறியப்படு மென்பது தானே போதருமென அருத்தாபத்தி யளவை காட்டியவாறு.

அற்றேல், வாக்குமனாதீதப்பொருள் கோசரமாதல் பிறிதொன்றாற் பெறப்படாதென்ற தென்னை? பசுத்துவ முள்வழிச் செயற்கையா னேகதேசத்தின் விளங்கும் பசுஞானம் அப்பசுத்துவ நீங்கியவழிச் சிவஞானத்தோடொப்ப எங்கும் வியாபகமாய் விளங்குமென்பது சிவாகம நூற்றுணிபாகலின் அவ்வழிச் சுட்டிறந்தறிவதாகிய பசுஞானத்திற்குக் கோசரமாதல் பெறப்படுமா லென்னு மாசங்கையை நீக்கியேதுவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

நாடியோ வென்போ நரம்புச்சீக் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை—நாடியரன்
றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணு
ரேன்று மெனவறிவா ரின்று. எனவரும்.

நாடி முதலியவற்றுள் யான்யார் என்னைத்தேடியு மறி கின்றிலே னென்றிவ்வாறு தேர்கின்ற தேர்ச்சிக் கூறுபாட்டை யிங்ஙன மொன்றிற் றெளிவு பிறவாது மயங்கிநின்று சூழுஞ் சூழ்ச்சிக் குறைபாட்டா னமக்கெய்தியதென்றுராய்ந்துபார்த்து அங்ஙனம் பார்த்தவழி "உன்னறிவை நீயேயுணர்வையேபாமாகில், நீநெடுநாட்பாசத்திசையாயே•புன்னறிவு, நீங்கா வறிவாகி நீரு மிரதமும்போ, லாங்கா ணரனுரு" மென்பவாகலி னத்தன்மைத்தாகிய சிவஞானத்தைப் பெருமையா லெய்திய தெனக்குருவருளா லுணரப்படுஞ் சிவஞானத்தானே சிவனையறிந்தவ ரச்சிவனில் வியாப்பியமாய் நின்றங்ஙனமறியும் பொருளாகிய தம்மையு மறிவர். அப்படியறியாதார் மற்றெவ்வியல்பினரென்று தம்மையறியவல்லுவாிம் முத்திக் காலத்தென்க.

நாடி யென்றது இடை பிங்கலை சுழுமுனை முதலியநாடியை.

நரம்பெனவே யடங்குமென்னுந் தலைமைபற்றி வேறு கூறினர்.

சீ புண்ணீர்.

கோழை ஐ.

ஓகாரம் தெரிநிலை.

நாடியோவென்போ நரம்புச்சீக்கோழையோ வென்றதுபலக்கணமாகலின் ஏனைத்தத்துவ தாத்துவிகங்களையு மவ்வாறு தெரிதல் கொள்ளப்படும்.

என்றென்பது சொல்லெச்சம்.

ஒற்றுமைபற்றி யரனது ஞானத்தை யரனென் றுபசரித்தார்.

உம்மை எதிரதுதழீஇயது.
எவனென்னும் வினாவினைக் குறிப்புப்பெய ரீண்டாகு
பெயராய் என்னெனமரீஇயிற்று.

ஆம் அசை.

இது தம்மையறியுமாறு கூறுமுகத்தானே தலைவனை யறிந்த பின்னறியப்படுவதாகிய தம்மறிவுகொண்டு தலைவனை யறியுமாறியாங்ஙனமெனச் சிவசமவாத சைவரை மறுத்துச் சிவஞானத்தானன்றி யறியப்படாமையை வலியுறுத்தவாறு.

அற்றேல், நாடியெலும்பு நரம்பு முதலிய தத்துவதாத்துவிகங்களை யறிதற்குச் சிவஞானத்தை யின்றியமையும் ஆன்மா சிவனையறிதற்கண்ணு மவ்வாறமையு மென்றற் கிழுக்கென்னை? யெதிர்முகத்தொருபொருளைக்கண்டகண்ணே மறித்து நோக்கியவழிப் பிற்பக்கத்துப்பொருளையுங் காண்டற்கமையுமா லென்னு மாசங்கையை நீக்கி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணு—காட்டிய
வுள்ளந் தனைக்காணு வுள்ளத்தின் கண்ணாய
கள்வன்று னுள்ளத்திற் காண். எனவரும்.

எதிர்முகத்துப் பொருள்போல வெரிந் புறத்துப் பொருளும் புறத்துத் தோன்றும் விடயமே யாகலிற் கண்ணவ்விண்டினையு மொப்பக்காண்டலமையும் காண்கின்ற தன்னைக் காணமாட்டாது தனக்குக் காட்டா யுண்ணின்று செலுத்து முயிரையுங் காணமாட்டாது; அதுபோலத்தனக்கு வேறாகிய நாடியெலும்பு முதலிய தத்துவதாத்து விகங்களைத் தற்போதத்தாலறிகின்றவுயிருந் தன்னையறியமாட்டாது தன்னைச் செலுத்து முதல்வனையு மறியமாட்டாதுதானே. அங்ஙனமாயினுங் கண்போலுயிர் சடமன்மையிற் கண்ணிடத் துயிர்

நிற்குமாறுபோலன்றி யுயிர்க்குத்தன்றிவாகி யுடனின்ற கள்வனம் முதல்வனுக்கல்லா னவனை யுன்னறிவின்கட் காண்பாயாக வென்க.

காட்டிய வென்பது தன்வினைப் பொருள்பட நின்றது; "வாணிகமொன்றுந் தேற்றாய்" "தேற்றாவொழுக்கம்" "தேற்றாதார் மாட்டு" என்புழிப்போல.

ஏகாரம் அசைநிலை.

காணு தென்னுந் துவ்விறு தொக்குநின்றது; "முறை காக்குமுட்டாச் செயி" னென்புழிப்போல.

ஒருமைப் பன்மை மயக்கமென்பாருமுளர்.

கண்ணாய அறிவாய என்க.

உடனின்றும் பசுஞானம் பாசஞானங்களா னறியப்படாமை பற்றிக்கள்வ னென்றார். "கண்ணுதிக் கரணங்கள் காணுமணிப்ப" னென்றார் வழிநூலாசிரியரும்.

தான் அம்முதல்வன்.

காட்டிய வுள்ளத்தைக் கண்காணு வெனவுவமைக் கேற்றியவாறு பொருளினும் வருவித்துரைத்துக் கொள்க.

இது எடுத்துக்காட்டுவமை.

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

மேலையதிகரணத்தினிந்திரியத்தின் வேறுவான் காணப்படுவதன்றறிவின்கண்ணே சிவஞானத்தாற் சிவனைக்காண்டலென்றே சிவப்பேற்றிற்குச் சிறந்த சாதனமென்றுணர்த்தியவழி, அற்றேற், சிவஞானத்திற் காணுமாறியாங்ஙனமெனும் ஐயவாய்நிலையை நீக்குதற்பொருட்டு மேலதற்குப் புடையாக வெழுந்தது இரண்டாமதிகரணம்.

இனியசத்தாயுள்ள வன்னபேதங்களை யசத்தென்று காணவுளதாய் நிற்பது ஞானசொரூபமென் றுணர்தற்பாற்று எனவரும்,

இ-ள், படிக சொரூபத்தைக்காட்டாது மறைத்துநின்ற வேற்று நிறங்களை யிவை நிலையுதலிலவாகிய வேற்றுநிறங்களெனக்கண்டு நீத்தவழி நிலையுதலுடைத்தாய் விளங்கிநிற்குமப்படிக சொரூபம்போல நிலையுதலுடைய ஞானத்தினுடைய சொரூபத்தைக்காட்டாது மறைத்துநிற்கும் நிலையுதலில வாயுள்ள பிரவஞ்சத்தை யிவை நிலையுதலுடையன வல்லவென்று விவேகித்தறியின் அவ்வழி நிராலம்பமாய் விளங்கித்தோன்றுவது அச்சிவஞானத்தினுடைய சொரூபமென்றறியும்பான்மைத்தென்றவாறு,

வன்னபேதங்கள் சித்திரமெனப்பொருள் கொண்டவழி நிலையுதலுடைய பித்தியின் சொரூபத்தைக் காட்டாது மறைத்து நிலையுதலிலவாயுள்ள சித்திரங்களை இவை நிலையுதலுடைய வல்லவென்று கண்டவழி யொருதன்மையாய் விளங்கித்தோன்றும் பித்திபோல வென்றுரைத்துக்கொள்க,

ஆசிரியர் சொற்பல்காமைப்பொருட் டிவ்வா றேகதேச வுருவகமாகவைத் துடம்பொடு புணர்த்தோதிய வேதுவை யேனையதிகரணங்களுட்போல மேற்கோளின் வேறுவைத்துக்காட்டுமாறு,

இனி யசத்தாயுள்ள பிரவஞ்சத்தை யசத்தென்று காணவுளதாய் நிற்பது ஞானசொரூபமென்றது வேற்றியல்பாகிய வன்னபேதங்களை வேற்றியல்பென்று கண்டு கழிப்பினுளதாய் நிற்பது படிக சொரூபமாந் துணையான் எனவரும்,

வன்னபேதஞ் சித்திரபேதமெனப் பொருள்கொள்ளின் வேற்றியல்பாகிய சித்திரங்களை வேற்றியல்பென்று கண்டு கழிப்பினுளதாய்நிற்பது பித்தியின் சொரூபமாந்துணையான் எனவரும்,

ஈண்டுப் பாசமென்றது காரியப்பிரவஞ்சத்தை யென்பார் அசத்தாயுள்ளவென்றும், ஏதுப்பொருளை யுடம்பொடு புணர்த்துக்காட்டுவார் பிரவஞ்சத்தையென்னாது வன்னபேதங்களை யென்றும், வியாபகப்பொருளுக்கு ஒருவுதலாவது காட்சி விசேடமே யாமென்பார் அசத்தென்றொழியுவென்னாது அசத்தென்று காணவென்றும், தண்ணிழலாய் நிற்றல் பதி தன்றென்பார் உளதாய் நிற்பதென்றும், ஈண்டுப்பதியென்றது பதிஞானத்தையென்பார் ஞானசொரூபமென்றும், இஃ தனுபவத்தினன்றிச் சொல்லளவையி னறியவாராதென்பார் உணர்தற்பாற்றென்று முரைத்தார்.

அசத்தினியல் பிதுவென்பது அசத்ததிகாரத்திற் காட்டப்பட்டது கடைப்பிடிக்க.

அசத்தெனப்பட்ட காரியரூபப் பிரவஞ்சத்தை அசத்தென்று காண்டலாவது ஆசிரிய னறிவுறுத்த வுபதேசப்பொருளினுறைத்துநின்று அட்டகுண மெட்டுச்சித்திக் கோகனதன்முதல்வாழ்வு குலவுபதமெல்லாம் வெறுத்து நெறியறுவகையு மேலொடுகீழடங்கக் காரணரூபத்தினில்லாமையால் வெறும் பொய்யென நினைந்திருத்தல்.

அற்றேல், அதனை யவ்வாறுகண்டவழித் தோன்றுவது இன்னதென்றறியவாராத சூனியமேயன்றிப் பிறிதில்லையாலோ வென்னு மாசங்கையை நீக்கியதனை வலியுறுத்துதற்கெடுத்துக்காட்டு முதாரணம்,

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லானா வறிவா யளவிறந்து தோன்றுனே
வானோ முதல்களையின் வந்து. எனவரும்.

அசத்தெனப்பட்ட மூவகைப் பிரவஞ்சத்துள் அசுத்தப் பிரவஞ்சமெல்லாம் முக்குணமயமாகலிற். சத்துவகுண

விருத்தியாகிய பிரகாசரூபம், சாந்தரூபம், சுகரூபமாய்த் தான், இராசதகுணவிருத்தியாகிய பிரவிருத்திரூபம், கோரரூபம், துக்கரூபமாய்த்தான், தமோகுணவிருத்தியாகிய மணரூபம் மூடரூபம், மோகரூபமாய்த்தானளவிட்டறியப்படும். முதல்வனிம்முக்குணங் கடந்தவனாகலா னிவற்றுளொன்றாக வறியப்படா னென்பார் நிர்க்குணனென்றும், மிச்சிரப்பிரவஞ்சம், முக்குணங்களைக்கடந்து நிர்க்குணமாயுள்ள தொன்றாயினும் மலகன்மங்களோடு விரவிநிற்றலின் மலகாரியமாகிய மோகமுதலிய வெழுவகையுருவமாகத்தான், கன்மகாரிய சுகரூபந் துக்கரூபமாகத்தா னளவிட்டறியப்படும். முதல்வன் மலகன்மங்களையும் கடந்துநிற்றலான் அவற்றுள்ளொன்றோ ரியல்புபற்றி யறியப்படானென்பார் நின்மலனென்றும், சுத்தப்பிரவஞ்சம் மலகன்மங்களையுங் கடந்து நின்மலமாயுள்ள தொன்றாயினுங் காரியப்பட்டநித்தமாமியல் புடைமையிற் சாதிசயானந்தரூபமா யளவிட்டறியப்படும் முதல்வன் காரியப்பாட்டின துபசாரத்தையுங் கடந்தவனாகலா னவ்வாறு மறியப்படானென்பார் நித்தியானந்தனென்றும், ஆன்மாவு மிம்மூவகைப் பிரவஞ்சத்துட்பட்டுச் சகுணனுஞ் சமலனும் சாதிசயானந்தனும் பொதுவியல்புபற்றியறியப்படும். முதல்வ னவ்வாறு மறியப்படானென்பார் பரமாய் நின்றவென்றும், அங்ஙனநின்றநிலை யொன்றோடுவமித் தறியப்படாமை பற்றித் தனிமுதல்வனென்றும், இத்தன்மையனாகிய முதல்வன் நிலமுதனாதமீறாகிய பிரவஞ்சங்களை யசத்தென்றுகளைந்தவழிப் பயின்றறியாமையி னின்னதென்றறிய வாராத சூனியம்போலச் சுட்டறிவி னளவினைக்கடந்து தோன்றிப் பின்னர்ச் சுட்டிறந்தறியு மறிவின்கண்ணே சோதிக்குட் சோதியாய் வெளிப்பட்டுத்தானே விளங்கித் தோன்றுவனென்பார் வானே முதல்களையின் அற்புதம்போலளவிறந்து ஆனுவறிவாய்வந்து தோன்றானேவென்றுங்கூறினார்.

ஈண்டுக்குண மென்றது முக்குணங்களை.

அவ்வாறன்றி நிர்க்குணமென்பது ஒருகுணமுமில்லா னென்றுரைப்பி னது தன்வயத்தனுதன் முதலிய வெண்குண ங்களையியல்பாக வுடைய முதல்வனுக் கேலாமையின் மாயா வாதிமுதலியோர் கூற்ருய் முடியுமென்றெழிக.

தற்பரம் தனக்குப் பரமென நான்கனுருபு விரித்து ரைக்க.

தன்னென்றது ஆன்மாவை.

அற்புதமென்றது ஈண்டுச் சூனியத்தின்மேற்று.

ஆனுவறிவு தன்னறிவின்க ணீங்காது நிலைபெறுமறிவு.

ஓகார மெதிர்மறை.

வானே முதலென்றதனுனே தோற்றமுறைபற்றி வா னுக்குக் கீழுள்ள பூதங்களும் ஒடுக்கமுறைபற்றி வானுக்கு மேலுள்ள தத்துவங்களு முடன்கொள்ளப்படும்.

ஏகாரம் அசைநிலை.

முதல் ஆகுபெயர்.

நிர்க்குணனுய் நின்மலனுய் நித்தியானந்தனுய்த் தற்பர மா யென்புழி ஆக்கச்சொல் உண்மை குறித்துநின்றது வட மொழிமதம்.

ஆனுவறிவா யென்புழி ஆக்கம் முன்னர்ச்சூனியம்போற் ருேன்றுவோன் பின் ஆனுவறிவாய்த் தோன்றுவானென வேறுபாடு குறித்துநின்றது.

குணகுணிகட்கு வேற்றுமை யின்மையின் முதல்வன் ஞானத்தை முதல்வனென்றுபசரித்தார்.

ஆற்றேல், வானே முதல்களெந்தவழி அங்ஙனந் தோன் றும் பொருளும் வேறென்றெனக் கோடும் ஞானசொரூபமே யதுவென்றதற்குப் பிரமாணமென்னை யென்னு மாசங்கையை நீக்கி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சுட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்தநீ சத்தல்லை யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனாற் போய்விட்டுப் போம். எனவரும்.

ஏகதேச வுணர்வாற் சுட்டியுணரப்படும் நிலமுதற் சிவ ...ாகிய பிரவஞ்சத்தை அசத்ததி காணத்திற் கூறிய வியல்பு பற்றி யொரோ வொன்றாகச் சுட்டி யசத்தென்று கண்டு கழித்துக்கொண்டு சென்றவழி முடிவின்கட் கோசரமாவது வேறின்மையிற் பாரிசேட வளவையானது சத்தேயாமெ ன்று செம்மையே யறிவாயாக.

அற்றேல், அசத்தின் வேறு யங்ஙனங் கோசரமாவது சத்தேயாமென்ற தொக்கும்; அது முதல்வனன்று உயிரே யாமென்றாற் படுமிழுக் கென்னையெனின்? நிலைபேறின்றி யொரோ வொன்றாகச் சுட்டியறிந்து வந்தநீயென்று மொரு தன்மைத்தாய் நிலைபெற்று நிகழுமறிவாகிய சத்தாவாயல்லை; அசத்தை யசத்தென்று கண்டு நீக்கிய வழியுளதாகிய சத் தினை நீ யடிமையாகச் சென்று தலைப்பட்டதினாற் சுட்டியறி வதாகிய வேகதேச வறிவைச்செய்யும் பொதுவியல்பு நின்னை விட்டு நீங்குமாகலி னசத்துமல்லை யென்க.

ஆகலி னசத்துமல்லை யென்பது குறிப்பெச்சம்.
எனவே யசத்தைச் சத்துடனின்று நீக்குந்தன்மையாற் சதசத்தாவையென்பதாம்.

மயக்கமதுற்று மருந்திற் றெளிந்து, மென்ற வெண்பா வாற் பெறப்பட்டதனையே மீண்டுக் கடைப்பிடித்தற் பொரு ட்டுச் சுட்டியுணர்ந்த நீ சத்தல்லை யுண்மையைத் தைவம் புணர்ந்ததனாற் பொய்விட்டுப் போமாகலி னசத்துமல்லை யென வேறோராற்றானுந் தெளிவித்தா ராகலினிது கூறியது கூறலன்மையுணர்க.

சட்டவென்பது செப்பப் பொருட்டாய தோரகரவீற் றிடைச்சொல். அது சட்டமென இழிவழக்கின் மகரவீறுப் பரிஇயிற்று.

அசத்தைப் பிரிந்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந் தது.

தேவனதுடைமை தைவமென்பது வடமொழி.

வாதனையுமின்றிப் பற்றறக் கழியுமென்பார் விடுமென் ருது விட்டுப்போமென்ருர்.

இனி யசத்தை யசத்தென்று கண்டு நீக்குமாறும், நீங் கியவழி யுண்மையைத் தைவம் புணருமாறும், புணர்ந்தவழி ப்பொய்விட்டுப் போமாறுந் தெரித்துணர்த்தி யதனை வலியு றுத்துதற் கெடுத்துக் காட்டுமுதாரணம்.

கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்—பண்டணைந்த
வூனத்தைத் தான்விடுமோ வுத்தமனி லோண்கருட
சானத்திற் றீர்விடம்போற் றன். எனவரும்.

சுட்டுணர்விற்கு விடயமான பிரவஞ்சத்தை இது சத் தன்று இது சத்தன்றென வொரோ வொன்ருகச் சுட்டி அச த்தாகக்கண்டு விட்டுநீங்கி யங்ஙன மறிந்து நீங்கிய தன்னறி வின் கண்ணே சுட்டுணர்விற்கு விடயமாகாத முதல்வனை யாராய்ந் தச்சிவஞானத்தானே ஆசாரியன் சிவோயமென்த் தன்னுள்ளே பாவித்துச் சிவத்துவமசி யென்றறிவுறுக்குஞ் சித்தாந்த மகாவாக்கியப் பொருளை நாடோறும் பயின்று சிவோகமெனப் பாவிப்பனாயி னந்தப்பாவகத்தின் விளங்கு முதல்வனு லநாதியே கூடிய பொதுவியல்பையு மதற்கேது வாகிய மலமாயா கன்மங்களையுந் தான்விட்டு நீங்குமாறு ஒள் ளிய கருட தியானத்தில் விளங்குங் கருடனு லப்பாவகன் விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறு போலாமென்க.

ஆகவென்பது ஆயெனத்திரிந்து நின்றது.
தான் முன்னையது எழுவாய் பின்னையது அசை.
உத்தமனது ஞானத்தை யுத்தமனென் றுபசரித்தார்.
சானம் பாகதச்சிதைவு.
இதனானே வருகின்ற வதிகரணத்துக்குத் தோற்றுவாய் செய்ததூஉமாயிற்று.

ஈண்டுக் கருடபாவனையென்ற தியாதெனிற் கூறுதும். ஆதிபௌதிககருடன் ஆதிதைவிககருடன் ஆத்தியான்மிக கருடனெனக் கருடன் மூன்றுவகைப்படும். இவ்வாறு பொருடோறுங் கண்டுகொள்க. அவற்று ளுலகத்திற் காணப்படுங் கருடன் ஆதிபௌதிககருடன், அதற்கதி தெய்வமாய் மாந்திரிக னுள்ளத்தினதுபோல வைத்துத்தியானஞ்செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதிதைவிக கருடன், அம்மந்திரத்தி னிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிககருடனெனப்படும். அவற்று ளீண்டுக் கருடனென்றது கருடனுக்கதி தெய்வமாய் மாந்திரிக னுளத்திற் காணப்படு மந்திரரூபமாகிய ஆதிதைவிககருடனை. அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்றுவந்த பயிற்சி விசேடத்தா லம்மந்திரரூபமே தானாக வனன்னியபாவனை செய்து தன்னறிவதன் வசமாம்படி யுறைத்துநிற்றல். அங்ஙனநின் றந்தமந்திரக்கண்கொண்டு பார்ப்பவே யஃதவ் விடவேகத்தை மாற்றுத லொருதலையாகலின் அப்பாவனை யீண்டைக் குவமையாயிற்று.

இதனானே கருடபாவனை சத்தியமா மென்பதூஉம், அதனை யசத்திய மென்பார் மதம் போலி யென்பதூஉந் தெற்றென வுணர்க. புள்ளுவிலங்கு மரமுதலிய சராசரங்களுக்கெல்லாம் அதிதெய்வ மந்திர முளவென்பதூஉம், படிகம்போ லதுவதுவாமியல்புடைய ஆன்மா அவற்று ளெவ்வெம் மந்திரங்களைக் கணிப்பி னவ்வம்மந்திர சொரூபியாவ னென்பதூஉஞ் சருவஞானோத்தர முதலியவற்றுட் காண்க.

இரண்டாமதிகரணம் முடிந்தது.

மூன்று மதிகரணம்.

—:*:—

மேலையிரண் டதிகரணங்களானுந் தன்னை யிந்திரியத் தின் வேறுவான் கண்ட வான்மா அக்காட்சி, நிலைபெறுமா றசத்தாயுள்ள பாசத்தை யசத்தென்று கண்டொருவுக வொரு வியவழியுளதாய் நிற்கும் ஞானக்கண்ணினால் ஒருவிய தன் னறிவின்கண்ணே தனக்கு ஞேயமாகிய முதல்வனை நாடுக இவ்விரண்டு மக்காட்சியை நிலைபெறுத்தி யரன்கழல் சேறலா கிய சிவானந்தப் போகப்பயனைப் பயப்பித்தற்கு முறையே சாதகமாமென் றுணர்த்தியவழி அற்றேல், அப்பயனைப் பயப் பித்தற்குரிய விவ்விரண்டனையுஞ் சாதித்தோர்க்கு இனிச் சாதிக்கக்கடவ தொன்றில்லைபோலுமென மாணாக்கனுக்கு நிகழு மாசங்கையை நீக்குதற் கெழுந்தது மூன்றுமதிகரணம்.

இனி யிவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்ச ரிக்க வெனவரும்,

இனி யென்ப தினையபுணர்த்துதற் பொருட்டெனமே லையுரைத்தாங் கடைப்பிடிக்க.

இவ்விடத்தென்றது ஆன்மாப் பாசமொருவி ஞானக் கண்ணினால் ஞேயமாகிய முதல்வனைக் கண்டவிடத்து என்ற வாறு.

ஸ்ரீ பஞ்சாக்கரத்தை யென்றது முத்திபஞ்சாக்கரத்தை யென்றவாறு.

விதிப்படி யுச்சரிக்கவென்றது ஆன்மாப் பாசமொருவி ஞானக்கண்ணினிற் பதிப்பொருளை நாடுக வென வீண்டுவிதி த்த விதியின்படியே யோதுக வென்றவாறு.

பஞ்சாக்கரத்தாற் சாதிக்கப்படும் பொருளு மதுவேயா கலான் வேறு வகுத்துக்கூறாது விதிப்படியென மாட்டெறிந் தொழிந்தார்,

இங்ஙன மாசிரியர் மாட்டெடறிந்தனுவு முணராதார் சாதித்து நிற்குமுறை வேறே யோதுமுறைவேறே யெனச் சித்தாந்த வழக்கோடு முரணிக் கூறுவர். நிற்குமுறையு மோதுமுறையுந் தம்மு ளியைபில்வழி அஃததற்குச் சாதனமாமாறியாண்டைய தென்றொழிக. இன்னுமித னியல்பனைத்தும் உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிப்பாட்டு, நெஞ்சுவிடுதூது முதலியவற்றுள் விரித்தோதுதலி னவையெல்லா மாண்டுக்காண்க, ஈண்டுவிரிப்பிற் பெருகும்.

மானத, மந்த, முறையென வுச்சரிக்குமாறும் மூவகைப்படும். அவற்றுட் சுத்தமானத மெனப்படு மறிவாற்கணித்தலே ஈண்டுச்சரித்தலென்பார் சூத்திரத்துள் உச்சரிக்கவென்னு தெண்ணுக வென்றார், வடமொழிச் சூத்திரத்துச் சாணிக்கவென்றது மது.

அற்றேல், மேலையதி கரணங்களி லோதியவற்றுற் பாசமொருவி ஞானம் பிரகாசித்து ஞேயத்தைக் கண்டுழி யவ்வளவினமையாது திருவஞ்செழுத்தானு மதனைச் சாதிக்கவேண்டல் மிகையுமாய்ச் சித்தசாதனமு மாமாலென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்ததேது.

இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலி னதனை நீக்குதற் கெனக்கொள்க.

இ-ள். வேம்புதின்றபுழு அதனை நீத்துக் கரும்பினிற் றலைப்பட்டதன்சுவை தெரிந்துழியும் பயிற்சிவயத்தான் முன்னர்த் தானோக்கிய வேம்பின் சுவையைநோக்கி நிற்குமாறுபோல மேலையதிகரணங்களிற் கூறிப்போந்த சாதகங்களைச் செய்து முற்றிய வான்மாக்களுக் கச்சாதகங்களான் ஞானம் விளங்கி ஞேயங்காட்சிப்பட்டவிடத்தும், பயிற்சிவயத்தான் முன்னர்த்தா னோக்கிய பாசத்தை நோக்கி நிற்குமாகலி னக்

ரோக்கமாகிய வாசனையைநீக்குதற்குரிய சாதகமாவதாகலான் இனி யிவ்விடத்து சிபஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க வென்று மேற்கொண்டதெனக் கொள்க வென்றவாறு. எனவே யிரண்டுமொரு தன்மையவாயினும் மேலே விதிக்கப்பட்ட சாதகருக்குப் பயன் ஞானம் பிரகாசித்து நிலைகூடுதலும் ஈண்டு விதிக்கப்படுஞ் சாதகத்திற்குப் பயனது கூடியவழியுந் தாக்குவதாகிய வாசனையை நீங்குதலுமாகிய பயன் வேறுபாடின்மையின் ஒருதலையாய் சாதிக்கக்கடவதாகிய திருவஞ்செழுத்தோதுதல் மிகையாதலுஞ், சித்தசாதனமாதலும் யாண்டையவெனமாணுக்கனுக்காசங்கையை நீக்கியவாறாயிற்று; ஆகவே யந்நிலை கூடப்பெற்றவர்க்கன்றி யேனையோர்க் கிஃதேலாதென்பது கண்டுகொள்க.

ஈண்டு நோக்கென்றது மனவெழுச்சி விசேடத்தை "வானோக்கி வாழுமுலகெல்லா" மென்புழிப்போல.

அற்றேல், இச்சாதகம் வாசனையை நீக்குமாறியாங்ஙனமென்னு மவாய்நிலையை நீக்கி யேதுவை வலியுறுத்துதற்கெடுத்துக்காட்டு முதாரணம்.

> அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
> யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
> குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
> லண்டனுஞ் சேடனு மங்கு. எனவரும்.

ஆன்மாச் சிவனுக்கு அடிமையாதலை யஞ்செழுத்தை யுச்சரிக்கு முறையில் வைத்துக்கண்டு தன்னுடம்பினகத்தே யிதயம், நாபி, புருவநடு, வென்னு மூன்றனையு முறையே பூசைத்தான மோமத்தானந் தியானத்தானமாகக் கருதிக்கொண்டு புறம்பேஞான பூசைசெய்யு முறைப்படி, யிதயகமலத்திற் சிவனை யவ்வஞ்செழுத்தா னமைந்த திருமேனியிற் கொல்லாமை, யைம்பொறியடக்கல், பொறுமை, இரக்கம்,

அறிவு, மெய், தவம், அன்பு என்னு மட்டபுட்பங் கொண்டவ்வஞ்செழுத்தாற் பூசைசெய்து குண்டலித்தானமாகிய நாபியில் ஞானவனலை யெழுப்பி அதன்கணைத்திருவஞ்செழுத்தானே விந்துத்தானத் தமிழ்தமாகிய நெய் சுழுமுனைநாடி யிண்டநாடியாகிய சுருக்குச்சுருவங்களால் ஓமஞ்செய்து விந்துத்தானமாகிய புருவநடுவில் சிகார யகார வகாரங்கள் முறையே தற்பதப்பொருளுந் தொம்பதப்பொருளும் அசிபதப் பொருளுமா முறைமையி னவ்வஞ்செழுத்தாற் சிவோகம்பாவனை செய்யின் அப்பொழுதே யங்ஙனம் விளங்கித் தோன்று முதல்வனுக்குச் சேடசேடியபாவத்தா லாகற்பாலதாகிய வடிமையாமென்க. ஓமித்தலுந் தியானித்தலும் பூசைக்கு அங்கம். பூசை அங்கியென வறிக.

கோதண்டஞ் சானிக்கிலென்புழிக் கண்ணுருபும் அண்டனுமென்புழிக் குவ்வுருபும் விரித்துரைக்க.

ஆளாமுறைமை வருகின்ற சூத்திரத்திற் பெறப்படும்.

சுட்டறிவிறந்து ஞானத்தான் ஞேயத்தைக் கண்டெங்குந் தானாக நிட்டை கைகூடிய வழியும், தொன்றுதொட்டுவரு மேகதேசப் பழக்கம்பற்றிப் புறத்தே விடயத்திற் சென்று பற்றுவதாகிய தன்னறிவை யங்ஙனஞ் செல்லாது மடக்கி அகத்தே யொருகுறியின்கணிறுத்தி நிட்டைகூடிநிற்கு முறைமையை யஞ்செழுத் தோதுமுறையில் வைத்துக்கண்டு சிந்திக்கச் சிந்திக்கச் சிவதரிசனத்தை விளக்கி வாதனை வயத்தாற் புறத்திற்சென்று பற்று மேகதேச வறிவைப் பற்றறத் துடைத்துப் பூரணநிலையிற் கொண்டு செல்லு மாகலானது வாசனை நீக்குதற்குரிய சிறந்த சாதனமாதலறிக.

அங்ஙன மஞ்செழுத்தோது முறையான் ஒரு குறியின் வைத்தன்றி முதல்வனைக் காண்டல் செல்லாதவாறும், அவ்வாறு கண்டவழி முதல்வன் றம்மாட்டு விளங்கித்தோன்றுமாறும், தோன்றியவழித் தானம்முதல்வனுக் கடிமையாமாறு

முவமையில் வைத்துணர்த்தியதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

இந்துவிற் பானுவிலி ராகுவைக் கண்டாங்கு
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணு — முந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டாணு மோதஞ் செழுத்து. எனவரும்.

அந்தரத்தியங்கு நவக்கோள்களுள் ஏனைக்கோள்போலக் காணப்படாத இராகு கேதுக்களை உபராகத்திற் சந்திராதித்தரிடத்திற் காணுமாறுபோலப் பதிபசுபாசங்களுள் யாவிதனை யறிந்தே னறிகின்றிலேனென்னு முணர்விற்கு விடயமாகக் காணப்படும் பசுபாசங்களோடொப்ப வேறு காணப்படாத பதிப்பொருளாகிய முதல்வனைத் தன்னிதயத்தின்கணஞ்செழுத்தோது முறையாற் காணுமாயிற் கோலகட்டுகயிற்றினாற் சுற்றிக் கடையவே காட்டத்தினின்றுந் தோன்றுமங்கிபோ லம்முதல்வ னுண்டுத்தோன்றி யறிவுக்கறிவாய் விளங்கிநிற்கும். அப்பொழுது தானுங்கனலைச்சேர்ந்தவிரும்பு போலத் தன் சுதந்திரத்தைவிட் டம்முதல்வனுக்கு அடிமையாமாகலா னவ்வஞ்செழுத்து விதிப்படி யொருகலையா னோதுக வென்க.

கேதுசாயாக்கிரகமாதலின் வேறுகூறா திராகுவையே மொழிந்தார்.

கண் அறிவு.

தோன்றி யாமெனக் கூட்டுக.

உந்துதல் கண்டுக்கடைதன் மேற்று.

காட்டாக்கினியி னென்பது காட்டாக்கினென விகாரமாயிற்று.

இன் உவமவுருபு.

தான் எழுவாய்.

[illegible]மோதஞ்செழுத்தென்றது வலியுறுத்துதற்பொருட்டு.

அற்றேல், தத்துவ முப்பத்தாறுக்கு மப்பாற்பட்ட முதல்வனை இதயத்துட்கண்டு பூசிக்குமா றியாங்ஙனமென்னு மாசங்கையை நீக்கி அண்டபிண்டமவை சமமாகலா லண்டத்தினுள்ளனவெல்லாம் பிண்டத்துள்ளனுஞ் சூக்குமரூபமா யுண்மையின் அண்டவடிவாகிய முப்பத்தாறு தத்துவங்களு மிதயத்திற் கமலரூபமாய் விளங்குமாகலின் முப்பத்தாறு தத்துவங்களுக்கு மேற்பட் டங்ஙனம் வியாபகமாய் வயங்கு முதல்வனை அவ்விதய கமலத்தின்மே லலாக்கண்டு பூசித்த லமைவுடைத்தெனத் தெளிவித்தற்பொருட் டவ்விதய கமலத்தினியல்புணர்த்தி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

> மண்முத லாமலர் வித்தை கலாரூப
> மெண்ணிய வீசர் சதாசிவமு—நண்ணிற்
> கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணா
> னிலையதிலா மச்சிவன்ற ணோர். எனவரும்.

இதயகமலத்தி னியல்பை யுற்றறியப்புகின் நிலமுதலிய விருபத்து நான்குதத்துவமும் நாபியினின் றுந் தோன்று மெண்விரலளவைத்தாகிய நாளவடிவும், வித்தியாதத்துவ மேழுஞ் சுத்தவித்தையுமாகிய வெட்டும் எட்டிதழ்வடிவும், அவற்றின்மேற் கருதப்பட்ட ஈசுரதத்துவமுஞ் சதாசிவதத்துவமும் அறுபத்துநான்கு கேசரவடிவும், சத்திதத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டுவடிவும், சிவதத்துவம் அப்பொகுட்டினுட் காணப்படு மைம்பத்தொரு பீசவடிவுமா மாகலா னம்முப்பத்தாறு தத்துவமு மாசனமாகக்கொண்டவற்றின்மேனிற்கு முதல்வன் றிருவடிக ளவ்விதயகமலத்தின்மேனிற்கும்; அதனையறிந்து பஞ்சாக்கரத்தாற் பூசைசெய்வாயாக வென்க.

வித்தை யென்பதனை யிரட்டுறமொழிந்துகொண்டு வித்தியாதத்துவமெனப்படுங் கலாதியுஞ், சுத்தவித்தையுமென்றுரைத்துக்கொள்க.

"மூட்டுமோகினி சுத்தவித்தை" யென்னுஞ் சிவஞானசித்தியில் மோகினியென்றதூஉம் ஆகுபெயரா னதன்காரியமாகிய கலாதிகளின்மேற்று.

இனி, இவ்வாறன்றி நிலமுதலிய முப்பத்தொரு தத்துவமெனப்படும் எட்டுக்கோத்தும் எண்விர ளளவடிவம், நாளத்துக்கு மவற்றிற்கு மேலாகிய அசுத்தமாயாதத்துவம் நாளத்துக்கு மலருக்கு நடுக்கண்டமாகிய கிரந்திவடிவம், அதற்குமேற் சுத்தவித்தையின் வாமை முதலிய வெட்டும் எட்டிதழ்வடிவமாமென்றுரைப்பாரும், அசுத்தமாயைகிரந்தியி னதச்சதனம், சுத்தவித்தை யூர்த்துவச் சதனமென வைத்து அதற்குமே லீசுரதத்துவத்தி லனந்தன் முதலிய வெட்டுமே யெட்டிதழ்வடிவம் சதாசிவதத்துவ மொன்றுமாத்திரமே கேசரவடிவமெனக் கொண்டதற்கியையக் கொண்டு கூட்டியுரைப்பாரும், கலாரூபமென்றது நிவிர்த்தி முதலிய கலைகளை யெனவும் அஃதியாண்டும் கூட்டி யுரைக்கப்படுமெனவுங் கொண்டவ்வாறு கோடலான், மண்ணு மண்ணைமுதலாக வுடையவேனை யிருபத்து மூன்று தத்துவமுமாகிய கலாரூபமாவன நிவிர்த்தியும் பிரதிட்டையுமேயாகலா னவையிரண்டும் முறையே நாளமு மலருமாம் வித்தியாதத்துவமாகிய கலாரூபமாவது வித்தியாகலை சுத்தவித்தையோடுகூட்டி யெண்ணப்பட்ட ஈசர் சதாசிவமாகிய கலாரூபமாவது சாந்திகலை ஆகலானவையிரண்டும் முறையே கலையெனப்படுங் கேசரமும் கலைக்குள் ளுருவெனப்படும்பொகுட்டுமாம் நாதமுஞ் சத்தியுமாகிய கலாரூபமாவது சாந்தியதீத கலையாகலா னது பொகுட்டின்கண்ணுகிய பீசமாம் என்றிவ்வா றுரைப்பாருமுளர். இவ்வெல்லா மவ்வவாகம பேதம்பற்றிக் கொள்ளப்படும்.

கலையறுபத்து நான்காகலான் அஃதறுபத்து நான்காகிய கேசரங்களுக் கத்தொகைபற்றிக் கூறப்படு மாகுபெயராயிற்று.

ஈசரென்றது ஆகுபெயரா யவரா னதிட்டிக்கப்படும் தத்துவத்தை யுணர்த்திற்று.

கலையுரு கலைக்குள்ளுருவென உள்ளுருபுவிரித்துரைக்க.
கலைக்குள்ளுருக் கேசரங்களுக்கு நடுவாய் விளங்கும் பொருட்டென்பது.

கலையுருவாஞ் சத்திநாத மதன்கண்ணுமென மாறியுரைக்க.

ஆமென்பதனை நாளமலர் கலாரூப மென்பவற்றோடுங் கூட்டியுரைக்க.

இது நாள முதலாக மேனோக்கித் தோன்று முலகத்திற் கமலம்போலாது கண்முதலாகக் கீழ்நோக்கித் தோன்றுந் திவ்விய கமலமென்க.

மூன்றுமதிகரணம் முடிந்தது.

சிவஞானபோதத்திற்குத் திருவாவடுதுறைச் சிவஞான யோகி செய்த சிவஞானபாடியத்தில் இரண்டாவ துண்மை யதிகாரத்துச் சாதனவியலில் மூன்றும்பாதமாகிய விவ்வொன் பதாஞ் சூத்திரம் முடிந்தது.

பத்தாஞ்சூத்திரம்.

அவனே தானே யாகிய வந்நெறி
யேக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

எ-து. சூ-ம். எ-ன்னின், பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்துதலிற்று. மேலையோத்துண் மூன்றுபாதத்தாலும் முறையே சாதிக்கும் பொருளி னியல்புஞ் சாதித்துப்பெறப்படும் பொருளினியல்புஞ் சாதிக்குமாறு முணர்த்தி ஈண்டச் சூத்

கர்த்தா ணுகிய பயனியல்பு வகுத்துக்கூறுவா னெடுத்துக்கொண்டமையி னிவ்வோத்துப் பயனியலென்னும் பெயர்த்து.

பாசவீடுஞ் சிவப்பேறுமெனப் பயனிருவகைப்படு மாகலா னவவிரண்டனுட் பாசவீடாகிய பயனைப்பெறுமாறுணர்த்து முகத்தானே சிபஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்கும் வழிச் செய்யற்பால திதுவென வஞ்செழுத்ததிகரணத்தி னொழிபாய் வைத்துணர்த்துதல் பயனோத்தின் முதற்பாதமாகிய விப்பத்தாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

மேற்சாதக முணர்த்திய வழிச் சாதகத்தாற் பெறப்படும் பயனியாதோவெனப்பயனை யவாய்நிற்றலி னவ்வவாய்நிலை பற்றியவியைபானே யோத்தியையும், ஆன்மசுத்தி கூறிப்பின் ஆன்மலாபங் கூறுதன் முறைமையாகலின் அம்முறைமை பற்றிய வியைபானே பாதவியையும், விதிப்படி பஞ்சாக்கரத்தை யுச்சரித்தால் வாதனு மலம்போ மென்றவழி, அங்ஙன முச்சரிக்குங்கால் நிற்குநிலையு, மிவ்வாறுகற் பாற்றென்பது கூறுக்கால் உச்சரித்தார்க் கெல்லாம் வாதனுமலம்போதல் வேண்டுமென்னு மாசங்கை நிகழ்தலி னவ்வாசங்கை பற்றிய வியைபானே அதிகரண வியையும் பெறப்பட்டன.

அற்றேல், 'விட்டன்னியமின்மையி னரன்கழல் செலு' மெனப் பயனுமாண்டே கூறிப்போந்தமையின் ஈண்டதனை யவாவுமா றியாங்ஙன மெனின்? பயனை யறிவித்தாலன்றிச் சாதனஞ் செய்தற்கண் மனவெழுச்சி செல்லா தென்பது பற்றி யாண்டும் பொதுவகையாற் கூறிப்போந்ததனை ஈண்டுக்கிளந்தெடுத் தோதாக்கால் விடுமா றியாங்ஙனஞ் செல்லு மாறியாங்ஙன மென்றவாய் நிற்ற லொருதலையென விடுக்க. ஏனையவு முய்த்துணர்ந்து கொள்க.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. ஞானக்கண்ணினிற் சிந்தை நாடப்பட்ட வம்முதல்வன் பொருட் டன்மை

யால் வேறே யாயினும் வேறு காணப்படாது யானே கண்டேனென்னும்படி யுயிர் தானேயாய் நின்ற வப்பெத்தநிலை போல ஈண்டுந் தானென வேறுகாணப்படா தம்முதல்வனே யாம்படி யொற்றுமைப் பட்டவ்விறை பணியின் வழுவாது நிற்பின் உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவிய வழியும் வாதனையால் வந்து தாக்கும் மலமாயை யென்னு மிரண்டனுடனே வலிய கன்மமலமு மில்லையாய்ப் பற்றறக் கழியுமென்றவாறு.

ஏகாரந் தேற்றம்.

நெறி யுவமவுருபு.

வினையை வேறு பிரித்தமையின் இன்றேயென வொன்றுதி சொல்லாற் கூறினார்.

ஈண் டேகனுகி யொற்றுமைப் படுதலாவது: குடமுடைந்தவழிக் குடாகாயமு மாகாயமு மொன்றுதல் போல வொற்றுமைப் படுதலோ, அன்றி வெள்ளியை யிப்பியென்பது போலத் திரிவுகாட்சியா னொற்றுமைப் படுதலோ, அன்றி மண்ணே குடமென்பது போல ஒன்று திரிந்தொன்றாயொற்றுமைப் படுதலோ, அன்றி வெள்ளையுந் தாமரையுமென்பது போலக் குணகுணித் தன்மையா னொற்றுமைப் படுதலோ, அன்றித் தீயு மிரும்பும்போல வொன்றினொன்று விரவுதலா னொற்றுமைப் படுதலோ, பாலு நீரும் போலப் பிரிக்கப்படாத சையோகத்தா னொற்றுமைப் படுதலோ, கருடனு மாந்திரிகனும்போலப் பாவனை மாத்திரத்தா லொற்றுமைப் படுதலோ, அன்றிக் காய்ச்சிய விரும்பி னீர்போல வொன்றி னொன்றி லயமா யொற்றுமைப் படுதலோ, பேயும் பேய்பிடி கொண்டவனும் போல ஆவேசத்தா னொற்றுமைப் படுதலோ, அன்றிக் காட்டத்தி னெரிபோல விளங்காமையா னொற்றுமைப் படுதலோ, அன்றி ஞாயிற்றொளியின் விளக்கொளி போலச் சத்தி கெட்டு நிற்றலா னொற்றுமைப் பட

தலோ, அன்றித் தலைவனுந் தலைவியும்போ லின்பநுகர்ச்சி மாத்திரையா னொற்றுமைப் படுதலோ, அன்றி நட்டோரிருவர் போல நட்பின் மிகுதியா னொற்றுமைப் படுதலோ, அன்றியாவும் ஆமாவும் போல வொப்புமை மாத்திரையா னொற்றுமைப் படுதலோ என அவ்வச் சமயவாதிகள் மதம்பற்றி நிற்கு மின்னோரன்ன வாசங்கைகளை யெல்லாம் நீக்குதற் பொருட்டு அவனே தானேயாகிய வந்நெறியென வுவமையெடுத்துக் காட்டியோதினார்.

அற்றே, லீண்டுச் சம்பந்த மென்னையெனி னதுவருகின்ற சூத்திரத்து ளுவமை முகத்தாலோதுகின்றா ராகலினாண்டுக் காட்டுதும்.

இதனுள் அவனே தானேயாகிய வந்நெறி யேகனாகியென்பதோரதிகரணம். இறைபணிநிற்க மலமாயைதன்னொடுவல்வினை யின்றே யென்பதோ ரதிகரணம். ஆகவிரண்டதிகரணத்த திச்சூத்திர மென்றறிக.

முதலதிகரணம்.

அவற்றுண் மேலைச் சூத்திரத்தின் வாசனாமல நீங்கியான்ம சுத்தியாதற் பொருட்டு ஸ்ரீ பஞ்சாக்கரத்தைப் பாசமொருவிப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடுகவெனச்சிவதரிசனம் பண்ணுமாறோதிய விதிப்படியே மகாவாக்கியப் பொருள் பயப்ப வுச்சரிக்கவென் றுணர்த்தியவழிவாசனாமல நீக்குதற் கெவ்வா றுச்சரித்தன் மாத்திரையேயமையும் போலுமென்னு மாசங்கையை நீக்கி மேற்செய்யுமா றிதுவென்பதாய சித்தாந்த முணர்த்துதற் கெழுந்ததுமுதலதிகரணம்.

ஈண்டுப் பரமேசுர னிவ்வான்மாவாய் நின்ற முறையாலவனிடத் தேகனாகி நிற்க எனவரும்.

ஏகனாகி நிற்றலாவது "இரண்டாம் பயனென்னுந் திருவருடெளியிற் சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றா மென்றிறை யியற்கை யியம்புதற்கும்" எனச் சங்கற்ப நிராகரணத்துப் பரமசித்தாந்தமாக முடிவின்கணோதியவாறே திருவஞ்செழுத்தி னுய்த்துணர்ந்து நிற்றலென்க.

அற்றேல், வாதனாமலநீங்கி ஆன்மசுத்தி பண்ணுதற்குச் சீபஞ்சாக்கரத்தை யவ்விதிப்படி யுச்சரித்தலே யமையுமதன்மேலு மேகனாகிநிற்ற லெற்றுக்கென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த வேது.

அவ்வாறு நிற்கவே யானென தென்னுஞ் செருக்கற்றவனது சீபாதத்தை யணையுமாதலான் எனவரும், இ-ள். ஏகனா யப்படி நின்றாலே யன்றி யானெனப்படும் ஞாதாவும் எனதெனப்படும் ஞானமு மதற்குவிடயமா யெனதெனப்படும் ஞேயமும் எனப்பகுத்துக் காணு மயக்க வுணர்வுக் கேதுவாகிய மலவாசனை நீங்காது; அது நீங்கினாலன்றி முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தை யனுபவித்தல் கூடாதாகலான் அம்மலவாசனை நீங்கிச் சிவானந்தத்தை யனுபவித்தற்கு அதுவே சாதகமென்பது பெறப்படுதலான் ஈண்டுப் பரமேசுர னிவ்வான்மாவாய் நின்ற முறைமையா னவனிடத் தேகனாகி நிற்கவென மேற்கொண்ட தென்றவாறு.

செருக்கு ஆகுபெயர்.

அற்றேல், ஞாதுரு ஞானம் ஞேய மெனப் பகுத்துக்காணுங் காட்சிமயக்க வுணர்வாமா றியாங்ஙன மென்னு மாசங்கையை நீக்கி யேதுவை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டு முதாரணம்,

நானவனென் றெண்ணினர்க்கு நாமுள முண்டாத
றானெனவோன் றின்றியே தானதுவாய்த்-தானெனவோன்
றில்லென்று தானே பெறுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானா மிறை. எனவரும்,

யானென்று மவனென்றும் பகுத்தறிந்து நிற்பார்க்கும் யானேயென நிற்பார்க்கும் போல நாடுகின்ற வான்மபோத முனைத்துத் தோன்றுமாதலா னதுதோன்றும் வழித் தானென் றொருமுதல் காணப்படுமாறின்றித் தானவ்வுயிரேயாய்க் காணப்பட்டும் யானென் றொருமுதல் காணப்படுமாறில்லை யென்றறிந்து தான் முழுவதுமெனக் காண்பவரை யவ்வாறே வேறு காணப்படுமாறில்லை யென்று தனது திருவடி வியாபகத்து ளடங்கி நிற்கச்செய்து தானே முழுவதுமாய்க் காணப்பட்டும் நிற்ப னிறைவனென்க.

ஆய் ஆமெனக் கூட்டுக.

ஆயாமென்புழிச் செய்தெ னெச்சங்கால முணர்த்திநின்று மற்று நள்ளார்க்கு நஞ்சொத்து நட்டார்க்கமிழ் தொக்கு மிவனென்புழிப்போலத் தன்வினையாதன் மாத்திரையே யுணர்த்தி நின்றது.

தூலவொளியாகிய கண்ணொளியும் சூக்குமவொளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்குநிலை பிரித்தறிய வாராமையிற் கண்ணொளியாக் காணுங்காற் காணுந் தன்மையே முனைத்துத் தோன்றுமாகலி னவ்வழி விளக்கொளியிருந்து மில்லை, விளக்கொளியாக் காணுங்காற் காட்டுந்தன்மையே முனைத்துத் தோன்றுமாகலி னவ்வழி கண்ணொளியிருந்து மில்லை கண்ணொளியும் விளக்கொளியுமெனப் பகுத்துக் காணப்புகினுங் காணுந்தன்மையே முற்பட்டுத் தோன்றுதலின் விளக்கொளி திரிவுபுலனாகக் காட்சிப் படுவதல்லது தெளிவு புலனாய்க் காட்சிப்பட்டு நிற்பதில்லை அதுபோலத் தூலவறிவாகிய வுயிரும் சூக்கும வறிவாகிய சிவமும் அத்துவிதமாய்க் கலந்து நிற்குநிலையும் பிரித்தறிய வாராமையின் உயிராய்க் காணுங்காற் சிவமில்லை சிவமாய்க் காணுங்கா லுயிரில்லை இரண்டுமாய்க் காணப்புகினுந் தற்போத முற்பட்டு நிற்றலின் அவ்வழியுஞ் சிவம் ஐயக்காட்

சிக்குப் புலனாய் நிற்பதல்லது தெளிவுக்காட்சிக்குப் புலனாய் நிற்குமாறில்லை யாகலான் நானவனென் றெண்ணினார்க்கு நாடுமுள மூண்டாத ரூனென வொன்றின்றியே தானதுவா மென்றார்.

உம்மை யிறந்தது தழீஇயிற்று.

இக்கருத்தே பற்றிக் "காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவும் நீத்துண்மை காண்பார்கணன்முத்தி காணார்க" ளென்றோதிய புடைநூலாசிரியர் மீளக் "காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன் வாட்டுநெறி வாராதவர்" "கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடுங் கருத்தொன்றன்றே" எனவுங் கூறினாரென்பது.

இக்காட்சி யிரண்டனுள் யாது திரிவுகாட்சி யாது தெளிவுகாட்சியெனிற்கூறுதும். கண்ணொளியானது எவ்வெவ்வொளியோடு கூடினு மவ்வவ்வொளி வடிவாய்க் காணப்படுமியல்பிற்றன்றி யொரு பெற்றியாய்க் காணப்படு மியல்பிற்றன்மையின் அவ்வவ்வொளிகள்கண்ணொளியோடு கூடியவழியும் ஒருபெற்றியவே யெனப்படு மியல்பினவாகலி னவ்வியல்பறியா தங்ஙன மவ்வவ்வொளிவடிவாய்க் காணப்படு மியல்பிற்றன்றி யொரு பெற்றியாய் விளங்காத கண்ணொளியைத் தனித்துக்காண்டல் திரிவுகாட்சி யெனவும், ஒருபெற்றியவாய் விளங்குவனவாகி யவ்வவ்வொளிகளைத் தனித்துக்காண்டல் தெளிவுகாட்சியவேயா மெனவும், நுண்ணுணர்வானோக்கியுணர்ந்து கொள்க.

அற்றேல், காட்டு மொளியின் வேறாய கண்ணுக்கோரொளிக்குண முண்டென்றற் கேதுவென்னை? யுண்டெனின், மின்மினித் துணையாயினுந்தானே விளங்குமாதல் வேண்டுமாலெனின், ஆகாயத்தின் கண்ணவாகிய சத்தகுணம், முரசுதுணில் சையோக முதலிய வியஞ்சகங்களான் விளக்கப்பட்டுழி விளங்கி அல்லுழி விளங்கா தொழிதலே யன்றித் தனி

த்துணையானும் தானே விளங்குமா நின்றென்பது பற்றி வியஞ்சகத்தான் விளங்கி யெதிரொலி வடிவாய்த் தோன்று மவ்வோசையை ஆகாயத்தின் குணமன்றென்பார் யாருமி ல்லை, அதுபோலக் கண்ணின் கண்ணதாகிய வொளியும் விய ஞ்சக முள்வழி விளங்கி அல்லுழி விளங்காமை மாத்திரையே பிறிதில்லை யாகலா னதனைக் கண்ணின்குண மன்றென்ற லறிவில்லார் கூற்றேயாமெனவும், அக்கண்ணொளி தன்னை விளக்குதற்குரிய வியஞ்சகப்பொரு ளேகதேசமாயின் ஏக தேசத்து விளங்கியும் அது வியாபகப் பொருளாயின் வியா பகமாய் விளங்கியும் நிற்குமியல்பிற் றெனவுமுணர்க.

அற்றேல், லக்ஷணமாக கண்ணொளி விளக்கின்சோதி கலந்திடு மென்றற்குப் பிரமாண மெனனை? ஒரு விடயத்தின் மேல்வீழ்ந்த பல கண்ணொளிகட்குத் தம்முளியை பில்லாத வாறுபோல வொருவயிற் பட்ட கண்ணொளி விளக்கொளி கட்குத் தம்மு ளியைபில்லை யென்றல் பொருத்தமுடைத்தா லெனின்? அறியாது கூறினாய்; ஒரு விட யத்தின் மேல் வீழ் ந்த கண்ணொளிக டம்மு ளொன்றனை யொன்று காணுமாறி ல்லை, காணப்படுமாறு ஒன்றுக்கொன்று காட்டுமாறில்லை ஆத லானவை தம்முட் கலத்தற் கேதுவியை பின்றென்ப தொக் கும்; அவ்வாறன்றிக் கண் விளக்கினைக் காண்டலும் விளக் குக் கண்ணுக்குக் காட்டுதலுமாகிய வியைபுண்மையின் இவ் வியைபு தம்முட் பெறப்படாத கண்ணொளி முதலாயின வீண்டைக் குவமையாதல் செல்லாமையானும், இந்திரியங்க ட்குத் தம் விடயத்தோ டியைபுதன்றிச் சந்நிதி மாத்திரையா லவற்றை யறிதல் செல்லாதென்பதே யாகமங்கட்கெல்லாந் துணிபாகலானு மத்தன்மையவாகிய கண்ணொளி விளக்கொ ளிகட்குத் தம்முட் கலப்பில்லை யென்றல் சிவாகம வழக் கோடு முலக வழக்கோடு முரணுவார் கூற்றே யாமென்று மறுக்க. இன்ன முவமைக் கோதியன வெல்லாம் பொருட் கண்ணுமாமா றுணர்ந்துரைத்துக் கொள்க.

கூறிற்றேல், இவையனைத்துமொக்கும். எண்டெடுத்துக் காட்டிய கண்களொன்றனை யொன்று காணுமாறின்மையி னதுபோல ஆன்மாக்களும் பிறவான்மாக்களையறிதல் போதுமெனின்? அறியாது கூறினாய், கண்க டம்முளொன்றனை யொன்று காண்டலில்லை யென்றது விளக்கினையும் விடயத்தினையுங் காணுமாறுபோலத் தனித்த முதலாய் வேறுகாணுமாறில்லை யென்ற துணையேயன்றிப் பிறிதின்மையின் கண் விளக்கொளியைக் காணுங்கா லதுவே தானாக நின்று தன்னையுமவ்விளக்கொளி வண்ணமாய்க் காண்டலுண்டென்பது கண்கூடாக வறியக் கிடத்தலி னேனைக்கண்களையு மவ்வாறு காண்ட லமையுமாகலா னதுபோல ஆன்மாவும் பிறவுயிர்களைத் தனித்த முதலாய்ப் பிரித்தறியுமா றில்லையாயினுஞ் சிவத்தைத் தரிசிக்கும்வழி தானதுவாய் நின்று தன்னையறியுமாறு போலப் பிறவுயிர்களையு மச்சிவத்தின் வண்ணமாய்க் கண்டறித லமைவுடைத்தாகலா னென்பது.

அற்றாகலி னன்றே 'தன்னாலே தனையறிந்தாற் றன்னையுந்தானே காணுந்தானதுவாகி நின்றே' எனவும், "அன்னிலை காரணமாகா வகையதிலறிவடங்கி மன்னிட வியாபியாயவன்னமன்றேன்று" மெனவும் புடைநூலாசிரியரோதியதூஉம், "என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டே னின்னிலையனைத்தையுங் கண்டே னென்னே நின்னைக்காணு மாந்தர் தம்மையுங் காணுந்தன்மையோரே" என மும்மணிக்கோவையினோதியதூஉம், பிறண்டு மிவ்வாறே யோதியதூஉமென்க.

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

—:*:—

முதலதிகரணத்தின் மேலைச்சூத்திரத்தோடியைபு சங்காரத்தை அவ்விதிப்படி யுச்சரிக்கின்றுழி அதன்கண்

விளங்கும் ஞாதுரு ஞான ஞேயப்பகுப்பிறந்து நின்றுச்சரித்தாலன்றி மலவாதனை யறுமையா லஃதறும்வண்ணம் முதல்வனிடத் தேகனாகி நிற்றல் வேண்டுமென மலவாசனை யறுதற்குபாயங் கூறியவழி அற்றேல், ஆன்மா அவ்வாறு நிற்புழியுந்தன்குணமாகிய வறிவிச்சை செயல்கள் கெட்டொழியுமோ கெடாதுநிற்குமோ என்றார்க்குக் குணகுணிகட்கு வேற்றுமை யின்மையாற் குணங்கெடவே குணியுங் கெடுமெனப்பட்டு முப்பொருளு நித்தமென்னுஞ் சித்தாந்தத்தோடு முரணியவசித்தாந்தமாம். கெடாதுநிற்குமாயி னேகனாதல் செல்லாதா லென்னு மாசங்கையை நீக்குமுகத்தானே யேனை மாயாகன்ம வாசனை யறுதற் குபாயங் கூறுதற் கெழுந்தது இரண்டாமதிகரணம்.

இனி. இறைபணி வழுவாது நிற்க எனவரும்.

நிற்றலாவது சலியாமைநிலைபெறுதலென்பார் வழுவாது நிற்கவென்றார்.

ஈண்டிறைபணியென்ற தியாதெனின்? அஃதாசிரியர் தாமே முன்னர்த் தெரித்துரைக்கின்றமையி னினிதுவிளங்கும்.

அற்றேல், அவ்விறைபணி வழுவாது நிற்பின் ஆன்மா சுதந்திரனல்லனாய்ப் பரதந்திர னெனப்பட்டு முத்தியும் பந்தமெனப்பட்டு வழுவாம். "பரதந்திரியங் கரைகழி பந்த" மெனச் சிவாகமங்களிலே யோதுதலா னென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்ததேது.

அவனருளா லல்லதொன்றையுஞ் செய்யானாகவே யஞ்ஞானகன்மம் பிரவேசியாவாகலான் எனவரும், கண்ணொளிக்குக்காட்சி விளக்கொளியையின்றியமையாமையிற் காண்பனவெல்லாந் தன்செயலே யெனக்கண்டு தானென வேறு முனைக்குமாறின்றி யவ்விளக்கொளியினடங்கி நிற்பி னேனைவிடயமொன்றுங் கண்ணுக்குத் தாக்குமாறில்லை யதுபோலத் தன்

னுடையவிச்சா ஞானக் கிரியைகளின் றொழிற்பாட்டுக்கு முதல்வனது இச்சா ஞானக் கிரியைகளை யின்றியமையாத வா ன்மாவு மவ்வினைபபுபற்றி நிகழ்வனவெல்லாம் முதல்வனதிச்சா ஞானக் கிரியைகளது நிகழ்ச்சியே யெனக்கண் டம்முதல் வன் வியாபகத்துக்குள்ளாக வடங்கிநிற்பிற் பிரவஞ்சஞ் சிறிதுந் தாக்குமாறில்லை; அஃதின்றாகவே அது காரணமாக மே லைக்கு வினையேறுமாறு மில்லை; அல்லுழி யெல்லாம் பிரவஞ் சந்தாக்காதொழியாது; அஃதொழியாதவழி யதுகாரணமாக வரும் விருப்பு வெறுப்பேறா தொழியாது; அஃதேறுமாயிற் பிறவிக்கு வித்தாய் மீளப் பெத்த நிலையிற் செலுத்திவிடுமாக லா னங்ஙனமாகாதவாறு மாயை கன்மங்களின் வாதனையறு தற் குபாயமதுவேயாகலா னிறைபணி நிற்றலொருதலையான் வேண்டுமென்பார் அவனருளா லல்லதொன்றையுஞ் செய்யா னாகவே யஞ்ஞானகன்மம் பிரவேசியா வாகலானினி யவ்வி றைபணி வழுவாது நிற்கவென மேற்கொண்டதென்றார். எனவே ".பரதந்திரியங் கரைகழிபந்த" மெனச் சிவாகமங் களி _ "டாண்டோதியது அவ்விறைபணி நிற்றலையன்று மற்றுச்சிவானந்தத்தை யனுபவித்தற்கட் செல்லுமியல்பிற் றாகிய தன்னிச்சை வழிவிடாது மலத்தினலைந்தொழிவி னக ப்படுத்துச் சுழல்விக்குங் காரணமூர்த்திவழி நிற்றலே யாமெ னக்கொள்க.

சிவானந்தத்தை யனுபவித்தற் கேதுவா யிறைபணிநிற் கை தன்னிச்சைவழி நிற்றலேயா மாகலி னஃததனை நோக் கிச் சுதந்திரமே யாமென்பது. மலவாசனையறுதல் மேலையதி கரணத்தாற்போந்தமையின் ஈண்டஞ்ஞானமென்றது மாணவ யின் காரியமாகிய மயக்கவாசனையே யாமெனவும், சஞ்சிதந் தீக்கையானும் பிராரத்த மனுபவத்தானு மறுதலின் ஈண்டுக் கன்மமென்றது ஆகாமிய வாசனையே யாமெனவுங் கொள்க.

அஞ்ஞானகன்மம் ஊம்மைத்தொகை.

அற்றேல், அவனருளாலல்லதொன்றையுஞ் செய்யாத வழி அஞ்ஞானகன்மம் பிரவேசியாதவா றியாங்ஙனம்? பிற செயாதனுபவிக்குமா றின்மையிற் பிராரத்த மனுபவிக்கும் வழி யாகாமிய மேறுத லொருதலையாமாலென்னு மாசங்கையை நீக்கி யேதுவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மரனுடைமை—யாமென்னி
லெத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் முன். எனவரும்.

செவிவாய் முதலிய விந்திரியங்கள் முதல்வனதுடைமையாகிய மாயேய மெனப்படுவனவன்றி ஆன்மாவாகிய யாமெனப்படுவனவல்ல, அவை தொழிற்படுதலும் முதல்வன் வயத்தினன்றி நம்வயத்தனவல்ல, அவ்விந்திரியங்கள் சத்தாதி வாக்காதிகளை விடயித்தற்கு வழியாகிய தனுகரணபுவனபோகங்களும் அம்மாயேய மாவனவன்றி யாமாவனவல்ல, அவை சேட்டித்தலு முதல்வன் வயத்தினன்றி நம்வயத்தனவல்ல, அவற்றொடுகூடி நின்று வினைகளை யீட்டி நுகர்ந்துவருகின்ற யாமும் ஞானக்கிரியைகளை முதல்விளக்கியவழி விளங்கியும் அல்லுழி விளங்காதும் இவ்வாறு முதல்வனை யின்றியமையுமா றின்மையா னம்முதல்வன துடைமையாவே மல்லது சுதந்திர ராவேமல்லே மென் றிங்ஙனம் பசுபாசங்களினியல்புகளை யுள்ளவாறுணர்ந்து செய்வனவெல்லா மவனருளின்வழி நின்றுசெய்யுஞ் செயலாய்க் கண்டுகொண்டிருப்பாராயி னவ்விறைபணியாகிய வடிமைத்திற முடையா ரெவ்வுடம்பினின் றெவ்வினைகளைச் செய்யினு மவையவர்க்குப் பந்தமாகலில்லை யவ்வாகாமியவினையை யுவிருபாவுமாயுடன்கொண்டு வருவதாகிய பிராரத்தவினையுந் தன்னைக்கூட்டுவிக்கு முதல்வன் சந்நிதியின் உடலூழா யொழிவதன்றி யேனையோர்க்குப் போலவவர்க்காத லில்லையாகலானென்க.

ந்ம்வழிபி னல்லவென்பதனை மேலுங் கூட்டுக.
தருவான் முன்னுமெனக் கூறிக்கொள்க.
ஆமென்பது சொல்லெச்சம்.

சஞ்சிதவினையாசாரியன் நீக்கஞ்செய்த மாத்திரையே எரிசேர்ந்த வித்துப்போலக் கெட்டொழிதலின் ஈண்டு முற்செய் வினையென்றது பிராரத்தவினையே யெனக் கொள்க.

தருதலிட வழுவமைதி.

அற்றேல், இறைபணியார்க்குளதாகிய வினை அவரைச் சாருமாறில்லை. யுடலூழாயொழியுமாறும், ஏனையோர்க்குள தாகிய வினையுயிரூழாய் வந்து வருத்துமாறும், இங்ஙனஞ்செய்யு மிறைவன் நடுவுநிலைமை யின்றிக் கோட்டமுடையனா வெப்படுமா லென்னு மாசங்கையை நீக்கி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்—சார்ந்தடியார்
தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்த
லாய்ந்தார்முன் செய்வினையு மாங்கு. எனவரும்.

திம்பாலடைக்கலமெனச் சார்ந்தாரைக் காப்பதுத்தம ராயினார்க்குக் கடமையாகலான் முதல்வன் றன்னைச் சார்ந்தவரையே பாதுகாப்போனாயும் அதுபற்றிக் கோட்டமுடையவ னல்லனாய்த் தன்னைச் சார்ந்து தன்னடிப்பணியினிற்கவல்ல வடியார், தானேயாய்நிற்குமாறு நிறுவி, அவர்க்குவருமாகாமியவினையைக் கெடுத்து அது செய்யவல்லாத பிறர்க்கு வருமாகாமியவினையை யவர்க்குக் கொடுப்பனாகலா னவ்விருதிறத்தோர்க்குளவாகிய ஊழ்வினைவந்து பொருந்தும் பிராரத்த வினையு மவ்வாறே செய்வோர் செய்திக்குத்தக்க பயனா யிருவேறுவகைப்படச் செய்வனென்க.

சாராதாரை யொழித்துச் சார்ந்தவரைக்காப்பது நடுவு நிலையன்றென்பாரை நோக்கி யவ்வாறு கொள்ளினும் அஃ

தாண்டைக்குத் தலைமைக்குண மாவதன்றி யிழுக்கன்மையா னமையுமென்பார் சார்ந்தாரைக் காத்த றலைவர்கடனெனப் பழமொழி யெடுத்துக்காட்டி யுண்மையா னோக்கவல்லார்க்கு அது நடுவுநிலைமையே கோட்டமன்றென வறிவுறுத்துவார் சார்ந்தடியார் தாந்தாஞ்செய்து பிறர் தங்கள் வினை தான் கொடுத்தலென வேறுவமை யெடுத்துக்காட்டினார்.

சார்ந்தடியார் தாந்தாஞ் செய்துபிறர் தங்கள் வினை தான் கொடுத்தலுண்டென்பதூஉம், அது நடுவு நிலைமையே கோட்டமன்றென்பதூஉ மேனைச்சமயத்தார்க்கு முடம்பா டாகலின் அஃதீண்டைக்குவமையாயிற்று.

உம்மை சிறப்பின்கண் வந்தது.

சார்ந்தவென்னும் பெயரெச்ச மீறுதிரிந்தது.

தான் முதல்வன்.

ஆதல் கொடுத்தலென்புழி ஆனுருபு விகாரத்தாற்றொக் கது.

ஆய் என்னும் வினையெச்சங் கொடுத்தலென்னுந் தொழிற்பெயரோடு முடிந்தது.

ஆய்ந்து நுணுகி "ஓய்தலாய்த னிழத்தல்சாஅ, யாவயி னுண்கு முள்ளதனுணுக்க" மென்றார் தொல்காப்பியனாரும்.

ஆர் வினைத்தொகை.

பிராரத்தவினைகூக்குமவினையாகலி னது கூடுமுறைமை யறிதலரிதென்பார் ஆய்ந்தார் முன்செய் வினையுமென்றார்.

உம்மை யிழிந்ததுதழீஇயிற்று.

ஆங்கு அதுபோல வென்க.

இதனானே மேலைவெண்பாவின் முற்செய்வினையுந் தரு வானென்றதுபற்றி ஆசங்கையை நீக்கியவாறு.

இறைபணியினிற்கும் ஞானிகட்கும் பிராரத்தவினை தாக்கலுண்டெனச் சிவாகமங்களி னுண்டாஞ்சேர்தலி னவற்

ருமுரணி யஃதவர்க்குத் தாக்காதென்ற லமையாமையி னதுதாக்கும்வழி யாகாமியவினையு மேறு தொழியாதென்னு மைங்கையை நீக்கி யதனை வலியுறுத்துதற்கெடுத்துக்காட்டு தாரணம்.

> இங்குளி வாங்குங் கலம்போல் ஞானிபான்
> முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
> மாயையோடு நில்லாது மற்றவன்றன் மெய்ப்பொருளே
> யாயவத னுணரு மச்சு. எனவரும்.

தன்பால் வைத்தெடுக்கப்பட் டொழிந்த காயத்தின் கண்ணின்றும் அதன் வாசத்தை வாங்கிக்கொள்ளும் பாத்திரத்தி னவ்வாசமங்கிப்போய் மெலிதாய்க்கந்திக்குமாறுபோல ஞானவனென்றெண்ணிச் சிவோகம்பாவனை செய்தறியு ஞானிக்கு நாடுமுள முண்டாதலு முண்மையினதுபற்றி யவன் பாட்டுப் பிராரத்தவினையு மதற்கிடனாகிய வுடம்பு முதலிய மாயையமும் வாசனைமாத்திரையாய் மெலிதாய் வந்துதாக்கு மாயினு மவ்வழி யேறுவ்தாகிய வாகாமியவினை மேலைக்கு வித்தாய் நிலைபெற்று முறுகுதலின்றித் தனக்குப்பற்றுக் கோடாகிய மாயையத்திலேனுடுங்கெட்டொழியும். அந்தஞானி பின்னர்ப் பகுத்துணர்வு மிறந்து ஏகனாகி யிறைபணி நின்று சத்தாயுள்ள சிவமே யாகிய வாற்றால் ஓரோவழி யவ்வாதனை பற்றிப் பிறழினு மவ்வச்சினையே யுணர்ந்து நிற்பனாகலானென்க.

எனவே யொளி யிருளைத் துரக்குமாறுபோல வவ்வுணர்வு அவ்வாகாமியத்தைத் துரக்கு மென்பதாம்.

உளி ஐந்தாம் வேற்றுமை யுருபு. “ மரபுளி வழா ” வென்புழிப்போல.

முற்றுகரங்கெடுதல் இலேசாற்கொள்க.
உம்மை சிறப்பின்கண் வந்தது.
மற்று வினைமாற்று.

அவன் மேற்கூறிப்போந்த ஞானி.

தானென்பது அறிவாக முணர நின்றது.

பிறழவிடாமைபற்றி மெய்ப்பொருளை அச்சாக உருவகஞ்செய்தார்.

இது இனவெதுகைத்தொடை.

இதனாற் கூறிபபோந்தது சிவாகமங்களி னுண்டாண்டு ஞானிகட்குப் பிராரத்தவினை தாக்குமென்றது இங்குளிவாங் குங் கலத்தைபபோல வாதனை மாத்திரையாய் மெலிதாய் வந்து தாக்குமென்னுந் துணையேயாகலின், அவ்வாறு வரும பிராரத்தவாதனை நுகர்ச்சியினேறு மாகாமியவினை யவ்வுணா வின் முன்னர்க் கெட்டொழிவதன்றிப் பிராரத்த நுகர்ச்சியி னேறு மாகாமியம் போலப் பிறவிக்கு வித்தாய் நிலைபெறு மாறில்லையென ஆசங்கை நீக்கியவாறுமென்க.

அற்றேல், வாதனைபற்றிப் பெயர்ந்துழியும் நிலையிற் றிரியாது அவ்வச்சினையே யுணர்ந்து நிற்குமாறியாங்ஙன மென்னு மாசங்கையை யுவமை முகத்தா னீக்கியதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டுமுதாரணம்.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினு—மெண்ணி
யரனடி யோர்பவ ரைம்புலனிற் சென்று
மவர்திற னீங்கா ரதற்கு. எனவரும்.

நண்ணனல் வேவாமைக்கேதுவாகிய வங்கித்தம்பனை வல்லாரவ்வனலிற் குளிப்பினுந்தந்திறனீங்காதவாறுபோல வும், பண்ணமர மாச்செலுத்துதற்குரிய பாகுநூல்கற்று வல் லார்ப்பாய்மாவின் வேகத்துட் படினுந் தந்திறனீங்காத வாறுபோலவும், ஐம்புலன்கடமக்கு வியாப்பியமா யடங்கத் தாமவற்றை வியாபித்து மேற்பட்டு நிற்கு முறைமையை யாராய்ந்து தாமரனடியாகிய விறைபணியினின் றவரவல்

லோரவ்வைம்புலனிற் சென்று மதனானே தந்திறலி னீங்குத லிலரென்க.

நல்லனல் நண்ணனலெனை மரீஇயிற்று. "நீணுலகெலா" மென்புழிப்போல.

நண்ணனல் கீழ்நீர்போல முன்பின்னாகத் தொக்கவாறும் வேற்றுமைத்தொகை.

தம்மானண்ணப்படு மனலென் றுரைப்பினு மமையும்,
பண் பண்ணப்படுங் கதிகள்,
செலுத்தல் உளர்தல்.
இன் உவமவுருபு.
உம்மை யெண்ணும்மை,
சென்றும் உம்மை சிறப்பு.
ஐம்புல னுபுலக்கணம்.
திறல் வெற்றிப்பாடு.
அதற்கென்பது உருபுமயக்கம்.

அற்றேல், சத்தொடு சார்ந்தவழியு மசத்தொடுசார்ந்த வழியும் அதுவதுவேயாய்ச் சதசத்தாமியல்புடையவர்ன்மா க்க ளைம்புலனாகிய வசத்தைச் சார்ந்தும் அவர் திறம் நீங்காமை யாங்ஙனமென்னு மாசங்கையை நீக்கியதனை வலியுறுத் துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்,

சத்சத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணி
லித்மித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்
கெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தி
னருகணையார் சத்தணைவா ராங்கு. என்வரும்.

சத்தொடு கூடியவழிச் சத்தாயும் அசத்தொடு கூடியு வழி யுசத்தாயும் இவ்வாறு சதசத்தாமியல்புடைய தன்னு ண்மை யுணர்ந்தோன் சத்தாகிய முதல்வன் றிருவருளானல் லதொன்றையுங் காணாபி னவ்வழிப் பாசமாகிய வசத்தி

ணிதஞ் செய்த லின்மையாற் சத்தாகிய வம்முதல்வனைத் தலைப்படுவோர் சிற்றறிக் கெரியாநின்ற வொளியின் முன்னாந் தகாரம்போல வச்சத்தினெதிர் தனதுசத்தியை யேற்கமாட்டாத அசத்தாகிய பாசத்தின் மாட்டெய்துவாரல்லரென்க.

வேறு முடிபாகலி னொருமைப் பன்மை மயக்கமின்மையுணர்க.

அருளினென்னு மைந்தாமுருபு ஏதுப்பொருட்கண் வந்தது.

இதமித்தலென்பது பெயரடியிற் பிறந்த வினைப்பெயர்.

இதஞ்செய்தல் பற்றுச்செய்தல்.

இன்றி இன்மையானென்க.

இன்மைக் கேதுக்கூறுவார் கதமிக் கெரிகதிரின் முன்னிருள்போ லேலாவசத்தென்றார்.

அசத்தைச்சார்ந்த சத்தாய் நிற்றலியற்கை யன்றென்பது "ஒன்று மிகினு மொளிகவரா தேலுள்ள,மென்று மகலா திருள்" எனப்புடைநூலாசிரிய ரோதியவாற்றானுமறிக.

ஆங்கேலா வசத்தெனக் கூட்டுக.

ஒப்புமைபற்றிக் கதமிக் கெரிகதிரென்றார்.

ஒப்புமையாதல் "எல்லையில்லவ னெரிதுள்ளினலென வெருண்டான்" என்பதனானுமறிக.

இவ்வைந்து வெண்பாவானு முறையேயிறைபணியினிற்பார்க்குப் பிராரத்தவினைமுதல்வன் சந்நிதியிலுடனூழாயொழிவதாகலின் மேலைக்குவினையேறுமாறில்லை யென்றும், அதுசெய்வோர் செய்திப்பயன் விளையுமாற்றாற் பெறப்படுமென்றும் செய்வோர் செய்திப் பயனன்றியும் விளைவது வாதனைமாத்திரையே யாதலானதுபற்றி வரும்வினை ஞானத்தானழியுமென்றும், அந்த ஞானம் வாதனைபற்றிச் சலிக்குமாறில்லை யென்றும், அது சலியாமைக்கேது இஃதென்றுமெடுத்துக்காட்டியஞ்ஞான தன்மம் பிரயோஜகியாமையை வலியுறுத்தவாறு காண்க.

ஏகனாகி நிற்றலான் மலவாதனை யின்றாகலும், இறைபணி நிற்றலான் மாயாகன்மங்களின் வாதனையின்றாகலும் பெறப்பட்டமையின் மலமாயை தன்னொடு வல்வினை யின்றென்பதனை வேறோ ரதிகரணமாக வைததோதல் வேண்டாவாயிற்று.

அற்றாயினு மவையில்லாததன் கண்ணுளதாகிய வைப்பாடு முதலாயின இறுதிச் சூத்திரத்தின் மும்மலங் கழீஇ யென்னுமதிகரணத்துட் பெறப்படும்.

இரண்டாமதிகரணம் முடிந்தது.

சிவஞானபோதத்திற்குத் திருவாடுதுறைச் சிவஞானயோகிசெய்த சிவஞானபாடியத்தில் இரண்டாவதுண்மையதிகாரத்துப் பயனியலில் முதற்பாதமாகிய விப்பத்தாஞ் சூத்திரம் முடிந்தது.

பதினொராஞ் சூத்திரம்.

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே.

எ-து. சூ-ம். எ-னின். பரமேசுரனது போதங்களைமண்ணுமா றுணர்த்துதனுதலிற்று. ஆன்மலாபம் மேலைச்சூத்திரத்தி னிறைபணிவழுவாது நிற்க வென்றவழிச் சிவன் முதலேயன்றி முதலில்லையென்றுஞ், சிவனுடைய தென்னறிவ தென்றுஞ் சிவனவனதென் செயலதாகின்ற தென்றும், இவைபிற்றைத் தன்செயலாக்கொள்ளா தவ்வா று நிற்குமாண்மாவினுடைய வறிவிச்சை செயல்க ளவ்விடத்தொன்றனை வியக்குமா றில்வழிப் புத்தர் கூறு மாலயவிஞ்ஞானம் போ

லச் சூனியமாய் முடியுமாலென்னு மாசங்கையை நீக்கியவற்றிற்கு விடையிது வென்பதுணர்த்துமுகத்தானே ஆன்மலாபமிரண்டினுள் முடிவாயெஞ்சி நின்ற சிவப்பேறு கூடுமாறுணர்த்தி யதற்கேதுக்கூறுமுகத்தானே ஏகனாகியவ்வாறு நிற்புழிப் பெறப்படுஞ் சம்பந்த மிதுவென்பது காட்டி மேற்கூறிப் போந்த பாசநீக்கத்துட்பெறப்படாதெஞ்சிநின்ற பிராரத்த வாசனையினொழியுங் கைமுதிய நியாயத்தானுணர்த்துதல்பயனோத்துளிரண்டாம் பாதமாகிய பதினொராஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

ஆசங்கை பற்றிய வியைபானே யதிகரணவியைபும் ஆன்மலாப மெனப்படும் பயனிரண்டனுள் பாசநீக்க முணர்த்திய பின்னர்ச் சிவப்பேறுணர்த்துதல் முறைமையாகலின் அம்முறைமை பற்றிய வியைபானே யோத்தியைபும், ஏகனாகியிறைபணி நிற்க வென்றவழி யவ்வாறு நிற்பித்தற்குரிய சம்பந்தமென்னை யெனவும், மலமாயை தன்னொடு வல்வினையின்றே யென்புழி வினையென்றதேற்புழிக் கோடலான் ஆகாமிய வினையாகவே யேனைப் பிராரத்தவாசனை கழியுமாறியாங்ஙன மெனவும், அவாய் நிற்றலின் அவ்வவாய் நிலைபற்றிய வியைபானே பாதவியைபும் பெறப்பட்டன.

அற்றேல், ஏகனாகி யிறைபணிநின்றார்க்கு இனிச்செய்யக்கடவ தொன்றின்மையானு மிருணீக்கமு மொளிவிளக்க முமுடனிகழ்ச்சியாமாறுபோலப் பசுத்துவநீக்கமுஞ் சிவத்துவவிளக்கமும் இடையீடின்றி யுடனிகழ்வனவாமாகலின் வேறோத வேண்டாமையானும், வடமொழிச் சிவஞானபோதத்துட் சுவானுபூதியாகிய சிவப்பேற்றைப் பத்தாஞ் சூத்திரத்துட் பாசநீக்கத்தோடொருங்கு வைத்தோதுதலானு மதனை யீண்டு வேறுவைத்தோதுத லமையுமா றென்னை யெனின்? அறியாது கூறினாய்; ஏகனாகி யிறைபணி நிற்பது துரியநிலை யெனப்படும் அருணிலையேயாகலின் ஆன்

ந் மலநீங்கிய துணையானே சுகப்பிரபை மாத்திரையே விளங்குவதன்றி யதீதநிலைக் கண்ணதாகிய சிவத்துவ விளக்கமெனப்படும் பரம சுகந்தோன்றாமையின் அது விளங்குதற் கவனருளா லல்லதொன்றையுஞ் செய்யாமை மாத்திரையானமையாமையின் வேறுமாண்டுச் செய்யக்கடவ துண்டென்பது தானே போதருதலானும், இருணீக்கத்தி னொளிவிளக்கம்போலப் பசுத்துவ நீக்கத்தின் அருள் விளக்க மாத்திரை யுடனிகழ்வதன்றி ஆனந்த விளக்க முடனிகழாமையானும, அருள் விளக்கத்திற்கு மானந்த விளக்கத்திற்குந் தம்முள் வேறுபாடு முன்னர்க் காட்டப்படு மாகலானும் வடமொழிப் பத்தாஞ் சூத்திரத்தின் பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்திய வழிப் பாசநீக்க மாத்திரையே முத்தியென்னுஞ் சமயத்தாரை மறுத்தற் பொருட்டுப் பாசநீக்கம் பெற்றோன் சுவானுபூதியுடைய னுவனெனப் பதினொராஞ் சூத்திரஞ் செய்தற்குத் தோற்றுவாயாந் துணையே செய்துகொண்டு சுவானுபூதி நிகழ்ச்சிக்க ணேதற்பாலன வெல்லாம் பதினொராஞ் சூத்திரத்தே கூறிப் போந்தமையின், ஒன்பதாஞ் சூத்திரத்தி லெடுத்துக்கொண்ட ஆன்மசுத்தி பண்ணுமாறு பத்தாஞ் சூத்திரத்திற் சென்றியைந்து முடிவு பெற்றாற்போலப் பத்தாஞ் சூத்திரத்தி னெடுத்துக்கொண்ட சுவானுபூதிநிலை பதினொராஞ் சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப்பெறுதலென்பதின் மலைபாமைப் பொருட்டாசிரியர் சுவானுபூதிமானுவனென்பதனையும் அரன்கழல் செலுமெனப்பதினொராஞ் சூத்திரத்திற் றானே யொருங்கு வைத்தோதினாராகலி னதுமாறன்மையானு, மவற்றின் மொழிபெயர்த்தல் யாப்பானன் செய்துரைப்பான் புகுந்த வாசிரியர் வேறுபடச் செய்துரையாராதலானுமென்பது.

இஃதறியாதார் பத்தாஞ் சூத்திரம் பாசக்ஷயம் பண்ணுமா றுணர்த்திற்றெனவும், பதினொராஞ் சூத்திரம் பரமேசுரனது சீபாதங்களை யணையுமா றுணர்த்திற்றெனவும் ஆகி

ரியர் தாமே எளங்கெடுத் துரைத்த கருத்துரையு நோக்கா பத்தாஞ் சூத்திரத்தானே யதீதநிலையுங் கூறியொழிந்தா ரெனக்கொண்டு பதினொராஞ் சூத்திரம் பன்னிரண்டாஞ்சூத்திரம் போலச் சிவன்முத்தி நிலையினிகழு மணைந்தோர் தன்மையே கூறிற்றுமெனத் தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. அது போலி யென்றொழிக.

வடமொழிப் பத்தாஞ் சூத்திரத்துச் சுவாநுபூதிமானுவனென்பதனைப் பதினொராஞ் சூத்திரத்துப் யத்தி செய்வென் றதன்பின்னாகக் கொண்டுகூட்டிவைத் துரைப்பதே யதன் கருத்தென்பது தெற்றெனவுணர்ந்து கொள்க.

அஃதாண்டுக் கூறியவா றுணர்ந்து பத்திசெய்த வழியன்றிப் பெறப்படாமையின் அஃதாமாறு முன்னர்க் காட்டுதும்.

இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு. காட்டக் காண்பதாகிய கண்ணுக்குருவத்தைக் காணுமாறு பிரிப்பின்றி யுடங்கியைந்து நின்றதற்கதனைக் காட்டித் தான்காண்கின்ற வான்மாவைப்போல அறிவிக்க அறிவதாகிய வவ்வான்மாவிடயத்தை யறியுமாறு முதல்வன் பிரிப்பின்றி யுடங்கியைந்து நின்றதற் கதனை யறிவித்துந் தானறிந்து வருதலான் இவ்வா றத்துவிதமாய் நின்றுதவி செய்துவரும் பெருங்கருணையை மறவாது கடைப்பிடித்துச் செய்யு மன்பானே அம்முதல்வன் றிருவடியாகிய சிவானந்தாநுபூதியைத் தலைப்படுமென்றவாறு.

காணுமென்னு மூவமையடையைப் பொருளினுங் கண்ணென்னும் பொருள் வினையை யுவமையினுங் கூட்டிக் காணுமென்பதனை விரித்துங்கூட்டிக் கண்கொட்டலென் பதனை "விளக்கு வெகுளார் விழுப்பிறோர்" என்புழிப் போலக் காட்டிக் காண்டலென மாறிவைத் துரைத்துக்கொ

ள்க. அபராமைக்குச் செயப்படுபொரு ளதனையே யென்றெ டுத்துக் கொண்டுரைக்க.

அபராவன்பு அபராமையாகிய அன்பென "ஆறுசெ ன்ற வியர்போல நின்றது.

இக்கருத்தேபற்றி "இத்தையாயுமறிவுடையனுயன்பு செய்ய" வென்றார் வழிநூலாசிரியரும்.

உள்ளத்தையென்ப துருபுமயக்கம்.

அறிவிச்சை செயல்களி னிகழ்ச்சியாகிய வபராமையும், அன்பும் அரன்கழல்சேறலு முறையே காரணகாரியங்களா யவ்வொருபொருண்மே லொருங்குநிகழுமென்பார் அபராவ ன்பினரன்கழல் செலுமேயென்றார்.

இஃதென் சொல்லியவாறோவெனின்? ஆன்மாவை யின் றியமையாத கண்ணோருருவத்தைக் காணுங்கானன்மபோ தங் கண்ணொளி யெனவேற்றுமை யின்றியுடனாய் விரவிநி ன்று கண்ணுக்குக்காட்டிய வுருவத்தைக் கண்கண்டதென் றும் கண்ணையதிட்டித்து நின்ற வான்மாக் கண்டதென்றும் பிரித்தறியப்படுமாறின்றி யிருவகைக் காட்சியுமொன்றனை யொன்றுவிடாம லத்துவிதமா யொருங்கே நிகழுமுறைமை போல, முதல்வனை யின்றியமையாத வான்மா வொருவிடய த்தை யறியுங்கானு முதல்வனது சிற்சத்தி ஆன்ம சிற்சத்தி யெனத்தானென வேறின்றியுடனாய் விரவிநிற்ப முதல்வனு மான்மாவி லவ்வாறு விரவிநின் றறிவித்த விடயத்தை யான் மா வறிந்ததென்றும் ஆன்மாவை யதிட்டித்துநின்ற தானறி ந்தானென்றும் பிரித்தறியப்படுமா றின்றி யிருவகையறிவு மொன்றனை யொன்று விடாம லத்துவிதமாயொருங்கே விட யித்துச் செல்லுமாறு செய்துவரு மிவ்வுபகாரம்பெத்த முத் தியிரண்டினு மொரு பெற்றியாயுண்மையின் ஏனையவற்றை யெல்லாங் கைவிட்டு முதல்வனிடத்தே[illegible] யவனருளால

லதொன்றையுஞ் செய்யானாய் நின்ற வான்மா முதல்வனவ்வா றத்துவிதமாயுடனின்று கருணையா னுபகரித்துவரு முரிமையை நோக்குந்தோறு நோக்குந்தொறும் அப்பொருளின்கட் செல்லுமிச்சையடங்காது மீதூர்தலி னவ்விச்சையே தானாக விளங்கித்தோன்றும் பேரானந்தத்தை யனுபவிக்கப் பெறுமென மேற்கூறிய வாசங்கையை நீக்கி யறிவிச்சை செயல்கண் மூன்று மிம்முறைமையானம்முதல்வனையொருங் கேவிடயித்து நிற்குமாறு விளக்கி யதீதநிலையி னியல்பு கூறிய வாறுமென்க.

இக்கருததேபற்றி "அறிவொளிபோற் பிறிவரு மத்துவித" மென்றார் புடைநூலாசிரியரும்.

அங்கிபு மொன்றிற்றங்கினின் றல்லது தன்றொழி னடத்தா தாகலி னதுபோல முதல்வன் செய்யுந் தொழிலனைத்து மான்மாவினிடத்துத் தங்கிநின்றே செய்வனென்பதுணர்ந்து கொள்க.

இதனுள் காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போலெனவே, அவ்விரண்டிற்குமுளதாகிய சம்பந்தமத்துவிதமென்பது பெறப்படுதலி னதுவே யவனே தானேயாகிய வந்நெறி யேகனாகி நிற்றற்கண் ணுளதாகிய சம்பந்தமென்பதூஉங் காட்டிக் காணுமெனவே, கைமுதிக நியாயத்தான் முதல்வனையே விடயிக்கும் ஞானிக ளுடம்பினிகழும் பிராரத்த முழுவதுமவர்களிடமாய் நின்று முதல்வனே யேன்று கொள்வனாகலி னவருக்கவ்வாதனை தாக்குமாறில்லை யென்பதூஉம் பெறப்பட்டமையி னவாய்நிலையை நிரப்பியவாறு மறிக. அத்துவிதமாத லிவ்வியல்பிற்றென்பது பொதுவதிகாரத்திறுதியில் விளங்கக்காட்டினாங் கடைப்பிடித்துக்கொள்க, இவ்வாறன்றிக் காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற்காண வுள்ளத்தைக் கண்டுகாட்டலென்பதற்குக் காட்டிவரு முபகார முணர்ந்து தலே கருத்தென் றுரைப்பாருமுளர். அது 'விளம்பியவுள்

னந்து' என்னுஞ்சூத்திரத்துத் திரோதானசத்தியிலக்கணங் கூறுமுகத்தாற் கூறப்போந்தமையி னதுவே மீண்டுக்கூறிற் றெனிற் கூறியது கூறலாய் முடியுமாகலானும், ஆசிரியர் கண்ணழிந் துரைப்புழியவனு மவற்றது விடயத்தை யுணருமெனக் காணுமுபகார மாத்திரையே யெடுத்துக்கொண்டுரைத்த வாசிரியர் கருத்தன்றென்பது தெற்றென விளங்குதலானுங், காணுமுபகாரங் காட்டுமுபகாரத்தின் பின்னர்த்தாய் நிகழுமென்ப துணர்ந்துகோடற் பொருட்டதுவு முடன் கூறப்பட்டதன்றி யதனு னீண்டைக் காவதோர் பயன் வேறின்மையானும் அவருரைப்பனவெல்லாம் போலியென் றொழிக.

அற்றேல், வடமொழிப் பதினொராஞ் சூத்திரத்திற் காட்டுவனென்பது மாத்திரையேயன்றிக் காண்பனென்பது முடன்கூறிற் றில்லையாலெனின்? அறியாது கூறினாய்; ஆண்டுக் காட்டுவானு மென்ற வும்மை காண்பானுமாமென எதிரது தழீஇ நிற்றலிற் கூறுமை யாண்டையதென்க. அவ்வும்மைக்குப் பொருள்காணமாட்டாதார் பாடம் வேறாகக்கொண் டோதுப.

இதனுள் காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்போல் காணவுளத்தைக் காட்டிக் காண்பதென்பதோ ரதிகரணம். அதனை யயராவன்பி னரன்கழல் செலுமே யென்பதோரதிகரணம். ஆக விரண்டதிகரணத்த திச்சூத்திரமென் றுணர்க.

அவற்று ளீசுர அவிகாரவாதி முதலியோரை மறுத்து ஆன்மா வொன்றனை விடயிக்குங்கால் முதல்வன் செய்யுமுபகாரங் கூறுமுகத்தானே அத்துவிதநிலை யுணர்த்துதற்கெழுந்தது முதலதிகரணம்.

முதலதிகரணம்.

மே-ள். அவனுமவற்றது விடயத்தை யுணருமெனவரும்.

அவன் முதல்வன்.

அவற்றது ஆன்மாக்களது; ஆருவது அறிதற் கிழமைக் கண் வந்தது அன்னபிறவுமென்றதனாற் கொள்க.

உம்மையான்மா வுணர்தலேயன்றி முதல்வனதனை யுணருமென இறந்ததுதழீஇயிற்று.

விடயம் பெத்தத்திற் பிரவஞ்சமும் முத்தியிற் சிவமுமாம்.

ஆகவே முதல்வன் றன்னையறிதலும் ஆன்மாவின்பொருட்டு ஆன்மாவிற்றங்கினின் றறியுமென்பதாயிற்று.

அற்றேல், கண் சடமாகலானுங் காண்டற்பய னான்மாவுக்கே யாகலானும், கண்காண்புழி யான்மாவுமுடனின்று காண்டல் பெறுதும். கண்போ லான்மாச் சடமன்மையானும், அறிதற்பயனான்மாவுக்கேயன்றி முதல்வனுக்கின்மையானும், முதல்வனு மவற்றது விடயத்தை யுடனின் றறியுமென்றற்குப் பிரமாண மின்றாலென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கெழுந்தவேது.

ஈண்டிவ் வான்மாக்களவனை யின்றியமைந்தொன்றையும் விடயியாவாகலான் எனவரும்.

இ-ள். கண்ணொளிக்கு விளக்கொளி தன்னொடுங் கலந்து தன்னொடுகூட உருவத்தினுங்கலந்தாலன்றி அவ்வுருவத்தைக் காணுமுறைமையின்மையின் அதுபோல அறிவித்தாலன்றி அறியுமியல்பில்லாத ஆன்மாக்களும் முதல்வனதுணர்வு தம்மொடு விரவிநின்று தம்மொடுகூடச்சென்று விடயத்தும் விரவிநின்று லறிவுவிளக்கி யவ்விடயத்தை அறியுமியல்பினவன்றித் தனித்தமையவுமாட்டா, தனித்தொன்றை விடயிக்கவு மாட்டாவாகலான் அறிவுவிளங்குதன் மாத்திரைக்கேயன்றி விடயத்திற் சென்று பற்றுதற்கண்ணு முதல்வனுடனிற்றல் பெறப்படுதலான் ஈண்டவனுமவற்றது விடயத்தை யுணருமென மேற்கொண்டதென்றவாறு.

அமைந்து விடயியா என்பது "உரத்துத்தரியா" தென்றாற்போல வேறுவினையாய் நின்றமையின் இன்றியென்ப திரிடத்தும் கூட்டியுரைக்கப்பட்டது.

அவனை யின்றியமையாமையிற் காட்டுமுபகாரம் விளங்கிறாற்போல அவனை யின்றி ஒன்றையும் விடயித்தலின்மையாற் காணுமுபகார மினிது விளங்குமென்பார் அவனை யின்றியமைந்தொன்றையும் விடயியாவென்றார்.

உம்மை முற்றும்மை.

விடயியாவென்றது பெயரடியிற் பிறந்த வெதிர்மறைவினை.

இவ்வேதுப்பொருளையே யெடுத்துக்கொண்டு வழிநூலாசிரியர் "எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றையறிந் தியற்றிடா வுயிர்களீசன் றானுஞ், செவ்விதினியுளம்புகுந்து செய்திடெலா முணர்ந்து சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்துநிற்ப, னிவ்வுயிர்க ளோற்றும்போ தவனையின்றித் தோற்றா வீற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு, மவ்வுயிர்போ னின்றிடுவ னாதலானு மரனடியை யகன்று நிற்ப தெங்கே யாமே"யென விரித்தோதியவாறு பற்றியுணர்ந்துகொள்க.

இதனுளெவ்விடத்து மென்றது பெத்த முத்தி யிரண்டினு மென்றவாறு.

அரனடியை யகன்றுநிற்ப தென்றது அரனடியை விட்டுத் தனித்துநின்றறிவ தெங்கே யோரிடத்துமில்லை யென்றவாறு.

"இறையடியையின்றி யமைந்தொன்றை யியற்றிடா வுயிர்க" ளெனவும், ஈசன்றா னெங்குமாய்ச் செறிந்து நிற்ப னெனவும் கூறியது விடயத்தின்கட்படு நிகழ்ச்சிக்கெனவும், இவ்வுயிர்களோற்றும்போ தவனையின்றித் தோற்றாவெனவும் அவ்வுயிர்போ னின்றிடுவனெனவுங் கூறியது ஆன்மா

யின்கட்படு நிகழ்ச்சிக்கெனவுங் கொள்க. அவ்வாறுங்கொள்ளாக்கால் இருகாற்கூறுதல் புனருக்தியாய் முடியுமென்றொழிக.

விளக்கொளி கலந்த விடத்தும் வேண்டப்படுமென்பது "விளக்கொளிகலந்தவற்றை" யெனவும், "விளக்கின்சோதிகலந்திடு" மெனவும் புடைநூலாசிரியர் வகுத்தோதியவாற்றானு மறிக.

அற்றேல், லக்ஷணமாக பரமுத்தியின்கணான்மாவுக்கு விடயமாவதொன்றின்மையின் எவ்விடத்து மலற்றது விடயத்தை முதல்வனுணருமென்றல் செல்லாதாலெனின்? அறியாது கூறினாய்; "சுத்தவனுபோகத்தைத் துய்த்தலானு" மெனவும், "ஒன்றிநின்றுணரு முண்மை" யெனவும் பிறாண்டுமிவ்வாறேயோதுதலின் ஆன்மாப் பரமுத்தியிற் சிவானந்தானுபூதியை விடயித்த லுண்மையா னதுவுமுதல்வனை யின்றியமையாமையின் முதல்வனு மவ்வனுபூதியை யவ்வான்மாவிற் றங்கிநின்றுணர்த லுண்மையின்.

இக்கருத்தேபற்றியன்றே சிலவாகமங்களின் முதல்வனுந் தன்னானந்தத்தைத் தானனுபவிப்பனென் றோதியதூஉமென்க. ஆண்டனுபவிப்ப னென்பதற்குத் தாற்பரியமறிவனென்பதேயாம். அக்கருத்தறியாத சிவாத்துவித சைவர்முதலியோர் முதல்வனுந் தன்னானந்தத்தை யனுபவிப்பனெனக் கூறுப. அமுத்தி யறிதலே யனுபவித்த லென்னுஞ்சொற்குப் பொருளாகலின் அவ்வியல்பு ஆன்மாவுக்கேயன்றி முதல்வனுக்கில்லையென மேற்காட்டிப் போந்தமையானும், ஆனந்தரூபமே முதல்வ னாகலின்றுன்னே தன்னைப்புதிதாக அனுபவித்தல் வேண்டாமையானும், முதல்வன்செய்யுஞ் செயலெல்லாந் தன்பொருட்டன்றி யான்மாவின் பொருட்டே யாமென்பது மேற்கூறிப் போந்தமையானும், அவர் மதம்போலியென்றொழிக.

அற்றேல், முதல்வன்காட்டுதன் மாத்திரையா னமையு மாயி னன்றே காந்தங்கண்ட பசாசத் தனையென்றவாறே விகாரமெய்தாமை பெறுதும்; அவ்வளவினன்றி ஆன்மாக்க ளுடனின்றவற்றொ டொப்பக் காண்டலுஞ் செய்யுமாயின் ஆன்மாக்கள்போலக் கட்டுற்று விகாரியாவான்சேற லொரு தலையாமா லென்னு மாசங்கையை நீக்கி யேதுவை வலியுறுத் துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

ஐந்தையு மோக்க வுணரா தவற்றுணர்வ
தைந்தும்போ னின்றுணரு மாகலா—லைந்தினையு
மொன்றேன்றுப் பார்த்துணர்வ துள்ளமே யெவ்வுலகு
மொன்றேன்றுப் பார்க்கு முணர்ந்து. எனவரும்.

ஆன்மாச் சுவையொளி யூறோசைநாற்றமென்னு மை வகை விடயங்களை யுணரு முணர்ச்சிக்கண்ணே தன்னியல் பிதுவென வேறு காணப்படுமாறின்றியவ்விடயங்களே போ லவது வதுவாய்ச் செறிந்து நின்றறியு மியல்பிற்றாகலா னவ் வைந்து மொருங்கேயறியமாட்டா தொரோவொன்றாக வறி ந்தனுபவிப்பது ஆன்மாவேயாம். அதுபோலச் சதசத்தாய்ப் பலதன்மைப்படு மியல்பின்றி யென்றுமொரு பெற்றித்தா கிய பரம்பொருள் எல்லாவான்மாக்களுடைய விடயங்களையும் ஏகமா யொருங்கே பொதுவகையானறிந் தவ்வான்மாக்களுட னின்று சிறப்புவகையானறியு மாகலான் உடனின்றறிதலே பற்றி யான்மாப்போலப் பரம்பொருள் விகாரியாவான் சேற லின்றென்க.

ஆகலான் உடனின்றறிதலே பற்றி ஆன்மாப் போலப் பரம்பொருள் விகாரியாவான் சேறலின்று என்பதுகுறிப்பெ ச்சம்.

இது சொற்பொருட்பின் வருநிலே,

உணராதுணரு மென. வியையும்,

அவற்றுணர்வ தெனச் சரியை யுள் வழித் தன்னுருபு நிலையாது வந்தது இலேசாற் கொள்க.

உணர்வ தென்றது தொழிற்பெயர் மாத்திரையாய் நின்றது "உறங்குவது போலு" மென்றாற் போல.

வினை செய்யிடத்தின் வருமேழாவது விரித்துரைக்க.

அற்றே, லீண்டுக்கூறிய முறைபற்றி யான்மாக்களுக்கு விடயமாவதொன்றனையே முதல்வன் சவிகற்பமா யுணர்வ தன்றி யேனையவற்றை யவ்வாறுணர்வானல்ல னெனின், மேலிறைபணி யதிகரணத்தின் முற்செய்வினையுந் தருவான் முன்னென்றது சாலாதாய் முடியுமன்றிச் சிவன் முத்தருக்குப் பிராரத்த வினை தாக்காதுடலூழா யொழியு மெனவும், ஓரோவழித் தாக்கினும் வாதனையாய் நொய்தின் வந்து தாக்குதல் மாத்திரையே யாமெனவுங் கூறுதலி னதுதருவான் முன்னுதற் கோரியை யில்லையாலென்னு மாசங்கையை நீக்கி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டு முதாரணம்.

ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினா—லேகமா
யுள்ளத்தின் கண்ணானே னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணானே வுற்று. எனவரும்.

முதல்வன் றிருவடிகளின் நானென வொன்றில்லென்று தானேயென ஏகமாகி நின்றுகொண்டே பிராரத்த வினைக் கீடாக வரும் விடயத்தை யுணர்வாராயினதுதா னச் சிவன் முத்தர்க்கு வினைப்பயனுதலின்றிச் சிவபோகமாய் விளைகின்ற பொலிவானே அவ்வாறுணர்வாரா லுணரப்படும் விடயத்தை யவ்வுணர்வி னிடத்தாற் பொருந்தி யறிந்து தனக் காக்கிக்கொள்ளான் கொல்லோ பெத்த முத்தியிரண்டினு மத் துவிதமா யவ்வறிவின்க ணீங்காதுடனின் றுணர்த்தியு முணர்ந்தும் வரு மம்முதல்வனென்க.

ஏகமாயுள்ளத்தின் கண்ணான் உள்குவாருள்கிற்றை யுள்ளத்தா லுற்றுக் காணானேனென்னு மிசை யெச்சத்தா லவ்வாறுரைக்கப்பட்டது.

நில்லாதுணர்தலைப் பிரித்தமையினேகாரம் பிரிநிலைக் கண் வந்தது.

இணையடிக ளென்புழிக் கண்ணுருபு தொக்கது. "ஐயுங் கண்ணு மல்லாப்பொருள்வயின், மெய்யுருபு தொகா விறுதி யான" வென்பவாகலின். உணரவென்னுஞ் செயவெனெச்சம் மழை பெய்யக்குளநிறையு மென்புழிப்போலக் காரணப் பொருட்டாய் நின்றது.

தெளிவுபற்றி விளைந்ததென விறந்தகாலத்தாற் கூறினார்' விளைந்த பொற்பினானென்றமையிற் போகஞ் சிவபோகமாதல் பெற்றாம்.

"செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல், ஆக்கந் தானே காரண முதற்றே" என்பவாகலி னாக்கமுங் காரணமு மடுத்து வந்தது.

ஆறாமை நீங்காமை.

ஓகாரம் எதிர்மறை.

இஃதிவ்வதிகரணப் பொருள்பற்றி முற்செய் வினையுந் தருவான் முன்னென மேற்கூறிப் போந்ததன்கண் ணாசங்கை நிகழாமைப்பொருட்டதனை வலியுறுத்துதற்கெழுந்த தென்பது. இணையடிகளி னேகமாய்நின்று கண்டதோர் பொருளை யந்தக்கருத்தினாற் காண்பார்க் கதுசிவபோகமாய் விளையுமென்பது, "பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய்" எ-ம், "உடம் [illegible]கெடா முற்று சிற்றின்ப, முடங்கத்தம் பேரின்பத் தாக்கி" எ-ம், "காணுங்காரணங்களெல்லாம் பேரின்பமெனப் பேணுமடியார்" எ-ம் பிறாண்டு மிவ்வாறே யோதியவாற்று ணர்க.

இனி இவ்வெண்பாவிற்கு ஒன்றெனப்படு மான்மா ஏகமாய்நின் றிணையடிகளை யுணரவே, போகமாய் விளைந்த பொற்பை யுடையான் அதுவேயுமன்றி ஆன்மாவுக்குக் கண்ணெனப்படு மறிவுமாயினு னாகலான் அம்முதல்வன் உள்குவாருள் ளிற்றை யுள்ளத்தாற் காணுனேனென் றுரைப்பாருமுளர். அஃததிகரணத் தெடுத்துக்கொண்ட பொருளோடியையாது வெற்றெனத்தொடுத்தலாய் முடியுமென்பதுணர்ந்துகொள்க.

இவ்வதிகரணத்தாற் போந்தபொருள் அவையேதானேயாயென முதல்வன் றாலவைந்தொழில் செய்யுமா றுணர்த்து முகத்தானும், தாந்தம் முணர்வின்றமியருளென அதி சூக்கும வைந்தொழில் செய்யுமாறுணர்த்து முகத்தானும், பொதுவகையாற் பெறப்பட்ட வத்துவிதநிலையை அவ்வதிசூக்கும வைந்தொழிற்கட்படும் விசேடத்தின் மேலிட்டுச் சிறப்புவகையாற் பெறுவிக்கு முகத்தானே பெத்த முத்தியிரண்டினும ஆன்மாக்களுக்குவரும் பயனை முதல்வனே யுடனாய்நின் றேன்றுகொண்டு அவரவர் செய்யுஞ் செய்திக்குப் பயன் விளைத்து நிற்பனென்பது விளக்கியவாறுமென்க.

இஃதாசிரியர் தாமே வருகின்ற வதிகரணத்தின் விளக்குகின்ற வாறுபற்றியு முணர்ந்துகொள்க.

எனவே பெத்தர்க்கு வரும் பயனு முடனாய்நின் றேன்று கொள்ளு முதல்வன்.

உடல் பொருளாவி முழுவதும் அவனுடைமை யெனக் கொண்டு தானஞ்செய் தொழிதுப் பரமே பார்த்திருப்பவன்றிப் பதார்த்தங்கள் பாராராகிய சீவன்முத்த ருடம்பு கொண்ட வினைப்பயன் ஒருவாற்றானு மவர்க்குத் தம்தாதல் செல்லாமையி னெவ்வாற்றானு முதல்வனதே யாமென்பது கூறுமையே விளங்குமென மேற்பெறப்படாதெஞ்சி நின்ற பிராரத்தவினைத்தொடர்பவர்க்கு இன்றுமாறு கைமுதிக நியாயத்தால் விளங்கியதூஉ மாயிற்று.

பெத்தர்க்கு வரும் வினைப்பயனும் முதல்வனே யுடனாய் நின் றேன்றுகொள்வ னாகலா னன்றே "யாதொரு தெய்வங் கொண்டீ ர்த்தெய்வ மாகி யங்கே, மாதொரு பாகனார் தாம் வருவர்" எ-ம், அங்குநாஞ் செய்யுஞ் செய்திக்காணவைப்பா லளிப்பன் எ-ம், "அறிவாயறிகின்றானே" எ-ம் இவ்வாறோதி யதூஉம் உலகத்து ளொன்றனை யீவாரு மேற்பாருஞ் சிவார் பயண மெனக் கருதார்த வழிக்குற்றமென் றாகமங்கள்கூறி யதூஉ மென்க.

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

—:*:—

முதலதி கரணத்தின் ஏனைச்சமயத்தாரை யெல்லாம் மறுத்துச் சித்தாந்த முத்திநிலை பெறுத்துஞ் சுத்தாத்து வித நிலையை யுணர்த்தியவழி யதனு லதனைப்பெறுமா றியா வனமென்னு மவாய் நிலையை நிரப்பி ஆன்மலாப மிரண் டனு ளொஞ்சிநின்ற சிவப்பேறு கூடுமா றுணர்த்துதற் கெழு ந்தது இரண்டாமதி கரணம்.

இனிப் பத்தியினான் மறவாதேத்த வவனது சீபாதத் தை யணையும் எனவரும்.

இ - ள். சூத்திரத்தி னுரைத்தவாறு பற்றிக் கண்டு கொள்க.

அறிவிச்சை செயல்கண் மூன்றும் ஒருங்கே யுடனாய் நிகழு மியல்பின்கண் ணெவ்வா றுரைப்பினு மமையுமாயினும் முதற்க ணிகழு முறைமையே யீண்டெடுத்துக் கோடலின் அதற்கேற்பச் சூத்திரத்து ளுரைத்தவாறே யீண்டும் மற வாது பத்தியினு லேத்த வென்றுரைத்தலே கருத்தாகக் கொள்க.

வத்துத லீண்டு அருள்வழி நிற்றன் மேற்று.

அன்பு பத்தி காதல் என்பன இச்சை மீதூர்தற்பொருள வாகலின் அது பரமுத்தியினு முண்டென்ப துணராதார், பத்தியாவது சீவன்முத்தநிலைக்கே செய்யப்படு மொரு சாதகம் போதுமென மயங்கிக் கொண்டு தமக்கு வேண்டிய வாறே யுரைப்ப.

பரமுத்தி நிலைக்கண் ணிச்சை நிகழாதவழிச்சிவபோக மனுபவ மாதல் செல்லாமையானும், சீவன்முத்தி நிலைக்கே கூறுவ தொன்றாயிற் செம்மலர் நோன்றா ளென்னுஞ் சூத்திரத்தொருங்கு வைத்தோதவே யமையுமாகலிற் சூத்திரம் வேறு செய்ய வேண்டாமையி னஃதாசிரியர் கருத்தன்மை யானும் அது பொருந்தாமை யறிக.

அற்றேல், ஒருபொருளை யறிந்த மாத்திரையே யதன்க ணிச்சை நிகழுமாறு போல இச்சை நிகழ்ந்த மாத்திரையே யதனைப் பெறுதலுங் கூடுமென்ப துலகத்தின்மையால் ஈண்டு பத்தி மாத்திரையாற் சீபாதத்தை யணையப் பெறுமா றியாங்ஙன மென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்குக் கண்டுகாட்டலினென மேலையதி கரணத்திற் கூறிப் போந்ததன் றாற்பரியம் விளக்குவா னெழுந்த வேது.

அவனன்னிய மின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்து நிற்றலான். எனவரும்,

இ-ள் அம்முதல்வன் உலகத்தார் போலன்றிப் பெத்த முத்தி யிரண்டினும் அத்துவிதமா யுடனின்று கொண்டு யார் யார் யாது செய்கின்றா ரென்றறிந் தவரவர்க் கவ்வச் செய்திக்குத்தக்க பயனை அவ்வப் பொழுதே விளைவிப் பதனால் இனிப் பத்தியினான் மறவாதேத்த வவனது சீபாதத்தை யணையுமென மேற்கொண்ட தென்றவாறு.

அற்றேல், முதல்வன் பெத்தமுத்தியிரண்டினுந் திரி பின்றி யொரு பெற்றித்தாகிய வத்துவிதமாய் நின் றுபகரி

ப்பனுயின் யாதானு மொரு வாற்றாற் பசுபாசம் போலப் பெத்த நிலையினு முதல்வன் புலனாதல் வேண்டுமா லென்னு மாசங்கையை நீக்கி யேதுவை வலியுறுத்து முகத்தானே யப ரமை யெனப்படு மறிவு விளங்கு முறைமை யுணர்த்துதற் கெடுத்துக் காட்டு முதாரணம்.

அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீச—னருட்கண்ணாற்
பாசத்தை நீக்கிப் பகலலர்த்துந் தாமரைபோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர். எனவரும்.

படலவிசேடத்தானொளிமழுங்கிய கண்ணிடத்து, மது நீங்கி யொளிவிளங்கிய கண்ணிடத்தும் வேற்றுமையின்றி யாதித்தன் சமமாய் நின்றாலும் அவ்வாதித்த னொளிமழுங்கிக் காட்சியில்லாத கண்ணுக்கு மாலையிருட்டாய்த் தோன்றுவ னன்றி யொளிவிளங்கிய கண்ணுக்குத் தோன்றுமாறுபோல விளங்கித் தோன்றா னதுபோல முதல்வன் பெத்தர்மாட்டும் முத்தர்மாட்டும் அத்துவிதமா யொப்பநின்றாலும் பாசத்தா னாகிய வேகதேச வறிவுடைய பெத்தர்க்குப் பாசஞானமே யாய்த் தோன்றுவன் அப்பாசப் பிணிப்புக்கேதுவாகிய அபக்குவ நீங்கித் தனது திருவருட் பார்வையாற் பத்திசெய்து தன்னையறிதற்குரிய பக்குவமுடையா ராயினார்க்குப் பாசத் தானாகிய வவ்வேகதேச வறிவை மாற்றிப் பூரணவறிவு விரியச் செய்தவ ரெதிரே விளங்கித் தோன்றுவன்; தனது கிரணந் தீண்டிப் பக்குவ மெய்திய தாமரை மலருக்கு முன்னுள தாகிய கூம்புதலைமாற்றி அவிழ்ந்து மலரச்செய்யும் ஆயிரங் கதிர்ப் பரிதிபோல வென்க.

பொருள்வினைவ யுவமையினும் உவமவினையைப் பொருளினுங் கூட்டி யுரைக்க.

ஏகாரம் பிரிநிலை; தேற்றமெனினு மமையும்.

அல்லும் காணாரும் பாசமும் பகலும் ஆகுபெயர்.

தன்னுணர்ந்தாரெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார்.

தோன்றுவனென்பது சொல்லெச்சம்,

இதனானே முதல்வன்பெத்த முத்தியிரண்டினு மொப்ப நிற்பினும் ஒப்பவிளங்காமை யுவமைமேல் வைத்துணர்த்து முகத்தானே யான்மாவுக்கு முத்திநிலையி னறிவு நிகழுமாயினும் அது முதல்வன தறிவாகிய வருட்கண்ணை யின்றியமையாமையுங் கூறப்பட்டன,

இனி இவ்வாறு பக்குவப்படுத்திப் பாசத்தை நீக்கி யறிவை யலர்த்துவதாகிய வருட்கண் புதுவதா யொருகாலத்தி னிகழ்ந் தொழிவதன்றென அதனதுபகார முணர்த்து முகத்தானே அன்பெனப்படு மிச்சை விளங்குமுறைமை கூறுதற் கெடுத்துக்காட்டு முதாரணம்,

மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
முன்னு மரனே மலந்துரந்து—தன்னில்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் றான், எனவரும்.

கண்ணின்க ணிலைபெற்றுளதாகிய விருளைப் பிறைமதியுடனாய்நின்று முறைமுறையா னுந்தித் தள்ளியவாறுபோல ஆன்மாவைத் தனது திருவடிக்கண் சேர்த்துக் கோடற்குளதாகிய விச்சை மிகுதியா னவ்வான்மாவின்க ணனாதிமுதலத்துவிதமாய் நிலைபெறு முதல்வன்றானே அவ்வான்மாவின் கணிலைபெற்ற ஆணவமலத்தை யுந்தித் தள்ளிக் காந்தக்கல் லிரும்பைத் தன்கூ ணீர்த்துக்கொண்டு தன்வசமாய்ப் பற்றச்செய்தல்போலத் தனது திருவடிக்கட் சேர்த்துத் தன்வசமாய்ப் பற்றிக்கொண்டு நிற்கும்படி பண்ணுத லவனுக்கொருஞான்றுஞ் சலித்தொழிதலில்லை. அவ்வாறு சலியாது செய்யுமாயினு மதனால் விகாரியாவா னல்லன், எல்லாத் தொழி

தூந் தன்து சந்நிதிக்கட் சத்திசங்கற்ப மாத்திரையாய்ப்பாரி யின்றி விளையாட்டுப்போலச் செய்பு மம்முதல்வனென்க.

மதியென்றது, ஈண்டுப் பூருவபக்கத்துச்சந்திரனை. "அந்த வருளுனக்கிங் கர்தாரமா யல்லி, விந்துவென வெறிந்திட்டு" என்பது மது.

எகாரம், மலத்தைத் துரத்துதற்குக் காரணம் அவ்வன் பெனப்படு மிச்சையேயன்றிப் பிறிதில்லை யென்பதுணர்த்தி நிற்றலின் பிரிநிலைக்கண் வந்தது.

வான்பான் பாக் கென்பன தொழிற்பெயர் விகுதியுமா மென்பது "கர்ப்பாக் கறிந்"தென்பதனு லுணர்க.

உவமவுருபு விரித்துரைக்க.

செய்வானது சலிப்பின்மை செய்கைமே லேற்றப்பட்டது.

சலிப்பிலென்றதுபற்றி அங்ஙன நிகழ்வதாகிய வாசனைகளை நீக்குதற்கு விகாரியலனென்பதும் உடனோதினர்.

தானென்னு மெழுவா யிசையெச்சமாகவி னவ்வாறுரைக்கப்பட்டது.

வசமாதல் பற்றிவிடாமை.

இதனானே முத்திநிலையி னான்மாவின தன்பு நிகழுமாறும், அது முதல்வனது அன்பை யின்றியமையாமையுங் கூறப்பட்டன. இனி யவ்வாறு வசமாதற்கட்படு மாசங்கையை நீக்குமுகத்தானே சேறலெனப்படு மான்மாவினது கிரியை நிகழு முறைமை யுணர்த்தி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

நசித்தோன்றி னுள்ள நசித்தலா லொன்று
நசித்திலதே லொன்றுவ தில்லை—நசித்துமல
மப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாங்
கப்பின்று மீசன் கழல். எனவரும்.

மேலைவெண்பாக்க ளிரண்டினுங் கூறியவாறே பூரண வறிவு விளங்கி ஆன்மா முதல்வன் வசமா யொன்றுபட்டுக் கூடுங்காற் பண்டை யேகதேசவறிவு கெட்டுக்கூடுமோ கெடாது கூடுமோ வெனக்கடாயினார்க்கு கெட்டுக்கூடுமெனின் குணங்கெடவே குணியுங் கெடுதலாற் கூடமாட்டாது, கெடாது கூடுமெனிலேகதேச வறிவுகெடாதவழி வியாபகப் பொருள் விளங்குத லின்மையாற் கூடுமாறில்லை, மற்றெங்ஙனங்கூடுமாறெனில் ஏகதேசவறிவைச் செய்யு மாணவங் கன்ம மாயை யென்னு மலங்கண் மாத்திரையே கெட்டொழிய ஆன்மாத் தண்ணீரைச்சேர்ந்த வுப்புப்போல முதல்வன்றிருவடியைத் தலைப்பட்டு முதல்வனுக்குச் சேடமாம்; முதல்வன்றிருவடி யவ்வான்மாவை விட்டுக் கவர்த்தலின்றி யியைந்து நிற்கு மாகலானென்க.

ஒன்றாது என்னுந்துவ்விகுதி விகாரத்தாற் றொக்கது.

நசித்தணைந்தென்பது காரணகாரியப் பொருட்டாய்ப் பிறவினை கோடலிற் செயவெனெச்சத் திரியாதலறிக.

"சிற்றறிவு முற்சிதைவிற் சேர்வாரின் றுஞ்சிறிது, மற்றதனி னிற்கிலருண் மன்னுதாம்" எனப்புடைநூலாசிரியர் விளையதுமிது.

தன்கண்ணதாகிய கடினகுணநீங்கி அப்பினைச்சேர்ந்தொன்றாகிய வுப்பு ஆன்மா மல நசித்து முதல்வனைச் சேர்ந்தொன்றுபடுதன் மாத்திரைக் குவமையாயிற்று.

யாதொன்று யாதொன்றன் பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்கும் அஃததற்குச் சேடமெனப்படுமாகலி னவனருளாலல்ல தொன்றையுஞ் செய்யாமைக் கப்பின்றி யியைந்துநிற்கு மீசன் கழலையே யதிர்நிச்சித் தனுபவித்தலாகிய முதல்வனது வழிபாட்டின் பொருட்டுரிமையெய்திய வான்மா முதல்வனுக்குச் சேடமாயவாறுணர்க.

'அவையுடைமை யானானுமக்'கென வோதுதலின் ஏனைப்பசுபாசங்களு முதல்வனுக்குச் சேடமேயாமாயினும், அவை பொதுவியல்புபற்றிய சேடமாவதல்லது சிறப்பியல்பு பற்றிய சேடமாகாமையி னிதனை வேறெடுத்தோதினர்.

இதனானே முத்திநிலையி லான்மாவினது கிரியை நிகழுமாறும், அது முதல்வனது கிரியையையின்றி யமையாமையுங் கூறப்பட்டன. சித்தமாகிய மலத்திற்கு நாசமாமாறும், அது நசித்தவழி யேகதேசமாய் விளங்கிய வறிவே பூரணமாய் விளங்கி வியாபகத்தைத் தலைப்படுமாறும் உவமையின்மேல் வைத்தினிது விளக்கி மேலதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

பொன்வாண்முன் கோண்முலிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே யெங்குமாந் தன்மைபோன்—முன்வாண்
மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும் வரத்து. எனவரும்.

ஆதித்தன் முன்புமுகிற்படலத்துண் மறைந்து தனதொளி சங்கோசமாய்ச் சிறிதே விளங்கிப் பின்பு அம்முகிற்படலத்தை வாயுத்துரப்ப அதனானது சத்திமடங்கிவிட்டொடுங்கியவழி அவ்வொளிதானே யெங்கணும் விகாசமாய் விளங்கு முறைமைபோல ஆன்மாவும் முன்பு மலத்தின் மறைப்புண்டு தன்னறிவேகதேசமாய்ச் சிறிதே விளங்கிப் பிரவஞ்ச விடயத்தை யறிந்ததிலழுந்தும், பின்பு முதல்வன் றிருவருளம்மலசத்தியைக் கெடுத்தடக்கியவழி அவ்வறிவே பூரணமாய் விளங்கிக் கப்பின்றி யம்முதல்வன் றிருவடியைத் தலைப்பட்டாந்தநேயத்திலழுந்துமென்க.

ஒடுங்கி எ-ம், எங்குமாய் எ-ம் உவமைக்கோதிய வினையைப் பொருளினுங் கூட்டியுரைத்துக் கொள்க.

இது விளங்குதன் மாத்திரைக் கேகதேசவுவமை யென்

பர் உலகையுண்ணும் வரத்துச்செல்லும் எனவேற்றுமையு முடன் கூறினர்.

யகாரந் தோற்றம்.
முன்வா னென்புழிவால் ஆகுபெயர்.
இரித்தென்பது செயவெனெச்சத்திரிபு.
இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.

மலநசித்தலாவது: தனது மறைத்தற் சத்திமடங்கிக் கீழ்ப்படுதன் மாத்திரையே பிறிதன்றென்பதூஉம் உவமை யாற் பெறுதும்.

சிவஞானபோதத்திற்குத் திருவாவடுதுறைச் சிவஞா னயோகிசெய்த சிவஞானபாடியத்தி லிரண்டாவதுண்மை யதிகாரத்திற் பயனோத்து லிரண்டாம் பாதமாகிய விப்பதி னொராஞ் சூத்திரம் முடிந்தது.

பன்னிரண்டாஞ்சூத்திரம்.

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

எ-து சூ-ம். எ-னின். அசிந்திதனாய் நின்ற பதியைச சிந்திதனுக்கண்டு வழிபடுமாறுணர்த்துதனுதலிற்று.

மேற்கூறிப்போந்தவாறே அயராவன்பினரன்கழலணைந்த முத்தர்க்குச் சீவன் முத்திநிலைக்கணவ்வறிவிச்சை செயல்கள் ஓரோவழிப் புறத்துச்சேறலு முண்மையின் அவை செல்லு மிடமிவை யென்பதுணர்த்து முகத்தானே வாக்கு

மறுநீதமாய் அயராவன்பினணைந்து வழிபடுகின்ற முதல்வ னே வாக்கு மனக்கோசரமாம்படி தெளியக்கண்டு வழிபடு முறைமையை யுணர்த்துதல் பயனோத்தின் மூன்றும்பாதமா கிய விப்பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

அயராவன்பினரன்கழல் சென்றார்க்குச் சீவன் முத்தி நிலைக்கண் அவ்வறிவிச்சை செயல்கள் மூன்றும் புறத்தே யெவ்வாறு வியாபரிக்கு மென்னு மவாய் நிலையை நிரப்புத லின் அவ்வவாய் நிலைபற்றிய வியையானே அதிகரண வியை யும், முத்திநிலையைத் தலைப்பட்ட மெய்ஞ்ஞானிகட்கு கண்டு சசெய்யக்கடவ தொன்றில்லையெனச் சமயிகள் கூறு மாசங் கையை விதிமுகத்தானுரைத்து மறுத்தலின் அவ்வாசங்கை பற்றிய வியையானே பாதவியையும், முத்திநிலையினியல்பு கூறி யீண்டுச் சீவன் முத்திநிலைக்கட்படும் விசேடங் கூறு தன் முறைமையாகலி னம்முறைமைபற்றிய வியையானே யோத்தியையும் பெறப்பட்டன.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. அயராவன்பி னரன்கழ லணைந்த சீவன்முத்தன் செங்கமல மலர்போல விரிந்து விளங்கிய முதல்வனது சீபாதத்தை யணைதற் குட மபடாதயர்த்தலைச் செய்விக்கு மவ்வியல்பினையுடைய மும் மல அழுக்கை ஞானநீராற் கழுவித்தன்னைப்போ லயரா வன் பினரன்கழ லடைந்த மெய்ஞ்ஞானிகளோடு கலந்துகூடி யவ் வாறு கழுவப்பட்டு மலமயக்குநீங்க அன்பரொடு மரீஇ அன் புமிக்குடைய வவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையு முதல்வனெனவே கண்டு வழிபட்டு வாழ்வானென்றவாறு.

சீவன்முத்தனென்பது ஏற்புழிக்கோடலாற்பெறுதும்,
நோன்றாள் வினைத்தொகை.
நோன்றல் பொறுத்தல்.
எடுத்துச் சுமப்பா னென்றார் புடைநூலாசிரியரும்,
தழீஇயென்றது குறிப்புருவகம்,

மாலறநேய மலிந்தவ ரென்பது அம்மலங்கழீஇ யன்பரொடு மரீஇயினு ரெனப் பொருடந்து சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது.

நேயமலிதல் கூறவே வழிபாடும் பெறப்படும்.

தான் அசை.

அம்மலங்கழீஇ யென்றதனாற் சிவன்முத்தர்க்குப் புறத்தே யறிவு வியாபரிக்கு மிடமும், அன்பரொடுமரீஇ யென்றதனால் இச்சை வியாபரிக்கு மிடமும், தொழுமென்றதனாற் செயல்வியாபரிக்கு மிடமும் பெறப்பட்டமையி னவாய்நிலை நிரப்பியவாறு கண்டுகொள்க.

இம்மூன்றும் பிரிப்பின்றி யுடனிகழ்ச்சியா யோரிடத்தொருங்கு நிகழ்வனவாகலின் விடயவேற்றுமையின்மையு முணர்க.

தொழுமென்றது செலுமென்றதுபோலப் படர்க்கை வினைமுற்றாகலி னிஃதனைத்தோரது தன்மையென்பது பெற்றாம்.

அற்றாகலினன்றே யிதனைச் சாதகவோத்துள்வையாதொழிந்து வைத்தாரென்பது.

செல்வப்பெருக்க முடையார்க்குணவாகிய பால் உடம்பு நோயின்றி வளரச்செய்யு மருந்துமாமாறுபோல இவ்வழிபாடு மலவாசனை சிறிதுந் தாக்காது சிவானந்தமேன்மேல் வளர்ச்சி செய்யுஞ் சாதகமாதலுண்மையா னதுபற்றி யாசிரியர் விரித்துரைத்தலுஞ் செய்தாரென்க.

இதனுள் அம்மலர் நோன்றாள் சேரலொட்டா வம்மலங்கழீஇ யென்றதோரதிகரணம். அன்பரொடுமரீஇ யென்றதோரதிகரணம். மாலறநேய மலிந்தவர் வேடமுமாலயந்தானு மரனெனத் தொழுமேயென்றதோரதிகரணம். ஆக மூன்றதிகரணத்த திச்சூத்திரமென் றுணர்க.

அவற்றுட் சிவன்முத்தர்க் கொருதலையான் முன்னர்ச்
செய்யக்கடவதிதுவென்ப துணர்த்து முகத்தானே யவ்வறி
வு புறம்பே வியாபரித்தலுமுண்மையின் அது வியாபரிக்குங்
கா லியாங்ஙனம் வியாபரிக்குமென்னு மவாய்நில்லை நிரப்புதற்
கெழுந்தது முதலதிகரணம்.

—:*:—

மே-ள் ஈண்டு ஆணவமாயை கான்மிய மென்னு மலங்க
ளைக்களைக எனவரும்.

கன்ம மதன் மூலத்தை நோக்கிக்கான்மிய மெனவும்பெ
யர் பெறும்.காமிய மெனப் பாடமோதி "இனிச்செய் கன்ம
மூலமல ஞானத்தா னிடிப்ப"னென வழிநூலாசிரிய ரோதுத
லின் ஈண்டு மலமாயைகளோடு வைத்துக்களைய நின்றது ஆ
காமியவினை மாத்திரையே யாகலா னதுவே ஈண்டெடுத்துக்
கொள்ளப்பட்ட தாகலின் காமியமெனத் தலைக்குறை யென்
றுரைப்பாரு முளர்.

அற்றேல், ஏகனாகி யிறைபணிநின் றுண்மைஞானத்தை
த்தலைப்பட்டார்க்கு மலமாயை தன்னொடு வல்வினையு மின்
றாய்க் கழிந் தொழிதலின் அவற்றான் மீளச் செய்யக்கடவ
தொன்றின்மையா னீண்டவற்றைக் களைத லெற்றுக் கென்
னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதிக்குமாறு சூத்திர
த்தினுடம்பொடு புணர்த் தோதியதனைத் தெரித்துணர்த்தி
வலியுறுத்துதற் கெழுந்த வேது. அவை தாம் ஞானத்தை
யுணர்ந்தாதஞ்ஞானத்தை யுணர்த்து மாகலான் எனவரும்,

இ-ள். அம்மூன்று மலங்களும் உண்மை ஞானத்தைத்
தலைப்பட்டார் மாட்டும் யாதானு மொரு நெறியா னுண்டாக்
கம் மெய்யுணர்வைச் சிறப்படுத்துப் பிறவிக்கு வித்தாகி யய்
பண்டை விபரீத வுணர்வை மேற்படுத்துவனவா மாகலை

னஃதவர்க் காகாமையின் ஈண்டாணவ மாயை கான்மியமென்னு மலங்களைக் களைக வென மேற்கொண்ட தென்றவாறு.

உணர்த்துதல் உணர்விற் கேதுவாதல் "அந்நியமானவையுணர்த்தி யநந்நியமாய் நின்ற வறிவறியாமையி னானு" மென்புழியும் போல. ஈண்டஞ்ஞான மென்றது விபரீத வுணர்வை.

யவை யஞ்ஞானத்திற் கேதுவாய் வந்து நலையுமாறும், அஃதவர்க் காகாமையுந் தெரித் துணர்த்தி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டு முதாரணம்:

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமு
மண்முதன் மாயைகாண் மாயையுங்—கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு மிம்மூன்று
மெய்ஞ்ஞானிக் காகா விடு. எனவரும்.

புண்ணிய பாவங்களைப் பயக்கும் விருப்பு வெறுப்புக்களாய்ப் பொருந்துகின்ற விக்கன்ம மலமு மண்முதன் மாயா தத்துவ மீறாய்க் காணப்படுகின்ற விம்மாயா மலமுஞ் சுட்டியறிவதாகிய விபரீத வுணர்வைப் பயக்கு மிவ்வாணவ மலமு மென்னு மும்மலங்களு மெய்ஞ்ஞானியாகிய வுனக்காகாவாகலா னிவற்றை விடுத்தொழிக வென்க.

எல்லா மலங்களும் பற்றறத் துடைத்து உண்மைஞானனைத் தலைப்பட்டார்க் குடம்புள்ளளவும் பிராரத்த வினையுவ்வுடம்பைப் பற்றி நிற்றலான் அஃதவர்க் கொரோவழி வாதனை வயத்தான் இங்குளி வாங்குங் கலம்போல வந்து தாக்குங்காற் பிற்செயா தனுபவிப்பதின்று; ஆகலினது சார்பாக விருப்பு வெறுப்புக்க ளுளவாம்; அவை யுளவாகவே பரமே பார்த்திருப்பார்க்கு நிலமுதன் மாயா தத்துவ மீறாகிய ஏகதேசப் பொருள் காட்சிப்படும்; அவை காட்சிப்படவே அவற்றைச் சுட்டி யறிவதாகிய விபரீத வுணர்வு மேற்

பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாம் இவ்வா றிம்மூன்றும் அறிவற்றம் பார்த்திம் முறையானே வந்து தலைப்படு மென்பார் கன்ம மாயை யாணவ மென்றிம் முறையே வைத்தவை காட்சிப்புல னுமாறு காட்டுவார் அவ் வக்காரிய நிகழ்ச்சிகளை யெடுத்தோதிச் சுட்டிக் கூறினார்.

ஆணவ கன்மங்களைச் சுட்டிக் கூறுதலின் மாயையா யினு மவ்வாறு சுட்டு வருவித் துரைத்துக் கொள்க.

புண்ணிய பாவம் ஆகுபெயர்.

மாயை முன்னையது தத்துவம்.

ஈரிடத்து மாக்கச் சொல் வருவித்துரைக்க.

காண் மாயை செயப்படு பொருள் முடிந்த வினைத் தொகை.

காட்டுதல் உபசாரம்.

இவை சிவபோகப் பெருவாழ்வை யிழப்பிப்பன வாக லான் மெய்ஞ்ஞானிக்காகா வென்றார்.

மேன்மேன் முறுகுவன வாகிய விவற்றைத் தோன்றும் பொழுதே துடையாக்கால் "களைகுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து" என்னு முறைமைத்தாய் முடியு மென்பது பற்றி விடுவெனவீண்டும் வலியுறுத்தப்பட்டது.

விடுதல் அவை யம்முறையா னிகழ்ந்தவழி யிவ்வஞ்ஞா னம் ஏகதேசக் காட்சியா னுயதெனவும், இவ் வேகதேசக் காட்சி விருப்பு வெறுப்புக்களது தோற்றத்தா னுயதென வும், அத்தோற்றமும் பிராரத்த வினை நுகர்ச்சிக்கட் சென்ற தற்போதத்தா லாய தெனவு மறிந்து அங்ஙனஞ் செல்வதா கிய தற்போத முனையார்தவா றுபரித்துச் சிவஞானத்து ளட ங்கிச் சிவானுபவஞ் சுவானுபூதிக மாம்படி ஞான நிலையி லுறைத்து நிற்றல். "ஒங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத், தூங்குவர் மற்றேதுண்டு சொல்" லென் றது மிது.

அஃதங்ஙனமாக ஏதுவின்கண் மும்மலங்களு மஞ்ஞானத்தை யுணர்த்து மெனக்கூறி மீண்டாணவ மாத்திரையே யஞ்ஞானங்காட்டு மென்றல் மலைவாமாலெனின்? அற்றன்று, அஞ்ஞானங் காட்டுதல் மாயை கன்மங்கட்கு ஆணவ மலச் சார்பா னாகிய செயற்கை ஆணவ மலத்திற்கது இயற்கை யென்னும் பொதுச் சிறப்பாமா றுணர்த்துதற்கு ஆண்டுப் பொது வகையாற் கூறிப் போந்ததனை மீண்டுச் சிறந்தெடுத் தோதினு ராகலா னென்பது.

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

—:*:—

முதலதிகரணத்திற் கூறியவாறு மும்மலங்களையுங்களைந் தார்க்கு அதனை நிலை பெறுத்துவதா யதன் பின்னர்ச்செய் யக் கடவ திதுவென்ப துணர்த்து முகத்தானே அவரதிச்சை வியாபரிக்குங்கால் யாங்ஙனம் வியாபரிக்கு மென்னு மவாய் நிலையை நிரப்புதற் கெழுந்தது இரண்டாமதிகரணம்.

இனிச் சிவபத்தர்களோ டிணங்குக எனவரும்.

சிவபத்த ராவார் பத்தியினுன் மறவா தேத்தி முதல்வ னடிபாதத்தை யணைந்தோர்.

இணங்குதல் நட்புச் செய்தல்.

சிவபத்தர்களோடிணங்குக வெனவே ஏனையோர்களோ டிணங்கற்க வென்பதூஉம் பெறப்பட்டது.

அற்றேல், உறவும் பகையு மொழித்து மகவெனப் பல் லுயி ரனைத்தையு மொக்கப் பார்க்குஞ் செல்வக் கடவுட்டொ ண்டர்க்கு இவ்வாறு சிலர்மாட்டு விருப்புஞ் சிலர்மாட்டு வெறுப்புஞ் செய்து கொண்டு பகுத்து நிற்றல் சால்பின்று லென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழு ந்த வேது.

அல்லாதா ரஞ்ஞானத்தை யுணர்த்துவராகலான் என வரும்.

இ-ள். வெ-டை. அல்லாதா ரஞ்ஞானத்தை யுணர்த்துமாறு, "தெய்வமென்பதோர்சித்தமுண்டாகி, முனிவிலாததோர்பொருளதுகருதலு, மாறுகோடிமாயாசத்திகள், வேறுவேறுதம்மாயைகடொடங்கின, வாத்தமாருரயலவர்கூடி, நாத்திகம்பேசிநாத்தழும்பேறினர், சுற்றமென்னுந் தொல்பசுக்குழாங்கள், பற்றியழைத்துப்பதறினர்பெருகவும், விரதமேபரமாகவேதியருஞ், சரதமாகவேசாத்திரங்காட்டினர், சமயவாதிகடத்தமதங்களே, யமைவதாகவரற்றிமலைந்தனர்" என்றற்றொடக்கத்தான் அறிக.

மும்மலங்க ளஞ்ஞானத்தையுணர்த்துதல் இலக்குவாய்த்துழி ஏதுவாதன் மாத்திரையேயாம் இவரவ்வாறன்றி வாயாதவழியும் வாய்க்குமாறு செய்துகொண்டு பலவகை யுபாயங்களானுந் தம்மோடொப்பவிபரீத வுணர்விற்செலுத்தியேவிடுவராகலான் சிவபத்தியில்லாதார் அம்மலங்களினுங்கொடியராகலினவரை யவற்றினுமஞ்சி விட்டொழிதலே யறிவுடைமைக்குச் சால்பென்பதாம்.

மகவெனப் பல்லுயிரனைத்தையு மொக்கப்பார்த்தலாவது அவைபடுந்துன்பங் கண்டுழி யதற்குப் பரிதல் மாத்திரையேயாம்.

"யான்பெற்றபேறு பெறுகவிவ்வையக" மென்றது மிக்கருத்தே நோக்கியென்க.

அற்றேல், சிவபத்தியில்லாரோ டிணங்காமை மாத்திரையே யமையும் சிவபத்தர்களோ டிணங்குதலெற்றுக்கென்னு மாசங்கையை நீக்கி யதனைவலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

மறப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்

பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரு
மெய்த்தவரை மேவா வினை. எனவரும்.

மும்மலங்களு நீங்கி முதல்வ னத்துவிதமாய் நின்று காட்டியுங்கண்டுமுபகரித்துவரும்பெருங்கருணையைமறவாது கடைப்பிடிக்கும் ஞானக்கண்ணுடையமெய்த்தவராயினார் அதனை மறக்குமாறுசெய்து ஞானக்கண்ணை யிழப்பித்துத் தீநெறிக்கட்கொண்டுசென்று மலங்களாகிய பிறவிக்குழியில் வீழ்வித்துத் துயருறுத்து மன்பில்லார் கூற்றிலேதொன்று தொட்டுப் பயின்றுவந்த சேர்ச்சியறும்படி யம்மறவியை மாற்றி ஞானக்கண்ணை விளக்கிப் பிறவிக்குழியினின்று மெடுத்து நன்னெறிக்கட்செலுத்தி வாழ்விக்குஞ் சிவபத்தர் கூற்றிலே பேரன்புடையராய் அவ்வன்பு சார்பாகவிளங்குவதாகிய சிவஞானக்கண்ணா லந்நிலைகடைப்பிடித்துணரப் பெற்ற வவரை எல்லாவனர்த்தங்கட்கு மூலமாய்வரும் பிராரத்தவினை வாதியாவென்க.

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பிலாரென மேற்சொல்லிய பொருளையே யநுவதித்துவிரித்தோதினார். அதனெதிர்மறை முகத்தாற் சிவபத்தரது பெருந்தகைமை யுணர்ந்து கோடற்பயனோக்கி,

மலங்களின்வீழ்க்குமென்பது குறிப்பெச்சம்.

மலம் ஆகுபெயர்,

எல்லாவற்றினுமன்பு சிறந்தமையின் அது சிறப்பெனப்பட்டது.

சேர்வை சேர்ச்சி,

பத்தரினத்திற் பித்தாயென மாறுக,

பித்துப் போறலிற் பித்தென்றார். அஃததனையுடையார் மேனின்றது.

ஏனைத் தவங்களெல்லாம் மெய்யாதலின்றி மலநடையாப் போதலிற் பரனுணர்வினாலுணருந் தவமொன்றே மெய்த் தவமெனப்பட்டது.

வினை பால்பகாவஃறிணைப்பெயர்.

சிவபத்தர்மாட்டன்புசெய்து அவரது மனஞ்சொற் செய்கைவழி நிற்பார்க்கு உலகியலுணர்வு மாறிச் சிவானுபூதி யுணர்வே மேம்பட்டு நிகழும் அது அங்ஙன நிகழவே, உடம்புள்ளளவு நிற்பனவாய பிராரத்தவினைகள் அவர்க்கு நுகர்ச்சியாதல் செல்லாமையி னவரை வாதிக்கமாட்டா அவை வாதியா தொழியவே, சிறப்பிலார்தந்திறத்துச் சேர்வை பற்றறக்கெடுமென்பார் அறப்பித்துப் பத்தரினத்தாய்ப் பரனுணர்வினாலுணரு மெய்த்தவரை மேவாவினை யென்றார்.

எனவே, வீட்டுணர்வை நிலைபெறுத்துஞ் சிவபத்தர்களோடிணங்கினா லன்றித் தொன்றுதொட்டுப் பயின்றுவந்த சிறப்பிலாரதிணக்கமறாதாகலா னஃதொருதலையான் வேண்டுமென வலியுறுத்தவாறாயிற்று.

இரண்டாமதிகரணம் முடிந்தது.

மூன்றாமதிகரணம்.

———:*:———

இரண்டாமதிகரணத்திற் கூறியவாறு சிவஞானிகளோடிணங்கினார்க்கு அதன் பின்னர்ச் செய்யக்கடவதிது வென்பதுணர்த்து முகத்தானே அவரது கிரியை வியாபரிக்குங்கால் யாங்ஙனம் வியாபரிக்கு மென்னு மவாய் நிலையை நிரப்புதற் கெழுந்தது மூன்றாமதிகரணம்.

மே-ள். இனிப்பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரனெனக்கண்டு வழிபடுக. எனவரும்.

காண்டல் ஐயுறவின்றித் தெளிதல்.

திருவேடத்தினியல்பு. "தூயவெண் ணீறு துதைந்த பொன் மேனியுந் தாழ்வடமும், நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையு நைந்துருகிப், பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும்பதிகச்செஞ்சொல், மேயசெவ் வாயு முடையார்புகுந்தனர் வீதியுள்ளே" "சிந்தையிடை யறாவன்புந் திருமேனி தன்னிலசைவுங், கந்தைமிகை யாங்கருத்துங் கையுழவாரப்படையும், வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற் பொலிதிருநீறு, மந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர்வந்தணைய" கண்ட கவுணியக் கன்றுங் கருத்திற்பரவு மெய்க்காதற், றொண்டர் திருவேட நேரே தோன்றியவென்று தொழுதே" என்பவற்றுனறிக. இத்திருவேடங், காமக்கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடைசார்ந்தணிகல முதலாயின காமுகரை வசீகரித்தின்பஞ்செய்யுமாறுபோல மெய்யுணர்வுடையாரைக் காட்சி மாத்திரையானே வசீகரித்தின்பஞ் செய்தல் பற்றித் திருவேடத்தையுஞ் சிவாலயத்தையுமென்றுபசரித்தார். அது, "சேலுங் கயலுந்திளைக்குங் கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம், போலும் பொடியணி மார்பிலங்குமென்று புண்ணியர் போற்றிசைப்ப" என்பதனானுமறிக.

அற்றேல், மெய்யுணர்வுடையார்க்குப் பகுப்பின்றி யெங்கணும் பரமேசுரனெனக் காண்டலே பொருத்தமுடைமையானும், நின்ற திருத்தாண்டக முதலியவற்று ளவ்வாறோதுதலானும், திருவுருத்திரத்துட் பகுப்பின்றி யுயிர்ப்பொரு ளுயிரில்பொருள்களை யெல்லாந் தனித்தனி யெடுத்தோதி வழிபாடுகூறுதலானும், ஈண்டிவ்விடங்களின் மாத்திரையே பரமேசுரனெனக் கண்டு வழிபடுகவெனப் பிரித்துக் கூறியது பொருந்தாதா லென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கெழுந்தவேது.

அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றேயல்லாதவிடத் தப்பிரகாசமாய் நிற்றலான் எனவரும்,

இ-ள். அம்முதல்வ னெங்கணும் வியாபகமாய் நிற்பினு ம் இவ்விரண்டிடத்து மாத்திரையே த்யிரினெய்போல் விள ங்கி நிலைபெற்று அல்லுழிப் பாலினெய்போல வெளிப்படா து நிற்றலான் இனிப்பத்தர்து திருவேடத்தையுஞ் சிவாலய த்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுகவென மேற் கொண்டதென்றவாறு.

மற்றப்பிரகாசமாய் நிற்றலென வியையும்.

அற்றேல், அஃதியாங்ஙன மென்னும் மாசங்கையை நீக் கிப்பிரகாசமாய் நிற்குமாறும், அல்லாதாரிடத் தப்பிரகாசமா ய் நிற்குமாறுந் தெரித்துணர்த்தி யேதுவை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பா னிகழுந் த்திநெய்போற்
பாசத்தர்க் கின்றாம் பதி. என வரும்.

வாக்கு மனாதீதமாய் நின்ற பரம்பொரு ளுலகத்தார் த ன்னையறியும்படி கருணைசெய்து தனது வடிவாகிய திருநீறு கண்டிகை முதலிய தனது வடிவத்தைத் தன்னன்பர்க்குக் கொடுத்து அவர்களிடமாக நின்று அங்கங்கேயறிவு விளக்கு தலானும், அவர் தம்மைச்சோகம் பாவனையானுணரச் செய் தலானும், அவ்வாரையொருகுறியின்கணிறுத்தித் தனது வியா பகத்துக்குள்ளாகவிருத்துதலானுங் குறியிறந்துநின்று தன் னையுள்ளவாறுணரு மன்பாளராகிய வவர்மாட்டுத் த்யிரின்க ண்ணதாகிய நெய்போல விளங்கித் தோன்றும். பாசக்கட்டு டையார்க் கிவ்வியல்பில்லாமையான் அவர்மாட்டுப் பாலின் கண்ணதாகிய நெய்போல விளங்காது நிற்குமென்க.

இன்மை விளங்காமைப் பொருட்டு.

பாசத்தார்க்கென்பது உருபுமயக்கம்.

கொடுத்துச் செய்து இருத்தலானிகழும்மென வினையும்.
செய்தெனபது சொல்லெச்சம்.
இருத்தல் அல்லீற்றுப்பிறவினைத் தொழிற்பெயர்.

தன்னுணருநேயத்தாரெனப் பெயரடையானு மோரேதுக் கூறப்பட்டது.

தன்னையென்னு மிரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.

அற்றேல், இவ்வியல்புகளுடைய சங்கமவேடத்தினிடத் தென்ஞான்று முதல்வன் பிரகாசமாய் நிற்பனென்பது பெறப்படும். இவ்வியல்புகளில்லாத தாபரத்தினிடத்து மந்திர சாநித்திய மில்வழிப் பிரகாசமாய் நிற்றல் பெறப்படாதாலெனனுமாசங்கையை நீக்கி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு-முதாரணம்:

கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போ னின்றங் குளதாமால்—கண்டவுருத்
தானதுவா யன்றானுன் றனதுவாய்த் தோன்றனே
தானதுவாய்க் காணுந் தவர்க்கு. எனவரும்.

விறகிற் றீக்கடைந்துழிவேறாய் விளங்கும் அல்லுழி விளங்குவதன்று அதுபோல வுயிர்கட்குப் புத்திமுத்தி யளித்தற் பொருட்டுக் காணப்பட்ட தாபரத்திருவுருவின்கட் கலப்பினா லதுவே தானா யதுவன்றி வேறுபொருளுமா மியல்புடைய முதல்வன் அதுவே தானாய்க்காணார்க்குத் தம்மான றியப்பட்டதொரு மந்திர சாநித்திய மில்வழி யாண்டும் விளங்காது நின்று அம்மந்திர சாநித்தியத்தால் விளங்கித் தோன்றும் பொருளாம்; அவ்வாறன்றி யதுவேதானாய்க் காணப் பெறு முண்மைத்தவமுடையார்க்கு எப்போதுமப்படியே விளங்கித் தோன்றுன்கொல்லோவென்க.

காணாதார்க்கென்பது சொல்லெச்சம்.
கடைந்துழி யல்லுழியென்பன ஆற்றலாற் பெற்றும்.

உவமைக் கோதியவிலையைப் பொருட்கணெதிர்நிரனி றையாக வைத்துக் கண்டுகொள்க.

ஈண்டுண்மை விளங்குதன் மேற்று.
மந்திரத்தா லுளதாமென வியையும்.
ஆல் அசை.
ஆறுனென்பது பெயர்.
ஓகாரம் எதிர்மறை.

தானதுவாயன்றுறு மென்னும் பெயரடையான் அவ ரவர் பாவனைக்கேற்ப விளங்குதற்கேதுக் கூறப்பட்டது.

தானதுவா யன்றுதல் சங்கமவேடத்தினு மொக்குமே னுந் தாபரவுருவின்க ணிகழு மாசங்கையை யிதனானன்றி நீக் கலாகாமையினீண்டுக் கூறினர். இஃதிரிடத்து மொக்கு மெ ன்பது வருகின்ற வதிகரணத்திற் பெறப்படும்.

மூன்றுமதிகரணம் முடிந்தது.

நான்காமதிகரணம்.

மேலையதிகரண மூன்றானுஞ் சீவன்முத்தர்க்குரியவா சாரமுணர்த்தியவழி, அற்றேல், இவை சீவன்முத்தர்க்குத்தா மே யுளவாவனவாய விலக்கணமாகலின் அறுவாத முகத்தா லோதற் பாலனவாகிய விவற்றைக்களைக இணங்குக வழிபடுக என்றிங்ஙனம் விதிமுகத்தானோதிய தெற்றுக்கென்னு மாச ங்கையை நீக்குதற்கு அவற்றதொழிபா யெழுந்தது நான்கா மதிகரணம்.

மே-ள். இவ்விடங்களில் வழிபடுக வெனவரும்.

இவ்விடங்களாவன: பத்தரதுதிருவேடமுஞ் சிவாலயமு முமென மேற்கூறிப் போந்தன

வழிபடுகவென்னு மிசையெச்சத்தா லநுவாதமாய்க் கூறவமையுமென்பாரை மறுத்து விதித்தலை வலியுறுத்தவாறு.

வழிபடுகவென்பதுபலக்கணமாகலிற் கனைதல் இணங்குதல்கட்கு மிவையொக்கும்.

அற்றேல், எய்திபதனை விதித்தல் பயனுடைத்தன்றாலென்னு மாசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்ததேவது.

நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய்வரும் புருடனவை யாகாவா றப்புருடனு மாகலான் எனவரும்.

இ-ள். நரம்பு நாடி யிறைச்சி என்பு முதலிய தாதுக்களின்கண் வேற்றுமையின்றி யதுவதுதானாய் வருகின்றவுயிர் நாடியோ வென்பேபா நரம்பு சிக்கோழையோ வென்றிவ்வாறு பைமறியாப் பார்ப்பார்க்கு நரம்பு நாடி முதலியவை யாகாதவற்றின் வேறுமாயினாற்போல உயிர்க்குபிராகிய வம்முதல் வனுஞ் சடசித்துக்க ளெல்லாவற்றினும் அதுவதுதானாயும் அல்லனுயு நிற்பனுகலா னதுவதுதானாய் நிற்றலைக் காணுங் காட்சிபற்றி யெய்திய வழிபாடல்லனாய்நிற்றலைக் காணுந் தாலெய்தாமையி னவ்வழியு மெய்துவிக்க வேண்டுதலான் இனியிவ்விடங்களின் வழிபடுகவென விதித்தோதிய தென்றவாறு.

எனவே, எய்தாததனை யெய்துவிப்பதூஉம், எய்திய திகந்துபடாமற் காப்பதூஉம், எய்தியதனை யொருமருங்கு மறுப்பதூஉமாய விதிமூன்றனுள் இஃதெய்திய திகந்துபடாமைக் கருத்தது என்றவாறாயிற்று.

இது விளக்குதற் பொருட்டன்றே ஆசிரியரிவ்விடங்களின் வழிபடுகவெனவிண்டிடமாக வைத்தோதியதூஉ மெனக,

அவையாகாவாறப்புருடனு மெனவே, அவ்விடத்தெய்தித்த லொருதலையான் வேண்டுமென்பதுதாற்பரியமாயிற்று.

சூத்திரத்திற் றெழுமே யென்னு மேகாரமும் இப்பொருள் குறித்து நின்ற தேற்றம்.

வார்ழு உவமவுருபு.

முதலானவற்றை யென்பதுருபுமயக்கம்.

அற்றேல், முதல்வனுக்கு இவ்வியல்பு எல்லாப்பொருட் கண்ணு முண்மையின் யாங்கணும் வழிபாடுவித்தலே பொருத்தமுடைத்தென்னு மாசங்கையை நீக்கி யதனை வலியுறுத்தற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

அதுவிது வென்ற தனுவல்லான் கண்டார்க்
கதுவிது வென்றதையு மல்லான்—பொதுவதனி
லத்துவித மாத லகண்டமுந் தைவமே
யத்துவிதி யன்பிற் றொழு. எனவரும்.

முதல்வன் சடசித்துக்கண்மாட்டு நிற்கு நிலைமையறியப்பெற்றார்க்குக் கண் ணருக்கன்போல அதுவிதுவெனப் பக்கிசைத் தோதப்படுவதாயபேதநிலைமையனு மல்லனாய் உடலுயிர்போ லதுவேயென்றோதப்படுவதாய அபேத நிலைமையனு மல்லனாய்க் குணகுணிபோ லதுவே யிதுவென்று பக்கிசையாம லோதப்படுவதாய பேதாபேத நிலைமையனு மல்லனாய் அம்மூன்றற்கும் பொதுமையா னறிவொளிபோ லத்துவிதமாய் நிற்குமாற்றாற் சடசித்துக்கண் முழுவதுமத் தேவனது வடிவேயாமாயினு மவற்று ளன்பு வினையுமிடத்தின் வழிபடுவாயாக அவ்வத்துவித சித்தாந்தத்தைப் பெற்றோ யென்க.

அதுவிதுவென்பது முன்னைய தும்மைதொகை பின்னையது இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

அல்லா னென்பதனை மேலுங் கூட்டி என்றவென்பதினை அதுவென்பதனோடுங்கூட்டியுரைக்க.

அல்லானென்பது வினையெச்சக்குறிப்புமுற்று.

என்றதை யென்பது ஐயீற்றுடைக் குற்றுகரம்.
உம்மை யிறந்தது தழீஇயிற்று.
பொதுவதென்பது! அது பகுதிப்பொருள்விகுதி.
ஆதல் ஆயவாற்றானென்க.

தைவமென்பது தேவனதுடைமை யென்னும் பொருட்டாய வடமொழிப் பெயர்ப்பகுபதம்.

ஆயினு மென்பது சொல்லெச்சம்.
அத்துவிதி அண்மைவிளி.
அன்பென்றது ஆகுபெயர்.
ஏழாவது விரித்துரைக்க.

திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியினன்றி எங்குமுருக்காண வொண்ணுதபால் முலைப்பால் விம்மி யொழுகுவதுபோல வெளிப்பட்டருளுவதாகியடிப்பட்டுவருமன்பு விளையாமையின் ஆண்டுச்செய்யும் வழிபாடே யத்துவித ஞானத்தை நிலைபெறுத்தற் பயத்த தென்பார் அத்துவிதமாத லிகண்டுமூ் தைவமே யென்றநுவதித்து அத்துவிதி யன்பிற் றொழுவென்றார்.

அத்துவிதியென்றது பயனுணரநின்ற குறிப்புப்பெயர்.
இதனானே விதிக்குப்பயன் கூறியதூஉமாயிற்று.

இனியதுவிது வென்பன அருவுருவாகிய திருமேனியெனக் கொண்டதற் கியைய வுரைப்பாருமுளர்.

அவர் அன்பினென்றதனை யேதுப்பொருட்கண்வருமைந்தனுருபேற்ற வியற்பெயராக வைத்துரைப்ப.

அற்றேல், இவ்வத்துவிதஞானம் அசத்தாயுள்ள வன்னபேதங்களை யசத்தென்று கண்டொருவுதலானுள்தாம் பயனுகலின் அதன் பொருட்டு வழிபாடு வேறுவிதித்தல் மிகையாமா லென்னு மாசங்கையை நீக்கி யதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

வினையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே யதுநிகழு
மானத்தா லன்பிற் றொழு. எனவரும்.

உடம்பின் கண்ணதாகிய பிராரத்தவாசனை யுயிர்க்குத் தாக்குவதாயுள்ளவளவும் அதனானே வரும் விருப்பு வெறுப்புக்களும் அவைபற்றிக் காட்சிப்படு மண்முதல் மாயைகளும் அவைபற்றி நிகழும் விபரீதவுணர்வுமாகிய வசத்துக்களொருவிய வழியும் வந்துகூடி மேம்படுவன வாகலானிவற்றிற் கெல்லாமூலமாகிய பிராரத்தவினைவாசனை பற்றறக் கழிந்தாலன்றி அத்துவிதஞான மேம்பட்டு நிகழாதாகலி னப்பற்றறக் கழிதற் பொருட் டம்மெய்யுணர் வுடையாரை நாடி வழிபடவே யவ்வினைத்தீர்வு நிகழ்ந்தவ்வுணர்வு மேம்படும் ஆதலா னன்பானே யவரை வழிபடுவாயாக வென்க.

அசத்தாயுள்ள வன்னபேதங்களை யசத்தென்று கண்டவழி, யுளதாய் நிற்கும் ஞான சொரூபம் நிலைபெறுதலவ் வசத்தினது விளைவிற்குவேராகிய வினைத்தீர்வின்கண்ணதாகலான் ஆண்டுளதாய் நின்ற மெய்யுணர்வை யவ்வினைவேரறுத்து நிலைபெறுத்துதற்பொருட் டங்ஙன மதனை நிலைபெறுத்தினார்மாட்டுச் செய்யும் வழிபாடொருதலையான் வேண்டப்படுமென்றவாறாயிற்று.

அற்றேல், அவ்வாதனை நீங்கி மெய்யுணர்வு நிலைபெறுதலும் சிபஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்கவே யுளதாமென்பது, அஞ்செழுத் ததிகரணத்தி னோதிய வாற்றானும், "பந்தமா னவையு றுத்துப் பவுதிக முழுதுமெல்லைச், சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையுஞ் சாரு, மந்தமா திகளில் வந்த வஞ்செழுத் தருளினாலே, வந்தவா றுணரு செய் வாரை வாதியா பேதியாவே" எனப் புடைநூலாசிரியர்

கூறியவாற் றானும் பெறப்படுதலி னதற் கதுவே யமையுமா லெனின்? அஃதொக்கும். அவ்வுச்சரிப்பும் வழிபடுதலையின் றியமையா தென்பது, 'விதிப்படி யுச்சரிக்க வென்ற' துணை யானொழியா தென்பது 'அஞ்செழுத்தா லுள்ளமர னுடைமை கண்டரனை யஞ்செழுத்தா லர்ச்சித்'தென ஆசிரியர் தாமே யகத்து வழிபாடு கூறியவாற்றாற் பெறப்படுதலின் வழிபாடு மதற் கொருதலையான் வேண்டப்படுமென விடுக்க.

அற்றேல், அஞ்செழுத் ததிகரணத்தையு மிதனைச் சார வைத் தீண்டோதுதலே பொருத்தமுடைத்தெனின்? அஃ தொக்கும்; சிவப்பிரகாசந் திருவருட் பயன் முதலிய வற்றி னும் அஞ்செழுத்தருணிலையை யின்புறு நிலைக்குப் பின்னாக அணைந்தோர் தன்மையைச்சாரவைத்துக் கூறியவாற்றானும் அதுவே பொருத்தமுடைத்தாயினும் அஞ்செழுத்தோது முறைமை சொற்பல்காது விதிப்படியென மாட்டெறிந் துணர்த்துதற் பொருட்டாண்டே வைத்தோதிய தன்றிப் பிறி தில்லை யென்றொழிக.

இது சொற்பொருட்பின் வருநிலை.

விளையா தென்னுந் துவ்விகுதி விகாரத்தாற் றொக்கது. “ஊட்டா கழியு” மென்புழிப்போல.

பின் வந்த ஞானம் ஆகுபெயர்.

ஆனதா லென்பது ஆனத்தாலென மரீஇயிற்று “பெற் றத்தாற் பெற்றபய” னென் புழிப்போல.

அற்றேல், பயன் பற்றி விதிக்கப்படும் வழிபாடு வேள்வி முதலியன போலப் பயன் வேண்டான்மையானாகப் பின்னர்ச் செய்து பெறுதுமென்றாக வொரோவழி யொழியவும் படுங்கொல்லோ வென்னு மாசங்கையைநீக்கிச் செய்யாவழிப படுங்குற்றமுஞ் செய்தல் கடமையாமாறு முணர்த்தியதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டு முதாரணம்.

தன்னை யறிவித்துத் தான்றனாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னச்செய்துந் தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி. எனவரும்.

தன்னுண்மை யறிய மாட்டாது குருடாய்க் கிடந்த வுயிர்க்குப் பலவாற்றானு மதனைத் தெரித்துணர்த்தி எத்தனையு மெளிய வவ்வுயிரை எத்தனையு மரியதானும் வண்ணஞ் செய்தளித்த பெரியதோ ருதவியை யதன் பின்னர் மறக்கு மாயின் அஃதிதற்குமுன் னறியாமையான் மறந்த குற்றம் போலத் தீர்திறனுடையதொரு குற்றமன் றாகலானும், முதல்வன் அங்ஙனந் தான்றானே யாகச்செய்தாலும் இதுகாறுந் தனக்குச் சுதந்திர மின்றி முதல்வன துபகாரத்தை யின்றி யமையாதா யடிமையாகிய வுயிர் எக்காலத்து மவ்வாறடிமை யேயா மாகலானுந், தான்றனாச் செய்தளித்த அப்பெரி யோனை வழிபடுதலே யவ்வுயிர்க்கு வலியாவ தென்க.

தமது முதற்றனே குருவாகலிற் றன்றனாச் செய்தானை யென்றும், முன்னை மறந்த குற்றம் அறியாது நிகழ்ந்ததாக லிற் கழுவப்படும், இஃததுபோற் கழுவப் படுவதன்றென் பார் பின்னை மறத்தல் பிழையலதென்றுங் கூறினார்.

பின்னை மறத்தலென்பதனால் முன்னை மறத்தல் பெறப் பட்டது. "எந்நன்றி கொன்றார்க்குமுய்வுண்டா முய்வில்லைச், செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்னுங் கருத்து நோக்கிக் கூறியதூஉமாம்.

அன்றியு மெனப் பாடமோதி யிது பிழையாத லன்றியு மென்றுரைப்பாரு முளர்.

ஏகாரம் முன்னையது அசைநிலை, பின்னையன தேற்றம். செய்தா லென்பது செய்தெனத் திரிந்தது.

உம்மை சிறப்பின்கண் வந்தது

தான்றானச்செய்தல்; எதனையெதனைப்பற்றினு மது வதுவாமுயிர் தன்னையறிந்தவழி எண்குணங்களானிறைந்து தன் வண்ணமாகச்செய்தல்; அங்ஙனஞ்செய்தவழியும் "உயிர் தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கேயுரித்" தென்பார் தை வமென்றார் தைவமே யென்றார்.

தைவமென்னுஞ் சொல்லியல்பு மேலே யுரைத்தாம்.
மானை யென்னு மிரண்டனுருபு விகாரத்தாற்றொக்கது.
மானென்பது வடசொற்றிரிபு.
சுட்டு வருவிக்க.
வலிதருவதனை வலியென்றுபசரித்தார்.

இவ்வுதாரணங்கண் மூன்றானும் வழிபாட்டிற்கு இடத்து நிகழ்பொருள் மாத்திரையே யன்றி இடவிசேடமும் பெறல் வேண்டுமென அதனை வலியுறுத்துமுகத்தான் முறையே சிவலிங்கத்தையுஞ் சிவபத்தர் வேடத்தையுஞ் சிவதேசிகனையு மறிந்து வழிபடுமாறு கூறப்பட்டது.

இங்ஙனஞ் சிவாகமத்துள் ஞானபாதப் பொருளெல்லா வற்றையும் பொது வுண்மை யென் றிருவகைப் படுத்துப் பிரமாணவியல் இலக்கணவியல் சாதகவியல் பயனியலென நான்கியலாக வைத்துப்போதிப்பதாகிய விச்சிவ ஞானபோத நூலைக் கோடற்குரிய வதிகாரிக ளாவா ரிவரென்ப துணர்த் துதற் கெழுந்தது இச்செய்யுள்.

சிவமென்னு மந்தா சிந்தைசேர் நோக்கப்
பவமின்றாங் கண்வா சகத்திற்—சிவமுண்டா
மொன்று மிரண்டு மலத்தார்க்கிங் கோண்குருவா
லின்றிந்நூல் மும்மை மலர்க்கு. எனவருட.

தான்றானச் செய்தவாற்றாற் சிவனென்னு மியல்பி னீங்கிச் சிவனென்றோதப்படும் வேதாந்தத்தெளிவாகிய சித் தாந்தத்தையுடைய மாணவகனே ஒன்று மிரண்டுமாய் மலங் களையுடைய விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கு முறையே

யறிவின்க ணின்றருட் பார்வையா னோக்குதலானும், தேவ குருவாய் முன்னின்று செய்யுந் திருநோக்கம் பரிசம் வாக்கெ னப்படுந் தீக்கையானும் பிறவிக் கேதுவாய பசுத்துவநீங்கிச் சிவத்துவம் விளங்குமாகலானவரின் வேறாகியமும்மலமுடை யார்க்கே யுரித் தில்வுலகத் தநுபவமுடைய தேசிகனாராற் போதிக்கப்படுமிச்சிவஞானபோத நூலென்க.

அந்தம் வேதாந்தம்.

அந்தரம் சித்தாந்த மாகலி னதனைப் பெற்றோரது பெருமைகூறுவார் சிவமென்னு மந்தரர் வென்றார்.

என்னு மென்புழிப்படுசொற் றொக்கது.

சிந்தை அறிவு.

கண்ணுருபு விரித்துவ்ரக்க.

நேர்நோக்குதல் முன்னை மருட்பார்வையை மாற்றி அருட்பார்வையா னோக்குதல்.

நோக்க நோக்குதலானென்க.

கண் வாசகங்களைக்கூறவே யினம்பற்றிப்பரிசமுமுடன் கொள்ளப்படும்.

பலம் ஆகுபெயர்.

இந்நூல் அநுபவமுடைய தேசிகனா லன்றி விளங்கா தென்பார் ஒண் குருவாலென்றார்.

போதிக்கப்படுமென்ப தவாய்நிலையான் வந்தது.

இன்றிந்நூலென்பது இந்நூலென்னும் பொருட்டு; இக் கால்த்துரைக்கப்பட்ட நூலெனினு மமையும்.

அது 'தானுரைத்தானின்' றென வருகின்ற வென்பர் வாற் கூறியவாற்றானு மறிக.

* மும்மையென்றது எண்டெண்ணின்க ணின்றது. தெரி மாண்டமிழ் மும்மைத் தென்னம்பொருப்பு னென்புழிப் போல.

உண்மையதிகாரம் முடிந்தது.

சிவஞானபோதத்திற்குத் திருவாவடுதுறைச் சிவஞான யோகி செய்த சிவஞானபாடியத்தில் இரண்டாவது உண்மை யதிகாரத்திற் பயனோத்துள் மூன்றும்பாதமாகிய இப்பன்னி ரண்டாஞ் சூத்திரமுடிந்தது.

சிவஞானபோத பாஷ்யமுடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

நூலாசிரியர்பெயர்.

—:*:—

எந்தை சனற்குமர னேத்தித் தொழவியல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் றாரணியோர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

இ - ள்: எந்தை சனற்குமரன் - எந்தையாகிய சனற் குமாரமுனிவன் முதலிய முனிவர்களாங்கள், ஏத்தித்தொழ - துதித்துவணங்க; நந்தி - ஸ்ரீகண்டதேவர்பாற் கேட்டருளிய நந்திபெருமான், இயல்பாய் - தான் கேட்டமுறையே, உரை த்தருளும் - உபதேசித்தருளிய, ஞானநூல்-சிவஞானபோத மாகிய வடநூலை, சிந்தைசெய்து-பரஞ்சோதிமுனிவன்பாற் கேட்டவாறே சிந்தித்து, தாரணியோர் தாம் உணர - தமிழ்நாட் டாரறிந்துய்தற்பொருட்டு, ஏது திருட்டாந்தத்தால் - மேற் கோளோடு கூடிய ஏது திருட்டாந்தங்களுடன், இன்று - இக்காலத்தே, மெய்கண்டான்றான் உரைத்தான் - மொழி பெயர்த்துக்கூறி வார்த்திகப்பொழிப்புரை செய்தருளினன் மெய்கண்டதேவன் என்க.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

* சிவஞானபாஷ்யம்.

—:0:—

வேதாகமங்கள் "பிரமாகம்" என்றும், "சிவோகம்" என்றும் பாவிக்கும்படி கூறியது யாதுகாரணம்பற்றியெனின் பசுக்கள் பாசவிமோசன முற்றுத் தமக்கந்தரியாமியாயும் வியாபியாயுமான பரசிவத்துவந்தங்கண் அபிவியத்தியுறும்பொருட்டுஉபாசிக்க, வேதாகமங்களில் அங்ஙனம் அத்துவித பாவனை, விதிக்கப்பட்டது. ஆகலின் அதுகொண்டுதானே ஏகான்மவாதஞ்சாதித்தல் சாலாதென்க. "பிரமாகம்" சிவோகம்" என்னும் அத்துவிதபாவனையால் ஆன்மாக்கள் சிவகுணங்கள் தங்கண் விளங்கப்பெற்றுச் சிவமாயிருப்பனவன்றிக் கெட்டொன்றுயொழியா. அரதத்தாசாரியர்க்குமிதுவே கருத்தாதல் "வேதத்தில் ஆண்டாண்டுப் பிரமப் பொருளாகிய சிவபிரானுக்கும் ஆன்மாவிற்கும் அத்துவிதபாவனை கூறப்படுமா றென்னையென்றுசங்கித்தெடுத்துக்கொண்டு கருடனுமாந்திரிகனுந்தம்முள் வேறுதல் வெளிப்படையாயினுங் கருடோகமென்னுமத்துவித பாவனை விடநிவிர்த்திப்பொருட்டு வேண்டப்படும். அதுபோலப் பிரமப்பொருளாகிய பரமசிவனும் ஆன்மாவுந்தம்முள் வேறுதல் வெளிப்படையாயினு மலநிவிர்த்திப்பொருட்டு வேதத்தில் அத்துவிதபாவனை கூறப்பட்டது. அதுகொண்டு தானே நிரூப சரிதவைக்கியங்கூறுதல் சாலாதென்பது" என்றங்ஙனஞ் சதுர்வேததாற்பரிய சங்கிரகத்தோதியவாற்று னறிக.

இனிச் சிவபிரானுக்குச் சருவஞ்ஞத்துவ முதலிய வெண்குண முடைமை சொரூபவியல்பெனப்படுஞ் சிவத்துவமாம்.* இவ்வெண்குண சொரூப சிவத்துவப்பேறே முத்தி

---

* முதற்சூத்திரம் இரண்டாஞ்சூத்திரங்களில் எழுதப்பட்ட இப்பாடிய வசனம் அச்சூத்திரங்களில் சேர்க்குமிடந் தெரியாமையால் இங்குத் தனியே அச்சிடப்பட்டது.

திசையில் ஆன்மாவிற்கு ஆன்மலாபமெனப்படுஞ் சாயுச்சியப் பெரும்பேறும். சிவபிரான் எண்குணமுடையனாதல் "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான், றாளை வணங்காத் தலை" எனவும், "எட்டுவான்குணத் தீசனெம் மான்றனை" எனவும், "இறையவனை மறையவனை யெண்குணத்தினானை" எனவுங் கூறிய திருவாக்குக்களானறிக.

அற்றேல், சிவபிரான் எண்குணசொரூபனாயின் அவன்றன்னை "நிர்க்குணன் குணாதீதன்" என்று வேதாகமங்கள் ஓதுதல் பொருந்தாதாலெனின்? வேதாகமங்கள் பரமான்மாவை "நிர்க்குணன் குணாதீத" னென்றோதியது, சாத்துவிக இராசத தாமதமென்னு மாயாகுணங்களில்லாதவனென்னுங் கருத்துப்பற்றி யல்லது முற்றறிவு முதலிய சிற்குணங்களில்லாதவனென்னுங் கருத்துப்பற்றியன்றாகலின் அது பொருந்துவதாம். மற்றுப் பொருந்தாமை யாண்டையதென்க. இச்சிற்குணங்களுமில்லா வியல்பே அவனுக்குச் சொரூபமெனின், சத்தாகை சித்தாகை ஆனந்தரூபமாகையுஞ் சருவஞ்ஞத்துவ முதலியவற்றை யகப்படுத்து நிற்குஞ் சிற்குணங்களாகலின் பரப்பிரமப் பொருள் அவற்றை யிலக்கணமாக வுடைத்தென்றலுஞ் சொரூபவியலாகாதாம். அதுவேயுமன்றி அங்ஙனம் வேண்டுவார் பிரமப்பொருள் ஓரியல்புமில்லா வெறும் பாழென்றாராய் நிரீச்சுரவாதிகட்குச் சகபாடிகளாயு மொழிவரென்க. எண்குணங்களாவன, சருவஞ்ஞத்துவம், திருத்தி, அநாதிபோதம், சுவதந்திரம், அலுத்தசத்தி, அனந்தசத்தி, நிராமயான்மா, விசுத்ததேகமென்பனவாம். திருத்தியெனினும் பூர்த்தியெனினுமொக்கும். அநாதிபோதம் அநாதிமுத்தத்துவமெனவும் வழங்கப்படும். இவையே இறைவற்குச் சிவத்துவமெனப்படுமெண்குணமாமாறு "சருவஞ்ஞத்துவா" என்பனை முதலாகவுடைய சருவஞ்ஞானோத்தராகமவசனத்தானறிக. இவ்வெண் குணங்களுள், நிராமயான்மாவை அநாதிபோதத்திலும், விசுத்ததேகத்தினை அலுத்தசத்தியினு

மடக்கி அறுகுணங்களாகவும் ஓதுப. இவ்வறுகுணங்கள் சத்து சித்து ஆனந்தமென மூன்றாயடங்குமா றோர்ந்துணர்க. இனி நின்மலமான பரப்பிரமப்பொருள் அவிச்சையாற் கட்டுண்டு சீவான்மாவென நின்று, "பிரமாகம்" பாவனை பேணி, மறித்தும் பிரமமாமெனின், நின்மலமான பிரமப்பொருளை அவிச்சையான மலங் கட்டுறுத்தமாட்டாது. கட்டுறுத்துமெனின், நின்மல பரப்பிரமப் பொருளாமாறில்லை. அன்றியும் சீவற்கு வீடுபேறுளதாய வழியும் அஃததனைக் கட்டுறுத்துமெனப்பட்டு வீடுபேறென்பது போலியாய் முடியுமென்க. அற்றேல், நிராலம்பஞ் சருவசார முதலிய வொருசா ருபநிடதங்கள் அங்ஙன மோதியவாறென்னையெனின், சுவேதாச்சுவதரமுதலிய சைவோபநிடதங்கள் சீவான்மாப் பிரமம்போல வநாதிநித்தியப் பொருளென்றும், அப்பிரமந் தனக்கந்தரியாமியாயும் வியாபியாயுநின் றுபகரிக்க அநாதிமல வினைக்கீடாகப் பிறப்பிறப்புற்று வினைப்போகம் புசிக்குமுறையின் மலபரிபாகமெய்துப பரமசிவன் றிருவருளுற்றுக் கட்டுநீங்கி முற்றறிவெய்தி மெய்யுணர்ந்து மலவாசனையு நீங்கிச் சிவ பரப்பிரமப் பொருளோ டத்துவிதமாய் நின்று முடிவுகாண்கில்லாப் பேரின்பத்தினை நுகராநிற்குமென்றும், எடுத்தொருதலைப்படுத்தோதுதலின், நிராலம்பஞ் சருவசார முதலிய வுபநிடதங்களிற் பிரமசத்தத்தா லெடுத்தோதப்பட்ட சித்துப் பரசித்தானபரப்பிரமமன்று. அபரசித்தான ஆன்மாவே அவிச்சையாற்பந்தமுற்றுச் சாதகமுறையிற் பிரமோபாசனை பேணிப் பிரமமாமென்றவ் வுபநிடதங்களா லங்ஙனமோதப்பட்டது. இங்ஙனமாகலின், அவ்வுபநிடதங்களுஞ் சைவாகமங்களுந் திராவிடவேதங்களுந் தம்முளரணுற்று நடப்பனவன்றி முரணுற்றுக்கிடப்பனவல்லவென்று நுண்ணுணர்வானோக்கி யுணர்ந்துகொள்க. அற்றேல், அஃதாக அபரசித்தான ஆன்மாவைப் பரசித்தினுக்குரிய பிரமசத்தத்தால் அவை யெடுத்தோதுதல் சாலுமோவெனின், பரசித்தா

ன பரப்பிரமம் அப்ரசித்தான வான்மாவுக் கந்தரியாமியாய் அதுவேதானாய்நின்றுபகரித்தலின், அவ்வொற்றுமைபற்றிப் பரப்பிரமநாமத்தாற் சீவான்மாவை அங்ஙனமவையுபசரித்து வழங்கின. ஆகலின் அது சால்பேயாமென்க. கீதாசாரியனாகியகண்ணன் பரப்பிரமமானசிவனருட்பெற்றியைச்சிவோகம்பாவனை யொற்றுமைபற்றி. "நானே சடசித்தெல்லாமானேன்" என்று தன் பெற்றியாகக்கொண்டு கூறியதூஉம் இதற்குறுசான்றுமென்க.

இனி உடல் பொருள் ஆவி மூன்றும் ஞானதீக்கையின் முதல்வனுக்கெனத் தானஞ்செய்தளித்தலான் முன்செயற்கையாற் றன்னுடைமையாய் நின்ற விம்மூன்றுந் தானஞ்செய்தபின்னர்த் தனக்கின்றிச் சிவனுக்குடைமையாயவாறு பெற்றும். பெறவே, யாண்டுப்பொருளென்ற துடம்புபோலொற்றுமையுடைத்தாய்த் தன்னா னுகரக்கிடந்த வுடல்வினையேயன்றி முன்பே தன்னாற்றுறக்கப்பட்டொழிந்த புறப்பொருளன்றென்பது தாமேபோதருதலானும், அவ்வாறன்றி யாண்டுப்பொருளென்றது எல்லாவற்றிற்கும் பொதுவெனக்கொள்ளினும் உடல்வினையும் [illegible] ற்றுளடங்குதலானு மங்ஙனமுதல்வனுக்கென்றீந்த வுட[illegible]னையை மீளவுந் தானுகரக் கருதுவோ னவ்வாறு தானஞ்செ[illegible]ரித்த ஆன்மாவை மீளவுஞ் சுதந்திரனாகக் கருதுஞ் சிவசம்பாதியோடொப்பவனாமாகலின் முதல்வனுக்கென்றளித்த பொருளைத் தானுகரக் கருதுதல் பெரியதோ ரிழுக்காதலறிக.

இன்னுந் தன்னுடம்பே தனக்கின்றி முதல்வனுக்குடைமையாகவீந்தவழி யவ்வுடம்பிடமாக வரும் வினைப்பயனைத தானுகர்தற்கோ ரியைபின்மையறிக. இன்னுந் தானே தனக்குச் சுதந்திரமின்றிச சிவனுக்குடைமையாயவழித் தான் மூற்றொன்றனை நுகருமாறியாண்டையதென்க. தன்னாலளிக்கப்பட்ட பொருண் மூன்று முதல்வனேன்றுகொண்டானென்பது "அன்றே யென்ற னாவியும்" எனவும் "உடலிடங்கொண்டா யினி யுன்னை" எனவும், உடலிடங்கொண்டாயானிதற்கு" எனவும், "என்றவுடற்கன்ம" எனவும், என்றவுடற்பழவினைகள்" எனவும், "என்றவினை" எனவும், "என்றுகொண்டாயென்னை" எனவும் "நாமொழிந்து சிவமான" எனவும் ஓதியவாற்றானறிக.